
UNIVERSAL
LIBRARY
OU_208078
UNIVERSAL
LIBRARY

மாணிக்கவாசகர்
வரலாறும் காலமும்



[இரண்டாம் பகுதி]

மறைமலையடிகள்

பதிப்புரை

இந்நூல் மறைமலையடிகளாரின் ''மாணிக்க வாசகர் வரலாறும் காலமும்'' என்ற அரும் பெரும் நூலின் இரண்டாம் பகுதியாகும்.

இந்நூலின் முதற் பகுதியின்கண் ஆசிரியரவர்களால் எழுதப்பட்டுள்ள விரிந்த ஆங்கில முன்னுரையும், தமிழ் முன்னுரையும் சேர்ந்துள்ளன தெளிவான பொருளடக்கமும் உள்ளுறையும் அப்பகுதியில் சேர்க்கப்பட்டிருக்கின்றன 'மாணிக்கவாசகர் வரலாறு' க முதல் கள தலைப்புகளும் 'மாணிக்கவாசகர் காலம்' க முதல் கச தலைப்புகளும் சேர்க்கப்பட்டுள்ளன இவ்விரண்டாம் பகுதியில் கரு முதல் உஅ தலைப்புகளும் பின்னிணைப்பாக இரண்டு பகுதிகளும் சேர்க்கப்பட்டுள்ளன. இவ்வாராய்ச்சிக்கு அரண் செய்யும் அப்பர் அருட்பாடல் ஒன்றும் சேர்க்கப்பட்டுள்ளது.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்

4. மாணிக்கவாசகரும் நம்மாழ்வாரும்

இனிப, பிறந்தஞானறே எல்லாம ஓதாதுணர்ந்த துறவியாகிப புளியமரத்தின (புளியாழவா) அடியிலே தவத்திலமர்ந்து, உலகம உயதலவேணடிதத 'திருவாய மொழி'யினை அருளிசசெயத நமமாழவார், பிறநதபின தாயதந்தையரால வளாகபபடடு ஆசிரியரை அறி வுறுகபபடட பனனிறபொருளும பலலாணடு ஓதி யுணாநது அரசாககு அமைச்சராயிருந்த மாணிககவாசகர் இயறறிய 'திருவாசகத'தைதப பாாதது,த தமது 'திருவாய மொழி'யை இயறறியருளினெனறல பொருந்தாது, மற றுத 'திருவாயமொழி'யைப பாாதது மாணிககவாசகர் 'திருவாசகம' இயறறினெனறு கோடலே பொருதத முடைத்து எனபதுபடத் 'தமிழவரலாறு' உடையார் எழுதிய பகுதி ஆராயற பாறறு.

நமமாழவார தாயின கருபபையைவிட்டு இந்நிலத்தின் கட் பிறந்த நாளமுதற பாலுணணுதவராகி, அழுதலுஞ சிரிதலுமினறி வறிதே கிடபபப, பெறறோர அகமுழவி யின நிலகணடு கலஙகித, திருகுருகூரிலுளள திருமால் கோயிலிற கொணடுபோய, அஙகுநினற புளியமரத்தின அடியிலே கிடத்த, அவர பதினருணடளும ஏதொரு செயலுமினறித் தவமிருந்து, பினனாத தமபால் வந்த மதுரகவியாழவார் பொருட்டுத் 'திருவிருத்தம', 'திருவாசிரியம', 'பெரிய திருவந்தாதி', 'திருவாயமொழி' முதலியவறறை அருளிசசெயதார் என அவர்கபு பன னிருண்டு பினவந்த வைணவமதப புலவர்கள எழுதி வைத்திருக்கினறனர். நமமாழவார் பிறந்தபொழுதே பாலும உண்ணாது பிறிதேதொரு செயலுமில்லாது பதினருண்டு அளவும தவத்திலிருந்தமைக்கு மெயசசானறு களும, அவர் எல்லாம ஓதாதுணர்ந்து பாடினமைக்கு மெயயடையாளங்களும உளவாயின், அவரைக் கடவுட் டனமை யுடையராகவும, அவர் அருளிய பாடல்களை

உண்மை யறிவுரைகளாகவுங் கோடலில் இழுக்கொன்று மில்லை. ஏனெனில், இறைவனது முழுமுதற றன்மையைச் சிறறறிவுடைய மக்களுககு அறிவிக்கற பொருட்டுப, பேரறிவுடைய பெரியாா எந்நாடடிலும எவவிை தகிலும எமமதகதிலும பிறகத்தல் உணடு. ஆனலும, இஙகே யாம ஆராயதறகு எடுத்துககொணட நமமாழவாா பிறந்த நாளதொடடே எல்லாம ஓதாதுணருங கடபடடனமை உடையவர்தாமா எனபதறகு ஏறற சானறுகள காணி னனறி, அவரை அவவாறுகொணடு, அவருரையினை மெயயெனத தழுவி யொழுகல உலகிறகுப பெரிதுந் தீஙகு பயபபதானறும. அவரைப பறறிப பின்னுளளோர் எழுதிவைதத ஓக் கதை ஒனறனையே கொணடு அவரை அஙஙனஙங கடபடடனமை யுடையராகக கருதுதல வழு வாம; எனனை? ஒருவாபால அளவுகடநத பறறு வைததாா அவரைக கடவுளாக உயாததுப பேசுதலும, ஒருவர்பாற பெருமபகைமைகொணடோா அவரை இழிந்த விலஙகினுங கடைபபடடவராக இழிதது பேசுதலுங கணடாமாகலின, ஒருவாபாற பறறு வைத்தாரும பகைமை கொணடோருங கூறும மெயயல்லா உரைகளே மெயயெனப நமபி அவரை உயாந்தா ரெனறேனும இழிநதா ரெனறேனும முடிவுகட்டல நிடுவநிலை யுடையார்க்கு இசை யாதாகலின எனக. அறறேல, நமமாழவாரின உணமைத் தனமைகள; தெளிதறகுச சானறுகறபாலன யாவை யெனிற, சானறுகள புறசசானறும அகசசானறும எனப இருபாலனவாம; அவறறுட் 'புறசசானறு' எனபன பறறும பகைமையும இல்லா நடுநிலையாளர் கூறும மெய யுரைகள: இம மெயயுரைகளோடு ஒக்கும வழியும் உண்மையொடு மாறுபடா வழியும பறறுடையோரும பகைமையுடையோருங கூறுவனவுந் தழுவற்பாலனவே யாகும. இனி, 'அகச்சானறு' எனபன, ஓர் ஆசிரியன தான இயறறிய நூல்களில் தன குறிப்பினறியே தன வரலாற்றினையும, தன இயறகையினையுங கூறிவைப்ப, அவைதாம அறிவுடையோரால் ஆராயந்தெடுக்கப்பட்டு அவ் வாசிரியன வரலாறும் தன்மையும் துணிதற்குச்

சான்றாய் நிற்பனவாகும். இவ் விருவகைச் சான்றுகளுள நமமாழவார் வரலாறு துணிதற்கு, மேலே காட்டியபடி அவாபாற் பற்றுளளோர் எழுதிவைத்த கதையைத் தவிர வேறு பொதுவாம புறசசான்று ஏதுங காண்கி லேம. இனி, அவரியறறிய 'திருவாயமொழி' முதலிய வற்றில், அவர் பிறந்தபொழுதே பாலுண்ணுது தவத்தி லிருந்து எல்லாம ஓதாதுணாந்தமைககுக குறிபபு ஏதே னும உளதோ வெனின அதனையுங காணகிலேம. மறறை மக்களைப போலவே, தாமும யாகைவழி யுழனறு நோயா னும இருவினைகளானும வருந்தும ஒருயிராகவே தமமைப பலகாலுங குறிககினறார. "முந்நீரஞாலம" எனனும பதி கததில, "ஆகைகயின வழியுழலவென, வெங்காள நோய வீய விவினைகள வேரறப பாயநது, எநநாள யான உனனை இனிவந்து கூடுவெனே," "பனமா மாயப பல்பிறவியிற படிகினற யான, தொனமா வல்வினைத தொடாகள முத லிநது, நினமா தாளசேர்ந்து நிற்ப தெஞஞானறு கொலோ" எனறற றொடககதது அவா மொழிகள அவ ரைப பொதுமகளுள ஒருவராகவே வைதது உரைபபக காணகினறோம. இம மககட்டனமையின வேருக அவ ருகதுக கடவுட்டனமையும உண்டெனபதறகு ஏதாரு சானறும அவரியறறிய பாடல்களிலுங காணமையின, அகசசானறும இனரும புறசசானறு அகசசானறு இரணடுமிலலா இககதையை அவாபால் மிகதியும பறறு வைதத ஒரு வைணவப புலவா, நமமாழவாரைச் சைவ சமயாசிரியராகிய திருஞானசமபந்தரினும மேமபட்டவ ராகக் கூறவிழைநது அஙஙனம ஒரு பொயககதை கட்டி விட்டாரெனக. யாங்ஙனமெனின, திருஞானசமபந்தர் மூனறாண்டுளள சிறுகுழவியாயிருந்த காலத்து இறைவ னும இறைவியும அவரெதிரே தோனறி, அவருகுத் தமது அருட்பாலூ ஊட்ட, அஃதுண்ட அவா எல்லாம் வல்ல ஆசிரியராய் எல்லாம ஓதாதுணர்ந்து அருளதுளும் புஞ் செநதமிழத் திருபபாட்டுகளைச் சொறசொறற திருக் கோயில்களேறும் அருளிச்செய்தா ரெனனும வரலாற் றுக்கு எதிராக, அவரினும மிக்கதொரு மேன்மையை

நம்மாழ்வாருக்குக் கூறல்வேண்டியே அவ் வைணவப புலவா 'நமமாழவார் பிறந்த ஞானறுதொட்டே பாலுமுண ணாது தவத்திலிருந்து திருவாயமொழி அருளிசசெயதார' என்று கதை கட்டிஞராதல் வேண்டும திருஞானசமபந்தர் பாலுண்டு பாடிஞரென்றல், நமமாழ்வார் பாலுமுண்ணாது பாடிஞரென்பது கழிபெரு மேன்மையாமென அப புலவர் நினைததார்போலும!

அற்றேல், திருஞானசமபந்தர். சிறுமகவாயிருந்த காலத்து அமமையபபரால் நேரே அருட்பால் ஊட்டப பெற்றமைக்கு அகச்சானறு அவரருளிச்செயத செந்தமிழப பாக்களுள உளதோவெனின; 'மாணிக்கவாசகர் வரலாறு' கஉக, கஉ-ஆம பக்கங்களில்,

"போதையார் பொற்கிண்ணத்து அடிசில் பொல்லாதுளனத் தாதையார் முனிவுறத் தான்எனை ஆண்டவன்."

எனறு திருஞானசமபந்தப் பெருமான அருளிய பாடலினை எடுத்துக் காட்டி அவவியல்பினை விரிதது விளககியிருக கின்றேம. மேலும, திருஞானசமபந்தப பெருமான 'திரு நனிபளளி'யிலுளள சிவபிரானை வணஙகுதற்குச் சென்ற போது, அவா தம தந்தையாரது பிடரிமேல் இருந்தபடி யாயத் திருபபதிகங கட்டளையிட டருளினரென்பது அப பதிகத்தின் ஈறறில்,

"ஞானமுனிவன்
இடுபறையொன்ற அத்தர் பியல்[1]மேல்
இருந்து இசையா லுரைத்த பனுவல்."

என்று அருளிச்செயத வாற்ருற பெறபபடும. தந்தை யின் பிடரிமேல் அமர்ந்திருக்கத்தக்க குழந்தை மூன்று முதல் ஐந்தாண்டிறகு மேறபட்டிருத்தல் ஆகாமையால்,

---

1. 'அத்தர் பியல்' என்பது 'அப்பனது பிடரி' எனப்பொருள் படுவதாகும்; 'பியல்' பிடரி எனப் பொருடருதல், "பியல் ஊகமும்" என்ற 'பெருங்கதை' (க, சிஅ, அஎ)புட் போந்தவாற்ருலும் அதன் குறிப்புரையாலும் உணர்க.

திருஞானசம்பந்தர் இத் திருப்பதிகத்தை அருளிச்செய்த காலத்துச் சிறுமதலையாயிருந்தா ரெனபது இனிது துணி யப்படுமனறே? இனனும, மதுரையிற கூனபாண்டியன மனைவி மஙகையர்க்கரசியாரால் அழைக்கபபட்டு அஙகுச் சென்றகாலத்தும திருஞாசமபந்தா சிறுபிளளையாகவே யிருந்தாரெனபது, அவரைச சமணாகள பழிததுப பேசிய போது அவா அருளிசசெயத,

“மாலின் நேர்விழி மாத ராய்வழு திக்கு மாபெருந் தேவிகேள்
பால்நல் வாயிஓரு பாலன் ஈங்கிவன் என்று நீபரிவு எய்திடேல்
யாஎன மாமலி யாநியாய இடங்க ளிறபல அல்லல்சேர்
சனர் கட்குளளி யேன்அ லேன்திரு வால வாய்அரன் நிற்கவே.’

எனறும் திருப்பாட்டின்கண அப பெருமான தன்னைப ‘பால பருகுதலால் மணஙகமழா நினற வாயினையுடைய ஒரு சிறு குழந்தை’ எனறு குறிபபிடுதல் காணக. மதுரைககுச சென்றபோதே அவர் சிறு பிளளையாயிருந் தமை தெளியபபடுதலின, இறைவனையும இறைவியையும அவர் நேரே கணடு அவர்தமமால் அருட்பால் ஊட்டப் பட்ட ஞானறு, மூனருணடுடைய மிகச் சிறு மகவாய அவர் இருந்தமை சிறிதும ஐயமினறித் துணியறபால தாகும. இவவாறு திருஞாசமபந்தா சிறு மதலையா யிருந்தபோதே கடவுளைத தமது கடபுலனால் நேரே கணடு அருளபெறறுச், செயறகரும புதுமைகளெல்லாம அக் கடவுள அருளாற செயது, உலகிறகு முழுமுதற் கடவுளின உண்மையினையும அக்கடவுளின அருட்பெருந்தனமை யினையுந் தெருட்டினமைக்கே அகச்சானறு புறசசான்று கள காணபபடுதலின, அவர் மூவாண்டிற கடவுளைக் கண்டு பாடினமையே உண்மை நிகழச்சியாதல் காண்க. இவரைப்போல் நமமாழவாரும சிறு மகவாயிருந்தஞானறே கடவுளைக் கண்டு பாடினமைககு அவரது ‘திருவாய மொழி’ப பாட்டுகளில் ஏதொரு சானறுங கரணப் படாமையின், நமமாழ்வாரைபபறறிய கதை பின்வந்த வைணவப் புலவசாற புதிதாய்க் கட்டிவைக்கப்பட்ட பொயக்கதையேயாதல் ‘உளளங்கை நெல்லிக்கனி’போற்

சிறிது ஆராய்ந்து காண்பார்க்கும் இனிது விளங்கா நிற்கும.

அதுவேயுமனறி, நமமாழவார் பிறந்த ஞான்று தொட்டே பாலும் உண்ணாது பதினருண்டளவும் தவத்தி லிருந்தா ரெனபது சிறிதும நமபறபாலதனறு. அவர் பத்துத் திஙகள அன்னையின் கருப்பையிற் றஙகிப பிறந்தா ரெனறமையால், அவர் எமமனனைரபபோலவே ஊனுங குருதியும நிறைந்த உடமபு உடையரெனபது பெறபபடும. படவே, ஊன் உடமபுடைய எமமனனெரல்லாம உணவினறி உயிர்வாழதல் ஒருவாறருனும ஏலாமையால், நமமாழ வாரும ஏதேனும உணவு கொண்டே உயிர்வாழந்தாரா தலுந் தாமோ பெறபபடும். இவ்வுணமைகளு மாருக நமமாழ் வார் பிறந்தநாட் டொட்டே பாலுமுண்ணாது தவநகிடந்தா ரென்றலினும பெரும புளுகுரை பிறிதுண்டோ நடுநிலை யுடையீர் கூறுமின! இப புளுகுரையை நடுநினறு ஆராய் வாரெவரும, இக கதை நெறிதிறமபிய மதபபறறுடைய வைணவரால் நமமாழவாரைத திருஞானசமபந்தரினும மேறபட்டவராக ஆக்கிவிடுதற பொருட்டுக் கட்டப்பட்ட பொய்க்கதையே யாதலைக் கண்டுகொளவர்.

இனி, மாணிகக்வாசகபபெருமான் தமது இளமைக் காலத்தே எல்லாக் கலைகளையும் ஓதியுணர்ந்து வளர்ந்தமை உணமையே யாயினும, அவர் அதுபறறிக் கடவுட்டனமை யுடையரல்லர் எனறு கூறிய 'தமிழ வரலாறு' உடையா ரது உரை உண்மையறியா வெளிறறுரையேயாம். மாணிக்க வாசகர் தாம் கடவுளை நேரே கண்டமையும, அவர்க்குத் தாம அடிமையானமையும,

"திகழாநின்ற திருமேனி காட்டி
என்னைப் பணிகொண்டாய," (குழைத்தபத்து, 6)

என்று தாமே அருளிச்செயதவாற்றாற் குறிப்பிட்டிருக் கினறார். அவ்வியல்பெல்லாம 'மாணிக்கவாசகர் வரலாறு' 2-ஆம் பக்கம் முதல் 5-ஆம் பக்கம் வரையில் விரித்து விளக்கிக்காட்டி யிருக்கின்றேமாதலால், அவற்

றையே ஈண்டு மீளவும் எடுத்து விரித்திலம். கடவுளை நேரே காண்டல் எளிதனறு. உலகததில் மக்களாயப் பிறந்தார் படுமபாடெல்லாங் கட்புலனுகாக் கடவுளைக் கட்புலனுற் கண்டு உண்மை தெளிந்து, பிறவியறுத்து, அவன நிருவடியைத் தலைகூடுதலையே பொருளாயக் கொண்டு நிறகினறனர். அத்துணைப பெறறகரும பொருளாகிய கடவுளை நேரே காணபபெறறு அவன நிருவடிகளு ஆளானரிலுங் கடவுட்டனமையுடையார பிறர் உளரோ புகலுமின! கடவுளைக் கண்டவர்க்கே கடவுட்டன்மையுளதாமனறி, அவரைக் காணுதவாகளு அஃது உளதாதல் யாங்ஙனம உரைமின! கடவுளை நேரே கண்டு அவன நிருவருளை நேரே பெறற மாணிகக்வாசகரும திருஞானசமபந்தரும அக கடவுளைபபறறிக கூறும மெயம மொழிகள் நமகெளியவாய அருகிருபப, அவறறைக் கைககொண்டு பிறவிப பயனபெறுமற, கடவுளைக் காணுதாரையும அவா கூறும மயகக வுரைகளையும நமபிக கடவுள அல்லாத மககளைக கடவுளெனத் துணிந்தும, கடவுளைக் காணுதாரைக குருவெனு இறுகபபறறி அவர் மேற பொயககதைகளை ஏறறியும, சைவம வைணவம் என்று வழக்காடியும ஐயகோ மககள தம பிறவிபபயனை இழந்து வாழா மடிகினறனரே! அதுகிடகக.

இனி, நமமாழவார இயறறிய பாடல்களையே நனகாராய்ந்து பார்ப்பின அவர் ஓதாதுணர்ந்தவரல்ல ரெனபதூஉம, அவா முழுமுதற கடவுளைக கணடறியாமையின் கடவுட்பொருள இதுதான எனறு துணியமாட்டாது பெரிதும இடாபபட்டு மயஙகினரெனபதூஉம, அதனல் அவர் கடவுட் டனமையுடையரல்ல ரெனபதூஉம இனிது புலப்படும. நமமாழவார் தமது இளமைக்காலந்தொட்டே பற்பல நூல்களையும பணனுளும ஓதியுணர்ந்தவ ரென்பதற்குரிய அடையாளஙகள அவர்தம பாட்டுக்களிலேயே காணப்படுகின்றன. அவறறுட் சில காட்டுதும :—

" அங்கமெலாங் குறைந்துஅழுகு தொழுநோ யாராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனுங்

கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்ப ராகில்
அவர்கண்டீர் யாம்வணங்கும் கடவு ளாரே."

என்று திருநாவுகரசு நாயனார் அருளிச்செய்த கருத்தை எடுத்துக,

"குலந்தாங்கு சாதிகள் நாலிலுங் கீழ்இழிந்து எத்தனை
நலந்தான் இலாத சண்டாள சண்டாளர்க் ளாகிலும்
வலந்தாங்கு சக்கரத் தண்ணல் மணிவண்ணற்கு ஆள்என்றுஉள்
கலந்தார் அடியார் தம்அடி யார்எம் மடிகளே."

எனறு நமமாழவார பாடிய்மை காணக.

"தம்மை யேபுகழ்ந் திச்சை பேசிலுஞ்
சார்வி லுந்தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடா தேஎந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள் !
இம்மை யேதருஞ் சோறுங கூறையும்
ஏத்த லாம்இடர் கெடலுமாம்
அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்
கியாதும் ஐயுற வில்லையே."

என்னுஞ செயயுளை முதலாகக்கொண்டு சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய பதிகபபொருளை எடுத்துக்கொண்டு,

"என்னுவ தெத்தனை நாளைக்குப் போதும் புலவீர்காள் !
மன்னு மனிசரைப் பாடிப் படைக்கும் பெரும்பொருள்
மின்னுர் மணிமுடி விண்ணவர் தாதையைப் பாடினால்
தன்னுக வேகொண்டு சன்மம்செய் யாமையுங் கொளளுமே."

என்று நமமாழவாரும ஒரு பதிகம பாடியமை காண்க.

"அறுசுவையுண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட
மறுசிகை நீக்கியுண் டாரும்—வறிஞராய்ச்
சென்றிரப்பர் ஓர்இடத்துக் கூழ்எனிற் செல்வமொன்
றுண்டாக வைக்கற்பாற் றன்று."

"யாதீன யெருத்தம் பொலியக் குடைநிழற்கீழ்ச்
சேனைத் தலைவராய்ச் சென்றேறும்—ஏனை
வினையுலப்ப வேறுகி ளிழ்வர்தாங் கொண்ட
மனையாளை மாறறூர் கொள"

என்னும் நாலடியார செயயுட்பொருளை யெடுத்து,

"உய்ம்மின் நிறைகொணர்ந் தென்றுல காண்டவர் இம்மையே
தம்மின் சுவைமட வாரைப் பிறர்கொள்ளத் தாம்விட்டு
வெம்மி னெளிவெயிற காணகம் போய்க்குமை[1] தின்பர்கள்.'

என்று நமமாழவார பாடியிருகினறார.

"கரைபொரு திரங்குங் கடலயிரு முந்நீர்த்
திரையிடு மணலினும் பலரே யுரைசெல
மலர்தலை யுலகம் ஆண்டுகழிந் தோரே." (உகஙி-உகஎ)

என மதுரைக் காஞ்சியிலும,

"தம்பெயர் தம்மொடு கொண்டனர் மாய்ந்தோர்
நெடுவரை இழிதரு நீத்தஞ்சால் அருவிக்
கடுவரற் கலுழிக் கட்கில சேயாற்று
வடுவாழ் எக்கர் மணலினும் பலரே." (குஙிக-குஞ்ச)

என மலைபடுகடாத்திலும போந்த சொறபொருளகளை எடுத்துக்கொண்டு,

"நினைப்பான் புகில்கடல் எக்கலில் நுண்மண லிற்பலர்
எனைத்தோர் உகங்களும் இவ்வுல காண்டு கழிந்தவர்."

என்று நம்மாழவார் பாடினார.

"கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள." (கக)

என்னுந் திருக்குறளின் சொறபொருளை யெடுத்துக்,

---

1. 'குமை' என்னுஞ்சொற் குழைவுப் பொருட்டாகலின், அஃதிங்கே 'கூழ்' எனப்பொருள் தந்தது.

"கண்டுகேட் டுற்றுமோந் துண்டுழலும் ஐங்கருவி
கண்டஇன்பம் தெரிவரிய அளவில்லாச் சிற்றின்பம்."

என்று நமமாழவார் பாடுதல் காண்க.

"அப்பன்நீ அம்மைநீ ஐயனும்நீ
அளபுடைய மாமனும் மாமியும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ."

என்னும திருநாவுகரசு நாயனார் திருபபாட்டைப் பார்ததுச்,

"சேலேய் கண்ணியரும் பெருஞ்செல்வமும் நன்மக்களும்
மேலாத் தாய்தந்தையும் அவரேயினி யாவாரே."

என்ன ஐந்தாமபதினை முதறபதிகததில நமமாழவார் ஓது கினறனர.

"ஊரவர் கௌவை எருவாக அனனசொல்
நீராக நீளும்இந் நோய்." (ககசஎ)

என்னும திருககுறளின சொறபொருளகளாக கிடந்த படியே யெடுதது,

"ஊரவர் கௌவை எருவிட் டன்னசொல் நீர்ப்படுத்து."

என்று நமமாழவார் பாடுதல் காண்க

இனனும் 'திருவாசகத்தைத' பயின்று அதிலுளள சொற்பொருளகளையும, திருஞானசமபந்தப பெருமான் அருளிய திருபபதிகஙகளில் மிகப பழகி அவற்றின் சொற் பொருளகளோடு இசைகளையுந் தழுவி நமமாழவார் பாடி யிருககுஞ செயயுட்களையும எடுத்துக் காட்டபபுகின் இது மிக விரியும. அதுவேயுமனறித், 'தமிழ் வரலாறுடையார்' திருவாசகத்தைதபபார்த்து நமமாழவார் பாடினரெல்லர் என வழக்கிடுதலால், வழககிலுளள அதனை எடுத்துக்காட்டு கற்கு அமர்ந்திலம என்க.

முன்னர் எடுத்துக்காட்டிய பழந்தமிழச் சான்றோர் செய்யுட் சொறபொருளகளை நம்மாழவார் தாமியற்றுஞ்

செய்யுட்களிற் றழுவிக் கூறுகின்றுழிச், 'சண்டாளர்,' 'மனிசர்,' 'சன்மம,' 'எகதல்,' 'உகம' எனனும பிறகாலத்து மக்களின் கொசசைத் தமிழசசொறகளை எடுத்து வழஙகக் காண்டலானுமு, இனனேரன்ன சொறகள தேவார திருவாசகஙகளினுமு, அவறறிற்கு முறபட்ட தமிழிலகஙகளினுங காணபபடாமையானுமு, நமமாழவார திருவாய மொழி பாடியகாலம கி. பி பத்தாம நூற்றாண்டிலாதல் அதறகும சிறிது பினனுதல் கொளளபபடும. இனனும, 'பவித்திரன,' 'சாதுவாய,' 'கருமபலன,' 'சனமசனமாந்தரம,' 'விரோதம,' 'காலசக்கரம,' 'கலியுகம,' 'கிதயுகம,' 'விசாதி' (வியாதி), 'கீர்த்தித்து,' 'வைட்டணவா,' 'முக்கியம,' 'சுணடாயம,' 'விபரீதம,' 'தனமபாவம,' 'வெளுமை,' 'அரவிந்தலோசந,' 'கருமகதி,' 'மூசசிகதும,' 'சராசரம,' 'சாரதி,' 'விசித்திரம,' 'விடமம,' 'கரசரணம,' 'துபபரவு,' 'அனவசம,' 'அநுராகம,' 'சம்மதித்து,' 'மதுரபோகம,' 'பிராகதள,' 'இனறிக்கே' முதலான வடசொறகள சொறறொடாகளும, சில தமிழசசொறகளும பிறகாலத்தனவே யல்லாமல், கி. பி. பத்தாம நூறறாணடிறகு முறபட்டன அல்ல. இவை தமமைப பத்தாம நூறறாணடிறகு முறபட்ட தமிழநூல்களிற காணடலியலாது. நமமாழவார் கலல செந்தமிழநடையிற பாடிககொணடு செல்லுதற்கு இடையிடையே இச் சொறகள சொறறொடாகளைப புகுத்தி விடுகினறாராகலினாலும, திருமால பெயர்களுளளும முற் காலத்து வழஙகாத வடமொழிப பெயாகளை இவர் மிகுதியா யெடுத்து வழஙகுதலினாலும வடசொறகளும வைணவக் குறியீடுகளும தமிழில் மிகுவிரவத் தொடஙகிய கி. பி. பத்தாம நூறறாணடிறகுப பினனரே தான இவர் இருந்தாராகறபாலர். வைணவ ஆசிரியரான ஆழவார்களின காலஙகளை நடுநிலை வழாது நினறு ஆயந்து உரைத்த திருச் சீனிவாச ஐயஙகார் அவர்களும, நம் மாழ்வார் காலம கி. பி. பத்தாம நூற்றாண்டினைகட் படுவதாமெனவே வலியுறுத்தார்.[1]

1. See his 'Tamil Studies,' pp. 324-338.

மேறகாட்டியவாறருல் நமமாழ்வார் தமக்கு முன் னிருந்த பழந்தமிழ நூல்களீயும சைவத் திருமுறைகளீ யும நனகு ஒதியுணாந்த புலவராதலோடு தமது காலத் துப பரவிய தமிழ வடமொழி வழக்குகளீயுந் தழுவித் 'திருவாயமொழி' பாடியவராவரென்பதுந் தெறறென விளஙகுதல் காண்க. எனவே, இவா ஓதாதுணார்ந்தவர் எனறு பினனுளள வைணவபபுலவா எழுதி வைததது வெறுங கடடுகககதையே யல்லாமற பிறிதில்லை. திருஞான சமபந்தப பெருமான ஓதாதுணாந்து பாடினவர் எனப தறகு அடையாளம எனனையெனிற, பழைய தமிழ்நூல் களின சொறறொடாகளுங கருததுப பொருளகளும அவர் அருளிய பாட்டுககளிற காணபபடாமையேயா மெனபது. மேலும, திருஞானசமபந்தா திருககோயில்கட்குச் சென றுழி அவவபபோது நிணைந்தவளவாறே திருபபதிகஙகள வெவவேறுய அருளிச செயதிருக்கின்றார். நமமாழவாரோ தாம இயறறிய 'திருவாயமொழி' ஆயிரம பாட்டுகளீயும, ஒருபாட்டின றறுசொல் அதறகடுதத பாட்டின் முதற சொல்லாக வரும 'அந்தாதித் தொடை'யின்கட் படுதது இயறறியிருககினறார. மேலும், 'திருவாயமொழி' ஆயிரம செயயுட்களில முதற பததுசசெயயுட்கள பாடுமபோதே, அவர் அதனை ஆயிரஞ செயயுட்களால் ஆக்கவேண்டு மெனனுங கருத்துகொண் டிருந்தாரென்பது,

"பரனடிமேற் குருகூர்ச் சடகோபன் சொல்
நிரல்நிறை ஆயிரத்து இவைபத்தும் வீடே."

எனறு அவர் கூறினமையாற பெறபபடும. பெறபபடவே, இவா திருமால் கோயில்களோறுஞ் சென்று, சென்ற வளவானே அன்பினால் அகங்குழைந்து ஆங்காங்கு இறைவனைக் கதுமெனப பாடினரல்ல ரெனபதூஉம, தேவார திருவாசகஙகளுக்கு எதிராகத் திருமாலுக்கும செந்தமிழ் வழுத்துரைச செய்யுட்கள இருத்தல் வேண்டு மெனபதை கொண்டு அவை தம்மைப பாடினரென்ப தூஉம, 'தேவாரப்'பதிகங்கள ஒன்றற்கொன்று தொடர் பின்றி அவ்வத் திருக்கோயில்களில் நிணைந்தவளவானே

தனித்தனியே பாடப்பட்டமையால் அவற்றுட் பல பதிகங்களை அழிந்து போனமை கண்டு, அங்ஙனமே தாம திருமால் மேற் பாடுஞ செய்யுட்களும அழிந்துபோகவிடாமல் அவை தமமை ஒருதொடாபு படுத்துதற பொருட்டே அவறறை 'அந்தாதித் தொடை'யினபாற படுத்துப பாடிஞராதல் வேண்டுமெனபதூஉம, · ஆகவே நமமாழவார் வைணவ சமயத்தின்பாற பற்றுடைய ஒரு சிறந்த தமிழபபுலவரே யல்லாமல் இவா இறைவனே நேரே கண்டு அவனபால் அனபு மீதூரபபெறறு அவனருளைப் பெறுவானவேண்டி நினைந்த நினைந்த போழதெல்லாம நெஞசம நெக்குருகிப் பாடினரல்ல ரெனபதூஉம, அதனால் அவாபால் ஏதொரு கடவுட்டனமையுங காணபபட்டில தெனபதூஉம தெற் றென விளஙகாநிறகும.

அற்றேல், மாணிக்கவாசகரும 'திருச்சதகம' நூறு செய்யுட்களையும, 'நீத்தல் விண்ணப்பம' ஐமபது செயயுட் களையும 'அந்தாதித்தொடை'யினபாற படுதது பாடியவா றெனனையெனின; 'திருச்சதகம' திருபபெருந்துறையிலும, 'நீத்தல் விண்ணபபம' திருவுத்தர கோசமஙகையிலும அடிகளால் அருளிச் செயயபபட்டனவாகலின், அவறறுள் முதல் நூறு ஒரு தொகுதியாகவும், பின ஐம்பதும மற் றொரு தொகுதியாகவும தனித்தனியே பாடபபட் டிருத்த லானும, 'திருவாசகத்'தினகண் உளள ஏனைத் திருபப தி கஙகளும ஒனறறகொன்று தொடர்பின்றித் தனித்தனியே பாடபபட்டிருத்தலானும, அவை நமமாழவார் பாட்டுக் களைபபோற செயற்கையாய் ஒரு தொடாபுபட நில்லாமல் தனித்தனியே நினைந்த நினைந்தவழிப பேரன்பின பெருக் கால் இயற்கையாய்ப் பாடப்பட்டன வாகுமென்று தெளிக.

இனி, இவையெல்லாம ஒருபுறம் நிற்க. நமமாழவார் கடவுளை நேரே காணும பெருமபேறு பெற்றிலராயினும, முழுமுதறற கடவுளிலக்கணம் இதுதான் என்று ஆராய்ந் துணரும அறிவு மதுகையும, அதனால் அம முழுமுதற் கடவுள ஒனறனையே வழுத்தும் மன ஒருமைப்பாடு மாயி னும் உடையரோவெனின்; அவை தாமும் அவர் உடைய

ரல்லரென்பது காட்டுவாம். உலகிறகு முழுமுதற் கடவுள ஒருவனே உளன் என்று காட்டாமல், நானமுகன் திருமால் உருத்திரன எனக் கடவுளர் மூவர் உளர் எனக்கூறி, அம மூவரில் ஒவ்வொருகால் ஒவவொருவரை உயர்த்தி ஏனை யரைத் தாழத்தி, இந் நாவலந் தீவினகண உளள பொது மக்கள அம மூவரில் ஒவவொருவரைப பற்றிக் கொண்டு வழக்காடிப போர்புரியவும், தாம அப பொதுமக்களின் வேரறுப் நிலவுலகக் கடவுளரென அவர் தமமாற பாராட்டப் படவும் சூழச்சி செயது ஆரியப்பார்ப்பனர் கட்டிவிட்ட புராணப பொய்க்கதைகளையே உண்மையென நமபி நம மாழவார்,

"பெரிய அப்பனைப் பிரம னப்பனை உருத்திர னப்பனை."
(அ-ஆம் பத்து, க, கக)

எனவும,

"தானும் சிவனும் பிரமனும் ஆகிப் பணைத்த தனிமுதலை"
(அ-ஆம் பத்து, அ, ச)

எனவும கடவுளர் மூவர் என்றும், அம மூவரிற் றிருமாலே சிறந்த கடவுள எனறுங் கூறுகினரூர். உலகிற்கு முழு முதற கடவுள ஒருவரேயுளர் அல்லாமல், மூவர் உளராதல் யாஙனம? படைத்தற்றொழிலை நிகழத்துதறகு ஒரு கடவுளும், காத்தறறொழிலை நிகழத்துதற்கு மற்றொரு கடவுளும, அழித்தறறொழிலை நிகழத்துதற்கு வேறொரு கடவுளுமாகக் கடவுளர் மூவர் உளராயிற், படைத்தற் றொழிலைச் செய்வோன காத்தல் அழித்தல்களைச் செயய மாட்டுவான் அல்லனெனவும், அங்ஙனமே காத்தல் அழித் தல்களைச் செய்வோரும தத்தந் தொழிலையன்றிப் பிற தொழில்களைச் செய்யமாட்டுவா ரல்லரெனவுங் கொளளப் பட்டு, அவரெல்லாம் வரமபிலாற்றலுடைய முழுமுதற் கடவுளாகா ரெனபது தானே பெறப்படும. அற்றன்று, திருமாலே தமக்குரிய காத்தற்றொழிலோடு ஏனையிரண்டு தொழில்களையும் புரிவரெனின; நன்று சொன்னாய், திரு மாலே முத்தொழிலும் புரிபவராயிற், படைத்தல் அழித்தல்

களுக்கு வேறிரு கடவுளரைக் கொண்டது எற்றுக்கு? அதுவேயுமனறி, நாரணன நானமுகன் அரன் எனனும் மூவரையுமே உளளத்து இருத்திப பற்றறுத்தல் வேண்டு மென்பது போதர நமமாழவார்,

"ஒன்றெனப் பலவென அறிவரும் வடிவினுள் நின்ற
நன்றெழில் நாரணன் நான்முகன் அரன்என் னும் இவரை
ஒன்றநும் மனத்துவைத்து உள்ளிநும் இருபசை யறுத்து."

(க, ஙூ, எ)

எனறு கூறியதெனனை? ஒனறெனறுவது பலவென்றுவது அறிதறகரிதான வடிவுடையது யாது? அஃது இம மூவரின் வேறு? ஒனறு? வேறுயின், அஃது அம மூவரின மேற் பட்ட முழுமுதற கடவுளாதல் வேண்டும். மற்று அஃது அம மூவரோடு ஒனறுபட்ட பொருளாயின, ஓர் அறிவுப பொருள மூவேறு அறிவுப பொருளாகப் பகுக்கபபடுதல் யாங்ஙனம்? அறிவில்லாத பருபபொருளகளே ஒனறு பல வாகப பகுக்கபபடுதலைக் காண்டும. அவற்றைப போலவே அறிவுப்பொருளும ஒனறு பலவாகப பகுக்கபபடுதலை யாண்டாயினுங கண்டார் உளரோ? அல்லதூஉம, ஒன் றெனவாதல் பலவெனவாதல் அறிதற்கரிய பொருள, பின் மூனறுயதைமட்டும அறிவது யாங்ஙனங கூடும? அற் றன்று, ஒன்றெனப பலவென அறிதறகரிய முழுமுதற் கடவுள யாண்டும ஊடுருவி நிறைந்து எவறறினும மேற் பட்டதாய் நிறக, அதனுள் நான்முகன் திருமால் உருத் திரன் என்னும் மூவரும தனித்தனி நிறபரெனின, "யானும் அறியேன் அவளும பொய்சொல்லாள" என்றபடி இம் மூவரும முதல்வர் அல்லர், இம் மூவரின் வேறுய் எல்லாம் வல்லதாய் நிற்கும் முழுமுதற் கடவுள் பிறிது ஒன்று உண் டென்பது, நமமாழவார் வாய்மொழியினுலேயே பெறப்படு கின்றதன்றே? அவ்வாறு மூவரின் வேறுய் முழுமுதற் கடவுள் ஒன்றுண் டென்பதனை உடன்பட்ட நமமாழ்வார் பின்னர் அதனை மறந்து, அம் மூவரில் ஒருவராய திரு மாலையே முழுமுதற் கடவுளாகக் கொண்டு,

"தானோர் உருவே தனிவித்தாய்த்
தன்னில் மூவர் முதலாய
வானோர் பலரும் முனிவரும்
மற்றும் மற்றும் முற்றுமாய்த்
தானோர் பெருநீர் தன்னுள்ளே
தோற்றி அதனுட் கண்வளரும்
வானோர் பெருமான மாமாயன்
வைகுந் தன்னம் பெருமானே." (க, கி, ச)

என்று இசைத்தது முன்னெடுபின பெரிதும முரணுறு தலிச சிறிதாராயச்சியுடையரும நனகறிவர்.

இவ்வாறு முனனெடுபின முரண உரைநிகழத்திய நம்மாழ்வார், முழுமுதற கடவுள நிலையிற் ரும உயர்த்து வைத்த தம திருமாலையே இறுகபபறறி, அவரது வழிபாட்டளவிலாவது உறைதது நினறனரோவெனறல் அதுவும இன்று. சிவபிரானே முழுமுதற கடவுள எனபதை, மூனறும ஆண்டில் அப பிராணே நேரே கண்டு அவனருட்பால் உண்டு வளர்ந்த திருஞானசமபந்தப பிளளையார் தாம சமணர் சாக்கியரோடு இட்ட வழக்குகளில் நன்கு நிலை நாட்டியிருக்கினறனராகலின, அதனை நன்கு உணர்ந்த நம்மாழவார், தாம சிவபிரான் வழிபாட்டைக் கைவிட்டால் தமக்கு இமமையிற் பெருந்துன்பமும மறுமையில் நிரயமும வாய்க்குங்கொலென அஞசியே திருவாயமொழியில்,

"அரிஅயன் அரன்என்னும் இவரை
உணர்ந்துணர்ந் துரைத்துரைத் திறைஞ்சுமின்." (க, ஙூ, சு)

எனவும்,

"கடிகமழ் கொன்றைச் சடையனே யென்னும்." (எ, உ, க0)

எனவும்,

"பூத்தண் துழாய் முடியாய்புனை
கொன்றையஞ் செஞ்சடையாய்." (எ, சு, ஙூ)

எனவும்,

"என்மலைமகள் கூறன்றன்னை.....எயில்மூன் றெரித்த
வென்றுபுலன் துரந்த விசும்பாளியைக் காணேனே."
(எ, சு, எ)

எனவும்,

"மாயோனை முக்கணம்மானை நான்முகனை அமர்ந்தேனே."
(அ, ச, கo)

எனவும்,

"முனியே நான்முகனே முக்கண் அப்பா." (கo, கo, க)

எனவும முக்கட் பெருமானையும் இடை யிடையே வழுத்திக் கொண்டு சென று, இறுதியில்,

"அவாவறச் சூழ்அரியை அயனை அரனை அலற்றி
அவாவற்று வீடுபெற்ற குருகூர்ச் சடகோபன்."
(கo, கo, ககo)

என்று சிவபிரான திருபபெயராலேயே முடித்துக் கூறி யிருகின்ரு. புராண கதைகளை நமபிக கடவுளர் மூவர் உளர் என றும, அவருட்டிருமாலே முதல்வராவா என்றுங் கொண்டு நமமாழவார் பெரிதுமயஙகி யிடர்ப்பட்டனராயி னும, திருஞானசமபந்தப பிளளையார்க்கு மூனருண்டிலே தேனறி யருளசெயது, முதல்வனில்லை யெனப பாழ்ங கொளகை பேசிய சமண சாக்கியரை அவர் வாயிலாக அடக்கித் திருத்தி யருளபுரிந்த சிவபிரான முழுமுதற் கடவுளா யனறிப் பிறிதாதல் செல்லாதென வரவரத் தெளிந்து துணிவு கொண்டே நமமாழவார் 'அரன' எனனுந் திருபபெயரை முடிந்த நிலையாகவைத்துச் சொல்லித் தமது 'திருவாயமொழி'யை முடித்தாராகல் வேண்டுமென பது நடுவுநினருராயவார்க்கு விளஙகாதொழியாது. எனவே, நமமாழவார் முழுமுதற்கடவுள நிலையைத் தாமாகவே முழுதுணர்ந்து அதன்கண் மட்டும உறைத்து நின்றவா அல்லரென்பதூஉம, அதனால் அவர் திருஞான சம்பந்தப் பெருமானையாதல் மாணிக்கவாசகப பெருமானை யாதல் ஒத்த கடவுட்டன்மையுடைய ரல்லரென்பதூஉம் நன்கு போதரும.

மேலும், உலகிற்கு முதலாய் நிற்குங் கடவுள் அப்பனுகிய தானும் தன்னோடு பிரிப்பின்றி நிற்கும் அம்மையும் ஆய் ஒன்றும் இரண்டுமல்லா இரண்டற்ற நிலையில் ஆண் பெண் உருவாய்த், தீயும் நீரும் ஒப்பச், சிவப்பு நீலநிறங்களோடு கூடி நின்று, உலகத்தைப் படைத்துக்காத்து அழிக்கும் உண்மையினை 'மாணிக்கவாசகர் வரலாறு' கூஉ-ஆம பக்கம் முதல் கூள-ஆம் பக்கம் வரையில் வைத்து இனிது விளக்கிக் காட்டியிருக்கின்றேம, ாண்டும் சிறிது விளக்குவேம. உலகத்திலுளள எல்லாப பொருள்களுந் தீயின் கூற்றிலும நீரின் கூற்றிலும் அடங்கும. தீயும நீரும் ஒன்றியைந்து நிறகுங்காறும படைத்தல் காத்தல்கள் நிகழும ; தீ மிகுந்தவிடத்து நீரை உரிஞசி எல்லாப பொருளகளையும் அழித்துவிடும். எனவே, படைத்தல் காத்தல்களைச் செய்வது தீயும நீரும் சேர்ந்த சேர்க்கையேயாதலும, அழித்தலைச் செயவது தீ நீரிற பிரிந்து மிகுதலேயாதலும் தெற்றென விளங்கும. விளங்கவே படைத்தல் காத்தல் அழித்தல் என்னும முத்தொழிற்கும ஏதுவாவன தீயும் நீரும என்னும பொருளகள இரண்டேயல்லாமல் மூனறல்லாமையும புலனும். இத் தீயும நீரும் அறிவில்லாப் பொருள்களாதலால் அவற்றை இயக்குதற்கு அறிவுடைய முதல்கள இரண்டு இன்றியமையாது வேண்டபபடும. தீயினுள விளங்கும அறிவுடைப்பொருளே சிவம் என்றும், நீரினுள விளங்கும் அறிவுடைப்பொருளே அம்மையென்றும் அறிவுநூல்கள் நுவலாநிற்கும. இவ்வாறு இவற்றுள விளங்குதல்பற்றியே தீயின்நிறமான சிவப்புவடிவு சிவபிரான்றும, நீரின் நிறமான நீலவடிவு அம்மைக்கும உரியனவாகச் சொல்லப்பட்டன. இது குறித்தே இருக்குவேதத்துளளும " த்வம் அக்நே ருத்ரோ" (அக்கினி, நீ உருத்திரனாய் இருக்கின்றனை)[1] என்னும் உரையும் எழுந்தது. 'உரு'வென்னுஞ் சொல்லுக்குச் 'சிவப்புநிறம்,' 'வெப்பம்,' 'அச்சம்', என்னும் பொருள்கள் உண்மை, " உருவப் பல்பூத் தூஉய்,"[2] " வெயில் உருப்புற்ற வெம்

1. இருக்கு, உ, க, சு. 2. திருமுருகாற்றுப்படை, உசக.

பரல்,"[1] "உருஉட் காகும"[2] என்னும் பழைய தமிழ்நூற் சொற்றொடர்களாற் புலப்படுதலிற், செம்மை நிறத்தையுஞ் சினத்தையும அச்சத்தையுந் தோற்றுவிக்கும அழிப்புக் காலத்துச் சிவபெருமாற்கு 'உருத்திரன' என்னுந் தமிழச் சொல்லைப பண்டை இருக்குவேதகாலத் தமிழர்கள பெயராக அமைத்து வழங்குவாராயினர். எனவே, படைத்தல் காத்தல் அழித்தல் என்னும மூத்தொழிலையும செய்வோர் அபபனும அம்மையுமாய்ப் பிரிவறநிறகும மூதல்வர் இருவரேயல்லாமல், மூவர் அல்லர். இவவுண்மை அமமையப்பரது விளக்கத்திறகு இடனுய்நிற்கும நீ நீரின் றொழில்களானுந் தெளியபபடும. நீ தனித்து எரியுங கால் ஏதொருபொருளும அதன்முன நிறகலாறறாது அழிந்துபடும. மற்று அது நீரொடு கலந்து தனது வெமமை குறைந்து ஓர் அளவில் நிற்குங்கால், அது பல செயறகருந் தொழில்களெல்லாம செயயவல்லதாகும. நீயும நீரும ஒருங்கு கலத்தலாறறோன்றும நீராவி பல வகைப் பொறிகளையும் இயக்கிப பலவேறு வியத்தகு தொழில்களெல்லாம செய்தலை இஞ்ஞானறு உலகம் எங கணுங காண்கினறேம அல்லேமோ? நீயின சேர்க்கையினறி நீர் உறைந்து பனிக்கட்டியாயவிடத்தும், நீரின் சேர்கையின்றித் நீயே மிக்கெழுந்து எல்லாவறறையும எரிக்குமிடத்தும் உலகின்கண் ஏதேனும் நடைபெறுமா? நடைபெறுதனறே. உலகினும் உலகத்தில் இயங்கும உயிர்களின் உடமபுகளினும நீயும நீருங் கலந்துநிற்க வேண்டுமளவுக்குக் கலந்து நிறறலிறறருன் உலகுயிர்களின் தோறறமும அவறறின் நிலைபேறுங காணப்படுகினறன. ஆகவே, அமமையப்பரது சேர்க்கையே படைப்புக்குங் காப்புக்கும ஏதுவாகு மல்லது, ஞானமுகனுந் திருமாலுந் தனித்தனியே அவைதமக்கு ஏதுவாகார் என்க.

அல்லதூஉம, உண்மையான் நுணுகி நோக்குமிடத்துப் படைப்பும அழிப்பும எனத் தொழில்கள் இரண்டே உளவல்லது, காப்பு எனபதொரு தனித்தொழில் தனியே

1. சிறுபாணற்றுப்படை, அ. 2. தொல். உரியியல், ச.

நடைபெறுவதன்று 'படைப்பு' என்பது யாதெனஆராயுங் கால் ஐம்பொறிகளுக்கும புலனுகா நூண்டுகளகள ஒருங்கு சேர்க்கப்பட்டு அவ் வைம்பொறிகட்கும புலனுகும வடி வுடையவாமாறு ஆக்குவதேயாம. 'அழிப்பு' என்பது அங் ஙனம் திரட்டி வடிவாக்கப்பட்ட துகளகள வேறுவேருகப் பிரிந்துபோமாறு பிரித்து விடுவதேயாம். நமமுடம்பினும உலகத்தினும இவ்விருவகைத் தொழில்களும இடை யருது நடைபெறுகின்றன. நமதுடம்பு எண்ணிறந்த நூண்டுகளகளால் ஆக்கப்பட்டிருக்கின்றது. இத் துகளகள ஒவ்வோர் இமைப்பொழுதும் புதிய புதியவாய நமதுடம் பின்கட் சேர்க்கப்பட்டு வராநிற்கப், பழைய துகள்கள அங்ஙனமே ஒவ்வொரு நொடியும் பிரிந்து பிரிந்து நம துடம்பைவிட்டு அகன்றுபோகின்றன. இவ்வாறு புதிய துகளகள புதிய புதியவாயத் திரட்டப்பட்டு நமதுடம்பின் கட் சேர்க்கப்பட்டு வருங்காறும நமதுடம்பு இருகு நிலை பெறும. மற்றுப புதிய துகளகள அங்ஙனம ஒவ்வொரு நொடியும சேர்க்கப்படாமல் நின்றுபோகப, பழைய துகள கள ஓர் உடம்பினின்றுங கழிந்துகொண்டே போமாயின், அவ்வுடம்பு விரைவில் அழிந்துபோகும. இம முறையால் ஆழந்து நோக்குமிடத்துப புதிய துகளகள இடையருது படைக்கப்பட்டு வருதலே உடம்பு நிலைபெறுதறகு ஏது வாதல் விளங்கும். எனவே, இடையருத படைப்புத் தொழிலே காத்தற றொழிலாகுமல்லாற, காத்தற்றொழி லென வேறொன்று தனியே யுண்மை ஒருவாறருனும பெறப்படமாட்டாது. அதனுற காத்தற றொழிலுக்குத் திருமாலென ஒரு தெயவம தனியே வேண்டுமெனக் கொண்டாரது கோட்பாடு சிறிதும பொருந்தாது. படைத் தறறொழிலுச செயயும அம்மையே காத்தற்றொழிலையுஞ செய்பவளாவாள். மேலும், காத்தறறொழிலுத தனியே செய்யும தெய்வம் ஒனறு உளதெனக் கொளளினும், வேறொருவராற் படைக்கப்பட்டதனையே அது காக்க வேண்டுதலானும, படைக்குந் தெய்வம படைத்தற்றொழி லுச் செய்யாதாயிற் காக்குந்தெய்வங் காத்தற்றொழிலுச் செய்யமாட்டாமையானும், எவறறையும் அழிக்குந்தெய்வம்

ஒன்று உளதெனக் கோடல் வைணவர்க்கும் உடன்பாடாக லின் அவ் வழித்தற்றொழிலைச் செயயும் தெயவத்தின் முற காக்குந் தெயவந் தனறொழில எக்காலும நடத்தல் இயலாமையானும, அன்றிக் காக்குந் தெய்வத்தின் முன அழிகுந் தெயவத்தின வலி செல்லாதெனின் அழித்தற றொழிலே எக்காலும நடைபெறுதாகல் வேண்டும, மற்று அஃது உலகின்கட் கண்கூடாய நிகழக் காண்டு மாகலின அழித்தற றெயவத்தினமுன காத்தற் றெயவத்தின வலி நிற்க லாற்றுமையானும அங்ஙனங் காத்தற் றொழிலுகெலாத் தனியேகொண்ட தெயவம் முதன்மையும ஆறறலும இல்லாதாய ஒழிதல்வேண்டும். அவவாறொழியவே, திருமாலை முழுமுதற கடவுளாகக் கொளளுங கோள ஒருவாற்றனும ஒவவாதென்க. இவ் வாறறல் அழித்தறறொழிலைச செயயும உருத்திரனே எல்லா ஆறறலுமவாய்ந்த முழுமுதற கடவுளாவன என்று தெளிக. இவவுண்மை தெரித்தறகே சிவஞானசித்தி யாரிலும்,

> "இறுதியாங் காலந் தன்னில் ஒருவனே இருவ ருந்தம்
> உறுதியின் நின்று ரென்னின் இறுதிதான் உண்டா காதாம்
> அறுதியில் அரனே எல்லாம் அழித்தலால் அவனுல் இன்னும்
> பெறுதும்நாம் ஆக்க நோக்கம் பேரதி கரணத்தாலே."

எனனுங் திருபபாட்டும் எழுந்தது. எல்லாமவல்லோனுய எல்லாவறறையும அழிக்கும முதல்வனெருவனோ, எல்லாம அழிந்தொழிந்த இறுதிக்காலத்தில் எஞசிநிறபவனுகலின, திருமபப் படைபபு நிகழவேணடியக்கால் அஃது எஞசி நிற்கும் அவ்வுருத்திரன்மாட் டிருந்தே தோனறுமென பதும பெறறும. பெறவே, படைபபும அழிபபும அவற் றிடையே நிகழும காப்பும என்னும முத்தொழிறகும உரிய முதல்வன் உருத்திரன ஒருவனே யாதலுந் தானே பெறபபடும். இவ்வுண்மையெல்லாம் 'சிவஞானபோதம,' 'சிவஞானசித்தி' என்னும் அறிவு நூல்களிலும அவற்றின் உரைகளிலும நன்கு விரித்துரைக்கப்பட் டிருத்தலின, அவற்றையே ஈண்டு மீளவிரித்தல் வேண்டா.

இனி, மேலே காட்டியவாற்றுல் முழுமுதற் கடவுள் அப்பனும அம்மையுமாய் நிற்குமியல்பும், அதுவே முத் தொழில்களோப் புரியுமாறும இனிது தெளியக்கிடந்தமை யின், அம முழுமுதற்கடவுளே நேரே காணும பெறற்கரும பேறுபெற்ற மாணிக்கவாசகர், திருஞானசமபந்தர், அப்பர், சுந்தரர் முதலான அருட்டிருவாளர்களெல்லாம் அம முழுமுதற்கடவுளேப, புராணகதைகளுட் சொல்லபபட்ட நான்முகன் திருமால் காலஉருத்திரன் என்னும மூவர்க்கும் மேற்பட்ட அம்மையப்பராகவே வைத்து ஓதி வழுத்து வரல்லது, அம் மூவரில் ஒருவராகக்கொண்டு வழுத்து தறகு ஒருசிறிதும ஒருபபடுவாரல்லர். இது,

"மூவரும் முப்பத்துமூவரும் மற்றெழிந்த
தேவருங் காணச் சிவபெருமான்."

என்றற்றொடக்கத்து அவர்தம அருளுரைகளால் நன்கு தெளியபபடும. இவ்வுண்மையினே "மாணிக்கவாசகர் வரலாறு" க00-ஆம பகுகமுதல் கoக-ஆம பக்கம வரை யிலும எடுத்துக் காட்டியிருக்கின்றேம. அங்ஙனமே திரு ஞானசமபந்தப பிளேயார்,

"மூத்தியாய் மூவரின் முதல்வனுய் நின்றவன்."
(திருமழபாடி)

எனவும்,

"மூவரிலும் முதலாய்•நடுவாய மூர்த்தியை."
(திருப்பாச்சிலாச்சிராமம்)

எனவும், திருநாவுக்கரசு நாயனுர்,

"மூன்தையார் மூந்தியுள்ளார் மூவர்க்கு முதல்வராளுர்."
(திருவிடைமருதூர்)

எனவும்,

"மூவருவின் முதலுருவாய் இருநான்கான
மூர்த்தியே யென்று முப்பத்துமூவர்
தேவர்களும் மிக்கோருஞ் சிறந்து வாழ்த்துஞ்
செம்பவளத் திருமேனிச் சிவனே." (பொது)

எனவும்,

"சென்றுநாஞ் சிறுதெய்வஞ் சேர்வோம் அல்லோம்
சிவபெருமான் றிருவடியே சேரப் பெற்றோம்." (பொது)

எனவும, சுந்தரமூர்த்தி நாயனர்,

"மூந்தி யாகிய மூவரின் மிக்க
மூர்த்தி யைமுதல் காண்பரி யானை."
(திருவாழ்கொளிபுத்தூர்)

எனவும் அருளிச்செயதமை காண்க. எனவே, சைவசமய ஆசிரியர்களாற் 'சிவன,' 'உருததிரன்' எனனும பெயர்களால் வைத்து வணஙகபபட்டது முழுமுதற் கடவுளேயல்லாமற், புராணகதைகளுட் சொல்லபபட்ட மூவரில் ஒருவரான காலஉருத்திரர் அன்று.

இனிச், சைவசமயாசிரியர்க்கு முனனிருந்த சைவசமயச் சான்றோர்களால் வணஙகபபட்டு வந்ததூஉம் முழுமுதற் கடவுளே யென்பதற்கு, அம முழுமுதலுக்குப் பேரிலக்கணமாயுளள பிறவாமை இறவாமையாகிய தன்மைகளே சிவபிராற்கு உரியனவாகப பழைய நூல்களுள ஓதப்படுதலே சான்றும. "பிறவா யாக்கைப பெரியோன கோயிலும" எனறு 'சிலபபதிகாரத்'திலும[1] போந்தமை காண்க. சிவபிரான முழுமுதற் கடவுளாதல் பற்றியே பண்டைநாளிலிருந்த தமிழ்ச் சானறோர்கள முதலிற் சிவபெருமான றிருகோயிலையும, அதனபினனர் ஏனைத் தெயவங்களின கோயில்களையும் வைத்து வழிபட்டு வந்தனர். இஃது,

"ஏற்றுவலன் உயரிய எரிமருள் அவிர்சடை
மாற்றருங் கணிச்சி மணிமிடற் றோனும்,
கடல்வளர் புரிவளை புரையு மேனி
அடல்வெங் நாஞ்சிற் பனைக்கொடி யோனும்,
மண்ணுறு திருமணி புரையு மேனி
விண்ணுயர் புட்கொடி விறல்வெய் யோனும்,
மணிமயில் உயரிய மாரு வென்றிப்

1. இந்திரவிழவூரெடுத்த காதை, ககக.

பிணிமுக ஊர்தி ஒண்செய் யோனும்என
ஞாலங் காக்குங் கால முன்பிற்
றேலா நல்லிசை நால்வ ருள்ளும் ''[1]

என்று 'புறநானூற்'றிற் சிவபெருமான் முதற்கண்வைத்து ஓதப்பட்டமை காண்க. இவ்வாறே 'சிலப்பதிகாரத்'திலும,[2] 'மணிமேகலை'யிலும[3] சிவபிரானும அவன் திருக்கோயிலும் ஏனை எல்லாத் தெய்வங்களுக்கும அவர்தங் கோயில்கட்கும முனவைத்து உரைக்கப்படுதலும உணரற் பாற்று.

எனவே, பிறந்திறபபனவெல்லாம சிறறறிவுடைய உயிர்களாதலும், அவ் வுயிர்கட்குப் பலவேறு உடம்புகளைத் தந்து அவை தமமைப் பிறவிவட்டத்தில்வைத்துச் சுழற்றி அவற்றிற்கு அறிவுவளரச் செய்யும முதல்வன் பிறபபு இறபபுக்கள இல்லாத் தூய பேரறிவினனுதலும் பண்டைச் செந்தமிழ நூலாசிரியர் மெய்யுரைகளால் இனிது விளங்காநிற்கினறன. அப பண்டையோர் மெய்ம் மரபின் வழிவந்த சைவசமயாசிரியர்களும பிறப்பு இறப்பு இல்லாத் தனிப்பெருங கடவுளையே 'சிவன்,' 'உருத்திரன்' எனவைத்து வழிபட்டனர் என்பற்குப, பிறபபு இறப்பு இல்லாத் தனி முதன்மையே அப பெருமானுக்குரியதாக அவர் அடுத்தடுத்து எடுத்துக் கூறுதலே சான்றும். மாணிக்கவாசகப் பெருமான்,

"யாவர்க்குந் தந்தைதாய் தம்பிரான் தனக்கு அஃதிலான்."
(திருச்சதகம், ஈஎ)

எனவும,

"துன்பமே பிறப்பே இறப்பொடு மயக்காந்
தொடக்கெலாம் அறுத்தருள் சோதீ,
இன்பமே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்."
(பிடித்தபத்து, க0)

எனவும், திருஞானசம்பந்தப்பெருமான்,

---

1. புறநானூறு, நிசு. 2. ஊர்காண் காதை, எ.
3. விழாவறை காதை, நிச.

"பிறப்பில் பெருமான் திருந்தடிக்கீழ்ப்
பிழையாத வண்ணம்." (பொது)

எனவும,

"தந்தை யாரொடு தாயிலர் தம்மையே." (பொது)

எனவும், திருநாவுகரசு நாயனார்,

"பிறப்பிலார் இறப்பிலார் பிணியொன் றில்லார்."
(திருப்பந்தணைநல்லூர்)

எனவும,

"மூவான் இளகான முழுவுல கோடுமண் விண்ணுமற்றும்
ஆவான." (பொது)

எனவும,

"பெரியான் பெரியார் பிறப்பறுப் பான்என்றுந் தன்பிறப்பை
அரியான் அடிநிழற் கீழதன்றே என்றன் ஆருயிரே."
(பொது)

எனவும,

"செத்துச் செத்துப் பிறப்பதே தேவென்று
பத்தி செய்மனப் பாறைகட் கேறுமோ
அத்தன் என்றுஅரி யோடு பிரமனுந்
துத்தியஞ்செய நின்றநற் சோதியே." (பொது)

எனவும,

"நூறு கோடி பிரமர்கள் நொந்தினர்
ஆறு கோடி நாராயணர் அங்ஙனே
ஏறு கங்கை மணல்எண்ணில் இந்திரர்
ஈறு இலாதவன் ஈசன் ஒருவனே." (பொது)

எனவும், சுந்தரமூர்த்தி நாயனார்,

"ஆரும் அளவறியாத ஆதியும் அந்தமும்
ஊரும் ஒன்றில்லே." (பொது)

எனவும் அருளிச் செய்தல் காண்க.

இங்ஙனம பண்டைநாள தொட்டுப் பின்றைநாள் வரையில் வழிவழி வந்த சைவசமயச் சான்ரோர்களெல் லாம பிறப பிறப பில்லா முழுமுதற கடவுளேயே 'சிவம' என வைத்து, அதனையனறிப, புராணஙகள கூறிய மூவரையாதல் மறறுப பிற தெயவஙகளையாதல் மறந்தும் வணஙகாராக, நமமாழவாரோ பிறபபு இறபபுக்களுட்பட்ட நானமுகன திருமால் இந்திரன முதலான தெயவஙகளையும், திருமாலினுந் தாழந்தவர்களாய் இம மண்ணுலகத்திற் பிறந்து மாண்ட கண்ணன் இராமன முதலாயினுரையும் பெரிதுயர்த்து ஒரு வரைதுறையின்றி வணஙகுகினறனர்.

"வாங்குநீர் மலருலகில்
நிற்பனவுந் திரிவனவும்
ஆங்குயிர்கள் பிறப்புஇறப்புப்
பிணிமூப்பால் தகர்ப்புண்ணும்."
(திருவாய்மொழி, ச, க, கி)

எனவும,

"நோயேமூப்பு இறப்பிறப்புப்
பிணியேயென் றிவையொழியக்
கூயேகொள் ளடியேனைக்
கொடுவுலகங் காட்டேலே." (சு, கு, எ)

எனவுங் கூறித் தாம பிறபபு இறபபுத் துனபங்களினின் றுங கரையேறுதலே வேண்டும் நமமாழவார்,

"மீனுய் ஆமையு மாய்நர சிங்கமு மாய்க்குறளாய்க்
கானுர் ஏனமு மாய்க்கற்கி யாம்இன்னுங் கார்வண்ணனே."
(கி, க, க0)

என்றும்,

"மனப்பரிப்போடு அழுக்கு மானிடசாதியில் தான்பிறந்து
தனக்கு வேண்டுருக் கொண்டு." (கூ, ச, எ)

என்றும் தாமே தங்கடவுளின் பல்பிறவிகளோ யுடன்பட்டு மொழிதலும், தம் பிறவியொழிதற்குப் பிறவியொழியாத பிறன் ஒருவனே வேண்டுதலும் நினைந்து பார்க்கும்வழி,

அவர் முழுமுதற் கடவுளியல்பினைச் சிறிதாயினும உணர்ந்து பார்க்கும ஆராயச்சியறிவுடைய ரல்லரெனபது துணியபபடுமன்ரே? இப பெற்றியினரான நமமாழவாரைக் கடவுட் டன்மையுடைய ரெனவும, எல்லாமவல்ல முதல்வனை நேரே கண்டு அவனை வணஙகி வாழத்துதலிலேயே ஒன்றுபடடு உறைத்துநினற மாணிககவாசகப் பெருமானைக் கடவுட்டனமை யிலரெனவும் தலைதடுமாறி மயக்கவுரை நிகழ்தறிய 'தமிழ வரலாறுடையாரது' பிழை பாட்டுரையினும மிககதொரு பிழையினை யாண்டுங காணேம.

இன்னும, நல்வினை தீவினையின பயனுய் அறியாமை நீக்கத்தின பொருட்டு உயிர்கட்குவரும பல்பிறவிகளும அவறறுல் வரும பாவஙகளும எல்லாமவல்ல இறைவனுக்கு இல்லாமை பற்றியே அவனை அறிவுநூல்கள "அறவாழி அந்தணன"[1] அலலது 'புண்ணியன' என்று புகலாநிற்கும. இப 'புண்ணியன' எனனுஞ்சொற் சிவபிரானுக்கே உரித்தாய வழஙகபபட்டமை,

"போதலர் சோலைப் பெருந்துறை எம் புண்ணியன்"

என்று மாணிககவாசகப பெருமானும,

"மருந்து வானவர் தானவர்க் கின்சுவை
புரிந்த புன்சடைப் புண்ணியன் கண்ணுதல்."
(திருவெறும்பியூர், கூ)

என்றும,

"புரித்தானைப் புண்ணியனைப் புனிதன் றன்னை."
(திருப்பூந்துருத்தி)

என்றும்,

"நாக்கொண்டு பரவும் மடியார்வினை
போக்கவல்ல புரிசடைப் புண்ணியன்." (திருவலஞ்சுழி, எ)

என்றும்,

"நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னுச்சடைப் புண்ணியன்." (பொது)

என்றும்,

"ஆதி நாயகன் ஆதிரை நாயகன்
பூதநாயகன் புண்ணிய மூர்த்தியே."

என்றும் திருநாவுக்கரசு நாயனுரும அருளிச்செயதவாற்ரு னும, வைணவ சமயத்தாழ்வார்களுள முதல்வரான பொய்கையாழவார்,

"பொன்திகழும் மேனிப் புரிசடையம் புண்ணியனும்
நின்றுலகந் தாய நெடுமாலும்—என்றும்
இருவரங் கத்தால் திரிவரேனும் ஒருவன்
ஒருவனங்கத் தென்றும் உளன்."

என்று அருளிச்செயதமையாலும அறியபபடுமம. அபபர் அடுத்தடுத்து வழஙகிய 'புரிசடைப் புண்ணியன' என்னுஞ சொறரொடரைப பொயகையாழவார் அஙஙனமே தாமும எடுத்து வழங்குதலே உற்று நோகஙகாற, சிவபிராஜனப் புண்ணியன எனறு கொண்ட அபபரது கருத்தைப் பொயகையாழவார் முற்றுந் தழுவினமை புலப்படும். இவ் வாற்ரும் பொயகையாழவார அபபருக்குப பின கி. பி. ஏழாம நூறருண்டி லிருந்தவராதலும தெற்றென விளஙகும.

ஙஙூ. சைவசமயச்சான்ரோர், பொய்கையாழ்வார் கருத்தொருமை

இனிப், பொய்கையாழவார் தாம அருளிச்செய்த 'முதற திருவந்தாதி'யின் ஈறறிற "பொனதிகழும் மேனிப புரிசடையம புண்ணியனும" எனனுஞ செயயுளே அமைத்த படியை ஆராயும வழி, அவரும பார்ப்பனர் கட்டிவிட்ட புராண கதைகளினுல் இடையிடையே பெரிதும ஈர்பபுண்டு நான்முகன் திருமால் உருத்திரன எனக் கடவுளர் மூவர் உளரெனவும அம் மூவருளளும திருமாலே முதல்வ ரெனவுங் கொண்டு நெடுநாள மயங்கி இடர்பபட்டனரேனும, பினனர்த் தாமசெய்த நல்வினைப பயத்தால் எல்லாம்வல்ல முழுமுதற் கடவுளின் திருவுருவினைத் தாம் நேரே கட்புல னுற காணும் பெறற்கரும் பேறு பெற்று, அத் திருவுரு

ஒருபாற் சிவந்த நிறத்தினையுடைய சிவவடிவாயும் மற்றொரு பால் நீலநிறத்தினையுடைய மால்வடிவாயும இருக்கக்கண்டு, அதுவே இறைவறகு உண்மை வடிவாமெனத் தெளிந்து, அச செய்யுளே அந் நூலின் இறுதியில் முடிந்த முடிபாக வைத்து அருளிச் செயதாராகல் வேணடுமெனபது புலனுகா நிறகும. திருககோவலூரில் ஓர இடைகழியில் தாம இறைவன நிருவுருவினை நேரே கண்டமையினைப் பொயகையாழவார் "நீயுந் திருமகளுமநின்ருயால்" என்று தாமே குறிபபிட்டு அருளிச செயதிருககினறனராகலின, அது மறுகுகலாகா உண்மையே யாமெனக. அஙஙனம ஈருருவும ஒருருவாய நினற இறைவனை நேரே கண்ட துணி விஞறருன அவர் தாஙகண்ட அவ வுருவின் ஒரு பக்கத் தின பெயர் 'அரன' மற்றொரு பக்கத்தின பெயர் 'நாரணன்' ஆம எனறும, ஒரு பக்கதினை ஊர்தி எருது மறறொரு பககத்தின ஊாதி எருவையாம எனறும, இருகூறும் உரைத்தநூல் 'மறை' யாகும என்றும, அவ்விரண்டுள ஒன்று அமர்ந்திருட்பது மலை மறறொன றமர்ந்திருபபது கடல ஆம எனறும, ஒனறு காத்தற றொழிலைச் செய்வது மற்றொனறு அழித்தற றொழிலைச செயவதாம எனறும, ஒனறன் திருககையிலுளளது முத்தலைவேல் மற்றொன் றன் கையிலுளளது ஆழியாம எனறும், ஒன்றன்நிறம நெருப்பின் செந்நிறம மறறொனறன நிறம நீலமாம என்றும் தெளிவுற விளககி,

"அரன்நா ரணன்நாமம் ஆன்விடைபுள் ஊர்தி
உரைநூல் மறைஉறையுங் கோயில்—வரைநீர்
கருமம் அழிப்புஅளிப்புக் கையதுவேல் நேமி
உருவம்எரி கார்மேனி ஒன்று."[1]

என்று அருளிச் செயதார். இங்ஙனமே பின்னும, அவர்,

"ஏற்றுன்புள் ஞர்ந்தான் எயில்எரித்தான் மார்பிடந்தான்
நீற்றுன் நிழல்மணி வண்ணத்தான்—கூற்றொருபால்
மங்கையான் பூமகளான் வார்சடையான் நீண்முடியான்
கங்கையான் நீள்கழலான் காப்பு."

1. முதல் திருவந்தாதி, கி.

என்று வறபுறுத்தருளிச் செய்தலுங் காண்க. இவ்வாறு முழுமுதற கடவுளின திருவுரு ஒருபாற செமமை நிறத் தினையுடைய சிவமாயும மறறொருபால் நீல நிறத்தினை யுடைய திருமாலாயும அமைந்து நிறகுமென்பது அவ விறைவனுருவை நேரே ஒருகாலனறிப் பலகாலுங் கணட திருஞானசமபந்தப பெருமான,

"மாதொருபாலும் மால்ஒரு பாலும் மகிழ்கின்ற நாதன்"

(திருப்பிரமபுரம், எய்யாவென்றி என்னும் பதிகம், உ)

என்றும,

"ஊறினுர் ஓசையுள் ஒன்றினுர் ஒன்றிமால் கூறனுர்." (திருத்தென் குடித்திட்டை, சு)

எனறும் அருளிச்செயயுமாற்றனும நனகுணரபபடும. இதனைநெ ஒபபவே திருநாவுக்கரசு அடிகளும,

"குடமாடி இடமாகக் கொண்டான் கண்டாய்."

(திருக்கோடிகா)

எனறும்,

"அரியலாற் றேவியில்லை யையன் ஐயாற னுர்க்கே."

(திருவையாறு)

என்றும,

"பாகம் மாலை மகிழ்ந்தனர்." (திருவையாறு)

என்றும,

"மால்ஒரு பாகமாக மகிழ்ந்தநெய்த் தானத்தாரே."

(திருநெய்த்தானம்)

என்றும்,

"மாலை மகிழ்ந்தொருபால் வைத்தார்போலும்."

(திருவிடைமருதூர்)

என்றும்,

"மாலை இடப்பாகத்தே மருவக் கொண்டார்." (பொது)

என்றும பலகால் அருளிச்செயதிருத்தலும், பேயாழவார்,

"தாழ்சடையும் நீண்முடியும் ஒண்மழுவுஞ் சக்கரமும்
சூழரவும் பொன்நாணும் தோன்றுமால்—சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுருவும் ஒன்றுய் இசைந்து."

என்று அருளிச்செய்தமையுங் கருத்திற் பதிக்கற்பாலன வாகும்.

இவ்வாறே பண்டைத் தமிழச் சான்றோரும், நீல மேனியினையுடைய அமைமையை இடப்பாகத்தே ஒருகூற் றிற்கொண்ட சிவபிரானே முழுமுதற்கடவுளென தெளிய வுணர்ந்து வழிபட்டமை,

"நீலமேனி வாலிழை பாகத்
தொருவன திருதாள் நிழற்கீழ்
மூவகையுலகும் முகிழ்த்தன முறையே."[1]

என்பதனாலும,

"ஊர்ந்தது ஏறே சேர்ந்தோள் உமையே
செவ்வான் அன்ன மேனி அவ்வான்
இலங்குபிறை யன்ன விலங்குவால் வையெயிற்று
எரிஅகைந் தன்ன அவிர்ந்துவிளங்கு புரிசடை
முதிராத் திங்களொடு சுடருஞ் சென்னி
மூவா அமரரும் முனிவரும் பிறரும்
யாவரும் அறியாத் தொன்முறை மரபின்
வரிகிளர் வயமான் உரிவை தைஇய
யாழ்கெழு மணிமிடற் றந்தணன்
தாவில் தாள்நிழல் தவிர்ந்தன்றுல் உலகே."[2]

எனபதனாலும,

"பெண்ணுரு ஒருதிறன் ஆகின்று அவ்வுருத்
தன்னுள் அடக்கிக் கரக்கினுங் கரக்கும்."[3]

என்பதனாலும, செவ்விதின் உணர்ந்துகொள்க.

---

1. ஐங்குறுநூறு, கடவுள் வாழ்த்து.
2. அகநானூறு, கடவுள் வாழ்த்து.
3. புறநானூறு, கடவுள் வாழ்த்து.

அறறேல்,

"நூறு கோடி பிரமர்கள் நொந்தினர்
ஆறு கோடி நாராயணர் அங்ஙனே."

என்று நாராயணர் பலர் உளரெனவும, அவரெல்லாம பிறந்திறகு நீரெனவுங் கூறிய சைவசமய ஆசிரியரே, பிறந்திறவா முதல்வனின ஒருகூறு திருமால் எனறு மொழிதல், முனனெடுபின முரணும பிறவெனின; அற்றனறு, இறைவனில ஒருகூறுய நிறகுந் திருமால் பிறப பிறபபு இல்லா உலகனனியாம முதல்வியே யல்லாமற பல பிறவி யெடுத்துழலும நாராயணர் அல்லர். இவ்வுண்மை,

"முதன்முறை இடைமுறை கடைமுறை தொழிலிற்
பிறவாப் பிறப்பிலை பிறப்பித்தோர் இலையே."[1]

எனனும பரிபாடற் பாட்டின அடிகளானும உணரபபடும. திருமாலினமேற பாடபபட்ட பரிபாடற பாட்டுகள, கிறித்து பிறபபதறகு இருநூறுண்டுகட்கு முனனரே இயற்றப பட்டனவாகும எனபதறகு, அபபாட்டுக்களுள் யாண்டும கண்ணனுவது இராமனுவது குறிபபிடபபடாமையே சான்றும. பிற்றைஞானறை வைணவ சமயத்தாரால் திருமாலின விழுமிய பிறபபினராயக் கொளளப்பட்டுப பெரிது வணஙகபபடுங கண்ணனும இராமனும அபபாடல் களுட் சிறிதுங குறிபபிடப்படாமையை ஆராயுங்கால், அவ் விருவரைப்பறறிய கதைகள இத் தெனறமிழநாட்டிற் பரவுதறகு முனனரே திருமால் பிறபபு இறபபு இல்லா முதல்வராகப பண்டைத் தமிழ்ச்சான்ரோராற பரவபபட்டு வந்தமை புலனும. வடக்கிருந்துவந்த ஆரியப்பார்ப்பனர் தாங்கொணர்ந்த 'மாபாரத' 'இராமாயணக்' கதைகளால் கண்ணன் இராமன் எனனும இருவரையுந் தெய்வங்க ளாக்கி அவரைத் திருமாலோடு ஒன்றுபடுத்திய பின்னரே, தான், அக் கண்ணன இராமன் என்பார்க்குரிய பிறப்பு இறபபுக்கள் திருமாலுக்கும் உரியனவாக ஏற்றப்பட்டன.

1. பரிபாடல், கூ, எக-எஉ.

அதற்கு முன்னெல்லாம் தமிழசசானறோர்கள சிவபிரானை யும் திருமாலையும ஒன்றுகவே வைத்து வழிபட்டு வந்தார் கள ; 'சைவம', 'வைணவம' என்ற இருவகைச் சமயப பகுபபு அக்காலத்தில் இத் தமிழநாட்டினகண் இருந்ததே இல்லை ; கி. பி. இரண்டாம நூறறாண்டிறகு முறபட்ட பழைய செந்தமிழப பாட்டுக்களில் எங்குஞ 'சைவம', 'வைணவம' என்னுஞ சொறகள சிறிதுங காணபபடா. வடகதிருந்துவந்த ஆரியபபார்பபனர், தமிழ நன்மகளுள இருந்த ஒறறுமையைக் குலைத்து, அவாதமமை வேறு பிரித்து, அவர்தமக்கெல்லாந் தாமே மேலாக நிறறல் வேண்டியே, திருமாலை யுயர்த்திப புராண கதைகளைப் படைத்து 'வைணவம' என்னும ஒரு மதத்தையும தனியே யுண்டாகினர். மறறை மக்களைபபோலவே பிறந்து பலவகைத் துனபங்களில் உழனறு இறந்துபபட்ட கண்ணன் இராமன முதலாயினரைத் 'திருமாலின் அவதாரஙகள' எனப புகன்று, அவர்களை அத் திருமாலினும மிக்கவராக வைத்து வழிபடும ஆரியரது புனசெயலைக் கணடவள வானே, எல்லாமவல்ல முழுமுதற கடவுளைப பிறபபு இறப் புக்களிற கிடந்து உழலும மக்களுககு ஒபபாகவைத்துச் சொல்லுதலிற் சிறிதுங கருத்து உடன்படுதல் இல்லாத தமிழச்சானறோர்கள தமது மேமபடுகொள்கை, புதிது தோனறிய 'வைணவ' மதத்தின முறறும வேறுதலைப பொளளெனப புலபபடுத்தல் வேண்டியே தாம முழுமுதற் கடவுளுககுப பெயராய இட்டு வழங்கிய 'சிவம' எனனும பெயராற 'சைவம' என்னும ஒருகுறியீட்டை யுண்டாக்கி அதனைத் தமது கோட்பாட்டிற்குப பொருந்திய பெயராய்த் தாமும வழங்கலாயினர். பண்டைத் தமிழ மக்களால் ஒரே தெயவமாக வைத்து வணஙகபபட்டு வந்த 'அமமையப் பரே' பின்னர் இருவேறு தெயவஙகளாகப பிரிந்ததும, அவ் விரண்டுள 'திருமால்' தமது பண்டை முழுமுதறறனமை யிழந்து கண்ணன இராமன் என்பாரினும் தாழந்த நிலைமையை யடைந்ததும, அதனால் முனனர் ஓர் இனத் தினராயிருந்த தமிழநனமக்கள் பினனர்ச் 'சைவர்', 'வைணவர்' என இருவேறு பகுப்பினராய்ப் பிரிந்து வேறு

பட்டதும் ஆகிய இவையெல்லாம், ஆரியப் பார்ப்பனரில் ஒரு கூட்டத்தார் கி. பி. முதல் நூற்றாண்டில் 'மாபாரதக் கதை'யினையும, மறறொரு கூட்டத்தார் கி. பி. ஆரும் நூற் றாண்டில் 'இராமாயணக் கதை'யினையும இத் தென்றமிழ நாட்டிறகொணர்ந்து அவைதமமை மிகப் பரப்பிய காலம் முதல் முறையே நிகழந்து வளர்ந்தனவாகும். கண்ணனி லுந் திருமால் இழிந்தோராகத் தாழத்தபபட்டமைக்கு நம்மாழவார்,

> "திருமால் நான்முகன் செஞ்சடையான் என்று இவர்கள்எம் பெருமான் தன்மையை யார் அறிகிற்பார்."[1]

என்று கூறுதலே சான்றாம. வடக்கிருந்து வந்த ஆரியப் பார்பபனர் இந்திரன, வருணன், மித்திரன முதலான சிறு தெய்வஙகளுக்கு உயிர்க்கொலை வேளவிகள வேட்டு அவரை வணஙகும நீரரேயல்லாமல், முழுமுதற் கடவுளை யும் அதனை வழிபடுமு அனபின முறைகளையும ஒரு தின யளவுதானும அறிந்தவர் அல்லர். மக்களைத் தெயவஙக ளாக வணங்குதலே அவவாரியாக்கு மிக்க விருபபத் தினையும மகிழச்சியினையுந் தருவதல்லது, முழுமுதற் கடவுள வணககம அவர்களுச் சிறிதும உவபபினைத் தருவ தனறு ; அதனால் அவர் அதனை எட்டிக்காயினுங் கைப்ப தாக நினைந்து இகழாநிற்பா இப் பெற்றியினராகிய அவ் வாரியர் இத் தெனறமிழ நாடு புகுந்ததும, தமிழச் சான றோர் அறிவானும் நாகரிகத்தானும தமமினும மிகச் சிறந் தோராய விளஙகி முழுமுதறகடவுளை அமமையப்பராக வைத்து வணங்கும் விழுமிய முறையினைக் காண்டலும், பல சிறுதெயவ வணக்கத்திலும வெறியாட்டு வேளவி யிலும பழகிய தமதறிவுக்கு அஃது எட்டாமையால், தாம் புனைந்து கட்டிக்கொணர்ந்த மாபாரத இராமாயணக்கதை களின் உதவிகொண்டு உருக்கமான அக் கதைகளிற் சொல்லப்பட்ட கண்ணனையும் இராமனையும உயர்பெருந் தெய்வங்களாக்கி, உயர்ந்த கல்வியறிவும் பகுத்துணர்ச்சி யும் இல்லாத் தமிழப் பொதுமக்கள அக் கதைகளை மெய்

1. திருவாய்மொழி, அ-ஆம் பத்து, ங-, க.

யென நம்பி மனங்கரைந்து அவ்விருவரையுமே திருமாலின் அவதாரமென மயங்கிக்கொண்டு வழிபடுமாறும், முழு முதறகடவுளாகிய சிவபெருமானையும் அவனோடு இரண் டறக் கலந்துநிற்கும அமமையாகிய திருமாலையும் வணங்கும் வணக்கத்தைக் கைவிடுமாறும செய்து விட்டனர். இதுகண்ட தமிழ்ச் சானறோர்கள எளிய கதைகள எழுதும முகத்தாற 'சிவம்' எனபது பிறப்பு இறபபு இல்லா முழுமுதறகடவுளே யாதலைத் தாமும் தமிழபபொதுமக்கட்குத் தெற்றுமபொருட்டுச, சிவபெருமா னுக்குச் சிறந்த அடியவர்களான அரசர்கள செய்த ஆண்மைச் செயல்களைச் சிவபிரானே செயதனவாகக் கதைகள புனைந்து 'சைவபுராணம,' 'கந்தபுராணம' முதலிய பல புராணஙகளையும இயற்றி வழஙகவிட்டார்கள; சிவபிரான் கோயில்களை நிறைய எடுபபித்து, அவற் றினகட் சிறந்த பல திருவிழாக்களும நடைபெறுமாறு செய்தார்கள; அக் கோயில்கள அமைக்கும முறைகளை யும அவறறின்கண் வழிபாடு ஆறறும முறைகளையும் விரித்துப, பழைய நாளிலிருந்த தமிழ ஆகம நூல்களின் பெயராற 'காமிகம,' 'வாதுளம' முதலான நூல்களையும வடமொழியில் எழுதிவைததார்கள. இவ்வளவும தமிழச் சானறோர்கள செயது வைத்தமையினாலேதான, கணண னும இராமனும பெரிது வணஙகபபடும இந்நாளிலுங்கூட முழுமுதற்கடவுளாகிய சிவபிரானை வணஙகும வணக்கமும் இனனும இடையிடையே காணபபடுகினறது. இஙஙனம அவாகள செயதுவையாவிட்டால் கண்ணன இராமன் முதலியோரையும, ஏனைச் சிறுதெயவஙகளையும வணஙகும் வணகககமே இத் தெனறமிழ நாட்டிலும முழுதும பரவி யிருக்கும.

இங்ஙனமாகக் 'கந்தபுராணம்' முதலான சைவ புராணங்களை ஆன்றோர்கள எழுதிவைத்தது, 'பாரதம,' 'இராமாயணம்' முதலான கதைகளைக் கேட்டு மக்களைத் தெய்வமாக மயங்கி வழிபடும பொதுமக்களை அத்தகைய கதைகளின் வாயிலாகவே மெல்லெனத் திருபபி முழு முதற் கடவுளாகிய சிவபிரான் வழிபாட்டில் நிறுத்திக்

கொள்ளும் பொருட்டுச் செய்த ஒரு சூழ்ச்சியேயாகும். இச் சைவபுராணங்களெல்லாம இறைவனுடைய நுண்ணிய இயல்புகளை உணரமாட்டாத பருபபொரு ளறிவினர்க்கு அவறறைத் தெருட்டுமபொருட்டு அவைதமமை உண்மை யில் நிகழந்த கதைகளபோல் வைத்து உணர்த்த எழுந்தனவாகும். எல்லாமவல்ல இறைவனுயர்வைப புலப்படுத்துதற்கு ஒரு கருவியாக எழுதபபட்ட இச் சைவ புராணங்களே, உண்மையறிவில்லாரால அவனது உயர் வைக் குறைக்குங் கருவியாகவுங கொண்டுவந்து விடப் பட்டன. யாங்ஙனமெனிற் சிறிது காட்டுதும:

உயிர்களைப் பொதிந்து வருத்தும ஆணவம மாயை விணை எனனும மும்மலங்களும இறைவனது அருள நெருப்பால் எரிக்கபபடுதலையே, பொதுமக்கள எளிதில் உணர்ந்துகொளளும பொருட்டு, வானத்திற பறந்து செல்லும மூனறு தீய அரக்கர் தம பட்டினங்கள இறை வனது நெற்றிக்கண் நெருபபால் எரிந்தனவாக வைத்து ஒரு புராணகதை எழுதபபட்டது. இதுவே இக்கதையின கருத்தாதல்,

> "அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
> மூப்புரஞ் செற்றனன் என்பர்கள் மூடர்கள்,
> மூப்புர மாவது மும்மல காரியம்
> அப்புரம் எய்தமை யார்அறி வாரே"[1]

என்று திருமூலநாயனர் அருளிச்செய்தமையால் அறியப் படும. இவ்வுண்மைப பொருளறியாத சைவரிற பருப பொருளறிவினர், சிவபிரானே தேவர் சமைத்த தேரின மேல் அமர்ந்து அவவரக்கரின் அப்பட்டினங்கண்மேல் வில்லுங் கணையும் ஏந்திச்சென்று அவறறை எரித்தான் என்று உரைப்பர்; அதுகேட்ட •மறறைச் சமயத்தார் 'எங்கும் நிறைந்த நும கடவுள ஒரு தேர்மேல் ஏறி, ஓரிடத்திருந்து பிறிதோரிடத்திற்குச் செல்வது எப்படி? எவறறையும் நினைந்த அளவிலே ஆக்கவும அழிக்கவும

1. திருமந்திரம், கூஉகூ.

வல்லவன் நுங்கடவுளாயின அவன் வில்லுங்கணையும் ஏந்தி அவ்வரக்கர்மேற போர்புரியச் சென்றது எற்றுக்கு? மக்களைப்போல அவனுக்கு வில்லுங் கணையுந் தேருங்கூட வேண்டுமோ? அவ்வரக்கரின் அபபட்டிலாங்கள மூன்றும பருப்பொருளக ளாகையால் அவை நிலத்தின்மேல் இருக்கத்தக்கனவே யல்லாமல் வானத்திற் பறப்பது யாங்ஙனம்?' எனறு இனனேரனன கேளவிகளைக் கேட்ப ராயின, அவற்றிறகெல்லாம அச் சைவர் விடைகூற இயலாமல் விழிக்கினறனர்.

இனனும, எல்லா உலகங்களின படைபபுக்கும ஏதுவாயிருக்கின்ற புளளிவடிவினதாகிய விந்துவும் வரி வடிவினதாகிய நாதமுஞ சேர்ந்த சேர்க்கையே ஓங்கார மாகும. இந்த ஓங்காரத்தில் விளங்கும முதல்வன் படைப் புக்கு முந்திய தோறறமுடையனைய, விந்துநாதச சேர்க்கை யாற் பிறந்த முதலோசையில் முளைந்துநிறபவனைகளின், அவன விந்துநாதங்களைக் இயகுகிறகும அமமையபபருகு மூத்தபிளளை போல்வனதலைத் தெரித்தறகே, ஓகாரம் போன்ற முகவடிவினையுடைய யானையி னுருவினை மேற் கொண்டு அமமையபபா சேர்ந்த சேர்க்கையினின்றும யானைமுகக் கடவுள தோன்றினு ரெனனும ஒரு புராண கதை வரைந்துவைக்கபபட்டது. இக கதையின உண்மை இது வாதலை உணராத சைவரிற சிற்றறிவினர், திருக் கைலாயத்தின சுவரிலே வரைந்திருந்த யானையின உரு வினைக்கண்டு சிவபிரான காமங காழுபபேற அதுகண்ட பிராட்டி தான பெட்டையானையின வடிவினை எயதலும, பெருமான் களிறறியானையின உருவுகொண்டு அதனைடு புணர்ந்தனைக யானைமுகத்தினையுடைய மூத்தபிள்ளையார் தோனறினர்; இங்ஙிகழச்சி உண்மையேயாகுமென நமபி உரை நிகழத்துவர். இவ்வுரையினைக் கேட்ட மற்றைச் சமயத்தவர் 'நுங்கடவுள மக்கள தேவரினும இழிந்த யானை யின் உருவையெடுத்துப் புணர்ச்சிசெய்ய விழைந்த அத் துணை இழிந்த காமம உடையரோ!' எனவும, 'தன் முகத்தை அழகிய தேவவடிமாகத் திருத்திக்கொளள

மாட்டாமல், மக்களினும் தாழ்ந்த யானையின் முகவடிவ மாகவே அமர்ந்திருந்த பிளகூயார், யானையினுஞ சிறந்த மக்களூத் திருத்துவது எங்ஙனம்?" எனவும் விஞவி நகை யாடா நிறபர். இவவாறே முருகக்கடவுளின பிறபபைக் கூறுங் கதைகளும, அவர் சூரபனமனோடு எதிர்த்துப போராடினரெனக் கூறுங் கதைகளும், சிவபிரானையும் அமமையையும் பற்றியெழுந்த ஏனைக் கதைகளும் எல்லாம் உண்மையில் நிகழந்தன அல்ல; அக் கதைகளெல்லாம் சைவசித்தாந்த நுண்பொருள்களூ யுளளடக்கிப பருப் பொருளறிவிஞரைத் தெருட்டுதற் பொருட்டுப புனைந்து வைக்கபபட்டனவாகும. மாணிக்கவாசகப பெருமானு யுளளிட்ட சைவசமய ஆசிரியனமார் இனனோரனன கதை களூத் தழுவிச் சிவபிரானைப பாடினமை, அக் கதைகளுட் கிடந்த நுண்பொருளூ நோக்கியே யல்லாமல், அவை உண்மையில் நிகழந்தவை என்னுங் கருத்துப் பற்றி யன்று. அந் நுண்பொருளெல்லாம ணடு விரிப்பிற் பெருகுமென அஞசி விடுத்தாம்.

இவவாறெல்லாம சிவபுராண கதைகள பெருக லானது, வடக்கேயிருந்து வந்த ஆரியபபார்பபனர் பாரத இராமாயண கதைகளூ இத் தெனறமிழநாட்டிற் கொணர்ந்து பரபபிக, கண்ணனையும இராமனையும உயர் பெருந் தெயவங்களாக்கப புகுந்த காலந்தொட்டு நிகழ்ந்த தாகும. இக் கதைகள, தமமை ஆக்கியோர் கருதிய பயனைத் தந்திலவாயினும, சிவபிரான பிறபபு இறபபு இல்லாத் தனிமுதல்வனுய், ஏனையோர் வணஙகும தெய வங்கள எல்லாவற்றிறகும மேலான முழுமுதற கடவுளே யாவன் எனபதனை நாட்டுதலில் ஒருமுகப்பட்டு நிறகின்றன. இப புராண கதைகளுள யாண்டும சிவபிரான் ஒரு தாயின் கருப்பையுட் டங்கிப பிறந்து வளர்ந்து இறந்தான் எனக் கூறபபடாமையே பெரிதுங கருத்திற் பதிக்கறபாலதாம விழுமிய உண்மையாகும. சிவபிரானோடு இரண்டறக் கலந்துநிற்கும் அம்மையாகிய திருமாலும, அவனைப் போலவே பிறப்பு இறப்புத் தன்மைகள் சிறிதும இல்லா

தவள் ஆவள. திருமால் பத்துப பிறவிகள் எடுத்தன ரெனறலும, அப பிறவிகளில் பல அல்லல்களுழந்து பின்னர் இறந்தனரெனறலும போல்வனவாகிய கதைகளெல்லாம வடக்கிருந்து வந்த ஆரியபபார்பபனா கட்டிவிட்டவைகளாகும. அக் கதைகளிற் கூறபபடுவோர், உண்மையிலே திருமாலின் அவதாரஙகள அல்லர்; அவருட் சிலர் அறிவு ஆற்றல்களில் ஏனை மகக்ளைவிடச சிறிது உயர்ந்தவரும, மறறுஞ சிலர் கதைபுனைந்த ஆரியக் குருமாரால் உளளவர்போல வைத்துக் கட்டிச் சொல்லபபட்டவரும ஆவர்; இத்தகைய இவர்கட்கும முழுமுதற் பொருளாகிய திருமாலுக்கும ஏதொரு தொடர்பும் இல்லையென பது கடைபபிடிகக.

அமைக்கபபட்ட குறுவெண்பாக்களும உள ; அத்தகைய குறுவெண்பாட்டு ஒனறுயினும பொயகையாழவாரது திருவந்தாதியில் உளதாவெனின், அதுவும இனறு. இனி, நாலடி வெண்பாக்களிலும, இரணடாம அடியின் ாறறில் தனிச்சொல்லினறி நானகடியும ஓர் எதுகைப்பட வந்தவை பல 'களவழி'யிலும, 'இன்னிலை'யிலும இடையிடையே விரவி நினறுறபோல, ஆழவாரது திருவந்தாதியிலும அப பெறறியன சிலவேனும உளவோவெனின, அவைதமமுள ஒனறுதானும அதன்கண் மருந்துக்கும அகபபடுகின்றிலது. பொயகையாழவாரது திருவந்தாதியிலுளள வெண்பாபபாட்டுகள முறறும, பிறகாலத்தார் செயத 'யாபபருங்கலம,' 'யாபபருங்கலகாரிகை' முதலான செயயுளிலக கணங்களிற சொல்லபபட்ட நேரிசைவெண்பா இலகணம ஒனறேயுடையவாய ஓரோசைபபட நடகுகும இயல்பின்வாயிருகினறன. பொயகையாழவாரேயனறி, அவரோடு ஒரு காலத்தினரான பேயாழ்வார் பாடிய மூனறும் திருவந்தாதிச் செயயுட்கள நூறறும, பூதத்தாழ்வார் பாடிய ஒரணடாம் திருவந்தாதிச் செயயுடகள நூறறும அங்ஙனமே முதலிரண்டடியின் முதற்சீரும இரணடாம அடியின இறுதிச் சீரும ஒரெதுகையாயப, பின இரணடடியின் முதறசீர்கள வேறேர் எதுகைபபடநிறக வரும நேரிசைவெண்பா இலக்கணம ஒன்றேயுடையவாயிருகின்றன. மேலே காட்டிய வாறு, கடைசசஙகக்காலதது சானறோர இயறறிய வெண்பா நூல்களிற காணபபடும பலவேறுவகையான வெண்பாயாபபின அமைதிகள, இம முதலாழவார் மூவரும இயறறிய வெண்பா அந்தாதிகளிற சிறிதுங காணபபடுகின்றில.

அதுவேயுமனறிக், 'களவழி,' 'இனனிலை' எனனும சஙகக்காலத்துப பொயகையாரின நூல்களிற, பனனிரணடு பனனிரணடு மெல்லோசை வடசொற்களே முறையே சிறு வரவினவாய விரவிக் காணபபடாநிற்கப, பொய்கையாழ்வாரது முதறறிருவந்தாதியில் வல்லோசை வாய்ந்த வடசொறகளும, கடைச்சங்கச் சான்றோர் இலக்கியங்களிற்

காணபபடாத வடசொறகளும ஆக அறுபத்துமூன்று விரவியிருத்தலே மேலே யெடுத்துக்காட்டினமை ; பொய்கை யாழவாரது அந்தாதியிற போலவே பேயாழவாரது திருவந்தாதியில் அறுபத்தாறு வடசொறகளும, பூதத்தாழவாரது திருவந்தாதியில் அறுபத்தெட்டு வடசொறகளுங கலந்து காணபபடுகினறன. சங்ககாலத்துப பொயகையார் நூல்களாகிய 'களவழி,' 'இனனிலை' எனனும இரண்டிலும பனனிரணடு பனனிரண்டு வடசொறகளே கலந்திருத்தலையும, ,கி. பி. எட்டாம நூறறாண்டிலிருந்த பொயகை பேய பூதம எனனும ஆழவார் மூவர் பாடல்களிலும அறுபத்துமூனறு முதல் அறுபத்தெட்டுவரையிலுளள வடசொறகள கலந்திருத்தலையும உறறுநோக்கவல்ல நுண்ணறிவாளர், அவவடசொற கலபபு வேறுபாடு அவவவரா இருந்த காலவேறுபாடடினையும இனிது விளகுகிக காட்டுமெனா கனகுணாந்து கொளவரெனக.

இனனும, 'இனனிலை' பாடிய பொயகையார், ஆசிரியர் தொல்காபபியனா கூறிய இலகுகணத்தினவழி நூல் செயதவர் எனபதறகு, அவர் அந்நூலினகட் சில வெண்பாகளில ஐஞசீரடியும வரததொடுதலமையே சானறும. 'இனனிலை' அறதுபபால் ஏழாஞ செயயுளில் "நாமமீட்டு, ஒறுகுகொணு ஞாங்கா அடிபபட்ட சிமபால்" எனறும, பொருடபால் ஒனபதாஞ செயயுளில் "யாம வெறுக்கை இனறி அமையாராம அஃதிலார் மைஆவின" எனறும, இனபபால் ஐந்தாஞ செயயுளில், "அழுகுடமபுச் சிழநீரான யாதுதசீர மெலலியலை யாண" எனறும ஐஞசீரடிகள வந்தமைகாண்க. இஙஙனம வெணபாவினுள ஐஞசீரடியும ஒரோவழி அருகிவரபபெறு மென்பது,

> "வெண்டலை விரவியும் ஆசிரியம் விரவியும்
> ஐஞ்சீரடியும் உளவென மொழிப."

எனனுத் தொல்காபபியதனுச் செய்யுளியல், சூசூ-ஆம சூத்திரத்தானும, அதறகுப பேராசிரியரும நசசினாக்கினியரும கூறிய உரையானும பெறபபடும. யாப்பருங்கலக்காரிகையாசிரியரும அதன் உரைகாரரும, "அருகிக் கலியோடு

அகவல் மருங்கின் ஐஞ்சீரடியும், வருதற்கு உரித்தென்பர்'' என்னுங் காரிகையில் (ஒழிபியல், நூ) வெண்பாவினுள ஐஞ்சீரடி வருதலாகாதென அதனை விலக்கினர். எனவே, யாப்பருங்கலகாரிகை எழுதப்பட்ட பிற்காலத்தில் 'வெண் பாவினுள ஐஞ்சீரடி விரவிவரும வழக்கு' வீழ்ந்து பட்டமை புலனும். முதலாழவார் மூவரும இயற்றிய முந்நூறு வெண்பாக்களில் ஒன்றிலாயினும ஐஞ்சீரடி வராமையாலும, இவ்வாழவார்கள இருந்த கி. பி. எட்டாம நூற்றாண்டிற்கு முன்னரே கி. பி. ஐந்தாம நூற்றாண்டில் இயற்றப்பட்டதாகிய 'புறப்பொருள வெண்பாமாலை'யுள ளும ஐஞ்சீரடி விரவிய வெண்பாக் காணப்படாமையாலும, 'இன்னிலை' வெண்பாக்களுள அஃது விரவக்காண்டலா னும, கி. பி. இரண்டாம நூற்றாண்டுக்கு முற்பட்டுப் பொய்கையார் 'இனனிலை' இயற்றிய காலத்தே ஆசிரியர் தொல்காப்பியனார் கூறியாங்கு வெண்பாவினுள ஐஞ்சீரடி விரவும வழக்கு இருந்ததென்பதூஉம், பொய்கையாழ வார் திருவந்தாதி பாடியகாலத்துக்கு முன்னரேயே அஃதாவது கி. பி. ஐந்தாம நூற்றாண்டிலேயே அவ்வழக்கு வீழ்ந்துபட்ட தென்பதூஉம அறியற்பாலன. ஆகவே, 'இன்னிலை' பாடிய பொய்கையாரும, திருவந்தாதி பாடிய பொய்கையாழவாரும் எழுநூறு ஆண்டுகள இடையிட்ட வெவ்வேறு காலத்தவராவ ரென்பதும பகுத்துணர்ந்து கொள்க.

இனி, இஞ்ஞான்று 'இன்னிலை'யை அச்சிற் பதிப் பித்து அதற்கு உரையும எழுதியுதவிய உதவியாளர், 'களவழி,' 'இனனிலை,' 'பொய்கையாழவார் முதற்றிருவந் தாதி' முதலிய மூன்றையும பற்றிக் கூறியவைகளை யாம ஆராய்ந்து பார்க்க, அவை பொருந்தாதனவாயக் காணப பட்டமையின, அவர்தம கூற்றுக்களையும ஆராய்ந்து உண்மை இதுவெனக் காட்டுவாம: 'முதற்றிருவந்தாதிச்' செய்யுட்களிற சில மிக அரியவெண்பா இலக்கணங்களுக்கு இடனாயிருக்கின்றனவென அவ்வின்னிலைப் பதிப்புரைகாரர் கூறினர்; ஆனால், அவ் வரியவெண்பா இலக்கணங்கள இவையென்பது அவர் எடுத்துக் காட்டிற்றிலர். மற்றுப்,

பலவேறு வகைபபட்ட அமைதிகள வாய்ந்த வெண்பாக்கள 'களவழி,' 'இன்னிலை' எனபவற்றிற் காணப்படுமாறு போலப, பொயகையாழவா ரியற்றிய திருவந்தாதியில் அவறறுள ஒரு சிலதாமுங் காணப்படாமையை மேலே விளக்கிக் காட்டினே மாதலால், அவர் கூறறுக் கொளளற பாலதனறென விடுக்க.

இனி, முதற்றிருவந்தாதிச் செயயுட்களில் 'நன்பு,' 'புலரி,' 'குரா,' 'திருவன,' 'மரிதல்,' 'ஏனும' எனனும அருஞசொற்கள காணபபடுமாறு போலக, 'களவழி'யில் அத்தகைய அருஞசொறகள காணபபடுகினறில எனவும, முதற றிருவந்தாதிச் செயயுட்கள இனியவாயும 'களவழிச்' செயயுட்கள இனனதனவாயும இருக்கினறனவெனவும அப பதிபபுரைகாரர் கூறிய கூறறு எமக்குப பெரிதும் வியபபினைத் தோற்றுவியா நின்றது. அவர் அருஞசொறகளென மேலே கூறிய ஆறறும பொய்கையாழவாரது முதற் றிருவந்தாதியில் உளவோ என யாம ஆராய்ந்து பார்க்க, 'ஏனும' என்னும ஒரு சொல்லைத் தவிர, ஏனை ஐந்தும அவர்தம செயயுட்களிற காணபபடுகின்றில. 'ஏனும்' என்னும அவவொருசொற் ருனும 'ஏனும' எனபதன திரிபாக எல்லா ஆழவாரகளானும புதுவதாக எடுத்தாளபபடுவது ஏனை ஐந்து சொற்களில் 'நன்பு' எனபது நலம எனனும பொருளிற பூதத்தாழவார் பாடிய இரணடாந் திருவந்தாதி முதற செயயுளிலும, 'புலரி' எனபது விடியற் காலம எனனும பொருளிலும 'குரா' என்பது குராமரம எனனும பொருளிலும அதன மூபபத்தோராஞ் செயயுளிலும, 'திருவன்' என்பது செல்வன் என்னும பொருளில் அதன் எண்பத்துநானகாஞ செயயுளிலும, 'மரிய' என்பது 'தெரியுங்கால்' எனபதறகு வேறு பாடமாய வேறோர் ஏட்டுச் சுவடியிற காணபபட்டுச் 'சாவ' எனனும பொருளிற் பேயாழவார் இயறறிய 'மூன்றாந் திருவந்தாதியின' ஐமபத்தைந்தாஞ செயயுளிலுங் காணபபடுவதாயிருகக, இச் சொறகளெல்லாம பொயகையாழவாரது முதற் றிருவந்தாதியில் உளவெனா அப் பதிபபுரைகாரா பிறழச்சியுரை நிகழத்தினமை எமக்குப பெரியதோர இடுமபூதினை விகாப

பதாயிற்று. அருஞ்சொற்களை அவர் கொண்டவை தாமும் பொய்கையாழ்வார் பாட்டுக்களில் இல்லாமையால், அதுபற்றி அவ் வாழ்வாரது பழமையை நாட்டப்புக்க அப் பதிப்புரைகாரரது கோட்பாடும் நூறுங்கி இல்லையாயிற்று.

இனிக, 'களவழி'யில் அருஞ்சொற்கள் இல்லையென்றதும், அதனை செய்யுட்களை இன்மையில்லாதவை என்றதும் பிழைபாட்டுரையாம். 'களவழி'யில் அருஞ்சொற்கள் பற்பல உள, அவற்றுட் சில வருமாறு: துப்பு, கெழூஉம, தபியா, ஞாட்பு, போர்ப்பு, குகில், சிரல், உரறி, ஆஞ்சு, குரீஇ, உய்ங்கும், மைந்து, கடாஅய, நூற, பருமம, ராறு (விழவு), நளிந்த, திமில், எருவை, திரவு, இங்க. இவை போலும அருஞ்சொற்கள இன்னும பலஉள; இவையெல்லாம 'புறநானூறு,' 'அகநானூறு,' 'கலித்தொகை' முதலான சான்றோரிலக்கியங்களிற பயில்வனவாகும. இன்னோரன்னவை அருஞ்சொற்களாயிருக்க, இவைதமமை அங்ஙனங் கொள்ளாத அப் பதிப்புரைகாரரது கோள வழுக்கோளாமெனக. அற்றன்று, கற்றார்க்கும் எளிதிற பொருள விளங்காத சொற்களே அருஞ்சொற்களெனல் யாம கோடுமெனின, தேவார திருவாசகங்களினும பிறகாலத்து ஆழ்வாராகள பாடல்களினுங்கூடக் கற்றார்கு எளிதிற பொருள விளங்காத சொற்கள பற்பல உள; அசுமப, அண்ணிக்கும, அவிதா, அளஞ்சு, ஆதம, இறவு, உணடை, உந்தீபற, உவலை, தட்டுஞ்சப, ஏசறவு, ஏலோ, ஏழில், தழுத்த, கலதி, கிழியீடு, கிறி, கிறு, குதுகுதுப்ப, குலா, சசரை, சடடோ, சழகு, சிறவு, செடி (தீமை), தழி, திறவு, தெள்ளேணம, நாங்கூழ, பட்டி, பப்பு, பளகு, பவனை, புனிதம, பேழகணிதல், பொத்தை, மாழை, வமபலன, வயமம, விதுவிதுப்பு, விளாகைத்து, என்னுஞ் சொற்கள 'திருவாசகத்'திற காணப்படுகின்றன; சங்க இலக்கியங்களிற பயின்றாகும இச சொற்களுக்குப் பொருள கண்டுதெளிதல் எளிதாகாது, இங்ஙனமாமே, 'திருச்சிற்றமபலக் கோவை'யாரினும அரிதுணரா பொருளனவாஞ் சொற்கள பலப பல உள. தேவாரப்பாக்களில் உள்ள பொருள பொள

ளெனப புலபபடாச் சொற்களீயும் ாண்டெடுத்துக்காட்ட லுறின இது மிக விரியும. கறறுர்க்கும எளிதிற பொரு ளுணரலாகாச் சொறகள மிகுநதிருததல் கொண்டு, கி. பி. மூனறும நூற்ருண்டிற பாடபபட்ட 'திருவாசகத்'தையும, கி. பி. ஆறு, ஏழு, ஒனபதாம நூறறுண்டுகளிற பாடப பட்ட தேவாரபபாகளீயும கி. பி. இரண்டாம நூறறுண டிறகு முறபட்ட சஙகாலத்தில் இயறறபபட்டளவெனறு கோடல் ஒக்குமோ? கல்வியறிவு சிறிதுடையார்கு அருளு சொல்லெனாத தேதானறுபவை, அவரின மிகக கல்வியும நுண்ணறிவும உடையாாக்கு அருளுசொல் லெனத் தேதானரு; அவை எளிதிற் பொருள விளஙகுவனவாகவே யிருககும ஆகையால், தமக்கு அருளுசொலலெனத் தேதானறுவது கொண்டு ஒருவா ஒருநூலின் சொல்வழகளை நனகாராயந்து பாராது அந் நூலீப பழையதெனறுதல் புதிய தெனறுதல் முடிபு கட்டுதல் பெரிதும இழுகுடைத தாம அதுவேயுமனறி, 'இனனிலீப' பதிபபுரைகாரா அருளு சொறகளை எடுத்துக காட்டிய நனபு, புலனி முதலிய ஆறுசொறகளும அரிதுணரா பொருளவாகாமை அவற றிறகு யாம மேலே குறிதத பொருளகளானும இனிது விளஙகும. மேலும, இச சொறகள பூதத்தாழவார் பாடல் களில் உளளனவே யன்றிப பொயகையாழவார் பாடல் களில உளளனவும அலலவெனபதூஉம நினைவிறபதிகக றபாறறு.

இனிக, 'களவழிச' செயயுட்கள இனிமையில்லாதன எனற அப பதிபபுரைகாரா எவவாறருல் அவை இனிமை யில்லாதனவாயின எனபது காட்டிற்றிலர். அவை சொற சுவை இல்லாதனவா? அன்றிப பொருட்சுவையில்லா தனவா? சொற சுவையில்லாதன எனறு கொண்டா ரெனின,

"ஒழுக்குங் குருதி யுழக்கித் தளர்வார்
இழுக்குங் களிற்றுக்கோடு ஊன்றி எழுவர்
மழைக்குரல் மாமுரசின் மல்குநீர் நாடன
பிழைத்தாரை அட்ட களத்து." (களவழி, கூ)

எனபது போன்ற செய்யுட்களைச் சொற்சுவை இல்லாதன வென்று தமிழறிஞர் கூற ஒருபபடுவரோ மொழிமின! மற்று அவை பொருட்சுவை இல்லாதனவெனக் கொண்டா ரெனில, 'காவிரிநாடனுகிய கோச்செங்கண்ணன் கழுமலம் எனனும ஊரின்மேற படையெடுத்துச் சென்று, அங்கே தனனை வந்தெதிர்த்த மாறறரொடு பொருது அவரைத் தொலைத்து, அவ வூரினைக் கைப்பறறிக் கொண்ட நாளில், அவன போரபுரிந்த களத்திற குதிரைகளால் உதையுண்டு காமபுமேலாகக கிடந்த பகைவருடைய குடைகளானவை, வயலில் மேயச்சென்ற மாடுகளால் உதையுண்டு தண்டு மேலாயக் கிடந்த காளானகளை ஒத்திருந்தன' எனறு அப் போராக்களத்தைப புனைந்துரைக்கும,

> "ஓ ஓ உவமன் உறழ்வின்றி ஒத்ததே
> காவிரி நாடன் கழுமலங் கொண்டநாள்
> மாஉதைப்ப மாற்றூர் குடையெல்லாங் கீழ்மேலாய்
> ஆஉதை காளாம்பி போன்ற புனல்நாடன்
> மேவாரை அட்ட களத்து." (களவழி, ஈசு)

எனனுஞ செயயுளையும இதனோடு ஒத்தவறறையும பாக்க ளின் பொருட்சுவை தேர்ந்த புலவோர் பொருட்சுவை இல்லாதன வென்று உரைக்கத் துணிவரோ கூறு மின்கள!

அறறனறு, பொயகையாழவாதம செய்யுட்கள கடவுளமேற பாடப்பட்டிருத்தலின், அவையே இனிமை யுடையன, மறறுக் 'களவழிச்' செய்யுட்களோ போர்க் களத்தினமேற பாடப்பட்டிருத்தலின் அவை இன்ன தனவேயாமென்று கோடலே எமது கருத்தாமாலெனின்; நன்று சொன்னீர், கடவுளின்மேல் நெஞ்சுருகிபபாடும பாக்கள இனிமையிற சிறந்துநிற்றல் போலவே, கடவுள உயிர்களமேல் வைத்த பேரிரக்கத்தால் அவைகட்குப் புல்முதல் மக்கள ாருன உடம்புகளையும், அவ் வுடம்புகள் இருந்து உலவுதற்கு இவ்வுலகத்திற் பலவேறு இடங்களை யும, அவை ஐம்புலன்களாலும நுகருதற்குப பலவகைப

பண்டங்களையும் மக்களெவரானும் படைக்க இயலாத அத்துணைத் திறமையோடும் அழகோடும் படைத்துக் கொடுத்திருத்தலின், அவனது அப படைப்பின திறங்களையும், அப படைப்பினகண் மக்களுடைய செயல்களால் நிகழும நிகழச்சி வேறுபாடுகளையும எடுத்துபபாடுதல் கடவுளைப பாடுதலோடொபப இனபம பயபபனவேயாம். அங்ஙனம அல்லாக்கால் 'அகபபொருள,' 'புறபபொருள' பற்றி யெழுந்த சங்கபபாட்டுகளும, 'சிலபப திகாரம,' 'மணிமேகலை' போனற பெருமபொருட்டொடர்நிலைச் செயயுட்களும சானறோரால் அத்துணை விழுமியவாயப பாராட்டபபடா வனறே. ஆதலால், இறைவனைப பாடும பாட்டுக்களெ யனறி, இறைவனது படைபபினையும அப படைபபில் நிகழும நிகழச்சிகளையும புனைந்துரைக்கும பாக்களும நல்லிசைப் புலவர்களால் ஆக்கபபடின அவறறொடொபப இனிமை மிக்கனவாயே திகழுமென உணர்ந்துகொளக. அற்றாயினும, 'கள்வழிச்' செயயுட்கள போர்க்களத்தில் நிகழந்த கொடிய நிகழச்சிகளைக கூறுதலின், அவை இனனதனவேயாமெனிற, குருதியொழுக, குடரும நிணமும மூளையுஞ சிதற, நெஞசம போழபபட்டுங கழுத்து அறுபட்டுங கைகால் முறிபட்டுங கிடபப, இறைவனரு ளால் அரிதிறகிடைத்த மகளை யாக்கையை மகளை தாமே ஒருவரோடொருவர் பொருது அழிக்குங கொடுமை, போர்களை நிகழச்சிகளை எடுத்துப பாடும பாட்டுகளா னாலும, மறறையோர்க்கு வேறொருவாறாயினும புலபபட மாட்டாது. மறறு, அப போர்க்களப பாட்டுகளைக கேட்ட வளவானே அவர் அப போர்த்தொழிலின கொடுமை தேர்ந்து, உளளம இளகி அத்துணைத் தீய தொழில் என்றும நிகழாதிருத்தலே வேண்டுவர். நல்லிசைப புலவ ராகிய பொயகையார் 'களவழி' பாடிய நோக்கமுங, கோச் செங்கண்ணன தான் செயத போரினால் விளைந்த கொடு மையை நன்குணர்ந்து, இனி அதனை மேற்கொளளா திருத்தற்பொருட்டும, அவனது போரினால் முன்னரே தன் படைகளையிழந்து உள்ளம நிலைகலங்கிநிற்குஞ 'சேரமான் கணைக்காலிரும்பொறை' யெனனும புகழோங்கிய சிறந்த

மனஸீன மீண்டுஞ சிறையிலடைத்து வருத்துதலினும மிக்க கொடுமை பிறிதில்லையெனபதனீ அப போர்க்களக கொடுமை பாடிய பாட்டினவழிப புகுந்துணர்ந்து அவனீச் சிறையினினறும அவன விடுதலீ செயதறபொருட்டுமே யாம. பொயகையார பாடிய 'களவழி' நூலாற போரின கொடுமை தெரிந்த பினனாத்தான, சோழன கோச்செங கணணன, போசெயது பிறர்மண் வௌவுதலீ யுறவே கைவிட்டுச, சிவபெருமானுககுத் திருவடித்தொணடனாகி, அப பெருமானுககு ஆங்காங்குத் திருக்கோயில்கள கட்டு வித்து, அத திருததொண்டிலேயே இன்புறறிருநதா னுதல் வேண்டும. இனனும, இறைவனால் வகுகக்பபட்ட அழகிய அமைதிமிகக இயற்கையமைபபில், மககள தமது கொடுஞசெயலால் உண்டாக்குங கொடிய போர்க்கள நிகழசசிகளீ எடுத்துப பாடுவான புகுந்த ஆசிரியர் பொய கையார், அக கொடியவறறின தீதாறறக் கொடுமை யைத் தணிவுசெயதற பொருட்டும, தாம பாடுஞ் செயயுட் களீப் பயில்வாரது நினைவு அக கொடுநிகழச்சிகளின் வழியே சார்பபுண்டுபோகாமல் அவறறினினறும பிரிந்து இறைவன அமைத்த அழகிய இயறகைத் தோறறஙகளிற செனறு பதிந்து அவறறை வியந்து இனபுறறு நிறறற பொருட்டும, தாம பாடும அப போர்க்கள நிகழச்சிகள பெரும்பாலானவறறிறகு இயறகைத் தோறறஙகள பல வறறை உவமையாக எடுத்துக்காட்டிச செலலுதல் பெரிதும பாராட்டறபால தொனறும. போர்ககளத்திற குடைகள காமபு மேலாகக கிடதலுககுத தண்டு மேலாகக கிடககுங காளானகளீ உவமைகூறிய பாட்டை மேலே எடுத்துக்காட்டினும; இங்ஙனமே ஏனீச் செயயுட் களிற பெரும்பாலானவும இயற்கைத்தோறற உவமை காட்டுதல் காணக. இவ்வாறு பெருஙகாபபியஙகளுளளும அடுத்தடுத்துக காணபபடாத இயறகைததோறற உவமைகளீ, நாறபத்தொரு செயயுட்களான அமைந்த இச சிறிய 'களவழி' நூலின்கண் அதனாசிரியர் பொய கையார் அடுத்தடுத்துக் காட்டிச் செல்லுதலின் கருத்தை நுனித்துக் காணவல்ல அறிவுமதுகையுடையார், அங்

ங்லாம அவ வாசிரியர் செயதது, தமது நூலிப பயில் வார்க்கு அவர்தம கினைவு தாங்காட்டும அப போராகளக் கொடுங் காட்சிகளிலேயே கிடந்துவிடாது, அவற்றைக் கடந்துசென்று இறைவன வகுத்த இயறகைத்தோற்ற அழகிற படிதல் வேண்டியேயாமென்ா உணர்ந்துகொளவர். இத்துணை நுணணுணர்வுகொண்டு உருவதிற சிறிதாகிய இகளவழிநூல் யாகபபட்டமைபோலனறே, திருக்குறள, நாலடியார முதலான விழுமிய நூல்களோடு இதுவும ஒனறுகச சோததுப பதினெண கீழகக்கணக்கினுள வைதது ஆனறோராற பாராட்டபபடுவதாயிற்று. இங்ன மாக நுண்மையும இனிமையும முதிர்ந்து திகழுங் 'கள வழிப' பாடுகளே இனனதனவென்று கூறிய அப பதிப புரைகாரரது உரை வழுகுரையேயாமென்ா விடுக்க.

இனிப, பொயகையாழவார் பாடிய முதறறிருவந் தாதிச செயயுட்களெல்லாம பிறபபு இறபபு இல்லா முழுமுதற கடவுண்மேற பாடபபட்டனவும அல்ல. சிவபெருமானையுந் திருமாலையும இவர் ஒனறுபடுத்தி அருளிசசெயதிருக்கும நு, உஅ, எச, கூஅ-ஆஞ செயயுட் களும, அங்ங்னமேல திருமாலேமட்டும மனம உருகிப பாடியிருக்கும வேறுசில செயயுட்களுந் தவிர ஏனைய வெல்லாங் கண்ணன, வாமனன, நரசிங்கன, வராகன முதலியோராமேற பாடபபட்டனவாகும. பிறபபு இறபபு இல்லாத தனிமுதற கடவுளேமட்டும வழிபடுவோரான சானறோர்க்கும, பிறபபு இறபபிற் கிடந்துழல்வாரான மக்களையும அவரிற மூழ்ந்த விலங்குகளையும பாடும இப பாட்டுகளள அருவருபபினையும வருத்தத்தினையும விளை வியாதிரா. மக்களே மக்களாகவும தெய்வத்தைத தெயவ மாகவும வைத்து மயக்கவுணர்வுக்கு இடனினறிப பாடுதல் குறறம அனறு; மறறு, மக்களைத் தெயவமாகவும, தெய் வத்தை மகளாகவும பிறழத்திவைத்து மயங்கபபாடு தலே பெரிதுங் குறறமாவதாம. 'திருமால்' எனபது பிறபபு இறபபு இல்லா எல்லாமவல்ல இறைவியாகிய உமைபபிராட்டியே யல்லாற பிறிதன்றெனபதனை முன

னரே விளக்கிக்காட்டின மாதலால், திருமாலேமட்டும வணங்குதல் குற்றம அன்று. மற்றுக், கண்ணன், வாமனன, முதலான மக்களோத் தெய்வமாக வைத்தும, முழுமுதற பொருளாகிய திருமாலேப் பிறபபு இறபபுக்களுட் படுத்தும பாடியதே குறறமாம. ஆகவே, பொயகை யாழவார திருமாலேயுஞ சிவபிராஞையும விடுத்து, ஏனை மகளுளளுஞ் சிறறுயிராகளுளளும படுவாரான கண்ணன், வாமனன், நரசிஙகன, வராகன, இராமன முதலியோரைத் திருமாலாக வைத்துப பாடியதும, உலகிறகு முழுமுதற கடவுள அமமையபபரும அல்லது மாலுஞ சிவமுமாம ஒருவரேயாக அவரைவிடுத்து, "முதலாவார் மூவரே" எனப புராணகதையை நமபிக் கடவுளே மூவரெனக கூறிய தும மெயயறிவிலாருககு இனனுதனவாகவே காணபபடும. சைவசமயாசிரியருள எவரும இங்ஙனம் வைணவ ஆழவார் களேப்போல் யாண்டும மயஙகிப பாடிற்றிலர; அவர்க ளெல்லாரும பிறபபிறபபில்லாத் தனித்தலைமைக் கடவு ளாகிய அமமையபபர் ஒருவரையே, மூவர்க்கும முபபத்து மூவர்க்கும மறறெழிந்த தேவர்க்கும மேறபட்டவராக வைத்துப பாடியிருக்கினறனரெனபதை மேலே பலகாலும வறபுறுத்திப போந்தாம. பொயகையாழவாரும் பேயாழ வாரும இடையிடையே புராண கதைகளான மயக்குறறுத், திருமால அல்லாதவறறையுந் திருமாலாகக்கொண்டு பாடிப பிழைபடடனராயினும, இடையிடையே அமமயக்கந் தீர்ந்து மெய்யுணர்வு தெளிந்து சிவபிரானுந் திருமாலு மாயக கூடிய முழுமுதற கடவுளின ஒருருவினேயுந் திரு மாலேயுங குழைந்துருகிப் பாடியிருக்கினறனராகலின அவ விருவரும எமமனேோரால் பெரிது பாராட்டப்படுந் தகைய ரேயா மெனக.

இனி, 'இன்னிலே' பாடிய பொய்கையாரும், 'முதற்றிரு வந்தாதி' பாடிய பொய்கையாழவாரும ஒருவரேயென நாட்டுதற்கு அப பதிபபுரைகாரர் வேறுசில குறிப்புகள காட்டினர; அவைதமமையும் ஆராய்வாம: 'இனனிலே'ச் செயயுட்கள சிலவற்றிற் குற்றியலுகரத்தின்பின் வந்த

உயிர்கள் உடம்படு மெய் பெற்றிருத்தல்போல, முதற்றிரு வந்தாதிச் செய்யுட்கள சிலவறறிலுங் குறறியலுகரத்தின் பின்வந்த உயிர்கள உடமபடுமெய் பெற்றிருக்கின்றன வெனறு அவை இரண்டறகும ஒற்றுமை காட்டினர். இது பெரிதும பிழைபாடனறு ஒறறுமையே யாகும; ஏனெனிற், குற்றியலுகரத்தின்முன வரும உயிர், அக் குறறியலுகரங்கெட நின்றமெயயினமேல ஏறிவருதலே செயயுள வழக்கிலும உலகவழக்கிலும இயறகையாகக் காணபபடுவதெனறும. 'எழுந்து இருந்தான,' 'மருந்து உண்டான,' "நாகு இள வரி வண்டு உண்டு" எனறற றொடகத்தன இருவகை வழக்கிலும 'எழுந்திருந்தான,' 'மருந்துண்டான,' "நாகிளவரிவண்டுண்டு" எனறுதான எல்லாராலுஞ சொல்லபபடுமேயல்லாமல், 'எழுந்து விருந் தான,' 'மருந்துவுண்டான,' "நாகுவிளவரிவணடுவுணடு" என உடமபடுமெய புணர்த்துச் சொல்லபபடா. சொற்களைச் சொல்லுங்காற குறறியலுகர ஈற்று உகரங்கெட நின்ற மெயமமேல் வந்த உயிரேறி முடிதலே எஙகும இயறகை யாகக் காணபபடுதலின, அவ வியறகையையே ஆசிரியர் தொல்காபபியனுரை உளளிட்ட இலககண ஆசிரியர் இலக்கணமாகக் கூருகிறபர். குற்றியலுகரத்தின முன் வரும உயிர் உடமபடுமெய பெறுமெனத் தொல்காப்பியனுர் யாண்டுங் கூறிறறிலர் அதனுற, குறறியலுகரத்தின முன வரும உயிர் உடமபடுமெய பெறவைத்தல் இயறகைக்கும இலககணத்திற்கும மாருய பிழையேயல்லாமற பிறி தனறு; பிழையேயாயினும வெணபாவினும பிற பாக்களி னும முறையே தளையுஞ் சிருங கெடாமைபபொருட்டு அவ வியறகைக்கு மாருக அருகி ஒரோவொருகாற குற்றிய லுகரதனமுனவந்த வுயிராககு உடமபடுமெய கொடுத்து நலலிசைப புலவா செயயுள யாத்தலும உண்டு; இது பிழையேயாயினுஞ் செயயுள யாததல் வருத்தமால செய லாதல்பறறி அதனே ஆனருர் விலககாதுகொளவர். எனினுங், குறறியலுகரதனமுன வரும உயிர் உடமபடு மெய பெறுதல் இயற்கைகும இலக்கணத்திற்கும மாருய் இனனு ஓசைத்தாயிருத்தலின், தொல்காபபியனுர் காலத்

திற்கு முன்னும அவாகருபபின் இடைச்சங்க கடைச்சங்கச் சானறோா செயயுட்களினுங, கி. பி. இரண்டாம நூற்றாண்டில் இயறறபபட்ட 'சிலபபதிகாரம,' 'மணிமேகலை' எனப வறறினுங்கூட அங்கங்காங குறறியலுகரத்தினமுன வரும உயிர் உடமபடுமெய பெறறுமுடிதலை யாண்டுங கணடிலேம. மறறு, மாணிகக்வாசகப பெருமான அருளிச் செயத திருவாசகத்திலோ, அடித்தடித் தகாரம என்ா வரறபாலது ரிர்கெடாமைபபொருட்டு "அடித்தடித்து வக்காரம" (அறபுதபபத்து, கூ) என்ா ஓரிடத்தில மடடுங குறறியலுகரத்தின முனவரத உயிர உடமபடுமெய பெறறு முடிந்தது. எனவே, பணடை இலகக்ண ஆசிரியராகிய தொல்காபபியனாா செயத இலகக்ணத்தினறுங, அவர்கருபபின வந்த ஏனைச சானறோா செயத இலகியங்கடகும முரணாகப, பாக்களிற ரிர்தனா கெடாமைபபொருட்டுச் சொறகளியுஞ சொறபுணர்ச்சிகளியும ஓரோவழிப பிழை பட அமைததல, திருவாதவூரடிகள இருந்த கி.பி. மூனறும நூற்றாண்டுமுதல் நிகழந்ததாகல் வேணடும. இவவாறு பண்டைச சானறோா இலக்கண இலகியங்கடகு முரணான பல மாறுதலகள கி. பி. மூனறும நூறறாண்டுமுதல் இத்தெனறமிழ நாட்டினக்ண நிகழலாமமை வேறோராறறானும பெறுதும. எனனை? தொலகாபபியருதுஞ, சங்க இலக்கியங்களிலும ஒரு சிறிதுங காணபபடாத 'கடடளைக கலித்துறை,' 'விருததம' எனனும பாவகைகளும, புதிய புதிய வடசொறகளும பாரத ராமாயண புராண கதைகளும, பல்சமயக கோட்பாடுகளும, பிறவும் கி பி மூனறும நூறறாண்டிலிருந்து இயறறபபடட தமிழ நூல்களின மட்டுமே காணகிடதலினென்பது. இங்ஙனமாக முனனோர் நூல்களிற காணபபடாதனவும, அவறறோடு ஒரோவழி மாறுவனவுமாகிய பல நிகழச்சிகளின இடையே, 'குற்றியலுகரத்தினமுன் வரும உயிர் உடமபடுமெய பெறும' புதுவழகும ஒரோவொருகால விரவலாயிறறு. ஆகவே, "உண்மை மாலீர்த்து விருளகடிந்து" என்ா சக-ஆஞ் செய்யுளிலும, "ஐயுணாவான் ஆயந்து வறஞசார்பா" என்ா சச-ஆஞ் செய்யுளிலுங குறறியலுகரத்தினமுன வரத உயிராகு

உடமபடுமெய் புணர்த்து ஓதிய 'இன்னிலை' எனனும நூலும் அதனுசிரியர் பொய்கையாரும, திருவாதவூரடிகள இருந்த கி. பி. மூனறும நூறறுணடிறகுச கிறிது முனனே இருந்தமை தெறறெனன விளஙகா கிற்கும 'களவழி' நூலில், முனனோர் வழகுகுகு முரணாக இப்பெறறியது எதுவுங காணபபடாமையிற, களவழியும அதனை யாக்கிய பொயகையாருங கடைச்சஙககாலதது அஃதாவது கி. பி. இரணடாம நூறறுணடிறகு முனனோர் இருந்தமையுந் தானே பெறபபடா கிறகும. இவவாறறுற 'களவழி' யியறறிய பொயகையார கி. பி. இரண்டாம நூறறுண்டிறகு முனனும, 'இனனிலை' இயற்றிய பொயகையார கி பி. இரண்டாம நூறறுண்டின ாறறிலும இருந்தமை பெறப படுதலின அவவிருவரும வேறு வேறுவரெனபது கடைப பிடிகக இனனிலை யியறறிய பொயகையார் முனனோர் வழக்கொடு மாறுபட்டது இஃதொன்றின்மட்டுமே யலலா மல், ஏனைப பா அமைபபு முதலியவறறினு அல்லாமை யின இவரைக் கி. பி. இரணடாம நூறறுண்டினு ாறு அல்லது மூனறும நூற்றுணடிலா துவகக்கத்திறகுபபின கீழ இறக்குதல் இயலாதெனபதூஉங கருதறபாற படுறறு.

'இனனிலை' இயறறிய பொயகையார் கி. பி. இரண் டாம நூறறுண்டிற்கு முறபட்டவரல்ல ரெனபது மறறுமோ ராறறுணும பெறுதும. போர்களத்தில் வந்து கினற அருசசுனனுக்கு, அவன் தேரிற பாகனுய் அமாந்த கண ணன 'பகவற்கீதை நூல்' செவியறிவுறுத்தினா னெனனும மாபாரதக்கதையை 'இன்னிலை'யின முதறசெய்யுள குறிப பிடுகின்றது. பாரதபபோரை மட்டுங் குறிப்பிட்ட பழந் தமிழப்பாட்டுக் கி. மு. மூவாயிர ஆண்டுகட்கு முன்னரே உளதெனும, மாபாரதக் கதைகளையாதல், கண்ணன் எனனும பெயராற கண்ணனது வணக்கத்தையாதல குறிபபிட்ட பழந்தமிழப்பாட்டுக் கிறித்து பிறபபதற்கு முற்பட்டகாலத்தில் ஒன்றுமேயில்லை. மாபாரதக்கதை தமிழநாட்டார்க்குத் தெரியத்துவஙகியதும, அது தமிழின

கண் மொழிபெயர்க்கப்படலானதும், அதன்வழியே கண்ண னுங் திருமாலின வடிவான ஒரு தெய்வமாக வைத்து ஈண்டுளளாராற பெரிது வணஙகப்படலானதும எல்லாங கி. பி. முதல் நூற்ருண்டுமுதல் நிகழலாயினவெனபதை முனனரே (சசக, சசஉ-ஆம பக்கஙகளில்) விளக்கிப்போந் தாம. ஆகையாற், கணணன அருசசுனற்குக் கீதைநூல் அறிவுறுத்தியதாகக கூறும மாபாரதக் கதையைத தமது 'இனனிலை' முதறசெயயுளில் எடுதது மொழிந்த அதன ஆசிரியர் பொயகையார் கி. பி. முதல் நூறருண்டிறகும பின னிருந்தாரேயாதல் வேண்டும. 'பகவறகீதை' எனனும நூல மாபாரதததில் எழுதி இடை நுழைக்கபபட்டது கி. மு. முதல் நூறருண்டிறகுமுற சென்றதெனல் ஆகாமை யானும,[1] அது தானுந் தமிழநாட்டார்க்குத தெரியலானது கி. பி. முதல நூறருண்டிறகு முனனெனறல் இயையாமை யானும, அதனைக குறிபபிட்ட 'இனனிலை' ஆசிரியர் பொயகையார் கி. பி. இரண்டாம நூறருண்டினகட் பட்டவ ரெனபதே தேறறமாம என்க.

இனி, 'முதறறிருவந்தாதி' பாடிய பொயகையாழவார், 'இனனிலை' பாடிய பொயகையாரைபபோல், தமது கூடு-ஆருசெயயுளிற குறறியலுகரத்தினமுன வந்த உயிர்க்கு உடமபடு மெய புணர்தலேதானு ரெனறதும பிழைபாடாம. எனனை ? "நமோநாரணு வெனன" எனு வேறு திருத்த மான பாடமே வைணவப புலவர்களால் ஒபபுககொண்டு பதிபபிக்கபபட் டிருத்தலின்.[2] "எனறு" எனனும் பிழை யான பாடத்திறகு வேறுக "எனன" எனனுந் திருத்த மான பாடம உளதாகலிற, பிழையான பாடம இவ வொன றைக்கொண்டு பொய்கையாழவாரையும, 'இனனிலை' பாடிய பொய்கையாரையும ஒனறு படுத்த முனைந்த இன்னிலைப பதிப்புரைகாரர் கருத்து நிரம்புமாறில்லையென

1. See 'Gita and Gospel' by Dr. J. N. Farquhar.

2. 1908 இல் சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப் பண்டிதர் திரு. உ. வே. கோபாலாசாரியாராற் பதிப்பிக்கப்பட்ட 'நாலாயிரப்பிரபந்தப்' படியைப் பார்க்க.

விடுக்க. பிழையான பாடத்தையே உறுதியாக்கொண்டு, அவ் விருவரையும் ஒன்றுபடுத்தலாமெனினுங், குற்றிய லுகரத்தினமுன வந்த உயிர்க்கு உடமபடுமெய் புணர்த்து ஓதிய திருவாதவூரடிகளும உளராகலின, இப புதிய புணர்ப்புப் பொய்கையார்க்கும பொய்கையாழவார்க்குமே உரித்தென்றலும் பொருந்தாதெனை ஓர்க.

இனி, 'இன்னிலை'யின் உள-ஆஞ செய்யுள் "மகவு" எனை முறறியலுகர ாறருன முடிதல்போலப, பொயகையாழ் வார் அருளிச் செயத 'முதறறிருவந்தாதி'யின கஉ, ருரு, கள-ஆஞ செயயுட்களும முற்றியலுகர ாறருன முடிதலின், அவ விருநூல்களையும ஆக்கிய பொயகையார் ஒருவரே யாவரென இன்னிலைப பதிபபுரைகாரர் கூறினார். இவர் கூறியபடியுளவா என்று 'முதற்றிருவந்தாதி'யை யாம் எடுத்து உற்றுநோக்க, அதன்கட் கஉ-ஆஞ் செயயுளின ாறறில் "இயல்பு" எனக் குற்றியலுகர ாறு வந்திருக்கக் கண்டாமே யன்றி, அவர் கூறியபடி முறறியலுகர ாறு வரக் கண்டிலேம உண்மை யிவ்வாருக, அதனை அப பதிப் புரைகாரர் புரட்டிக் கூறியது எனனையோ! ஆஞல், ருரு-ஆஞ் செயயுள் "கரவு" எனவும, கள-ஆஞ செய்யுள "உணர்வு" எனவும அவர் உரைத்தவாறே முற்றியலுகர ாறுகளாலே தாம முடிந்திருக்கின்றன. இஙஙனம வெண்பா யாபபுக்கள முறறியலுகர வீறருன முடிதல், 'இன்னிலை,' 'முதறறிருவந்தாதி' எனனும இவ் விருநூல்களிலனறி, வேறு வெண்பா நூல்களிற் காணபபடாதாயினன்றே, அவறறின ஆசிரியரை ஒருவராகக் கூறுதல் ஒருவாறருற் கூடினுங் கூடாகிற்கும? மற்று, வெண்பா யாபபுக்கள ஒரோவழி முற்றியலுகர ாறருன முடிதலும உண்டெனபது,

"கெடுவாக வையா துலகம் நடுவாக
நன்றிக்கட் டங்கியான் தாழ்வு." (ககள)

எனத் திருக்குறளிலும்,

"திறந்திடுமின் தீயவை பிற்காண்டும் மாதர்
இறந்துபடிற் பெரிதாம் ஏதம்—உறந்தையர்கோன்

தண்ணுரை மார்பிற் றமிழ்நர் பெருமானைக்
கண்ணுரைக் காணக் கதவு."

என முந்தொள்ளாயிரத்திலும் அவ்வாறு முடிந்த செய்யுட்களால் நனகறியக கிடத்தலின, அதனை இன்னிலை, முதற றிருவந்தாதி எனனும இரண்டுகருமே வரைசெயதலும, அநநூலம வரைசெயத பிழைபாட்டால் வெவவேறு காலத்தினராக இனனிலைப பொயகையாரையும பொயகையாழவாரையும ஒருவ ரெனறலும போலி யாராயச்சியாமென மறுக்க.

இனி, அப பதிபபுரைகாரா 'இனனிலைச்' செயயுட்கள சிலவறறிறகும, 'முதறறிருவந்தாதிச்' செய்யுட்கள சில வறறிறகுங காட்டிய பொருளொறறுமையும பொருந்தாதாயிருத்தலின, அப பிழைபாட்டினையும ஈணடெடுத்துக் காடடுதும. 'இனனிலை'யின நாறபதாஞ செயயுளாகிய,

"முப்பாலை வீழ்வார் விலங்கார் செறும்பாலை
முப்பான் மயக்கேழ் பிறப்பாகி—எப்பாலும்
மெய்ப்பொருள் தேறூர் வெளியோரார் யாண்டைக்கும்
பொய்ப்பாலை யுய்வாயாப் போந்து."

எனபது 'காமவெகுளி மயக்கநகட்கு இடனகிய பொருளகளை விருமபுவோரா தூனபுறுதலும பிறவியை ஒழியாராய், முகநூறறநகளது மயகநகத்துகநு ஏதுவாகிய எழுபிறபபுட்பட்டுப, பொயய பநுதியாம பொருளகளெலாம எவவிடத்தும பிழைத்தறகு வாயிலாகும எனக கருதி வந்து, எவவிடததும மெயபபொருளை தெளியாராகலின அவவியல்பினர் அருளவெளிமைய உணராரா' எனபபொருள படுகினறது. இனி அவாகாட்டிய முதறறிருவந்தாதி ஏழாஞ செயயுளாகிய,

"திசையுந் திசையுறு தெய்வமுந் தெய்வத்
திசையுங் கருமங்க ளெல்லாம்—அசைவில்சீர்க்
கண்ணன் நெடுமால் கடல்கடைந்த காரோத
வண்ணன் படைத்த மயக்கு."

என்பதோ "திசைகளும் திசைகளின் நிற்கும் தெய்வங்களும், அத் தெய்வங்களால் இசைவிக்கப்படுஞ் செயல்களும் எல்லாம் மாயோன தன்னது மாயையின வனமையால் ஆகிய மயக்கப பொருளகள ஆகும்' எனப பொருள் தருகின்றது முனனோயது, உலகத்துப பொருளகளிற் பற்றுவைத்தவர்க்குப பிறவி யொழியாமையும முதற பொருளோ யுணரும மெய்யுணர்வு வாயாமையும அறிவுறுத்தாநிறகப, பினனோயதோ காட்சிப புலனுவல்ல வெல்லாம மாயோன படைத்த மாயை எனறு மட்டும் உணர்த்தாநிறகினறது. இருவேறு புலவராற செயயப பட்டுப பொருளொற்றுமை சிறிதுமில்லாத இவ விருவேறு செயயுட்களின றனமை கல்வியறிவு சிறிதுடையார்க்கும இனிது விளஙகிக் கிடபபதாம, இவவிரணடும ஒருவராற் செயயபபடடுப பொருளொறறுமை யுடையவாயிலல எனற 'இனனிலைப' பதிபபுரைகாரரது உரை பெரியதொரு மயக்குரையேயாம; 'மயககு' எனனுஞசொறற காணகஙகிடக்குந் தமிழச் செயயுடகளோ யெல்லாம அவர் 'பொயகையார் செய்யுடகள' எனாக் கூறத் துணிவாரோலலம! இனி, 'இன்னிலை'யின பத்தாஞ செயயுளாகிய,

"இடிப்பதென் றெணணி னிறைவாணக் காயார்
முடிப்பர் உயிரெனினும் முன்னர்—கடிப்பவே
கனறமர்ந்து நிம்பால் கலுழுமே நீண்மோத்தை
ஒன்ற உணராதார் ஊங்கு"

எனபது 'இடியிடிதது அச்சுறுகுதுதல பறறித தலைசிறந்த மழைமுகிலை எவரும வெகுளார; நீயோ தமது உயிராககு இறுதி பயபபரெனினும கல்லோர அவாகுதக் நிகழ்செயய நினையார், கனறு தம்து முலையைக கடிகுதவிடகதும ஆ அதறகு மனம உவந்து நித்திப்பாம பாலைச் சுரககும, அதுபோலத தமககு இனனு செயதாகதும தாம இனியவே செய்தலைப பொருந்த உணராதாரினும ஆட்டுக் கிடாயகளே சிறந்தன' எனாப பொருளபடும. இதனோடு பொருள ஒறறுமையுடையதோ அவா காட்டிய முதற் றிருவந்தாதியின முபபதாஞ செய்யுளாகிய,

"தெளிதாக உள்ளத்தைச் செங்கிரீஇ ஞானத்
தெளிதாக நன்குணர்வார் சிந்தை—எளிதாகத்
தாய்நாடு கன்றேபோல் தண்டுழாயான் அடிக்கே
போய்நாடிக் கொள்ளும் புரிந்து."

என்பதோ 'தெளிவுதாகத் தமது மனத்தைச் செவ்விதின் நிறுத்தி, மெய்யுணர்வு கொண்டு முயற்சியில்லாமல் எளிதாக நன்குணரவல்லாரது நிலை, தான் தாயை நாடிச்செல்லும் கன்றைப்போல் எளிதாகத் திருமாலின திருவடிகளை விரும்பிப்போய்த் தேடிக்கொள்ளும்' என்ப பொருள்தரும். இவ் விரண்டுள முன்னையது 'தமக்குத் தீதுசெய்வார்க்குந் தாம தீது நினையாது நன்மையே செய்யும் நல்லாரது இயல்பினை' உணர்த்தாநிற்க, பின்னையதோ 'மெய்யுணர்வு வாய்ந்தாரது நிலைவு திருமாலின திருவடிகளை எளிதிற சென்று தலைக்கூடுமாறை' அறிவுறுத்துகின்றது. இவையிரண்டிற்கும ஏதொரு பொருளொற்றுமையும காணப்படாதாகவும, அதனை யுளது போல் மயங்கியுரைத்த அப பதிப்புரைகாரருரை கொள்ளற்பால தன்றென விடுக்க. கன்றும ஆவும அவ விருசெயயுட்களினும உவமையாகக கூறப்படுதலின, அவ்வுவமையையே அவற்றிறகு ஓர் ஒற்றுமையாகக்கொள்ளுதல் ஆகாதோவெனின்; அவ்வுவமை,

"பல்ஆவுள் உய்த்து விடினும் குழக்கன்று
வல்லதாம் தாய்நாடிக் கோடலை." (கக)

என நாலடியாரினும் போதரக் காண்டலின, அதனையும் பொயகையாரே இயற்றினரென்று உரைத்தல் வேண்டும; மற்று அவ்வாறுரைத்தல் பெரியதொரு தலைதடுமாற்றமாய முடியுமாகலின், அங்ஙனங கோடல் ஆகாதெனை மறுக்க.

மேலும, ஐமபுலன்களை அடக்கி உடறகுவரும் துனபம பொறுத்துத் தவமபுரிவார் வீட்டுலகத்திற் செல்வரென்பது அறிவுநூல்கள எல்லாம புகலும ஒரு பொதுவுரையாகும. இபபொதுவுரை .'இனனிலை' சூ-ஆஞ

செய்யுளிலும், 'முதற்றிருவந்தாதி'யின நூ0-ஆஞ் செயயு ளிலுஞ் சிறிது ஒத்துக்காணபபடுதல் கொணடு அவை யிரண்டனையும ஒருவரே யியறறினெனறல் பெரியதொரு மாறுகோள உரையாம. இச செயயுட்களை நனகு ஒப பிட்டுக் காண்பார்க்கு 'இனனிலைச' செயயுட்கள பொதுப் பட நிறறலும, 'முதறறிருவந்தாதிச' செயயுட்கள திருமால் மேலனவாய நிறறலும எளிதுணரக்கிடகுமாகலின, அந் நூல்களை யியறறிய ஆசிரியர் இருவரும வெவவேறு காலத்தவரெனபதே தேறறமாம எனக.

இனி, "ஒனறுண்டே" எனனும 'இனனிலைச்' செயயுள 'உயிர்கள உணடு; அவை உடமபைப பறறுக்கோடாகக் கொண்டு வினைகளைசசெயயும; மெயயுணர்வு பிறந்தவழி இருவினைகளை அறுத்து உடறபறறுவிட்டு வீடுபெறைய தும' எனக் கூறி முடிகினறது இச செயயுட்பொருளை 'இனனிலைப' பதிபபுரைகாரர் "விதணுமதசிதாந்தம" எனகின்றார. உலகத்தின்கண உளள அறிவுடையார செல் லாருந் தொனறுதொட்டுப பொதுபபட வழஙகிவராகின்ற இக் கோட்பாட்டை அப பதிபபுரைகாரா வைணவமதத் திற்கே உரிததாக்கிய தெனனை? ஆயிரத்து மூந்நூறு ஆண்டுகட்கு முறபட்டதாகிய ஸ்ரீ ருமந்ரர் எனனுஞ சைவ சித்தாந்த நூல்,

> "பதிபசு பாசம் எனப்பகர் மூன்றிற்
> பதியினைப் போற்பசு பாசம் அநாதி." (கஙிக)

எனவும,

> "பசுப்பல கோடி பிரமன் முதலாப்
> பசுக்களைக் கட்டிய பாசம்மூன் றுண்டு
> பசுத்தன்மை நீக்கிஅப் பாசம் அறுத்தாற்
> பசுக்கள் தலைவனைப் பற்றி விடாவே." (உகுசுஎ)

எனவும் அக் கோட்பாட்டை நன்கெடுத்து மொழிதலின, அது பழைய தமிழர் கோட்பாடாகிய 'சைவசித்தாந்தமே' யாதல் பெறறும. திருமந்திரத்தைபபோல, அத்துணைப் பழமையாகிய வைணவ சித்தாந்தநூல் ஏதேனும உளதா?

ஒன்றும இல்லையே; அங்ஙனமிருக்க, அக் கோட்பாடு வைணவமதத்திற்கே உரியதெனத் தமக்குத் தோன்றிய வாறு பேசுதல் அப பதிப்புரைகாரர்க்கு ஏதமாமென அறிக. இவ்வாறருல் 'இனனிலை' இயற்றிய பொயகை யாரை வைணவரென்றலும ஆகாதென்ன உணர்ந்து கொளக.

அற்றேல், 'இனனிலை' பாடிய பொயகையார அதன் ஒனறு, மூனறு, இருபத்திரண்டாஞ செயயுட்களில் மாயோனே உயர்த்துச் சொல்லிய தெனனையெனின்; முதற்றிருவந்தாதி பாடிய பொயகையாழ்வாரைப்போல், 'இனனிலை' பாடிய பொயகையாரும் திருமால் திருவடிக்கண் மெயயனபுடையவரேயாவர்; அது கொண்டு அவ விருவரை யும ஒருவரெனக் கூறுதல் ஆகாது. அவ்விருவரும வேறு வேருவர் எனபதனை நாட்டுதற்குரிய சிறந்த ஏதுக்கள பலவும மேலெடுத்துக்காட்டின மாதலால், அவர்தம பெய ரொற்றுமையும அவர் தமக்குளள திருமால் திருவடி நேயமும ஆகிய சில பொது ஏதுக்களகொண்டு அவ விரு வரையும ஒருவராகத் துணிதல் பழுதுடைத்தாம. மேலும, 'இனனிலை'ச் செயயுட்களிலுளள சொல்லமைபபுச் சொற றொடரமைபபுகள பொருட்டெளிவின்றிக கருகலாய நிற்ற லும, 'முதற்றிருவந்தாதி'யின அவ வமைபபுகள பொருட் டெளிவுடையவாய விளஙகி நிற்றலும, அவ விரண்டு நூல களிலுமிருந்து மேலெடுத்துககாட்டிய சிறசில செயயுட்களை ஒபபிடடுக காண்பாரகளும ஙனந் புலனுமாகலின, அங்ஙனம் தனையால் மாறுபட அவ்விருவேறு நூல்களையும இயற்றினோ இருவேறு பொயகையாரே யாவரெனக. மாணிக்கவாசகர, திருஞானசமபந்தர முதலான பெயர களைப பூணடோர் பற்பலர் இஞ்ஞான்றுங காணபபடுதல் போலவே, ஒரே பெயர் பூண்டோர பற்பலர் பற்பலகாலங் களில முன்னாளிலும இருந்தனரெனபதூஉம் பெரிதும நினைவிற பதிகங்களாலதானறும. நககீரர், கபிலர், ஔவையார் என்னும பெயர்களைப பூண்ட பற்பலர் பற்பல காலங்களில் இருந்தனர். இவ்வுண்மையை நினைந்து

பாராமல் வரலாறறு நூல்கள எழுதுவோர் முனனெடுபின் முரணை பலசெய்திகளைத் தமமுடைய நூல்களுள எழுதிச் சேர்த்தலால் அவர் விளைத்தனவும விளைக்கினறனவும ஆகிய குழபபஙகள நிரமபப பல. இதுகாறறும விளக்கிய மூவேறு பொயகையாரே யனறி, யாப்பருங்கலவிருத்தி யுரையிலும ராட்டியன் மரியிலும எடுதது காகாட்டபபடும மறறொரு பொயகையாரும உளர, இஙஙனமே, 'பேயார,' 'பூதத்தார' எனப பெயாபூண்ட முன்னோ பிறருமுளரெனபது அவ் வுரையுட் பெறபபடுதல காணக.

இனி, "விருந்தே தானும" எனனுந் தொல்காபபியச் செயயுளியற சூததிர உரையில் உரைகாரர் பேராசிரியர் "விருநது தானும புதிதாகத தொகுகபபடுந் தொடா நிலைமேறறு. அது 'முத்தொளளாயிர'மும பொயகையார் முதலாயினோ செயத 'அந்தாதிச' செயயுளும என வுணர்க" என றெழுதியதை கொணடு அவவுரைகாரர் பொயகையாழவாரைக கடைச்சஙக காலததவராகக் கொண்டனரெனு ஒருசாரார கூறுகிறபர. ஆசிரியா தொல் காபபியனார் தஙகாலதது வழஙகாமற பிறகாலததிற புதிது புகும நூல்வகைகள செயயுளவகைகள உளவாயின அவை தமமையும விலககாது தழுவிகொளக எனறறகு இச சூததிரம அருளிசசெயதார; ஒரு செயயுளின ாறு அதனை யடுத்த செயயுட்கு முதலாக வரத தொடுதது பாடும 'அந்தாதிச செயயுள' தொல்காபபியனோ காலந்தொடடுக் கடைச்சஙகத நிறுதியாக வநத சானறோர் எவராலும பாடபபடாமையின, அவவந்தாதிச செயயுள கடைச்சஙக காலததுகுபபின வநத சானறோராற புதிது செயயப பட்டவாமெனபது புலபபட உரைகாரர் பேராசிரியர் "புதுவது கிளந்த யாபபின மேற்றெனற தெனனையெனின, புதிதாகத தாம வேணடியவாறறுற பல செயயுளுந் தொடாந்துவரச செயவது; அது முத்தொளளாயிரமும பொயகையார் முதலாயினோ செயத 'அந்தாதிச்' செயயு ளும" எனா உரை கூறினார; இவ் வுரைபபொருளாற் 'பொயகையாழவார் இயற்றிய முதறறிருவந்தாதி' கடைச்

சங்கத்தார் காலத்திற்குப்பின் புதிதாகச் செய்யப்பட்ட தொன றென்பதே வெள்ளிடை மலேபோல் விளங்கிக் கிடப்பவும், அவரது கருத்துக்கு முற்றும் மாறுகப், பொயகையாழவாரை அவர் கடைச்சங்ககாலத்தவராகக் கொணடாரெனத் தலேதடுமாறி யுரைத்தாருரை நகையாடி விடுக்கற்பால தாமனறி மறறென்னே? பேராசிரியர்க்குப்பின் தொல்காபபியத்திறகு உரைகண்ட நச்சினர்க்கினியரும் "பின்னுளளார் பாட்டியலாமரபிற கூறிய கலம்பகச் செய்யுள"[1] எனவும, "இக் காலத்தார் கூறும அந்தாதிச் சொறருெடர்"[2] எனவும விளங்கக் கூறுதலின, அவரும் பொயகையாழ்வார் பாடிய முதறறிருவந்தாதியைப பிற் காலத்ததெனவே கொணடாரெனபது புலனும. தொல் காபபியத்திற்கு முதலில் உரைகண்டவரான இளம்பூரணர், பொயகையார் திருவந்தாதியைப பேராசிரியர் குறித்தாற் போற றும சிறிதுங் குறித்திலாமையின, அவர் பொய்கை யாழவார்க்கு முற்பட்டவராவ ரென்பதூஉம அறியற் பாறறு. பொய்கையாழவார் கடைச்சங்க காலத்தவராயின, அச் சங்ககாலத்திற்குப பின்னெழுந்த 'சிலபபதிகாரம,' 'மணிமேகலே' எனபவறறையும, அவற்றிற்கும பிற்பட்ட 'புறப்பொருள வெண்பாமாலே'யையுந் தமமுரையுள எடுத் தாண்ட இளம்பூரணர் பொய்கையாழவாரது முதறறிரு வந்தாதியையும எடுத்தாளாது இராா ஆகவே, பொய்கை யாழ்வாரது அந்தாதிச் செயயுளே "விருந்தே தானும" என் னுஞ் சூத்திரவுரையிற் குறிபபிட்ட பேராசிரியர், அவர்க் குப்பின் கி. பி. ஒன்பது அல்லது பத்தாம நூறறாண்டில் இருந்தாராதலும, அதனே அச் சூத்திரவுரையிற குறிப் பிடாத இளம்பூரணர் கி. பி. ஆறு அல்லது ஏழாம நூற் றாண்டிலிருந்தாராதலும ணர்டே யறியற்பாலனவாம. அறறுயின, யாப்பருங்கலக்காரிகை உரைபபகுதிகள சில, "அடிநிமிர் கிளவி நாரா றகும" என்னுந் தொல்காப்பியச் செயயுளியற் சூத்திர இளம்பூரணவுரையெனப் பதிபபிடப்

1. தொல்காப்பியம், செய்யுளியல், உகூ, நச்சினர்க்கினியம்.
2. தொல்காப்பியம், செய்யுளியல், உசo, நசினர்க்கினியம்.

பட்டதனுட் காணப்படுதல் என்னையெனின்; இளம்பூரணர் தொல்காப்பிய எழுத்துச் சொற்பொருள என்னும மூனறு ஓததுக்களுக்குந் தாம எழுதிய உரையுள வேறு யாண்டுஞ 'சூளாமணி,' 'சிந்தாமணிச' செயயுட்களீ மேறகோளாக எடுததுக் காட்டுதலீக் காணேமாகலிற, செயயுளியலில் இரணடோரிடத்து மட்டும அவர் அவறறின செயயுட்களீ எடுத்துக்காட்டிஞ ரென்றல் பெரிதும ஐயுறறபாலதொன்றும. மேலுந், தொல்காபபியனுரார, கூறபபடாமற, பினவந்த 'யாபபருங்கலககாரிகை'க்காரரால் வகுத்துரைக்கப் பட்ட 'விருததபபா' வகைகள இவ வுரையுள ஆண்டிருந்த வாறே வருவித்து உரைகபபடுதலானும, இளமபூரணருக்குப பினவந்த பேராசிரியா அவ விருத்தபபாவகைகளீத தமதுரையுள அவவாறு வருவிததுரைபபக காணுமையானும, அவ வுரைப்பகுதிகள இளமபூரணா வரைந்தன ஆகாவெனவும, அவை யாபபருங்கலககாரிகை யுரையிலிருந்து பிறரால் எடுத்துச சேர்க்கபபட்டனவா மெனவும், இவ் வேறறுமையுணராது அவற்றை இளமபூரணருரையெனப பதிபபிததிட்டது அதனீப பதிபபிட்டவரது தவறுமெனவும பகுந்தறிந்து கொளக. கொளளவே, தொல்காபபிய முதலுரைகாரரான இளமபூரணர் 'சூளாமணி,' 'சிந்தாமணி' நூல்களின காலததுகுப பிறபட்டவரல்ல ரெனபதூஉம, அவர் அவறறிறகு முறபட்ட கி. பி. ஆறு அல்லது ஏழாம நூறறாண்டில் இருந்தோராவரென்பதூஉங கடைபபிடித்துணரறபாலவாம. எனவே, இளமபூரணர் காலத்தில் இலலாததூஉம, பேராசிரியர் காலத்துளளதாய் அவராற பிற்காலதததென்று கொளளப்பட்டதூஉமான பொயகையாழவாரது முதற்றிருவந்தாதி கி பி. எட்டாம நூறறாண்டிற்கு முறபட்டதாதல் செல்லாமையுந் தானே விளங்கும எனபது.

அறறேற, 'கைலீபாதி காளத்திபாதி அந்தாதி' எனபதொரு நூல் நக்கீரனாரால் அருளிச்செயயபபட்டதென வழங்கக் காண்டுமாகலின், அந்தாதிச்செய்யுள் பிறகாலத்ததென்றல் யாங்ஙனமெனின்; 'நக்கீரனார்'

என்னும் பெயர்கொண்ட புலவோர் பலர் பற்பலகாலத் திருந்தனரென முன்னரே கூறினமாகலிற், 'கைலைபாதி காளத்திபாதி அந்தாதி' பாடிய நக்கீரர் கடைச்சங்க காலத்தவர் அல்லரென ஓர்க. பதினெண்கீழ்க்கணக்கில் 'திருமுருகாற்றுப்படை' நீங்கலாகக் 'கைலைபாதி காளத்தி பாதி அந்தாதி' முதலிய நூல்களை இயற்றிய நக்கீரரும், அங்ஙனமே மூத்த நாயனார், கண்ணப்பதேவர், சிவப்பிரான் முதலாயினர்மேல் நூல்களியற்றிய கபிலர், பரணர், கல்லாடர், காரைக்காற் பேயம்மையாரும்மல்லாங் கி. பி. நானூறாம் நூற்றாண்டிற்கும் ஆறாம் நூற்றாண்டிற்கும் இடையிலிருந்தோர் ஆவர். "கொங்குதேர் வாழ்க்கை" எனனுஞ் செய்யுளுக்குக் குற்றங்கூறிய நக்கீரர், கடைச் சங்ககாலத்திற்குப் பின் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் மதுரையில் இருந்ததாகிய மற்றையொரு தமிழ்ச்சங்கத்திற் சமணபுலவர் பலரோடிருந்து தமிழாராய்ந்தவர் ஆவர். இவ் வரலாற்றினைப் பின்னர் விளக்கிக்காட்டுதும். இவ் வாற்றால் அந்தாதிச் செய்யுள் கி. பி. இரண்டாம் நூற்றாண்டிற்கு முற்பட்டது அன்றெனத் தேர்ந்து தெளியக் கிடந்தவாறுணர்க.

அற்றாயின், பொய்கையாழ்வார்க்கு முன்னிருந்த நக்கீரரது 'கைலைபாதி காளத்திபாதி யந்தாதி,' பேயாழ்வாரது 'அற்புதத் திருவந்தாதி' முதலியவற்றை எடுத்துக்காட்டாது, அவர்க்கெல்லாம் பின்னர் இருந்த பொய்கையாழ்வாரது முதற்றிருவந்தாதியை மட்டும் பேராசிரியர் தம் உரையுள் எடுத்துக்காட்டியதென்னையெனின்; பேராசிரியர் வைணவ மதம் பெரிதுங் கிளர்ச்சி பெற்றுநின்ற கி. பி. ஒன்பது அல்லது பத்தாம் நூற்றாண்டில் இருந்தவராகலின், அக் காலத்தில் எங்கும் மிக்கு வழங்கிய பொய்கையாழ்வாரது முதற்றிருவந்தாதியைப் பிற்காலத்தவர் புதிது ஆக்கிய அந்தாதிச் செய்யுள் முதலியவற்றிற்கு எடுத்துக்காட்டாகக் குறித்திட்டார் என்க. எனவே இதுகாறும் ஆராய்ந்துகாட்டியதுகொண்டு, 'இன்னிலை' இயற்றிய பொய்கையார் கி. பி. இரண்டாம்

நூற்றாண்டிலும், 'முதற்றிருவந்தாதி' பாடிய பொய்கையாழ்வார் கி. பி. எட்டாம் நூற்றாண்டிலும் இருந்தார் என்பது முடிவாகப் பட்டமை காண்க.

இனிக், 'களவழி' பாடிய பொய்கையாரோ, 'இனியவை' பாடிய பொய்கையாராகவும் முனைவர் கி. பி. முதல் நூற்றாண்டிலிருந்தாராவர். அஃது யாங்ஙனமெனின், அதனையும் சிறிது விளக்கிக் காட்டுதும்: இப் பொய்கையார் 'சேரமான் கோக்கோதை மார்பன்' காலத்தவரென்பது அவர் பாடிய "கோதை தாராப்பிற கோதையானும்" என்னும் புறப்பாட்டால் (சஅ) நன்கு விளங்கும். பழையன் மாறன் என்போன் "மாடமலி மறுகின் கூடல்" நகரின் கிளைவிளைவினைப் போன்ற நெஞ்சுதனை கண்டு, இக் கோக்கோதைமாறனை பெரிதும் உவந்த வரலாற்றினை நெடுநல்வாடை அகநானூற்றில் (நூசஅ) எடுத்துப் பாடியிருக்கின்றார். இன்னும், இவர் 'பாண்டியன் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறன்' "ஏற்றுவலன் உயர்மிய" என்னும் புறப்பாட்டில் (நூசு) முன்னிலைப் படுத்துப் பாடியிருத்தல்கொண்டு அவ் வரசனும் இவரும் ஒரு காலத்தின ரென்பதும் துணியப்படும். இவ்வரசனையே கிடங்கில் என்னும் நல்லிசைப்புலவரும் "ஆலங்கானத்து" என்னும் புறப்பாட்டில் (சஉ) முன்னிலைப்படுத்துப் பாடியிருத்தலால் அவரும் இப் பாண்டியன் காலத்தவரென்பது புலப்படும். இவ் விடைக்காடனாரும் கபிலரும் தோழர் என்பது "பின்னர் மில் கபிலன் தோழன் பெயரிடைக் காடென்போன்" (நம்பியாரூரர் திருவிளையாடல், உ0, க) என்பதனால் அறியப்படும். இவ்வாறாயின் நக்கீரனாரும் இடைக்காடனாரும் ஒரு காலத்தவரென்பது பெறப்படுதலானும், 'அகநானூற்'றில் (எஅ) நக்கீரனார் 'கபிலரைப்' புகழ்ந்து பாடியிருத்தலோடு அதன் கச்சை-ஆங் செய்யுளிற் 'சோழன் கரிகாற்பெருவளத்தான்'றன் இளமைக் காலத்துச் செயதியைக் கூறுதலானும் கபிலர், இடைக்காடனார், நக்கீரனார், 'களவழி' பாடிய பொய்கையார் என்னும் இந் நல்லிசைப் புலவர்களெல்லாருஞ் சிறிதேறக்குறைய ஒரு காலத்தினரென்பது

பெறப்படும. அறருயினுங், கபிலர் 'சோழன கரிகாற பெருவளத்தான' காலததில் இருந்திலரெனபதனை மேலே சகூ-ஆம பக்கத்தில் விளக்கிக்காட்டினமாதலானும, நககீரனுர் அச சோழவேந்தனது இளமைகாலத்தில் இருந்தமை புலனுதலானும கபிலர் ஆண்டின் மிக முதியராயிருந்தபொழுது, நககீரனுரும பொய்கையாரும நடுத்தர ஆண்டினராயிருந்து, நககீரனுர் சோழன கரிகாற்பெருவளத்தான காலமவரையிலும, பொயகையார் அவனுக்குப பினவந்த சோழன செங்கணான் காலம் வரையிலும இருந்தாராகறபாலர. எனவே, 'களவழி' பாடிய பொயகையார் கி பி. முதல் நூறருண்டின முற்பாதியிலிருந்தவராக சகூஉ-ஆம பககத்திற காட்டப்பட்ட கபிலரது முதுமைக காலந்தொட்டு, அவர்களுபபின் அந் நூறருண்டின இறுதி வரையிலிருந்தமை கண்டுகொளக.

இனி, ஆழ்வார்கள எல்லாரும தேவார திருவாசகங்களை நனகு பயினறவர்களெனபதற்குச் சானருக, அபபர் ஞானசமபந்தர் அருளிச்செயத தேவாரபபாக்களிலுளள "பொனதிகழ மேனியன," "புரிசடைப புண்ணியன" முதலான சில சொறருெடர்களைப பொயகையாழவார் எடுத்தாண்டமையினையும, தொணடரடிப பொடியாழவார் 'திருவாசகத'தினகண உளள திருபபளளியெழுசசியையும், திருநாவுக்கரசு நாயனரின் திருநேரிசையையும பயின்று அவறருெடொபபப பாடிய வாற்றினையும, சூடிக்கொடுத்த நாசசியார் திருவாசகத்தின் 'குயிறபத்தைப' பயினறு அதனுெடொபபத் தாம் ஒன்று பாடிய வகையினையும முறையே சகூ, சநிந-சநிஅ, நிசஅ-ஆம பக்கங்களில் விளககிக் காட்டினும. இன்னும் திருஞானசமபந்தப பெருமானும சுந்தரமூர்த்தி நாயனருந் தாம் அருளிச்செயத திருபபதிகங்களின இறுதிச் செய்யுட்களோறும தம பெயரும் தம ஊர்ப பெயரும கூறித், தாம சிவபிரான்மேற பாடிய அப் பதிகங்களை அன்புடன் ஓதுவார் இமமை மறுமைப் பயன்களைப பெற்றுச் சிவபிரான திருவடியை அடைகுவர் எனப் பயன் உரைத்து வாழத்து

மாறு போலவே, பெரியாழவாரும, அவர்தம் மகள நாச்சி யாரும, குலசேகரப பெருமாளும, மதுரகவியாழவாரும, திருமங்கையாழவாரும, நமமாழவாரும் தாமபாடிய பதிகங களின் இறுதிபபாட்டுக்களோறும் தம் பெயரும் தம ஊர்ப பெயர் முதலியனவும உரைத்துத் தமமுடைய பதிகங களைப பயில்வாரும அங்ஙனமே இமமை மறுமைப பயன களை யெய்தித் திருமால் திருவடியைச சேர்குவர் என வாழ்த்துதல் காண்க. அறறனறு, இவ் வாழவார்கள் பாடிய அம முறையைப பார்தறே சைவசமயாசிரியர் அங்ஙனம வாழத்துரை கூறினர் எனனுமோ வெனின்; என்னும், எனனே? ஆழவார்களுள முதலாழவார் மூவரும மாணிக்கவாசகர், அபபர், திருஞானசமபந்தர்க்குப் பின் னும, ஏனையாழவார்கள் சுந்தராக்குப் பின்னும் இருந்தே தாராதலே மேலே பலவாற்றானும் ஆராயந்து விளககி நிறு வினமாகலின் எனபது. இனிச, சைவசமயாசிரியரும் வைணவ ஆழவாரும் ஒருவர் மற்றொருவர் பாட்டுகளைப் பாராமலே அங்ஙனம பாடினரெனல் ஆகாதேதாவெனின; அதுவும ஆகாது; ஒன்றற்கொனறு பெரிது விலகிக் கிடக்கும நாடுகளில் ஒருவரையொருவர் அறியக்கூடாவாறு அவர் தனித்தனியே இருந்தனராயின, அவர் ஒருவரை யொருவர் பின்பறறாது பாடினரெனலாம். வைணவ ஆழ வார்கள ஐரோபபா தேயத்திலும சைவ ஆசிரியர் தமிழ் நாட்டிலும இருந்து ஒருவரையொருவர் அறியக்கூடாத நிலைமையினராய வைகி அப பதிகங்களை அருளிச்செய் தனரெனறு கொளவார் எவரும இன்மையினானும, அவ ரெல்லாரும ஒனறறகொன்று மிக அணித்தாயுள்ள இத் தென்றமிழநாட்டின ஊர்களுளளேயே வைகியிருந்து இந் நாட்டவர் வழஙகிய செந்தமிழ மொழியிலேயே தத்தம பதிகங்களை அருளிச் செய்தாரென்பது எவரும நன் குணர்ந்தறே யாகலானும், அவருட் பிறகாலத் திருந்தவர் முற்காலத்திருந்தார் செய்யுண் முறைகளைப் பாராமலும் பினபற்றாமலும பாடினரெனல் உலகியலறிவுவாய்ப்பப்பெரு தார் கூறும பொருத்தமில் உரையேயாம. மேலுஞ், சிவ பிரான் வழிபாடும், திருமால் வழிபாடும் இத் தென்றமிழ

நாடெங்கும பண்டுதொட்டு நடைபெற்றுத் தமிழமக்கட்குப பொதுவாய்ப பெரிது பரவியிருத்தலின, அவ விருவகை வழிபாடுகளையும வலியுறுதது அக கடவுளர்மேற பாடிய சான்றோர பாட்டுகள இந் நாடெங்குமுளளாராற பாராட்டப பட்டு எவர்க்குந் தெரிந்தவாயப பரவி வழங்குவனவே யல்லாமல, எவர்களுந் தெரியாமல அரிதுணா மறைபொருளாய ஒரு மூலையில் இருபபன அல்ல. ஆகவே, சைவசமய ஆசிரியாகள காலத்தால் முறபட்டவராகலின அவர்கள அருளிசசெயத தேவார திருவாசகப பாடல்கள இத் தமிழ நாடெங்கும பரமபி வழங்கினவாய எவாகளுந் தெரிந்தனவாயே யிருபபவாகலான, பின வந்த ஆழவாகள அவறறை நனகு பயினறு, அவறறைப போல தாமுந் திருமால்மேற பாடவிழைந்து அவவாறே செயதது இயறகையேயாம. ஆதலால, அவ விருபாலாரும ஒரு வரையொருவர் அறியாமல் தனிதனியே பாடினரெனறலும ஒருசிறிதும ஒவவாதென விடுக.

இனித், திருமங்கையாழவா தேவார திருவாசகங்களை நனகு பயினறவரெனபதறகுச சில குறிபபுகள காண்டுக் காட்டுகினறும. திருவாசகத்தில்,

"நிலம்நீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலனுய மைந்தனெடு எண்வகையாய்ப் புணர்ந்து நின்றான்."
(திருத்தோணேக்கம், கூ)

எனவும, அபபர் தேவாரத்தில்,

"இருநிலனாய்த் தீயாகி நீரும் ஆகி
இயமான னாய்எரியுங் காற்று மாகி" (பொது)

எனவும் வருமாறுபோற், சம்பந்தர் சுந்தரர் தேவாரங்களிலும் வரும பாடல்கள் பலப்பல. இவற்றோடொப்பவே திருமங்கை யாழவார்,

"பாரும் நீரெரி காற்றினோ டாகாசமும்
இவையாயி னான்." (க, அ, எ)

எனப் பாடினமை காண்க.

திருவாசகத்தில்,

"ஒருநாமம் ஓர்உருவம் ஒன்றும்இலார்க்கு ஆயிரங்
திருநாமம் பாடிநாங் தெள்ளேணங் கொட்டாமோ."
(திருத்தெள்ளேணம், க)

எனவும், தேவாரத்தில,

"பிறப்பில் பெருமானே." (கோயில், உ)

எனவும் அடுத்தடுத்துவருஞ சொறறொடர்களோத் திரு மங்கை யாழவார்,

"பேரும் ஆயிரம் பேசநின்ற பிறப்பிலி." (க, அ, எ)

எனத் தஞசெயயுளுள எடுத்தாஞதல் காண்க. 'பிறப்பிலி' என்னும பெயர் சிவபெருமான ஒருவறகே பொருந்துவ தனறிப, பத்துப பிறவிகளுடையரென வைணவரே ஒபபுக் கொண்ட திருமாலுகுப பொருநதாதாகவும, சைவசமய ஆசிரியர் கூறுமாறுபோல் தாமுந் தஙகடவுளுகுக் கூற விழைந்து திருமஙகையாழவார் 'பிறபபிலி' எனும அப் பெயரைத் திருமாலுகும ஏற்றிப பாடினர். வைணவ ஆசிரியராகிய வில்லிபுத்தூராழவார்,

"பிறப்பிலி இறப்பிலி பிறங்க லரசனறன்
மகளார் நாதன்." (மாபாரதம்)

என அச் சொற்றொடரைச் சிவபெருமாறகே உரித்தாக்கிக் கூறுதலும உறறுநோக்கற பாற்று.

இனனும, அபபர்,

"திருநாமம் அஞ்செழுத்துஞ் செப்பா ராகில்." (பொது)

எனறருளிச் செயதாற போலவே, திருமஙகையார்,

"திருநாமம் எட்டெழுத்துஞ் சொல்லினின்று." (க, அ, கூ)

எனறு ஓதுதல் காண்க.

இனிச், சுந்தரமூர்த்திகள "பொன்னார் மேனியனே" எனனும பதிகத்தில்,

"எம்மான் எம்மனையென் றனக்கெட்டனைச் சார்வாகார்
இம்மா யப்பிறவி பிறந்தேயிறந் தெய்த்தொழிந்தேன்
மைம்மாம் பூம்பொழில்சூழ் மழபாடியுள் மாணிக்கமே
அம்மான் நின்னையல்லால் இனியாரை நினைக்கேனே."

என்றருளிச் செய்த செய்யுளின இசையையும பொருளையுந் தழுவித் திருமங்கையார்,

"தாயே தந்தையென்றுந்
தாரமேகிளை மக்களென்றும்
நோயே பட்டொழிந்தேன்
உன்னைக்காண்பதோர் ஆசையினால்
வேயேய் பூம்பொழில்சூழ்
விரையார் திருவேங்கடவா
நாயேன் வந்தடைந்தேன்
நல்கியாளென்னைக் கொண்டருளே." (க, கூ, க)

எனப பாடிளமை காண்க.

இன்னும் தேவார திருவாசகங்களுள அடுத்தடுத்துக் காணபபடும "பந்தணைவிரலி" (அபபர், திருவாவடுதுறை, கo; திருவாசகம, திருப்பளளியெழுச்சி, அ) என்னுஞ சொற்றொடரைத் திருமங்கையார்,

"பந்தணை மெல்விரலாள் பாவைதன் காரணத்தால்." (உ,உ,ச)

என எடுத்தாண்டமை காண்க.

இனி, அபபர் "குரவைகோத்தவனும்" (பொது) என்றும, "குடமாடி" (திருகோடிகா) என்றுங் கண்ணனுக்கு வழங்கிய பெயர்களைத், திருமங்கையார்,

"குரவை முன்னே கோத்தாணைக்
குடமாடு கூத்தன் றன்னை." (உ, இ, ச)

என்று தமது செய்யுளில் எடுத்தாண்டமை காண்க.

"மீளாஅடிமை உமக்கே யாளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று முகத்தான் மிகவாடி

ஆளா யிருக்கும் அடியார்தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவா ரூரீர் வாழ்ந்து போதீரே.''

என்றருளியபடியே திருமங்கையாரும்,

'' ஆசை வழுவா தேத்தும் எமக்கிங் கிழுக்காய்த் தடியோர்க்குத்
தேசம் அறிய உமக்கே யாளாய்த் திரிகின் றேமுக்குக்
காசின் ஒளியில் திகழும் வண்ணங் காட்டீர் எம்பெருமான்
வாசி வல்லீர் இந்த ரூரீர் வாழ்ந்து போம்நீரே '' (சு, கூ, சு)

என்று பாடியிருத்தல் கண்டுகொளக. இனி,

'' அளவறுப்பதற்கு அரியவன் இமையவர்க்கு
அடியவர்க்கு எளியான்.'' (திருச்சதகம், கூடு)

என்று திருவாசகத்தும, தேவாரத்தும அடுத்தடுத்து வருதலைபபார்த்துத், திருமங்கையாழவாரும,

'' வானவர் தமக்குச் சேயனுய் அடியேற்
கணியனுய் வந்து.'' (டு, எ, கூ)

எனறு ஓதுதல் காணக.

இன்னுரு சுந்தரமூர்த்தி நாயனூர,

'' அந்த ணுளன்உன் அடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரண மாக
வந்த காலன்றன் ஆருயி ரதனை
வவ்வி னுய்க்குன்றன் வண்மைகண் டடியேன்
எந்தை நீஎனை நமன்றமர் நலியின்
இவன்மற் றென்னடி யாஎன விலக்குஞ்
சிந்தை யால்வந்துன் றிருவடி யடைந்தேன்
செழும்பொ ழிற்றிருப் புன்கூ ருளானே.''
(திருப்புன்கூர்)

என்றருளிச்செய்த செயயுள ஓசையினையுஞ சொறபொருள கனியுந் தழுவித் திருமங்கையாழவார்,

'' நஞ்சு சேர்வதோர் வெஞ்சின அரவம்
வெருவி வந்துநின் சரணெனச் சரணுய்
நெஞ்சிற் கொண்டுநின் அஞ்சிறைப் பறவைக்
கடைக்க லங்கொடுத் தருள்செய்த தறிந்து

வெஞ்சொ லாளர்கள் நமன்றமர் கடியர்
கொடிய செய்வன உளஅதற் கடியேன்
அஞ்சி வந்துனின் அடியிணை அடைந்தேன்
அணிபொ ழிற்றிரு அரங்கத்தம் மானே.'' (நி, அ, சு)

எனப பாடினமை காண்க.

இனித், திருநாவுக்கரசு நாயனா,

''பத்தனுய்ப் பாடமாட்டேன் பரமனே பரமயோகே
எத்தினுற் பத்திசெய்கேன் என்னீநீ இகழவேண்டா
முத்தனே முதல்வாதில்லை யம்பலத் தாடுகின்ற
அத்தாஉன் ஆடல்காண்பான அடியனேன் வந்தவாறே.''

(கோயில்) எனறருளிச்செயத திருநேரிசைப பதிகத்தின இசையையுஞ சொல்நடையையும ஒபபவே திருமஙகை யாரும,

'' கையிலங் காழிசங்கன் கருமுகில் திருநிறத்தன்
பொய்யிலன் மெய்யனதன்தாள் அடைவரேல் அடிமையாக்குஞ்
செய்யலர் கமலம்ஓங்கு செறிபொழில் தென்திருப்பேர்
பையர வணையான்நாமம் பரவிநான் உய்ந்தவாறே.'' (நி, கூ, க)

எனறு பாடினமை ஓர்க.

இனனும,

''என்தாதை தாதைக்கும் எம்மனைக்குந் தம்பெருமான்.''
(திருவாசகம், திருக்கோத்தும்பி, அ)

எனறு மாணிக்கவாசகர் அருளிச்செயததைப பார்த்து,

''எந்தாதை தாதையப்பால் எழுவர் பழவடிமை.'' (எ, உ, சு)

என்றும்,

''எந்தையை எந்தை தந்தை தம்மானை.'' (எ, ஙூ, ஙூ)

என்றும, திருவாசகத்தில்,

''என்க்கு எய்ப்பில் வைப்பே.'' (நீத்தல் விண்ணப்பம், ஙூக)

எனப்போந்த சொற்றொடரை யெடுத்து,

"எனக்கு எய்ப்பினில் வைப்பினை." (எ, கo, ச)

என்றும் திருமங்கையாழ்வார் பாடுதல் காண்க.

இனித் திருநாவுக்கரசு நாயனார் திருக்கழிப்பாலைப் பதிகத்தில்,

"வனபவள வாய்திறந்து வானவர்க்குந் தானவனே
என்கின் றுளாற்
சினபவளத் திண்டோண்மேற் சேர்ந்திலங்கு வெண்ணீற்றன்
என்கின் றுளால்
அனபவள மேகலையோடு அப்பாலைக் கப்பாலன்
எனகின றுளாற்
கனபவளஞ் சிந்துங் கழிப்பாலைச் சேர்வானைக்
கண்டாள் கொல்லோ."

என றருளிச்செய்த செயயுட்பொருளையும் இசையையும் பார்த்தது, அவற்றோடொப்பவே திருமங்கையாழ்வார்,

"சிலையிலங்கு பொன்னாழி திண்படைதண்டு ஓனசங்கம்
எனகினறுளால்
மலையிலங்கு தோள்நான்கே மற்றவனுக்கு எற்றேகாண்
எனகினறுளால்
முலையிலங்கு பூம்பயலை முன்போட அன்போடி
யிருக்கின்றுளால்,
'கலையிலங்கு மொழியாளர் கண்ணபுரத் தம்மானைக்
கண்டாள கொல்லோ."

என்று பாடியிருத்தல் கண்டுகொள்க. இங்ஙனமே இவர் திருவாசகத்திற போந்த 'கோத்தும்பி' முதலியவைகளைப் பார்த்தும், அப்பர் சுந்தரர் தேவாரப்பதிகங்களைப் பார்த்தும் பாடியவை இன்னும் பற்பல; அவையெல்லாம எண்டொடுத்துக் காட்டலுறின இஃது அளவினறி விரியுமென அஞ்சி, அவைதமமை இதுதணையின நிறுத்துகினறும. இதுகாறும எடுத்துக்காட்டிய இவையே மதச் செருக்கில்லாத மெயயறிவினரைத் தெருட்டுதற்குப போதியனவாதலால், இவை கொண்டு திருமங்கையாழவார், சைவசமயாசிரியர் நால்வர்க்கும பினனே இருந்தமை

தெற்றெனத் துணிந்து கொளளப்படும. இங்ஙனஞ சுந்தர மூர்த்தி நாயனுர்க்கும ஒரு நூறருண்டு பினலேயிருந்த திருமங்கையாழவார், தமக்கு இருநூறறைமப தாண்டு முற்பட்டிருந்த திருஞானசமபந்தப பெருமானைக் கண்டு அவரொடு வழக்கிட்டாரென வைணவர் கட்டிவிட்ட கதைக்கு ஏதொரு சான்றும எங்கும இனமையின, அக் கதை மதச்செருக்காற றேனறிய பெரும புளுகுரையா மெனறு தேர்ந்துகொளக தாம வைணவசமயததிற குரியவராயிருந்தும நடுவுநிலை பிறழாமட்டாமையிற சிங்வாச ஐயங்கார் அவர்கள தம சமயததவர் கட்டிவிட்ட பெரும பொயக்கதைகளைக் கண்டு பெரிதும அருவருபபுறறு "வைணவ ஆழவாகளைபபறறி உணமையுளளதும நமபிக் கைக்கு இடமானதும ஆன குறைந்தது ஒரு வரலாருவது இருந்ததாயின, இத்தகைய கட்டுரை ஒனறு எழுதுதறகு ஏதும கட்டாயம நேர்ந்திராது."[1] எனறு தாம ஒரு நூல் எழுதவேண்டிறறுனமைககு ஏதுக்கூறினர். பினனும அவர் "எமது கருத்திறகுப்பட்டமட்டிற பெரிய புராணத்திற் சொல்லபபட்ட உண்மை வரலாறுகளிற சில பல ஒபபிட்டுக் காணின மிகவும் நமபத்தக்கனவா யிருக்கின்றன ; ஏனெனிற, சைவாகள தமமுடைய நாயன்மார் இருந்த காலங்களைப பொயயாக நீட்டிச சொல்லவில்லை"[2] எனறு கூறியதூஉங கருத்திற பதிகறபாறறு. மேலும, மாணிக்கவாசகர அருளிச் செயத திருவாசகத்தைப பினறே சூடிகொடுத்த நாச்சியார் தமமுடைய பதிகங களைப பாடினரெனவும இவர உண்மையை நடுநிலை திறம பாமல் எடுத்துக்கூறினர[3] இங்ஙனமாகத் தேவார திரு

1. "No necessity for an essay of this kind should have occurred, had there been at least one reliable and faithful biography of the Vaishnava saints" p. 296, 'Tamil Studies.'

2. "In our opinion some of the historical accounts given in the Periya-purana are comparatively more trustworthy, as the Saivas do not assign fabulous ages to their Nayanars" p. 298, Tamil Studies, by Mr. M. Srinivasa Aiyangar, M. A.

3. Ibid, p. 324.

வாசகங்களே நனகு பயினறே ஆழவார்களெல்லாரும நாலாயிரப பிரபந்தபபதிகங்களேப பாடினரென்னும முடிபு இதுகாறும யாம விரிதது விளககிய ஆராயச்சியால் நன்கு விளங்குவதோடு, வைணவரில் நனகு கறறு நடுநிலை வழுவாது நிறபார்க்கும உடனபாடா யிருத்தலின, இவ் வுண்மைககு முறறும மாறுகத் 'திருவாதவூரடிகள ஆழவாகள பாடிய நாலாயிரபபிரபந்தத்தைப் பாதது திருவாசகம பாடினார்' எனத் 'தமிழவரலாறுடையார்' உரைத்தது பெருமடபுரட்டுப பொயயுரையாமெனு உணர்ந்து கொளக. மேலும, வைணவபபுலவர்கள கடடிவைத் திருக்குங கதைகள பெருமபுளுகு மலிந்தனவா யிருத் தலின, அவறறிறகுத் தக்க அகசசான்று புறசசான்றுகள காணபபடினனறி அவற்றைப பறறுக்கோடாகககொண்டு உண்மை ஆராயபபுகுதல் அவ வுண்மைககு மாறுன பொயபபொருளில் வழுக்கிவிடும எனபதும இஞ ஞானறை வைணவப பெரியார்களே உடன்பாடா யிருபபவும, அஃ துணராது அப பொயக்கதைகளே உணமையாக நமபி அவர்தம வரலாறு சொல்லபபுகுந்த 'தமிழ வரலாறுடை யார்' அவவாற்றல் வழுக்கி வீழந்து புரைப்பட்டது பெரிதும இரங்கறபால தொனறுமென விடுக்க.

உக. மாணிக்கவாசகர் குறித்த கடைச்சங்க காலம்

இனி, மாணிககவாசகர் காலத்தை ஆராய்ந்தாருள் ஒருசாரார், அடிகள தாம அருளிய திருச்சிற்றம்பலக்கோவை யார் இருபதாஞ செயயுளில்,

"உயர்மதிற் கூடலின் ஆய்ந்த ஒண்டீந் தமிழின்துறை."

என்று தமிழாராயந்த மதுரைச் சங்கத்தைக் குறிபபிட் டிருத்தலின், அவர் அம மதுரைத் தமிழச்சங்கம இருந்தி கி. பி. எட்டாம் நூற்றாண்டிற்குப பின்னே இருந்தோ ராவரென உரைத்தார். இஞ்ஞான்று செய்யப்படுங்

கல்வெட்டு ஆராய்ச்சியானும் நூலாராய்ச்சியானும் கி பி. ஆறும நூறாருண்டிலும ஏழாம நூறாருண்டின இடையிலும இருந்தவராக ஐயுறவுக்கு இடனின்றித துணியப்பட்ட திருநாவுக்கரசு நாயனாரும திருஞானசமபந்தமூர்த்திகளுமதாம அருளிசசெயத திருபபதிகஙகளில்,

"நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி
நற்கனகக் கிழிதருமிக் கருளினானென்காண்"
(திருப்புத்தூர், கூ)

எனவும,

"புகலி ஞானசம்பந்தன் உரைசெய்
சங்கமலி செந்தமிழ்கள்." (திருத்தேவூர்)

"அற்றன்றி யந்தண் மதுரைத் தொகையாக்கினானும்"
(பொது)

எனவும மதுரைத் தமிழச்சஙகம் தமக்கு முனனிருந்த தனைத் தெளிவுறக் குறிபபிடடிருத்தல் கொணடு, அது கி. பி ஆறும நூறாருண்டிறகு முனனரே யிருந்தமை தெளியபபடுதலின, அஃது எட்டாம நூறாருண்டில இருந்த தென உரைத்தாருரை பெரியதொரு தலைதடுமாற்ற வுரையாம. ஆகவே, அப பிழைபாட்டுரை கொணடு மாணிககவாசகர் ஒனபதாம நூறாருண்டிலிருந்தாரெனற தூஉம பெரிதும பிழைபடுவதாமெனல மறுகக.

இனிச, 'சேரன செஙகுட்டுவன' எனனுந் தமிழ நூலை ஆககியோரும, 'தெனனிநதிய சைனமத ஆராயசசிகள'[1] என்னும ஆஙகிலநூலை ஆககியோரும மதுரைத் தமிழச் சஙகம கி. பி. ஐந்தாம நூறாருண்டிறகு முறபட்டதாகாது எனக் கூறினராகலின, அச சஙகதததக குறிபபிட்ட மாணிக்கவாசகர் கி பி மூன்றும நூறாருண்டில் இருந்தாரெனல் பொருந்தாதாம பிறவெனின; அவ்விருவர் தங் கூற்றுகளும உண்மைக்கு மாறுதலை விளகஙகிக் காட்டும முகத்தால், அடிகள குறிபபிட்ட மதுரைத் தமிழ்ச்சஙகம கி. பி. மூனறும நூற்றாண்டிற்கு முறபட்டிருந்தமை தெளி

> "இவ வண்ணம முனனர ஓதலினறி இவளை வரைந்த பினனர் ஓதினருளெனெனின, அல்லன; முன்னர் இவனைப பொருவிறந்தா னெனறு கூறப் படுதலால் ஓதி முடித்தானெனபது. இவன தான் ஓதிய புருடாரத்தமாகிய தருமாரத்த காமஙகளை ஒழிய வேறறும புருடாரதமாகக் கூறபபடுவன உளவோ வெனபதனை ஆராய வேண்டுங கருத்தின ஞதலானும, கல்வியாற றனனிற் றுழந்தாரைத் தனது கல்விமிகுதி காட்டி அவாகளை யறிவித்தல் தருமநூல் விதியாதலானும் பிரியும என்பவாகலின" (கூ0அ-ஆஞ செயயுள முகவுரை). "இனிக், காவற் பிரிவெனபது, எல்லாவுயிராகளையும அரசன பாது காக்கவென்னுந் தரும நூல்விதியான் அக் காவற்குப்

பிரிதல்" (சுகஉஆஞ் செய்யுள முகவுரை). "இனிப், பகைதணிவினைப் பிரிவெனபது, தமமிற பகைத்த வேந்தரைப பகையைத் தணித்து இருவரையும பொருந்தபபண்ணுதல்" (சுகச-ஆஞ் செய்யுள முகவுரை). "இனி, வேந்தற குறறுழிப பிரிவென்பது ஒரு வேந்தனுக் கொருவேந்தன தொலைந்து வந் தடைந்தால் அவனுக் குதவிசெயயப பிரியாநிறறல்" (சுகசு-ஆஞ செய்யுள் முகவுரை). "இனிப, பொருள வயிறபிரிதல லெனபது, குரவர்களாற படைகபபட்ட பொருளகொண்டு இல்லறஞ செயதால அதனால வரும பயன அவர்க்கு ஆம அத துணையல்லது தமக் காகாமையால், தமது பொருளகொண டில்லறஞ செயதறகுப பொருளதேடப பிரியாநிறறல்" (சுசுஉ-ஆஞ செயயுள முகவுரை). "இனிப, பரத்தையிற பிரிதலென்பது, தலைமகளை வரைந்தெயதிய பினனா, வைகலும பாலை நுகாவான ஒருவன இடையே புளிஙகாடியும நுகர்ந்து அதன இனிமை யறிந்தாற போல, அவள நுகாசசியினிமை அறிதறகுப புறப பெண்டிர்மாட்டுப பிரியாநிறறல். அல்லதூஉம, பணணும பாடலும முதலாயின காடடிப புறப பெணடிா தனனைக் காதலித்தால்தான எலலாாகுந் தலைவனுகலின, அவர்களும இனபஞசெயயப பிரியா நிறறல எனறுமாம. அல்லதூஉந், தலைமகளை ஊட லறிவித்தறகுப பிரிதலெனறுமாம. இவ்வா றெழிந்து தலைகினபம வேணடிப பிரிவஞயின, 'கணடுகேட் டுண்டுயிர்த துறறறியு மைமபுலனும, ஒணடொடி கண்ணே யுள' எனபதனால், இவளுகுத் தலைமக ளெனனும பெயரொடு மாறுபட்டுத தலைது பெருமை யொடும மாறுபடாநிறகும" (சுநஉ-ஆஞ செயயுள முகவுரை).

இளமபூரணர், பேராசிரியர் எனனும ஈருரைகாரரும் உரைத்த இவ வுரைகளூறுகளை, மேலெடுத்துக்காட்டிய ஆசிரியர் நக்கீரனுரையைப் பகுதியோடு ஒப்பிட்டுக்காண

வல்ல அறிஞர்க்குப், பளபளபபான பலநிறச் சலவைக் கற்கள அழுத்திப பொனமினுக்குப பூசிப, பலபல அடுக்கு மாடங்கள உடைத்தாய் வானமுகடு அளாய்க், கார்ப்போர் கண்ணுங கருத்துங கவரும நீர்மைத்தாய உயர்ந்தோங்கி நிற்கும எழுநிலைமாடமபோல் ஆசிரியர் நக்கீரனுரை துரை நிவந்துநிற்றலும, அம மாடத்தின் அருகே புல்வேயந்த குடிலும ஓடு மூடியதொரு சிறறிலும ஏழைமைத் தோறற முடையவாயத் தாழந்துநிறறல்போல் இளம்பூரணா பேராசிரியருரைகள பீடுகுறைந்து நிற்றலும பிரிந்தினிது விளஙகாநிறகும. நக்கீரனுருரையும, மேறகாட்டிய ஏனை யிருவருரையுந் தன்மையால் வேறுபடுதலோடு, கொளகை வகையாலும வேறுபடுகினறன. ஓதறபிரிவு, பகைவயிற பிரிவுகட்கு இளமபூரணர் கூறியவுரை, நக்கீரனுர் உரைக்கு மாறுய்நிறபத், தூதிற்பிரிவுக்கு அவா கூறியவுரை, நக்கீரனுர் கூறிய ஒரு சொறறொடரை எடுததாண்ட வளவில் நிறறலுங காண்க. மறறுப பேராசிரியருரையோ, இளமபூரணருரையினுஞ சிறிது விரிவுடைத்தாயினும, பிறகாலதது வடசொறகுறியீடுக ளுடைத்தாய், நக்கீரனு ருரையின சொற்கள சொறறொடர்களையெடுத்தாண்டு, அவருரைபபொருளொடு பெருமபானமை யொத்துச சிறு பான்மை யொவவாது, அவ ருரைநலத்தின மிகச்சிறிதே தன்கட்கொண்டு நிறகினறது. இஙஙனந் தன்மையானுங கொளகைவகையானும இவவிருவ ருரையும நக்கீரனுருரை யின வேறுக நிறறலானும, நக்கீரனுருரையின சொற்றொடர் களை யெடுத்தாளலானும அவவுரைகளை வகுத்த இளம பூரணர் பேராசிரிய ரெனனும இருவர்தம மனவியறகை யும் நக்கீரனுரது மனவியறகையின் முற்றும வேறுதலுந் தெறறெனப் புலனும்.

இறையனுரகப்பொரு ளுரையினை இயற்றிய ஆசிரிய ரின் புலமைத்திறம பெருமாட்சித்தாதலும், தொல்காப்பிய உரையினையியறறிய இளமபூரணரின் திறம் அத்துணை மாட்சித்து அனறுதலும நுண்மாண் நுழைபுலமுடையார்க் கெல்லாம வெள்ளிடைமலைபோல் விளங்கிக்கிடப்பவும்,

இஞ்ஞானறு வழங்கும இறையனார் களவியலுரையினை யியறறினவர் இளமபூரணரே யாதல்வேண்டுமெனச் 'சேரன செங்குட்டுவன்' நூலார் கூறினர்.[1] இவ்வாறு கூறுதற்குக் களவிய லுரையிலும், தொல்காபபியச் சொல்லதிகார இளமபூரணர் உரையிலும பொதுபபோற் காணபபடும இரண்டு உரைக்குறிபபுகளே அவர்க்குப் பெருஞ சானறு களாயத் தோனறுகினறன. களவியல் முதற்சூத்திர உரையின ாறறில் 'எனமனார்' எனனுஞ சொல்லுகுக் காட்டபபட்டிருக்குஞ சொனமுடிபும, அதன ஏழாஞ்சூத்திர வுரையின ாறறிற காட்டபபட்டிருக்கும 'வரவு' எனனுஞ் சொலவழகும ஆண்டுளளவாறுபோல், தொல்காபபியச் சொல்லதிகார இளமபூரணருரையினுங காணபபடுகினறன. இவவாறு இருவர் உரையினும் பொதுவாகக் காணபபடும் இவவிரு குறிபபுக்களையுந் தமமுரையுள மறறுத்தபின உரைகாரரான சேனவரையா அக குறிபபுகளை இளம் பூரணருடையவாக வைதது மறறுத்தாரேயன்றி, நக்கீரனு ருடையவாக வைத்து மறறுத்திலாமையின்,[2] அவ்வுரைக் குறிபபுகள இரணடையும உடைய களவியலுரை இளம் பூரணர் இயறறியதென றெனறு கோடலே 'செங்குட் டுவன' நூலாரது கோள.

இனி, இவர் எடுத்துக்காட்டிய அவ்வுரைக்குறிப்புகள இரண்டையும இளமபூரண ருரைகளாக வைதது, அவ் விளமபூரணருகுப பினவந்த சேனவரையர், தொல் காப்பியச் சொல்லதிகாரத்திறுதித் தாம வரைந்த உரை யில் மறுத்திருபபது கொண்டு, அவ வுரைக்குறிபபுகள் இரண்டு மட்டுமே காணபபடுங 'களவியலுரை' முழுவ தாஉம் இளமபூரணரே இயற்றியதாமெனல் யாஙஙனம் பொருந்தும? ஒருவர் உரையில் உள்ள சொற்களையுஞ் சொறறொடர்களையும பொருளகளையும, அவர்க்குப் பின் வரும உரைகாரர் தமதுரையில் நிரமப எடுத்தாள்வது தோனறுதொட்ட வழக்கமா யிருக்கின்றது. இஃது, இளம்

1. செந்தமிழ், சு-ஆந்தொகுதி, பக்கம், கூ0கூ.
2. தொல்காப்பியம், சொல், க, உக.

பூரணருரையினையும் அவர்க்குப் பின்வந்த பேராசிரியர் சேனவரையர் நச்சினர்க்கினிய ருரைகளையும் ஒத்து நோக்குவார்க்கு நனகு விளங்கும. இளம்பூரணருரையிற காணபபடும் உரைப பகுதிகள பல ஏனை உரைகாரர் உரைகளிற் காணப்படுதல் கொண்டு, அவருரைகளை யெல்லாம இளமபூரணருரை யென்று கோடல் அடுக்குமோ? அடாதன்றே. அதுபோலவே, இளமபூரணருரையிற காணப்படும் இரண்டு சிறு உரைக்குறிப்புகள மட்டும 'இறையனாரகப் பொருளுரையிற்' காணபபடுதல் கொண்டு, அவ்வுரைமுற்றும் இளம்பூரணருரைத்தனறே என்று கோடலினும பெரியதோர் இழுக்கான உயத்துணர்ச்சி வேறுயாண்டுமிலது. இறையனாரகப பொருளுரைப போக்கும், இளமபூரணருரைப் போக்கும, ஒன்றையொன றெவ்வாமற் பெரிதும வேறுபட்டுக் கிடக்குமாற்றினை, அவருரைகளினின்றும மேலெடுத்துக காட்டிய உரைபபகுதிகளால் நன்கு விளக்கிக் காட்டினேம.

அதுவேயுமனறி, நக்கீரனார் சொற்றொடர்களை அமைக்கும முறையோ, இளமபூரணர் முதலான ஏனை உரைகாரர் அவறறை அமைககும முறைக்கு முற்றும வேறுனதொரு தனமைத்தா யிருக்கின்றது. ஒரு பொருண்மேல்வரும் பல சொறறொடர்களை அவர் ஒருவரிசைப்படத் தொடுக்குந் திறமும அழகும் பெரிது பாராட்டறபாலதான தனிச் சிறபபு வாய்ந்து மிளிர்கினறன; ஒரு சொறறொடரை முடித்து, அதனோடு இயைபுடைய பிறிதொரு சொற்றொடரைத் தொடஙகுகையில், முடித்த சொறறொடரின் ஈற்றிலுளள வினைமுறறுச் சொல்லையே வினையெச்சமாகத் திரித்து, அதனை அதற்கடுத்த சொற்றொடரின் முதற்கட் பெய்து தொடஙகிச் செல்கினறார்; மேலே சுகஅ-ஆம பக்கம முதல் சுஉ0-ஆம பக்கம வரையில் எடுத்துக காட்டிய 'இறையனாரகப பொருளுரைப்' பகுதிகளில் தடித்த எழுத்திற் பதிபபித்திருக்குஞ் சொற்களைக் காண்க; "வெறியுறு நறுமலா வேஙகை கண்டாள்" என்று முதலில் ஒரு சொற்றொடரை முடித்தவர், அச் சொற்றொடரின் ஈற்றில்

உள்ள 'கண்டாள்' என்னும் வினைமுற்றைக் 'கண்டு' என்னும் வினையெச்சமாகத் திரித்து அதனை முதற்கட்பெயது அடுத்த சொற்றொடரைத் தொடங்குதலும், இங்ஙனமே அதற்கடுத்த தொடரை அவர் எழுதிக்கொண்டு போதலும் உறுறு நோக்குக. இத்தகையதொரு சொறறொடரமைபபு 'இறையனார்களவியலுரை'யின் துவக்கம முதல் அதன முடிவுவரையிற காணபபடுமாறுபோல, இளம பூரணருரையிலாதல் ஏனை உரைகார ருரையிலாதல் காணபபடாமையின, களவியலுரை, அவ்வுரையெழுதுதற்கு இயைந்த பேராறறல்வாயந்த ஆசிரியர் நக்கீரனாரால் இயற்றபபட்டதாகுமேயனறி இளமபூரணர் முதலான ஏனையோருள் ஒருவரால் இயறறபபட்டதாகாது.

மேலும, "வேலேறுபடத் தேளேறு மாய்ந்தாற் போல" எனவும, "பளளத்துவழி வெளளமபோல" எனவும, "யானை தொடு வுண்ணின மூடுங்கலம இல்லது போல" எனவும, "கடல்வெதுமபின் வளாவுநீர் இல்லது போல" எனவும, "கெடுத்துத் தேடும் நனகலம எடுத்துக் கொண்டாறு போல" எனவும, "மணிக்கலங் கதுவாய்ப பட்டதுபோல" எனவும, "உற்றூர்க்குரியர் பொறறொடி மகளிர், கொண்டார்க் குரியர் கொடுத்தார்" எனவும, "மூடியிருந்து வேவதோர் கொள்கலம மூயதிறந்தவிடத்து ஆவியெழுந்து முனகினைற வெப்பம நீங்கினைறபோல" எனவும, "யாறு வருகினறதெனறு ஆடை தகைச்சூடாரன்றே" எனவும, "வண்டோரனையர் ஆடவர் பூவோரனையர் மகளிர்" எனவும 'இறையனார் களவியலுரை'யில் ஆண்டாண்டுக் காணபபடும் பண்டைக் காலத்துச் செந்தமிழறிஞர்தம் முதுமொழிகள போல்வன, இளம்பூரணர் முதலான ஏனை யுரையாசிரியர்தம உரைகளிற் காணபபடுகினறில. இவ் வாற்றானும 'இறையனார் களவியலுரை' நக்கீரனார் இயற்றியதாவதல்லது ஏனையோர் இயற்றியதாகாமை உள்ளங்கை நெல்லிக்கனி' போற் றெற்றெனப புலனும. இதுகொண்டு, சான்றோர்தம் முதுமொழிகளை இடையிடையே மடுத்து உரை எழுதுதலில் ஆசிரியர் நக்கீரனார்

வேட்கை மிகுதியும உடையராதல்போல ஏனையுரை காரர் இருபபக் காணுமையின, அவ விருபாலார்க்குமுள்ள இயற்கை வேறுபாடுகளைப் பகுத்துணர்ந்து கடைப்பிடித்துக்கொள்க.

இவையெல்லாம் ஒக்கும்மன்; இறையனார் களவியலுரையிலும், தொல்காபபியச் சொல்லதிகார இளமபூரணருரையிலும பொதுமையிற காணபபடுவனவாக மேலெடுத்துக் காட்டிய இரண்டுரைக் குறிபபுகளையும, பினவந்த சேனாவரையர் நககீரனார் மேலனவாக வைத்துரையாது, இளமபூரணர் மேலவாக வைத்துரை கூறியதெனனே யெனின; சேனாவரையர் காலதது வழஙகிய 'களவியலுரை' ஏட்டுச் சுவடிகளில அவ விரணடுரைக குறிபபுகளுள ஒனறு காணபபடாமல், தொல்காபபியச சொல்லதிகார இளமபூரணா உரையில் மட்டும அது காணபபட்டமையின, அது தனனே இளமபூரணா மேலதாக வைத்துச் சேனாவரையர் மறுத்திட்டார். எனவே, சேனாவரையர் காலத்திறகுப் பினவந்த களவியலுரை ஏட்டுச சுவடிகளின மட்டுமே, அவ விரண்டில் ஒனறு இளமபூரண ருரையிலிருந்து எடுத்துச் சேர்க்கபபட்டதாதல் வேண்டு மென்பது பெறுதும. அதனனேறே, அது நக்கீரனார் ருரையினகத்தே காணபபடாமல், 'இறையனாரகப பொருள' முதற் சூத்திர உரையின முடிவில் அதறகுப புறமபாயக காணபபடுவதாயிற் றென்பது. ஒருவருரையில் மறறொருவ ருரையினைச் சேர்க்கலுறுவார், அவ வுரையின இடையே அதனைச சேர்த்தறகு இடங காண்டல் அரிதாகலின, அதன் ஈற்றிலே அதனை எளிதாகச் சேர்த்துவிடுவர். இவ்வியல்புக்கு ஒபபவே, இளமபூரண ருரைக்குறிபபு ஒனறை, நக்கீரனாரது களவிய லுரையிற சேர்ககவேண்டினார் ஒருவர், அதறகு அவ்வுரையின அகத்தே இடங காணுமையின, அதன் ஈற்றினகண்ணே அதறகுப புறமபாய் அதனைச் சேர்க்கலாயினர் எனக. அற்றேற், களவியல் முதற் சூத்திரத்திற போந்த 'என்மனார்' என்னுஞ் சொல்லின முடிபை நக்கீரனார் கூறுதுவிட்ட தென்னையெனின்;

நக்கீரனுர் பேருரை வகுக்குங குறிப்பினராகலின், தம துரைககு வேண்டபபடாத சொன்முடிபுகளைக் கூறிற்றிலர்; அதனுல் 'என்மனுர்' எனனுஞ சொல்லுக்கு அவர் முடிபு கூறுதுவிட்டது ஒரு குறைபாடாகாதெனன விடுக்க. மறறுப, பிறகாலதது வந்தா ஒருவர் அச் சொல்லுக்கு முடிவுகாட்டல் வேண்டினராகலின, அவரே அதனை இளம பூரண ருரையிலிருந்தெடுத்துக, களவியல் முதற சூத்திர வுரையி னிறுதியிற சேர்த்துவிட்டாரென்க.

இனி, இறையனுரகபபொருள ஏழாஞ சூத்திர வுரை யில் 'வரவு' எனனுஞ சொல்வழகுக்கு நக்கீரனுர் உரைத்த உரையுங், தொல்காபபியச் சொல்லதிகாரத்தில் " தருசொல் வருசொல் ஆயிரு கிளவியுங், தனமை முன்னிலை ஆயீ ரிடத்த " எனனுஞ சூத்திரததிறகு இளமபூரணர் கூறிய உரையுங் தமமுள மாறுபட்டு நிறகினறன. 'வருதல்' எனனும விணை இச் சிறபபுச் சூத்திரங கூறுமாறு தனமை முனனிலை என்னும ரிடத்தினகண வரறபால தாகவும, அதனை விட்டு அஃது " இருவரும உளவழி அவனவர வுணர்தல் " எனக் களவியற சூத்திரத்திற படர்க்கை யிடததினகண் வந்தமை வழுவாம போலுமெனன மயங்கும மாணக்கறகு அம மயககந் தீர்த்தற்பொருட்டாகவே, நக்கீரனுர்,

" செலவினும் வரவினுந் தரவினுங் கொடையினும்
நிலைபெறத் தோன்றும் அந்நாற் சொல்லுந்
தன்மை முன்னிலை படர்க்கை யென்னும்
அம்மூ விடத்தும் உரிய என்ப."

(தொல்காப்பியம், சொல், உஅ)

என்னும பொதுச சூத்திரத்தால் அது படர்க்கையிடத் திற்குஞ சிறுபானமை யுரித்தாதலை விளககிக் காட்டினுர். நக்கீரனுர் கூறிய இவவுரைக்கு இணங்கவே, சேனவரை யருங் " தருசொல் வருசொல் " எனனுஞ் சூத்திரத்தில் வருசொல்லைப படர்க்கை இடத்திறகும அமைத்துத் " தூண்டில் வேட்டுவன் வாங்க வாராது " என்னுஞ் சானறோர் செய்யுளையும அதற்கு இலக்கியமாக் காட்டினுர். மற்று, இளம்பூரணரோ 'செலவு' 'வரவு' 'தரவு' 'கொடை'

என்னுஞ சொற்கள் நான்குங் கொடைப பொருளே உணர்த்துமெனக் கூறித், "தூண்டில் வேட்டுவன் வாங்க வாராது" என்னுஞ செய்யுளே அதற்குப் புறனடையாக எடுத்துக் காட்டினர். இளமபூரணர் கூறிய இவ்வுரை தொல்லாசிரியர் வழக்கொடு முரணுதலின், அச் சொற களுட் 'கொடுத்தல்' 'தருதல்' எனனும இரண்டொழியச் 'செல்லுதல்' 'வருதல்' எனனும் மற்றிரு சொற்களுங் கொடைப பொருளே உணர்த்தா எனபதூஉம், இளம பூரணர் தாமே புறனடையாக எடுத்துக் காட்டிய "தூண்டில் வேட்டுவன வாங்க வாராது" எனனுஞ் சான் ரோர் செய்யுளே அதறகுச் சானரு மெனபதூஉம போதரச் சேனவரையர் "இந் நான்குங கொடைப பொருளனவென றும உரையாசிரியர் கூறினராலெனின்; தூண்டில் வேட்டுவன் வாங்க வாராது எனபதனே அமைத்தாராகலின், அவர்க்கு அது கருத்து அனறு எனக" எனப பணிவுகாட்டி அவரை மறுத்திட்டார். சேனவரையர் மறுத்த இவ விளம பூரண ருரைப பகுதிக்கும, ஆசிரியர் நக்கீரனர் அச் சொறகள நானகும பறறிககூறிய உரைப்பகுதிக்கும ஏதோ சொறறுமையும இனமை, அவ்விரு நூலுரைகளே நன காரராயந்தார்க கெல்லாம இனிது விளங்கிக் கிடபபவுஞ், 'சேரனசெங்குட்டுவன்' நூலார் அவற்றை நனகாய்ந்து பாராது, தாம பிடித்ததை எங்ஙனமாயினும நிலைபபடுத்தி விடுதல் வேண்டுமென எழுந்த பறறினால் அறிவு மருணடு நக்கீரனர் வரைந்த களவிய லுரையை இளமபூரணர தென றுரைத்து இழுக்கினர் நக்கீரனர் 'செல்லுதல்' 'வருதல்' என்னுஞ சொற்கள கொடைபபொருளே யுணாதது மெனறு கூறிற்றிலர்; இளமபூரணரோ அவையுங் கொடைபபொருளேயுணர்த்து மென்று கூறினர்; நக்கீ ரனர் "தூண்டில் வேட்டுவன வாங்க வாராது" எனனுஞ் சான்ரோர செய்யுளே, 'வருதல்' எனனுஞசொல் படர்க்கை யிடத்தில் வருதறகு இலக்கியமாயக் காட்டினர்; இளம பூரணரோ அச்சொல் தாங்கூறிய கொடைப்பொருளில் அடஙகாது வேரூய் நிற்றறகு அதனேப் புறனடை இலக்கிய மாய்க் காட்டினர். இவவா றிருவர் உரையும் ஒன்றினென்று

மாறுபட்டு நிறறல் வெளளிடைமலைபோல் விளங்கிக் கிடப் பவுஞ 'செஙகுட்டுவன்' நூலார் அவ் விரண்டனையும் ஒரு பெற்றியவாக வைத்து மயங்கிக்கொண்டு, இளமபூரண ருரையை அவர்க்குரிய 'உரையாசிரியர்' என்னும் பெயராற் கூறிமறுத்த சேனவரையர், அதனோடு ஒப்பதாகிய களவியலுரையை ஙக்கீரனர் பெயராற் சொல்லாமையின் அக் களவியலுரை இளமபூரணர் இயற்றியதே யாதல் வேண்டுமெனப பெரிதும பிழைபட உரைத்தார். களவிய லுரையும இளமபூரண ருரையும ஒரே பொருளைப் பற்றி யெழுந்து ஒருதன்மைப்பட நிறகுமாயின, இளமபூரணருரை யெனறு கொணடு மறுத்த சேனவரையர், அதறகுமுன னிருந்த களவியலுரையிலுங் காணப்படுமை அதனை இளம் பூரணர் மேற்ருக வைத்து மறுத்தது என்னை? எனபது ஆராயற பாற்றும். அஙஙனம அவை ஒருதனமைபபட நிறறலைக் கண்டவிடத்தும, அவ்வொற்றுமையாகிய ஒரு சிறு சானறினைக்கொண்டு கதுமென ஒருவ ருரையினைப் பிறரொருவ ருரையாக மயஙகவைத்தலுங குறறமாம; எனனை? சேனவரையர் காலத்துக் களவியலுரை ஏட்டுச் சுவடிகளிற காணபபடாத சில உரைபபகுதிகள அவர்க்குப் பிறபட்ட காலத்தவரால் அதனகட் சேர்க்கப்பட் டிருத் தலுங் கூடுமாகலின எனபது. எனவே, சேனவரையர் "தருசொல் வருசொல்" என்னுஞ் சூத்திரவுரையில் எடுத்து மறுத்த இளமபூரண ருரைபபகுதிகுமை, ஆசிரியர் ஙக்கீரனர் 'களவியலுரை' எ-ஆஞ் சூத்திர வுரையில் 'வருசொல்' வழக்குபபறறி யுரைதத உரைபபகுதிகுமை ஏதேனும் இயைபுங காணபபடாமையின், சானறல்லா அதனைச் சான்ருகக்கொண்டு ஙகீரனருரையை இளம் பூரணருரையாகப புரட்டிவிடத்துணிந்த 'சேரன்செஙகுட் டுவன்' நூலாரது செயல், சிறுதுருமபினைப புனையாகப பறறிக்கொண்டு ஆழந்ததொரு குட்டத்தினகட் புகுனை செயலோ டொபபுமை யுடைத்தாய முடிந்தமை காண்க.

அற்றேல் அஃதாக, சேனவரையர் காலத்திற்கு முன்னரே, ஙக்கீரனர் 'இறையனரகப பொருளுக்கு'

எழுதிய உரை உண்டெனபது எறரூற பெறுதுமெனின்; 'இறையனரகப பொருள்' கஅ-ஆஞ சூத்திரவுரையில் "அஃதேயெனின, அறியக் 'கிளகபபட்ட இடம்' எனறது 'கிளந்த இடம' எனறது எற்றிற்கோ வெனின, வினைச் சொற்கள நானகு விகறபம உடைய; யாவை அவ்விகற்ப மெனின, கருத்தன ஏதுக் கருத்தன் கருவிக் கருத்தன, கருமகருததன என இவை; அவறறுட் கருத்தனென் பது, தச்சனெடுத்த மாடம், கொல்லன செய்தவாள; ஏதுக் கருத்தனெனபது ஏவினனெக கருத்தாவாகச் செயவது, அரசர் தொட்ட குளம, அரசா எடுத்த தேவ குலம எனா இத தொடக்கத்தன; இனிக் கருவிக் கருத்த னென்பது, வாள எறியும, சுரிகை குறறும, இமமிடா நாற குறுணி, அரிசிச் சோறு அடும எனா இத் தொடக்கததன; கருமக் கருந்தன் எனபது, திண்ணெமெழுகிற்று, கலங கழுவிற்று, மரஙகுறைததது எனறு சொல்லுவது" எனா ஆசிரியர் நககீரனர் விளக்கிய உரைக கூறறிற போந்த 'கருமகருத்தன' எனபதனைச் சுட்டிச் சேனாவரையர், தொல்காபபியச் சொல்லதிகார உசசு-ஆஞ் சூத்திரவுரை யில், "செயப்படுபொருளை வினைமுதல் வாயபாட்டாற கிளத்தலேயன்றி, எளிதின் அடபபடுதல் நோக்கி, அரிசி தாலை யட்டது எனச் செயப்படுபொருளை வினை முதலின் றொழிறபடக கிளத்தலும வழக்கியன மரபு எனறற்குத் 'தொழிறபடக்கிளதததலும' என்றார்; இதனைக் கருமக் கருந்தன் என்ப" எனக கூறியிருததலின, சேனாவரையர் காலததிறகு முறறெட்டே நககீரனரது களவியலுரை உண்டெனபதாஉம, அதனைச் சேனாவரையர் நானகு பயின றிருந்தன ரென்பதாஉம பெறபபடும. இவ்வாறே, இளம பூரணரது தொல்காப்பிய வுரைக்கு முன்னும நககீர னரது களவியலுரை யுண்டெனபதற்குச் சானறுண்டோ வெனின; உணடு; யாம மேலை காட்டியவாற்றல் (சுஉசு, சுஉஎ, சுஉஅ-ஆம பக்கங்கள), நக்கீரனரது களவியலுரைச் சொற்றொடர்களையுங கருத்துகளையும இளம்பூரணர் ஆங காங்குத் தழுவி யுரைவரைந் திருத்தல் அறியபபடும; அவை யெல்லாம காண்டெடுத்துக் காட்டலுறின் இது மிகவிரியும;

ஆகலின், நக்கீரனார் களவியல் நூறபாயிர வுரையிலும, களவியல் முதற சூத்திரவுரையில் முதற்பொருள கருப பொருள உரிபபொருள எனபவறறிறகுக் கூறிய வுரைப் பகுதிகளிலும உளள சொறபொருளகளே இளமபூரணர் அங்ஙனமே எடுத்துத் தொல்காபபிய எழுதததிகார பாயிரவுரையிலும, பொருளதிகார முதல் கரு வுரிபபொருட் சூத்திரவுரையிலும எழுதிச் செல்லுதலே ஒபபிட்டுக் கண்டு கொளக.

இனி, 'இறையனுரகபபொருள்' உரைபபாயிரத்தில், தமிழமுசசஙக வரலாறும நககீரனார உரைவந்த வரலாறுங கூறுகினற சில உரைபபகுதிகளைக்கொணடும, நூலின உரையகத்தே எடுத்துககாட்டாக வந்துளள 'கட்டளைக் கலித்துறைச' செயயுட்களைக கொணடும, இறையனுரகப் பொருளுரை முழுவதாஉங கி. பி. ஏழாம நூறறாண்டிறகுப பின இயறறபபடடதெனறுகல் வேண்டுமெனறும, அக் கலித்துறைச செயயுட்களிற புகழந்துரைக்கபபடும பாண்டி வேந்தன காலத்திருந்து பததுத் தலைமுறை கணக்குச் செயய நககீரனாருங கடைச்சஙகமும இருந்த காலமுங கி. பி. ஐந்தாம நூறறாண்டிறகுமேற செல்லாதென்றுளு 'சேரன செஙகுட்டுவன்' (பகமம, களஅ-கஅ0) நூலார் கூறியார். இக கூறறுக்களின பிழைபாடும ஆராய்ந்து காட்டுதும:

'களவியல்' முதறசூத்திரத்திறகு ஆசிரியர் நக்கீரனார் உரை யுரைக்கும முன அதற்குப பாயிரவுரையும அவர் தாமே உரைத்திட்டார். அந் நூலுக்குச் சிறபபுப்பாயிரங கூறினார் வேறுயாரும இல்லாமையின, உரையெழுதுவான் புகுந்த நககீரனாரே அதற்குப பாயிரவுரை கூறியது வாய்வதேயாம. ஒரு நூலுககு உரைகூறப புகுந்த ஆசிரி யர், அந் நூலின வரலாறு தெரிபபதாகிய பாயிரம் மட்டுமே தமதுரையில் வரைகுவரனறித், தாம அந் நூலுக்கு உரைவகுக்கவந்த வரலாறுந் தெரிபபாரல்லர். ஆகவே, நக்கீரனார், இறையனார் களவியலுக்கு முதறகண் எழுதிய தமது பாயிரவுரையில், தாம அந் நூலுக்கு உரை யெழுதப புக்க வரலாறுங் கூறுவாரல்லர்; என்னை? அவ்

வாறுரைபபது தம்மைப் புகழ்தலாய் முடியுமாகலானும், நல்லிசைப்புலவர் அங்ஙனந் தமமைப் புகழாராகலானும் எனபது. எனவே, நூல்வரலாறு தெரிக்கும அப் பாயிர வுரையினிடையே, நககீரனாரது உரை வரலாறு தெரிக்கும பகுதி நககீரனாரலனறி அவர்தம் மாணாக்கர் வழியில் வந்த ஒருவரால் எழுதிச் சேர்க்கபபட்ட தொன்றுதல் தேற்றமாம.

அற்றன்று, "அது பாயிரத்துள்ளே உரைத்தாம" என்று நககீரனாரே தமது சூத்திரவுரையகத்தே மொழியக் காண்டலின், பாயிரவுரை முற்றும அவரே எழுதினரென்பது பெறபபடுமாலோ வெனின; அறியாது கூறினய; "அது பாயிரத்துளளே உரைத்தாம்" எனறு அவர் கூறியது எதுவெனறு ஆராய்ந்து காண்பார்க்கு, அது நூல்வரலாறு தெரிக்கும பாயிரவுரையில் அவர் கூறிய வுரையேயல்லாமல், தமது உரைவந்த வரலாறு காட்டும உரைபபகுதியில் உளளதல்லாமை இனிது விளஙகும. யாஙஙனமெனிற் கூறுதும: களவியல் முதற் சூதிரவுரையினகத்தே இரண்டிடஙகளில் "அது பாயிரத்துளளே உரைததாம" எனனுஞ் சொற்றொடர் காணபபடுகின்றது; அவற்றுள ஒன்று: "இனி, நூல் நுதலியதூஉம உரைக்கறபாலது; அது பாயிரத்துளளே உரைத்தாம." எனபதாம; இப பகுதியுள 'அது பாயிரத்துளளே யுரைத்தாம' எனனுஞ சுட்டு, நூற்பாயிரவுரையுள "இனி நுதலிய பொருளெனபது நூறபொருளைச் சொல்லுதல் எனபது. இந் நூல் எனனுதலிற்றெனின், தமிழ நுதலியதென பது." என்று அவர் கூறிய வுரையினைக் குறியாகிறகின றது. மற்றொன்று: "இஙகுப பிறவுங்களவுண்மைசொல்லி, அக் களவுகட்கெல்லாம இக் களவு சிறபபுடைமை சொல்லும; துறக்கம வீடுபேறுகளை முடிக்குமாகலான 'எனப படுவது' எனறு சொல்லிச் சிறபபிகபபட்டது; அது பாயிரத்துளளும உரைத்தாம" எனபதையாம; இதன்கட் போந்த சுட்டு, நூற்பாயிர வுரையில் "இனிப, பயன என்பது இது கற்க இன்னது பயக்கும" எனபது துவங்கி

"மற்றும் இவைபோல்வன களவாகா, நனமை பயக்கும" என்பது ஈருகக்கிடந்த பகுதியினையே குறியா நிற்கின்றது. இங்ஙனமாக முதறசூத்திர வுரையுள "அது பாயிரத்துள்ளே உரைத்தாம்" என்று இருகாற்போந்த சுட்டுக்கள இரண்டும, நக்கீரர் தாமேயுரைதத நூற்பாயிர வுரையிற் போந்த உரைப்பகுதிகளைக் குறிக்கக் காண்டுமேயல்லாமல், உரைவரலாறு கூறும் பகுதியிலுளவற்றைக் குறிக்கக் காணுமையின, அவைகொண்டு பாயிரவுரை முழுதும் நககீரனர் ஆக்கியதே யெனறல், அப பாயிரவுரைப பகுதிகளைப பகுதாராயந்து பார்க்கமாட்டாதார் கூறும பிழை பாட்டுரையேயாமென விடுக்க

அறதறேல், இறையனரகபபொருள் முதற் சூத்திரத்திற்கு ஆசிரியர் நககீரனர் கூறிய நூற்பாயிர வுரையாவது எது? அதனகட் பிறர் கூறிய உரைபபாயிரவுரையாவது எது? என வினவின, அவைதமமையும பிரித்துக் காட்டுதும. நூறபாயிர வுரையாவது: ஒரு நூல் செயத ஆக்கியோன பெயரும, அந் நூல் இனன நூலின வழித்தாகச் செயயபபட்டதென அதன வழியும, அஃது இனன எல்லகளுள வழஙகுவதென அதன எல்லையும, அந்நூலின் பெயர் இதுவென அதன் பெயரும, அது 'தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்பபு' என ஆக்கப படும நால்வகையில் இனனதுபறறி யாக்கபபட்டதென அதன் யாப்பும, அஃது இத்தகையதொரு பொருளை விளக்குவான் புகுந்ததென அது நுதலிய பொருளும, அஃது இனனதோர் அவையகததே இத்துணைச் சிறந்த சானறோராற கேட்டு ஏறகபபடடதென அதனைக் கேட்போரும, இந்நூல் கறக இனனபயன் உண்டாம என அதன பயனும, அஃது இயறறபபட்ட காலமும, அஃது அரங்கேறிய அவைக்களமும, அந்நூல் செய்யவேண்டிற்றுங் காரணமும என அந் நூலைபபறறிய பதினெரு வரலாறுந் தெரிப்பதே ஒரு நூலுக்குப பாயிரமாகும. இப பதினெரு வரலாறுங கூறும பாயிரம ஒரு நூலுக்கு இன்றியமையாச் சிறப்பிற்றுதல் நோக்கியே தொண்டு

தொட்டு வந்த தமிழாசிரியர் " ஆயிர முகத்தான் அகன்ற தாயினும், பாயிரம இல்லது பனுவலன்றே "[1] என று கூறுவாராயினர்; அவர் கூறிய ஆணைகடவாதே நக்கீர ஞர் முதலாகவந்த உரையாசிரியரும பிறரும் தாமெடுத்த நூற்கு முதலிற பாயிரம உரைத்தலே ஒரு பெருங்கடமை யாக் கொண்டார். அறுபது சூத்திரங்களால் ஆகிய 'இறையனாரகப்பொருள' எனனும அகபபொருள நூல், திருவாலவாயக் கோயில் இறைவன நிருவிருவப் பீடத்தின் கீழ கினறும் தறசெயலாயக கிடைத்த மூனறு செபபேடு களில் எழுதபபட்டிருக்கக் கண்டமையின், அதனை இறை வனே அருளிச்செயதா ெனனறுகொண்டு, அக்காலத் திருந்த நக்கீரனாரை யுளளிட்ட நல்லிசைப புலவர் அதற்கு உரை வரைந்தாராகல் வேண்டும. அதற்குச் சிறபபுப் பாயிரம எவராலும உரைக்கபபடாமையின், உரையெழுது வான் புகுந்த நககீரனாரே தமது உரைமுகத்தில் அந்நூற் சிறபபுபபாயிரத்திற்குரிய பதினெனறும உரைத்திட்டார்.

உஉ. முச்சங்க வரலாறும் தொல்காப்பிய காலமும்

நூல் வரலாறு தெரிக்கும இப பதினெனறும அல் லாத ஏனை உரைபபாயிர வுரையெல்லாம நககீரனார்தம மாணாக்கர் வழிவந்த ஏனையொருவராற் றும் கேட்டவாறே எழுதிச் சேர்க்கப்பட்டனவாகும. அங்ஙனஞ சேர்க்கப பட்டவை யாவையோவெனிற், கூறுதும: தலைச்சங்க இடைச்சங்க கடைச்சங்க வரலாறுகளை எடுத்துரைக்கும

1. இதுவும், இன்னோரன்ன பாயிரச சூத்திரங்களும் நக்கீர னார் இளம்பூரணர் முதலான தொல்லாசிரியர்தம் உரைகளில் வழங்கக் காண்டலின், இவை அவர்களுப் பிற்காலத்து வந்த பவணந்தியாரால் இயற்றப்பட்டன அல்ல. இவை கடைச்சங்க காலத்திற்கு முன்னரே ஆக்கப்பட்டனவாகும் இவற்றுட் சில பாடலனீ என்னும் ஆசிரியரால் இயற்றப்பட்டனவென யாப் பருங்கலக்காரிகையின் பழையவுரை கூறுகின்றது இவை தம்மையே பிற்காலத்திற் பவணந்தியார் தமது நன்னூலில் எடுத்தாண்டன ரென்க

பகுதிகள அவ்வளவும நக்கீரனுர் எழுதியன ஆகா. எனனே? 'சஙகம' எனனுஞசொற றமிழச்சொல் அனமை யானும, நக்கீரனுர காலததும அவாககு முனனும இருந்த சானறோர்கள எல்லாம 'மனறம,' 'அமபலம,' 'குழாம,' 'பொதியில்' எனனுங் தூய தமிழச சொறகளேயே வழஙகினரனறிச் 'சஙகம' எனனுஞசொல்லே வழஙகக காணமை யானும, முசசஙக வரலாறு நக்கீரனுரே எழுதினராயின அவருங் 'தலைமனறம,' 'இடைமனறம' முதலான தனித் தமிழச் சொற்களினுலேயே அவை தமமை வழஙகியிருபப ராகலானும எனபது. அதுவேயுமனறித், தலைச்சஙகத்தில் அகத்தியனுரும சிவபெருமானும முருகக கடவுளும இருந்து தமிழாராயந்த ரெனனும ஒரு கதையை, உலக இயறகை யொடு மாறுறுத நகக்கீரனுர எழுதுவாரல்லர்; மேலும, கி. பி. இரண்டாம நூறறுணடுககு முறபட்ட பழந்தமிழப பாட்டுகளில் எஙகும அகததியனுர் எனறு ஓராசிரியர் இருந்தாரெனபதறகு ஏதொரு சானறும இல்லாமை மேலே விளக்கிப போந்தாமாகலானும, காணவுங கருதவும படாத முழுமுதற கடவுளான சிவபிரானும முருகவேளுந் தலைச்சஙகததில் ஏனைப புலவரோடு ஒகக வீறறிருந்து தமிழாராயந்தார் எனனுங கதை, புராணகதைகள மிக் கெழுந்த கி. பி. நானகாம நூறறுணடுக்குப பினனன்றி முன வழஙகியதாகாமையானும, அனறி அது முனவழஙகிய தெனபதற்குக கி. பி. இரண்டாம நூறறுணடிறகு முற பட்ட தமிழ நூல்களிற சானறினமையானும அக கதையை நக்கீரா எழுதினரெனபதூஉம ஆகாது அதுவேயுமனறித், தலைச்சஙகம சசச0-ஆண்டு நடைபெறறதெனபதூஉம நமபறபாலதனறு; மககள வாழககையில் அத்துணை நீண்டகாலம் ஏதொனறும நடைபெறக் காணமையானும, அதறகுப பழையநூறறாண்டு ஏதும இனமையானும இந்நீண்டகால அளவைக் கற்பித்தது, ஒனறை ஆயிரமாகப் பெருக்கிப பொய்க்கும புராண காலத்தன்றி நக்கீரனுர் காலத்தாகாது. இஙஙனமே இடைச்சஙகத்தைப பறறிய வரலாறறினுளளும் அகத்தியனுர் பெயரும, அச் சஙகம் கூஎ00-ஆண்டிருந்த தென்னும நீண்ட காலவளவையுங்

காணப்படுதலானும் அதுவும் நக்கீரனர் எழுதியதாகாது. தலைச்சங்க வரலாற்றின்கண், அச் சங்கத்தை நடைபெறுவித்தார் ஒருவர்பின ஒருவராய் அரசுக்குவந்த பாண்டியர் எண்பத்தொன்பதின்ம ரென்பது குறிக்கப்பட்டிருக்கின்றது. உலகின்கண் ஆங்காங்கு அரசாண்ட அரசர்களின் தொகையையும், அவரரசுபுரிந்த ஆண்டுகளையுந் தனித்தனியே கூட்டிப், பின ஆண்டின தொகையை அரசரது தொகையால் வகுத்துப பார்க்க, ஒவ்வோர் அரசர்க்கும இருபது முதல் முப்பது ஆண்டுக்குமேல் ஆட்சிக்காலம் பெறபபடாமையை இஞ்ஞானறை வரலாறறு நூலாசிரியர்கள நன்காராய்ந்து முடிவுகட்டி யிருக்கினரர்கள. அமமுடிபொடு பொருந்த, ஒரு பாண்டிய அரசர்க்குக் குறைந்தது இருபதாணடு வைத்துக் கணக்குச் செய்யத் 'தலைச்சங்கம்' நடைபெற்ற காலம கஅ0-ஆண்டுகள ஆகுமே யல்லாமல், சசச0-ஆண்டுகள ஆகா. இங்ஙனமே 'இடைச்சங்கத்'தை நடைபெறுவித்த பாண்டியர் ஐம்பத்தொனபதின்மர் என்பதூஉம அவ் வரலாற்றின்கட் சொல்லபபட்டிருத்தலால், அவ் வைமபத் தொனபதின மருக்கும மொத்தமாய்ப பெறப்பட்ட கக0-ஆண்டுகளே இடைச்சங்கம் நடைபபெற்ற காலமாகும; ஆதலால், அது ஈஎ00-ஆண்டுகள் நடைபெற்ற தெனபதும் பிழைபாட்டுரையேயாம். ஆகவே, இவ்விரண்டு சங்கங்களின் வரலாறும் நக்கீரனர் எழுதியதாதல் செல்லாது.

இனிக், 'கடைச்சங்க' வரலாறும் நக்கீரனர் எழுதியதாகாது. என்னை? கடைச்சங்கம் நடைபெறுவித்த பாண்டி மன்னர் நாற்பத்தொனபதின்மர் என்பது குறிக்கப்பட்டிருத்தலானும, அந் நாற்பத்தொன்பதின்மர்க்கும ஈ0-ஆண்டுகளே பெறப்படுவதாயிருக்க, அது நடைபெற்ற காலம் கஅந0-ஆண்டுகளென்று வழுவுற வரையப்பட்டிருத்தலானு மெனபது. அதுவேயுமன்றி, 'அகத்தியம்' என்னும இலக்கணத்தைப் பற்றிய குறிப்பு, இறையனாரகப்பொருளுரையிலாதல் ஏனைக் கடைச்சங்க நூல்களினாதல் ஒரு சிறிதுங் காணப்படாதாக, இப் பாயிர வுரை

யிற் போந்த கடைச்சங்க வரலாற்றில் "அவர்க்கு நூல் அகத்தியமுந் தொல்காப்பியமும என்ப" என்பது குறிக்கபபட்டிருக்கினறது. 'அகத்தியம' கடைச்சங்க காலத்துப புலவர்பால் வழங்கிய துண்மையாயின், தொல் காப்பியச் சூததிரஙகள நககீரனரது உரையினகண் மிகுதி யாயப் பயினறு வருதல்போல், அகததியச சூத்திரஙகள் ஒருசிலவாயினும அதன்கட் காணபபடுதல் வேண்டும் அன்றே? அவவாறு ஒரு சிலவுங காணபபடாமையின், அகத்தியம் எனபதொனறு கடைச்சஙக காலத்திலும இல்லாமை திண்ணமாம; அங்ஙனமாகவும, அஃது அஞ ஞானறிருந்ததெனக் கூறும பொயவரலாறு நக்கீரனர் உரைத்ததாகாது. இனனுங, கடைச்சஙக காலதது புலவர்களாற் பாடபபட்டவை: "நெடுந்தொகை நானூறும (அகநானூறும), குறுந்தொகை நானூறும, நறறிணை நானூறும, புறநானூறும, ஐஙகுறுநூறும, பதிறறுப பத்தும, நூற்றைமபது கலியும, எழுபது பரிபாடலும, கூத்தும, வரியும, சிற்றிசையும, பேரிசையும எனறு இத தொடக்கத்தன" என்பது கடைசசஙக வரலாற்றிற் குறிக்கப்பட் டிருக்கினறது. இங்ஙனஙங குறிக்கபபட்டுளள நூல்களுள இதுகாறும வெளிப்போந்தவை யெல்லாம, ஒரோவொரு புலவரால் ஆக்கபபடாமற், பற்பல காலத் திருந்த புலவர் பறபலராற பற்பல பொழுதுகளிற் பாடப பட்ட பாக்களின தொகை நூல்களாயிருக்கக் காண் கினறோம. தலைச்சங்க காலத்திருந்த 'முரஞசியூர் முடிநாக ராயர்,' 'நெட்டிமையார்,' 'காரி கிழார்,' 'நெடுமபல்லியத்த னார்' முதலான நல்லிசைப் புலவர் பாடிய செயயுட்கள 'புறநானூற்'றின்கட் காணப்படுதலானும, 'பரிபாடற' பாட்டுகளிற் சொல்லபபட்டுளள திருமால் வணக்கத்தை ஆராயுங்கால் அப பாடல்களைப் பாடிய புலவர் பலருங கடைச்சஙக காலத்திறகு மிக முறபட்டவராதல் வேண்டு மென்பதை மேலே சசo-ஆம் பக்கத்திற் காட்டினமாக லானும, இவ்வாறே ஏனைத் தொகைநூல்களினுங கடைச் சங்க காலத்தவரல்லாத பண்டை நல்லிசைப் புலவர்தம் பாக்கள் விராய்க் காணப்படுதலானும் மேற்காட்டிய

தொகைநூல்க ளெல்லாங் கடைச்சங்கப புலவர்களாலேயே ஆக்கபபட்டனவெனபது பொருத்தமில் கூற்றும; இப பொருத்தமில் கூற்றைக் கடைச்சஙக காலத்திருந்த நக்கீரனர் எழுதினரெனறல் இசையாமையால், இது கொண்டும முச்சஙக வரலாறு நக்கீரனர் உரைத்ததன றெனபது பெறறும.

அறறேறல், நககீரனர வரைந்த பாயிரவுரையி னிடையே முசசஙக வரலாறு கூறும இப்பகுதி அவர் உரை யாததொனறுயின் ஆகுக; மற்று, இல்லாததொன்றை அஙஙனம உளளதுபோற் படைத்துப் பிறறொருவர் அதனை வழங்கவிட்டனரென்றல் யாஙஙனமெனின; ஙனறு கடாயினுய; முச்சஙக வரலாறு கிளகும அப பகுதி முற் றும பொயயாவது அனறு; அதனகண் மெயயாவன பலஉள: அவை யாவையெனிற காட்டுதும: முரஞ்சியூர் முடிநாகராயர் எனனும் நல்லிசைப புலவர் தலைச்சஙகத்தில் வீறறிருந்தாரெனனு முரை உணமையுரையேயாம. பாண் டவர ஐவாக்குந் துரியோதனன முதலிய நூற்றுவர்க்கும் நிகழந்த பாரதப போரில் முனைந்து நினற பாண்டவர் படைகளுப பெருஞசோறு வழஙகிய உதியஞசேரலாதன் என னுஞ சேரவேந்தனது ஈகைதிறத்தினை வியந்து அவனை முனனிலைப படுதது,

> "வலியுந் தெறலும் அளியும் உடையோய்!
> நின்கடற் பிறந்த ஞாயிறு பெயர்த்தும்நின்
> வெண்டலைப் புணரிக் குடகடற் குளிக்கும்
> யாணர் வைப்பின நன்னாட்டுப் பொருந!
> வான வரம்பனை நீயோ பெரும!
> அலங்குளைப் புரவி ஐவரோடு சினைஇ
> நிலந்தலைக் கொண்ட போலம்பூந் தும்பை
> ஈரைம்பதின்மரும் பொருதுகளத் தொழியப்
> பெருஞ்சோற்று மிதபதம் வரையாது கொடுத்தோய்!"

என்று அப் புலவர் பெருந்தகையாகிய முரஞ்சியூர் முடி நாகராயர் பாடிய "மண்டிணிந்த நிலனும்" என்னுஞ் செய்

யுள புறநானூற்றிற் கடவுள வாழ்த்துச் செய்யுளுக்குப் பினனே முதலதாக வைக்கப்பட்டிருக்கின்றது. அஃது அத்துணைப பழைய காலத்தே பாடபபட்ட செய்யுளாதல் நோககியே, பண்டிருந்த சானறோர் அதனை அந் நூலின முதறகட் பெயதுவைத்தா ரென்பது தெற்றென விளங்கும. பாரதபபோரில் நினற பாண்டவர் படைக்கு உதியஞ் சேரன் பெருஞசோறு வழஙகிய செயதி,

"உதியஞ் சேரல்,
பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை" (உகூ)

என்று அகநானூற்றினும,

"ஓரைவர் ஈரைம் பதின்மர் உடன்றெழுந்த
போரிற் பெருஞ்சோறு போற்றுது தான்அளித்த
சேரன் பொறையன மலியன திறம்பாடி." (ஊசல்வரி, உச)

என்று சிலப்பதிகாரத்தினும நனகெடுத்து மொழியபபட்டிருத்தலால், அஃது உண்மை வரலாறேயாதல் ஐயுற வினறித் துணியபபடும.

இனித், தலைச்சங்கம நடைபெற்ற காலத்தில் ஒருவர் பின னொருவராய அரசுபுரிந்த பாண்டி வேந்தர் எண்பத் தொனபதின்மரெனவும, இடைச்சங்கம நடைபெற்ற காலத்தில் அங்ஙனமே அரசுபுரிந்த பாண்டியர் ஐமபத்தொன் பதின்ம ரெனவும் அம முச்சஙக வரலாற்றிற் காணபபடுங் குறிபபுகள உண்மையாவனவேயாம. யாங்ஙனமெனிற் கூறுதும: மேலே கூறிய பாரதப்போர் இற்றைக்கு ஐயாயிர ஆண்டுகட்குமுன் நிகழந்ததாகும என்பதனை வைத்தியா ஸனனும அறிஞர் தாம எழுதிய 'மகாபாரத ஆராயசசி'[1] என்னும் நூலில் உயர்ந்த பல உண்மைச் சானறுகள் காட்டி நனகு விளக்கியிருக்கின்றனர். மாபாரதபபோர் நிகழந்தகாலம கிறித்து பிறபபதற்குமுன் கூ-ஆம்

1. 'The Mahabharata, a Criticism' by Mr. C. V. Vaidya, M.A., LL.B.; see also his article on 'The Date of the Bharata Fight' in The Students' Brotherhood Quarterly, vol. VII, No. 4, Bombay.

ஆண்டில் நிகழ்ந்ததாகு மெனத் 'தத்தருமம்' ககசுசு-ஆம ஆணடில் என 'வேலங்டைக் கோபால ஐயரும்' புகன்றவை பொருந்தாவாயப பிழைபடுதலும, சதபதபிராமணமானது கி. மு. உருoo-ஆம ஆணடில் அஃதாவது இற்றைக்கு நாலாயிரத்து நானூறு ஆணடுகட்குமுன இயறறப்பட்ட தொனறுகுமென றும பாலகங்காதர திலகர் பெரிது ஆராய்ந்து நிறுவிய கொளகையே பொருத்தமாதலும[1] அவரால் நன காராய்ந்து காட்டபபட்டிருகின றன. அவ் வாராயச்சிக ளெல்லாம ாணடெடுதது காட்டலுறின் இது மிக விரியும; ஆகலான் அவறறை அந் நூலகளிற கணடுகொளக. இங்கே, அம முடிபு தமிழ முசசங்க வரலாற்றுட் காணப படுங காலககணகோடு ஒதது நோக்குதலே யாங காட்டுதறகு உரித்தாவதாம. தலைச்சங்கம நடைபெறத் துவங்கிய காலமமுதல் அதன் ாறுவரையில அகு பாண்டியர்கள அரசாண்டன ரெனபதனால் அதன முழுககால வெல்லை களஅo-ஆண்டுகளாகும; இடைசசங்கம நடைபெறற காலத்தில் நுகு பாண்டியர்கள இருந்தன ரெனபதனால் அதன முழுக்காலவெலலை ககஅo-ஆணடுகளாகும; கடைச்சங்க காலத்தில் சகு பாணடியர்கள இருநதமை நுவலபபடுதலால் அதன் முழுக் காலவெல்லை கூஅo-ஆண்டுகளாகும்; ஆகத தமிழ முச்சங்கமும் நடைபெற்ற மொத்தக் காலம கூகுசo-ஆண்டுகளாதல் இனிது பெறப படும. இனிக், கடைசசங்கம கி. பி. உ-ஆம நூறறாணடில் முடிவடைந்ததெனபதை மேலே விளகக காட்டினம மாதலால், முச்சங்ககால மொத்தததொகையில் உoo-ஆண்டுகள கழிக்கக், கிறித்து பிறபபதறகு கூஎசo-ஆண்டுகட்கு முனனர்த்தான தலைசசங்கந் துவங்கியதென்பது தெளியப படும. மற்றுத், தலைச்சங்கம களஅo-ஆண்டுகள நடை பெற்றுக், குமரிநாடு கடல்கொண்ட காலத்தில் அதறகுத் தலைநகராகிய தென்மதுரையும் அழிந்துபட்டமையால், அதன்கண் நடைபெற்ற அத் தலைச்சங்கமும அழிந்து பட்டது; எனவே, அத் தமிழச்சங்க முடிவுங குமரிநாடு கடல்கொணட காலமுஞ சிறிதேறக்குறையக் கி. மு.

1. The Artic Home in the Vedas, p. 387.

உ000-த்தில் அஃதாவது இற்றைக்கு ச000-ஆண்டுகட்கு முன் நிகழ்ந்தனவாமெனபதுதானே போதரும. மநு வெனபவர் காலத்து நிகழ்ந்த கடல்கோள ஒனறு சதபத பிராமணத்தினகண் (க, அ, கக-கo) நுவலபபட்டிருக்கின றது. அதனால், அக் கடல்கோளநிகழச்சியினைக் கூறுஞ சதபதபிராமணப்பகுதி, இறறைக்கு நாலாயிர ஆணடு கட்குமுன அக் கடல்கோளை யடுத்துச் செயயபபட்டதாகல் வேண்டுமென்பது நன்கு பெறபபடும. பாபிலோனியர் என்னும மிகப பழைய மககள வழஙகிய இக் கடலகோள வரலாறு கி மு. உ000-ஆம ஆண்டில் அவர்களாற செதுக் கபபட்ட கல்வெட்டு ஒனறிற் சொல்லபபடுதலாலும,[1] யூதவேதததின முதலாகமத்திற குறிகபபட்ட உலகத் தோற்றத்திறகுப்பின கசுருசு - ஆண்டுகள கழிதது அஃதாவது உருசச-ஆம ஆண்டில் அக் கடல்கோள நிகழ்ந்ததெனறு யூத நூலாசிரியர்கள கணக்கிட்டிருத்த லாலும,[2] குமரிநாடு முதனமுதற கடலால் விழுஙகப பட்டது இறறைக்கு நாலாயிர ஆண்டுகட்கு முனவென் பது துணியப்படும. தனித்தனி வெவவேறிடஙகளில் இருந்த தமிழர், ஆரியர், பாபிலோனியர், யூதா எனனும பழைய பல்வேறு மக்கட்பிரிவினர் அதறகுக் கூறுங காலக் கணகபெரிதும ஒத்திருத்தல்கொணடு, அக் கடல் கோள நாலாயிர ஆண்டுகட்குமுன நிகழ்ந்தமை ஒருவாற றனும ஐயுறறபாலதனறும. இஙஙனமாகத், தமிழா அல்லாத ஏனைப பழையமக்கள மொழிந்த கடல்கோட் காலக்கணக்கொடு, தமிழ முச்சஙகம நடாதத்திய பாண்டி வேந்தரின் காலக்கணகபெருமபாலும ஒத்திருத் தலின, இறையனாரகப்பொருள உரைப பாயிரவுரையில் தலைச்சஙகம நடாத்திய பாண்டிமன்னர் எண்பத் தொனபமதினமெனவும, இடைசசஙகம நடாத்திய பாண்டி மன்னர் ஐமபத்தொனபதினமெனவும, கடைச் சஙகம நடாத்திய பாண்டிமன்னர் நாறபத்தொன்பதினம

1. See Dr, H. E. Ryle's Commentary on Genesis, p. 118.
2. do do Introduction, p. xxxvi.

ரெனவும் மொழிந்த வரலாற்றுரை உண்மையுரையே யாதல் கடைப்பிடித்துக்கொளக.

அற்றாயினும, சதபத பிராமணத்திற சொல்லப்பட்ட கடல்கோள தென்னாட்டின்கண் நிகழ்ந்ததென்று அதன் கட் கூறப்படாமையானும், அதனை ஆராய்ந்த 'பால கங்காதர திலகர்' அது வடதுருவத்தின்கண்ணே நிகழ்ந்த தாகல்வேண்டுமெனக் கூறுதலானும், அது குமரிநாட் டைக் கொண்ட கடல்கோளே என்பதற்குச் சானறென்னை யெனிற் கூறுதும; சதபதபிராமணம் அக் கடல்கோள இன்ன இடத்தில் நிகழ்ந்ததென்று உரைத்திலதேனும, அதறகுப் பின்வந்த புராணங்களில் மிகப பழைதாகிய மாசபுராணம் (க, கஉ), அக் கடல்கோளில் தொடர்புறற மநு எனபவர் மலயம் என்னும் மலைமேல் தவம்புரிந்து கொண்டிருந்தார் எனறு நுவலுதலானும, சதபதபிரா மண மற்ச புராணங்களிற போந்த அச் சுருக்க வரலாறு களுக்கு விரிவுரைபோற றோன்றிய பாகவதபுராணமானது (அ, உச, எ), தமிழநாட்டில் ஓடுங் கிருதமாலை எனனும ஆற்றங்கரையில் தமிழர்க்கு அரசனன சத்தியவிரதன் என் பான தவஞ செயதுகொண்டிருந்த காலையில், அங்கு மீன் வடிவில்வந்த ஒரு தெயவம அவறகு அங்கு நிகழபோகுங கடல்கோளினை முன அறிவித்து, அறிவித்தவாறே அது நிகழலானபொழுது, அங்குப் போந்த மரகதலம் ஒனறில் அவனையும் அவனுடனிருந்தார் சிலரையும் ஏற்றுவித்து, வெளளத்தில் அம மரக்கலத்தை இழுத்துக்கொண்டு போய அவர்தமமையெல்லாந் தப்புவித்த வரலாறறினை விரித்துரைத்தலானும், 'மலயம' எனனும பொதியமலை யிருந்த குமரி நாட்டிலேயே அக் கடல்கோள் நிகழ்ந்தமை நனகு துணியபபடும. அத் தமிழநாட்டு மன்னனன 'சத் தியவிரதன்' (இப் பெயர் அவனுக்குரிய பழைய தமிழ்ப் பெயரை மொழிபெயர்த்த வடமொழிப பெயராகும) என் பான இறைவனறை பாதுகாக்கபபட்டு அக் கடல்கோளுக் குத் தபபிக், கடல்கொண்ட குமரிநாட்டுக்கு வடக்கிருந்த தாகிய இத் தமிழ்நாட்டில் வந்து சேர்ந்து, கடல்நீராற் கவரப்பட்ட தமிழநான்மறைப பொருளகளைப பெயர்த்

தும வழங்கச்செயது, நாகரிகததை நிலைநாட்டினை. இங்ஙனம போந்த இவவுணமை வரலாறுகள கொண்டு, சதபதபிராமணத்திற குறிக்கபபட்ட கடல்கோள பணடைத் தமிழநாடாகிய குமரிநாட்டினகண நிகழந்ததேயாகுமென்பது தெளளிதிற புலபபடுதலால், ஏதொருசானறும இன்றி அது வடதுருவத்தில் நிகழந்ததாகுமென மொழிந்த பாலகங்காதர திலகருரை கொள்ளற்பால தனறென விடுக்க.

இனிச், சதபதபிராமணமானது குருகுல பாஞ்சால குல மன்னர்க்குரிய தேயம இதுவெனக் குறித்துரைபபதோடு, ஜனமேஜயன் குருகுலவேந்தனதலும,[1] சுருதசேனன உக்கிரசேனன வீமசேனன முதலியோர் அருச்சுனனறன பேரறகுமக்களாய ஜனமேஜயனுக்கு உடன்பிறந்தோராதலும[2] தெரித்தோதுகினறது எனவே, சதபதபிராமணம மாபாரதப்போர நடந்தேறியபிற பல நூறறாண்டுகள கழித்து இயறறப்பட்ட நூலாதலும நனகு தெளியபபடும. சதபதபிராமணப் பகுதிகள சில கி. மு. உகூ00-ஆம ஆணடிற்குப பின இயற்றபபட்டதாதல் செல்லாமையாற், குமரிநாடு கடல்வாயபபுக்கது கி. மு. உசூ00 இலும, பாரதப்போர் நிகழந்தது கி. மு. நூ000 - இலும எனறு கோடலே சாலப பொருத்தமாம. மறறுத், தலைச்சஙகமோ அக கடல்கோளுககு முன கஎஅ0-ஆணடுகள நடைபெறற தெனபதனை மேலே விளககிக் காடடினமாதலால், அத் தலைசசஙகப புலவருள ஒருவரான முரஞ்சியூர் முடிநாகராயர், பாரதப் போரில் நினற பாண்டவர் படைகளுச் சோறு வழஙகிய உதியஞ்சேரலை முன்னிலைப படுத்துப பாடியிருத்தல் கொண்டு, அப் பாரதப்போர் நிகழந்த கி. மு. நூகoக-இல் அஃதாவது இறறைக்கு ஐயாயிர ஆணடுகட்குமுன, அஃதாவது தலைச்சஙக நடுக்கால எல்லையில் அவர் இருந்தவராவ ரென்பது துணியப்

1. Prof. A. A. Macdonell's Sanscrit Literature, p. 213.

2 Mr. C. V. Vaidya's The Mahabharata, A Criticism, pp. 69, 70.

படும். இங்ஙனமாக, இறையனாரகப பொருள உரைப் பாயிரத்தின முச்சங்க வரலாற்றிற குறிக்கபபட்ட பாண்டி வேநதரது தொகையும், தலைச்சங்கத்தில் முரஞ்சியூர் முடி நாகராய ரென்பாரொரு பெரும்புலவர் இருந்தரெனப போந்த உணமையும, வடநூற சானறுகளோடும ஏனைப பாபிலோனியர் யூதர் எனனும பிறநாட்டார் வரைந்து வைதிருகும் வரலாறுகளோடும முழுதொத்து நிற்கக் காணடலின, அவை தொனறுதொட்டு வந்த மெய வரலாறுகளாதல் துணியற பாறறும என்பது.

இனித தலைச்சங்கத்தார்கு நூல் 'அகத்தியம்' எனறும, இடைச்சங்கத்தார்க்கு நூல் "அகத்தியமும் தொல்காபபியமும மாபுராணமும இசைநுணுகக மும பூத புராணமும என இவை" எனறும போந்த உரையில், 'அகத் தியம' தலைச்சங்க நூலென்றதூஉம, 'தொல்காபபியம' இடைச்சங்க நூலெனறதூஉம உண்மையாகா. 'அகத் தியம' எனறொரு நூல் பண்டைக்காலத்தில் இருந்ததில்லை யெனபதை முனரைரே காடடினும மறறும் 'தொல்காப பியமோ, குமரிகாடு கடல்கொளளபபடுமுன ஆக்கபபட்ட நூலெனபது னம்மாரனர் கூறிய சிறபபுப பாயிரத்தானும, அதற்கு 'இளமபூரணர' உரைதத உரையானும் தெளியப் படுதலின, அது தலைசசங்ககாலத் தெழுந்த நூலேயாகு மல்லாமல் இடைசசங்ககாலத்த தாகாது.

அறறேல், தொல்காப்பியத்திற்குப பாயிரஞ செயத னம்மாரனர் "பல்புகழ நிறுத்த படிமை யோனே" எனறு ஆசிரியர் தொல்காபபியனரைத் தவவொழுககத்திலராக வைத்து உயர்த்துக் கூறுதலானும, 'படிமை' எனனுஞ சொல் 'தவ வொழுக்கத்தினை' யுணர்த்துதல் சமண மதத் தவர் நூல்களிலனறி அவற்றிற்கு முறபட்ட வடமொழி தெனமொழி நூல்களிற் காணப்படாமையின் அச் சொல் லால் உயர்த்துரைக்கபபட்ட தொல்காபபியனர் சமண மதத்திற்கு உரியவரேயாதல் அதனாற் போதரலானும, சமண்நூலார் உயிர்த் தொகைகளை ஓரறிவு முதல் ஐயறிவு ஈறுகப பகுத்து அவ்வவவகையுள அவற்றை

வைத்து அடக்குமாறுபோலவே தொல்காப்பியனரும் 'மரபியலில்' உயிர்த்தொகைகளை ஒன்றுமுதல் ஆறு அறிவுள்ளருகப பகுத்து அவ்வகைகளுள வைத்து அவை தம்மை அடக்கிக்கூறுதல் கொண்டு அவர் சமண்மதத் தினரென்பதற்கு மற்றுமொரு சான்று பெறப்படுதலானும் அவர் சமணமதத்தினரேயாவர் என்பர் ஒரு சாரார்.[1] வடமொழி இலக்கண ஆசிரியரான பாணினி என்பவரும் 'ஐந்திரவியாகரணத்தைச' செய்த 'இந்திரன்' எனனும் ஆசிரியரும் கி. மு. கூ00-ஆம் ஆண்டில் இருந்த ஒரே காலத்தவராயினும், தொல்காப்பியனர் ஐந்திர வியாகர ணத்தையே விரும்பிக் கற்றவராகலின, அவரை "ஐந்திர நிறைந்த தொல்காப்பியன்" எனறு பனம்பாரனர் ஓதினர்; ஓதவே, தொல்காப்பியனர் காலம கி. மு. மூன்றும நூற்றாண்டிறகுப பிறப்பட்டதாதல் பெறப்படும எனபா பிறிதொருசாரார்.[2] இவவா றுரைப்பவரே பிறிதோ ரிடத்தில், தொல்காப்பியம கி மு. நான்காம நூறறாண் டிறகுப பிறப்பட்டதாகாது[3] என முனனெடுபின முரண உரை நிகழத்தினா பினனும ஒருசாரார, இலங்கைத் தீவின வரலாற்றில்[4] முதற கடல்கோள கி. மு உகூஅள-இலும, இரண்டாங கடலகோள பாண்டுவாசன அரசு புரிந்த கி. மு. நிoச-இலும, மூன்றுவதாளாறு கி. மு. கூoசு-இலும நிகழ்ந்தமை குறிக்கப்பட்டிருத்தலின, இறையனரகபொருட் பாயிரவுரையிற சொல்லப்பட்ட கடல்கோளாக கி. மு. மூன்றும நூறாண்டில் நிகழ்ந்த மூன்றாங கடல்கோளாகவைத்துத் 'தொல்காப்பியம்' அக் கடல் கோளுக்குச் சிறிது முன்னோ செய்யப்பட்ட தென்னும, கி. மு. நானகாம நூறாண்டில் இந்தியநாட்டினமேற படை

---

1. செந்தமிழ், தொகுதி கஅ, பகுதி க; தொகுதி கக, பகுதி ச.

2. 'Dravidian India' by Mr. T. R. Sesha Iyengar, M. A., pp. 158, 159

3. Ibid, p. 170.

4. Tennent's History of Ceylon; See also P. Arunachalam's Sketches of Ceylon History, pp. 8, 9.

யெடுத்து வந்த கிரேக்க அரசனை அலெக்சாந்தருடன் போந்த கிரேகக வானநூலாசிரியர் கொணர்ந்த 'ஹோரா' என்னுங் கிரேக்கமொழியைத் தொல்காபபியனர் 'ஓரை' எனத திரித்துத் தமது நூலுள வழங்குதலே அவர் கி. மு. மூன்றும நூற்றாண்டில் இருந்தாரெனபதறகுப பினனும ஒரு சான்றுமெனவும உரையாசிறபர்.[1] மறறும ஒருசாரார், கிறித்துபிறந்த முதல்நூற்றாண்டாகிய அத்துணைப பழையகாலத்தில் தமிழமொழி அத்துணை ஒழுங்கான தோர் உயர்ந்த நிலையை அடைந்திருததல் நமபறபால தனறெனத் தஙகருத்து உரைத்துப, பாண்டிமனனர் வழஙகிய 'வட்டெழுத்துகளை' எனபன அசோகமனனன வழஙகிய 'பிராமி எழுத்துக்களினினறே வந்தனவாகல்வேண்டுமாதலானும, 'பிராமி' எழுத்துகளால் ஆக்கப்பட்ட கல்வெட்டுகள கி. மு இரண்டாம நூறறாண்டுகளு முறபட்டனஅனமையால் வட்டெழுத்துக்கள தோனறியபினனரனறித் தமிழமொழி எழுதறகு அடைந்திருத்தல் ஏலாமையானும தொல்காபபியம கி. பி. இரண்டாம நூறறாண்டில் இயறறபபட்டதாகுமெனறு கோடலே பொருத்தமாம என்பர். கி. மு. இரண்டாம நூற்றாண்டிலிருந்து கி. பி. எட்டாம நூறறாண்டுவரையிற் சென்ற ஆயிர ஆண்டுகளில் வட்டெழுத்தாற் செதுக்கபபட்ட ஒரு கல்வெட்டுத்தானும் தமிழநாட்டின்கட் காணபபடாமையின், கி. பி எட்டாம நூறறாண்டிறகுமுன தமிழமொழி ஓர் ஒழுங்குபெறற நிலையை எய்தவில்லை யெனபதே திண்ணமாம எனவும இனனும் உரையாசிறபர்.[2] பின்னும ஒரு பார்ப்பனர், கி. பி. ஏழாம நூற்றாண்டில் தொல்காபபியம இயற்றப்பட்டதென நாட்டுவானபுகுந்து, சிலப்பதிகாரத்திற்,

> "புண்ணிய சரவணம் பொருந்துவி ராயின்
> விண்ணவர் கோமான் விழுநூல் எய்துவிர்."
>
> (கக, கூஅ-கூக)

எனவும,

---

1. Studies in S. Indian Jainism, pp. 38, 39.

2 Studies in South Indian Jainism by Mr. M. S Ramaswami Ayyangar, M.A., pp. 168—171.

"கப்பத் திந்திரன் காட்டிய நூலின்
மெய்ப்பாட் டியற்கையின விளங்கக் காணுய்."
(கக, கஙிச-கஙிஙி)

எனவும போந்த அடிகளிற குறிபபிடப்பட்டது 'பத்ரபாகு' எனனுஞ சமண் முனிவராற செயயபபட்ட 'கல்பசூத்திரமே' யாகுமென்றும, இக கல்பசூத்திரமானது 'ஐந்திரம,' 'ஜைநேந்திரம' எனனும பெயர்களால் வழஙகபபடுவதா மெனறும, இதனக கடைமுறையாக வெளியிடட 'பூஜய பாதர்' எனனுந் தேவநந்தியின மாணாககரான 'வஜ்ரநந்தி' என்பவர் கி. பி. சசo-இல் மதுரையினகண ஒரு திராவிட சஙகம நிலைநிறுத்தினராகலின அச் சஙகத்தாருள ஒருவ ரான தொல்காபபியர் சமண்முனிவரே யாகல் வேண்டு மெனறும, சமண்முனிவராகிய தொல்காபபியர் உணர்ந் தது பத்ரபாகு இயறறிய கல்பசூதிரமாகிய ஜைநேந்திரமே யாகல்வேண்டுமெனறும, இவவாறருல் தொல்காபபியர் கி. பி. சுஙிo-ஆம ஆண்டளவில் இருந்தாராகற பால ரெனறும மொழிந்திட்டார்.[1] இஙஙனமாகப, பார்பபரும அவர் வழிச்சார்ந்தார் ஏனைச்சிலரும ஒருவர்பின ஒருவ ராய எழுந்து, தமிழக்குந் தமிழர்களும இயற்கையாயுள ள தனிபபெருஞ சிறபபினையும பழைய நாகரிகததினையுங குறைத்து விடுதறகும, தமபால் வந்து கலந்த ஆரியரது கூட்டுறவினலேயே தமிழா ஓராயிர ஆண்டுகளாகத்தான் சிறிது நாகரிகம எயதி வருகினறார்களெனறு காட்டுதற்கும உண்மையல்லா தவைகளை உணமைபோல் எழுதித் தமிழ மக்களை இழித்துபபேசி வருகினறார் தமிழரில் ஆராய்ச்சி யுணர்வு வாயாதார் எல்லாம் பார்ப்பனர் உரைக்கும் இப பொயயுரைகளிற சிகழுணடு, தாமும அவர்க்குத் துணையாய் நினறு தமமினத்தவரை வேரறுக்குங கருவியாய அவர்க்குப பயனறந்து வருகினறாரானெனின; அவர்தம பெறறி எவ்வாறாயினும ஆகுக. ஒபபுயர்வில் லாத் தொல்காபபிய நூலின் உண்மைப பழமையைக் குறைப்பான் புகுந்த இப பார்ப்பன ருரைகள அத்தனையும்

1. See the 'Hindu' for the 4th April, 1925.

பொய்யுரைகளாதலே முறையே வகுத்தாராயந்து காட்டுவாம:

தொல்காப்பியத்திறகுப் பாயிரச்செயயுள உரைதத பனமபாரனார் "பல்புகழ் நிறுத்த படிமை யோனே" என பதில் தொல்காபபியனுரைப் 'படிமையோன' என்று கூறினமையானும, 'படிமை' என்னுஞ் சொல் சமண்நூல்களிலனறி வேறு வடமொழி தெனமொழிப பழைய நூல்களில் தவவொழுக்கத்திற்குப் பெயராய் வழஙகாமையானுந் தொல்காப்பியர் சமணரேயாதல் வேண்டுமென்னுர் கூறறை முதறகண் ஆராயவாம. 'படிமை' எனனுஞ சொல் 'பரதிமா' எனனும வடசொல்லின் திரிபாகுமென்பது எல்லார்ககும உடனபாடாம; இது 'படிவம்' எனவுந் தமிழிற றிரிந்து வழஙகும "மேவிய சிறப்பின ஏனோர் படிமைய" என்னுஞ சூத்திரவுரையில் (தொல்காபபியம, பொருள, கூ0), உரையாசிரியர் இளமபூரணர், "'படிமை' என பது 'பரதிமா' என்னும வடமொழித்திரிபு; அது தேவாக்கு ஒபபுமையாக நிலத்தினகட் செயது அமைத்த தேவர் மேல் வந்தது" என்று உரை கூறியவாறறுல் இச்சொலலின் உண்மை தெளியப்படும. படவே, 'படிமை' எனபது கடவுளர்ககுப பிரதியாக அஃதாவது கடவுளரையொபப அமைதத வடிவஙகளே உணர்த்துதல் பெறறும. பெறவே, இச் சொல் முதலில் ஒரு தெயவத்தோடு ஒத்த வடிவத்தையும, பினனர்த் தெயவவடிவம போல்வாராகிய அருந்தவத்தோரையும, அதனபின் அவவருந்தவத்தோர்க்குரிய தவவொழுக்கத்தையும் உணர்த்துதலும பெற்றும

"பாரோர் காணுப் பலர்தொழு படிமையன்"

(சிலப்பதிகாரம், கசு, கசுஅ)

எனபுழி அச்சொல் தெயவ வடிவத்தினையும,

"கூறினே பெருமனின் படிமை யானே"

(பதிற்றுப்பத்து, எச, உஅ)

எனபுழி அது தெய்வ வடிவத்தோடொத்த தவவொழுக்கத்தினையும,

"இஃதிவர் படிவம் ஆயின்." (புறநானூறு, 158)

எனப்புழித் தவவொழுக்கத்தின பாலதாகா நோனபினையும,

"தண்டொடு பிடித்த தாழ்கமண் டலத்துப்
படிவ வுண்டிப் பார்ப்பன மகனே." (குறுந்தொகை, 135)

எனப்புழித் துறந்த பாரபபலரின தவவொழுகத்தினையும அஃதுணாதது தல் காணக. "கல்தோயத்து உடுத்த படிவப பார்பபான" என்னும முல்லைபபாட்டின 1-ஆம அடியினுல் அந்தணரிற காவியாடை யுடுத்தாரின தவ வடிவதைதப படிவம எனனுஞசொல் உணாத்துதலும நனகு விளங்காகிறகும. மேறகாட்டிய குறுந்தொகைச் செயயுளால் அவ வந்தணத துறவோா முககோலுந் தண்ணீாக்கரகமுங கைககொணடிருபப ரெனபதூஉம இனிது புலனும. நெய்தல் நிலம் பாடிய போந்த,

"எறித்தரு கதிர்தாங்கி ஏந்திய குடைநீழல்
உறித்தாழ்ந்த கரகமும் உரைசான்ற முக்கோலும்
நெறிப்படச் சுவல்அசைஇ வேறோரா நெஞ்சத்துக்
குறிப்பேவல் செயன்மாலைக் கொள்ளாடை அந்தணீர்!"
(பாலைக்கலி, 4)

எனபதனுலும பணடைக காலத்துத் தணடமிழ நாட்டு அந்தணரில் துறவொழுககத்தின பாலராய ரினரூா தவ வடிவம நனகெடுத்து மொழிந்திடபபட்டமை காணக. ஆரியர் தொல்காபபியனுந் தமதுகாலத்திருந்த அந் தணர்களுரிய வடிவங கூறுகினறுழி,

"நூலே கரகம் முக்கோல மணையே
ஆயுங் காலை அந்தணர்க் குரிய." (மரபியல், 80)

எனறு ஓதுதலால், அக்காலத்து அந்தணரில் இல்லறத் தாருங்கூடத் தவவடிவங கைக்கொண் டிருபபரெனபது பெற்றும.

பெறவே, அக்காலை அந்தணர் கொண்ட தவவடிவம அப்பெற்றித்தாயது எனனையென்பது ஆராயற்பாற்று.

பண்டைத் தமிழமக்கள காணவுங் கருதவுமபடாத முழு முதற கடவுளைக் காணவுங் கருதவும் எளிதாமபடி தம்மை யொத்த ஒரு மக்கள வடிவில்வைத்து வழிபடலாயினர். அங்ஙனாம மக்கள வடிவில் வைத்து அவனை வழிபடினும், அவன மக்களுள ஒருவனும போலுமெனத் தம்மனோர் மயங்கிவிடாமைப பொருட்டு, உலகத்தோற்றத்திற கட் புலனும் விழுப்பொருளகளையே அவனறன் திருவுருவத் திறகுப பல்வேறு உறுபபுகளாக்கினர். உலகத்தில் நடை பெறும ஒழுக்கஙகளெல்லாம ஒளியுடைப பொருளகளின உதவியால் நடைபெறக் காண்டலின, அவ வொளியுடைப் பொருளகளை அப பெருமானுக்குக கண்களாகக கருதினர். உலகின்கட்காணபபடும ஒளியுடைப் பொருளகள்: ஞாயிறு, திங்கள, தீ எனனும மூனறுமேயாம; ஆகவே, சிவபிரா னுக்கு ஞாயிறு வலக்கண்ணாகவும், திஙகள இடகக்கணணாக வும், தீ நெறறிக் கணணாகவுங கொளளப்பட்டன. இம மூன றொளியுடைப பொருள்களும இறைவனுக்கு மூனறு கண்கள போல் விளஙகுவதோடு, அருளொளியினாலகிய அவனுக்குத் திருமேனி போலவும பொலிதலால் அம மூனறும் அவ் வொப்புமை பறறி அம முழுமுதற கடவு ளாகவே வைத்து வணங்குதலும, வாழத்துதலுஞ செய் யப்படும இதுபற்றியே ஆசிரியர் தொல்காபபியனார்,

"கொடிநிலை கந்தழி வள்ளி யென்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றுங்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே"

(புறத்திணை இயல், சுசு)

என ஓதினர். இச் சூத்திரத்திற்கு இளம்பூரணர் மெய் யுரை கண்டிலர். நச்சினார்க்கினியர் 'கொடிநிலை' என்ப தற்கு 'வெஞ்சுடர் மண்டிலம' எனவும, 'வளளி' என்பதற் குத் 'தண்கதிர் மண்டிலம' எனவும் மெயயுரை கண்டு மொழிந்தனரேனுங, 'கந்தழி' எனபதற்கு 'ஒருபறறுக்கோ டினறி அருவாகித் தானே நிற்குந் தத்துவங் கடந்த பொருள' என்று ஒருவாற்றுற் பொருந்தாவுரை கூறினர். 'கந்தழி' என்பது முழுமுதற் கடவுளை மட்டுமே உணர்த்

துவதாயின் அவா அதற்குக் கூறியவுரை பொருந்து வதேயாம். மற்றுக், கொடிநிலை, கந்தழி, வள்ளி எனனும மூன்றனை வாழத்தும வாழத்துரையுங கடவுள வாழத்தோ டொபபக் கருதுமாறு வரும எனறு ஆசிரியர் தொல்காப பியனார் மேறகாட்டிய சூத்திரத்தில் அருளிச்செய்தலின, அம மூனறும முழுமுதற கடவுளாகா என்பது ஆசிரியர் கருத்தாதல் பெற்றும. பெறவே, முழுமுதற கடவுளாகாமல் முழுமுதற கடவுளோடு ஒருபுடையொப்பக் கருதபபடுங 'கந்தழி' எனபதற்கு, 'முழுமுதறகடவு ளிலக்கணமாகிய ஒருபறறுகோ டினறி அருவாகித் தானே நிறகுந் தத்து வங்கடந்த பொருள' எனபதனை ஏறறுதல் ஆசிரியா கருத்தறிந்த உரையாகாமையுந் தெறறென விளங்கும அறறேறல், மறறெனனை அதறகு மெயயுரையெனிற கூறறுதும: 'கந்தழி' எனறது 'தீபபிழமபினையே' யாம; அஃது அபபொருள தருமாறு யாஙஙனமெனிற; 'கந்து' எனனுஞசொல் 'பற்றுக் கோடு' எனனும் பொருட்டாதல், "மறங கந்து ஆக நல்லமர் வீழந்த" (புறநானூறு, கூஉ) எனபதனாலும அதனுரையாலும அறியப்படும. 'அழி' எனபது அழிபபது; எனவே, 'கந்தழி' எனபது 'தான் கொணட பறறுக்கோட்டினை தானே அழிபபது' எனறு பொருடருவதாகும். இனித், தீயானது தான்பறறிய விறகினையுந், திரி நெயயினையும அழித்துவிடுதல் எவரும அறிந்ததேயாம. அதனறு, 'கந்தழி' எனபது தீபபிழமபே யாயிற்று. மேலும, ஞாயிறு திஙகள என்னும இரண்டு ஒளியுடைப பொருளகளோடு இயைபுடையது அனற பிழமபே யல்லது பிறிதினமையின, 'கந்தழி' எனபதறகு அவ விரண்டோடு இயைபு சிறிதுமிலலா வேறுபொருள உரைத்தல் ஆசிரியர் கருத்துக்கு முற்றும முரணுமெனக.

அறறுயின, ஞாயிறு தீ திஙகள எனனும வெளிப படைச் சொற்களாற கிளவாமற, கொடிநிலை கந்தழி வளளி என்னுந் திரிசொற்களால் ஆசிரியன அவற்றைக் கிளந்தது என்னையெனின்; ஞாயிறு தீ திங்கள எனனுஞ் சொற்கள கறறுர் முதற் கல்லாதார் ாருன எல்லாராலும் வழங்கப்

படுதலின, அச் சொற்கள ஒளியுடைய அப் பொருளகளின் கடவுட்டனமையினை நிலைவுறுத்தமாட்டா. ஆகலான், அருளொளி யுருவினனுகிய இறைவன் அவ் வொளியுடைப் பொருளகளைத் தனக்குத் திருமேனியாகக் கொண்டு அவறறின்கண விளங்கித் தோன்றி எல்லா உயிரகளின் அறிவையும மறைக்கும புறவிருள அகவிருள இரண்டனையும ஓட்டி அவைதமக்கு அவ வறிவை விளங்கச் செயதல் குறித்து, அம் மூனறுங கடவுட்டனமை யுடையவாதல் தெரிபபார் அவைதமமைக் கொடிநிலை கந்தழி வளளியென்னும பெயர்களாற்சிறந்தெடுத்துக் கூறினர். அற்றேல், அச் சொறகள கடவுட்டன்மையினைக் குறிக்குமாறு யாஙஙனமெனிற காட்டுதும: 'கொடிநிலை' என்னும இருமொழித் தொடரிற 'கொடி' எனபது கிழகுத் திசையினையுணர்த்துதல்,

> "பொய்தீர் உலகம் எடுத்த கொடி மிசை
> மையறு மண்டிலம் வேட்டனள்." (கலித்தொகை, கசக)

எனறு உரைகாரா நச்சினர்கினியா ஆண்டெடுத்துக் காட்டிய செயயுளால் நன்கு விளஙகும விளஙகவே, கிழத்திசைக்கண்ணே வந்து நிறகுங் கதிரொளியை அஃதுணர்த்துதல் புலனும. திஙகளும இல்லாத இரவின் எல்லையெலலாங கண்ணெளியை மறைத்த இருளால் அறிவொளியும மறைபட்டு அயர்ந்துறஙகிய உயிர்த்தொகைகள அத்தனையுங், கிழக்கினகட் கதிரொளி வந்து நிலை பெற்ற அளவானே தங கண்ணெளியுங கருத்தொளியும் ஒருஙகு விளஙகபபெற்று முயறசி யுடையவாதல் கண்டாமனறே. இங்ஙனமாக உயிர்ப பன்மைகளின் அறிவும் முயற்சியும் விளங்கி நடைபெறுதற்குக் கிழத்திசைக்கண் எழுந்து நிலையும ஞாயிறு ஏதுவாதலின அக் கிழத்திசைக் கதிரொளி கடவுட்டனமை யுடையதென்பது அறிவுறுத்துதற்கே அதற்குக் 'கொடிநிலை' என்னுஞ் சொல்லைப் பேரறிவு மிக்க ஆசிரியன வழங்குவானுயினன். ஞாயிறு என்னும வழக்குச்சொல் கீழத்திசை மேற்றிசை இரண்டினும் நிற்குங் கதிரொளிக்குப் பொதுப்பெயராகலானும்,

மேற்றிசைச்செனற ஞாயிறு விரைவில் மறைந்து புறவிருள அகவிருளகளை வருவித்தலின அது கடவுட்டனமை யுடைய தாகாமையானுங, கடவுட்டனமை யுடையதென வைத்து வாழத்துதறகு ஏறபுடையது கீழத்திசை ஞாயிறே யெனபதனை வலியுறுதுவானவேண்டி அப் பொருள பயகருங 'கொடிநிலை' எனனுஞசொல்லை ஆசிரியன அதறகு விதந்தெடுததுக கூறினு னெனபது. இதனு லானறே, ஆசிரியர் நககீரனார்,

"உலகம் உவப்ப வலன்ஏர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு."

எனறு திருமுருகாறறுப்படையிலும, ஆசிரியர் இளங்கோ வடிகள,

"ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதுங்
காவிரி நாடன் திகிரிபோற் பொன்கோட்டு
மேரு வலந்திரித லான்."

எனறு சிலபபதிகார முகத்தினுங கீழத்திசை எழுஉஞ செங்கதிர்ச் செல்வனை வாழத்துவாராயினார் என்க.

இனி, மேலது போலவே தீ, நெருபபு, அழல், தழல் முதலான சொறகள மக்கள எல்லாராலும வழங்கபபடுதல் நோக்கி, அவை அதன கடவுட் டனமையினை உணாத்தா வெனறறிந்த ஆசிரியன, அதன கடவுட் டன்மையினை யுணர்த்துதற கேறற 'கந்தழி' எனனுஞ சொல்லால் அதனைக் குறிப்பானுயினான. தலைகொரு பறறுக்கோ டினறித் தான எல்லாவற்றிறகும ஒரு பற்றுக் கோடாய் நிற்பதூஉம், தான்பற்றிய உயிரின் பருபபொருளறிவினை யழித்து அவ வறிவினை நுண்ணிதாக்கி அதனைத் தன றனமையாய நிறகச் செயவதூஉம், தான் எதனனும் பற்றப்படாத அருவுமாய்க் கட்புலனுயினுந் தொடபபடுவ தல்லாத உருவுமாய இவ்வாறு இருதிறமும விராய அரு வுருவாய நினறு திகழவதூஉம எல்லாமவவல இறைவ னியல்பாதல்போலத், தீப்பிழமபுந் தானிருத்தற்கு ஒரு பற்றுக்கோடு வேண்டுமென்பது இன்றிய எல்லா உயிர்ப்

பொருளகளி னிருப்புக்குந் தானெரு பற்றுக்கோடாய் அவறறினுளளும ஏனைப பொருள்களினுளளும விரவி நிறறலானும், தான் பற்றிக்கொண்டு தோன்றும விறகு திரி நெய் முதலியவறறின பருப்பொருட்டன்மையை அழித்து அவற்றை நுண்பொருளாக்குவதுடன தான் பறறி எரியுஙகாறும அவற்றைத் தன் நிறமாக வயஙகச் செய்தலானும், தான் புலப்பட்டுத் தோன்றுவழி எங்கு முளள அருவாய விளக்கு விறகு முதலியவற்றிற் புலப பட்டுத் தோன்றியவழியும எவரானும பிடிக்கப்படுவ தல்லாத உருவுமாய இவ்வாறு அருவும உருவுமாம இரு நிறமும ஒருஙகு கலந்த இயல்பிற்று மாகலானும் தீ கடவுட் டன்மை யுடையதாதல் துணியபபடும. இபபெறறித்தாந் தீபபிழமபின இலகக்ணத்தை உணர்தறகு வாயப் புடைத்தாதல் பற்றியே ஆசிரியன 'கந்தழி' என்னுஞ் சொறகொண்டு அதனையுங் கடவுள வாழத்தினபாற படுபபாஞயினை எனக இனி, ஞாயிறு திஙகள என்னும இருமண்டிலஙகளுஙகூடத் தீத் திரளாகளே யாகலானும, தீ யொன்றுமே அவற்றின விளக்கத்திறகு ஏதுவாகலா னுங 'கொடிநிலை' எனனும ஞாயிறறிறகும, 'வளளி' என் னும் திஙகளுக்கும இடையே 'கந்தழி' எனனும் தீப்பிழம பின் வாழத்தை ஆசிரியன வைததிட்டானெனபதூஉம அறியற்பாறறு.

இனித், திஙகள, நிலா, அமபுலி எனனுஞ சொறகள எல்லாரானும வழஙகபபடுதலின அவை அவருளளத்தே கடவுள் நினைவினைத தோறறுவியா எனக கருதி, அந் நினைவினைத் தோறறுவித்தறகு ஏற்ற 'வளளி' எனனுஞ சொல்லால் அதனை ஆசிரியன குறிபபாஞயினை. கதி ரொளி வெமமைகலந்த ஆற்றலை[1] உலகுயிர்களுக்குத் தரா நிறப, நிலவொளி தண்மை கலந்த ஆற்றலை[2] அவறறிறகு வழஙகி அவற்றைப பேணி வளர்த்தலின 'வள்ளி' எனப படுவதாயிறறு. அற்றேற், கதிரவனும வெமமை கலந்த ஆற்றலை வழங்கும வண்மை (ஈகை) யுடையனெகலின

1. Positive electricity. 2. Negative electricity.

அவனேயும் 'வளளி' எனக்கூறல் வேண்டுமாம பிற வெனின்; அற்றனறு; கொடுமையொடு கொடுக்குங் கொடையினேக் கொடை என்று எவரும் உயர்த்துக்கூரூர், அஃது இனறியமையாக் கொடையேயாயினும. மறறு, அகங்கனிந்து முகம மலர்ந்து குளிர்ப்பக்கூறிக் கொடுக் குங கொடையினேயே எவரும மகிழந்து புகழாநிற்பர். அங்ஙனமே, ஞாயிறு கொடுகுமு மினனூறறல் இனறியமை யாததொனறேயாயினும, அது வெமமையொடு கூடியிருத் தலின அதனே 'வண்மை' எனை ஆசிரியன கொண்டிலன; மற்றுத் திங்கள வழங்குந் தணமைகலந்த மின்னொளி எவரானும விருமபி ஏறகபபடுங குளிர்ச்சியுடைமையின் அதனேயே ஆசிரியன 'வண்மை' எனை வேண்டினை. அதுவேயுமனறிக், கதிரொளி வெய்யதாகலின, அஃது ஆண்டனமைபபாறபடும; நிலவொளி தண்ணிதாகலின அது பெண்டனமைபபாறபடும.[1] அப பெண்பாற றனமை யினே 'வள்ளி' என்னுஞ சொல் இகரவிகுதியால் நன் குணர்த்துதலின், அது திங்கண்மண்டிலத்தின் வண் மைத்தனமையினே அறிவிக்கும் பெயராதற்கு ப பெரிதும் ஏறபுடைத்தாதல் காண்க. ாண்டுக காட்டிய இவ் வியல்புகள "ஞாயிறு நெருபபின் றனமையும ஆண்டனமை யும உடைமையானும, திங்கள நீரினறனமையும பெண் டனமையும உடைமையானுமெனபது. அல்லதூஉம், வெணகதிர் அமிர்தந் தேவாக்கு வழங்கலானும 'வள்ளி' என்பதுமாம" எனறு நச்சினார்க்கினியர் கூறியவுரையானும் புலனுதல் கண்டுகொளக.[2] இறைவன ஒருபால் ஆண் டன்மையனுயிருந்து அழித்தற றொழிலினேயும, மறறொரு பாற பெண்டனமையனுயிருந்து படைத்தல் காத்தல்களி யுஞ செயகினறனனுகலின, அவன்றன ஆண்கூறறினபாற் பட்ட 'கொடிஞிலே' போல, ாண்டு 'வள்ளி' என்பது அவன் றன் பெண்கூற்றின்பாற்பட்டு நிற்றலும் நுணுகி யுணர்ந்து கொளக.

---

1. சதிபதபிராமணம், க, க, க, உ0.

2. தொல்காப்பியம், புறத்திணை இயல், ஈஉ-ஆஞ் சூத்திர வுரை.

இவ்வாருகக், காணவுங கருதவுமபடாத முதல்வன் இயல்பினை நமமனோர் காணவுங கருதவும் எளிதாம்படி வைத்து விளஙகக்காட்டுமு விழுபபம பற்றியே "கொடி நிலை கந்தழி வளளி" எனனும மூனறும அம முதல்வனனை டொபப வைத்து வாழத்தபபடுமெனறு முற்றுணர்வுடைய ஆசிரியர் தொல்காபபியனார் அருளிச்செயதனர். இனனும, இறைவன தீ வடிவினன ஆதலும தீவடிவில் விளஙகித் தோனறி நம்மனோர்க்கு அருள வழஙகலும மேலை மாணிக்க வாசகர் பெரிய கூறு-ஆம பக்கம முதல் கூகூ-ஆம பக்கம வரையில் வைதது விரித்து விளக்கியிருக்கின்றோம. ஞாயிறுங திஙகளுங தீ வடிவேயாகலின, அவ விரணடொடுங கூட்டத தீ மூவகைத்தாதல் கண்டுகொளக. ஏனை உலகுயிர்களில் விரவி நிறகுங்கால் இறைவன் கட்புலனுகா அருவனைய இருத்தலின, தனனை உயிர்கள கட்புலனுற கணடு வணஙகமாட்டாவெனை இரஙகியே, அவர்தங கண் கட்சுப புலனுகும இவ் வொளியுடைப பொருளகள மூன்றையுந் தோற்றுவித்து, அவறறினகட் டனது அருளொளி யுருவினக காட்டி அவாதமக்குத் தன அருளமிழதம வழங்கிவராநிற்கினறுன என்பது. இஙனமாக இறைவனறன அருளொளி விளககததிறகு ஓர் உறையுளாயிருந்து உயிரகட்கு உதவுதல குறிதறே ஞாயிறு திஙகள தீ எனனும மூனறுங கடவுளோடொபப வைத்து வணஙகுதலும வாழதது தலுஞ செயயபபடும. தமிழநாட்டு அந்தணர் மிகப பழையகாலந் தொட்டே இறைவனைத் தீ வடிவிலவைதது வணஙகிவந்தனரெனபதும, அததீத் தான ஞாயிறு திஙகள தீ எனை முத்திறபபடுதலின அவற றிறகு அடையாளமாக ஞாயிறறை யொத்த வட்டவடிவிலும பிறையை யொத்த வில்வடிவிலுந் தீயையொத்த முககோண வடிவிலுங குழிகள வெட்டுவித்து அவற்றினகண் தீ வளர்த்து அதனை வழிபட்டு வரலாயின என்பதும அறியறபாலன. தலைச்சஙகததிருந்த முரஞ்சியூர் முடிநாகராயர் காலததிலேயே பொதியமலைமுதல் இமயமலை காறும பரவியிருந்த தமிழநாட்டு அந்தணர் முத்தீ வேட்டமை,

"சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை
அந்தி அந்தணர் அருங்கடன் இறுக்கும்
முத்தீ விளக்கிற் றுஞ்சும்
பொற்கோட் டிமயமும் பொதியமும் போன்றே."
(புறநானூறு, உ)

என்று அவர் பாடியவாற்றுன் அறியபபடும். இம் முத்தீயை வளர்க்கும் வேளவிக் குணடகஙகளுள ஒன்று வட்ட மாய் அமைக்கப்படுதல் சதபதபிராமணம் ஏழாஙகாண்டம முதல் அத்தியாயம முதற பிராமணத்துளளும, மறறி ரண்டும் வில்வடிவும் முக்கோண வடிவுமாய் அமைகக பபடுதல் "மூனறுவகைக் குறித்த முத்தீச் செல்வத்து" என்னுங் 'திருமுருகாறறுபபடை'யடிககு நச்சினாக்கினியர் கூறிய உரையுளளுங கண்டுகொளக. பண்டைக்காலத் திருந்த தண்டமிழச் சானறோர் தாம ஞாயிறு திஙகள தீ எனனும முத்தீயை வணஙகுதறகு அறிகுறியாக ஆம் மூனறின வடிவுபோன்ற குண்டஙகள நிலத்தினகண் வெட்டுவித்து அவற்றினகண் வேளவிவேட்ட நுட்பம் அறியாத பிற்காலத்தார் இக் குண்டஙகளில் ஒன்றன வடிவை நாறகோணமாக்கிப பிழைபட்டார். அதுகிடக்க.

இனி, இம முத்தீயினையும வடநூலா 'ஆகவநீயம்,' 'காருகபத்தியம,' 'தகஷிணாக்கினி' என வழஙகினரேனும, அவறறுள் ஆகவநீயங காருகபத்தியம எனனும் இரண்டுமே சதபதபிராமணம முதலான பழைய வடநூல்களுட் காணபபடுகினறன ; ஏனைத் 'தகஷிணாகினி' எனனும பெயர் அவறறின்கட் காணபபடுகினறிலது. இருக்கு வேதத்திலுங் (உ, ஙசூ, ச; ஙூ, உ0, உ) தீக் கடவுளுக்கு மூனறிருபபிடஙகளமட்டுஞ சொல்லப்பட்டிருக்கினறனவே யல்லாமல், அம மூனறின பெயர்களாதல் 'தகஷிணாக்கினி' என்னும பெயராதல் ஆண்டுச் சொல்லப்படவில்லை. மற்றுப், புறநானூற்று உரையாசிரியரோ தகஷிணாக்கினியைத் 'தென்றிசையங்கி' என்றுரைக்கினறார் ; தென்றிசையங்கி என்பது தென்றிசைக்கணணதாகிய தமிழ நாட்டிலே வேட்கப்படுங் தீ என்று பொருளபடுவதாகும.

தியானது எல்லாத்திசைகளில் உளள எல்லா நாடுகளுக்கும உரித்தாகவும், அதனைத் தென்றிசைக் கண்ணதாகிய தமிழநாட்டுக்கே வரைந்து வைத்துத் 'தக்ஷிணக்கினி' அல்லது 'தெனறிசையங்கி' எனக் கூறியதெனனை ? என நுணுகிநோக்கவல்லார்க்கு, எல்லாமவல்ல முழுமுதற் கடவுள தீ வடிவினகட் புலபபட்டுத்தோனறி விளஙகுதலை முதனமுதலுணர்ந்து, அதற்கேறற பரிசால் தியினை வழி படும முறைகளைக் கண்டறிந்து, அவ வழிபாட்டினைச் செய்து வந்தோரும வருவோரும் தெனறமிழநாட்டி லுளள தமிழச் சானறோர்களே யெனபது இனிது புலனாகின்றகும. மேலே சுசஅ-ஆமபககத்திற 'சத்தியவிரதன்' எனனும 10ந தமிழ முனிவனை யாதலை உயர்ந்த பல மேறகோளகள கொண்டு விளக்கினும.

"ஓ அகனியே, நின்னை மநுமுனிவன் மக்களெல்லார்க்கும ஓர் ஒளிபபொருளாய ஏறபடுத்தினை" (க, நகூ, ககூ) எனவும,

"ஓ ஆதித்தியர்களே, மநுமுனிவன் தீ வளர்த்த காலையில், முதல் அவியை ஏழு ஹோத்திரிக் குருமார்களோடும் வேண்டுகோளுரையோடும நுமக்கே சேர்ப்பித்தான்" (கo, சூநூ, எ) எனவும,

"இறைவனை அழைபபவனும மநுமுனிவன் மரபினர் பாற குடிகொண்டிருப்பவனுமான அகனியே இச் செல்வஙகளுகெல்லாந் தலைவனுவான" (க, சுஅ) எனவும,

"அறிவனும இல்லத்திற்கு இனிய தலைவனுமான அக்னி ஐந்து மரபினரின் இல்லங்களோறுங குடிகொண்டிருக்கினறனை" (எ, கநு, உ) எனவும,

"ஓ இந்திராக்கினியே, நீ யதுக்கள், துருவசர்கள், நுருகியர்கள், அணுக்கள, பூருக்கள் எனனும இவைவைகையினரிடஙு குடிகொண்டிருத்தலால்" (க, கoஅ, அ) எனவும் இருக்கு வேதஙு கூறுமாற்றனும,

"இவ வைந்து நாடுகளும், இவ் வைந்து மரபினர்களும் மநுவினிடத்திருந்தே தோன்றினர்" (நூ, உச, உ)

என அதர்வ வேதங கூறுமாற்றனும, இவறறோடு இணங்
கவே ஆசிரியர் திருமூலரும் "தமிழ மண்டலம் ஐந்துந்
தாவிய ஞானம்" எனக கூறுமாறறனும், தமிழமுனிவ
ராகிய மருவும, அவாவழித் தோனறி ஐந்து நாடுகளிற்
குடியிருந்த 'பஞச திராவிடர்' எனபபடும் பண்டைத் தமிழ
மரபினருமே, முழுமுதறகடவுள தீ வடிவில் விளஙகித்
தோன்றுதலை முதன்முதற் கண்டறிந்து அத் தியினகண்
அவனை வழிபடும முறைகளை வகுத்தனரென்னும அரிய
பெரிய உண்மை தெளியபபடும். இவ் வைவகைத் தமிழ
மரபினர்க்கும் தலைவராய இருந்து அங்நாளில் அரசுபுரிந்த
வர்களை பரதர் எனனும் தமிழவேந்தன் வழியில் வந்தவ
ரான பரதர்களே யாவர்.

"பாரத மரபினரான தேவசிரவா, தேவவாதர்
எனனும இருவரும பயனமிகுந்த அக்நியை மிக்க வலிமை
யொடுந் தேயத்து உயிர்ப்பித்தனர்" (ஈ, உஈ, உ) எனவும்,

"ஓ அக்நியே, வலிய படைவீரர்களையுடைய பழைய
பரதர்கள் தமக்குப பேரினபம வேண்டி நினனையே இரந்
தனர்" (சு, கசு, ச) எனவும, "ஓ பரதர்களுக்கு உரிய
அக்நியே" (சு, கசு, சஙு) எனவும இருக்குவேதம இங
ஙனமே இனனும பலவிடஙகளில் வறபுறுத்து ஓதுதல்
கொண்டு, பண்டைத் தமிழமக்கட்குத் தலைவரான பரதர்
களே இறைவனைத் தீ வடிவிற்கண்டு வழிபடும நூட்பத்தை
முதனமுதற கண்டுணர்ந்தன ரெனபதும, தீபபிழமபின
வடிவுபோல்வதாகிய திரண்டு நீண்டு குவிந்த சிவலிங்க
அருட்குறிகளும் அவற்றிற்கு உறையுளாகக் கூட கோபுர
மோங்கிய திருக்கோயில்களும் தெற்கே பொதியமமுதல்
வடக்கே இமயமலைகாறும அவர்தம்மால் ஆஙகாஙகு
அமைக்கப்படலாயின வென்பதும நன்கு தெளியப்படும.
தீப்பிழமபு இறைவனருளொளியோடு ஒறறித்து விளங்கும்
இவ்வருமபே ருண்மையினைப் பரதர் எனனும பண்டைத்
தமிழத்தலைவர் முதன்முதற கணடறிந்த சிறபபுபபறறியே
"அக்நியானது பாரதன்" எனப் பெயர்பெறலானமை
இருக்குவேத இரண்டாம மண்டிலத்து ஏழாம பதிகத்

தானும, அதன முதன்மண்டிலத்து நாற்பத்து நான்காம் பதிகத்தாற றெளியகிடந்தபடி அக்நிக்கு உயிராவான் 'பகன' எனனும பெயருடைய சிவபிரானேயாம உண்மையைத் தெளியக்கண்டவர் பரதரேயாம் சிறப்புப் பற்றியே உருததிரபபெருமானுங்கூடப 'பரதன்' எனப பெயர்பெற்றமை அதன் இரண்டாம மண்டிலத்து முப்பத்தாரும பதிகத்தானும இனிதுணரக்கிடக்கின்றன. 'அக்நி'யின் உண்மைத் தன்மையும, அதன் வழியே எல்லாம்வல்ல முழுமுதற கடவுளாக கண்டு வழிபடுமாறும் தெனறமிழ நாட்டவர்க்கு உரியவாதல் பற்றியே அக்நி வடநூல்களில் 'தக்ஷிணாக்நி' எனப பெயர் பெறலாயிற்று. விளக்கொளியிற சிவவொளியைக் கண்டுதொழுங் கார்த்திகைத் திருவிழாத் தமிழநாட்டகத்துக் கொணடாடப படுமாறு போலப, பிறநாடுகளிற கொண்டாடப படாமையுங் கருதற பதிகபறபாறறு.[1]

இங்ஙனமாக இறைவனை நெருப்பொளியிற் கண்டு வணங்கும முறையுணர்ந்த 'பரதர்' பண்டைநாளில் இவ்விந்திய நாடு முழுதும ஒருங்கு செங்கோல் ஓச்சினராகலின, அவர் பெயரால் இது பாரதவண்டம எனப பெயர்பெறுவதாயிறறு. இப பரதர்கள முதனமுதல் கடல்சார்ந்த நெயதல் நிலததினகட் குடியேறி, அதனகட் பட்டினங்கள அமைத்து நாகரிகத்திற சிறந்து வாழந்தனராகலின, அந் நெயதல் நிலத்துமகள 'பரதர்,' 'பரத்தியர்' எனப பெயர் பெறலாயினர.[2] வடகிருந்து வந்து இந்திய நாட்டின வடமேற கெல்லையிற குடியேறிய ஆரியர் நாகரிகம இல்லாதவராய, உயிர்க்கொலை புரிந்து வரைதுறையினறி ஊனுண்டுங் கட் குடித்தும மகளிரப புணர்ந்தும நாகரிகமுடைய தமிழ மக்கள் அருவருக்குமாறு ஒழுகினமையின அவர்கள இந் நாட்டுள நுழையாதபடி அககாலையில் அவர்களை விபாஸ சுதுத்ரீ எனனும ஆற்றங்கரையின அபபால் இப பரதர்

1. தற்செயலாய் இப்பகுதி இவ்வாண்டின் கார்த்திகைத் திருநாளன்றே எம்மால் எழுதப்படலாயிற்று.

2. இறையனாரகப்பொருள் முதற்சூத்திர உரை.

களை எதிர்த்து நின்றமையும், பின்னர் அவர்கள் அவ்வாறுகளை இடையூறின்றிக் கடந்து இபபால் இனிது சேருமபடி, அப் பரதமரபினாககுக் குருவான விசுவாமித்திரர் அவ் யாறுகளை வேண்டி வழுத்தினமையும இருக்கு வேத மூனறும மண்டிலத்தின ஈரு-ஆம பதிகத்தில் நன் கெடுத்து மொழியப்படுதல் காணக. நிரித்சுக்கள் எனனும் ஆரிய வகுபபினர் சுதாஸ் எனபவனைத் தலைவனுய்க் கொண்டுவந்தஞான்று, மேலெடுத்துக் காட்டிய ஐவகைத் தமிழமரபினரில் துருவசாகளும துருகியர்களும அணுக்களும பூருக்களும் ஒனறுகூடி அவர்களைத் தடுத்துகினறு போர் புரிந்தமையும, அத் தமிழ அரச வகுபபினர்க் குதவியாகப பக்தர்கள், பலாநர்கள், அலிநர்கள, சிவர்கள், விஷாநியர்கள எனனும வேறு ஐவகைத் தமிழக குடியினர் ஒருஙகுகினறு திரித்சுக்கள என்னும அவ்வாரியரோடு போராடினமையும இருகுவேத ஏழாம மண்டிலத்தின் கஅ-ஆம பதிகத்தில் விளகுகமாகக் கூறப்படுதல் காண்க. இப்பதிகத்தின ஈரு-ஆஞ செயயுளிற 'பூருக்கள' ஆரியரால் மிக இழித்துப பேசபபடுதலும நினைவிற பதிக்கறபாறறு. வசிட்டரைக குருவாயககொண்ட ஆரியத் திரித்சுக்களுக் கும, விசுவாமிதிரரைக் குருவாயககொணட பரதர் முதலான தமிழமரபினா பதினமாககும நிகழநத போரில், ஆரியர்க்குத் தெய்வமான இந்திரன பரதர்களைச் செயலற றிருகுகச செய்தனன் எனறு இருக்குவேத ஏழாமமண்டிலத்து ஈரு-ஆம பதிகத்தைச் செயத வசிட்டக்குடியினர் தமகுரிய அவ விநதிர தெயவத்தைப புகழந்து பேசிக் கொளகின்றனர். பரதர்கள அபபோரில் தோல்வி பெற் றிலராயினும, ஆரியர் செயத சூழசசியினுலும அச் சூழச்சிக்கு உதவியாய நினற தமிழரிலேயே ஒரு வகுப் பாரின படிற ருழுக்கத்தினுலும அபபோரில தமிழ மரபினர்க்குத தலைவராயநினற பரதர்களுப பேரிடுக்கண் கள நேர்ந்தன எனபது மட்டும புலனுகின்றது. இஙஙனம பரதர்க்குப பேரிடுகளை நேருமாறு ஆரியர்களு உதவி செயத தமிழவகுபபினர், முன்னெலலாம அப பரதர்களு நெருஙகிய உறவினருந் துணைவருமாய நின்ற 'பூருக்கள'

என்பவரேயாவர். இஞ்ஞான்றைத் தமிழரிற சிலர் ஆரியர் கட்டிய சூழச்சியில் அகப்பட்டுத் தம்மினத்தவ ராகிய தமிழரை அவ வாரியர் இழிபு படுத்துதறகுக கருவி யாய முனகின றுதவுதல்போல, அஞஞானறைத் தமிழ வகுபபினராகிய பூருகளுந், தமமவர்க்கு இரண்டகமாய நடந்து ஆரியர்க்கு மறைந்துதவிபுரிந்தமையும், அதுகண்டு பரதர்களே உரியதான தீக்கடவுள ஆரியரோடு உடன் கூட்டி அப பூருக்களைப் போரிற றெலைத்தமையும இருக்கு வேத ஏழாம மண்டிலத்து அ-ஆம பதிகத்திற சொல்லப படுதலும நினைவுகூரறபாறறு.

எனவே, அக்காலத்து ஆரியர் தமிழரைப் போரில் வெனறு இந் நாடுகளைக் கைப்பற்றின ரெனபாருரை பொருந்தாமையும, அவர் தமிழரிலேயே சில வகுபபாரைத் தம வயபபடுத்தி அவர்தம இரண்டகச் செயலின் உதவி யால் இந் நாடுகளை மெல்ல மெல்லக் கைப்பற்றிக் கொணட மையும் தாமே பெறபபடும். தமிழ நூல்களைப் பயினறறியா மையின தமிழரின நாகரிக உயர்ச்சியை நன்கு உணரப பெறுத ஐரோப்பிய ஆசிரியரான ராகொசின் எனனும நுண்ணறிவினர், தமிழரைவிட ஆரியரையே உயாத்துப் பேசுங் குறிபபினராயினும, இருக்குவேதப பாட்டுகளை நடுநிலை திறமபாமல் தாம ஆராயந்த ஆராயச்சியின முடி பாக, ஆரியர் தமிழரைப் போரில் வென்று அவர்தம நாடு களைக் கைபபறறினவர் அல்லரெனனும எமது கருத் தினையே தாம் அரிது ஆராய்ந்தெழுதிய 'வேத இந்தியா' எனனும நூலில் விளக்கமாகக் கூறியிருகின்றார். "ஆரியர் தென்றமிழநாடு புகுந்தது படையெடுபபினால் அனறு, மெல்லமெல்ல முன் ஊர்ந்து சென றதனாலேயாம. ஆண்மையும விடாபபிடியும வலுவாய ஒழுங்கு படுத்தப பட்ட படையமைபபுங குடிநெருக்கமும உடைய தமிழர் களைத், தொகையில் மிகக் குறைந்த ஒருகூட்டத்தார் எதிர்த்துச் செல்வதென்றல் அஃது எத்துணை இடர்ப் பாடுடையதாய இருக்கவேண்டு மென்பது நாம எளிதில் உணரக்கூடிய தொன்றேயாம. தமிழர்கள் இப்போதும

அத்தன்மையராகவே இருக்கின்றனர்; விந்தியமலைக்குத் தெற்கே இருநூறறெண்பது இலட்சமபேர்க்குமேல் உளர்; அவர்கள் தமது தேயத்தின்மேல் வைத்த அனபினால் ஆரியரை எதிர்த்து நின்ற அம மிகப பழையகாலத்திலும அவர்கள அநநனமே பெருந் தொகையினராய் இருந்தன ரெனபதை ஐயுறுதற்கு ஏதோர் இயையும இல்லை"[1] எனவும, "இந்திய நாட்டுக்குள குடியேறிய ஆரியர் தமக்கு முற்பட்டே அந் நாட்டுக்கு உரியராகத் தாம கண்ட இனத்தாரின மரபினரோடும அவ வினத்தாரக்கு ளானரோடும அவ் வாரியரை ஒபபிட்டுக் காணுமளவில் அவ வாரியரது தொகை அவர்களுச் சிறிதும ஒவவாது மிகச் சிறிதாயிருத்தல் பலராகும வியபபினைத் தோறறுவியாநிற்கும. இவ விருதிறதத்தாரின தொகையில் ஏறறத் தாழவுகள அம மிகப பழையகாலத்தே இனனும மிகுதியாய இருந்தாகல் வேணடும; ஆகவே, வெறுவல்லாண்மையினாலும வெற்றியினாலுமே ஆரியரது தலைமைபபாடு இந் நாட்டின கண் நிலைபெறலாயிறறென்னுங கொளகை பெரிதும பொருத்தமற்றதென உறுதிபபடுத்துதறகு ளதொன்றுமே போதும்"[2]

---

1 "It was not so much an invasion as an advance, and we can easily imagine that it must have been an achievement of no small difficulty for a body of men necessarily very inferior in numbers, in the face of a compact population, brave, stubborn, and strongly organized. Such the Dravidians are now, when they number over twenty-eight millions south of the Vindhya, and there is not the slightest reason to doubt that such, in the main, they were at the early time of their long patriotic struggle' Vedic India, p. 298.

2. "It will be a surprise to many that the Aryan population of the Indian continent should be so out of all proportion small when compared to the descendants and representatives of those races which the Aryan immigrants found in possession. The same difference must have existed on a still greater scale in those earliest times—and would alone suffice to stamp as irrational the theory of Aryan supremacy having been established by sheer conquest and force." Ibid, p. 314

இங்ஙனமெல்லாம பண்டைக்கால ஆரியர்க்குந் தமிழர்க்கும இடைநிகழ்ந்த பெருமபோராட்டமும, தமிழரின் பேராண்மையினையும் பெரு நாகரிகத்தினையும நனகுணர்ந்த ஆரியர் அவரோடு எதிர்த்துநின்று அவரை வெல்லுதல் இயலாமை கண்ட வளவாலே அவர் தமமில் வலியராயிருைரைப் பல்வகைச் சூழ்ச்சிகளால் தமக்குத் துணையாயக்கொண்டு அவ்வழியால் இப் பரதநாட்டுள மெல்ல மெல்லப் புகுந்து ஆங்காங்குக் குடியேறலானமையும இருக்குவேதப பாட்டுகளைக் கருத்தூன்றி ஆராய்வார்க்கெல்லாந் தெற்றெனப புலனுகா நிறகும. தமிழரிற பரத மரபினர்க்குக குலகுருவான விசுவாமித்திரருங்கூட ஒருகால் ஆரியர் செய்த சூழலில் அகபபட்டு, ஆரிய அரசனான சுதாஸ எனபவனுக்கு வேளவியாசிரியராயச் சென்று, ஆரியர்க்குத் தெயவமான இந்திரனை வணங்கி வழுத்திக், கீகடர் எனனுந் தமிழ வகுபபாரின் அரசனான பிரமகந்தனின் பெருஞசெல்வமெல்லாம அவ் வாரிய அரசன சுதாஸ எனபவனுககு வந்து சேருமாறு வேணடவே, அங்ஙனாம இரணடகஞ செயத அவ விசுவாமித்திரரின் நாவானது சிவபிரானறன சிறறத்தால் மந்திரஞ சொல்லும வனமை யிழந்து இயங்காது அவரை ஊமை ஆகக, அவரும அபபோது செயலறறிருந்தனர். அது கணடு உருத்திரரைத தீ வடிவிற கண்டு வணஙகுவோரும, விசுவாமிதிரர்கு உறவினருமான ஐமதகினிகள, (இருககு, கo, கசு, எ, ச) எனனுந் தமிழகருமார் அவரது செயலறவினைக் கணடு இரஙகி, ஞாயிறறினகட் புலனையத் தோன்றுஞ சிவபிரான்பககல் அமர்ந்த சசர்ரீ எனனும் உமைபபிராட்டியை வேண்டி வழுத்த அவளது அருட்கடைக்கண் நோக்கால், விசுவாமிதிரர்க்குப பெயர்த்தும நாவன்மை உண்டாகவே, அவர் தாம செயத பிழையினை உணர்ந்து, தமமைச் சேர்ந்த ஐவகைத் தமிழ வகுபபினர்க்கும அவ வகுபபினர்ககுத் தலைவரான பரதர்க்கும நன்மை விளையுமாறு வேண்டி, ஆரிய அரசன சுதாஸ எனபவனது வேளவிக்களத்தைவிட்டு அகலாநிற்ப, அது கண்டு அவ வாரிய அரசனின் குலகுருவான

வசிட்டர் அவரையுந் தமிழரையும பகைத்து இகழ்ந் துரைப்ப, அதனல் விசுவாமித்திரரும பெருஞ்சிற்றங் கொண்டு அவ வசிட்டரையும ஆரியரையும வைதுரைத் துத், தாம் தம தமிழமரபினரோடுஞ சென்றமையும இருக்குவேத மூனரும மண்டிலத்து நூ-ஆம பதிகத்தில் நன்கெடுத்து ஓதப்பட்டமை காண்க. இப் பதிகப் பொருளை ஆழ்ந்தாராய்ந்த ராகோசின் என்னும ஐரோப் பிய ஆசிரியர் தமது History of India என்னும நூலில் அதுபற்றி எழுதிய நடுநிலைவழா உரை தமிழ் நனமக்க ளாவார் கருத்திற பதிக்கற்பால தொன்றுகலின அதனை இங்கே மொழிபெயர்த் தெழுதுவாம :

[1]" இருக்கு வேதத்தினுலேயே அறியக் கிடக்குஞ செய்தியினளவில் தனிநின்று நோக்குங்கால், வசிட்டர்

---

1. "To keep strictly within the information supplied by the Rig-Veda itself—Vasishtha was the bard of the *Tritsu*, the leading and purest Aryan tribe, and *Visvamitra* was the bard of the *Bharatas*, their great enemies and one of the most powerful native tribes. He at one time had been with the Tritsu, and for whatever cause he left them—not improbably personal revenge—he played a conspicuous part in the confederacy which attempted to check the Aryan advance and increasing power. There is a hymn (53), in Book III, that of the Visvamitra family, which evidently alludes to this very thing. In the first part of the hymn it is said that when Visvamitra conducted King Sudas' sacrifices, Indra was gracious to him for the Rishi's sake, and a great blessing is pronounced on the king, and his war-steed and the expedition on which he starts. Then, quite suddenly, Visvamitra is made to declare, in his own person, that his prayers protect the tribes of the Bharatas, and the hymn ends with four verses of imprecations against enemies who are not named, but whom tradition so positively identified with Vasishtha and his family, that the priests of this house in later times never uttered these four verses, and tried not to hear them when spoken by other Brahmans. It is most probable that the Visvamitras resented some distinction conferred upon the Vasishthas, possibly their appointment as *purohitas* to the Tritsu royal family

எனபார் தனி ஆரியத் தலைவரான திரித்சுக்களுக்குக் குரவராதலும், விசுவாமித்திரர் எனபார் அவ் வாரியர்க் குப் பெரும் பகைவரும உளநாட்டுக் குடிமக்களுள் ஆண்மையில் மிகச் சிறந்தாரும் ஆன பரதர்க்குக் குரவ ராதலும் பெறப்படா நிறகும. விசுவாமித்திரர் ஒரு காலத்தில் திரித்சுக்களிடம போயச் சேர்ந்திருந்தனர். பின்னர் எதனாலோ—ஒருகால் பழிக்குப் பழிவாங்கும எண்ணத்தினாலோ, அவர் அவர்களை விட்டுச சென்றனர்; ஆரியர் முன்னேறி வருகையினையும அவர்க்கு வரவர மிகும வலிவினையுங் தடை செயயத், தமமினத்தவர் தம் மிற கூடிச் செயத கட்டுப்பாட்டில் அவர் முதல்வராய் நின்றனர். இருக்கு வேத மூனறும மண்டிலத்தில் (தீக் கடவுண்மேலும ஏனை ஆரியச் சிறு தெயவஙகண் மேலும) விசுவாமித்திரக் குடியினர் இயற்றிய பதிகஙகளுள நூற்-ஆம பதிகமானது மேற்காட்டிய நிகழச்சியினையே (தமிழர் ஆரியரொடு போராடி அவரைத் தடுத்து நின்ற செய்தியி

---

and went over to their most powerful enemies, the Purus and Bharatas. The Tritsu and their allies were victorious in the ensuing struggle, known as "the War of the Ten Kings," and both the bards have left descriptions of it and of the final battle on the banks of the Parushni, in some spirited hymns, the most undoubtedly historical of the collection At a later period the followers of Vasishtha and his descendants represent the narrowly orthodox Brahminic school, with its petty punctilliousness in the matter of forms, rites, observances, its intolerance of everything un-Aryan, its rigid separatism. This school it was which stood guard through all these ages, and up to our day, the champion-and possibly orginally the institutor, of caste; who advanced and upheld all the exaggerated claims of the Brahman priesthood, to divinity, to the rule of the world, and ownership of all it holds, to supernatural compelling powers over nature and the gods themselves through sacrifice and ascetic practices, and the like. The followers of Visvamitra and his descendants, on the other hand, represented the school of liberalism and progress, of conciliation and amalgamation." Vedic India, pp. 318-320.

ஹேயே) குறிபபிடுகினறது. சுதாஸ எண்னும் அரசனின் வேளவிகஹா விசுவாமித்திரர் நடத்தியபோது இந்திரன அம முனிவர்பொருட்டு அவனுக்கு அருளபுரிந்து அவன எடுத்துச் செல்லும படையெடுபபினையும் அவனறன போர்க குதிரையினையும அவனையும வாழத்தி வரங கொடுத்தனனென அப பதிகத்தின முதற் பகுதியானது மொழியா நிறகினறது. அதன்பிற சடுதியிலே விசுவா மித்திரர் தம வேணடுகோளுரைகள பரத வகுபபினரைக் காக்கவெனக் கட்டுரைத்தார் எனக் கழறுகின்றது; அப பதிகததின ாறறில் நிற்கும நானகு செயயுட்கள பகைவ ரைக் கெடுகவென வைதுரைகஹினறன; இஙஙனம வைதுரைக்கபபட்ட பகைவா இனஞ ரெனபது அவற்றின் கட் சொல்லபபடவில்லையாயினும, அப் பகைவர் வசிட்ட ரும அவர்தங குடியினருமேயாவ ரெனவும, அதனால் அவ வசிட்டக குடியினைச் சேர்ந்த பிறகாலததுக் குருககண்மார் களுஙகூட அந் நான்கு செயயுட்கஹையுந் தம வாயால் ஒரு போதுஞ சொல்லாமையோடு, மறறைப பார்பபன வகுப பினர் அவற்றை ஓதுஙகால் அவைதமமைச செவி கொடுத்துக் கேளாதிருக்கவும முயனறன ரெனவுந் தொன்றுதொட்டுவரும வரலாறு நுவல்கின்றது. வசிட் டக குடியினர்க்குத் தனிச்சிறபபுக கொடுக்கபபட்டமை கண்டு (இது திரித்சுக்கள எனனும அரச குடுமபத்தார்க்கு அவர்கள புரோகிதராக ஏறபடுததபபட்டமையா யிருகக லாம), விசுவாமித்திரர் செற்றஙகொண்டு, அத் திரித்சுக் களுககுப பெரும பகைவரும வலியருமான பூருக்களும் பரதர்களும் எனபார்பாற போய்சசேர்ந்தனர். திரிதசுக் களும அவர்களோ டுடனசேர்ந்தவர்களும பின் நிகழந்த 'அரசர் பதின்மரின்போர்' எனபபடஞ சண்டையில் வெறறி பெற்றனர். இரு திறத்தாரையுஞ் சேர்ந்த பாவலர் அச் சண்டையைப் பற்றியும, பருஷிஹீ யாற்றங் கரையில் முடி வாக நடந்த போரைப் பற்றியுந் தாம பாடிய கிளர்ச்சி யான பதிகங்களில் (இருக்கு வேதப பதிகத்திரட்டில் இப் பதிகங்கள உண்மை நிகழ்ச்சிகஹா அறிவிப்பன என்பதிற் சிறிதும ஐயுறவுக்கு இடமில்லை) விளக்கமாகச் சொல்லி

யிருக்கினறார்கள். பிற்பட்டகாலத்தில் வசிட்டரைச் சார்ந் தோரும் அவர் வழியில் வந்தோரும், உயிரற்ற விதிகள் பொருளற்ற சடங்குகள ஆசாரங்கள என்பவற்றை ஓர் எளளளவுகூட விடாமல் உன்னித்துச் செய்யும் புல்லிய தன்மையிலும, ஆரியரது முறையிற சேராத எதனையுங் கண்டு மனந் தாங்காமையிலும, மறறை வகுபபாரொடு கூடாமற பிரிந்துநிற்குங கொடுமையிலும முதிர்ந்து குறுகிய நோக்கமுடையராய் வருஞ சரியான பார்ப்பன இனத்தின றன்மையினைக் காட்டுவோ ராவரென்பது அறியறபாற்று. இம மரபினரே நமது காலம வரையிற் சாதி வேறறுமையினை நெடுகக் காத்துவந்தவராவர்; அவ் வேறறுமையினை முதனமுதல் உண்டாகினவரும அவரே யாதல் கூடும. பாரபபன்க குருமார்கள தெயவத்தனமை வாயந்தவர்கள, அவர்களே உலகினை ஆளுதறகு உரியர், அவர்களே உலகிலுளள எல்லாப பொருளகளுக்கும் உரிமையாளர், அவாகளே உலகினகண் நடைபெறும் இயறகை நிகழசிகளை யெல்லாந் தாம வேண்டுமாறு நடபபிகக்வல்ல கடவுட் டனமையுடையர், வேளவியாறறு தலாலும் தவவொழுகக்ங்களாலும் இனனும இவைபோல் வன பிறவாலும அவாகளே கடவுளரையும ஏவல்கொள வல்லவர், என்ப பாரபபன ருரிமைகளை அளவுக் கடங் காமற பாரித்துப பேசி, அவறறை விடாபபிடியாயக் கொண்டு முனனேறறி வைத்தவர்கள இவ்வசிட்ட மர பினரே யாவா. மறறு, விசுவாமித்திரரைச் சார்ந்தாரும் அவா வழிவந்தாருமோ, விரிந்த நோக்கமும மேனமேற் பெருகும ஆக்கமும எல்லாரோடும உறவுபாராட்டும இயற் கையும எல்லாரோடும் அளவளாவும் வாழ்க்கையும வாயந்த குடிமக்களின றன்மையினைக் காட்டுவோராவ ரெனபதூஉம அறியறபாறறு'' எனவும, ''சிவர் என்பா ருடன சேர்த்துச் சொல்லபபட்ட விஷாகியர் எனபார், மிகப பழைய தமிழமக்களுள ஒரு வகுபபினரான துக்ரரே யாவரெனக கருதபபடுகினறனர்; இவர்களையே ''நாகரின மக்கள'' எனக் குறிபபிட்டு ஆரியர் இகழந்துரைத்தனர்; இவர்களே சைவர் எனப பெயர் பூண்டு, நாகத்தின்

வடிவினகீழ அல்லதொரு நாகத்தின் தன்மையில் வைத்துச் சிவவழிபாட்டினை உண்டாக்கினோரா தல்வேண்டும."[1] எனவும அவா மொழிந்தமை காண்க. உண்மையாராய்ச்சியில்வல்ல இவவைரோபபிய ஆசிரியர் இருக்குவேதபபதிகங்களை நடுநின்று நுண்ணிதின் ஆராயந்துரைத்த இவ்வுரைகளால், வசிட்டரும அவரைக் குருவாயக்கொணட ஆரியரும, விசுவாமித்திராகளும அவரைக் குருவாயகொண்ட பரதர் முதலான தமிழக் குடியினர்களும அத் தமிழக் குடியினர் தி வடிவில் வைத்து வழிபடுஞ சிவவழிபாட்டுக்கும முற்றும மாறுய் நினறமை நனகு புலனகினறதனறே? தீத்திரீயான ஞாயிறறினையும, அஞ ஞாயிறறினை ஓர் உடமபாயக்கொணடு 'பர்க்கன' எனப் பெயர் பூண்டு விளஙகுஞ சிவபெருமானையும வழுத்துங காயத்திரி மந்திரமானது, விசுவாமித்திரரையும அவர்தங குடியினரையும ஆசிரியராயகொணட இருக்குவேத மூனறும மணடிலத்தின இறுதிக் கண்ணதான சூஉ-ஆம பதிகத்தின கo-வது செயயுளாய அமைந்திருத்தலையும, இம மூனறும மணடிலத தொடககதிலுளள பதிகஙகளும அதன இடையிடையேயுளள பதிகஙகளுந் தீக்கடவுண மேலன வாயிருத்தலையும, தீககடவுண் மேலனவாய இம மூனறும மண்டிலதினும ஏனை மண்டிலஙகளினும பாடபபட்டுக்கிடககும பதிகஙகள பெரும்பாலனவற்றின மட்டுமே 'பரதர்' எனனுந் தமிழக்குடியினர் பெயர் எடுத்துக கூறபபடுதலையும, இருககுவேதததில் தீககடவுணமேலும உருததிரர் மேலும பாடபபட்டிருககும பதிகஙகளின ஆசிரியா பெரும பாலும விசுவாமித்திரக் குடியினைச் சேர்ந்த முனிவரராயிருத்தலையும உறறுநோக்க வல்லார்க்குத, தீக்கடவுளையுஞ

1. "The Vishanin bracketed with the Siva, which is thought to be a name of the Tugra, one of the oldest aboriginal Dravidian peoples, whom the Aryas had specially nicknamed 'Sons of the Serpent,' and who, under the religious designation of Siva, were very probably the originators of the worship of Siva under the form or with the attribute of a snake." Ibid, p. 328.

சிவபிராணையும பாடிய அம முனிவரெல்லாரும பண்டைத் தமிழ வகுப்பினரேயாதல் தெறறென விளங்காநிற்கும. இதனலன்ரே வசிட்ட மரபினரும விசுவாமித்திர மரபினரும ஒருவரையொருவர் மிகப பகைத்து வைதுரைக்கும் பாட்டுகள இருக்குவேதத்தினகட் காணப்படுவவாயின. இவர் தம்மிறரும இகலி நின்றதொனறின மட்டின் அமையாது வசிட்டக் குடியினர் விசுவாமித்திரக் குடியினர் வணங்கிய முழுமுதற் றெயவமாகிய சிவபெருமாணையுங் கூடச் 'ரூத்திரதெய்வம்,' 'சிசிஙதேவதை' எனப பெரிதும் இகழந்துபேசலாயினர். இஙஙனம வசிட்டரைக் குருவாய்க் கொண்ட ஆரியர், விசுவாமித்திரரைக் குருவாயக்கொண்ட தமிழரிடத்தும, அவர் வணஙகிய தமிழத் தெய்வமாகிய ஞாயிறு திஙகள தீ என்னும் ஒளிப்பிழம்புகளிடத்தும அப் பிழம்புகளினுட் கட்புலனுய விளஙகித் தோனறும் உருத்திரரிடத்தும வரைகடந்த பகைமைகொண்டமையாலனரே, பிற்காலத்தில் அவ்வாரிய வசிட்ட மரபினரின் வழித்தோன்றிய பார்ப்பனர ஆக்கிய 'வசிட்ட ஸ்மிருதி' முதல் அத்தியாயததில், "சதுரவேதீ ச யோவிபரோ வாசுதேவம் நவிந்ததி" எனறு தொடஙகுஞ் செயயுண் முதல் ஐந்து செய்யுட்கள, "நானகு வேதங்களிலும வல்லவனுயிருபபினும, வாசுதேவணை யறியாத ஒரு பார்ப்பனன், வேதமாகிய ஒரு பெருஞ சுமையைத் தாஙகி நடுங்கிக்கொண்டிருக்கும ஒரு பாரபபனக் கழுதையேயாவன. ஆதலால், வைஷணவனுயிருந்தாலனறி ஒருவன் பார்ப்பனத்தன்மையை இழந்துவிடுவன; வைஷணவனுயிருப்பதால் ஒருவனுக்கு முழுமுதறறனமை உணடாகின்ற தென்பதிற் சிறிதும ஐயம இல்லை. ஏனென்றால் நாராயணனே பரப்பிரமம; அவனே பார்ப்பனர்களுக்குத் தெய்வமாவன்; திங்களும ஞாயிறும் மறறையவும க்ஷத்திரியர்க்கும வைசியர்க்குந் தெய்வஙகளாகும; உருத்திரனும அவனையொத்த தெயவங்களுஞ சூத்திரர்களாலேயே இடைவிடாது வணங்கற்பாலன. புராணஙகளினும ஸ்மிருதிகளினும் உருத்திர வணக்கஞ் செய்கவெனக் கட்டளையிடும இடஙகள பாரபபனரைக் குறிப்பன அல்ல; இவ்வாறு பிரஜாபதி

வறபுறுத்திக் கூறினர். புராணங்களில் விதந்து சொல்லப் படும் உருத்திரவழிபாடும மூன்று கேற்றுகத் திருநீறு இடு தலும, க்ஷத்திரியர் வைசியர் சூத்திரர் எனனும இனத் தாரை நோகஙிச் சொல்லபபட்டனவே யல்லாமல், மறறை யோரை நோக்கின அல்ல. ஆகையாற, சிறந்த முனிவர் களே, பார்பபனர்கள திரிபுண்டரம அணிதல் ஆகாது."[1] எனறு வறபுறுத்தி, ஆரியப பார்பபனர் தமிழத்தெய்வ மாகிய உருத்திரரை வணஙகாவாறும, தீயினை வழிபட்டு அதன தூய அடையாளமாகத் தமிழர் இடுந் திருநீற்றை அவ ஆரியா தாமும அணியாவாறுந் தடைசெயவவாயின. இஙஙனமாகப பண்டுதொட்டு ஆரியா தமிழரையுந் தமிழதெய்வமாகிய சிவபிரானையும் பகைத்து இகழந்து வருதல் பறறியே, அவவாரிய இனத்திற றமமைச் சேர்த் துக்கொண்டு வடமொழியையும வடநூல்களையுமே தமக் குரியவா வெனறு தழீஇத், தமமைப பாரபபனரெனறு சொல்லிக்கொளளும இஞ்ஞானறை மக்களெல்லாரும, சிவபிரானைச் சூத்திரதெயவமெனறுந் தேவார திரு வாசகத் தமிழமறைகளைச் சூத்திரபபாட்டெனறும இழித் துரைததுத், திருமாலின் அவதாரங்களாகத் தாம பிழை படக்கொண்ட இராமன் கணணன் என்பாரை மட்டும வணஙகி வடநூல்களையே ஒரு வரைதுறையினறிப் பாராட்டி வருகினறனர். இவவாறு தொனறு தொட்டு இனறுகாறும நடைபெற்றுவரும ஆரியர் ஒழுகலாறறினை நடுகினறு நனகாயந்து காணும நுணணறிவாளர் எவர்க் கும, இருக்குவேதத்திற் 'பரதர்' முதலிய பெயர்களால் வழங்கப்பட்ட பண்டைத் தமிழ் நன்மக்களே ஞாயிறு திஙகள தீ என்னும் முத்தீவடிவில் வைத்து முழுமுதற் கடவுளான சிவபிரானை வழிபடும் நுட்பமுறையைக் கண் டோராவர் எனனும அரும்பேருண்மை தெற்றென விளங்காநிற்கும்.

---

1. See the great vedic scholar Prof. Max Muller's 'A History of Ancient Sanscrit Literature,' Panini office publication, p. 29.

பரதகண்டமாகிய இத் தமிழநாட்டுட் புகுந்து பல் வகைச் சூழச்சிகளால் தமிழரது உறவைபபெறறு ஆங் காஙகுக் குடியேறி நிலைபெறற ஆரியர், தமக்கு முன்னே நாகரிகத்தில் மிகச் சிறந்தாராயத் திகழந்த தமிழமக்கள செய்து போதரும் முத்தீ வேளவியினைக் கண்டு, அதைப் போற றுமும வேளவி வேட்கத் தலைப்பட்டனர். இருக்கு வேத காலத்தில் தமிழ்ச் சானறோகளே முத்தீ வேளவி கள வேட்டனரன்றி, ஆரியக்குருமார் அவறறை வேட்டன ரல்ல ரென்பதூஉம், எஜுர்வேத சாமவேத காலஙகளிலே தாம அவர்கள தமிழாசிரியரது துணைகொண்டு அவற்றை வேட்கலாயின ரெனபதூஉம ஐரோபபிய ஆசிரியரான மாக்ஸ்முலர் விளக்கியவாறருளும நனகுணரபபடும.[1] ஆரியர் தாம வேளவிவேட்கத் தெரியாத காலஙகளினெல்லாம் 'விசுவாமித்திரர்,' 'ஜமதககினிகள' முதலான தமிழக் குருமார்களைத் தமபால் வருவிததுத் தமக்குரிய இந்திர தெயவத்திறகு வேளவி வேட்டமையும, அவவாற்றால் தாமும வேளவிவேட்கத் தெரிந்து கொண்டபின அத் தமிழகுருமாரை விலககித் தமக்குக குரவர்களாக வசிட்டர் முதலாயினரைககொண்டு அவ்வாரியர்கள வேளவிவேட்கலானமையும, இஙஙனஞ் செயதுபோந்த ஆரியரது படிற றொழக்கத்தால் இருதிறத்துக குருமார் களுக்குட் பகைமையும அதுவாயிலாக அவை விருதிறத் தாரின அரசர்க்குட் போரும அடுத்தடுத்து நிகழலானமை யும இருககுவேதப பாட்டுகளைக் கருததூனறி யாராய வார்க்கு இனிது புலனகாகிறகும. தமிழர் வேட்கும முத்தீ வேளவியைப்போல், ஆரியரும வேட்கத் தொடங்கி வேளவிச் சடஙகுகளை அளவிறபபப் பெருக்கிப் 'பிராமணங் கள' வரைந்து, தமிழரசர்களை ஏமாறறி அவர்பாற் பெற்ற பெரும பொருட்டிரள கொண்டு, தாம ஊணுண்டு கட்குடிக் கும ஒழுகலாறு உடையராகலின், அதற்கேறபக் கொலையுங குடியும மலிந்த வேளவிகளைப பலலாயிரக் கணக்காக வேட்டுவந்தனரேனும, அவர்கள அவவேளவிகளிற சிவ பெருமானை வணஙகினவர் அல்லர்.

1. Ibid, pp. 236-238.

தமிழச் சான்ரோர்கள் வேட்டுவந்த வேளவிகள அத் துணையுங கொலியுங் குடியும இல்லாதனவாய்ச் சிவபிரான் ஒருவனே மட்டுமே வணங்குதற் பொருட்டு வேட்கப்பட்டன; ஆரியர் வேட்ட வேளவிகளோ பல்லாயிரக் கணக்கான உயிர்களைக் கொனறுந் தொட்டி தொட்டியாகச் சோமப் பூண்டில் இறக்கிய களனே யுணடும இந்திரன் வருணன் முதலான சிறு தேவதைகளை வணங்குதற பொருட்டாகவே வேட்கபபட்டன.

தமிழர் தியினையும ஞாயிறு திங்களினையும வழிபடுங் கால் அவை முழுமுதற கடவுளோடொபப ஒளிவடிவின வாய விளங்கும நுட்பம உணர்ந்து, அவற்றை இறை வறகு உடமபாகவும இறைவனே அவற்றிறகு ஓர் உயிராக வுங்கொண்டு அவ் வொளிவடிவுகளைச் சிறந்தெடுத்துப் பாராட்டி வழிபட்டனர்; ஆரியரோ, தாம படைகளும ஊனையுங் களனையும ஏற்று அவறறை இந்திரன் முதலான சிறுதெய்வங்கட்குச் சேர்பபிகளும ஓர் ஏவலனாக இழிந்த நிலைமைக்கண் வைத்துத் தீகடவுளை வணங்கலாயினர். இவ்வாறு தமிழர் வேட்ட வேளவிகட்கும ஆரியர் வேட்ட வேளவிகட்கும உளள பெரியதொரு வேறுபாட்டினைத் தெரித்தற் பொருட்டே சைவசமயாசிரியரான திருநாவுக் கரசு நாயனார்,

"எரிபெ ருக்குவர் அவ்வெரி ஈசனது
உருவ ருக்கம தாவது உணர்கிலார்,
அரிஅ யற்குஅரி யானை அயர்த்துப்போய்
நரிவி ருத்தம தாகுவர் நாடரே." (பொது)

எனவும்,

"அருக்கன் பாதம் வணங்குவர் அந்தியில்
அருக்கன் ஆவான் அரன்உரு அல்லனே?
இருக்கு நான்மறை ஈசனையே தொழும்
கருத்தி னைநினை யார்கள் மனவரே." (பொது)

எனவும் அருளிச்செய்திட்டார். தியும ஞாயிறுஞ் சிவபெரு மான்றன திருவுருவங்களாதலை உணரப்பெறுத ஆரியப்

பார்ப்பனரை "நரிவிருத்தம தாகுவர்," "கன்மனவர்" என்று ஆசிரியர் இரங்கி இகழ்ந்துரைத்தமை நினைவிற் பதிகற்பாற்று. அவ்வாரியர் மூழுமுதற் கடவுளாகிய சிவபெருமானை வணங்குதல் விட்டு, அரிபிரமன இந்திரன் எனனுஞசெத்துப பிறகுஞ் சிறுதெயவங்களை வழிபடுதல் கண்டனரே இரங்கி மனங்கொதித்துப் பின்னும அப் பெருந்தவ ஆசிரியர்,

"செத்துச் செத்துப் பிறப்பதே தேவென்று
பத்தி செய்மனப் பாறைகட்கு ஏறுமோ?
அத்தன் என்று அரியோடு பிரமனுந்
துத்தி யஞ்செய நின்றநற் சோதியே." (பொது)

எனவும,

"நூறு கோடி பிரமர்கள் நொங்கினர்
ஆறு கோடி நாராயணர் அங்ஙனே
ஏறு கங்கை மணல்எண்ணில் இந்திரர்
ஈறு இலாதவன் ஈசன் ஒருவனே." (பொது)

எனவும நிரமபக் கடுத்த சொல்லில் எடுத்து இடித் தறிவுறுத்தருளினர். இவரைப போலவே சைவசமய முதலாசிரியரான மாணிகக்வாசகப் பெருமானும்,

"கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினதடியாரொ டல்லால் நரகம் புகினும்
எள்ளேன் நிருவருளாலே இருக்கப்பெறின் இறைவா
உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்லா தெங்கள் உத்தமனே."
(திருச்சதகம், உ)

என்றும்,

"புற்றில்வா ளரவும் அஞ்சேன்
பொய்யர்தம் மெய்யும் அஞ்சேன்
கற்றைவார் சடைஎம் அண்ணல்
கண்ணுதல் பாதம் நண்ணி

மற்றும்ஓர் தெய்வந் தன்னை
உண்டென நினைந்துஎம் பெம்மாற்
கற்றிலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே '' (அச்சப்பத்து, க)

என்றும் திருவாசகத்தில் அருளிச்செயதிருத்தல் காண்க.

இவ்வாறு பிறபபு இறபபு இல்லாச் சிவபெருமானை முழுமுதற கடவுளாதல் தெரிந்து, ஏனைச் சிறு தெய்வங்களெல்லாம பிறப்பு இறபபுகளுட் கிடந்து அவன ஆணை வழி யுழலுஞ சிறறுயிர்களாதலுங காட்டிச் சைவ சமயாசிரியர்களெல்லாரும ஒரே முகமாய அசசிறுதெயவ வணக்கதைத மறுத்து விலகிய செந்தமிழ் அருளுரைகள வெளளிடை மலைபோல் விளஙகிக் கிடபபதும, இஞஞான்று தம்மைச் சைவரெனவுங கூறிக் கொளவார் சிலர், ஆரியரது சூழச்சியில் வீழந்து ஆரிய வேதஙகள சிவபிரான அருளிச் செயதனவேயா மெனனும ஒரு பொருந்தாக் கொளகை யினை நாட்டுதற்குப புகுந்து, இறைவனறன் திருவுருவ வழிபாட்டினை இகழந்து மறுத்துத் தம வாழநாள எல்லை யளவுஞ சைவசமயத்துக்கு மாறுய நின்ற 'தயாநந்த சரஸ்வதி' எனனும வடநாட்டு முனிவரரின கொள்கை யைத் தழீஇ, இருக்குவேதத்திற் சொல்லபபட்ட இந்திரன் மித்திரன வருணன முதலான பல தெயவப் பெயர்களெல் லாம் ஒரு தெயவத்தின் மேலனவே யாமென்றும், ஆரிய வேதங்களினபடி வேட்கபபட்ட வேள்விகளில் உயிர்க் கொலை நிகழவில்லையெனறும, உயிர்க்கொலை செய்கவென ஏவுஞ சொற்றொடர்கட்கெல்லாம வேறு பொருளகள உள வெனறுந் தத்தமக்குத் தோன்றியவாறெல்லாம பேசி, இலக்கண இலக்கிய அளவை நூல் வரமபுகளைக் கடந்தும், தொனறுதொட்டு வரும ஆரியர்தம ஒழுகலாறறுக்கும, வேதங்கள பிராமணங்கள் தரும சூத்திரஙகள முதலான ஆரிய நூல்களில் மிக விரிவாகவும விளக்கமாகவுஞ் சொல்லப்பட்டிருக்கும உயிர்க்கொலை வேளவி முறைகட் கும் முற்றும மாறுனதொரு கோட்பாட்டினைக் கிளப்பியும் பெரியதோர் ஆரவாரம் புரிவாராயினர்.

இந்திரன் முதலிய பெயர்கள் முழுமுதற் கடவுளையே குறிப்பது உண்மையாயின, அப பெயர்களால் உணர்த்தப்படும அத் தெயவங்கள முழுமுதற கடவுட்குரிய இலக்கணங்கள் உடையவாய இருத்தல் வேண்டுமனறே? இந்திரன் சோமன் என்பார் பிரஜாபதியாற் படைக்கப பட்டவர் எனச் 'சதபதபிராமணங' (கக, க, சு) கூறுதலானும, மித்திரன, வருணன, தாத்ரி, அர்யமான், அமசன, பகன், விவஸ்வதன், ஆதித்யன எனனும் எண்மரும அதிதியின் புதல்வரென அஃது அங்ஙனமே எடுத்துச் சொல்லுதலானும, கட்குடியும விலங்குகளின கொலையால் வரும ஊன உணவும் அவ இந்திரன் முதலியோர் கைக்கொண்டமையும் தந்தையைகொல்லல் மகளைப் புணர்தல் முதலான மிக இழிந்த செயல்களை அவா புரிந்தமையும மேலே ஈஎஉ-ஆம பக்கம முதல் ஈஅ0-ஆம் பக்கம வரையில் எமமால் எடுத்துக் காட்டபபட்டிருத்தலானும, இத் தேவர்கள பகைவராற பலகாலும் தோல்வியுறறு வருந்தி வந்தமையின் தாம சாவாதிருத்தறகு மருந்துவேண்டி முயனற காலத்தில் அவரைக் கொல்லும நஞசு ஒனறு எழ அதனைச் சிவபிரான உடகொண்டு அத் தேவர்களைக் காத்தமை "கேஸி விஷஸய பாத்ரேண யத் ருத்ரேணபிபத சஹரா" (க0, கஈசு, எ) என இருகசு வேதத்தின கண் நனகெடுத்துக கூறபபட்டிருத்தலானும அத தேவரெல்லாரும மகளோடொத்த சிறறுயிர்களேயாவ ரல்லது முழுமுதற் கடவுளராதல் செல்லாது. மறறுச், சிவபிரானே உயிர்கட்குளள இக குறறங்கள சிறிதும அணுகப பெறாதவனகலின அவன ஒருவனே எல்லா முதனமையும உடைய முழுமுதற் கடவுளாதலும மேலே விளககப் பட்டது. இனனும இதன விரிவை வேளாளர் நாகரிகம எனனும எமது நூலிற கண்டு கொளக.

ஆரியர் உயிர்களை ஏராளமாய்க் கொன்று தாம வணஙகி வந்த சிறு தெயவங்களுக்கு அவறறின் இறைச்சியைப படைத்துத் தாமும அயினறுவந்தமை இருக்கு வேதத்திலேயே பற்பல இடங்களிலும் தெளிவாகச் சொல்

லபபட்டிருக்கினறது. அதன முதன் மண்டிலத்து, ககசு-ஆம் பதிகத்தின எ-ஆவது செய்யுளில் அசுவினி தேவர்கள கக்ஷீவானுக்கு நூறு சாடிச் சாராயங் கொடுத்தமையும, கசு-ஆவது செயயுளில் 'ரிஜிராசுவன' அசுவினி தேவர்களின ஊர்தியான கழுதையினபொருட்டு விதையடித்த நூறு செமமறியாடுகளை வெட்டி அவறறின ஊனை உணவாகப படைத்தமையுஞ் சொல்லபபட்டிருக்கின்றன; ககஉ, ககஙூ-ஆம பதிகங்களில் வெளளாட்டினையுங் குதிரையையுங கொன்று அவறறின் ஊனைச் சமைத்துப 'பூஷன்,' 'இந்திரன' எனனுந் தெயவங்கட்குப படைத்தமை விரிவாகக் கூறப்பட்டிருக்கினறது; அதன் ஐந்தாம மண்டிலத்து உசு-ஆம பதிகதத்தின எ-வது செயயுளில் முநூறு எருமை மாடுகளைக கொனறு அவறறின இறைசசியை நெருபபில் வாட்டிப பதபபடுத்தி அதனை மூனறு பெரிய தொட்டிச் சோமச் சாராயததுடன இந்திரனுககுப பலியூட்டினமை வெளிபபடையாக நுவலபபட்டிருக்கினறது; அதன ஆறாம மண்டிலத்து கள-ஆம பதிகதத்தின கக-வது செயயுளிலும அஙஙனமே நூறு எருமை மாடுகளைக் கொனறு தியிற பதபபடுதது அவனை மூனறு பெரிய தொட்டிக களுடன இந்திரனுககுப படைதததமை தெளிவாக மொழியபபட டிருககினறது; அதன பததாம மணடிலதது கசு-ஆம பதிகதத்தின ச-வது செயயுளில் ஆரியர் தமமுள இறந்துபோன ஒருவனைச சுடுகாட்டின விறகினமேல் வைததது கொளுத்தப் போகையில் ஓர ஆட்டைக கொனறு அதன உறுபபுகள ஒவவொனறனையும பிணமாயக கிடபபவன உறுபபுகளின மேல் வைத்து அவனைக கொளுத்தினமை கூறபபட்டிருககினறது; அம மண்டிலதது அநு-ஆம பதிகதத்தின கஙு-வது செயயுளில் ஒருவனுக்கும ஒருதத்திக்கும மணம நடதது தறகுமுன மகளின நாளிற காளைமாடுகளைக் கொனறு பகலவனுக்குப பலியூட்டி, அதனபிற பஙகுனி நாளில் மணம நடததும முறை பகரபபட்டிருக்கினறது; அம மணடிலத்து அசு-ஆம பதிகத்தின கச-வது செயயுளில் ஆரியர் பதினேந்து எருமை மாடுகளைக் கொனறு

இந்திரனுக்குப் படைக்க, அவன் அவற்றின் கொழுபபை ஆரத்தினறு வயிறு நிறைந்தடைந்த மகிழச்சி எடுத் துரைக்கப்பட்டிருக்கின்றது ; அம மண்டிலத்து கூக-ஆம பதிகத்தின கச-வது செயயுளிற குதிரைகளையும எருதுகளையும ஆகுகளையும வறட்டு ஆகுகளையும செமமறி யாடுகளையுங கொனறு ஆரியர் வேளவி வேட்டமை விளக்கமாக விளமபபபட டிருகின்றது. இருக்கு வேதத் திறகுப பின எழுந்த 'பிராமணங்கள,' 'ஸமிருதிகள' எனப வற்றில் விரிவாகச் சொல்லபபட்டிருக்கும உயிர்க்கொலை வேளவிகள தாம இருக்குவேத காலததிறகுபபின உண் டாயினவெனறு கூறத்துணிபவர், இருக்குவேதத்திலேயே ஒருகாலனறிப பலகாலும இஙஙனம விளகுகமாக சுவலப பட்டிருக்குங குடி கொலை மலிந்த வெறியாடடு வேளவிகளை நிகழவில்லையென்றலும, அவை தமக்கு வேறு பொருளகள உளவெனறலும 'முழுப பூசனிகுகாயைச் சிறு சோறறில் மறைபபதறகே' ஒபபாய ஆராயச்சி யறிவுடையாரால் நுகை யாடி விடுக்கறபாலவாய ஒழியும எனக. இவை தமக் கெல்லாம வேறு பொருளகள உளவெனபா கூறறுத், 'தவவொழுக்க மெனபது ஏதேனும உயிரையுங கொனறு அதன ஊனை உண்ணுமையேயாம' எனறு வறபுறுத்தி ஔவைப்பிராட்டியார் மொழிந்த "நோனபெனபது கொனறு தினனுமை" எனனும அறிவுரைத் தொடரைத் தன கருத் துக்கு இணஙகுமாறு பொருளபடுத்த வேண்டினன ஓர் ஊன்தினனி, 'தின்னுமை' எனனும ஒரு சொல்லைத் 'தின் ஆமை' என இரண்டு சொல்லாகவும், 'தின் ஊ மை' என மூனறு சொல்லாகவும பிரித்து 'ஆமை இறைச்சியைத் தின்னல்' எனவும, 'மாடு ஆடு என்பவற்றின இறைச்சி யைத் தின்னல்' எனவும பொருளுரைத்து, ஆகவே 'தவ வொழுக்க மென்பது ஆமை மாடு ஆடு எனபவறறின ஊனை யுணவாகக் கொளளுதலேயாம' எனறு அவ வறி வுரைக்குப் பொருளகூறி ஆரவாரம புரிதலோடு ஒப்பதா மன்றிப் பிறிதென்னை? ஒரு நூலின போக்கையும அதனை இயறறிய ஆசிரியர் கருத்தையும பிறழத்திக், தாம் வேண் டியவாறெல்லாம உரை யுரைபபதும மெயயுரை யாகுமா?

எனவே, தெனஞுட்டுச் சைவ முனிவரர் எவரது அருளுரை யுந் தமது மருளுரைககு இடந்தந்து உதவி செயயாமை யின், அத் தெயவ முனிவரரைத் தமக்கு மேறகோளாகக் கொளளுதல் ஆகாமை கண்ட இந் நாட்டுப போலிச் சைவர் சிலரும மாயாவாத வேதாந்திகள பலருந் தாது போலிக் கொளகைககு இசைந்த வடநாட்டு முனிவரர் தயாநந்த சரஸவதியை அடைக்கலமபுக்கது சாலப பொருத்தமேயாம. புகழும என ! அவர் கைக்கொண்ட இருக்கு வேதமே அவரது கோட்பாட்டினை பொய்மமை காட்டி அவரைக கைவிட்டதாயின, தயாநந்த சரஸவதி அவர்க் கெங்ஙனம உதவி செயயவல்லார் !

அறறேல் அஃதாக, ஆரியமொழி நூல்களாகிய 'இருக்கு,' 'எசுர்' முதலியவறறில் தமிழச் சான்ரோர்தங கோட்பாடுகள புகுந்தவாறு எனனேயெனிற கூறுதும : ஆரியா நலலுணவும நல்லுறைவிடமும பெறுதறகுத் தேடியலைந்து தமிழ நிலமாகிய இப பரத நாட்டிற புகுந்த காலததுப பெருமபாலும போர் மேறகொண்டே போந்தனர ; அபபோது தமிழாகள நாகரிகததின் மிக்காராய, ஆஙகாஙகு நகரஙகளும, அந நகரஙகளில் அரசியல் களும அமைததுப பொருளவலியும படைவலியும போர் வலியும மிகப படைத்தவாகளாய வாழந்து வந்தமையின, பசித்துவந்த வறியராகிய ஆரியர் பண்டைத் தமிழமக்களை எதிர்த்து வெல்லுதல் இயலாதாயிறறு. இயலாதாகவே, பலவகையாலும் தமிழாதம் நட்பையும உறவையும பெறுதறகுச் சூழச்சிசெய்து, தாம் 'உத்தரகுரு' வெனனுந் தேவ நாட்டிலிருந்து வந்த தேவர்களேயென்றும், தாம பேசும் மொழி தேவமொழியே யெனறும், தம்மைப் பகைத்தலும் தமக்கு இடர்செயதலும அஞஙஙஞு செயவாரை மீளா நரகிறகு ஆளாக்கு மெனறும், தமமை வணஙகித் தாம ஏவிய செயதொழுகுவார்க்கு இமமையில் எல்லா நலஙகளும பெருகுவதனறி மறுமையிலும பிதிரர்களால் உவந் தேறறு உயர்ந்த இனப உலகஙகளில் வைக்கபபடுவதுங் கைகூடுமெனறுஞ் சொல்லித் தமிழரிற் பெருமபாலாரை

ஆரியர் தமவயப்படுத்திவிட்டார். அஞ்ஞான்றை ஆரியரிற் பெருமபாலார் வடக்கே பனிமிகுந்த நாடுகளிலிருந்து வந்த வர்களாதலின அழகிய வெண்ணிறமுளள உடமபும நீல விழிகளும வாயந்தவர்களாயிருந்தனர். அவர்களது அழகிய தோற்றத்தைக்கண்ட அஞ்ஞானறைத் தமிழரிற பலர், அவ்வாரியர் சொல்லே மெயயென நமபி அவர்களைத் தமமினும உயர்ந்த தேவர்களாகவே எணணிக கொண்டாடி அவர்க்குப் பணிந்தொழுகலாயினர். இவவளவுக்குத் தமிழரைத் தங கீழப்படுத்த இடமபெறற ஆரியர்கு இனி இஙகு ஆகாதது எனஉளது! ஆரியர் கடவுளராகவும, அவர் கொணர்ந்த ஆரியமொழி கடவுள்மொழியாகவும, அமமொழியில அவா பாடியபாட்டுகள 'இருகு,' 'எசு,' 'சாமம' எனனும வடிவிற புருஷமேதத்தில் (ஆணமகனைக்கொனறு வேட்ட வேளவியில்) தோன்றியனவாகவும (இவவாறு இருகுவேத புருடசூத்த மந்திரத்தில் எழுதிவைகபபட்டிருகினறது), பினனுஞ சிலகாலங கழிந்தபின இவவேதஙகள சிவபிரானாலேயே அருளிச் செயயபபட்டனவாகவும வைததுத தமிழா கொண்டாடுமபடி செயதுவிட்டனர். இவவளவில அமையாது, ஆரிய மொழி யல்லாத தமிழ முதலியன மககளால் ஆகபபடடனவாகலின் அவறறினகண் வரையபபட்ட நூல்கள ஆரியரால் ஏறகறபாலன அலலவெனவும, ஆரியமொழியில் உளள நூல்களே தலைமேறகொணடு ஏறறறகுரியன வெனவும, ஆரிய இனததவரல்லாத தமிழரும பிறரும ஆரிய மொழி நூல்களை ஓதுதறற குரிமையுடையரல்ல ரெனவும, தமிழரும பிறரும ஆரியா ஏவிய பணிசெயது ஒழுகுதல் ஒனறறகே உரியரெனவும மொழிந்து நாட்செல்லச்செலலத் தமது முதனமையினை நாட்டுதறகு வேணடும ஏறபாடுகளையெல்லாம ஆரியர் ஒரே கடடுபபாடாயிருந்து திறமாயச் செயதுகொணடனர். தமிழரில் வலியராயுளள அரசர்களையுஞ் செல்வவாழக்கையிற சிறந்த வணிகர்களையுந் தாம வகுத்த இக கட்டுபபாடுகளுகு உளளாகினால் தமது முதனமை நிலைபெறுதெனக கணடு, அரசரையும வணிகரையும மட்டுந் தமகுக் கீழ் ஒருபடி இரண்டுபடி

மட்டில் இறக்கி, அவர்களுக்கு 'க்ஷத்திரியர்,' 'வைசியர்' எனனும பெயர்களீச் சிறபபாகத் தருவதுபோற் றந்து, அவர்கள மகளிரோடு தாம கலக்கலாம, ஆனல் அவர்கள தம மகளிரொடு கலக்கலாகாதெனறும, அஙஙனஙக கலபப ராயின் அவர் பெருந் தீவிணைக்கு ஆளாகுவரென்றும, தமக்குக்கீழ இவ விருவகுபபினர் மட்டுந் தம்முடைய ஆரிய நூல்களீ ஓதுதறகு உரிமையுடையரென்றுஞ சொல்லி அவவிருவகுபபினரையுந் தம மினத்தவராககி, அவ்வாற் றுல் தமது முதனமை அவா தமகளுளளும நிலைபெறுதற்கு இடஞசெய்துகொண்டனர. இஙஙனமாக ஆரியரது சூழச் சியாற் பழந்தமிழ மகளுக்குட் பெரியதொரு மாறுதல் நிகழந்து பரவவே, ஆரியரால் உயாந்தவராகப பாராட்டப படுதலும, ஆரியமொழியைக் கறபதும, ஆரிய நூல்வழி யொழுகுதலும, தமிழையுந் தமிழவழஙகும ஏழைமகளீ யும இழிந்த நிலைமைகளட் படுத்துப பேசுதலுந் தமக்குச் சிறபபுத தருவனவாகத தமிழரிலேயே கறறவருஞ செல் வருமாயுளளார கருதுவாராயினர. அதனல், தமிழரில் அரச வகுப்பினரும பிறரும ஆரியமொழியை விருமபிக கறறு, அதனகண உரையாடுதலும நூல எழுதுதலுஞ செயவாராயினர. இஙஙனந் தமிழர்களுள ஆரியமொழியும ஆரியாதம வழகளவொழுகளஙகளும பரவவே, அவவாரிய வழகுகளுகளகு ஒருவாறருல் உடனபட டிருபபினும, அவறறின சிறுமையும தமிழ வழக்குகளின பெருமையும புடைபட ஒற்றி ஆராய்ந்தளந் துணர்ந்து உணமை கணட 'ஐஙகன,' 'அஜாதசத்துரு,' 'அஸவபதிகைகேயன,' 'பிரவாகணஜவலி' முதலாள தமிழவேந்தாகள, அமயம நேர்ந்துழியெல்லாம ஆரிய முனிவர்களுத தமிழச்சானரோர் நுணுகி யறிந்த மெயபபொருளகளீ அவர்களுரிய ஆரிய மொழியிலேயே யெடுத்துத தெருட்டி, அவர்க்கு மெய யறிவு கொளுத்தி, அவர் தம் ஆரியக் கோட்பாடுகள பயனிலவாதன மேலுந் தீவிணைப பாலவாதலுங காட்டி வரலாயினர். இவவாறு தமிழ வேந்தாகள ஆரியர்க்கு அறிவுறுத்தி வநத மெயயுரைத் திரட்டுகளே 'உப நிடதங்கள' எனப் பெயர்பெறுவவாயின. இத தமிழவேந்தர்

களின் பெயர்கள் ஆரியச் சொற்களாயிருத்தல் கொண்டு அவரெல்லாம் ஆரியர் போலுமென மயங்கிவிடற்க. சேக்கிழார் அருளிய திருத்தொண்டர்புராணத்திலுள்ள சிவனடியாரின் தனித்தமிழ் இயற்பெயர்கள பலவற்றை வடநூலார் தமது வடமொழியில் மொழிபெயர்த்து வைத்துக் கொண்டவாறு போல, அவ வேந்தர்களின பண்டைத் தனித்தமிழ்ப் பெயர்களும அவவாறு ஆரியமொழியில் மொழிபெயர்த்து அமைக்கபபட்டன வென்ற உணர்ந்து கொளக. இன்னும் தமிழரச வகுப்பினின்றும் துறவு புகுந்த 'விசுவாமித்திரர்,' 'தேவாபி' முதலான முனிவரர்களும ஆரிய மொழியைக் கற்று அதிற பெரும்புலமை மிகசு, ஆரியா கைக்கொண்டு போதருஞ் சிறுதெயவ வணக்கத்தையும உயிர்கொலை வெறியாட்டு வேளவிகளையுந் தொலைபபான் வேண்டியே ஞாயிறு திங்கள் தீ என்னும் ஒளிவடிவுகண் மேலும, அவற்றினகண் ணெல்லாம அருளொளி வடிவினராய் விளங்குஞ சிவபிரான் மேலும பற்பல பதிகங்களை ஆரியாக்கு மாறுய் அவாதம் ஆரிய மொழியிலேயே இயற்றி, அவைதமமைத் தாம் மூழுமுதற்கடவுளை வழிபடுங காலங்களிற பயனபடுத்தி வந்தனர். இவ்வாறு விசுவாமித்திரர் முதலாயினர் ஆரிய மொழியிற பதிகங்களும நூல்களும இயற்றினும அவரெல்லாந் தமிழ வகுபபினராதலை யுணாந்தனறே மநுமிருதியும (கo, சுரு), '

> "இருபிறபபாள ரல்லாத மற்றை எல்லா வகுப்பினரும மிலேச்சர்தம் மொழியைப பேசினும அல்லது ஆரியர்தம மொழியைப் பேசினும அவரெல்லாந் தஸ்யுக்களேயாவர்."

எனக் கூறுவதாயிற்று. இதனால் ஆரியரல்லாத தமிழரும் பிறரும அக்காலத்தில் ஆரியமொழியைப பேசினரென்பது பெறபபடுகின்றதன்றே ?

தஸ்யுக்க ளெனப்பட்ட தமிழரில், அரசராயினரையும அவருட் டுறவுநிலை புக்காரையுஞ செல்வவள முடையாரை

யும வேறு போக்கினமையாலே கூடித்திரிய வைசிய வகுப பினகட் சேர்த்துகொண்ட ஆரியா, அங்ஙலஞ சேர்க்கப பட்ட அவர்கள தமககு மாறுலா தஸ்யுகளே என்பதனை அமயம வாய்த்துழியெல்லாம வெளிபபடையாகக் சொல் லியே வந்திருக்கினறனர. 'அஜீகர்தனன' எனனும ஆரியப பார்ப்பனன, தனமகன 'சுநஸஸேபனை' வேளவிக்களத்தில் வெட்டி வருணனுக்குப பலியூட்டவேண்டிக் கேட்ட 'ரோகிதன' எனபவனபால் நூறு கறவைமாடுகளை வாஙகிக்கொண்டு அவனை அவனுக்கு விறறுவிட்டது மனறி, வேளவிகளத்திற கொணரபபட்ட தனமகனைக் கழுத்தறுபபதற்கு வேறு யாருங் துணியாராயப் பின் வாஙகுகிறறல் கண்டு, தனககு இனனும இருநூறு கறவைகள கொடுத்தால் தனமகன கழுத்தை வெட்டுவதாகச்சொல்லி, அஙஙனமே இருநூறு கறவைகள கொடுக்கப பெறறுகொணடு அவனிடமிருநத கழுதனதைக் கத்திகொண்டு அரியபபோகையில, அமமகன தனதந்தை யின கொடுஞசெயலைக்கண்டு அலறிக கடவுளரை வேண்டி அழாநிறப, அதுகண்டு பெரிதும நெஞசங்கரைநத விசுவா மித்திரர் அச சுநஸஸேபனை அக கொலலகுத தபபுவித்து, அவனைத் தம மகனகள எல்லார்க்கும மூத்த தலைமகனுக ஏறறுச் சிறபபுசெயதமையும, அந்நேரதில் அச் சுநஸ் சேபன விசுவாமித்திரரை நோககி ''ஓ பரதர்களுக்குத் தலைவரே'' எனறு விளிதது ''நுஙகள புதல்வர்கள இசைந் தால் எனக்கு நனமையுண்டாமாறும யான தஙகட்கு மகனுந் தன்மையடையுமாறும அவர்கள என்பால் நேய மாய இருக்கக் கறபியுங்கள'' என்று வேணட, அவரும் அதறகு ஒருப்பட்டுத் தமமக்கள் நூறுபேர்க்குந் தம் துணிபு தெரிவிக்க, அவருள் 'மதுசசந்தர்' எனப்படும இளைஞர் ஐம்பதின்மர்கு மூத்த ஐமபதின்மர் மட்டும் அதறகு உடன்படாராக, அதனால் விசுவாமித்திரர் அவர் மேற் சினங்கொண்டு ''நும வழியில் வருவார் இந் நாட்டை விட்டகன்று இதன் எல்லைப் புறஙகளில் இருக்க'' என்று வைதமையால் அம் மரபினரே ஆந்திரர், புண்டரர், சபரர், புளிந்தர், மூதிபர் ஆனமையும, தஸ்யுக்களிற் பெரும்

பாலார் விசுவாமித்திரா வழித்தோனறினமையும ஐதரேய பிராமணம் ஏழாம இயலில் (கங-முதல் கஅ-வரையில்) தெளித்துரைக்கப் பட்டிருத்தல் காண்க. இதனால், ஆரியபபார்பபனர் தாம பொருணமேல் வைதத பேரவாவால் எத்தகைய கொடுந்தொழிலுஞ செயதறகுப பின் இடையாராதலும, தமிழ்ச்சானறோர் இடருறற ஆரியர் மாட்டும பேரிரக்கமுடையராய அவர்க்குப பேருதவி புரிவாராதலும, ஆரியரல்லாத தஸயுக்க ளெல்லார்க்கும் பிறபபிடமாவார் விசுவாமித்திர மரபினரேயாதலும, தஸ்யுக்களிற சிறந்த 'பரதர்கு' விசுவாமித்திரரே முதறகுரவராதலும, ஆரியர் நேரதறகுத் தக்கவாறு தமமவரல்லாதாரை ஒருகால் தஸயுக்களெனை இகழந்தும பிறிதொருகால் கூதிரியர் வைசியரெனத் தமமோடு இனைப படுத்திப புகழந்துந் தமிழரை ஏமாற்றும நீரராதலும இனிது விளஙகுகினறனவலலவோ? இனனும, விசுவாமித்திர மரபினா உயர்ந்த மெயபபொருளுணாச்சி யுடைய ரெனபதூஉம, தாம ஆரிதின் உணாந்த மெயபபொருள்களோ, அவை யுணராத ஆரியமரபின வழிவந்த சுஸஸேபனுகசு அவர் அறிவுறுத்தின ரென்பதூஉம, விசுவாமித்திர மரபினரான காதினர்க்கு ஆரியவேதஙகளின் வேருகத் தெயவத்தனமை பொருந்திய மறறொரு வேதம் இருநததெனபதூஉம[1] அவ ஐதரேய பிராமணமே நன்கு உரைதருகினறது. இவ விசுவாமித்திர மரபினர்க்குரிய தெயவிகவேதமே அறம பொருள இனபம வீடு என்னும காறபொரு ளியல்புகளோயும, சிவபிராஜோயும, அவன் முனைத்து விளஙகும முத்தீ வழிபாடுகளோயும உணர்த்தும பண்டைத் தமிழ்வேத மாதலுந் தானே பெறபபடும.

இனனுந், தமக்கு உதவியுந் துணையுமா யிருந்து, தாஞ்செயது போந்த உயிர்க்கொலை வேளவிகளை நடத்தி வந்த வரையில் தமிழரை கூத்திரியராக வைத்துத் தமமோடினைபபடுத்திக் கொண்டாடிய ஆரியர், பின்னர்த் தம்மை அவர் ஒருபொருட் படுத்தாரானவழி, உடனே

1. "தைவ வேதேச காதிநாம்." ஐதரேய பிராமணம், எ, கஅ.

அவரை இழிந்தவராக்கிவிட லாயினர். இது, "வேளவி யாற்றுமையாலும பிராமணரோடு உறவு கலவாமையாலும, க்ஷத்திரிய மரபினரான பௌண்டரகர், ஓட்ரர், திராவிடர், காமபோஜர், யவனர், சகர, பாரதர், பல்லவர், சீனர், கிராதர், தரதர, கசர எனபார் வரவரச் சாதிபபுறமபான விருஷலரின நிலையை யடைந்தனர" என மநுவும (கo, சஙூ, சஅ), மாபாரத அநுசாசன பருவமும (உகoஙூ) உரைக்குமாற்றுல் நனகுணரபபடும. மேற்குறிதத தமிழரச மரபினர் அனவரையும ஆரியர் 'தஸயுகள' எனவே கொண்டு இகழந்தன ரெனபதறகு, மாபாரத துரோண பருவம் (சஎசஎ), "ஆயிரக்கணககான காமபோஜர், சகர், சபரர், கிராதர், வர்வரா எனபாரின குருதியினலுங தசை யினலும இவ வழகிய நிலததைச 'சைநேயன' சேறறுத் திரீன யாககினனர; கத்தரிக்கபபட்டுத் தலையில் மயிர் இலராயினும நீண்ட தாடிமயிரீன யுடைய தஸயுகளின தலைகளாலும, அவாதம முடிகளாலும மூடுணட நிலம, இறகிழந்த பறவைகளால் மூடுணட நிலமபோன றிருந் தது." எனக் கூறுதலே சானறும. இதனைடொபபவே அரிவம்சமும் (எஎஙூ), "சகர, யவனர், காமபோஜர், பாரதர், பல்லவா, கோலிசாப்பா, மகிஷர், தார்வா, சோழர், கேரளர் முதலிய அனவரும க்ஷத்திரியராகவே யிருந்தனர; ஆனல், வசிட்டருடைய சொலலால் தூண்டபபட்ட சிறந்த சகர வேந்தனல் அவர்கள் தமக்குரிய வாழக்கை யுயாவினையுஞ் சமய நிலையினையும இழககலாயினர்" என உரைத்தல் காண்க. மேலே குறித்துக் காட்டப்பட்ட இனததவர் பற்பலரும பண்டைத தமிழவகுபபினராதலும, ஆரியர் இங்கு வருதறகு முனனரே இந நாட்டின் பற்பல பகுதி களிலுங குடியேறி அவறறை அரசாண்ட அத் தமிழ் மக்கள தம்பால் வந்து அடைக்கலம புகுந்த ஆரியர் தம சூழல்களிற் சிககுணடு அவர்தனு சொற்படி நடந்து வந்த வரையில் அவர் தமமை 'க்ஷதிரியர்,' 'வைசியர்' எனப் பெயர் வைத்துச் சீராட்டிவந்த ஆரியர், பினனர்த் தம் தீவினைச் செயல்களைக் கண்டு தமமை அத் தமிழமக்கள் அருவருத்துவிட்ட வுடனே அவர்தமக்கெல்லாம் 'தஸ்

யுக்கள' என ஓர் இழிந்த பெயர் வைத்து அவரை ஒருங்கே இழித்துரைக்கலானதும, இவ்வாறுகத் தமிழரை இழித்துரைக்குமாறு ஆரியரை ஏவினவர் ஆரியர்க்குக் குருவான வசிட்டரேயாதலும மேற்காட்டிய வடமொழி நூல்களின உரைகளிலுலேயே நனகு தெளியபபடுகின்றன அல்லவோ ?

இனி, இருஞான்று தம்மைப பார்பபனரென உயர்த்துப பேசிக்கொளவாரும, அப பார்ப்பனரைப் பின்பற்றி யொழுகி அவ்வாறருல் தமக்கு உயர்வு தேடிக்கொள வாரும ஏனைப பொதுமக்களை இழிந்த நிலைமைக்கட்படுத்து நடததும இயல்புகளை உறறுககாண வல்லாகருப, பண டைக காலததுப பாரபபனரின ஒழுகலாறுகளும இவர் தமமோடொதத இயல்பினவாம உண்மை தெறறெனப் புலனுகாநிற்கும. மேல்நாட்டிலிருந்து போந்து இந்நாட்டை அரசாளும ஆங்கில நனமக்களின மொழியையும அவர் தம நடையுடை வழகக்ங்களையும பினபற்றி அவர்பாற பல சிறப்புக்களையும பெற முந்துவோர் பார்பபனரேயாவர். ஏனைப பொதுமக்களின வேருகத் தமமைப பிரித்து உயர்ததுதறகும, செல்வவாழக்கையிற றலைமைபெற்று வாழதறகும ஏதுவாவது ஆங்கில மக்களின நாகரிகத்தைத் தழுவி யொழுகுதலே எனக் கண்டுகொண்ட நாள தொட்டுப, பார்பபனர் பெரும்பாலும ஆங்கிலமொழி யையே கறறலும, அதனுலேயே உரையாடுதலும, ஏனைத் தமிழரையுந் தமிழையுஞ 'சூத்திரர்,' 'சூத்திர பாஷை' என இகழ்தலுஞ செயதல் எவரும் உணர்ந்ததே யாம. இஙஙனமே பணடைநாளி லிருந்த பார்ப்பனரும், தமமைத் தமிழரின வேருக உயர்த்துதற்கு வாயிலாவது ஆரிய மொழியையும ஆரிய சொழுகலாற்றையும பினபற்றுதலே எனக கண்டவளவாலே ஆரிய மொழியைக் கற்று ஆரிய வழக்குகளைத் தழுவித், தமிழரெல்லாரையுந் 'தஸயுக்கள' எனவும், தமிழரின் மொழியை 'மிலேச்சமொழி' எனவும் இகழ்துரைபபா ராயினர். இஞ்ஞானறைப பார்ப்பனர், தமிழரிற சிறந்த அரசரையும் செல்வ வாழ்க்கையிற் பெரிய

வணிகரையும அவ்வாறிகழங் தொதுக்குதல் ஆகாமல் அவரைத் தாம சாாந்து பிழைகக வேண்டியிருத்தல் கணடு, அவரை 'கூத்திரிய வைசிய' வகுபபினபாற படுத்துக்கொணடாடுதல் போலவே, பண்டைப பார்பபனருந் தமிழ அரசரையும வணிகரையும 'கூத்திரிய வைசிய' வகுபபின்பாறபடுத்துக் கொண்டாடலாயினர். திருவலங்தை அரசர், மைசூர் அரசர் முதலாயினரை 'கூதத்திரியர்' எனவும, நாட்டுகோட்டை வணிகரை 'வைசியர்' எனவுங கொண்டாடி, அவர்பாலுளள பொருட்டிரகீயும் பிறநலங்களீயும இஞ்ஞானறைப பாரபபனர் கொளகீா கொண்டு நுகர்தல் காணக. இவர்தம பாராட்டுரையில் மயஙகி இவவரசரும இவ வணிகரும் தமமை அப பாரபபரகு அடுத்தநிலையில் உயர்ந்தவராகக் கருதி வைத்துக்கொண்டு தம மினததவரான ஏனைத் தமிழமக்களெல்லாரையுஞ 'சூததிரர்' எனா இகழந்துரைத்து ஒழுகுதல் போலவே, பணடைத தமிழ மனனரும வணிகரும பார்பபனா தம பொயப பாராடடுரையில் வீழந்து தமமினத்தவரையுந் தமிழையும புறமபழித்து வந்தனா. இனனும இஞ்ஞானறு, பாரபபனாதம பாராட்டினையே பெரிதாகக் கருதிப பிழைபபா செல்லாருந், தமமோடொத்த தமிழர் பாற சிறிதும உறவுகலக்க இசையாராய, அப பார்பபனர் பாலும உறவு கலதல் இசையாதெனும அவாதம புறக்கடை வாயிலிற் காத்திருந்து அவா வீசியெறியும எசசிற் சோற்றை யுண்டு, அப பாரப்பனர்தங் தெயவத் தன்மையினையும அவாதம ஆரியமொழி நூல்களின் தெயவத் தனமையினையும அப பார்பபனரினும பார்க்க உயர்த்துப பேசித், 'திருநாவுக்கரசர்,' 'மெயகண்டதேவர்,' 'சேக்கிழார்' முதலான அருட் பேராசிரியராகீயும பாரப்பனர் கூறுஞ் சூத்திர வகுபபின்பாற் படுத்து, அவர் அருளிச்செயத அருளநூல்களீயும வடமொழியிலிருந்து கடன்கொளபபட்டனவாக மொழிந்து, உண்மைக்கு மாறுனா பொயபபடுகுழியில் வீழந்து அலகைபோல் அலறுதல்போலவே, அஞ்ஞான்றைப பார்பபனர்தம பாராட்டினை விழைந்த தமிழருங கோடரிக்காமபை யொப்

பத் தமமினத்தவர்க்குந் தமது தமிழ்மொழிக்கும் இழைத்த தீங்குகள அளப்பில. தமிழர்க்குந் தமிழக்குந் தமிழநாட்டுக்கும் ஆரியரால் விளைந்த பொல்லாங்குகளை விடத், தமமை அவ ஆரிய இனத்திற் சேர்த்துக்கொண்ட பார்ப்பனராலும, அவர் தமமால் ஒதுக்கபபட்டிருந்தே அவர் தம் பாராட்டுரையினை மேலதாகக் கருதி அவர் வழிச் சார்ந்தொழுகிய தமிழராலும விளைந்த பொல்லாங்குகளே மிகக் கொடியனவாமெனறு உணர்ந்துகொளக. இஞ்ஞான்று ஆரியர் என ஒரு தனி வகுப்பார் காணப்பட்டிலரேனும், தமிழரிலிருந்தே பெருந்தொகையினர் ஆரிய ராய்மாறிப் பார்ப்பனப் பெயர் புனைந்து வடமொழி நூல்களை ஓதித், தமிழாகவும் தமிழ மொழிக்கும், தமிழத்தெய வக்கொளகைக்கும மாறுய நினறு வருதல் போலவே, அஞ்ஞானறும் தமிழ வகுப்பினரும் பிறரும பெருந்தொகையினராய் ஆரியர் ஒழகலாறுகளை கைக்கொண்டு வடநூல்களைப் பயினறு தமிழவழக்குக்கு முழுமாறுய் நினறனர் எனக. இப பெறறியினரால் எழுதபபட்டனவே வடமொழியில் உளள பல பிராமணங்கள, கல்ப சூத்திரங்கள, மீமாஞசை, பொயக்கதை பொதிந்த புராணங்கள முதலாயினவாகுமென்று உணர்ந்துகொளக. இனி, இஞ்ஞானறும பாரபபனர் கட்டிய பொய் வழக்குகளின பெற்றி தேற்றி, அருளொழுகமாட்சியும முழுமுதற கடவுள வழிபாடும் தெருட்டுவார் உளராதல் போலவே, அஞ்ஞானறுங குடி கொலை மலிந்த ஆரிய வேளவியின தீவினைப பெறறியுஞ சிறுதெயவ வணக்கச் சிறுமையும் தேறறி அனபும அருளும பெருகச்செயத தமிழச்சானறோரும உளர். அவர் அருளிச் செயதனவே: முத்தீ வேளவியும உருத்திர வழிபாடுஞ சிறந்தெடுத்துக்கூறும இருக்கு எசுர் சாம அதர்வ வேதப பதிகங்கள சில பலவும, உணமைவழா உபநிடதங்களும, சாஙகிய யோக வைசேடிக நையாயிக வேதாந்த சூத்திரங்களும, மறசம வாயு முதலான சில புராணங்களும, பௌட்கரம, மிருகேந்திரம முதலான சில சிவாகமங்களும பிறவுமாம. இஞ்ஞான்றும ஆஙகில மொழியைக் கறறு அதன்கண் நலஙகிளரும நூலகள் பல இயற்றும் தமிழர்

களும ஏனை வகுப்பினரும உளராயினறபோலவே, அஞ ஞான்றும ஆரிய மொழியைக் கற்று அதனகட் பயன பெருகும நால்வேதப பதிகங்களும உபநிடதம் முதலிய அறிவுநூல்களும் இயற்றின தமிழச்சானறோர் பலரும உளரானர் எனறு தெளிக இஞ்ஞானறை ஆஙகில மொழி யில் ஆஙகிலரும ஆஙகிலரல்லாத பிறரும இயற்றிய நூல் களில் அவவவர் இயற்கைகளும அவவவர்க்குரிய கோட் பாடுகளும பிரித்தறியலாமபடி விளங்கிக் கிடத்தல் போலவே, அஞ்ஞான்றை ஆரிய மொழியுளும ஆரியரும் அவரைப பினபற்றினருந் தமிழச்சானறோரும ஏனைப் பிறரும இயறறிய பதிகஙகளும நூல்களும அவரவர்க் குரிய இயறகையுங கோட்பாடுகளும பொருந்தப பெறறன வாய, நுண்ணறிவினர்க்கு இவை ஆரியர் இயறறின, இவை தமிழர் இயற்றின, இவை ஏனைப பிறர் இயற்றின வெனறு பிரித்தறியலாமபடி விளஙகி நிறகுமெனக. எனவே, ஆரிய மொழியில் தமிழச்சானறோர் அருளிச் செயத பதிகஙகளும நூல்களும விரவி நிறகும இயலபு ஆராயச்சியறிவுடையாரகெல்லாந் தெற்றென விளஙகிக் கிடக்கு மெனக. பண்டுதொட்டே பல்வேறு நாடுகளி லுளள பல்வேறு மக்கட் பிரிவினருந் தத்தம் நாடுகளை விட்டகனறு ஏனை நாடுகளில் உளள ஏனை மக்களோடு கலந்துறவாடி வந்தனராகலின, அவர் தமமுள ஒரு வகுப் பினர் ஏனை வகுபபினரின் நடையுடை வழக்கங்களைப் பின் பற்றி யொழுகுதலும அவரது மொழியைத் தாங்கறறலும அம மொழியில தாம நூல்கள இயறறுதலும இயறகை யாய் நிகழப் பெறுமாறு வரலாறறு நூலுணர்ச்சி யுடை யார்க்கெல்லாம இனிது விளஙகிக்கிடபபதானறேயாம. ஆகவே, தமிழச்சானறோர் அருளிச்செய்த பதிகஙகளும, நூல்களும, அவர்தங கோட்பாடுகளும ஆரியமொழியிற புகுந்து நிலைபெறலானது ஒரு புதுமையனறென ஓர்ந்து கொளக.

என்றிதுகாறும விளக்கியவாறறுற், பிறப்பு இறப்பு இல்லா அருளொளி வடிவினனாகிய எல்லாமவல்ல முழு

முதற கடவுள, எத்துணையும் பெரிய தனது முழுமுதற் றனமையை எத்துணையுஞ சிறிய எம்மனோர் ஒருவாறருஞ யினுங கண்டு வழிபட்டு உய்தறபொருட்டு, எமமனோர் கண் கட்குப புலனும நெருபபொளியில் விளஙகித் தோன்றி நிறகும உண்மையினை முதனமுதற கண்டறிந்தோர் பரநர் எனனும பண்டைத் தனித் தலைமைத் தமிழச்சான்றோரே யாவரெனபதூஉம், அவ் வுண்மைக்கு மாறுகாமலே இருக்கு வேதம அனல் வழிபாட்டை ஓதும் இடங்களி லெல்லாம அதனைக் கண்டறிந்தவர் 'பரதரே' ஆவர் என வும, அதனால் அனற கடவுளும் அக் கடவுட்கு உயிராய விளஙகுஞ சிவபிரானும 'பாரதன,' 'பரதன' எனப பெயர் பெறுவரெனவும் தெளியக கூறுவதாயிற றெனப தூஉம், தீபபிழமபின வாயிலாக எல்லாம்வல்ல முதல்வனை நேரே கண்டு வணஙகும மாப்பெரு வணக்கத்தை முதன முதற் கண்டவர் தெனறமிழ நாட்டினகட் பணடிருந்த தமிழச்சானறோரேயாதல் பறறியே தீக்கடவுள வணகக த்தைத் தென்றிசைக் குரியதாககி அதனைத் 'தக்ஷிணக்கிநி' என வடநூல்களெலலாம ஒருமுகமாக நினறு ஒத் துரைபபவாயின வெனபதூஉம, தீபபிழமபானது 'ஞாயிறு,' 'திஙகள,' 'தீ' எனை முத்திறப்பட்டு நிறறலின அம மூன்றினும விளஙகித் தோனறும இறைவனை வழி படும வேளவியினையும் முத்திறபபடுமாறு வைத்து வேட்டு வந்தவர் இமயம முதற குமரியீறுகக் கிடந்த இபபரதநாட் டினகட் பண்டுவைகிய தமிழந்தணரே யாவரெனபதூஉம, விசுவாமித்திரர் முதலான தமிழந்தணர் வேட்ட முத்தீ வேளவி சிவபிரானமேற்றுய்க் குடி கொலை இல்லா அரு ளொழுக்க வழிபாட்டினபாலதாதல் பறறியே அம மெயமமையினை ஓதாதுணர்ந்த அருளாசிரியரான திரு ஞானசமபந்தப பெருமான அதனை "வேதவேளவி" எனப மீக்கூறுவாராயினரெனபதூஉம், தமிழந்தணர் வேட்ட முத்தீ வேளவியின நுண்பொருள மறைநுட்பம அறியப பெறுத பருபபொருளறிவினரான ஆரியப பார்ப்பனர் தாமும அவர்போல் வேளவியாற்றப் புகுந்து தமக்குரிய ஊனையுங கள்ளையும் படைத்து இந்திரன் முதலான சிறு

தெயவங்களை வணங்கி வெறியாட்டயர்ந்து வந்தமை கண்டே சைவசமய ஆசிரியரான திருநாவுக்கரசு நாயனார் அவரையும் அவர செயதுபோந்த வழிபாடுகளையும் வருந்தி இகழந்துரைபபா ராயினரெனபதூஉம, தமிழச்சான்றோர் வேட்ட முத்தீ வழிபாட்டினையே பணடைத் தமிழபபேராசிரியரான தொல்காபபியனார, "கொடிநிலை கந்தழி வளளி" என்னும பொருளதிகார சூத்திரத்திற் கடவுள வாழத்தின் பாற படுபபாராயினரெனபதூஉம, முத்தீயும இறைவனுக்குத் திருமேனிபோல் விளங்குவதோடு அவற்கு மூனறு விழிகளபோலவுங காணபபடுதல் குறிதோத இறைவன அவைதமமைக் கணகளா உடைய 'முக்கணனன' எனபபெயர் பெறுவானுமினரெனபதூஉம இனிது பெறக்கிடந்தமை கண்டுகொளக. ஆசிரியர் தொல்காப்பியனார குறித்த முதலீ வழிபாடு, குடி கொலை முதலான குறறஙகள உடையதல்லாமை பறறியே அதனை "வடு நீங்கு சிறபபு" வாயந்தெனன அவர ஓதினர். அவர் அதனை அவ்வாறே தேவே, ஏனை ஆரியர் செயதுபோந்த வேளவிகளெல்லாங குடி கொலை முதலான குற்றஙகள உடையவாதலுந் தானே பெறபபடும. அது நிறக.

இனிப, பணடைக்காலத்துத் தண்டமிழ அந்தணர் கொணட தவ வடிவம முழுமுதற கடவுளின திருவருளுருவத்தோடு ஒத்த இயல்பிறறுதல் காட்டபபுக முறையில், இறைவறகு ஒளியுடைப பொருளகள மூனறும மூனறு கணகளாக வைத்து உருவகபபடுத்தபபட்ட உண்மை இதனுணை விரிந்தமையின, எஞசியவறறைச் சுருக்கமாக எடுத்து ஆராயந்து காட்டுதும.

இறைவன ஞாயிற்றினகண் முனைத்து விளங்குவோனகலின, அஞஞாயிறறினை அவறகொரு திருமுகமாகக் கொணடு, கீழபால் எழுஉம ஞாயிறறின் உச்சியிலும மேல் பால் விழுஉம ஞாயிறறின உச்சியிலும் வானினகட் படாந்து காணபபடும முகிறகுழாங்க ளெல்லாங கதிரவனறன செவவொளி தோயபபெறறு அவறகுச் செக்கர்ச் சடைபோற றோனறுதல் பற்றி, அவை தாமே அவற்குச்

செஞ்சடைக் கற்றைகளாக வைத்து நுவலப்பட்டன. இதனுன்றே இறைவற்குச் 'சடையன' எனனும் பெயருந் தொனறுதொட்டு வழங்கிவரா நிறகின்றது.

இனி, வானினகட் படர்ந்துள்ள முகிற்குழாங்கள அத்துணையும் நீராவிப்படலங்களே யாகையாலும, அப் படலங்கள தமமேற குளிராங காற்று வீசியவளவானே வானினின்றும மழைத் துளிகளாய்க் கீழ இறஙகுகை யாலும, அம முகிற்குழாங்களே இறைவற்குச் சடைக் கறறைகளாகக் கூறிய தமிழச்சானறோர், அம முகிற் குழாத்திலுளள தூயநீரை அச் சடைக்கற்றையில் வைகிய கஙகை நீராகவும, வானினின்று மலைமேல் இறஙகி நிலத் திலிழியும அம மழைநீரை இறைவன்றன் சடைமுடியி னினறும பனிமலை (இமயமலை)யில் வீழந்து கீழஇழியுங் கஙகையாருகவும் வைத்து உருவகபபடுத்தி யுரைபபா ராயினர்.

இனி ஒருநாட் காலையிற் கீழபால் எழுஉம ஞாயிறு புதிய இளமைச் செவவி வாயந்ததாய இருத்தலானும, கீழகடலின எல்லைபபுறத்தினினறும எழுந்து ஞாயிறு மேல்இவருஙகால் அக கடல்நீரின மேறபரபபெல்லாம மயிலின நிறமபோல் நீலமும பசுமையுங் கலந்து ஒளிருதலா னும, அவ விடியறகாலை ஞாயிறறினகண் விளஙகித் தோனறும இறைவற்கு 'இளையோன' என்று பொருள படும முருகன் எனனும பெயரை வைத்து, அரு ஞாயிறறின் கீழப பசசெனறு காணபபடுங கடறபரபபினை அவன் ஊர்ந்து செல்லும மயிலாக வழங்குவாராயினர் பண்டைத் தமிழ மக்களாகிய 'பரதர்' எனபார் கடறகரையடுத்த இடஙகளில் முதனமுதல் வைகி உயிர் வாழந்தனர் என்பதை மேலே காட்டினம. அவ்வா றுயிர்வாழந்த மிகப பழைய காலத்தேதான் அவர் தாம் வணஙகிய முழுமுதற் கடவுளை முருகன் எனனும பெயரான் வழஙகினர். காலை ஞாயிறறினகட் கட்புலனுய் விளஙகிய முதல்வனை இளைய னெனக்கொண்டு வணஙகிய அவர், அதன் பிற்பொழுது முதிர்ந்த மாலை ஞாயிற்றின்கட் டோன்றிய இறைவனை

முதியோன எனக்கொண்டு, அங்ஙனங் கொள்ளினும் அவ் விருவரும் ஒருவரேயாதல் தெரிந்து, அவர்தம ஒற்றுமை தெரிப்பான் வேண்டி அம முதியோன 'முருகன் தாதை'யே யாவன எனவும், மிகவுஞ் சிவந்த நிறத்தராய் விளங்கும அம மாலை ஞாயிறறின்கண் வைகுவானை அப் பெருமானுஞ சிவன் எனுஞ் சிவந்த நிறத்தினனே யாவ னெனவுங் கடைபபிடிபபா ராயினர். இவ வுணமை அறி வுறுத்தற பொருட்டே "சிவன் எனும நாமந் தனக்கே யுடைய செம்மேனி எம்மான்" எனனுந் திருநாவுக்கரசு நாயனார் அருணமொழியும எழலாயிறறு. அது நிறக.

இனி, மாலைஞாயிற்றின் மேல்பா லெல்லையெல்லாம் மிகச் சிவந்து சுடருஞ செக்கர் வானத்தில் மட்டுமே மூன் றும்பிறை இயறகையாய்த் தோன்றுதலின், அதனையே உருவக வகையாற சிவபிரானறன செஞசடைக்கண் வைகும் மூனறும பிறையாக வைத்துத் தமிழச்சான்றோர் உரைபபாராயின ரெனபது.

இனித், தீயானது தான பறறியபொருளை முழுதும எதிர்ததுச் சாமபராக்குதறகுமுன, அப பொருளின மேற் சுறறு முழுமையும எரிததுச சாமபராகி அச சாமபர் மேலே பூத்திருபப உளளே தான் செந்தணலாய முறறி விளங்கும இருவகை இயல்பே, இறைவனறன திருமேனி மிசைபபூதது ஒளிருந் தூய வெண்ணீறுகவும அதனுட் சிவந்து மிளிரும அத் திருமேனியாகவும வைத்து உரு வகபபடுததபபட்டது. இவ் அரிய உருவகததின வனபபு

"துடிகொள்நேர் இடையாள் சரிகுழல் மடந்தை
துணைமுலைக் கண்கள்தோய் சுவடு
பொடிகொள்வான தழலிற் புள்ளிபோல் இரண்டு
பொங்கொளி தங்குமார் பினனே."

(திருவாசகம், அருட்பத்து, ஙி)

எனறு மாணிக்கவாசகப பெருமான் இசைத்த செய்யுளிற் கனிந்து நிற்றல் காண்க.

இனி, எண்ணிறந்த உயிர்களே யெல்லாம இறுகப் பற்றி வருத்திவரும ஆணவம, மாயை, வினை எனனும் மும்மலங்களேயுங குத்திக கல்லி நீககவல்ல பேராறறல் இறைவன் ஒருவனிடத்தே மட்டும உளதாகலின, அம மும்மலங்களேயும அகத்தே முத்திறமாய நினறு தொலைக கும அப்பேராறறலே, புறகதே காணபபடுங கழுக்கடை அல்லது முத்தலைவேல் (சூலம) ஆக வைத்து உருவகப் படுத்தபபட்டது. இவவுணமை,

"கோற்றேன் மொழிக்கிள்ளாய், கோதில் பெருந்துறைக்கோன்
மாற்றுரை வெல்லும் படைபகராய்—ஏற்றூர்
அழுக்கடையா நெஞ்சுருக மும்மலங்கள் பாயுங்
கழுக்கடைகாண் கைக்கொள் படை." (திருத்தசாங்கம், எ)

எனனுந் திருவாசகத் திருபபாட்டினுல் உணர்த்தபபட்டமை காண்க.

இனி, எல்லாத் துனபங்களுமு பிறதகதறகிடமான ஆணவமலத்தின குறறமபுக்கு அடையாளமாவது புலியே யாகலின, அமமலததின செயலே ஒடுககிறகும இறைவ னது நிலையே, புலிதோலே யுரித்து உடுததிருககும நிலை யாகவைதது உருவகபபடுததபபட்டது. இஙஙமமே இறை வன திருமேனிமிசை யடையாளஙகளாக மொழியபபடுவன வெல்லாம, அருமபெரு நுணபொருளகளே உளளடக்கிய உருவக வமைபபுகளே யாகும, அவையெலலாம ஈண டெடுத்துக காட்டலுறின இது மிக விரியும. இதுகாறுங காட்டியவளவே ஈணடைக்குப போதுமாகலின, இவறறை இத்துணையின நிறுத்தி மேறசெல்வாம.

இறைவன் திருவுருவ அடையாளஙகளாக வைத்து மேலே காட்டியவாறு உருவகஞசெயது, எல்லாமவல்ல முழுமுதற கடவுளே ஓர் உருவத்திருமேனியிற கொண்டு வழிபடும முறை, எத்தனையோ ஆயிர ஆண்டுகளுக்கு முற் றெட்டே நிகழந்து வருவதொனறும. இறைவனைச் சிவந்த நிறனுடைய 'சேயோன' ஆகவும, நீலநிறனுடைய 'மாயோன' ஆகவுங்கொண்டு வழிபடுந் திருவுருவ வணக்கம,

"மாயோன் மேய காடுறை யுலகமும்
சேயோன் மேய மைவரை யுலகமும்"

என்னுந் தொல்காபபியப பொருளதிகாரச சூததிரததி லேயே எடுத்துச் சொல்லப்பட்டிருககினறது. 'பஃறுளி யாறு' கடல்கொளளபபடடுமுன அவ யாறு பாயந்த பெரு நிலப பரபபை அரசாணட பாணடியன் நெடுமுடிமிப் பெருவழுதி எனபான சிவபிரான திருககோயிலை வலமவந்து பணியும இயல்பினனெனபது,

"பணியிய ரத்தைநின குடையே முனிவர்
முக்கட்செல்வர் நகர்வலஞ் செயறகே" (புறநானூறு, கூ)

என்று அவனுடனிருந்த கரிகிழார் எனனும நல்லிசைப் புலவா பாடிய பாட்டான நனகு புலனகினறது. இப் பாணடி மனனன அவையிலிருந்த மறறொரு நல்லிசைப் புலவரான நெட்டிமையார் எனபார் இவனை வாழத்து கினறுழி,

"முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே." (புறநானூறு,கூ)

என்பதனால பஃறுளியாறறு மணலினும பல ஆணடு வாழக வெனை அவனை வாழதது தல கொணடு, முதுகுடுமி எனும அப பாணடிவேநதனும, அவனது அவைகக்களதது புலவாகளால 'காரிகிழார்,' 'நெட்டிமையார்' முதலியோரும பஃறுளியாறு கடலகொளளபபடும முன அஃதாவது இற் றைக்கு ஐயாயிர ஆணடுகளுககு முனனரே இருந்தே தா ரதல் நனகு துணியபபடும.

இனித், தொல்காப்பியம ஆக்கபபட்ட காலத்தில் முத்தீ வழிபாடும, அம முததீககணணும முனனதது விளங கும இறைவன சிவந்த மேனியனுயச 'சேயோன்' என நிற்பலெனனுங கோட்பாடும மிககு வழஙகிவாயினும், 'சிவன்' எனனும பெயராலாதல, முககணணன எனனும பெயராலாதல் இறைவனை வணஙகும வணக்கம அஞ்ஞான்று உளதாயிறறில்லை. 'முக்கண்ணன்' 'சிவன்'

என்னுஞ் சொற்கள் தொல்காப்பியத்தில் ஓரிடத்தாயினுங் காணப்படவில்லை. இற்றைக்கு ஐயாயிர ஆண்டுகளுக்கு முன் இயற்றபபட்ட காரிகிழாரது செயயுளிற காணப்படும் 'முக்கண்ணன்' எனனுஞ சொல் தொல்காப்பியத்திற் காணபபடாமையை உறறுநோக்குங்கால், தொல்காப்பியங் காரிகிழாரது காலத்திறகும பன்னூற்ருண்டு முற்பட்டு இயற்றபபட்டதெனபது தெளியபபடும. படவே, தொல் காப்பியனுர் காலத்தில் வணங்கப்பட்ட தெய்வங்கள் முருகக்கடவுளும, அக் கடவுள முனைத்துவிளங்கும ஞாயிறு திங்கள தீ எனனும் முத்தீயும், மாயோனுமேயாம்.

இனி, இருக்குவேதத்தில் உருத்திரக் கடவுண்மேற பாடபபட்ட பாக்களையும, ஏனைச் சிறுதெய்வங்கண்மேற் பாடப்பட்ட பாக்களையும ஒபபிட்டு நோக்குங்கால், ஏனை யோரைப பாடிய பாக்களினும், உருத்திரன்மேற் பாடி யவை மிகச் சிலவாதல் ஆராயசசிவல்லாக் கெல்லாம எளிதின் விளங்குவதேயாம. அச் சிலவற்றுளளும 'உருத் திரன்' எனனும பெயரனறி, 'முக்கண்ணன' எனனும பெயர் காணபபடுகினறிலது. இருக்குவேதப பத்து மண்டிலங் களுள, ஏனை ஒன்பது மண்டிலங்களிலிடக் காலத்தாற் பிறபட்டதாகிய பத்தாம மண்டிலந் தொண்ணூற்றிரண் டாம பதிகம ஒனபதாஞ் செயயுளில்மட்டும "ஏபி: சிவ:" எனறச் 'சிவன' எனனுமபெயர் காணப்படுகினறது. சுக்கில எசுர் வேதத்தினகண்ணதான 'சதருதரியத்'தில் உருத் திரன, சிவன, சர்வன, பவன, சங்கரன, பசுபதி, ஈசானன முதலான சிவபிரான பெயர்களெல்லாம ஒருங்கே காணப் படினும, 'முககண்ணன' எனனும பெயர்மட்டும ஆண்டுங் காணபபடுகினறிலது. 'தரையமபகன' எனனும ஒருசொற் காணபபடினும, அஃது 'அமபிகையாகிய அமமையோடு கூடியவன' எனற பொருள செய்யபபடுகினறதல்லாமல், முககண்ணன் எனற பொருள் செய்யபபடுகினறிலது. இருககு, எசுர் முதலான வேதங்கள எங்கணும 'ஆயிரங் கணகளுடையவன சிவபிரான' என்பது சொல்லப்படுகின் றதே யல்லாமல் 'முக்கண்ணன்' என்பது ஓரிடத்தாயினுஞ்

சொல்லப்படவில்லை. பண்டைத் தென்றமிழ மக்களின் கோட்பாடுகளைப் பெரிதும் தழுவி எழுதிய இதிகாசங்கள், புராணங்கள், உபநிடதங்கள முதலாயின ஈண்டைக்கு மேற்கோளாக ஆகா. மிகப் பழைய தமிழ்நூல் வடநூல் களை நன்காயந்து காணுங்கால், எல்லாமவல்ல இறைவற்கு, ஞாயிறு, திங்கள, தீ எனனும மூனறு ஒளிகளையும முக்கண்களாக அமைத்துச், சிவந்தொளிரும உலகுருவினையே அவற்கு ஒரு திருமேனியாகக் கற்பித்து அவனை வணங்கும வணக்கம பண்டைத் தமிழமக்கட்கு மட்டுமே உரித்தாதல் இனிது விளங்காநிற்கும.

இன்னும், இரண்டாயிரத்து முந்நூறு ஆண்டுகட்கு முறபட்ட தமிழநூல்கள தமிழபபாட்டுக்களிலாதல் வட நூல்கள வடமொழிப பாட்டுகளிலாதல், கடவுளை நான முகன் திருமால் சிவபிரான எனற முத்திறபபடுத்து 'மும மூர்த்தி' எனறோதி, அமமூவருட் சிவபிரானும ஒருவன எனனும பொருந்தாக கோட்பாடு ஒரு சிறிதாயினுங காணபபடாமையும, அவறறினகணணெல்லாஞ சிவபிரான பிறபபு இறப்பு இல்லா எலலாம வல்ல முழுமுதற் கடவுளாகவே வைத்து மொழியபபடுதலும பெரிதும நினைவிற பதிகஙகறபாலனவாகும.

இனி, உருத்திரப பெருமான் சிவந்த நிறத்தினனெயத் திகழுதலோடு, செனனியிற செக்கர்ச்சடைகளும உடையனெ யிருகின்றன லெனபது இருக்குவேதததிற பலகாலும நுவலபபட் டிருக்கினறது. இதறகு, அதன முதனமண்டிலத்தில் "இமா: ருத்ராய தவஸே கபர்திநே க்ஷயத் வீராய" எனறு தொடஙகும ககச-ஆம பதிகமே சானறும. இதன்கட் போந்த 'கபாதின்' எனனுஞசொற் 'சடையன்' எனனும பொருட்டு. இதுவும, இதனோடொத்த இருகு வேதப பதிகஙகள ஏனையவும நாலாயிரத்து நானூறாண்டு கட்கு முன்னரே இயற்றப்பட்டனவாகும.

இன்னுங், கிறித்து சமயத்தவர்க்குரிய முதலாக மத்தில் 'இறைவன் ஆபிரகாமுக்கு எதிரே தோனறி அருள

செயதக்கால் தன் பெயர் எல்லை எனை மொழிந்தான்' என்பது சொல்லப்பட்டிருகினறது. மேலும், 'எல்' என்னும அடைமொழியினறிச் 'சடை' எனனும பெயரே இறைவற் குரிய இயறபெயராக 'ஸாப' எனனும ஆகமத்தில் முபபத் தொருமுறை காணபபடுகினறது.[1] இச 'சடை' எனனுஞ சொல் தமிழசசொல்லாதல அறியாத ாபுருமொழிபபுலவர், இதன பிறபபும பொருளுந் தெரியாமையிற பெரிதும இடர்ப படடு மயஙகுவாராயினர். 'ஆபிரகாம' முதலான பண்டை காயன்மாகள தமிழரே யெனபது ஆராயசசியிற புலனு தலின, அவா தமககுத தோன்றிய இறைவன தன் பெயரைச 'சடையன' எனத் தமிழமொழியில் அருளிச் செய்தது சாலப பொருந்துவதேயாம எனக.

இனி, இறறைககு இரணடாயிரதது முந்நூறு ஆணடுகட்குமுன 'செவ்வேள' மேற பாடபபட்ட 'குனறம பூதனரது' பரிபாடறு செயயுளிற, சிவபிரான தன சடைக் கறறையிற கஙகை நீரைத் தாஙகுகிறகுப இயல்பு,

> "எரிமலர்த் தாமரை இறைவீழ்த்த பெருவாரி
> விரிசடைப் பொறையூழ்த்து விழுநிகர் மலரேய்ப்பத்
> தணிவுறத் தாங்கிய தனிநிலைச் சலதாரி
> மணிமிடற் றண்ணற்கு மதியாரற் பிறந்தோய் நீ."

எனறு தெளிவாகக கூறபபட்டிருத்தல் காணக. 'திரு மாலின திருவடிகளினினறும இறஙகிய கஙகை நீரைச் சிவபபிரான தனது சடைகளண் ஏறறுன' எனப பிற் காலத்து வைணவா முழுமுதற கடவுளா இழித்துரைப் பான வேண்டிக கட்டிவிட்ட பொயக்கதை பழைய தமிழ நூல் வடநூல்களிற சிறிதுங காணபபடாமையும ஈண்டு நினைவிற் பதிககறபாறறு.

இனி, இறைவன திருமுடிமேற பிறையமர்ந்து விளஙகுந் தோறறமு, இறறைககு ஆயிரத்தெண்ணூ றுணடுகட்கு முன பாடபபடடனவாகிய,

1. See Dr. H. E. Ryle's Commentary on the Book of Genesis, p. 197.

"ஓங்குமலைப் பெருவிறற் பாம்புஞாண் கொளீஇ
ஒருகணை கொண்டு மூவெயில் உடற்றிப்
பெருவிறல் அமரர்க்கு வென்றி தந்த
கறைமிடற் றண்ணல் காமர் சென்னிப்
பிறை." (புறம், ஙடு)

"பால்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி
நீலமணி மிடற றொருவன்." (புறம், கூக)

"நுதலது இமையா நாட்டம் இகலட்டுக்
கையது கணிச்சியொடு மழுவே மூவாய்
வேலும் உண்டுஅத் தோலா தோற்கே,
ஊர்ந்தது ஏறே சேர்ந்தோள் உமையே,
செவ்வான் அன்ன மேனி, அவ்வான்
இலங்குபிறை அன்ன விலங்குவால் வையெயிற்று
எரிபகைந் தன்ன அவிர்ந்துவிளங்கு புரிசடை
மூதிராத் திங்களொடு சுடருஞ் சென்னி
மூவா அமரரும் முனிவரும் பிறரும்
யாவரும் அறியாத் தொன்முறை மரபின்
வரிகிளர் வயமான உரிவை தைஇய
யாழ்கெழு மணிமிடற் றந்தணன
தாவில் தாள்நிழற் றவிர்ந்தன்றுல் உலகே." (அகம், க)

எனறற் றொடக்கத்துப பழந்தமிழச் செய்யுட்களிற றெளித் துரைக்கபபட் டிருதலல் காணக. ஏனைத் திருவுருவ வடையாளஙகளும் இவ வகநானூற்றுச் செயயுட்கண் ஓவியத்தெழுதிக காட்டினற்போல் அத்துணை எழில் பெறகூறபபட்டிருதலும வியகறபாலதானரும்.

இவ்வாறுக ஒளியொடுகூடி விளஙகும உலகத் தோறறத்தினையே உருவக வகையால் இறைவன்றன திரு வுருவமாக வைதது வழிபட்ட பண்டைத் தமிழச் சான் றோரில், அந்தணர் எனபார் வேறு முயற்சியிற் புகுத லினறி, இறைவறகு வழிபாடு ஆறறுதலினும, இறைவன் நூல் ஓதுதலினுமே கருத்து ஒருபபட்டு நினறனராகலின், அவரெல்லாம அவ் விறைவன றிருவுருவததோடு ஒத்த

தவவடிவமே தமக்கும் உரியதாகக் கொண்டிருப்பாராயினர். அரசரைச் சார்ந்தார் பெரும்பானமையும அவ வரசரோடொத்த கோலத்தினையும், முனிவரைச் சார்ந்தார் பெரும் பான்மையும அம முனிவரோடொத்த கோலத்தினையும, ஏனைப பல்வகை நிலையின நிற்பாரைச் சார்ந்தார் பெரும் பான்மையும அவவந் நிலையினர்க்குரிய கோலத்தினையுந் தாந் தாம மேற்கொள்ளுதல் இயல்பாதல்போல, எல்லாம வல்ல முழுமுதற கடவுளைச் சார்ந்தாரும பெரும்பான்மை யும அக கடவுட்குரிய திருக்கோலத்தினைத் தாமும மேற் கொண்டு ஒழுகுதலும இயல்பாயிற்றென்பது. எனவே, இறைவன பொன் போனற ஒளிவடிவினனுதல் பற்றி அவன வழியில் நிறபாரான அருந்தவத்தோர் தாமுந் தழல்வடிவினதாகிய காவியாடை உடுப்பாராயினர். தழல் தான பறறிய பொருளைத் தூய சாமபராக்கி அச் சாம பரைத் தனமேற பூசுக அணிந்திருக்கும இயல்பே இறை வனறன திருமேனிமிசைத் திமிந்திருக்குந் திருநீற்றின் உணமையாதல் கணடு, அவனை வழிபடுஞ சானறோருந் தந்திருமேனி மேலுந் திருநீறு பூசாநிறபர். இறைவன் தனது நெறறிமேற கண்ணெடு முகணணைய விளங்குத லோடு ஒபபவே, சானறோருந் தமது நெற்றிமிசைச் சாந்தினற பொட்டிட்டிருபபர். இறைவன தன திருமுடி மேற சடைககறறை உடையனைய இருத்தல் போலவே, அருந்தமிழத் தாபதருந் தஞ்சென்னிமேற சடைமுடி யுடையராயிருபபர். இறைவன் தன சடைக்கற்றைமிசைச் சுமந்திருகுங கஙகைநீர்க்கு அடையாளமாகவே, தமிழ்த் தாபதருந் தம கையில் தண்ணீர்க் குடுவை ஏந்தியிருபபர். இறைவனைப போல் தணணீரைத் தாம் தலைமிசைத் தாஙகுதல் ஆகாமையின, அருந்தவத்தோர் அதனைத் தலையிலனறிக் கையினகட டாஙகுவாராயின ரென்று உணர்ந்துகொளக. இனனும, மும்மலஙகளைச் செகுக்கும் இறைவனது பேராறறலே அவன தன கையில் ஏந்திநிற் கும முத்தலை வேலாகச சொல்லபபடுதலின், அவனது திருக்கோலத்தைத் தாங்கிய தாபதரும் 'முக்கோல்' ஏந்தி யிருப்பர்; இதுபற்றியே இவர் 'முக்கோற் பகவர்' எனவும்

மொழியப்படுவர்.[1] இனனும், ஆணவமலத்தின் வலியை யொடுக்கிய இறைவனது நிலையே, அவன் புலித்தோலை உடுத்திருகுமு இருபபாதலின, அவன்வழிச் சார்ந்த தாபதர் தாமும புலித்தோலை மேறகொண்டிருபபர்; இனி, 'மான' எனனுஞ சொல் தமிழில் மான எனனும் விலங நினையும, வடமொழியிற 'பிரகிருதிமாயை'யினையுங குறிபப தான ருகலின[2] மாயையை யொடுகநிறகும நிலைக்கு அடையாளமாக மானதோலை இருக்கையாயக் கொண்டும இருப்பரென்க. இனனும, எல்லா நூற்கல்விக்கும இறை வனே தலைவன எனபதறகு அறிகுறியாக அவன தனது வலக்கையிற் சுவடியொனறேந்தி அமர்ந்திருத்தல் போல, அவன வழிபபட்ட தாபதரும் தமது கையில் நூல் ஒனறேந்தியிருபப ரெனக. இவவாறுக இறைவனை டொத்த வடிவுகொளளுந் தமிழந்தணரின் தவவடிவ அடையாளங்களிற் சில, ஆசிரியா தொல்காபபியனாரால்,

> "நூலே கரகம் முக்கோல் மணையே
> ஆயுங் காலை அந்தணர்க்கு உரிய."

என்று ஓதபபட்டமை காண்க. இச் சூத்திரத்தினகட் சொல்லபபட்ட 'நூல்' எனபது 'கலைநூலே' யல்லாமற் பூணூல் அனறு. தொல்காபபியனார் நூல் எழுதிய பண் டைக்காலத்திற புரிநூல் பூணும வழக்கம உண்டென பதை நாட்டுதறகுச் சானறு இனமையானும, துறவொழுக் கத்தின நிறபார்கருப பூணூல் இனமை வடநூலார்கருமு உடமபாடாகலானும,[3] இதறகுப பூணூல் எனறு உரை கூறிய பிறகாலத துரைகாரரான 'பேராசிரியர்' கூற்றுப் பொருந்தாமை கணடுகொளக. 'கரகம்' எனபது நீர்க் குடுவை. 'முக்கோல்' இறைவனேந்திய முத்தலை வேலுக்கு அடையாளம. 'மணை' இருத்தற்கு இடும புலித்தோல்

---

1 "எறித்தரு கதிர்தாஙகி." எனனும் பாலைக்கலிக்கு நசசி னார்க்கினிய ரெழுதிய உரையைக் காண்க.

2. சிவஞானமாபாடியம், கசுo-ஆம் பக்கம்.

3. துறவிகள் பூணூலைக் கணைந்தெறியுமாறு பிரமோபநிடதங் கூறுதல் காண்க.

மான்மேல் முதலியன. இன்னும் தவவொழுக்கம மேற் கொணட அந்தணர் தலைமிசைச் சடைமுடியுடையரா யிருப்பரென்பது,

"கடுந்தெறற் செந்தீ வேட்டுப்
புறந்தாழ் புரிசடை புலர்த்துவோனே." (உஙக)

என்னும் பழைய புறநானூறறுச் செயயுளால இனிது விளஙகாநிறகும. இனனும அவர் காவியாடை பூண்டு முக்கோல் கைக்கொணடு தவவொழுக்கத்தின நிற்றல்,

"கல்தோய்த்து உடுத்த படிவப் பார்ப்பான்
மூக்கோல் அசைநிலை கடுப்ப."

என்னும பழைய முல்லைப்பாட்டு அடிகளாற புலனகின்றது. இனனும அவர் மேறகூறிய தவ அடையாளஙகளொடு, தங் திருமேனிமேல் திருநீறும பூசியிருபபரென்பது,

"சுத்திய பொக்கணத்து என்பணி
கட்டங்கஞ் சூழ்சடை வெண்
பொத்திய கோலத்தினீர்." (உசஉ)

எனறு நிருச்சிற்றம்பலக் கோவையாரில் மாவிரதியர் விளிக்கபபடுமாறறுல் அறியபபடும.

இஙஙனமாகப பண்டைக்காலத்துத் தண்டமிழ் நாட்டிலிருந்த தாபதரெலலாரும, எல்லாமவல்ல முழுமுதற கடவுளே 'முருகன,' 'சிவன' எனனும பெயாகளால் முத்தீக் கண் வணஙகி, அம முழுமுதற் கடவுளுககுத் தாம உருவக வகையாற கறபித்த வடிவதததையே தாமும பூண்டு, தவ வொழுககத்தின கண்ணராய ஆஙகாஙகு வைகினமையே பழைய செந்தமிழ நூல்களான அறியக்கிடக்கின்றது. இவவாறெழுகிய அருந்தவத்தோரின் வடிவமும, அவர்தங் தவவொழுக்கமும, அவ் வொழுக்கத்தின பாலதான நோன் பும, பார்பபனரின துறவொழுக்கமுமே 'படிமை,' 'படிவம' எனனுஞ சொறகளால் உணாதபபட்டன என்பதை மேலே சுருஉ, சுருடு-ஆம பக்கஙகளிற் பழையநூல் மேற கோளகள பல கொணடு நன்கு விளக்கிக்காட்டினேம.

தொல்காபபியம முதலாக வந்த பண்டைத் தமிழநூல் களில் ஓரிடத்தாயினும 'படிமை,' 'படிவம' என்னுஞ் சொறகள, சமண்முனிவரின தவவொழுக்கத்தினை உணர்த் துதறகு மேறகோள கண்டிலம். கரிகாறசோழன் காலத் திற்கு அஃதாவது இற்றைக்கு ஆயிரத்துத் தொள ளாயிர ஆணடுகளுக்கு முற்பட்டகாலத்தில் தமிழநாட்டின கட் சமணசமயமாதல் அதனைத் தழுவினோராதல் இருந் தன ரெனபதறகு ஏதொரு சான்றும பழைய தமிழநூல் கள தமிழபபாட்டுகளில் ஓர் எட்டுணையுங காணப்பட வில்லை.

உண்மை யிவ்வாறிருபபத், தொல்காபபியனரைச் சமண்முனிவரென நாட்டபபுக்கவர், அவர் காலத்திற் சமண்மதந் தமிழநாட்டில் இருந்தெனனுந் தமது கூற்றை மெயச்சானறு ஒனறுதானுங் காட்டி நிறுவாமல் அவரைச் சமணரெனக கூறபபுக்கது,[1] பழந்தமிழ் நூலா ராயச்சியுடையாரால் நகையாடி எளளபபடுதற்கே இட னுயது காண்க. மேலும, அவர் 'படிமை' எனனுஞ சொல் லுக்குத் 'தவவொழுக்கம' எனனும் பொருள உளதாதலைக் கண்டிலேம எனவும, தாம வினவிய வடமொழிப புலவர் களுங்கூட அச்சொல் அப்பொருளில் வைதிக நூல்களில் வழஙகுதலைத் தமக்கு எடுத்துக்காட்டல் இயலாமையின் அந் நூல்களினும் அச்சொல்லும் பொருளும் இல்லை யென்று தெளிந்தேம் எனவும் உரைபபாராயினர்.

பழைய தமிழநூல்களை ஆராய்ந்துபாராமலே அவர் அங்ஙனந் துணிவுரை நிகழத்தியது இரங்கற்பால தொன்றும.

"கூறினை பெருமநின் படிமை யானே."

என்னும் பதிற்றுப்பத்திலும,

"தண்டொடு பிடித்த தாழ்கமண் டலத்துப்
படிவ வுண்டிப் பார்ப்பன மகனே."

என்னுங் குறுந்தொகையிலும,

1. செந்தமிழ், தொகுதி, கஅ, பகுதி, க.

"கல்தோய்த் துடுத்த படிவப் பார்ப்பான்."

என்னும முல்லைப் பாட்டிலும் 'படிமை' 'படிவம்' என்னுஞ் சொற்கள் அந்தணரின தவவொழுக்கத்தை உணர்த்து தல் முனனரே எடுத்துக் காட்டினும். அச் சொற்கள் அங்ஙனம் அப் பொருள உணாத்துமவழியெல்லாஞ் சைவசமயத் துறவிகளே உணர்த்தக காண்டுமன்றிச், சமண் துறவிகளை ஒரு சிறிதாயினும உணர்த்தக் காண் கிலேம.

மேலுஞ, சமண் சமயத்தினர் முழுமுதற் கடவுள ஒனறு உண்டெனனும நமபிக்கையுடையரலலா; அந் நமபிகை யில்லாமையின், முத்தீவேட்டு வழிபடும் நீரும அல்லா; அஃதில்லாமையின, தீநிறதததாகிய காவியாடை யும, தீயின எச்சமாகிய தூய வெணணீறும மேறகொள வாரும அல்லா; இறைவன திருவடையாளமாகிய சடை முடியுந், தண்ணீர்க் குடுவையும, முககோலும உடையாரும அல்லர்; இப பெற்றியிலாரான சமண முனிவர் 'ஆசீ வகரும,' 'நிகண்டரும,' 'முண்டசாவகரும' எல முத்திறப படுவ ரெனபதூஉம, இவருள ஆசீவகராவார் ஆடையினறி முற்றும அமமணமாயும, நிகணடா இடுபபில ஒருசிறு துணடு மட்டும உடுபபவராயும, முண்டசாவகர் அரையில் ஒரு துணடு உடுத்துத் தலையை மழித்துவிடுபவராயும இருபபரெனபதூஉம அங்குந்நரநிகாயத்திற குறிகபபட் டிருககினறன. இச் சமண்முனிவரும, இவரின வேறான புத்த முனிவர்களும கௌதம சாககியர் காலத்தில் இருந் தாறபோலவே, தலையிற சடைமுடியுடையருங கையில் முககோல் ஏந்தியவருமான பாரபபனத் துறவிகளும அக் காலத்தில் வடநாட்டிலும இருந்தனரெனபதூஉம அவ் அங்குத்தரநிகாயத்திலேயே நுவலபபட்டிருககினறது.[1] எனவே, கௌதமசாககியர் இருந்த காலத்திலேயே அஃதாவது இற்றைக்கு இரண்டாயிரதைந்நூறு ஆண்டு கட்கு முனனரேயே வடநாட்டிலுஞ் சிவவடிவம பூண்ட

1. See Prof Rhys Davids' Buddhist India, p. 145. and Dialogues of the Buddha, vol. 1, pp. 220, 221.

பார்ப்பன முனிவர்கள இருந்தமை பௌத்த சமய நூல்களிலேயே புலனுகின்றதன்றே? மற்றுத் தென்றமிழ நாட்டிலோ அக்காலத்திற பார்பபன முனிவரைத் தவிர, ஏனைச் சமண் பௌத்த முனிவர் இருந்திலர். ஆகவே, 'படிமை' எனனுஞ சொற் றெனறமிழ நாட்டிலிருந்த சைவ அந்தணரின் தவவொழுக்கத்தையுந் தவவடிவத்தையுஞ் சுட்டுதறகே எழுந்ததனறிச், சமண் முனிவரின தவ வொழுக்கத்தை உணர்த்துதற் கெழுந்ததன றென்பது கடைப்பிடிக்க. அதுவேயுமனறி, வடநாட்டிலிருந்த சமண் முனிவரின தவவொழுக்கதை உணர்த்துஞ சொல்லாக அது சமண் சமய நூல்களிலாயினும வழஙகபபட்டுளதோ வென யாம அந் நூல்களே ஆராயந்து பார்க்க, ஆண்டும 'படிமா' எனனுஞ சொல்லைக கண்டிலேம. அச சொல் சமண் முனிவரின தவ வொழுக்கத்தையே குறிக்குமென நாட்டபபுக்கவராதல், அதறகு ஒரு மேறகோளாயினுஞ சமண நூல்களிலிருந் தெடுத்துக் காட்டினரோ வெனறுல், அதுதானும இல்லை. 'படிமா' எனபது சமண் சமயச் சொல்லே எனபதறகு ஏதொரு மேறகோளும பழைய சமண் நூல்களிலிருந் தெடுத்துக் காட்டாது, இபபோது சில ஆணடுகளுக்குமுன ஓர் ஆஙகில மாதர் எழுதிய ஓர் ஆஙகில நூலை நமபி அச்சொல் சமண் சமயத்தவர்க்கே யுரிதாதல் வேண்டுமெனத் தந் துணிபுரைத்தலினும பிழைபாடாவது பிறிதில்லை; இப பிழைபாட்டுரையைக் கொணடு ஆசிரியர் தொல்காபபியனுரைச் சமண் முனிவ ரென நாட்டபபுகுவதினும பேதைமையாவதும பிறிதில்லை. ஆராய்ச்சிமுறை இனனதென்றறியாதார் தாமும இனனே ரனன ஆராயச்சியிற் புகுதல் பெரிதும ஏதமாமெனக.

இப்போது வழஙகுஞ சமண் நூல்களில் வடமொழி தெனமொழியில் இருபபனவெல்லாம கி. பி. ஆறும நூற் றாண்டின் துவக்கத்திலிருந்து இயறறபபட்டனவாகு மென அவைதமமை நனகாராய்ந்த ஐரோபபிய ஆசிரியர் களு கூறுநிற்கினறனர்.[1] இவவாறு பிறபட்ட காலத்தில்

1. Dr. A. Barth's 'The Religions of India;' p. 140.

எழுதப்பட்ட சமண நூல்களில் யாண்டோ அருகிப் 'படிமை' என்னுஞ சொல் சமண முனிவரின தவவொழுக் கத்தை யுணர்த்துதறகு வழஙகபபட்டிருக்கலாம். அது கொண்டு அச்சொல் சமண சமயத்தவர்க்கே உரித் தென்றல் ஆராயச்சியுணர்வில்லா கூறறும. கி. பி. ஆரும நூற்ருண்டிலிருந் தெழுதபபட்ட சமண நூல்கட்கு ஐந்நூருண்டு முறபட்ட அருந்தமிழ நூல்களினும பாட்டு களினு மெல்லாம அச்சொல் அந்தணரின சைவ தவ வொழுக்கத்தையே உணர்த்தக் காண்டலால், அது சைவசமயத்தவர்க்கே உரித்தாவதன்றிச் சமண்மதத் தவர்க்கு உரித்தாதல் ஒருவாறருனுஞ் செல்லாது. தமக்கு முனனிருந்த சைவ அந்தணத் தாபதர்தந் தவவொழுககத் துக்கு வழஙகிவந்த அப் 'படிமை' யெனனுஞ சொல்லையே பினவந்த சமண்முனிவர் தமக்குமு உரியதாக ஒரோவிடத் துப் பயன்படுத்தினு ராகறபாலார். வடநாட்டிற் கௌதம சாக்கியர் காலத்திருந்த புத்த சமண் சமயத்தவருங்கூடத், தங காலத்திறகு முனனிருந்த சைவ அந்தணரின் தவ வொழுககத்தையே முதலாக வைத்து, அதனபடி தமக் குரிய ஒழுகலாறுகளை வரையறுத்தமைபபா ராயினரென, இவைதமமைப் பலபடியானும நடுகின்று நன்காயந்த ஹெர்மன் ஜாகோபி எனனும ஐரோபபிய ஆசிரியர் நனகு விளக்கிககாட்டி யிருககினருர்.[1] வடநாட்டிற பண்டைக் காலத்திருந்த சைவ அந்தணத் தாபதர் சிவபிரான் திரு வுருவ அடையாளமான காவியாடையே உடுத்துத் தலை மேற சடைமுடியுடையரா யிருந்தனரென்பது, அவர் தமது 'ஜைனசூத்திர ஆங்கில மொழிபெயர்பபின்' முகவுரையில் எடுத்துக் காட்டிய போதாயன தருமசாத்திர மேறகோள களால் (உ, ஊ, ஙக, கடு-உக) நன்கு விளங்கும. சைவ அந்தண முனிவர் உடுத்துங காவியாடையைப் பார்த்தே, பௌத்த பிட்சுக்கள் நிறத்தால் அதனை யொப்பதொரு துவராடை யுடுப்பராயினரென்பதூஉம, புத்த சமண்முனி வர் துவக்கத்தில் வடநாட்டின் ஒரு சிறு பகுதியில் இருந்

1. Introdution to Jaina Sutras by Hermann Jacobi, pp. xxiv-xxix.

தமைபோலாது சைவமுனிவரர் பரதநாடெங்கும பண்டு தொட்டே பரவியிருந்தல ரென்பதூஉம பிறவும அவரால் நனகெடுத்துக காட்டபபட்டன. உண்மையாராயசசியிற றோந்த இவ வைரோபபிய ஆசிரியர் எடுத்துக காட்டிய பண்டை வடநூல் மேறகோளகளீயும, அவறறை அடிப் படையாக்கொணடு ஆராயந்து காட்டிய உண்மை முடிபு களீயும நடுநினறு நோக்கவல்லார்க்குப, புத்த சமண் முனிவா தோன்றுதற்குப பலநூறறாண்டுகள முறறொட்டே சைவ அந்தண அருந்தவதோர் இப் பரதநாடெங்கும பரவியிருந்தமையும, பினவந்த புத்த சமண் துறவோா தமக் குப பலநூறறாண்டுகள முனனிருந்த சைவ அநதணரின தவவொழுக்கத்தையே பெருமபானமையுந தழுவி யொழுக லாலமையுந் தெற்றெனப் புலனுகா நிறகும ஆகவே, தவவொழுக்கமும, அத் தவவொழுக்கதைத யுணர்த்தும 'படிமை,' 'படிவம,' 'பரதிமர' எனனுஞ சொறகளுஞ, சைவ அந்தணரினின்று ஏனைப புத்தசமண சமயததாகவு வந்ததாகல் வேண்டுமேயனறிப, பிற்காலத்தவரான புத்தர் சமணரிலிருந்து, இவர்க்குப் பல்லாயிரம ஆண்டு முறபட்ட சைவ முனிவரர்களுச் சென்றதாகல் ஏலாது. ஆதலால், முறகாலத்தது இது, பிறகாலத்தது இது எனறு பகுத் தாராயமாட்டாது, முனனைது பினனதாகவும பினனது முனனைதாகவும பிறழக்கொண்டு, படிமையொழுக்கஞ சமணர்களே யுரியதெனக கரைந்தாரது உரை பெரிய தொரு தலதடுமாறற வுரையாய முடிந்தமை கண்டு கொளக.

அற்றேலஃதாக, தவவொழுக்கமும அதற்கேறற தவ வடிவமும அதனை யுணர்த்தும 'படிமை' எனனுஞ் சொல்லும, புத்தர் சமணர் தோனறுதற்குப் பல்லாயிர ஆண்டுகள முனனரே சைவ அந்தணர்பால் உளவாயது உண்மையாயின், அதனை நிறுவுதறகுரிய பழையநூன் மேற்கோளகள காட்டுக வெனின; அவை தமமைப் பண் டைத் தமிழ்நூல்களினின்றும முன்னரே எடுத்துக்காட்டி னும. அப் பழந்தமிழ் நூல்கள பாட்டுக்களில் யாண்டும்

புத்த சமண் சமயத்தவர் ஒரெட்டுணையுங் குறிக்கப்படாமையும், 'படிமை,' 'படிவம்' என்னுஞ் சொற்கள் சைவ அந்தணரின் தவவொழுக்கத்தையே குறித்தற்கு அவற்றுள் வழங்கபபடுதலும ஆண்டே விளகிப போந்தாம. ஆகவே, புத்தர் சமணர் தோன்றுதற்கு மூவாயிர ஆண்டு முற்பட்டதாகிய தொல்காப்பியச் சிறப்புப்பாயிரவரையிற் போந்த 'படிமையோன' எனனுஞசொற சைவ அந்தண முனிவனுகிய ஆசிரியன் தொல்காபபியன்றன் தவவொழுககத்தையுந் தவவடிவத்தையும மட்டுமே சுட்டுதல் வேண்டுமன்றி, அவறகுப பெருங்காலம பிறபட்டிருந்த புதத சமணரின தவவொழுககத்தையாதல் தவவடிவத்தையாதல் சுட்டுதல் ஒரு சிறிதும இசையாதென றுணர்ந்து கொளக. தொல்காபபியத்துள் யாண்டும புதசமண சமயங்கள ஒரு திணைத்தினையுங குறிபபிடப படாமையும நினைவிற பதிககறபாறறு.

இன்னுங, கௌதமசாக்கியரும மகாவீரருந் தோனறி முறையே புத்தசமண சமயங்களைத் தோறறுவித்தறகு முன, சாககிய வகுபபினர் சிவபிரானையே வணஙகி வந்தன ரெனபது, வடநாட்டிலுள்ள பழைய கல்வெட்டுகளின் ஆராயச்சியால நனகு புலனுகாகிறகின்றது[1] கௌதம சாக்கியர் பிறந்த ஞானறு, அவர் சிவபிரான திருவருளைப பெறுதற் பொருட்டுச் சிவபிரான திருக்கோயிறகுப பெற்றோரால் எடுததுச செல்லபபட்டமை, பழைய புத்தசமயக் கல்வெட்டு ஒனறிற் செதுககி வைக்கபபட்டிருககினறது.[2] மிகச சிறந்த இச சானறுகளை உற்றுராய வல்லார் எவர்க்கும, புத்த சமண்மதங்கள தோனறுதறகுப பல்லாயிர ஆண்டுகள முற்றொட்டே இப பரதகா டெங்கணும பரவியிருந்தது சைவசமயமேயா மெனபதூஉம, இஙகு முழுதும் உலவிய தாபதர் சைவசமய அந்தண முனிவரேயாவ ரெனபதூஉந் தெறறெனை விளஙகாநிற்கும.

---

1. See Mr. H. Krishna Sastri's 'South-Indian Images of Gods and Goddesses,' p. 73.

2. See Epigraphia Indica, Vol. V, p. 3.

அற்றேல், 'பரதிமா,' 'படிமை,' 'படிவம்' என்னுஞ் சொற்களுள ஒனறேனும, புத்தசமண் நூல்களுக்கு முற்பட்ட பழைய வடநூல்களுள உண்டோ வெனின; உண்டு. வடநூல்களுள மிகப பழையன இருககு, எசுர், சாமம் என பவைகளேயாம. ஐயாயிர ஆணடுகளுக்குமுன தமிழர் ஆரியர் எனனும இருவகுபபினாக்கும ஆசிரியராயிருந்த முனிவர்களாற பாடபபட்டுச் சிதர்ந்துகிடந்த இவறறின பாட்டுகள, பாரதபபோர முடிந்தபின வியாசரால் ஒருங்கு தொகுக்கப்பட்டு, இருக்கு, எசுர், சாமம என்னும மூனறு வேதஙகளாக வகுக்கபபட்டன. இவ வேதபபாட்டுகள வழஙகிய காலத்தில் வணஙகபபட்டு வந்த இந்திரன, வருணன், உருத்திரன முதலான தெய்வஙகளுககு உருவஙகள சமைதது வைத்து, அவறறிறகு வழிபாடு ஆறறி வந்தனர் எனபதும அவைதமமைக கருததூனறி ஆராயுமவழி இனிது புலனுகினறது. ஆரியா போர்மேறற சென்ற காலஙகளில் இந்திரனது வடிவத்தை எடுத்துச சென்றனரெனபது இருகுவேதத்திற சொல்லபபட்டிருக்கினறது.[1] சிவபிரான திருவடையாளமான சிவலிஙக வடிவத்தைப் பண்டைத் தமிழமக்கள வைத்து வழிபட்டமை இருகுவேத ஏழாம மணடிலத்தின் இருபத்தோராம பதிகத்திலும், பத்தாம மணடிலத்தின தொணணூறறொனபதாம பதிகததிலும விளககமாக வைத்து நுவலபபட்டிருக்கினறது. இவையேயனறி, 'பரதிமா' எனனுஞ சொல்லே ஒரு தெயவமபோற செயத வடிவத்தைக குறிககும மொழியாக எசுர்வேதத்தில் "ஈதஸய பரதிமா அஸதி" (கூஉ, கூ) எனறு தெளிவாகக் கூறபபட்டிருககினறது. இவ வுணமைகளீச சிறிதாயினும ஆராயந்து பார்ககும அறிவு மதுகையினறி, 'பரதிமா' எனனுஞ சொல சமண நூல்களி லன்றிப, பழைய வேதநூல்களில் யாண்டுமில்லை யெனறு துணிந்துரைத்தவாதம பேதைமைப பெருக்கை எனனெனபேம! இனியேனும அச்சொல் பௌதத சமண நூல்கள தோனறுதறகு மூவாயிர ஆண்டு முனனிருந்த

1. The Cambridge History of Ancient India, Vol 1. p. 106.

எசுர்வேதத்திலேயே உளதெனறறிந்து அவர் உண்மை தெளியக்கடவராக.

இனி, அவர், தொல்காபபியரைச் சமண்சமயத்தின ரென நாட்டுதறகு மறறுமொரு சானறு காட்டுவே மெனப புகுந்து, உயிர்களை ஓரறிவுமுதல் ஐயறிவு ாருக உளள ஐந்துவகைகளிற் பகுத்தடகுதல் சமண்சமயக கோட் பாடாகுமென்றும், தொல்காபபியனா இவவைவவகை உயிர்ப பாகுபாடுகளைத் தமது 'மரபியற' சூத்திரஙகளில் எடுத் தோதுதலின அவர் சமண்சமயததவரேயாதல வேணடு மெனறுங கூறினர். இதுவும ஒரு சிறிது ஆராயறபாறறு.

சமண் மதத்தவர்கள எவவகைபபட்ட உயிரையும எவவகை ஏதுபபறறியுங கொல்லலாகாது என்னும மிகச சிறந்த கொல்லா அறத்தைக கடைபபிடித்து ஙினறவா கள வடநாட்டினகண வந்து குடியேறிய ஆரியரும அவர் வழிச் சார்ந்த பார்பபனரும வேளவி வேட்டலை ஓர் ஏதுவாக வைத்துக கொணடு, எண்ணிறந்த விலஙகினங களைக் கொனறு அவறறின் ஊனை நெயயிற பொரிதது உண்டுஞ, சோமப பூண்டில் இறக்கிய களளை ஙிரமப அருந்தியும வெறியாட்டயர்ந்து வந்தமையால், இயறகையி லேயே புலாலுங களளும மறுதத சைவவேளாள அரசர் (க்ஷத்திரியர்) அவ வாரியாதந் தீயஒழுகலாற்றினை அரு வருத்து, அதனைத் தடைசெய்தற பொருட்டாகவே சமண் புத்தக் கொளகைகளைத் தோறறுவித்தது, அவறறை எஙகும பரவசசெயதனர். சமணமத ஆசிரியரான 'மகா வீரரும,' புத்தசமய ஆசிரியரான 'கௌதம சாககியரும' வடக்கே மகதநாட்டில் வைகிய க்ஷத்திரிய அல்லது தமிழ வேளாள அரசமரபிற பிறந்தோரே யாவர். ஆரியர் வட நாட்டிற் புகுந்து ஆங்காஙகுக் குடியேறியபோது, அங்கம, மகதம, காசீ, கோசலம, வச்சீ, மல்லை, சேதீ, வஞ்சம, குரு, பாஞ்சாலம, மச்சம, சூரசேனம, அச்சகம, அவந்தி, கந்தாரம, காமபோசம் முதலிய பதினாறு நாடுகளில் நாகரி கத்திற் சிறந்து விளஙகிய வேறு மரபினரான தமிழ

வேளாளரே அரசுபுரிந்தனர் எனபது அங்குந்தரநிகாயத் தில் (க, உகஉ; ச, உருஉ, உருசு, உசுo) செவவனே குறிக்கபபட்டிருக்கினறது. மகதநாட்டிலிருந்த தமிழர், முனனரே யாம விளககியெழுதிய பூருககளைச் சோந்தோ ராவர்.[1] இஙஙனமாகச் சமண் கோட்பாட்டைப பரவச் செய்த மகாவீரர் தமிழரச முனிவரேயாகையால், அவர்க் கும அக்காலத்திருந்த ஏனை வேளாளராகும பொதுவாக உரிய கொல்லா அறத்தை அவா வலியுறுத்திப பரவச் செய்ததில் ஏதும புதுமையில்லை. அஞஞான்றிருந்த அத் தமிழ முனிவர், தங காலத்திற்குப் பல்லாயிர ஆணடு முன் னிருந்த ஆசிரியர் தொல்காபபியனுர் முதலான தமிழச் சானறோர் கண்டுரைத்த உயிர்பபாதுபாடுகளையே தாமுந் தழுவிக கூறினாரல்லது, மகாவீரர் முதலாகப பினவந்த சமணமுனிவர் வகுத்ததனைக கணடு தொல்காபபியனுர் அவைதமமைக் கூறினாரல்லர்.

அஃதெஙஙனமெனறு காடடுதும: எவவிடததிலுளள உயிரையுங கொல்லலாகா தெனபதே சமணாதங கோட் பாடாகையால், அக் கோட்பாட்டிறகு இசையவே உயிர் கள உயிரவாழும இடஙகளை அவாகள முதலில் ஆராய்ந் துரைபபாராயினர. உயிர்கள நிலத்திலுளளனவும, நீரிலுளளனவும, நெருபபிலுளளனவுங, காறறிலுளளன வும் என நாலவகைபபடுமெனறு உரைத்து, ஆணடாண டுளள உயிர்களுககு நேரயுஞ் சாககாடடும உணடாகாவண் ணம, அவறறோடு இயைந்து காணபபடும உயிரில் பொருள கணைத் தாம பயனபடுத்திககொளளும முறைகளை விளககிக் காட்டுதலே சமண்சமய ஆசிரியர் கருத்தாகும. இபபோ துளள சமண் நூல்களில் மிகப பழையதாகிய ஆசாரங்க சூத்திரம், சுருதஸகந்தம, இரண்டு, மூனறு, நானகு, ஏழாம அததியயனஙகளில், உயிர்கள உலவுதறகிடமான நிலன நீர நெருபபு காறறு என்னும இடவகையால் அவ்வுயிர் களை நால்வகைபபடுத்து, அவை தமககு இடர் நேரா வண்ணம அஙகஙகுளள ஏனைப பொருளகளைப பயன

1. The Cambridge History of Ancient India, p. 309.

படுத்துமாறு விரித்துரைத்தல் காண்க; இதன் ஆரும் அத்தியயனத்தில், ஈரறிவு மூவறிவு நாலறிவு ஐயறிவு உடைய எல்லா உயிர்களுக்கும இன்ப துனபமும் அச்ச மும உளவாகலின, அவை தமக்கு எந்த ஏதுவைக் கொண்டும எவவகை இடரும செயதலாகாதென்னும அத்துணையே வற்புறுத்துரைக்கபபட் டிருக்கின்றதல் லாமல், ஓரறிவுமுதல் ஐயறிவு ாரும வைத்து உயிர்களோப பாகுபாடு செயதல் ஆணடுங காணபபடவில்லை. ஆகவே, உயிர்களோ இடவகையால் நால்வகைபபட வகுத்துக்காட்டு தலே பண்டைச் சமண் ஆசிரியர்தங கருத்தாதல் காண்டு மன்றி, அறிவுவகையாற் பகுத்துக்காட்டுதல் அவர்க்குக் கருத்தாதல் கண்டிலம. இடவகையாற பகுத்தலே அவர்தங கோட்பாட்டுக்குப பயன்படுவதனறி, அறிவு வகையாற் பகுத்தல் அதற்குச் சிறிதும பயனபடுவ தனரும; எனனோ? ஈரறிவுடையவாயினும் அல்லது ஐயறி வுடையவாயினும எல்லாவுயிர்களும இனபதுனபமும அச்ச மும உடையவாகையால், அறிவின ஏற்றத்தாழ்வு கரு தாது எல்லாவுயிர்களோயும பாதுகாத்தலே செயற்பால தெனபதூஉம, உயிர்கள ஓரிடத்து உள ஓரிடத்து இல எனா அறியாமையாற கருதிவிடாது நிலன நீர் நெருபபு காறறு எனனும நானகிடங்களினும அவை உளவாதலோக் கருதுதூனறி யாராயந்து பாரத்தல் இனறியமையாத தெனபதூஉம அவர்தங கருத்தாகலி லைனக. எனாவே, உயிர்களோ இடவகையால் ஆராய்தலே பண்டைச் சமணரி ரியர் கோட்பாடாகுமல்லது, அறிவுவகையால் ஆராயதல் அவர்தங கோட்பாடாகாமை பெறறும. பெறவே, உயிர் களோ இடவகையாற பகுதது விரிததுக் காட்டிய பழைய ஆாாரங்ங நூந்திரத்திறகு மாறுக, அவைதமமை இடவகை யாலும அறிவுவகையாலும பகுதது விரித்துரைத்த உத்நராத்தியயனநூல் (நூசு) மிகவும பிறபட்ட காலத் தெழுந்த சமண்முனிவரால் தொல்காபபியத்தைப பார்த் துச் செயயப்பட்ட தெனாரும வேண்டுமாகலின், அஃது ாணடைகளு மேறகோளாகாதெனா மறுக்க ஆசாரங்க சூத்திரத்திற்குச் சீலாங்க முனிவர் எழுதியவுரை கி. பி.

அளசு-இல் முடிக்கபபட்ட தொனருகையால்,[1] ஆசாரங்க சூத்திரத்தின் காலஙு கி. பி. ஐந்து அல்லது ஆரும் நூற ருண்டிற்கு மேற்பட்டதாகாது. 'உத்தராத்தியயனம' சமண் நூல்களில் மிகப பிறபட்டதாதலும, அதன் இறுதிக்கண் உயிர்களீ இடவகையாலும அறிவுவகையாலும பாகுபாடு செய்து விரித்தோதும முப்பத்தாரும அத்தியயனம இன்னும பிற்பட்டகாலத்தே செயது சேர்க்கபபட்டதா தலும மேற்குறிபபிட்ட ஐரோப்பிய ஆசிரியரால் நனகு விளககிக்காட்டபபட்டிருகினறன.[2] பழையதாகிய 'ஆசா ரஙக சூத்திரம' முதறகண் உயிர்களீ இடவகையாற் பகுத்து விரித்தோதி அறிவுவகையாற் பகுத்தலீ ஒரு சொற்றொடரளவில் மிகச் சுருக்கிக் கூறுகிற்க, 'உத்தராத் தியயனமோ' இடவகையான மட்டுமேயனறி அறிவுவகை யாலும உயிர்களீப பகுதது மிக விரித்தோதா நிற்கின றது, இதனீ உற்றுநோககவல்லார்க்கு, உத்தராத்தி யயனத்தின இவ் விறுதிபபகுதி பெரிதும பிறபட்ட காலத்ததாதலும, அறிவுவகையால் உயிர்களீப பகுத் தோதுமுறை பண்டைச் சமணருரியர்களா லனறிப பினறைச் சமண் புலவரால் அவாதம பழைய கோட் பாட்டுக்கு முரணுகக் கைக்கொளளபபட்டதாதலும அஙகையங் கனிபோல் இனிது விளஙகாநிறகும. உயிர்களீ அறிவுவகையாற பகுததல் சமண கோட்பாட்டிறகு இசைந்து அதறகு ஏதிதாரு பயனும பயவாமையாலும, அவைதமமை இடவகையாற பகுததல் அதன் கோட்பாட் டொடு பெரிதும ஒத்து அதறகுப பயனபடுதலாலும, அதறகிணஙகவே பழைய 'ஆசாரஙக சூத்திரமும' உயிர் களீ இடவகையாற பகுத்தே விரித்துரைத்தலாலும, பண்டைக்காலத்துச் சமண நூலாசிரியர்க்கு உயிர்களீ அறிவுவகையாற பகுத்தல் கோட்பாடன் றெனபது துணிந்துகொளளபபடும. ஆகவே, 'ஆசாரஙக சூத்திரத்' தைபபோல், உயிர்களீ ஒரு சிறிதாயினும இடவகையாற

1. See H Jacobi's Introduction to Jaina Sutras Vol. I, p. II.

2. Do Do Vol. 2. pp. xxxviii-xxxix

பகுத்தோதாத ஆசிரியர் தொல்காபபியனுர் சமண் சமயத் தவராதல் யாண்டையதென மறுக்க. ஆசிரியர் தொல் காப்பியனுர் சொற்பொருளாராயச்சியில் ஆழச்சென று, அச் சொறபொரு ளிலக்கணப் பரபபெல்லாம நுணுகி யறிந் தெடுத்து விளக்கி முடிக்கின றுழி, உலகினகட் காணப் படும உயிர்த்தொகுதிகளெல்லாந தத்தமக்கு இயல்பாக அமைந்த ஒன்றுமுதல் ஆறுவரை அறிவுகள விளங்குதற் கேற்ற உடமபுகளின் வைகி உயிர்வாழுமாறறைத் தமது நுண்மாண் நுழைபுலத்தாற கண்டறிந்து, அறிவான் மிக்க சான்ரோரெல்லாங் கண்டு வியந்து பாராட்டுமபடி அவறறை அறுவகைபபடுத்தோதித் தமதொரபுயர் வில்லா இலக்கணக் களஞசியத்தைக கட்டிமுடித்தார. இஙஙனம் உயிர்களை அறிவுவகையால் அறுவகைபபடுத்து விளக்கல் இலக்கண ஆராயசசியினபாற படுவதல்லது, ஒருசமயக் கோட்பாட்டினபாற படுவதன்றும. உயிர்களை இடவகையாற் பகுத்தலோ சமண் கொளகைக்குப பெரி தும பயனபடுவதாகும. இவ்வாறு ஒன்றினைனறியை யாத இருவேறு பாகுபாடுகளின இயல்பும பயனும் அறிந்து பாராமல், தொல்காபபியனுரைச் சமண்சமயத் தின்பாற் படுக்கப் புகுந்தாரதம அறியாமையின வலிவை என்னெனபேம! அதுகிடக்க.

இனித், தொல்காபபியனுர சமண்சமயத்தினர ல்ல ரென்பதறகுப பினனுரு சில சானறுகள காட்டுதும. பழைய சமண் நூல்களிலெல்லாம நிலன் நீர் தீ வளி எனனும நாறபெரும பொருளகளே சொல்லபபட்டன வல்லாமல், அந் நான்கின வேறுன 'விசுமபு' (ஆகாயம்) ஒன்று உளதெனபது கூறபபடவில்லை. உத்தராத்தி யயனத்திற கூறபபடும இடைவெளி ஐமபெரும பொருள் களிற் சேர்ந்ததனறு; அஃது ஆண்டு 'ஆகாச' மெனக் கூறபபடாமல் 'நபஸ' எனக கூறபபடுதலே அதற்குச் சான்றும். மற்று, ஆசிரியர் தொல்காபபியனுரோ,

> "நிலந் தீ நீர் வளி விசும்போடு ஐந்துங்
> கலந்த மயக்கம் உலக மாதலின்." (மரபியல், அசு)

என்பதனால் 'விசுமபு' என ஐந்தாவதொருபொருள உள தென அருளிச்செயகின்றார். சமண நூலார் மக்களையுந் தேவர் நரகர்களையும ஐயறிவுடைய உயிர்வகைகளில் அடக்கி,

"வானவர் மக்கள் நரகர் விலங்குபுள்
ஆதி செவியறிவோடு ஐயறி வுயிரே."

(நன்னூல், உரியியல், அ)

எனக் கூறுகிறபர்; உத்தராத்தியயன நூலும இங்ஙனமே கூறுகிறகும. இவவைந்தறிவின வேறுக ஆறுவது மன வறிவு ஒனறு உண்டெனபது பழைய சமண நூல்களிற காணபபடவில்லை, பிறகாலத்து நூல்கள மேற்கோளகள ஆகா. மறறு, ஆசிரியா தொல்காபபியனாரோ, மககளினுங கீழபபட்ட மாவும மாக்களுமே ஐயறிவினவா மென்பதும, மக்களோ ஆறறிவிலராவ ரெனபதும போதர,

"மாவு மாக்களும் ஐயறி வினவே." (மரபியல், கூஉ)

எனவும,

"மக்க டாமே ஆறறி வுயிரே." (மரபியல், கூகூ)

எனாவுந் தெற்றென மொழிகினாறார். மேலும, புத்தசமண ஆசிரியா தாம இயறறும நூல்களின் முகபபில் புத்தனை யும அருகனையும வணஙகாதிரார். எல்லாச் சமயத்தவரும எடுத்துப்பயிலும இலக்கணம் நிகண்டு முதலான பொது நூல்களை ஆகுகும வழியும புத்தர் சமணர் அந் நூல்களின முதலிற் புத்தக்கடவுள அருகக்கடவுளுக்கு வாழத்து உரையாதிரார். இதற்கு 'வீரசோழியம,' 'யாப்பருங்கலம,' 'யாபபருங்கலக்காரிகை,' 'நனனூல்,' 'சூடாமணிநிகண்டு' முதலிய நூல்களின் கடவுள வாழ்த்துச் செய்யுட்களே சான்றும். மற்றுத், தொல்காபபியனாரோ தமது நூன் முகத்தில் அஙஙனம புத்தனையாதல் அருகனையாதல் வணஙகக் காணுமையானும, அவர் அருளிச்செய்த பெரு நூலாகிய 'தொல்காப்பியத்'துள் ஒரிடத்தாயினும, புத்தக் கடவுள அருகக் கடவுள் அவர் வகுத்த பௌத்த சமண

மதஙகள முதலாயினவறறைப பற்றிய ஒருசிறு குறிப்புத் தானுங காணபபடாமையானும, அவ் வாசிரியர் அதன் கட் கூறுங் கொள்கைக குறிபபுகளெல்லாம பண்டைக் காலத்தில் இப பரதநா டெஙகணும பரவியிருந்த தமிழச் சைவ அந்தண முனிவரின ஒழுகலாறுகளேயும அவர் தமக்குரிய சைவக் கோட்பாடுகளேயுமே தழீஇ நிறறலா னும அவவாசிரியர் பௌத்த சமண்மதஙகள தோனறு தறகுப பல்லாயிர ஆண்டு முறபட்டிருந்தவராதல் ஒரு தலையேயாம. எனறிதனையும ஆராயந்து காட்டிய வாறருற 'படிமை' எனனுஞ சொல்லாற குறிக்கபபட்ட தவ வொழுகக்ம பண்டைத் தமிழச் சைவ அந்தணரின தாபத வொழுகக்த்தையே குறிககுமெனபதூஉம, அதறகு முதலான 'பரதிமா' எனனுஞசொற பழைய எசுர்வேதத் தினகண்ணேயே காணபபடுதலின அஃதறியாது அதனைச் சமண் மதத்தவர்களே உரிய சொல்லாக வரைந்துவைத்து அவவாறருல் தொல்காபபியனுரைச் சமண சமயத்தின பாற் படுககலாயினுருரை நுணுகி விரிந்த ஆராயச்சியுணர் வில்லாதார்தம போலியுரையா மெனபதூஉம, தொல் காபபியனா ஒன்று முதல் ஆறறிவு ஈருக வைத்து உயிர் களே ஆறு தொகுதியில் அடக்கிய முறைக்கும, சமணர் நிலன் நீர் நெருபபு காறறு எனனும நானகிடவகையில் வைத்து உயிர்களேப பகுத்த முறைக்கும வேறறுமை சாலப பெரிதாகலின அவ வியல்புகளெல்லாம பழைய சமண்நூல் மேறகோளகள கொண்டு முறற ஆராயந்து பாராது நுனிபபுல் மேயும் யாடுபோல் தாம அறிந்த சிறிதையே பெரிதாக மயஙகி அம மயக்கவுணர்ச்சியால் தொல்காபபியனுரைச் சமணரெனருருரை பொருந்தா தெனபதூஉம, அதுகொண்டு அவர் கி. மு. ஈ-ஆம நூற் ருண்டிலிருந்தாரெனல் போலியுரையா மெனபதூஉம் நனகு விளக்கப்பட்டன.

உக.. தொல்காப்பிய காலத் தொடர்ச்சி

இனி, ஆசிரியர் தொல்காப்பியனுரைக் கிறித்து பிறந்த தறகுமுன மூந்நூரும ஆண்டிலிருந்த பாணினி முனிவர் காலத்திற்கும பினனே வைத்தல் வேண்டுமென வரைந்த பாரபபனருரை ஆராயற்பாறறு யாம 'பண்டைககாலத் தமிழரும ஆரியரும' எனற நூலில் ஆசிரியா தொல்காபபிய னுர் இறநறைககு நாலாயிரதது மூந்நூருண்டுகட்கு முன இருந்தாரென று பல ஏதுகளகொணடு நாட்டிய காலத் தைத், தாமும பல தக்கசான றுகள காடடி மறுமல, யாம கூறிய காலகககணககு அளவுககு மிஞசியதெனவும, ஆகவே அதனை மறுத்தல்வேணடா வெனவும அப பாரபபனர் மொழிந்தனர். தமிழர் அல்லாத ஆரியர், எகுபதியர், சாலடியா, பாபிலோனியர் முதலியோரெலலாம ஐயாயிரம பதினுயிரம ஆணடுகட்கு முனனரே நாகரிகத்திற சிறந்து விளஙகினு ரெனறு கூறுவதெல்லாம அளவுககு மிஞசிய தாகாது! ஆனுல் தமிழர் நாலாயிர ஆண்டுகட்கு முன னரே இலகககண இலக்கியஙகளுடையராய நாகரிகததிற சிறந்து விளஙகினுரென றுரைபபது மட்டுந்தான இப பாரபபனருக்கு அளவுக்கு மிஞசியதாயத தோனறி விட்டது! இவா ஏதொரு சானறுங காட்டாது, உண மைச சானறுடன எழுதிய எமதுரையினைத தாம கருது தற்குரிததனறென விடடனரேனும, அறிவான மிககோர் எமதுரையின மெயமமையும அவருரையின பொயமமையும் எளிதிற றேர்ந்து எமதுரையினைக கைக்கொளவ ரெனக. அது கிடகக.

முதலில் இவர் தொல்காபபியம் இடைச்சஙக நூலென னும ஒரு பொருந்தாவுரையைத் தழுவி, அவ விடைச் சஙகம கிறிதது ஆணடுககு முனனும, கடைச்சஙகம அவ் வாண்டின துவக்க காலத்திலும இருந்தனவெனக் கரைந் தார். 'பாணடியன் பல்யாகசாலை முதுகுடுமிப பெருவழுதி' எனபான குமரிநாடு கடலவாயபபுகுவ தனமுன அஃதாவது இற்றைக்கு ந்000-ஆண்டுகட்குமுன தலைச்சஙக காலத்தில் இருந்தானுவன் என்பதை மேலே எ0க-ஆம் பக்கத்தில்

விளக்கினும். அவன்மேற் பாடபபட்ட செய்யுள ஒன்றில் 'ஞமன'என ஞகரத்தை முதலாக உடைய சொல் (புறம், சு) ஒனறு வரக காண்கினறேம தொல்காபபியனர் இப பாண்டிய அரசன காலத்திலேனும, அல்லது அவற்குப் பினனேனும இருந்தராயின, தாம இயறறிய இலகண நூலில் ஞகரத்தை முதலாகவுடைய சொல்லையுந் தழுவி யிருபபா. ஆனால, அவர் தங்காலததில் ஞகரத்தை முத லாகவுடைய சொல் தமிழில் வழஙகாமையின, அதனை விலகி "ஆ, எ, ஒ எனும் மூவுயிர் ஞகாரத்துரிய" (எழுத்து, சுசு) என்று சூததிரஞ செயவாராயினர். இவ் வொரு பெருஞ்சானறு கொண்டே தொல்காபபியனர் பாணடியன முதுகுடுமியின காலத்திறகும அஃதாவது இறறைறகு ஐயாயிர ஆண்டுகளுக்கும் முனனரே இருந்தா ரென்பது நனகு துணியபபடும. இன்னும, கி. மு. மூனறும நூறறுணடில் அஃதாவது இற்றைககு இரண்டாயிரத்து இருநூறு ஆண்டுகளுக்குமுன தொல்காபபியனர் இருந் தனராயிற், சிறிதேறக்குறைய அக்காலத்தில் இயற்றப பட்ட 'பரிபாடற' செய்யுட்களிற் காணபபடுஞ 'சகடம,' 'சடை,' 'சண்பகம,' 'சமம,' 'சமழப்பு,' 'சமைப்பின' முத லான சகர முதறற தமிழ மொழிகளையும், 'ஞமன' என்னும ஞகரமுதற் றமிழ மொழியினையுந் தழுவியிருப்பர்; ஆனால், அவர் தங காலத்தில் அச் சொறகள வழஙகாமையின ஞகர முதன்மொழி தமிழில் வரா என்று சூத்திரஞ செய்தாற் போலவே,

"சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே
அ ஐ ஔ வெனும் மூன்றலங்கடையே." (எழுத்து, சுஉ)

எனச் சகர முதன்மொழிகளுந் தமிழில் வரா எனச் சூத் திரஞ்செய்திட்டார். ஆகவே, இச் சொற்கள தமிழில் வழஙகிய கி. மு. மூன்றும நூறறுண்டிறகும, ஞகர முதன் மொழி வழஙகிய கி. மு. முபபதாம நூற்றுண்டிற்கும் முனனே தொல்காப்பியனர் இருந்தமை கன்மேற் கட்டிய அரண்போல் நாட்டபபடுமெனக. எனவே, தொல்காப்பிய

ஞா தலீச்சங்க காலத்தவ ரல்லால், இடைச்சங்க காலத் தவரல்லரென ஓர்ந்துகொளக.

இனி, அவா, தொல்காப்பியச சிறபபுப பாயிரச் செய் யுளிற போந்த "ஐந்திரம நிறைந்த தொல்காபபியன்" எனபதிலுளள 'ஐந்திரம' எனபதை ஆராயபபுகுந்து, அது வடமொழியிலுளள வியாகரணமா மெனறும, அதனை யாக்கிய இந்திரனும, அட்டாத்தியாயியை ஆகிய பாணினியும ஒரே காலத்தவராதல் வேண்டுமெனறும, பாணினி கி. மு. மூனறும நூறறுண்டிலிருந்தவராகலான் ஐந்திரம் உணர்ந்த தொல்காபபியா கி. மு. மூனறும நூற றுண்டிறகும பிறபட்டவராதல் வேண்டுமெனறுங கூறுவ துடன, பனமபாரனார் இயறறிய சிறபபுபபாயிரச் செயயுள பிறகாலத்தேசெயது தொலகாபபியததில் நுழைக்கபபட்ட தாயிருக்கலாமெனறும நுவல்கினறார். இவவாறுரைக்கும உரைகளின் இடையே ஒனறினும் துணிவு பிறவாமலும் தக்க சானறுகள காட்டாமலும முனனெடுபின முரணு மாறு இவா செய்யுங குழபபஙகள பல.[1]

வடமொழி இலக்கண நூலாசிரியரில் இந்திரனே முதலாசிரியனுவனென்பது தைத்திரீய சமஹிதையிற (எ, சு, எ) சொல்லபபட்டிருக்கினறது. 'தைததிரீய சம ஹிதை' கிருஷ்ணயஜுர் வேதத்தைச் சேர்ந்ததாகையால், அஃது இறறைக்கு நாலாயிரத்து ஐந்நூறுண்டுகளுக்கு முறபட்டதெனபதும மேறகாட்டியவாறுல் தானே போதரும. நாகோஜிபட்டரது 'பரிபாஷேந்து சேகரத்' திற்கு உரை யெழுதிய வைத்தியநாதரும "பழைய வையா கரணிகளாவார் இந்திரன முதலாயினர்"[2] எனறு அவ் வுரைமுகத்திற கூறினர். இந்திரனுகுப் பின்னும் பாணி னிகு முனனும் ஒருவர்பின ஒருவராய வந்த வடமொழி இலகுண ஆசிரியா அறுபத்துநால்வ ரென்பது பெறப்

1. See pages 154-160, 'Dravidian India' by Mr. T. R. Sesha Iyengar, M. A.

2. Dr. T. Goldstucker's Panini, p. 58; Panini Office Publication.

படுதலால்,[1] ஓர் ஆசிரியர்க்கு முபபதாண்டு விழுக்காடு வைத்துக் கணகசுச்செயயவே அறுபத்து நால்வர்க்கும ஓராயிரத்துத் தொளாயிரத் திருபஃது யாண்டுகள ஆகினறன. இனிப பாணினி முனிவர் இருந்த காலம கி. மு எ00-என று முடிவு செயயபபட்டிருத்தலால், வட மொழி முதல் இலக்கண நூலாசிரியன் இந்திரன் இருந்தது இற்றைக்கு நாலாயிரத்தைந் நூறியாணடுகளுக்கு முன் னென்பதும முடிக்கபபடும. ஆரியவேத காலத்தையுங், குமரிநாடு கடல்கொண்ட காலத்தையும, பாரதபபோர் நிகழந்த காலத்தையுந், தலச்சங்க காலத்தையுந், தொல் காபபியனா காலத்தையும மேலே பல முகத்தால் ஆராய்ந்து காட்டிய காலகணகளோடு, ஆரிய இலக்கண முதலாசிரி யன இந்திரன காலமும ணடுக காட்டியவாறு கணக்குச் செய்யின முழுதொத்து நிறகக் காண்டலால், இவ வுண்மை முடிபுக்கு மாறுக, இந்திரனும அவற்கு இரண்டாயிர மாண்டு பிற்பட்ட பாணினி முனிவரும ஒரே காலத்தின ரென ருருரை பெரியதொரு பிழைபாட்டுரையாம எனக.

அற்றனறு, இந்திரனே பாணினிகாலத் திருந்தவன் அல்லன; இந்திரன ஆக்கிய ஐந்திரத்தினவழிக கி. பி. முதல் நூறருண்டிற் செயயப்பட்ட 'காதந்தரமும',[2] கி. பி. ஐந்தாம நூற்ருண்டின பிறபகுதியில் இயற்றபபட்ட 'ஜைநேந்திரமும'[3] என்னும நூல்களே, பணமபாரனரது சிறப்புப பாயிரவுரையில் 'ஐந்திரம' என அவறறின முதல் நூற பெயராற கூறபபட்டன வெனறு கொளளாமோ வெனிற், கொளளாம; இப பரதநாடெங்கணும உளள ஆனருராற் பெரிது பாராட்டிப பயிலபபட்டு வந்த பழைய விழுமிய இலக்கண நூலாகிய பாணினீயத்தைப பயிலாது, அருகி மிகச் சிலராற் பயிலபபட்டு வந்த

1. Dr. A. A. Macdonell's 'A History of Sanscrit Literature,' p. 430.

2. Dr. S. K. Belvalkar's Systems of Sanscrit Grammar, p. 88.

3. Do Do Do , p. 64.

'ஐஞேந்திரம்' முதலிய பின்னூல்களைத் தொல்காபபியனூர் கற்று நிரம்பினரென றல் ஒவவாமையானும், தொல்காப்பியனூர் பாணினீயத்திற்குப பிற்பட்டவராயின் ஒரு முதனிலையிற பிறந்த பல சொற்களை ஆராயந்து அவ்வொரு முதனிலையிற கொணர்ந்தடக்கும பாணினீய முறையின நூட்பமும பயனும உணர்ந்து தாமும் தமிழச்சொறகளை அம முறையில் ஆராய்ந்தடகுவரே யனறி "மொழிப் பொருட் காரணம விழிப்பத் தோனரு" (தொல்காப்பியம், சொல், நகூச) எனக் கூறுராகலானும, ஐந்திரத்தின வழிவந்த 'காதந்தரம,' 'ஐஞேந்திரம' முதலிய நூல்கள ஒரு காலத்தனவனறி வெவவேறு காலதத்தனவாகலின் அவை தமமையெல்லாந் தொல்காபபியனூர் ஒருங்கு கறறறகுக் கி. பி. ஆரும நூறருண்டில் இருந்தாலல்லது அவர்கு அஃது இயலாமையானும, அவ வழிநூல்கள பலவற்றை யுங கல்லாத ஒருவரை "ஐந்திரம நிறைந்த" எனறல் பொருந்தாமையானும, 'ஐந்திரம' எனனும முதல்நூலை மட்டும பயினரா ஒருவரையோ அவ்வாறு "ஐந்திரம நிறைந்த" எனறுரைத்தல் ஏற்புடைத்தாமாகலானும், திருநாவுக்கரசு நாயனரிருந்த கி. பி. ஆரும நூற்றாண்டிலிருந்து தொல்காபபியனூர் நூல் செயதனராயின அக்காலததிற் பெரிதும பரவிவழஙகிய 'கட்டளைக்கலித்துறை,' 'பல்வகை விருதத்தப பாக்கள' முதலியவற்றிறகும ஏனைச் சொறகள சொறறொடர்கட்கும இலகக்கணஙகூறல் இனறியமையாததாகவும் அவற்றுள ஒருசிறிதாயினும அவர் உரையாமையானும, பௌத்தம சமணம் முதலான மதக் குறிபபுகளாதல் அம் மதத் தெய்வஙகளாதல் அவரால் ஓர் எட்டுணையுஞ சுட்டப்படாமையானும், தொல்காபபியனூர் நுவனற இலக்கணஙகள அத்துணையும் மிகப பழைய அஃதாவது ஐயாயிர ஆண்டுகட்கு முறபட்ட செந்தமிழச் சொற்பொருள வழக்குகளையே குறிபபனவாயிருத்தலானும், தொல்காபபியனூர் பயின்ற 'ஐந்திரம' எனபது ஆரியத்தில் முதல் இலக்கண ஆசிரியனுகிய இந்திரன செயத நூலேயாமெனறு கோடலே தொலகாபபியனரிருந்த மிகப பழைய காலத்திற்கு இசைவதொன்று

மாகலாஞும, பணமபாரஞர் மொழிந்த 'ஐந்திரம்' இந்திரன் ஆக்கிய முதல் நூலேயாகுமனறி அதறகுப பணமைடுங காலம பினமைழுந்த 'காதந்தரம' முதலியனவாகாவெனறு கடைப்பிடித் துணாந்துகொளக.

இனி, ஆங்கில ஆசிரியர் சிலரது கோட்பாட்டைத் தழிஇப் பாணினி முனிவர் கி. மு. மூன்றும நூறறுண்டில் இருந்தாரெனல அவர் மொழிந்ததூஉங கொளளறபால தனறு ஐரோப்பிய ஆசிரியருளளுநம, நம பரதநாட்டுக் கறறருளளுநம வடமொழிநூற காலஅளவைகளாக கணக் கிட்டார் தொகை இருதிறபபட்டு நிறகினறது அவருள ஒருசாரார மிகப பழைய இருக்குவேதப பாட்டுகளுக்கே கி. மு. கஙூ00-க்குமேற பழமை சொல்ல ஒருபபடுகினறிலர். மறறொரு சாரார அவை தமக்குக கி. மு. ச000-க்கு மேற பழமை சொல்வர் [1] இபபோது காளிகட்டத்தினகண் ஓர அறிஞர் இருகுவேதப பதிகஙகள பல இற்றைக்கு முப் பதினாயிர ஆணடுகளுக்குமுன இயறறபபட்டன வாகு மென்று அரிய பல சானறுகள கொணடு விளக்கிவருகின றார [2] இஙஙனமே மாபாரதபபோர் நிகழந்த காலமும், பாணினிமுனிவர் காலமும இருதிறப்படுத துரைகக்படு கினறன. இவைதம பழமைகளாக குறைதததுக கூறுவார் தங காலகக்கணகக்குப பழைய தமிழநூலாராயச்சிகளும், ஏனை எகுபதியர, சாலடியர், எபிரேயர் முதலான மக்களின் நாகரிகப பழமைக்கும இசைந்து வாராமையின அஃது உண்மையுடையதாகாது. இருக்குவேத முதலியவறறின மிகப் பழைய காலத்தை உண்மையாராய்ச்சியாற கண் டுரைப்பார்தங காலகக்கணகக்கே, பழந் தமிழமக்களின பண்டை நாகரிக வரலாறறோடு ஒத்துநிறகக காண்டலின அதுவே உண்மையென்று கொளளற்பாற்று. 'என்

1. Dr. Hermann Jacobi in Indian Antiquary, Vol. XXIII, pp. 154 sq., Mr. B. G. Tilak in 'The Arctic Home in the Vedas.' and Dr Bloomfield.

2. Dr. Abinas Chandra Das, M.A., Ph.D., in his 'Rig Vedic India'.

பகைவறகு இரணடு கண்கள கெடுவதாயின, எனக்கு ஒரு கண் கெடினுங் கெடுக' எனனும அழுக்காறுடையான் போல், தமிழநூல்களின பழமையைக குறைத்துவிடு தறகு உதவுமாயின வடநூல்களின பழமையுங் குறையி னுங் குறைகவெனறு பார்ப்பனர் சிலா அழுக்காறறுற் கருதுகினறனர். இதறகுத், தொல்காபபியனுரைக கி. மு. இரண்டாம நூறறாண்டிறபடுபபிககவேண்டிய பார்பபனர், கி. மு. முபபதாம நூறறாணடிறகு முனனிருந்த ஐந்திர ஆசிரியன் இந்திரனையுங, கி. மு. ஏழாம நூறறாணடிலிருந்த பாணினி முனிவரையுங் கி. மு. மூனறாம நூறறாணடிற படுப்பித்தறேத சான்றாம. பாணினிமுனிவர் காலத்தைப பறறித் தமக்குமுன ஆராயந்தார் முடிபுகளையெல்லாந் திரும்பவும நுணுகி யாராயந்து, அவரது காலங கி. மு. ஏழாம நூறறாண்டிற்குப பிறபட்டதாதல் ஒருவாறறாலும் இசையாதெனறு நிரணணயித்தல் வேண்டும் எனனும அறிஞர் 'சமஸகிருத வியாகரணவகைகள்'[1] எனனுந் தமது நூலில் நனகு விளக்கியிருத்தல் காணக.

இனனும அபப பார்பபனர், பனமபாரனுர் உரைத்த பாயிரவுரை தானது கோட்பாட்டிறகு இடர்விளைத்து அதனைப பாழசெயதல் கண்டு, அது பிறகாலத்தெழுந்தி தொலகாபபியத்துள நுழைக்கபபட்டதா யிருக்கலா மெனறு மெல்லக கரைந்தார். இபபோதுளள உரை களில் மிகப பழையதாகிய நககீரனுர் தம 'இறையனாரகப பொருளுரை' முகத்திலேயே "வடவேஙகடந் தென குமரியாயிடை" எனபது தொலகாபபியத்தில் உளதாகக் குறிக்கப்பட்டிருத்தலானும, அவர்க்குப பின்வந்த இளம பூரணர், பேராசிரியர், நச்சினார்கினியர் முதலான எல்லா உரைகாரரும அதனைத் தொல்காபபியச் சிறபபுபபாயிரச் செயயுளெனறே மொழிதலானும, அப் பாயிரச்செயயுள

1. 'Systems of Sanscrit Grammar' by Mr. Krishna Belvalkar, M A., Ph D., p. 18. Dr. Goldstucker, Prof. Bhandrakar and Dr. Vincent Smith long ago assigned 7th century B. C. to Panini.

இயற்றினர் தொல்காப்பியனர் என்று களவியலுரையும் தொல்காப்பியனரோடு ஒரு சாலை மாணக்கராய பனம் பாரனர் என்று ஏனையுரைகளுங் கூறுதல்கொண்டு அப பாயிரச்செய்யுள இயற்றினர் பெயர் ஐயுறவுக்கு இடனு யிருபபினும எல்லா உரைகாரரும அதனைத் தொல்காபபி யத்தில் உளளதெனக கிளத்தலின ஆண்டு அதனகண் ஐயுறுதற்கு இடன் இன்மையானும, அது பிற்காலத் தெழுதி நுழைக்கப்பட்டதென மெல்லக் கிளந்தார் உரை பொய்யுரையேயாமென விடுக்க.

இனி, ஆசிரியர் தொல்காபபியனர் காலத்தைக் கி. மு. இரண்டாம நூற்றாண்டிற் படுபபித்த பார்பபன ருரையாலுந் தொல்காபபியம இரண்டாயிர ஆண்டுகளுக்கு மேறபட்ட பழமையுடைத் தென்பது போதரலால், அவ்வளவு பழமைகூட அதறகுச் சொல்லுதறகு மனம பொருத மற்றொரு பார்பபனர், தொல்காப்பியனர் அறிந்த 'ஐந்திரம' என்பது 'ஜைநேந்திரமே' என நாட்டுதறகுப புகுந்து, சிலபபதிகாரத்தில் அதறகுச் சான்றுகள தேடிக் காட்டுவாராய்ப,

> "புண்ணிய சரவணம் பொருந்துவி ராயின்
> விண்ணவர் கோமான் விழுநூல் எய்துவிர்."

எனவும,

> "கப்பத் திந்திரன் காட்டிய நூலின்
> மெய்ப்பாட் டியற்கை ஒளங்கக் காணுய்."

எனவும போந்த 'சிலபபதிகார' அடிகளிற குறிக்கபபட்ட இந்திரன் நூல் 'ஜைநேந்திரமே' எனப புகனரூர்.

மேற்காட்டிய அடிகள சிலபபதிகாரத்தின் 'காடு காண்காதை'யில் இருகினறன. மதுரைக்குச் செல்லும வழிகேட்ட கோவலனுக்கு, அவனை எதிரபபட்ட ஒரு மறையோன் அவ்வழியின் அடையாளங்களைச் சொல்லிக் கொண்டு போமபொழுது, அழகர்மலையின் பக்கத்தே மூன்று பொய்கைகள உள, அவற்றுட் "'புண்ணிய

சரவணம' என்னும பொய்கையில் நீராடுவிராயின் வான வர்க்கு அரசனை இந்திரன இயற்றிய சிறந்த நூலினுட் பொருளை உணரபபெறுவீர்'' என்றுகூறக், கோவல னுடன இருந்த கௌந்தியடிகள அச் சொற்கேட்டு ''ஆயுட் கற்பத்தினையுடைய அவ்விந்திரன் இயற்றிய நூலின் மெய்பபொருளை அருகன அருளிச்செயத பாட்டியலில் விளஙக அறிவாயாக'' என அறிவுறுத்தின ரெனபதே மேலியடிகளின பொருளாகும; விண்ணவர் கோமானகிய இந்திரன் இயற்றிய நூலெனபது 'ஐந்திரவியாகரணமே' யென இவ வடிகளுக்கு உரையெழுதிய அருமப தவுரைகார ரும அடியார்கக நல்லாரும மொழிந்தனர; இவவுரைகளி லனறிச், சிலபபதிகார நூலில் எஙகும 'ஐந்திரம' எனனும பெயர் காணபபடவில்லை. உரைகாரர் கூறியவாறே யெடுப் பினும, 'ஐந்திரம' இந்திரன் இயற்றிய நூலென்றே மேலை யடிகளிற் பெறப்படுகினறதல்லாமற், 'பத்ரபாகு' எனனுஞ் சமண முனிவன இயறறிய 'ஜைநேந்திரம' எனபது அவற றினகட் சிறிதும பெறப்படவிலலை; சிறிது தமிழறிவுடை யார்க்கும மேலையடிகளின பொருள இதுவேயாதல தெற் றென விளஙகாநிறகும. 'கபபம' எனனுஞ் சொல் நீண்ட வாழநாள எல்லையினைக குறிக்குங 'கல்பம' எனனும வட சொல்லின திரிபாகுமென்றே உரைகார ரிருவருங கூறினர்; அதன உணமைபபொருள அவவாறிருகக, தஙகருத்து நிரமபுதற பொருட்டு அச் சொல்லுக்குக் 'கல்பசூதிரம' எனபபொருள செய்து, 'பத்ரபாகு எனனும முனிவன் செயத கல்பசூத்திரத்திலே இந்திரன ஆக்கிய ஐந்திரவியா கரணத்தின உணமை காணுமோ' எனை அப பாரபபனர் அவ வடிகளுக்கு உரை யுரைத்துககொண்டார். 'ஜைநேந் திரம' எனனும நூல் பூஜயபாதர் எனனுந் தேவநந்தியாற் கி. பி. ஐந்தாம நூறறாணடில் இயறறபபட்டதேயல்லாமற் கி. மு. நானகாம நூறறாண்டிலிருந்த பத்ரபாகுவினலா வது, கி. மு. ஆறாம நூறறாண்டிலிருந்த மகாவீரராலாவது இயறறபபட்ட தனறு. 'தனஞசயகோசம' எனனும் 'ஜைநஹரிவமஸ' நூலும, போப தேவரென்னும ஹேம சந்திரரும 'பூஜயபாதரென்னுந் தேவநந்தியே ஜைநேந்

திரம இயற்றினராவர்' எனக் கூறுமாறறுல் இவ்வுணமை நனகு விளங்கும; பூஜ்யபாதரே 'ஜைநேந்திர த' தின ஆசிரியராவரென்ப 'பேல்வால்கரும்' முடிததுக கூறினர்.[1] இனி, 'ஜைநேந்திரம்' இயறறபபட்ட காலங கி. பி. ஐந்தாம் நூற்றாண்டின பிறபகுதியாமெனபதும அவரால் நனகு காட்டபபட்டது[2] கி. பி இரண்டாம நூறறாண்டின பிற பகுதியில் இலங்கையை ஆண்ட 'முதறகயவாகு' எனபான, சிலபபதிகார ஆசிரியர் இளங்கோவடிகளின காலததில் இருந்தவன் எனபது சிலபபதிகார நூலினுளளேயுங[3] குறிக்கபபட்டிருத்தலால், ஜைநேந்திரம இயறறபபடுதறகு உந்0-ஆணடுகளுகது முனனரேயுளள சிலபபதிகாரதறற, பிறபடட அச்சைநேந்திர நூல குறிபபிடபபட்டதெனறல் யாங்ஙனம பொருந்தும? 'மொட்டைத தலேகும முழங் காளுக்கும முடிபபோடுதலோடு' ஒபப, இயைபு சிறிது மில்லாதவைகளே இயைதது வைபபதில் இப பாபபன ரனறி மறறு ஏவா வல்லார! அது நிற்க.

மேறகாட்டிய சிலபபதிகார அடிகளிற குறிகபபட்டது 'ஜைநேந்திரம' எனனும வடமொழியிலகணம ஆதல் செல்லாதெனறது ஓகும; 'பழைய பிராதிசாக்கி யங'களேயும 'ஐந்திர த'தையும பினபறறிச செயத 'காதந் தரம' எனனும வியாகரணநூல், தகுகணதறற கி. பி. முதல் நூறறாண்டில் அரசுபுரிந்த 'சாதவாகனர' காலத்த தாகலின, அதுவே அச் சிலபபதிகார அடிகளிற் சுட்டப பட்டதாகுமெனறு கொளளாமோவெனிற; கொளளா மனறே, எனனே? அங்கே சுட்டபபடடது விணணவர் கோமான இந்திரன இயறறிய நூலேயல்லாமற் பிறிதனறு; வெளிபபடையாகச் சுட்டப்பட்டதொரு நூலை விடுத்துச் சுட்டபபடாத தெனனறனே ஆணடுகொணாந்து பிணைத் தல் பெரிதுங குறறமாகலி லெனக.

---

1. Systems of Sanscrit Grammar, p. 63.
2. Ibid. p. 64.
3. வாகதருகாதை, கசு0.

அறருயினும, இந்திரன ஆக்கிய நூறபொருளை அருக தேவன அருளிய ஆகம நூல்களிற் பரகக் காணலாம என்று கௌந்தியடிகள கூறும பிரானிரண்டடிகளைக் கொண்டு, ஐந்திர நூற பொருளை அகத்தடகிய சமண நூல்கள சிலபபதிகாரத்திறகு முனனரே உளவாதல் பெறபபடுமாலோவெனிற, கூறுதும: மேலே குறித்த சிலபபதிகார அடிகளில் இந்திரன ஆகிய நூல் என்று பொதுவகையாற குறிகபபடடிருபபதறகு 'ஐந்திரவியாகரணம' எனச சிறபபுவகையாற பொருள செயவது யாஙஙனம பொருந்தும? இளஙகோவடிகள வேறியாணடேனும இந்திரன ஆகியது ஐந்திரமே எனக கூறிலரா? இல்லையே அவவாறிருகக, அவவடிகளிற சுடடியது ஐந்திரவியாகரணமே என்ற உரைகாரருரை பொருதத முடையதாகக் காணபபடவில்லை மறறுக, கௌந்தியடிகள மொழிந்த விடையை உறறுநோககுங்காற, சமணசமயக் கோட்பாடுகள பொதிந்த ஒருநூல இநதிரன எனப பெயரிய ஓர அரசனால இயறறபபடடு முனனரே யுளதாயிற் றெனபதே அதனற போதரும. அருகதேவன அருளிச் செயத ஆகமம எனபது வீட்டு நூறபொருளை யறிவுறுதது வதாயிருததல் வேணடுமெயனறி, இலகக்கணமாகிய கருவி நூறபொருளை யறிவுறுதது வதாய இருத்தலாகாது; ஆகவே, அவவாகமப பொருளோடு ஒபபசசெயத இந்திரன நூலும வீட்டு நூறபொருளையே யுணர்த்துவதாயிருததல் வேணடுமென்று தெளிந்து கொளக. ஆகவே, மேலே காடடிய சிலபபதிகார அடிகளிற, சமண்முனிவர் செயத வடமொழியிலகக்கண நூலாகிய ஜைநேநதிரஞ சுட்டபபட்ட தெனக் கரைந்த பார்ப்பனருரையும, அவரோடொபபக் கூறும ஏனையோருரைகளும பொருளறபட்டுப் போலியா யொழிந்தமை காணக. அவை அவவாறெழியவே, ஐந்திரம நிறைந்த ஆசிரியன தொல்காபபியனைச் சமணமதத்திலும, அம மதத்தவர் இருந்த கி. பி. ஆரும நூறறாண்டிலும் படுபபிகக முயன்றா முயற்சியும புரைபட்டொழிந்தமை காண்க.

இனி, இலங்கைத்தீவின் வரலாற்றிற் சொல்லப்பட்ட மூன்று கடல்கோளகளிற் கி. மு. மூன்றும் நூற்றாண்டில் நிகழ்ந்த மூனறாம கடல்கோளுக்குச் சிறிது முனனரேதான் 'தொல்காப்பியம்' இயறறபபட்டதாகல் வேண்டுமெனற மறறொரு பார்பபனருரையின் பெற்றியினை ஆராய்வாம. மூன்றில முதற் கடல்கோள் கி மு. உஙுஅ-இல் நிகழ்ந்த தென 'இலஙகை வரலாறு' கூறுகிறப, அதற்குமுன் 'தொல்காபபியம்' இயற்றப்பட்டதாகுமென உரையாமல், மூனறாம கடலகோளுக்கு முனனர்ததான அஃதியறறப பட்டதெனக் கூறுதறகு அவர் காட்டிய ஏது வெனனின. ஒன்றுமேயில்லை. மேலே யாம பலவாறறாலும் விளக்கிக் காட்டிய பகுதிகளால், தொல்காபபியம 'குமரிநாடு' கடல் கொளளப்படுமுன் இயறறபபட்ட தெனறெனபது பெறப படும. குமரிநாடு இருந்த முதலூழிக்கட் செயயபபட்ட செங்கோன்றரைச்செலவு எனனும நூலின மிகப பழைய வுரையில் "பஃறுளியாறறுத தலைபபாய்ச்சல் ஏழ்தெங்க நாட்டு முத்தூா அகததியன" எனவும, "முதலூழி, முன கடல் கொளளபபட்ட பெருமபரபபுத தமிழ நிலம" எனவும போந்த உரைக் குறிபபுகளாற, பஃறுளியாறு பாய்ந்த குமரிநாடு மிகப பெரியதொரு நிலனயிருந்ததென்பது புலனும. இவவுண்மை,

"பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள."

என்று சிலபபதிகாரத்துந் தெளிததுக் கூறப்படுதல் காண்க இவ வடிகளுககு உரையெழுதிய 'அடியார்க்கு நல்லாரும,'

"அக்காலத்து அவர் நாடடுத் தெனபாலி முகத் திறகு வடவெலலையாகிய பஃறுளி யெனனும் ஆற றிறகும, குமரியெனனும ஆறறுக்கும இடையே எழு நூறறுகாவதவாறும இவறறின நீாமலி வாமென மலிந்த ஏழதெங்கநாடும ஏழமதுரைநாடும ஏழமுன பாலைநாடும ஏழபினபாலைநாடும ஏழகுன்றநாடும ஏழகுணகாரைநாடும ஏழகுறும்பனைநாடு மென

னும் இந்த நாற்பத்தொன்பது நாடும் குமரி கொல்லம் முதலிய பனமலீ நாடும ம காடும பதியும் தடநீர்க் குமரி வடபெருங கோட்டின்காறும் கடல்கொண் டொழிதலாற் குமரியாகிய பௌவமென்றார் ”

என்று கடல்கொண் டொழிந்த பெருநிலப பரப்பாகிய குமரிநாட்டின் வகைகளெல்லாம விரித்துரைத்தார். இஞ் ஞானறு கிடைக்கபபெறுத அரிய பெரிய தமிழ நூல்கள் பறாலவற்றை நனகாராயந்துணர்ந்த இவ் வுரைகாரர் உரைத்த குமரிநாட்டின பெரும பரப்பு, மேலே காட்டிய செங்கோன்றரைச்செலவின் உரையாசிரியர் கூற்றோடு பெரிதொத்து நிற்றல் காண்க. இஙஙனமே 'களவியல்' முகவுரை யுரைகாரரும, இளமபூரணரும, நச்சினார்கினிய ரும், 'கலித்தொகை'யில் கo-ஆம் கலியின் ஆசிரியரும பெரும்பாலும ஒதுதுரைபபர். இவருட் சிலர் கூறுவன சுருககமாயும, வேறு சிலர் கூறுவன விரிவாயும் இருககும்; அடியார்க்கு நல்லார் பண்டை நூல்கள் பலவறறை நன் காயந்த பெரியாராகலின், அவர் இவ் வரலாற்றைப் பழையநூற் சானறினறி விரித்துரையார்; இவருரையிற் கண்ட 'ஏழதெஙகநாடு' செங்கோனறரைச் செலவு என னும முதலூழி நூலின உரையிற் காணப்படுதலோடு, 'எழுநூற்றுகாவதவாறு' என்பதனுறு பெறபபட்ட பெரு நிலபபரபபும அப பழையவுரையிற குறிக்கபபட்டமை காண்க. 'பெருந்தமிழ நிலமாகிய குமரிநாடு கடல்வாயப புக்க செயதி' தொனறுதொட்டு நூலாசிரியர் உரையாசிரி யர்களால் வரலாற றுமுறை வழாமல் உரைக்கபபட்டு வரா நிறகவும, அடியார்க்குநல்லார் காட்டியவாறு அததுணைப பெருநிலங் கடல்நீரால் விழுஙகபபட்டது மக்கள தோனறு தற்கு எத்தனையோ நூறறுயிர ஆண்டுகளுக்குமுன நிகழ்ந்த தாதல் வேண்டுமெயனறி ஐயாயிர ஆண்டுகட்குமுன நிகழந்தது ஆகாதெனவும், அவருரைததவுரை அவரே கட்டிய பொயயுரையா மெனவும, கடல் கொண்ட அத் தமிழநிலம் ஒரு சிற்றளவினதேயா மெனவும, வேறொரு பார்ப்பனப புலவர் செந்தமிழ் கச-ஆந் தொகுதியின் கக, கஉ-ஆம பகுதிகளில் எழுதினர்.

இபபோதுளள குமரி முனைகருத் தெறகேயுலவும 'இந்திய மாக்கடல்' பல்லாயிர ஆண்டுகளுகருமுன பெரு நிலனு யிருந்ததெனபது இருஞானறை 'நிலநூல்' வல்லார் எல்லார்கரும ஒபப முடிந்த தெனறேறயாம. இப பார்ப பனா தாமும அதனை உடமபடுகினறார. அப பெருநிலப பரபபைக கடல்நீர் விழுங்கியதும இப பாரபபனர்கரும ஏனை இயற்கை நூல் வல்லாரகதும உடமபாடாவதேயாம.[1] பணடைககால மககட பருதியாரின வரலாறுகளை ஆராயந்து நூலெழுதினரில மிகச சிறந்தாரான ஹாலஸ்டாக் எனனும ஆசிரியர், நிகிரோவா எனனும மககளின பண்டை வரலாறறினை நனகாயந்து பார்த்துப பினவரு மாறு முடிபு கூறுகினறார :

" 'நிகிரோவா' ஆபபிரிககா தேயத்திற் 'சகாரா' எனனும் பாலைநிலத்திறகுத தெறகேயுளள நாடெஙகும உறைகினறனர்; அப பாலைவெளியை அவர்களாவது மற்றை விலஙகினஙகளாவது கடந்துசெனறதேயில்லை, இம மக்கள் அரேபியா, பாரசிகம, இந்துஸ்தானம, சீயம, சீனம முதலிய நாடுகளிலும யாவா, சுமாதிரா, போனியோ முதலிய தீவுகளிலுங காணபபடாவிடினும, மடகாஸகர் அந்தமான தீவுகள, மலாய நாடு, பிலிபபைன, புதுக்கினியா, புதுஹீபிரிட்ஸ, புதுக்காலிடோனியா, பிறித தீவுகளிலும், தாஸ்மானியாவிலுங காணபபடுகின்றனர். இவர்கள கபபலேறிச் செல்லும வழகக முடைய ரல்லராகையால், இவர்கள மேறகூறிய நாடுகளிலும தீவுகளிலும பரந்து காணபபடுதறகு, ஆபபிரிக்காவின் கீழ்கரையிலிருந்து இந்தியாவாக் கடலினூடே நெடுகத்தொடர்ந்து நீண்டு கிடந்த தீவுகளாவது அல்லது மிகபபெரிய நிலமாவது இருந்ததாகல் வேணடும. அபபோது இந்தியமாக்கடல் இபபோதுளள சகாரா பாலைநிலத்தில் நின்றுலவின தாயிருத்தல் வேண்டும."[2] எனறு அவ் வியற்கை நூற் பேரறிஞர் பெரிதாராயந்துரைக்கும மெயயுரையால், இப்

1. See 'The Tamilian Antiquary,' Vol. II, No. 1.
2. 'Pre-Historic Times' by Sir John Lubbock, p. 363.

போதுளள இந்தியமாக்கடலின் ஒரு பெருமபகுதி பல்லாயிர ஆண்டுகளுகுமுன ஒரு பெருநிலமாயிருந்த தெனப தூஉம, அந் நிலததினகண உறைந்த மககளின கால வழியில் வந்தோரே இப்போது ஆபபிரிக்காவிலிருந்து இந்தியமாக்கடலின நெடுக ஆஙகாஙகுளள தீவுகளிற சிதர்ந்து காணபபடுமநிகிரோவ ராவரெனபதூஉம் இனிது பெறபபடுகின்றன வல்லவோ? இனி, இப பெருநிலப பரபபு முழுதும ஒரே காலத்திற கடல்நீரால விழுஙகப பட்டதெனக கோடல பெரியதொரு பிழைபாடாம சகாரா எனனும பாலநிலததினகணநினற கடலே, நிலவருண்டையின் மையததே காலஙகடோறும் தோனறும அதிர்சசிகளின அளவுகுகு தகபடி அவவிடததை விடடுப பெயர்ந்து குமரிநாடடை மெல்ல மெல்ல விழுஙகியதாகும. சகாரா நிலததின சுற்றளவு காறகோடி மைல் ஆகும; இந்தியமாகக்டலின சுறறளவோ இரணடரைகோடி மைல் ஆகும. ஆகவே, சகாராவில் நினற கடல் நீரால விழுஙகபபட்ட குமரிநாட்டின சுறறளவு சிறிதேதறகுறைய இருபதந்தைந்து இலட்சம மைல் உளளதாகும. சகாராவின நிகளம மூவாயிரம மைல் என று கணகிடபபட்டிருத்தலாற, குமரிநாட்டின நிகளமும மூவாயிரம மைலாகுமென றும, அதன் அகலம எண்ணூறு மைலுகுகுக் குறையாதெனறுங கணக்குச செயதல இழுக்காது. கடல்கொணட நாறபதெதானபது நாடுகளும எ00-காவதம பரபபுளளன எனறு அடியார்குநலலார் கூறியதை ஆராயப புகுந்த அப பார்ப்பனர், குமரிமுனைக்குந் தெனறுருவத்திறகும இடையேயுளள அகலம ஏழாயிரமைலிற குறைந்துளதாகலின், எழுநூறு காவதம அல்லது ஏழாயிர மைல் கடல்கொண்டதெனற அடியார்க்கு நல்லாருரை பொருந்தாதெனறார். அகலத்தில ஏழாயிரமைல் எனபது அடியாருகு நல்லாருரையிற பெறப்படாமையின், அவ்வாறு பொருள் செய்த அப பார்ப்பனருரையே பொருந்தா வழுவுரையாமெனக. அடியார்க்கு நல்லார் உரைதத அப பரப்பின் அளவு ஏன் நிகளத்தையே சுட்டுவதா யிருத்தலாகாது? என்று வினவுவார்க்கு அவர் விடைகூறு

மாறு யாஙஙனம? குமரி எனனும யாறறுக்கும பஃறுளி யெனனும் யாறறுக்கும இடையேயுளள நிலம எ00-காவதமுளதெனற வளவாலே, அஃதகலதநின் அள வையே சுட்டுவதெனருல் பொருந்துமோ? அவவிரண்டு யாறுகளைச் சுட்டிக் கூறினமையாலே அவறறினிடைப் பட்ட நிலத்தின அகலம் சிறிதென்பது தானே பெறபபடா நிறக, நிகளததில் அஙஙனம இருபுறத்து எல்லைகளுஞ சுட்டப படாமையின் அந் நிகளததின பெரும பரபபு எல்லாரானும அறியபபடாமைபற்றி அதுவே அஙஙனம் எ00-காவதமெனறு அவராற குறிக்கபபட்டதெனபது தானே போதரும.

இனி, உரைகாரர் அடியார்க்கு நல்லார் காலத்திலும் அவர்கரு முறசெனற காலத்தினுங 'காவதம' எனனுஞ் சொல் எத்தனை நாழிகை வழிகருப் பெயராய வழங்கிற் றெனபதனைத் தெளிய அறிதறகுத் தக்க சானறுகள் பழைய தமிழநூல்களில் ஆராயநத மட்டில் அகபபட்டில. ஆயினும, இற்றைக்கு உஉ00-ஆண்டுகட்குமுன இயறறப் பட்டதாகிய கொடிலியரது அர்த்த சாஸ்திரத்தில் கசு000-முழங கொண்டதே ஒரு யோஜனையெனறு சொல்லபபட் டிருததலால், அதுவே ஒரு சினனக் காவதமாம எனறுங், கி. பி. ஒனபதாம நூறறாண்டில் இயறறபபட்ட தாகிய 'கணிதசார சஙகிரகத்'தில் கஉ000-முழங்கொண்டதே ஒரு யோஜனை யென்று கூறபபட்டிருத்தலால் அதுவே ஒரு பெரிய காவதமாம எனறும ஓர் அறிஞர் எழுதினர்.[1] மேற்காட்டிய வடநூல்கள இரணடிலும 'யோஜனை'யி னளவு இத்துணையென வரையறுத்துரைக்கபபட்டிருக் கினறதே யல்லாமற, 'காவதம' எனனுஞ சொல்லாதல் அதனளவாதல் அவறறினகட் சிறிதுங குறிக்கபபட்டில. இனி, மறறோர் அறிஞர் பழைய தமிழப்பாட்டுகள சில வற்றின சானறு கொணடு "அணு-அ க்கொணடது க-தேர்த்துகள, தேர்த்துகள-அ க்கொணடது க-பஞசிழை, பஞசிழை-அ க்கொண்டது க-மயிர், மயிர்-அ க்கொண்டது

1. செந்தமிழ், கச, பகுதி, கக.

க-மணல், மணல்-அ க்கொண்டது க-கடுகு, கடுகு-அக் கொணடது க-நெல், நெல்-அ ககொணடது க-விரல், விரல்-கஉ கொணடது க-ாண, சாண-உ கொணடது க-முழம, முழம-ா கொணடது க-கோல், கோல்-நி00 கொண் டது க-கூபபீடு, கூபபீடு-ா கொண்டது க-காதம" என நன்கு விளக்கிகாட்டி யிருத்தலோடு, இந் நீட்டலளவைக் கணக்கு முற்றும் தனித்தமிழநாட்டு வழகேயா மெனவும நாட்டியிருக்கினறார்.[1] இவ அறிஞர் தாம சான்றுகக் காட்டிய பாட்டுகள இனைய நூலினகண் உளளனவென பது காட்டிறநிலராயினும, இவர் காட்டிய இந் நீட்டலள வைக் கணககுத தனித்தமிழ நாட்டுவழக்கேயா மெனப தற்கு, இதனகணுளள சொறகள அத்துணையும் தனித் தமிழச் சொற்களாயே யிருத்தலுங, 'காதம' எனனுஞ் சொற பழைய வடநூல்களுட் காணபபடாமையுமே சானறு மெனபது. எனவே, ஒரு காவதம எனபது அ000-முழங கொண்ட ஒருநெடுவழியே யாதல் தெளியபபடும. அஃது இஞ்ஞானறை ஆஙகில அளவைபபடி இரண்டே கால் மைலும எண்பது முழங்களும ஆகினறது. ஆக, எழு நூறுகாவத நிகளமெனபது சிறிதேறக குறைய ஆயிரத் தறுநூறு மைலகளே யாகினறது. ஆபபிரிகக தேயத் தின கீழகரையிலிருந்து கிழக்கே சுமத்திராதீவகத்தின மேல்கரைவரையிற கடல்கொண்ட நிலத்தின நிகளஞ சிறிதேறக்குறைய நாலாயிர மைலாகும. ஆபபிரிக்காவின வடககிலுளள சகாரா பாலைநிலத்தின நிகளம மூவாயிர மைல் எனபது முனனரே காட்டினோம். அதன அகலம் ஆயிரம மைல் உளது. இப் பெருமபரபபில் நினற கடல்நீர் வற்றி, ஆயிரத்தறுநூறு மைல் அஃதாவது எழுநூறு காவத நிகளமுளள குமரிநாட்டை விழுஙகிற்றெனபதில், உண்மை நிகழச்சிக்கு மாறுரை ஏதுமேயில்லை. ஆதலால், இவ் வுண்மை நிகழச்சியைத் தமது காலத்து வழங்கிய நூற்சானறுகள கொண்டு நன்குவிரித்து விளக்கிய அடி யார்க்கு நல்லாருரையைப புனைந்து கட்டிய பொயயுரை

1. செந்தமிழ், கஙி, பகுதி, கூ.

யெனற பார்ப்பனருரையே புரைபட்டுப பொயபடுவதா மெனக.

அற்றேறல், ஆங்கில ஆசிரியர் பலர், தெற்கின்கண்ண தான பெருநிலபபரபபு மகக்ள தோனறுதறகுப்பனனூ ருயிர ஆணடுகளுகு முனனரே கடல்நீரால் விழுங்கப பட்டதெனக கூறுவதெனனையெனின; குமரி நாட்டினும நானமடங்கு பெரிதாய, அக் குமரிநாட்டின தெறகிலிருந்த பெருநிலம மட்டுமே மகக்ள தோனறுதற்குப பனனூருயிர ஆணடுகட்கு முனனர்க் கடலுள அமிழந்துபோயிற றென பதே அவரதங கருத்தாவதாம. மகக்ள தோனறுதற்கு முன அழிந்து பட்ட அங்கிலப பரபபைப பறறி ராண்டு ஆராயசசியில்லை மக்கள தோனறியபிற பல்லாயிர ஆண்டு கள கழித்துக கடல்வாயப புக்க குமரிநாட்டைப பறறியதே யாம ராண்டு எடுத்துக கொண்ட ஆராயசசியின பெறறி யாம எனக. அறறனறு, மக்கள தோனறுதறகு முன தெறகினகண் இருந்த பெருநிலத்தைக் கவாந்த கடல் கோள ஒனறுமே பெரியதொரு கடலகோளாம; மறறு, அவர் தோனறியபின நிகழந்தனவெல்லாம அததுணைப் பெரிய கடல்கோளகள ஆகா; அவையெல்லாஞ சிறுசிறு நிலபபகுதிகளை அடித்துச சென்ற சிறுசிறு கடற்பெருக்கு களேயா மெனின; மக்கட் டோற்றத்திற்குபபிற பெருங கடல்கோளகள ஏதும நிகழந்தில தெனறு அவர் அங ஙனங் துணிந்து சொல்லுதறகுச சானறெனனை? உலக இயறகையிற பண்டுதொட்டு நிகழந்து வராநினற சாலப் பெரிய மாறுதல்களெல்லாம இப பார்ப்பனர்தங கருத்துப் படிதான நிகழந்து வருகினறனவா போலும! லப்பக் எனனும ஆங்கில ஆசிரியர் மகக்ட்டோற்றத்திறகுப பின இந்திய மாக்கடலால் விழுங்கபபட்ட நிலபபரபபு மிகப பெரிதாதல் வேணடுமெனற நனகாய்ந்து முடிவுகட்டிய உரைக்கூற்றை மேலே எடுததுக்காட்டின மாகலானும, அவர் கூறிய அம் முடிபு குமரிநாடிருந்த காலத்தில் இயற்றபபட்ட செங் கோன்றரைச் செலவு எனனும நூறகூறறெடுங, குமரிநாடு கடல் கொண்டபின் இயற்றபபட்ட தமிழநூற கூற்றுக்க ளொடும முழுதொத்து நிற்கக் காண்டலானும் அஞஞான்

றிருந்த தமிழகமாகிய அக் குமரிநாடு பெரியதொரு நிலப் பரபபேயா மென்பதூஉம, அதனை விழுங்கிய கடல்கோளும் பெரியதொரு கடல்கோளேயா மெனபதூஉம உளளங்கை நெல்லிக்கனிபோல் தெளளிதின விளஙகற்பாலனவா மெனக. தமிழநூல் வடநூற சான்றுகளானும, இஞ ஞான்றை ஆஙகில மாப்பேராசிரியர் செயது போதரும் வியத்தகு ஆராயசசிகளானும ஐயுறவுக்குத திணைத்தனை இடமுமின்றி நாட்டபபட்டதாகிய இம மெயங்கிகழச்சியினை அடியோடு புரட்டி அப புரட்டால் தமிழின தொனமை யைக் குறைத்துவிடுதறகு ஆவலுற்று உழலும அப பார்ப பனரது செயல், மலையைக் கல்லியெறிதறகு மிக முயன்று அது கைகூடாமையின மாயையின ரேறறமாம அமமலை என்றுமில்லாத வெறும பொய்ப்பொருளேயாமெனக் கரைந்து மகிழும அவர்தம இனத்தாரது உரைபோற கரைந்துமகிழநர் செயலாய நகையாடிவிடுகதறபால்தாகும. மேலாராயநது காட்டியவாற்றல், மககட்டோறறத்திறகு முன தெறகினகணிருந்த பெருநில வெல்லகளைப பறபல காலங்களிற கவர்ந்து வந்த கடல்கோளகள பற்பல உளவாயினும அவையெல்லாம ணைடை யாராய்ச்சிககு வேண்டபபடாவெனவும, மக்கட்டோறறத்திறகுப பல்லா யிர ஆண்டுகள் கழித்துத் தோன்றிப் பணடைத் தமிழக மாகிய குமரிநாட்டின பெரும பரபபை வாய்ப்பெயது கொண்ட பெருங் கடல்கோள புறத்தேயுளள தமிழர்தம நாடு நகரஙகளை அழித்தொழிபபினும, அவர் தமதகத்தே ஆராய்ந்து எழுப்பிய மாபபேரறிவுநிலையாகிய தொல்காபபி யத்தை யழிக்கும வலியிலதாய், அதன ருன்மை மாட்சி யினை யஞசி, அது வீறி நிறகும இத் தென்றமிழ நாட்டின் கீழகரை மேற்கரைப பக்கஙகளைத் தன திரைக்கைகளாற் கவைஇத், தான முனசெயபிழையினைக் கூறி ஓவென ஓல மிட்டு, அதன் அடிகளிழ வீழந்து அரறறுநிறகினற தனவும ஓர்ந்து கொளக.

இனிச், 'செங்கோன் றரைச்செலவு' என்னும நூலுரை யினும, அடியார்க்குநல்லா ருரையினுங குமரிநாட்டி

லிருந்தனவாகக் குறிப்பிடப்பட்ட 'ஏழ தெங்கநாடு,' 'ஏழ்பனைநாடு' என்பவைகளில் அழிந்தனபோக இபபோது எஞசி நிற்பனவே: ஈழம், நக்கவாரம, மோரிசு, சுமத்திரா, யாவா முதலான தீவுகளாகும. இத் தீவுகளிலெல்லாந் தென்னையும பனையுமே மிகச் செழித்திருத்தலும் மேலை நிகழச்சிக்குப பினனும ஒரு பெருஞ சானறும. ஆகவே, கி. மு. உஉஅ-இல் நிகழந்த முதறகடல்கோளே குமரிநாட்டின் மாபபெரும பகுதியை வாய்பபெய்து கொணடதாகுமெனபதூஉம, அக கடலகோளுக்கு முனனர்ச்செயயபபட்டுத் தமிழ வழங்குஉ நிலமெஙகும உலாயதே 'தொல்காபபியம' ஆமெனபதூஉம இனிது தெளியக கிடந்தவாறு காணக. மறறுக், கி. மு. நுoச-இலும, கி. மு நுoசு-இலும நிகழந்த ஏனைக கடல்கோளகள இரண்டுங், 'திருச்சிர் அலைவாய'(வடமொழியிற 'கபாடபுரம')எனபபட்ட திருச்செந்தூர்க்குப பக்கததே எஞசி நினற சில நாடு நகரஙகளை இரணடு முறையாக அடித்துசசெனற சிறுசிறு கடல் கோளகளாகு மல்லாமற, குமரிநாட்டை முழுதுஙகவாந்த பெருங கடல்கோள ஆகாதென்பதுங கருததிற பதிககற் பாறறு.

இனித், தொல்காபபியத்துக் களவியல், சசஉ-ஆஞ சூத்திரமாகிய "மறைந்த வொழுகக ததது ஓரையும நாளும" எனபதனகட் காணபபடும 'ஓரை' என்னுஞ சொல்லைக் கிரேக்க மொழியெனகொணடு, அவ்வாறருல் தொல் காபபிய காலத்தைக் கி. மு. மூனறும நூறறாணடினபாற் படுபபிக்க வேண்டினர் கூறறைறச் சிறிது ஆராயவாம. 'ஓரை' எனனுஞ சொல் இனனமொழிக்கு உரியதெனறு ஆராயந்து உறுதிப படுத்தியபின, அதனை ஒரு சானறாகக் கொண்டு ஒரு முடிவுக்கு வருதலனறே உண்மையாராயச்சி செயவாரது கடமையாகும? அஙஙனமம ஆராயந்து பாராது 'ஓரை' எனும அச சொல்லைக் கண்ட அதது துணியாமனை, அதனைக் கிரேக்க மொழியெனத் துணிநதுரைத்தல் பெரிதும பிழைபடுவ துடைத்தாம. இஙஙனமே இஞ ஞான்று ஆராயாமல் வடமொழிகளெனவும பிறமொழிக

ளெனவுங் கொளளப்படும் நூறறுக் கணக்கான சொற்கள் ஆராய்ந்து பார்க்கப் பார்ககத் தனிச்செந்தமிழ மொழிக ளாதலே அறிவுடையோர் (Dr. Caldwell) காட்டா நிற்பர். யாமும மேலே சில காட்டிப போந்தாம. இனி, 'ஓரை' எனனுஞ சொல் தமிழமொழியிலுங கிரேகக மொழியிலும வடமொழியிலுங காணபபடுகினறது. மூனறு மொழிகளி லும் பொதுவாகக காணப்படும இச் சொல்லைக் கிரேக்க மொழிக்கே யுரியதென வரைந்து கட்டினவா, அவ்வாறு தாம அதனை வரைந்து கட்டுதறகுக காட்டிய சான றெனனை? ஏதுமே காணேம. தொல்காபபியத்திற்கு முற்பட்ட கிரேகக நூலிலாயினும வடநூலிலாயினும 'ஓரை' என்னும அசை சொல் வழஙகப்படடிருக்குமாயின, அதனை அப பிறமொழிகளுக்கு உரிய சொலலாகக கொள் ளுதல் ஒக்கும. தொல்காபபியஙக, கி மு. மூன்றும நூற் றுணடிலேதான இயறறபபட்டதாகும எனற இச சொல் வழகைகையே ஒரு சானறாகக்கொணடு நாட்டபபுகிறவர், அச் சொல் கிரேகக மொழியிலேனும வடமொழியிலேனுங கி. மு. மூனறும நூற்றுண்டிறகுமுன இயறறபபட்ட நூல் களில் வழஙகபபடடுளளதெனக் காட்டல வேணடுமனறே? அவவாறு செயதலே விடுத்து, அதனை வாளா கிரேக்க மொழியெனறல, அதனை ஆராயச்சியறிஞடையார் கைக கொளவரோ? யாம ஆராயந்த மடடிற கி. மு. மூனறும நூறறுண்டிலாதல, அதறகு முறபட்ட காலத்திலாதல் இயறறப்பட்ட கிரேக்க நூல ஆகிய நூல்களில் 'ஓரை' எனனுஞசொல் வழஙகுதலைக கணடிலம. கி. பி. ஆறும நூறறுணடிலிருந்த வராகமிகிரரால் மட்டுங கிரேக்கரின் வான நூலாராயச்சியைத் தழுவி 'ஹோரா சாஸதிரம' எனனும ஒரு நூல் வடமொழியில எழுதபபடடிருக் கினறது. அதுகொண்டு 'ஹோரா' என்னுஞசொற கி. பி. ஆறும நூற்றுண்டிற்குச் சிறிது முறபட்ட காலதகிற் கிரேக்க மொழியில் வழஙகபபட்டமை மட்டும அறியப் படும. [1]கி. மு. இரண்டாம நூற்றுணடிலிருந்த கிரேக்க

1. See 'A Short History of Astronomy' by A. Perry, M.A., pp. 40 and 62.

ஆசிரியரான 'ஹிப்பார்க்கஸ்' காலத்திலேதான் கிரேக்க ரின வானநூலாராய்ச்சி ஓர் ஒழுங்குபெறத் துவங்கி அவர்க்கு முந்நூருண்டுகளுக்குப்பின் கி. பி. இரண்டாம நூற்றாண்டின் இடையிலிருந்த 'தாலமி' எனனுங கிரேகக ஆசிரியராலேதாம அது முற்றுப பெறலாயிற்று. ஆகவே, கி. மு. இரண்டாம் நூற்றாண்டிறகுங் கி. பி. இரண்டாம நூறறாண்டிற்கும் இடைப்பட்ட காலத்திலேதான் 'ஹோரா' எனனுஞசொல் கிரேக்கமொழியில் வழஙகபபட்டதாகல் வேணடுமெனபது துணியபபடும். படவே, கி. மு இரண்டாம நூற்றாண்டிற்குமுன கிரேக்க மொழியில் வழஙகாத 'ஓரை' எனனுஞ் சொல்லை அக் கிரேககமொழிக்கே உரியதென்றலுங, கி. மு. இரணடாம நூற்றாண்டுகரு முற்பட்டதாகிய 'தொல்காபபியத்தை' அந் நூற்றாண்டுக்குப் பிறபட்டதாகிய அச் சொற்கொண்டு கி. மு. மூனறாம நூறறாண்டில் இயறறபபட்டதாகு மென றலும "என முபபாட்டன திருமணக்காலத்தில் யான அத் திருமணப பந்தறகாலை பிடித்து கினறேன" எனக் கூறுமை ஒருபேரனது சானறுமொழியோ டொப்பவைத்து நகையாடற பாலனவா மெனக.

அறறேறல், 'ஓரை' எனனுஞசொல் எந்தமொழிக்கு உரியதெனின; மிகபபழைய தமிழநூலாகிய தொல் காபபியத்தில் அச்சொற காணபபடுமாறுபோல் அங ஙனமே பழைய கிரேக்கநூல் ஆரிய நூல்களில் அது காணபபடாமையானுங், தொல்காபபியத்திற்கு மூவாயிரத் தைந்நூருண்டு பிற்பட்டுக் கி. பி. இரண்டாம் நூற்றாண்டிலிருந் துண்டாலா கிரேக்க ஆரிய வான்நூல்களின மட்டுமை அது காணபபடுதலானுமை அது பண்டைச் செந்தமிழ மொழிக்கே யுரிய தூயதமிழ்ச் சொல்லாதல் உணர்ந்து கொளக. அங்ஙனமாயின அதற்குத் தமிழச் சொற் பொருள கூறுகவெனிற கூறுதும். 'ஓரை' என்னும அச் சொற்கு முதனிலை 'ஓர்' என்பதாகுமை. "'ஓரபு' என்பது ஒரு பொருளை ஆராய்ந்து உணர்தல்"[1] என்று ஆசிரியர்

1. இறையனாரகப்பொருள், உ-ஆஞ் சூத்திரஉரை.

நக்கீரனுர் உரை கூறினராகலின, அவவாறு ஆராயந்து உணரபபட்ட வான்மீன வட்டமே (இராசிச் சக்கரமே) ஓரையெனா வழஙகப்படலாயிறறு. பண்டைத் தமிழமக்கள் வழஙகிய 'ஓரை' என்னும இத தமிழச்சொல்லே கிரேக்க மொழியிற செனறு 'ஹோரா' எனா அம மொழியினியல் புகசு ஏறபத்திரிந்து, பின வடநாட்டில் வந்து குடியேறிய கிரேககா வாயிலாக வடமொழியிற புகுவதாயிறறு.

அறறேறற, பண்டைத் தமிழமக்கள தமகசு நெடுந் தொலைவிலிருந்த மேஞட்டவராகிய கிரேகசருடன கடல தாண்டிச்சென்று கலந்தாலனறே, அச்சொல அவர் மொழியிற கலததறகு இடனுணடாம? எனின, அந் நிகழச்சியும ஒரு சிறிது காட்டுதும: மேல்கடற பாலதான சாலடி நாட்டின (Chaldea) தலைநகராகிய 'ஊர்' எனனும இடத்தே நிலத்திற புதைந்துகிடந்த பழைய வேந்தரின் அரணமனைகளைக் கிளறிய பார்க்கையிற, கி. மு. ஈ000-த் தில் அஃதாவது இற்றைக்குச் சிறிது குறைய ஐயாயிர ஆணடுகளினமுன அஙகு அரசுபுரிந்த 'ஊரேயா' எனனும வேந்தனுற கடடபபட்ட அரண்மனையின்கண் தமிழநாட்டுத் தேக்குமரத்துணடொன்று கண்டெடுக்கப்பட்டது; அது கொண்டு, பண்டைத் தமிழர்கள ஐயாயிர ஆண்டுகளுக்கு முனனரேயே கடல் தாண்டிச்சென்று மேல்நாட்டவரொடு வாணிகம நடாத்தினரென ஆங்கில வரலாற்று நூலாசிரி யர் முடிவுகட்டிச் சொல்கின்றனர்.[1] அதுவேயுமனறி, விவிலிய நூலிற் சொல்லப்பட்ட 'சாலமன' என்னும வேந்தன் மேல் நாட்டில் அரசுபுரிந்த கி. மு. க000-த்தில், அஃதாவது இற்றைக்கு மூவாயிர ஆண்டுகளுக்கு முன னமே மயிற்றோகை, யானைமருப்பு, குரஙகு, அகிறகட்டை முதலான பண்டஙகளை, அவ வரசனுடைய மரக்கலஙகள் 'உவரி'[2] என்னும இத் தெனனஞட்டுத் துறைமுகத்தில் வந்து ஏற்றிக்கொண்டுபோன வரலாறுங், கருவாப்

1. Ragozin's Vedic India, p. 305.

2. இப்போது இவவூர் தூத்துக்குடிக்குத் தெற்கே செம்பட வர் குப்பமாய் இருக்கின்றது; Tamilian Antiquary, No. I, p. 23.

பட்டை, கருப்பூரம் முதலான பண்டங்கள் தமிழநாட்டிலிருந்து கிரேக்கநாட்டிற்கு இற்றைக்கு இரண்டாயிர ஆண்டுகளின முன்னரே ஏற்றிச்செல்லபபட்டமையின் அப பண்டங்களின் தமிழ்ப்பெயர்கள கிரேக்க நூல்களிற் கலந்தவரலாறுங் 'கால்ட்வெல்' ஆசிரியரால் நெடுநாட்கு முனனமே நனகெடுத்துக் காட்டபபட்டன.[1] இஙஙனமாக ஐயாயிர ஆண்டுகளுக்கு முற்பெட்ட காலத்திருந்தே தமிழர்களும் மேனாட்டவர்களும ஒருஙகு கலந்து வந்தமை ஐயமின்றித் தெளியக்கிடத்தலின், அம மேனாட்டு மொழிகளுட் கலந்த பலப்பல தமிழ்ச சொற்களில் 'ஓரை' யெனபதும ஒன்றுதல் காண்க.

அற்றேலஃதாக, இற்றைக்கு இரண்டாயிர ஆண்டுகளாக மேனாட்டவர்களே வானநூலாராயச்சியிற் சிறந்தவராகக காணபபடுகினறனரனறி, இப பரதநாட்டினகண் உளளார, அவருளளும இத் தெனறமிழ நாட்டவர் அத்துணைப பழைய காலததே அதில் வல்லுநரா யிருந்தனரெனபது கண்டிலமாலெனின; ஆராயாது கூறினை; வானூலாராய்ச்சி 'மதிவழியளவு' (சந்திரமானம்) எனவும், 'பகல்வழியளவு' (சூரியமானம) எனவும இருதிறப்படும. மேனாட்டவரிற பண்டை நாளிலேயே வானூலாராய்ச்சியிற பெரும்புலமை பெறறு வயஙகினர் பாபிலோனியர் அல்லது சாலடியரெனபபடும் பழைய நாகரிகமகளே யாவர். எனறலும, இவர்கள 'பகல்வழியளவு' எனனுஞ சூரியமான ஆராயசசியிற றேர்ந்தவர்களேயல்லாமல், 'மதிவழியளவு' என்னுஞ சந்திரமான ஆராய்ச்சியிற் றேர்ந்தவரல்லர், அதனை யுணர்ந்தவரும அல்லர். வான்மீன்களைப பனனிரண்டு வீடுகளாக (இராசிகளாக)ப பகுத்து, அவற்றினூடு செலலும பகலவன இயக்கத்தைக்கொணடு ஈசுஎ நாட்கள அடஙகிய ஓர் ஆண்டினைப் பன்னிரண்டு திஙகளாக வகுத்தனர்.[2] ஆனாலும இருபத்தேழு அல்லது

1 See Dr. Caldwell's 'A Comparative Grammar of the Dravidian Languages,' 3rd edition, Introduction, pp. 88-91.

2. Chaldea by Z. Ragozin, p. 230.

இருபத்தெட்டு வான்மீன் நிலைகளை யுணர்ந்து, அவற் றூடு செல்லும மதியின் இயக்கத்தைக் கண்டறிந்து நாள களுங கோளகளும வகுதத நம இந்திய மக்களின 'மதி வழியள'வாகிய சந்திரமான ஆராயசசியைப பழைய பாபிலோனியா ஒரு சிறிதும் தெரிந்தவர் அல்லர். இந் நாளில் ஆரியமொழி நூல்களை எழுத்தெண்ணிக் கற்று ஆரியமொழியினும மேனாட்டு மொழியாராயச்சியினும மாபபெரும புலவராயத் திகழந்த மேனாட்டாசிரியரான மாக்ஸ்முலர், இவ வரிய பெரிய உணமையினை இற்றைக்கு சச-ஆணடுகட்கு முனனமே பினவருமாறு எடுத்துக் காட்டினர் :

" பாபிலோனியர் கண்டறிந்த வான வீடுகள பகலவன வழியவாகும. முனனெழுத்துப பட்டையங்களை அடுத் தடுத்து ஆராயந்தமையாற பறபல உண்மைகள புலனு யினவேனும, மதிவழியளந்த வான்வீட்டாராயச்சி பாபி லோனியர்பா லிருந்ததெனபதற்கு ஏதொரு சுவடுதானும அகபபட்டிலது. மதிவழியளவு பாபிலோனியர்க்குத் தெரிந்ததெனறென்றே வைத்துக்கொளவோமாயினும, வேத நூல்களையும பழைய வேதசசடங்குகளையும அறிந்த வா எவரும, அவ எளிதாக வானளவையினைப பாபி லோனியரிடமிருந்து இந்துக்கள இரவலாக வாஙகிக் கொண்டனரெனை நமபுதற்குத் தாம எளிதில் இசையார். வேத வேளவிகளிற பெருமபாலன, பகலவ னியகசத்தை விட மதியினியகசத்தையே சார்ந்து நிகழவன வெனபது எவரும நனகுணர்ந்ததேயாம. * * * ஒவவொரு நாளுஞ செயயபபடுஞ சடஙகுகளாகிய மாபபெரு வேள்விகள ஐந்துங, காலை மாலையிற செயயபபடும எரியோமபலுமே யனறி, வேதகாலத்தில் முதனமை பெற்றன : 'தரசபூரண மாசம' எனனும மறைநிலா முழுநிலா வேளவிகளும, பருவ கால வேளவிகளாகிய 'சாதுர்மாசியமு'மே யாகும."[1] இங் ஙனமாக இப பரதநாட்டினகணிருந்த பண்டை நன்மக்

1. MaxMuller's 'India What Can It Teach Us?' pp. 126, 127.

களே வானநூலாராய்ச்சியிற் சிறந்து விளங்கினமை காட்டியதோடு, 'மதிவழியளவு,' இருகருவேத இரண்டாம மண்டிலத்தின ஈஉ-ஆம பதிகத்திலும, எட்டாம மண்டிலத்தின் ஈ-ஆம் பதிகத்திலுங குறிப்பிடப்பட் டிருத்தலையும முதனமுத லெடுத்துக காட்டினர். இருக்குவேதத்தின் மட்டுமேயன்றி, எசுர்வேதத்திலுந், தைத்திரியகதினுஞ், சாந்தோகியத்தினும வானநூலாராய்ச்சிக் குரிய சானறுகள இருததலையுங குறித்துப போந்தார்.[1] இவரைப்போலவே விபர் எனனும மேனட்டாசிரியரும பழைய ஆரியவேத நூல்களிலிருந்து சான்றுகள பல எடுத்துக்காட்டி, மிகப் பழைய நாளிலேயே இப பரதநாடடவர் 'மதிவழியளவை' யாகிய வானூலாராயச்சியிற புலமையுடையராயிருந்தமை தெளிதது விளக்கினர்.[2] இவர்களெல்லார்க்கும முனனரேயே கோல் புரூக் எனனும ஆசிரியர் இவவுணமைகளை எடுத்துரைதனர்.

இனி, 'மதிவழியளவை'த் தவிரப 'பகல்வழியளவு' வடநாட்டிலிருந்த நமபரத நனமகக்குத் தெரியாதாயினுந், தெனனாட்டிலிருந்த பணடைத் தமிழ நனமக்கடகு அவ்விருவகை யளவுந் தொனறுதொடடே தெரிநதிருந்தன வென்பதறகுப பதினெராம பாடலிற் போந்த,

> "விரிகதிர் மதியமொடு வியல்விசும்பு புணர்ப்ப
> எரிசடை யெழில்வேழந் தலையெனக் கீழிருந்து
> தெருவிடைப் படுத்த மூன்றிரண்பதிற் றிருக்கையுள்
> உருகெழு வெள்ளிவந் தேற்றியல் சேர
> வருடையைப் படிமகன் வாய்ப்பப் பொருடெரி
> புந்தி மிதுனம் பொருந்தப் புலர்விடியல்
> அந்தி யுயர்நிற்ப அந்தணன் பங்குவின்
> இல்லத் துணைக்குப்பால் எய்த இறையமன்

1. Max Muller's 'A History of Ancient Sanscrit Literature,' Panini Office edition (1912), pp. 107-109.

2. A. Weber's 'The History of Indian Literature,' p. 248.

வில்லிற் கடைமகர மேவப்பாம் பொல்லை
மதியம் மறைய வருநாளில் வாய்ந்த
பொதியின் முனிவன் புரைவரைக் கீறி
மிதுனம் அடைய விரிகதிர் வேனில்
எதிர் வரவு மாரி.''

எனனும பகுதியிற பனனிரண்டு நாள வீடுகளும் (இராசி களும), தாங்கூறும முதிர்வேலிறகாலததில் அவை காணபபட்டவாறும ஆசிரியர் நல்லந்துவனர் நனகெடுத்து மொழிதலே சானறும. ஆசிரியா நல்லந்துவனர், அக நானூறு, நிகூ-ஆஞ செயயுளில் மதுரை மருதனிளநாக னாரற புகழநது பேசபபட்டிருத்தலானும, பாண்டியன் இலவந்திகைப பளளித துஞசிய நன்மாறனை இம மருத னிளநாகனரும ஆசிரியர் நக்கீரனரும பாடிய பாட்டுக்கள (நிநி, நிகூ) புறநானூறறினகட் காணபபடுதலானும மேலே நிஎகூ-ஆம் பக்கததிற் கி. பி. முதல் நூற்றாண்டின் முற் பகுதியிலிருந்தவராகப பெறபபட்ட நக்கீரனரது காலமே நல்லந்துவனாகும காலமாதல் தெளியபபடும. படவே, நல்லந்துவனர் கூறிய 'பகல்வழியளவு,' கி. பி. இரண்டாம நூற்றாண்டிலிருந்த கிரேகக வானூலாசிரியரான 'தாலமி' எனபவர் கண்டெழுதிய 'பகல்வழியளவுக்'கும முறபட்ட தாதலும் தாமே விளங்கும. இஙஙனமாகக் கிரேக்க வானூலாசிரியாகரு முனனமே தமிழச்சானறோர் 'பகல் வழியளவு' தெரிந்திருந்தமை புலனாதலிற, கிரேககரிட மிருந்து அவ் வளவினைத் தமிழர் கறறுணர்ந்தாரென்பது அடாது. மற்றுத், தமிழரிடமிருந்தே அதனைக் கிரேக்கர் கறறுணர்ந்தாரெனக.

அறதறற், கி. பி. ஆரும நூற்றாண்டிலிருந்த வராக மிகிரர் எழுதிய 'ஹோராசாஸதிரத்'திற் காணபபடுங கோள்கள், வான்வீடுகள் முதலியவற்றின் பெயர்கள் கிரேக்கமொழிச் சொற்களோடு ஒத்து நிற்றலும, அவை தமிழச் சொறகளோடு ஒத்து நில்லாமையும எனனை யெனின்: கி. மு. முதல் நூறறாண்டிலிருந்தே வடநாட் டவரும் அவர்வழியே வடமொழியும் தமிழ்நாட்டின்

கண் வந்து மிகுதியாய்ப பரவத் துவங்கிவிட்டமையின், தமிழாகள முனனே தனித்தமிழச் சொற்களால் வழங்கிய தம பொருளகளையும இடையிடையே வடசொறகளால் வழங்கத் துவங்கிவிட்டனர். மேலெடுத்துக் காட்டிய நல்லந்துவனரது செய்யுட் பகுதியிற றனித்தமிழச் சொறகளினிடையே 'புந்தி,' 'மிதுனம,' 'அங்கி,' 'பங்கு,' 'யமன,' 'மகரம,' முதலான வடசொற்கள புகுந்து விட்டமை காண்க. இங்ஙனமே நாட்செல்லச் செல்ல வடசொறகளும வடமொழி வழக்குகளுந் தமிழ நாட்டிற் பரவப பரவத் தமிழர்களே தம இயறபெயர்களையும 'ஞானசமபந்தன,' 'சுந்தரன,' 'உமாபதி,' 'சுவாமிநாத தேசிகன' எனறற றொடககத்து வடசொறகளால் அமைகக லானதுடன, தாமே வருந்தி யாராயந்தறிந்தெழுதிய ஒபபுயாவில்லாத் தனித்தமிழ நூல்களுக்குஞ் 'சிவஞான போதம,' 'சிவஞானசித்தி,' 'சிவபபிரகாசம,' 'சஙகற்பநிராகரணம' முதலான வடமொழிப பெயர்களை யமைத்து, அந் நூல்களுள எடுத்துரைககப்படுஞ சில பலபொருள கட்கும வடசொறகுறியீடுகளை யிட்டு வழஙகுவாராயினர். தமிழ வேளாண மக்கடகுப பிறந்த பிளளைகள 'சுபபிரமணியன,' 'விநாயகன்,' 'வீரபதிரன,' 'சங்கரநாராயணன' முதலான வடசொற பெயர்களைப் புனைந்து கொண்ட அளவாலே, வடநாட்டுகுரிய ஆரியபபிளளைகளாய்விடாமை போலத், தனித் தமிழர் தம ஆராய்ச்சி நுணணுணர்விற பிறந்த 'சிவஞானபோதம' முதலிய அருந்தமிழ நூல்கட்கு வடசொறபெயர் புனைந்துவிட்டமை பறறி அவை ஆரியாகுரிய ஆரியநூல்களாயவிடுதல் ஒருவாறருனுமில்லை. இவவாறே தமிழநாட்டு ஊர்களாகிய தில்லை, அண்ணாமலை, ஐயாறு முதலியன சிதம்பரம, அருணாசலம, பஞசநதம முதலான வடமொழிப பெயர்களைப புனைந்தமைட்டானே அவை வடவர்க்குரிய 'ஆரியப் பிரதேசங்க'ளாய் விடுதலும எஞஞானறுமில்லை. இவவியல்புகளை ஆயந்து கணடுணரமாட்டாதார், இவ் வடசொற் பெயர்களுங் குறியீடுகளும உடைமைபற்றி மேற்கூறிய உண்மைத் தமிழ்நூல்களை வடநூன மொழி

பெயர்ப்புகள் போலுமென மயங்குவாரும, அவை அவற றின் மொழிபெயர்ப்புகளேயா மெனப பிடித்துப் பேசுவாரு மாய்ப் பெரிதும பிழைபடாநிற்பர். இஞ்ஞானறை ஆங்கில வழக்குப பற்றி, ஆங்கிலம அறியாத் தமிழமாதாகளுந் தாம வழங்கும பண்டங்களுக்குத் தப்புந தவறுமாய் ஆங்கிலச சொறகளேயிட்டுப பேசுதலும, ஆங்கிலமுணர்ந்த தமிழ்ாடவர் இடையிடையே ஆங்கிலச சொறகலந்த தமிழில் உரையாடுதலும ஆகிய 'அயல்மொழி மயக்கின' இயலபினை உற்றுக்காண வல்லார்கும, பண்டைத் தமிழச்சான்ரேருந், தமகும புறமபான ஆரியமொழிச் சொறகளைத் தாங்கண்டறிந்த கோளகள் நாள்கள் முதலிய வறறிற்கும் பிறவற்றிறகும் பெயர்களாய் அமைக்கும வேட்கையுடையரான தன உண்மை புலனுகா நிறகும. வட நாட்டவரால் அறியபபடாமல் தமிழநாட்டவராற் கண் டுணரபபட்ட கோளகள நாளகள ஓரைகட்குத் தமிழச் சானரேரே வடமொழிப பெயர்களைப புனைந்துவிட்டா ராகலின, வாணிகஞ செயதறபொருட்டும பொறிகள அமைக்கும பொருட்டும் அரசர்க்கு மெயகாபபாளராயும ஏவறசிலதர் சிலதியராயும அமர்தறபொருட்டுந் தமிழ நாட்டில் தொகை தொகையாய வந்த யவனராகிய கிரேக் கரே 'பகல்வழியள'வினைத் தமிழர்பாற கறறுணர்ந்து, அதனைத் தாம கற்றுணர்ந்தபடியே வடசொற பெயர்க ளாற றமது கிரேகமொழியில் வரைந்து வைபபாராயினா. அவவாறவர் வரைந்துவைதத வானூறகல்வி அவர் கூட்டங்கூட்டமாயக் குடியேறிய வடநாட்டிற பரவவே, அங்கிருந்த வராகமிகிரரை யுளளிட்ட வடநூற புலவர்கள அப பகல்வழியளவினைத தாமுங கறறு, அதனகட் காணபபட்ட பெயாகளுங குறியீடுகளுந் தமது ஆரிய மொழிக் குரியவாயிருததலைக கண்டு மகிழ்ந்து, அவை யெல்லாவற்றையும ஒருங்கே தழுவி 'ஹோராசாஸதிரம' எனப பெயரிய ஒரு வானநூல் எழுதி, அங்ஙனம எழுதி னுந் தாம அறிந்த அப பகல்வழியளவு தமக்குக் கிரேக்கர் பாலிருந்துங கிடைத்ததெனபது தோனற அதற்கு 'ரோமகசித்தாந்தம,' 'பௌலிசசித்தாந்தம்' என்னும

பெயர்களையுங் கிளந்து சூட்டினர்.[1] இங்ஙனமாகக் கிரேக்கர் 'பகல்வழியள'வினை தமிழர்பாலிருந்து கற்றது கி. பி. இரண்டாம நூற்றாண்டிலும், அதனை வடநாட்டவராகிய ஆரிய பட்டரும வராகமிகிரரும கிரேக்கர் பாலிருந்து கற்றது கி. பி ஐந்தாம நூறறாண்டின துவக்கத்திற்குப பினனுமேயாகலின, இதனைக் கி. பி. முதனூறறாண்டுகளு முனனரே யறிந்திருந்த தமிழச்சானறோரே இதனை ' இவ் விருவேறினத்தார்களுங் கறபித்த ஆசிரியராவரென றுணர்ந்துகொளக.

அறறாயினுஞ, சாலடிநாட்டிலிருந்த பாபிலோனியர் மிகப் பழைய நாளிலேயே வானநூலாராய்ச்சியில் தேர்ச்சி பெற்றிருந்தா ரெனபது எல்லார்க்கும ஒபபமுடிந்த தாகலின, அவரொடு வாணிகம் நடாத்திய பண்டைத் தமிழரே 'பகல்வழியள'வினை அவாபாற கறறுணர்ந்தா ரென்றுற் படும் இழுக கென்னையெனிற்; கூறுதும்: பண்டைச சாலடியராதல், இருக்குவேத காலத்து வடவராதல் வானூலாராயச்சியில் நிரமபத் தேர்ந்தவரெனறு கோடல் அமையாது; என்னை? சாலடியா அதிற் றேர்ச்சி பெறறது உண்மையாயின், அவர்பாற 'பகல்வழியள'வோடு 'மதிவழியளவுங' காணப்படுதல் வேணடும, மறறஃது அவர்பாற் காணப்படாமையானும, இனி இருக்குவேத காலத்து வடவர் அதிற்றேர்ச்சி பெற்றவராயின் அவாபால் 'மதிவழியளவு' காணபபடுமாறு போலப 'பகல்வழியளவுங'காணப்படுதல் வேண்டும், ஆனலஃது அவர்பாற் காணப்படாமையானும் என்பது. பண்டைச் சாலடியர்பாற் 'பகல்வழியளவு' ஒன்றுமே காணப்படுதலானும, இருக்குவேத காலத்து வடவர்பால் 'மதிவழியளவு' ஒன்றுமே காணபபடுதலானும், மற்றுப் பண்டைத் தமிழர்பாலோ அவ் இருவேறளவும் ஒருங்கே காணப்படுதலானும், சாலடியரும் வடவருந் தாமாகவோ அன்றித் தமிழரிடமிருந்தோ அவ்

1. See Dr. A. Weber's 'The History of Indian Literature,' p. 258; and also Mr. R. C. Dutt's 'A History of Civilisation in Ancient India,' vol. II, p. 243.

விரண்டில் ஒனறைத் தெரிந்துகொள்ளுதற்கு முன்னமே, தமிழச்சானறோர் தாமாகவே அவ் விருவகையளவும் ஒருங்குணர்ந்திருந்தமை தேற்றமாம.

அறறன்று, சாலடியரிடமிருந்து 'பகல்வழியளவும,' வடவரிடமிருந்து 'மதிவழியளவும்' தெரிந்துகொண்டமையி னறருன, தமிழர்பால் அவ் விரண்டும ஒருங்கு காணப படுவ வாயினவென றுரையாமோ வெனின், உரையாம. தமிழரின வானூலுணர்ச்சியை நடுவுநிலை வழாது ஆராயந் தறிந்த மஸ்லீன் எனனும மேலநாட்டாசிரியர்,

"தெனனாட்டினகண் உளள பரதவர் தமது தொழி லின பொருட்டு வளாபிறை தேயபிறை இயககங்களைத் தெரியவேணடியமையிற, பண்டை நாளிலேயே காலததை 'மதிவழியளககுங்' கணககை உணடாக்கினர். வெளி நிலங்களி லிருந்த உழவாகளோ பருவகாலங்களையும பகலவ னியககங்களையும உறறு நோககுவாராயினர். பார்ப்பனரது தொடாபிறை பற்றபபடுதறகு முனனமே, தமிழர்கள தமது நாளவாழக்கைக்கு வேணடிய வளவு வானூற பயிறசியை மிகவுஞ சிறந்ததாகச் சிர்பபடுத்தி வைதிருந்தனர; அவர்களது முறை பலவாறருனும இனறும நிலைபேறுற்று நிலவுகினறது. தமிழரது காலக கணககை ஒழுங்குறுத்துவதாகிய வியாழ மண்டிலச் சுழறசி ஐந்து கொண்ட அறுபதாண்டு வட்டம் ஆரியரது முறையிற சேர்ந்ததனறு. தமிழரின மனைவாழக்கை நிகழ்ச்சிகளின் பொருட்டு வழங்கும பனனிரண்டாட்டைக் காலஅளவும அங்ஙனமே தமிழர்கு மட்டும உரிததாவது." என்று கூறுதலும,[1] ஸ்லேட்டர் எனனும ஆசிரியர்,

"தமிழக் காலக் குறிப்புகள் நமதாராய்ச்சி யுணர் வினைப் பெரிதும் எழுப்பி விடுகின்றன. குருக்களமார்க்கு உரியதுங குடிமக்கட் குரியதுமெனக் காலக்குறிப்பு இரு திறப்படுகினறது. குருக்களமார்க்குரிய குறிபபு, தெலுங

1. Quoted in Mr. T. R. Sesha Iyengar's 'Dravidian India,' pp. 129, 130.

குக் குறிபபு உட்பட ஏனை ஆசியாநாட்டுக் குறிபபுகளோ டொபப 'மதிவழியளவின்'பாற படுவதாகலின, அதனைச் சிறந்தெடுத்துப் பேசல்வேண்டா. ஆனற், குடிமக்கட் குரிய காலகுறிப்போ 'பகல்வழியள'வினபாற் படுவது, உணமையாகவே முறறும 'பகல்வழியள'வின்பாற படுவ தாகும; முதலில் 'மதிவழியள'வாயிருந்து பின்பு பகல்வழி யாண்டிற்கு இசையத் திரிபு செய்யபபட்ட நமது காலக் குறிபபை ஒப்பதனறு. ஒரு திங்களுககு இத்தனை நாட்கள் தாம இருத்தல் வேணடுமென்று அவாவாத அவ்வள வுக்கு அது தனிப 'பகல்வழியள'வினபாற் பட்டதாயிருக் கினறது. பகலவன செல்லும வானவழியானது பனனி ரணடு கூறுகளாகப பகுகபபடுகினறது; காலையிலோ நண்பகலிலோ இரவிலோ எந்த நேரதது்திற பகலவன் ஒரு புதுவீட்டிற செல்கினறனனோ அந்த நேரத்திலேயே ஒரு புதுதிங்கள பிறக்கினறது. நாட்களின பிறபபானது கதிரவன எழுமப பொழுதிலேயே துவங்குகினறது; அங்ஙனந் துவங்குவது, இந்தியாவிலுளள ஏதேனும ஓரிடத்திற நேனறுங கதிரவன எழுசசியைபபறறிய அவ் விடத்து நேரதைதக கொணடனறு; மறறு, அது, பழைய தமிழாகள கோளகளின இயகங்களோ உறறுநோககுதறகு அமைத்த கொடுமுடிகளுளள இடத்தின நேர் உச்சியிலும, நடுக்கோட்டின (Equator) பாறபடும இடத்திலும பகலவன் எழுமபோது கணககுச் செயயபபட்ட நேரத்தைக்கொண்டு துவங்குவதாகும. இத்தகையதொரு தனிக் காலக்குறிப் பினை இவர்கள எககாலத்திற கைக்கொண்டார்களென் பதை எவரேனும எனருயினும எடுத்துக காட்டினரோ இல்லையோ யான் அறியேன. இது தனித்த இயல்பிற் றெனபதும, வழக்கமான வசதிக்குச் சிறிது இடர் பயப்ப தாயினுங் கோளகள நாளகளின் இயக்கங்களோ முன்பின் முரணுமல் திருத்தமாக அளந்தறிவதில், இபபோது வழஙகும வேறெந்தக் காலக குறிபபைக் காட்டிலும, இதுவே முன்னிறப தெனபதும பெரிதுங் கருத்திற் பதிக்கற பாலனவாகும. இது தமிழரல்லாதாரின் தொடர்பு சிறிதும் அணுகபபெறாத தெனனுட்டினகண்

தனியே இடையருது நடைபெற்று வந்த தமிழ்மக்களின கலைநூற் புலமையின சுருசுருபபினை மெய்ப்பிகினற தன்றே?"[1] என்று கூறுதலுங் கொண்டு, சாலடியர்களுத் தெரியாத 'மதிவழியள'வினையும, ஆரியர்க்குத் தெரியாத 'பகல்வழியள'வினையும பண்டைத் தமிழமக்கள தாமாகவே நன்கறிந் திருந்தமை தெளியக் கிடகினறதனறே? தமிழ நாட்டினகண வழங்கும அறுபது ஆண்டுகளுகுத் தமிழ மககள வடமொழிப பெயர்களைப புனைந்திருபபினும, வியாழமண்டிலச் சுழற்சியை ஆராயந்து கணடு அவ் வாற்றல் அவவறுபதாண்டுகளை வகுததமுறை தமிழ் மக்கட்கே உரித்தாதல், மேறகாட்டிய ஆங்கில ஆசிரியா நடுவுகின்று ஆராயந்துரைக்கு முரையால் இனிது பெறப படுகின்றதன்றே? இவ்வானூ லாராயச்சியால் வெளிப பட்ட உண்மையைக கருத்தூனறிப பார்ப்பவாககு, வட சொறகளையுங குறியீடுகளையும உடைமை பறறித் தமிழாக் குரியவைகள ஆரியர்க குரியவாதல் செல்லாமை நனகு விளங்கும. எனவே, வெறும பெயர்களையுங குறியீடு களையுங கண்டு மயங்கி உணமையைத் திரிதுணராமல், அதனை உளளவா றுணர்தல் மெயயறிவினுர்கு இனறி யமையாத கடமையாதலுந் தானே போதரும. எனறித் துணையும விரித்து விளக்கியவாறாற, பழைய 'தொல் காபபிய நூலுட்' காணபபடும 'ஓரை' எனனுஞசொல் வானவீட்டைக் குறிக்குந் தூய தமிழச்சொலலாயப பண்டைத் தமிழரால் வழங்கபபட்டுவந்த தொனமுவ தூஉம, தமிழர்பால் வந்து 'பகல்வழி'யளவினைக் கற் றுணர்ந்த யவனராகிய கிரேக்கரே ஏனைப பல தமிழச் சொற்களோடு அதனையுங கறறுப போயத் தாம வரைந்த வானூல்களுள எழுதிவைபபாராயினா ரெனபதூஉம நனகு புலனுதலின, அவ 'ஓரை' எனனுஞ சொல்லைக் கிரேக்க மொழியெனப் பிறழவுணர்ந்து, அவவாறாறல் 'தொல் காபபியம' கி. மு. மூனறாம நூறறாண்டிற்றுன இயறறப் பட்டதாதல் வேண்டுமெனக் கரைந்தாருரை பொருந்தா

1. 'The Dravidian Element in Indian Culture' pp. 71, 72.

வுரையாதல் காண்க. மேலும், 'ஓரை' என்னும் இத் தமிழ்ச் சொல் கிரேக்க மொழியில் 'ஓரீ' எனப பெருமபாலுந் தமிழ் வடிவத்தோடு எழுதபபடுதலையும்[1] நினைவிற பதிதல் வேண்டும். இச் சொல்லக கிரேககரிடமிருந்து கடன வாஙகிய வடநாட்டு ஆரியரே அதன தமிழ வடிவத்தைத் திரித்து 'ஹோரா' என எழுதினர் எனக.

இனிப, பாண்டிய அரசர் வழங்கிய 'வட்டெழுத்துக்க' ளின் பிறபபையும, அவற்றுற் பொறிக்கபபட்ட கல்வெட்டுக் களின காலதததையும ஆராயும முகத்தால், 'தொல் காப்பிய' காலத்தைக கி. பி. இரண்டாம நூற்றாண்டிற படுபபித்தார உரைகள ஆராயற்பாலன. தமிழநாட்டில் வழஙகிய வட்டெழுத்துக்களைப்பறறியும, இவ் விந்திய நாடெஙகும் வழங்கிய அசோக எழுத்துக்களைப பறறியும யாம இறறைககு இருபததோராணடுகட்கு முன்னமே ஆராய்ந்து, அவ வாராயச்சியைக் கி. பி. ககூஅ-ஆம ஆண்டு வெளிபபோந்த 'பண்டைக்காலத் தமிழரும் ஆரியரும்' எனனும எமது நூலில் வரைந்திட்டாம. அதறகு எட்டாண்டுகள கழிததுக் கி. பி ககூகச-இல் ஆஙகிலத்தில் வெளியிடபபட்டதாகிய 'தமிழாராயச்சிகள' (Tamil Studies) என்னும நூலின்கண அதன ஆக்கியோ ரான சீனிவாசஐயஙகார் வட்டெழுத்துக்களைப பற்றிய எமதாராயச்சியினை முறறும் தழுவி, வட்டெழுத்துகளை தமிழாக் குரியனவேயனறி வடநாட்டில் வழஙகிய 'பிராமி' எழுத்துக்களின திரிபாகா வெனறும, இற்றைக்கு மூவாயிரத்தைந்நூருண்டுகட்கு முனனமே தமிழரும பினீ சியர் எகுபதியரும வாணிகவாழகையிற் கலந்துறவாடின ராகலின எகுபதிய ரறிந்த எழுத்து முறையைத் தமிழரும அந்நாளிலேயே அறிந்தவரா யிருத்தல வேண்டுமெனறும, இவ்வெழுத்து முறையைத் தமிழரிடமிருந்தே இந்திய ஆரியர் கற்றுணர்ந்தவராதல் வேண்டுமெனறும, ம ப என்னும எழுத்தின் வடிவஙகள் பிராமி அசோக எழுத்துக் களிலும வட்டெழுத்துக்களிலும வேறுபட்டிருத்தலே

1. A. Weber's 'The History of Indian Literature,' p. 254.

இதற்குச் சான்றுமென்றும், ஆசிரியர் தொல்காப்பியனர் உரைக்கும் தமிழ எழுத்தின் வடிவங்கள் வட்டெழுத்துக் களின் வடிவோடு ஒத்திருத்தல்போற் பிராமி எழுத்துக் களின வடிவோடு ஒத்திராமையால் தொல்காப்பியனர் காலத்திறகு முனனமே வட்டெழுத்துக்கள தமிழநாட் டின்கண் வழங்கினவாதல் வேண்டுமென்றும நனகாய்நது வலிய சானறுகள பலவற்றால் தமிழஎழுத்துக்களின் பழமையை இனிது விளக்கிக் காட்டியிருக்கினறார்.[1] அவர் கொண்ட முடிபே எமது முடிபுமா மாகலானும இவ் விந்தியநாட்டு எழுத்தின வடிவங்களோ நன்காயந்துகண்ட 'ரிஸடேவிட்ஸ்,' 'தாமஸ,' 'பர்னல்' முதலான ஐரோபபிய ஆசிரியர் நடுநினறாராயந் துரைக்கும உரையும எமது முடிபோடு ஒருங்கொத்து நிற்றலானும் தமிழ வட்டெழுத் துக்கள தமிழர்க்கே உரியவாய்த் தொல்காபபியனர் காலத் துக்கு முனனே தொட்டு வழங்கும் தனித்தமிழெழுத்துக் களே யல்லாமல், அவை வட வாரியர் வழஙகிய பிராமி எழுத்துகளினின்றும வந்தன அல்லவெனபது கடைப் பிடித் துணர்தல்வேண்டும. தமிழ வட்டெழுத்துக்கள ஆறுயிர ஆணடுகளாய் வழஙகுவனவாகப, பிராமி யெழுத்துக்களோ இரண்டாயிரத்து முந்நூறு ஆண்டு களுககு உட்பட்ட வழக்கமே யுடையனவாயிருத்தலாற, பிராமியெழுத்துகளே தமிழ வட்டெழுத்துக்களோ பார்த் துச் செய்யப்பட்டன வாகல் வேண்டுமல்லது, வட்டெழுத் துக்கள பிராமி யெழுத்துக்களைப் பார்த்துச் செய்யப் பட்டனவாகல் ஒரு சிறிதுஞ் செல்லாதென்க.

அற்றேற், கி. பி. எட்டாம் நூற்றாண்டிற்குமுன் வட் டெழுத்துக்களாற செதுக்கப்பட்ட ஒரு கல்வெட்டாயினும இத் தென்றமிழநாட்டின்கட் காணப்படாமை யென்னை யெனிற்; கி. பி. எட்டாம் நூற்றாண்டிற்கு முன்னே நீண்டு சென்ற பெருங காலத்திலேதான தமிழருந் தமிழ மன்ன ரும மிகச் சிறந்த நாகரிக வாழ்க்கையிலிருந்தனர்; அக் காலத்திலேதான தனித்தமிழ்மொழி எழில்நலங் கனிந்து

1. See 'Tamil Studies,' pp. 113-131.

தன் சுடரொளி விரிந்து வீறித் திகழ்ந்தது; அஞ்ஞான் றிருந்த தமிழ்ப்புலவர்கள மெய்யறிவு சான்ற மேன்மக்க ளாய்ப் பலகலைத் துறைகளிலும் அறிவுநிரமபி அவ்வத் துறைகளிலும அளவிறந்த விழுமிய நூல்களியற்றி இத் தமிழகத்தை அறிவொளியால் துலஙகச செய்தனர்; அப் பண்டைநாளில் ஏனை நாடுகளிலிருந்த ஏனை மக்களெல் லாம நாகரிகத்திலும வளத்திலுங குறைந்தாராய்த் திருந்திய அறிவினறி வருந்துகிலையி லிருந்தமையின அவரும அவர்தம மன்னரும் தமிழகத்தைக் கைப்பறற மாட்டாராயினர். அதனால், தமிழகந் தனக்குப பகையா வார் எவருமினறித் தன வேந்தர் பெருமக்களின வெண் கொற்றக்குடை நீழலில் அமைதியுற திருந்தது; எஙகுங கல்வியுங கைத்தொழிலும உழவும மலிந்திருந்தன; நூல் களும் நூலாராயச்சி செயவார் தொகையும பெருகிக்கிடந் தன; எல்லாநூல்களும ஏடுகளில் எழுதபபட்டு எஙகும பரந்து வழஙகின. அரசாகளின ஆண்மையும புகழும விளங்கப பாடிய பாட்டுககளும, அவர்தம ாகையுங கொடையும வரலாறும விரித்த நூல்களும ஏடுகளிற் பொறிக்கபபட்டு எஙகும நிலவினமையாலும, இவ வேட்டுச் சுவடிகள அழிந்துபடுதற்குரிய நிகழச்சிகள் ஏதுமே அஞ் ஞானறு நிகழாமையாலும அவை தமமைக் கருஙகற்களிற செதுகவைக்க வேண்டுமெனனும் எண்ணம பண்டைத் தமிழ மன்னர்க்குங் கறறோர்க்கும ஏனைக் குடிமகக்குந் தோன்றுமலே போயிறறு. அதனாலேதான கி. பி. எட்டாம நூற்றுண்டிறகு முறசென்ற பழந்தமிழ்க் காலத் தில் வட்டெழுத்தால் ஆக்கிய கல்வெட்டு ஒனறுதானும இல்லாதாயிற்று. இதனை முன்னரே களந-ஆம் பக்கத்தி லும் எடுத்துக் காட்டினோம. மற்று, வடநாட்டிற் குடி புகுந்த பழந்தமிழரோ தெனனாட்டவரைபபோல் நாகரிகத் தில் அத்துணைச் சிறவாமையானும், தம் நாட்டகத்தே அடுத்தடுத்துப புகுந்த ஆரியரானுங கிரேக்கரானும ஊணரானும் தொடர்பாக அலைக்கபபட்டு அவ் வலைப் பினால் தம அரும்பொருளகளையும நாடுநகரங்களையும் நூற் சுவடிகளையும இடையிடையே இழக்கலானமையானும்

அங்கிருந்த மன்னர்களும் பிறரும் தம் ஆண்மைச் செயல்களையும் பிற வரலாறுகளையும எளிதிற் சிதைந்துபோம் பனையேடுகளிற் பொறித்துவையாமற் கருங்கற்களிற செதுக்கிவைக்க வேண்டியவரானர். அதனற கல்வெட்டுகள் முதன் முதல் வடநாட்டின்கண்ணேதான் தோன்றுவ வாயின. கி. பி. இரண்டாம நூற்றாண்டிற்குப் பின் தென்னாட்டின்கணிருந்த தமிழ்வேந்தர்களின் ஆற்றலும் ஆண்மையுஞ் சுருங்கவே வடக்கிருந்த மன்னர்கள மெல்ல மெல்லத் தமிழநாட்டின்கட் புகுந்து தமிழமனனர்களை வெனறு அதனைக் கைக்கொளவா ராயினர். இங்ஙனமாக இத் தெனனாட்டின்கட் பெருங்குழப்பங்கள நிகழவுழித் தமிழமக்கள தமக்குரிய அருமபொருளகளையும நாடுநகரங்களையும ஏட்டுச் சுவடிகளையும இழந்துவரலானர். வடக்கிருந்துவந்த பல்லவ அரசர்களுந் தமது வழக்கப்படி தம் ஆண்மைச செயல்களையும பிறவறறையுங கருங்கற சுவர்களில் ஆங்காங்குப பொறித்துவைபபாராயினர. அப பல்லவர் காலத்தும் அதறகுப பினனும இத் தமிழகத்திலிருந்த தமிழரசர்களும அவ் வழக்கத்தைத் தாமுங கைப்பற்றி ஏடுகளினும் நிலைபேறுயுளள கல்வெட்டுகளை அமைபபாராயினர். தமிழநாட்டின்கட் கி. பி. மூன்றும நூற்றாண்டிற்குப பின் கல்வெட்டுகள உண்டான வரலாறு இங்ஙனமாகலின், இஃதறியாமல் அம மூனறும நூற்றாணடிற்கு முன வட்டெழுத்துக் கல்வெட்டு ஒனறுதானும இல்லாமை பறறி, வட்டெழுத்துக்களே அஞ்ஞானறு வழங்கிறறில வெனக் கரைவாருரை பொருந்தாப புல்லுரையாமெனக. நாகரிகம் மிக்க இந் நாளிற காகிதச் சுவடிகளில் எத்தகைய வரலாறும் நூலும் எழுதிவைப்பாரையே காண்டுமனறி, அவைதமமையெல்லாங் கருங்கற பலகைகளிலேயே பொறிதது வைபபாரைக் காண்கிலேம; இடைப்பட்ட காலத்து வழக்கமபற்றிக் கருங்கற்களில் நிலைவுக் குறிகளை வரைந்தமைபபார் இஞ்ஞானறு ஒரு சிலரேனும் உளராதல் போலப், பண்டைக்காலத்துத் தமிழ நாகரிகமாந்தரிலும் "பெயரும் பீடுமெழுதி அதர்தொறும, பீலி

சூட்டிய பிறங்குநிலை நடுகல்"[1] நாட்டும் வழக்கம் நிகழ்ந்து வந்தமை பழைய நூல்களிற் புலனுயினுங், கி. பி. இரண்டாம நூற்றாண்டிற்குமுன் அங்ஙனம நாட்டப்பட்ட நடுகல் ஒன்றுதானும இதுகாறுங் காணக்கிடையாமையின், அவ்வியல்பினை இனைத்தென்றுணர்தல் இயலா தெனறு விடுக்க. மேலும், இத் தெனறமிழ நாட்டின்கட் பழைய நகரங்கள இருந்து அழிந்துபோன இடங்களை அகழ்ந்து, அவற்றின் கீழப் புதைந்து கிடக்கும பொருளகளை மேற் கொணர்ந்து ஆராயவார் இனமையின, பண்டைக் காலத்து நடு கற்களின் இயல்பினை அவ் வாராய்ச்சியின்றி முடிவுகட்டுதல் இயலா தென்பதுங் கருத்திற் பதிக்கற் பாறறு. அசோகமனனன் காலத்திலேயே அவனுக்குக் கீழடங்காமல் அவனை டொத்திலியி லிருந்த சேரசோழ பாண்டியர்களாந் தமிழவேந்தரின் அரசியல் மாட்சி அவ்வசோகமனனன வெட்டுவித்த கல்வெட்டுகளிலேயே நுவலப்பட் டிருக்கினறது; அத்துணைச் சிறந்த அத் தமிழமனனர் தம நாகரிக அரசியல் எழுத்துக்களின உதவியினறி நடைபெறுதல் இயலாதென்பதும ஓர்துணரற் பாற்று. மேலும, வட்டெழுத்துக்களாற பொறிகபபட்ட பழைய கல்வெட்டுகள கிடையாவாயினும், அவ் வெழுத்துக்களின வடிவினைத் தெளிய விளககும் மிகப பழைய தொல்காப்பிய நூல் உண்மையின், இதனினுஞ் சிறந்த சான்று பிறிதெனறு வேண்டுமோவெனவுங கூறிமறுக்க. கி. பி. எட்டாம நூறறாண்டுமுதல் தமிழநாட்டில் வழககத்துக்கு வந்த கல்வெட்டுகள அந் நூற்றாண்டிற்குமுன அந் நாட்டினகட் காணப்படாமையினையே ஒருபெருஞ் சானறாய்க் கொண்டு, ஏனைப பழைய உண்மைத் தமிழநூற் சான்றுகளை யெல்லாம புறந்தளளி, அவ்வாற்றால் தமிழ மொழி கி. பி. எட்டாம நூறறாண்டிறகுமுன ஓர் ஒழுங்குபட்ட நிலையை எய்தவில்லையெனக் கரையும பார்ப்பனர், அவ்வாறு கரைதல் தமக்குந் தமக்குரியதெனக் கொளளும வடமொழிக்குமே கேடு பயத்தலை யுணர்ந்திலர். என்னை?

---

1. அகநானூறு, கஉக.

தனிச் சமஸ்கிருத மொழியிற் பொறிக்கபபட்ட கல்வெட்டு கள எல்லாம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டிற்குப் பிற் பட்டனவேயன்றி, அதற்கு முற்பட்டது அவற்றுள ஒன்றுதானும இன்மையின்,[1] சமஸ்கிருத மொழியும அவ் விரண்டாம நூற்றாண்டிற்குமுன் ஓர் ஒழுங்குபட்டகிலையை எய்தவில்லையென்பதும, அம மொழியிற பழைய நூல்க ளெனக் கூறப்படும இருக்கு, எசுர் முதலிய வேதங்களும் பிராமணங்களும பிறவு மெல்லாம் பிறறை ஞான்றைப் பார்பபனர்களாற் பழையனபோற் புனைந்து கட்டபபட் டனவேயனறி உண்மையில் அவை கி. பி. இரண்டாம் நூறறாண்டிற்குப் பிற்பட்டனவேயா மென்பதும் முடிக்கப் படுமாகலின எனக. கல்வெட்டுகளே மட்டுஞ சானறாகக் கொண்டு தமிழ்ப் பழமையைக் குறைக்க மடிகட்டி நிறகும் பார்ப்பனர்க்கு, அவர்கொண்ட அம முறையே அவர்தம் வடநூற் பழமையைக் குறைத்து, உண்மைக்கு மாறாய்ப் பெரியதொரு தலைதடுமாற்றத்தினை விளக்கக் காண்டலிற், பழைய உண்மைநூற சானறுகளே பண்டைக்கால நிலை யினை உள்ளவாறு அளந்தறிதற்குக் கருவியாதல் தெளிந்து கொளக. எனவே, கி. பி. எட்டாம நூறறாண்டி லிருந்து இத் தமிழநாட்டில் வழங்கிய தமிழ வட்டெழுத் துப் பட்டையங்களே மட்டுஞ் சானறாகக் கொண்டு, அவற் றிறகுப பல்லாயிர ஆண்டு முறபட்ட தொல்காபபிய நூலின காலத்தை அளக்கப புகுதல் 'நரிவால் கொண்டு கடலாழம் பார்க்கப் புகுத'லோடு ஒத்து நகையாடற் பால தாமென விடுக்க. இனித் தொல்காப்பியத்தி னுதவி கொண்டே வட்டெழுத்துக்களின் காலந் துணியபபடுவ தன்றி, வட்டெழுத்துப் பட்டையங்களி னுதவிகொண்டு தொல்காபபிய காலந் துணியப்படா தெனபதுங் கடைப பிடிக்க.

இன்னுங், குமரிநாடு கடல்வாய்ப்படாது நிலவிய காலத்தில் தொல்காபபியம் இயற்றப்பட்டதா மென்பதற்கு, அந் நூலின்கண் உளள குறிப்புகள் பலவுமே நன்குசான்று

1. See Prof. Rhys Davids' Buddhist India, pp. 134, 135.

பகர்கின்றன. அவற்றுட் சில ஈண்டெடுத்துக் காட்டுதும்: ஆசிரியர் தொல்காப்பியனார் வெறுமணல் வெளியாகிய பாலை நிலத்தை "நடுவு நிலைத்திணை" எனவும், அந் நிலத்தினகண் வேனிற்காலத்து நண்பகற் கொடுமையே மிகுந்திருக்கும எனவுங் கூறுகின்றார்.[1] நாறபுறத்துங் குறிஞ்சி, முல்லை, மருதம, நெய்தல் எனனும நிலப் பகுதிகளாற் சூழபபட்டு, அவற்றிடையே மிக அகன்று நீண்டு விரிந்து கிடப்பதாகிய வெறுமணல் வெளிக்கு அவர் "நடுவு நிலைத்திணை" என்று பெயர் கூறுமாற்றை உற்றுராயுங்கால், அத்தகையதொரு பெருமணல்வெளி அவர் காலத்தில் இருந்ததாகல் வேண்டுமெனபது புலனும. இஞ் ஞான்றுளள இத் தமிழ்நாட்டினகண், நாறபுறமும நால் நிலங்களாற் சூழப்பட்டு இடையே பெரிதும் விரிந்து நீண்டு வேனிற்கொடுமை மிகுந்த அத்துணைப் பெரியதொரு மணல்வெளி எங்கேனும உளதோவென ஆராயின, அவ்வியல்பின தொனறு உளதென்பது புலனுகவில்லை. வெம்மை மிகுந்த நடுகோட்டிற்கு (Equator) இஞ்ஞானறைத் தமிழ்நாடு மிக எட்டியிருத்தலின அவர் கூறியதொரு வேனிற்காலக் கொடுமையும இஙகுப் புலனுகவில்லை. ஆகவே, தொல்காப்பியனார் கூறிய பெருமணல் வெளியும, அதனகண் உண்டாம வேனில் அழறசியும் நடுக்கோட்டை யடுத்த நிலப் பகுதியிலேதான் இருந்தனவாதல் பெறப்படும அந் நிலபபகுதி இஞ்ஞானறு இந்திய மாக்கடலின்கீழ அமிழந்தி நிற்பினும், தொல்காப்பியனார் இருந்த ஞான்று அது பெரியதொரு நிலப்பரப்பாய்க குமரி நாடெனப் பெயர்பெற் றிருந்ததென உணர்ந்துகொளக. அந் நிலபபரபபி னிடையே யிருந்த பெரும பாலைநிலமே அவரால் 'நடுவுநிலைத்திணை' எனச் சுட்டப்பட்டதாகும் என்பது.

அதுவேயுமனறித், தொல்காப்பியனார், "ஒட்டகம் அவற்றோடு ஒருவழி நிலையும்" (கஅ) எனனும் மரபியற்சூத்திரத்தில், 'ஒட்டகம்' என்னும் விலங்கினைக் குறிப்பிட்

1. தொல்காப்பியம், அகத்திணையியல், கூ-ஆஞ் சூத்திரம்.

டிருக்கின்றார். தமது காலத்திருந்த நூல்களிற் பெருவர வினவாய் வழங்கிய சிற்றுயிர்களின் ஆண் பெண் அவற் றின் பிளவுகளை எவவெச் சொற்களால் வழங்குதல் மரபோ அம மரபினை அவர் முறைபபடுத்திச் சொல்லுதற் கண் ஒட்டகம் எனனும் விலங்குமை அவரிருந்த காலத்து மக்களாற் பெரிதும பயன்படுத்தபபட்ட தொன்றெனபது தெறறென விளஙகா நிற்குமை. ஒரு பெரும் பாலை நிலத் தைச் சூழவுள்ள மக்களே அம மணல்வெளியை ஊடுருவிச் சென்று வாணிகம நடாத்துவர். அவ்வாறவர் அம மணல் வெளியை ஊடுருவிச் செல்லுதற்கே, அந்நிலத்தில் இயறகையே யுண்டாய உயிர்வாழும் ஒட்டகம் என்னும் விலஙகினை பயனபடுத்தா நிற்பர். இவ வுண்மை, இஞ ஞான்றை வட ஆபபிரிக்காவிலுளள சகாரா எனனும பெரும பாலைநிலத்தைச் சூழவுளள மக்கள ஒட்டகத்தின் உதவியையே கொண்டு வாணிகம நடாத்துமாறறால் நன் குணரபபடும. இவ்வாறு பாலைநிலதறகு இயறகையா யுளள விலங்காயப, பாலைநிலத்தைச் சூழவுறையும நாகரிக மக்களால் வாணிக வாழக்கைக்குப பெரிதும பயனபடுத் தபபடும ஒட்டகத்தைத் தொல்காப்பியனார் கூறுதல் கொண்டு, அவர் காலத்திற குமரிநாட்டினிடையே கிடந்த பாலை வெளியை, அதனைச் சூழ இருந்த பணடைத் தமிழ மக்கள ஒட்டகஙகளினுதவியாற் கடந்துசென்று வாணிகம நடாத்தினமை தெளியபபடும. இஞஞானறைத் தமிழ நாட்டில் அத்தகைய பெருமபாலை வெளியும, அதனகண் இயஙகும ஒட்டகமும இல்லாமையின, அவ விலஙகினைக் காட்சிபபொருட்டாகவனறி ஊர்தியாகப் பயனபடுத்துவார் யாருமில ரெனக. எனவே, ஒட்டகம எனனும் விலஙகும் அதனபெயரும பண்டைத் தமிழமக்கட் குரியனவே யல்லாமல் வடவாரியாக்கு உரியன ஆகாமையால், அவர் அவ் விலங்கின் பெயராய் வழஙகும் 'உஷ்ட்ர:' எனனுஞ் சொல், 'ஒட்டகம்' எனனுந் தமிழச் சொல்லின் திரிபாதல் துணியபபடும. இவ வொட்டகம எனனும விலஙகு தெறகே நடுக்கோட்டைச சார்ந்த வெய்ய பாலைநிலங்களி லன்றிக், குளிர் மிகுந்த வடநாடுகளில் உயிர் வாழ்வது அன்மை

யின், இது தெனஞட்டவர்க்கே யுரித்தாதல் திண்ணம. இங்ஙனமாகக் குமரிநாட்டிலிருந்த பெரும் பாலிநிலத்தையும, அதனூடுசென்று வாணிகம் நடாத்திய பண்டைத் தமிழர் அம மணல்வெளியைக் கடத்தற்குப பயனபடுத்திய ஒட்டகம' எனனும விலஙகையும ஆசிரியர் தொல்காப்பியனர் நன்கு குறிப்பிடுதலின, அவரும அவரியற்றிய தொல்காபபியமுங் குமரிநாடு கடல்வாயப படுதறகுமுன் இருந்தமை தேறறமாம. எனறிதுகாறும் தொல்காபபிய காலத்தைப பறறி யெழுந்த ஆராயச்சியின முடிபாகத், தொல்காப்பியங' குமரிநாடு கடல்கொளளபபடும்முன், அஃதாவது இற்றைககு நாலாயிரத்தைந்நூருண்டுகட்கு முனனும, அதற்கும முனனே பாரதபபோர நிகழந்த காலதது உடனிருந்த 'முரஞசியூர் முடிநாகராயர்,' 'பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி,' 'நெட்டிமையார்,' 'நெடுமபல் லியததனார' முதலான தகலச்சஙகப புலவர் சிலர்க்குமுன் அஃதாவது இற்றைக்கு ஐயாயிரத்து ஐந்நூறி யாண்டுகட்கு முன்னும் இயற்றபபட்ட மிகப் பழையதொரு தனித்தமிழ் நூலாதல் பெறபபட்டது. பெறவே, அது தகலச்சஙக காலத்து நூலாகுமே யல்லாமற், குமரிநாடு கடல்வாயப புக்கபின எழுந்த இடைச்சஙக காலத்து நூலாதல் செல்லா தென்பதுந தானேபோதரும. போதரவே, அதனை இடைசசங்ககாலத்து நூலெனற இறையனாரகப்பொருள் உரைப்பாயிரவுரைக்கூற்று ஆசிரியர் நக்கீரனார் உரைத்த தாகாமையும, அஃது உண்மை வரலாறு அன்மையுந் தாமே பெறபபடும. இறையனாரகப் பொருள் முகத்துளள 'நூறபாயிரவுரை,' 'உரைபபாயிரவுரை' எனனும இரண்டுள நூறபாயிரவுரை முற்றும் நக்கீரனாரே கூறியதாதலும், அதன்பிற் போந்த உரைப் பாயிரவுரை நக்கீரனாரால் உரைக்கப்படாமல் அவர்தம் மாணாக்கர் வழிவந்த பிறரொருவரால் உரைக்கப்பட்டதாதலும் பகுத்துக்காட்டி விளக்கியவழி, உரைப்பாயிரவுரையுட் போந்த வரலாற்றுக் குறிபபுகள மெயயோடு பொய்யும் இடைமிடைந்தனவாயிருத்தலைப் பகுத்துக் காட்டுவான் புகுந்து அதன்கண் மெய்யாவன இவை யெனவும் பொய்

யாவன இவை யெனவும் நிரலே இதுகாறுங் காட்டிவந்தன போக, எஞ்சி நிற்பனவுங் காட்டுகின்றும.

உசு. இறையனாரகப்பொருளுரை யாராய்ச்சித் தொடர்பு

இனி, இடைச "சங்கமிருந்து தமிழாராயந்தது கபாடபுரத்தெனபது; அக்காலத்துப போலும பாண்டிய னுட்டைக் கடல் கொண்டது" எனனுங குறிபபு உண்மை வரலாறு தெரிபபதெனறேயாம. குமரிநாடு கடல்கொண் டது சிறிதேதறக்குறையக் கி. மு. உ000-த்திலாமென்பதை மேலே சுசள-ஆம பக்கத்தில் விளக்கிக் காட்டினமாகலின, அப் பெருங கடல்கோளுகளுப பின பாண்டிமனன ரரசு ஓர் ஒழுங்குபெற்றுத் திருமபவுந் தமிழச்சங்கங கூட்டபபடு தறகு மூன்று நானகு நூற்றாண்டுகள சென றிருத்தல் வேண்டும. ஏனெனறால், இரண்டாங் கடல்கோள ஒன்று இலங்கையிற பாண்டுவாசான் அரசுபுரிந்த கி. மு. ஐந் தாம நூற்றாண்டிலும, மூனறாங் கடல்கோ ளொன்று கி. மு. மூன்றும நூறறாண்டிலும நிகழந்தமை இலங்கைத் தீவின் வரலாறறிற் குறிக்கபபட் டிருத்தலின இடைச் சங்கங, கி. மு. ஐந்தாம நூறறாண்டில் நிகழந்த கடல்கோளுடன முடிவடைந்திருத்தல் வேண்டுமாகலானும, இடைச்சங்கம நிகழந்த காலம ககஅ0-ஆண்டுகளாகுமென மேலே சுசஉ-ஆம பக்கத்தில் விளக்கிக காட்டினமாகலின் கிறித்து பிறப் பதற்குமுறசென ற அவ ஐந்நூறாண்டுகளோடு இவவிடைச் சங்க காலதததையுங கூட்டக் கி. மு. ககசுஅ0-ஆம ஆண்டை யடுத்து இடைச்சங்கந் தோனறியிருத்தல் வேண்டுமாகலா னும் என்பது. அற்றாயினும், மூனறாங் கடல்கோள நிகழந்த கி. மு. மூன்றும நூற்றாண்டையே இடைச் சங்கத்தின் இறு திக் காலமாய்க் கொள்ளலாகாதேதாவெனிற, கூறுதும: இரண்டாங கடல்கோள நிலபபரப்பை மிகுதியும் விழுங்கிச் சென ற தெனறாயின, அந் நிலப்பரப்பினகண் நடைபெறற சங்கமும் அதனோடு உடனழிந் திருக்கவேண்டுமாகலின் அது பின்னுங் கி. மு. மூன்றும நூற்றாண்டு வரையிலிருந்த

தெனக்கோடலாகாது. மற்று அக்கடல்கோள் அத்துணைப் பெரியதன்றுக, மூன்றுங் கடல்கோளே பெரியதொன்று மாயின் இடைச்சங்கங் கி. மு. மூன்றும் நூற்றாண்டிலே தான முடிவடைந்திருத்தல் வேண்டும்; அஃதெங்ஙன மாயினுங, கி. மு. ஐந்தாம் நூறாண்டுமுதல் மூன்றும் நூற்றாண்டுவரையிற சென்ற இருநூறாண்டுகளில் இரண்டு கடல்கோள நிகழ்ந்ததனை உற்றுக் காணுமிடத்து, இந் நிலவுலக அமைபபிற் பேரிடர் பயபபனவாகிய பெரு மாறுதல்களும பெருங குழப்பங்களும் அபபோது அதன் தென்பகுதியில் நிகழ்ந்தமை தெளியப்படும். அவ்வாறு அபபெருந் துனபநிகழ்ச்சிகள நடைபெறத் துவங்குதற்கு ஓர் அறிகுறியாகவே கி. மு. ஐந்தாம் நூறாண்டில் ஒரு சிறு கடல்கோள நிகழலாயிற்றெனக் கொளளினும, அச் சிறு கடல்கோளே யடுத்துத்தோனறிய பெருந் துனப நிகழ்ச்சியினிடையே இடைச்சங்கம இருந்ததாயினும அஃது அப்போது செவ்வனே நடைபெறறதாகாது. ஆகவே, இடைச்சங்கங் கி. மு. ஐந்தாம நூற்றாண்டில் ஒடுங்கிறறெனக் கொளளினும, அல்லதது கி. மு மூனறாம நூற்றாண்டில் ஒடுங்கிற்றெனக் கொளளினும ஈணடைக் காவதோர் இழுக்கில்லை. கி. மு. மூனறாம நூற்றாண்டில் அது முடிவடைந்ததெனக் கொளளின, கி. மு. உ000-த்தில் நிகழந்த முதறகடல்கோளுக்குப்பின ஐந்நூறாண்டுகள கழித்து இடைச்சங்கந் துவங்கலாயிற்றென று கொளளல் வேண்டும. இனி, அவ் விடைச்சங்க மிருந்து தமிழாராய்ந்த இடங கபாடபுரம எனற உரைத்தொடரிற 'கபாடபுரம்' என்னுஞ்சொல் வடசொற்றொடரா யிருத்தலானும, இடைச்சங்கம நடைபெற்ற அப பழையகாலத்தே அத் தகைய வடசொற்றொடர் வழங்கினமைக்குச் சான்று இல்லாமையானும, அக் 'கபாடபுரம்' எனனும் பெயர் வட மொழியில் வானமீகி இயற்றிய இராமாயணத்தின்கட் காணப்படுதலின் அவ் இராமாயணகதை இத் தமிழ்நாட் டின்கட் டெரியத் துவங்கிய கி. பி. முதல் நூற்றாண்டிற்குப் பின்னன்றி அதற்குமுன் அபபெயர் இங்கு வழங்குதலாகா மையானும் அச்சொற்றொடர் நக்கீரனர் எழுதியதாகாது.

அற்றேற் 'கபாடபுரம்' இருந்தது பொய்யோ வெனிற், பொய்யன்று; என்னை? அவ் வடமொழிப் பெயராற் கூறப் பட்ட அப் பழந்தமிழ் நகரம பண்டைநாளில் 'அலைவாய' என்னுந் தூய தமிழபபெயரால் வழங்கபபட்டதாகும். 'அலைவாய்' என்னுஞ்சொல் 'அலையையுடைய கடலை நோக்கும் வாயில்' எனப் பொருடந்து, அவ்வாயிலையுடைய பாண்டியனது தலைநகருக்குப பெயராயிற்று. இத் தூய தமிழ்ச்சொல்லின் மொழிபெயர்ப்பாகவே 'கபாடபுரம்' என்னும் வடமொழிப்பெயர் வான்மீகியாராற் குறிக்கப் பட்டது. 'கபாடம்' என்பது 'வாயிற்கதவு' எனவும, 'புரம்' என்பது நகரமெனவும பொருடருவனவாகும். "பொன நிறைந்ததாயும, அழகுடைத்தாயும, முத்துமணிகளால் ஒப்பனை செய்யப்பட்டதாயும, பாண்டியர்க்கு இசைந்த தாயுமுள்ள கவாடத்தை வானரவீரர்காள பார்க்கக் கடவீர்கள்"[1] என்று சுக்கிரீவன கூற்றுகவைத்து வான்மீகியார் கூறுதல் காண்க. இவ் 'அலைவாய' நகரிற பழந் தமிழத் தெயவமாகிய முருகனகோயி லிருந்தமை "அலைவாய்ச் சேறலும நிலைஇய பண்பே" என்று நக்கீரனார் 'திருமுருகாறறுப்படை'யிற் கூறுமாற்றால் அறியப்படும. பழைய அலைவாய் நகர் கடல்கொண்டழிந்தபின், அந் நகரைக் கவர்ந்த கடலின்கரைக்கண் உளள 'திருச்செந் தூரில்' அம முருகனகோயில் அமைக்கப்படலாயிற்றென்க. எனவே, கபாடபுரத்தினகண் இடைச்சங்கம இருந்ததென் னும் உரை நக்கீரருரை யனறாயினும், அதிற் போந்த வரலாறு மெய்வரலாறேயாமென ஓர்க.

இனிக், கடைச்சங்கம நடைபெற்ற ஞான்று பாண்டி நாட்டிற் பன்னீரியாண்டு மழைவளங குன்றிய பெரிய தொரு வற்கடந்தோன்ற மனனுயிர்கள் மடிந்தனவாகலின், அச் சங்கம அவ்வற்கடம் நீங்குமவரையிற் கலைந்து அது நீங்கியபின் திருமபக் கூடிறறென அவ்வுரைப்பாயிரங் கூறும் வரலாறு உண்மையாகவே காணபபடுகினறது.

---

1. செந்தமிழ், எழாந்தொகுதி, மூன்றாம்பகுதி, கஉஅ-ஆம் பக்கம்.

பாண்டிநாட்டைவிட்டு வேறு சேயநாடுகளுக்குச் செல்லாத நம் தமிழாசிரியன்மார் பன்னீரியாண்டு உயிர்கோ வருத்திய அவ வறகடத்தைத பாண்டிநாட்டினகண் நிகழ்ந்த தொன்றுக வைத்துரைபபினும, அக் கொடிய வற்கடஞ் சேய்மைக்கண்ணுளள வடநாடுகளிலும அப் பன்னீரி யாண்டு நிகழ்ந்ததெனபது வடமொழியிலுளள சமண் நூலாராய்ச்சியால் இனிது புலனுகின்றது. கிறித்து பிறப் பதற்குமுன் மூன்றும நூறறாண்டிலிருந்த 'பத்ரபாகு' எனனுஞ் சமண்முனிவர் காலத்தில் அக்கொடிய வற்கடம் பன்னீரியாண்டு நிகழ்ந்ததென வடநாட்டின்கண் இயற்றப் பட்ட சமண் நூலொன்று கூறுதலால்,[1] அஃது அஞ் ஞான்று வடநாடு தெனனுடு முழுவதூஉம பரவியிருந்தமை புலனும. கி. பி. இரண்டாம நூறறாண்டில் இயறறப்பட்ட தாகிய மணிமேகலையிலும்,

"பன்னீ ராண்டு பாண்டிநன் னுடு
மன்னுயிர் மடிய மழைவளம் இழந்தது." (கச, ஙஙி-ஙசு)

என இவ் வற்கடகாலங் குறிப்பிடப்பட் டிருத்தலின், இது மணிமேகலை காலத்திறகுப் பல நூற்றாண்டுகட்கு முன் னமே தென்னாட்டின்கண்ணும நிகழ்ந்தமை ஐயமின்றித் துணியப்படும். இனிச், சமண்முனிவரான 'பத்ரபாகு' என்பவர் கி. மு. மூன்றும நூற்றாண்டின் இறுதியிலிருந் தவரென்பது வரலாற்று நூலாசிரியரால் துணியப்பட் டிருத்தலின், அம முனிவர்காலத்தில் நிகழ்ந்ததாகிய அக் கொடிய வற்கடமுங கி. மு. மூன்றும் நூற்றாண்டின் இறு தியில் நிகழ்ந்தமை தெளியபபடும். அவ்வற்கடகாலத் திற்கு முன்னிருந்த கடைச்சங்கம், அவ் வறட்சிக் காலத்திற் கலைந்ததென்பதனுற், கி. மு ஐந்தாம நூற்றாண்டின் ஈற்றில் நிகழ்ந்த இரண்டாங் கடல்கோளுடன் ஒடுங்கிய இடைச்சங்கத்திற்குப்பின் ஓரைம்பது ஆண்டுகளா வது கழித்துத்தான் கடைச்சங்கங் கூட்டப்பட்டதாகல் வேண்டும. மூன்றுங கடல்கோளும பனனீரியாண்டு வற்

1. Introduction to Jaina Sutras by Dr. Hermann Jacobi, vol. I, p. xliii.

கடமும் ஒருங்குதோன்றிய பேர்இடரான காலத்திற் கலிந்த கடைச்சங்கத்திற்குப்பின், அவ்விடர் நீங்கிய காலத்தில் மீண்டுங் கூட்டப்பட்டதாகிய சங்கத்தை நானகாஞ சங்கமென்றுரையாமற், கடைச்சங்கமே யென றுரைத்த லெனனேயெனின; கடைச்சங்கம் அவ்வாறு கலிந்ததும் மீண்டு கூட்டப்பட்டதும ஒரரசனது ஆட்சிக் காலத்திலேயே நிகழந்தனவென்று அவ் வுரைபபாயிரமே தெளிவாகக் கூறுதலால், ஒரரசனலேயே கலித்துக் கூட்டபபட்ட அது வெவவேறு சங்கங்களாகாமல் ஒரே சங்கமாகவைத்து வழங்கபபடுவதாயிற் றென்க. இவ் வாற்றல், மூனறும்முறை தோன்றிய கடல்கோள இலங் கைத் தீவைசசோந்த நூறறுயிரங் கடற்றுறைப பட்டினங் களையும், தொளளாயிரததெழுபது செம்படவர் குப்பங் களையும, நானூறறெழுபது முத்துச்சலாபத் தூராகளையுங் கொளளைகொண்டு போயினும,[1] அஃது இத் தமிழ்நாட்டின தெனபகுதியை அத்துணை மிகுதியாய வாயப்பெய்து கொளளவில்லை யென்பதூஉம, அதனல் அபபோதிருந்த பாண்டியவேந்தன் தானும் தன் நாடும அழிந்துபடாமற கொடிய அவ வற்கடத்தினல் மட்டும் தனபுறறு அச் சங்கத்தை அது நீங்குங்காறும் கலித்து அது நீங்கியபின் மீண்டுங் கூட்டினு னெனபதூஉம, அதுபற்றியே அம மூன்றுமசங்கங கடைச்சங்கமென ஒரு பெயரே பெறலாயிற றெனபதூஉம அறியப்படும். மறறுத், தலைச்சங்க இடைச் சங்கங்களோ முதற் கடல்கோள் இரண்டாங் கடல்கோள களால் வாயப்பெயது கொளளபபட்ட பெரிய நாடுநகரங்கள் மன்னர்கள் மக்களோடு ஒருங்கழிந்துபோனமையின், அவறறை யொருதொடர்புபடுத்துவார் இல்லையாய ஒழிய, அவை ஒரு சங்கமென ஒன்றாய வைத்து வழங்கப்படா வாயினவென்பது. இனி, இடைச்சங்கம் அழிந்துபட்ட கி. மு. ஐந்தாம நூற்றாண்டின இறுதிக்குப்பின் அதன் இடையிற றுவங்கிய கடைச்சங்கங் கி. மு. மூன்றும் நூற் றாண்டின முதலில் ஒருகாற் கலிந்து மீண்டுங்கூடிப், பின்

1. See P. Arunachalam's 'Sketches of Ceylon History,' pp. 8, 9.

கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் ஈறுவரையில் நடை பெற்று முடிவெய்தியதாகலின் அதன் முழுக்காலவெல்லை அறுநூற்றைமப தாண்டுகளே யாகினறன. மேலே சுசஉ-ஆம பக்கத்திற் கடைச்சங்கம நடைபெற்ற முழுக் காலவெல்லை கூஅ0-ஆண்டுகளென்று கணக்குச் செய்யப் பட்டதாயினும, இப்போது ஆராய்ந்து பெறப்பட்ட முடி பினுல், அதன் முழுக்காலவெல்லை சுநு0-ஆண்டுகளேயாதல் தெளியற்பாற்று; அற்றேறல், இது முன்னதனேடு முர ணுதோவெனின் முரணுது; என்னை; ஆண்டு அரசர் ஒருவர்க்கு ஒரு குத்துமதிப்பாக இருபதாண்டு வைத்து நாற்பத்தொன்பதினமர்க்கும கூஅ0-ஆண்டுகள கணக்குச் செய்யபபட்டன; ஆனல், அதனை நடாத்திய அவ் வரசர் நாற்பத்தொன்பதினமரிற பலர் குறைந்த வாழ்நாளுடைய ராய்ச் செல்லுதலும் இயல்பேயாகலின், அக் கணக்கு இப்போது சுநு0-ஆண்டுகளில் வந்து ஓர் உறுதிப்பட்டு முடியலாயிறறென்க.

இன்னும, 'இறையனுரகப்பொருள்' வந்த வரலாறு தெரிகரும உரைபபகுதியும ஆசிரியர் நக்கீரனுர் உரைத்த தாகாது. என்னை? அதனகட் காணபபடுங் குறிப்புகள பல பொருந்தாதனவாயிருத்தலின். அப பொருந்தாக் குறிபபுகள யாவையோவெனிற் காட்டுதும: "பனனீரி யாண்டு வற்கடஞ செனறபின், மழை மிகபபெய்து நாடு செழித்தமையிற், கலைத்த கடைசசங்கத்தைத் திரும்பக் கூட்டலுறும பாண்டியன 'நூல்வல்லாரைக் கொணர்க' என ஒறறரை எல்லாபபக்கமும போக்க, 'எழுத்ததிகார முஞ சொல்லதிகாரமும யாபபதிகாரமும் வல்லாரைத் தலைப்பட்டுக் கொணர்ந்து, பொருளதிகாரம வல்லாரை எங்குந் தலைப்பட்டிலேமெனறு வந்தார்.' அதனுல் அரசன் கவலை பெரிதுடையனுக, அவற்கு இரங்கி ஆலவாயமர்ந்த அவிர்சடைக் கடவுள அறுபது சூத்திரங்களாலாய இச் சிறுநூலை ஆக்கி, அதனை மூனறு செப்பேட்டிலெழுதித் தான் அமர்ந்த இருக்கையின்கீழ இட, அதனைக் கோயிற் பூசகன் கண்டெடுத்துக்கொணர்ந்து அரசன்பாற் காட்ட, அதனை அரசன் தன்பால் மீண்ட அந் நூல்வல்லார் கைக்

கொடுத்து, அதற்கு உரைகாண்கவென, அவரும் அதனை ஏற்றுப்போய் உரைகண்டுழி, ஒருவருரைத்தவுரை மற்றொருவ ருரைத்தவுரையொடு மறுதலைப்பட்டு, உண்மைப் பொருள் இதுதான எனபது துணியபபடாதாயொழியப், பினனர் இறைவனருளாற் பெற்ற உருத்திரசன்மரால் நக்கீரனுரைத்தவுரையே மெய்யுரையெனத் துணிந்தார்." என்பது இந் நூல் வரலாற்றின் சுருக்கமாகும். இவ் வரலாறுகொண்டு, பனனீரியாண்டு வற்கடம நேர்தறகு முன நடைபெற்ற கடைச்சங்கத்திருந்த புலவரனைவரும் பொருளதிகாரம் வல்லுநராயிருந்தன ரெனபதூஉம, அவ் வற்கடத்தினபிற் றிருமபக் கூட்டப்பட்ட கடைச்சங்கத்திற் போந்த புலவரே பொருளதிகாரவுணர்ச்சி நன்கு வாயாதவ ராயினரென்பதூஉம் அறியபபடும. பனனிரண்டு ஆண்டு கட்குமுன கலிந்து பினனர் அது திரும்பக் கூட்டப்படு தற்குள முனனிருந்த புலவரனைவரும மடிந்து போயினு லன்றிப் பொருளதிகார வுணர்ச்சி இல்லையாயொழிதல் ஏலாதன்றே! திரும்பக் கூட்டபபட்ட அக் கடைச்சங்கத் திற் பொருளதிகாரம வல்லார் எவரும இருந்திலராயின, அகபபொருளிலகணமாகிய 'இறையனாரகபபொருளைப்' பாண்டிய மன்னன அவர் கைக்கொடுத்து அதற்குப் பொருளகாணச் சொல்லுதலும, அவருள ஒருவராகிய நக்கீரனர் அதறகு மெயயுரை கண்டாரென்றலும யாங் ஙனம பொருந்தும? முன்னரே பொருளதிகார வுணர்ச்சி நன்கு வாயாதவராயின நக்கீரனர் அதறகு அதனுணை விழுமியதொரு விரிவுரை யுரைத்து அகபபொருளிலக்க ணங்க ளெல்லாம் ஒருங்கெடுத்துத் தெளித்தல் யாஙனம் கைகூடும? பொருளதிகார வுணர்ச்சி யிலராயின, தொல் காபபியப் பொருளதிகாரத்திலிருந்து பல சூத்திரஙகளைத் தமதுரையில் நக்கீரனர் எடுத்துக் காட்டி விளக்குத லெனனை? என்று இவ்வாறெல்லாம் தடை நிகழ்த்து வார்க்கு, அவ் வரலாறு உண்மையனருதல் தெற்றென விளங்கா நிறகும.

மேலும, இறைவனே அந்நூலை இயற்றித் தந்தா னென்பதும் நம்புதற் குரித்தன்றும. மக்களறிவு விளங்கு

தற்குக் கருவிகளான பல அமைதிகளை வகுத்து, அவ் வாற்றுன் அவரறிவினுண் ணினறு அதனை யியக்கி, அம முகத்தால் அமமக்கடாமே பல அருமபெரு நூல்களையும் புதுமைகளையும் ஆக்குமாறு இறைவன் புரிந்து வருதலைக் காண்கினருமே யனறி, அவன்ருலே நூல்களையும புதுமை களையும ஆக்குதல் யாண்டுங் கண்டாமில்லை. மேனாட்டு வெண்மக்கள நிலத்திலும் நீரிலும வானிலுஞ செல்லு மாறு அமைத்திருக்கும பொறிகளின் புதுமைகளைக் காண் பவர்க்குக், கடவுளன்றி மக்களும் இஙஙனம இவற்றைச் செய்தல் இயலுமோ என்று இறும்பூது எழாநிற் கும். இத்தகைய புதுமைகளெல்லாம மக்களறிவினுற் செய்யப்படுவனவாயிருக்க, இவற்ருெடொத்த அருமைப பாடு இலவாய், மக்களியற்கை உலக வியறகைகளை யுள்ள வாறு ஆராயந்து விளக்கும ஆராய்ச்சி யொன்றேயுடைய 'இறையனரகபபொருள்' போனற நூல்கள் மட்டும இறை வனல் ஆக்கப்பட்டன வென்றல் ஒரு சிறிதும நமபற்பால தனறும. ஆகவே, பொயயும புரட்டும நிறைந்த கதை நூல்களையுங்கூட இறைவன வாயமொழியெனக் கூசா துரைக்கும பிற்காலத்துப் பொய்யர் மலிந்த புராண காலத்திலே, இக் கதையுங் கட்டிவிடப்பட்டதொனறுகல் வேணடுமேயல்லாது, பொயயா நாவினரான நக்கீரர் முதலான சஙகப்புலவர் காலத்தில் இக்கதை வழங்கிய தாகாது. தொல்காபபிய பொருளதிகாரததிலுளள 'கள வியல்,' 'கற்பியல்' எனபன மிக விரிந்து கிடதத்தலின, அவற்றைச் சுருக்கி அறுபது சூத்திரத்தில் ஒரு சிறு நூலை எவரோ ஒரு சிறந்த புலவர் இயறறி, அதனைப் பனையேட்டிற் பொறித்துவைப்பிற் செல்லரித்துவிடுமென அஞசிச், செபபேட்டிற் பொறித்துவைத்தா ராகல் வேண்டும். அஃது ஆலவாய்க் கோயிலில் இறைவன் திரு வுருவத்தின்கீழ் வைக்கப்பட்டிருந்ததனை உற்றுநோக்கு மிடத்துப், பண்டொருகாலத்திருந்த அக் கோயிற் பூசக ரொருவராதல், அல்லதவர்க்கு நேயரான பிறரொருவ ராதல் அந்நூலை யியற்றினராகல் வேண்டும். பினனர் அஃது இறைவன் திருவுருவத் தவிசின்கீழிருந்து எடுக்கப் பட்ட ஏதுவினுல், அஃது இறைவனுலேயே இயற்றப்பட்ட

தாகுமெனக் கருதிவிடலானூர். பாண்டியனது கவற்சி கண்டு இறைவனோ யியறறினனையின, உடனே வெளிப படுக்கப்படுவ தாகிய அந் நூலைச செல்லுக் கஞ்சிச் செப பேட்டிற் பொறிக்க வேண்டுவது இனறும செபபேட்டிற பொறிக்கபபட்டதெனபது கொண்டே அது பண்டிருந்த புலவரொருவரால் ஆக்கப்பட்ட தென்பது போதரும.

இஙனனாங கண்டெடுக்கபபட்ட இறையனாரகப பொருள எனனும நூல திட்பநுட்பஞ செறிந்து, பரந்த தொல்காப்பியப பொருளிலக்கணச் சுருக்கமாய, அவ விலகணப பொருளைத் தெளித்துரைககும பெறறி கண்டே, பாண்டிமனனன அதனை வழஙகுவித்தற பொருட்டு அதறகொரு நல்லுரை காணுமாறு புலவரை ஏவினன. ஒரு நூலுகுப பலா உரை வகுககுங்கால், அப பலருரையும ஒன்றோடொன றொவவாமலிருததல் எஙகும நிகழும் இயறகை நிகழச்சியேயாம. இனி, அவ வுரைகள பலவறறுளளுஞ சிறந்ததொனறனைத் தெரிந் தெடுத்தல பேரறிவு வாயந்த சானறோக்கு எளிதிற கைகூடுவதேயாகவும, இதன பொருட்டுத் தெயவத் தன்மை மிக்க ஓர ஊமைபபிளைஞாயி னுதவியைத் தேடினு ரெனறல், பினவந்த புராண காலதததவர் கடடிவிட்ட கதையேயாகுமல்லால், உண்மைப பேரறிவுசானற சஙகப புலவர குழாத்திறகுச சிறிதும அடாது. அப புலவர பெருமககள தமமுள இகலாமைப பொருடடுத், தமமாற பெரிது பாராட்டபபட்ட 'உருத்திரசனமர' எனனும நடு நிலைதிறமபாப புலவரபெருமானை அவறறுள விழுமிய வுரை இதுவெனத் தேறறும நடுவராக எல்லாரும ஒருப படடு வைத்து, அவர தமமால் நககீரனுருரையே அந் நூலுககு மெயயுரையெனக கணடாரெனக. இவ வுண்மை நிகழச்சியே பிறபோந்த புராண காலத்தவரால் திரித் துரைக்கபபட்ட தாகலின், இவவுரைபபாயிரப பகுதி நகீர னுருரைத்த தன்றென்பது ஒருதலை.

இனி, இவ 'இறையனாரகப பொரு'ளுககு நக்கீரனர் தாம உரைத்த உரையைத் தம மகனர் கீரவிகொறற

ஞாக்கு விளக்கிச சொல்லி அதனை அவாகைக் கொடுத் தார; கிரவிகொறறனுர் அங்ஙனமே அதனைத் தம மாணக்கா தேனூர் கிழார்க்கு விளக்கிச் சொல்லி அதனை அவர்கைக் கொடுத்தார; அவா அதனைப படியங கொற்ற ஞாக்குக கொடுத்தார; படியங்கொறறனுர் செல்வத் தாசிரியர் பெருஞசுவஞாககும, அவா மணலூராசிரியா புளியங்காயப பெருஞசேநதனுர்ககும, அவர் செலலூ ராசிரியர் ஆலடைப பெருங குமரனுர்ககும, அவர் திருக குனறத தாசிரியாககும, அவா மாதவளனூ இளநாகனுர்க கும, அவா முசிறியாசிரியா நீலகணடனுாககுமாக அதனை விளக்கி யுரைதது அவவுரையினை இஙஙனம வழிவழியே வழங்குவிததாா எனனும உரைபபகுதியும நககீரனூ உரைதததாகாது, எனனை? நககீரனூ தமகுப பினவந்த பததுத தலைமுறைப புலவரை முனனெடுதது ரைத்த லாகாமையால. ஒரு தலைமுறைககு முபபதாணடு வைத துக கணககுச் செயயின், இப பதினமாகும முந்நூருணடு களாகும. இறுதிககண் நினற முசிறியாசிரியா நீலகண்ட னுர் ஆசிரியர் நக்கீரனுர்க்கு முந்நூருண்டு பிறபட்டு வந்தோராகையால, அவரே இப பத்துத் தலைமுறை கூறும உரைப பகுதியினைச் சேர்த்தாராகல் வேண்டு மெனபது.

மேலும், பனனிரியாண்டு வற்கடம நிகழந்ததும, அது நிகழந்த ஞானறு கடைசசஙகங கலலகபபடடு அது நீஙகியபின திருமபக கூட்டபபட்டதும உண்மையேயாயி னும, அவவாறது பெயர்த்துங கூட்டபபடடுழி 'இறையனு ரகபபொருள' கணடெடுகபபட்ட தெனறலும, அபபோ ததறகு நககீரனுர் முதலாள ஆசிரியர் உரைகண்டா ரெனற லும மெயயாகா. ஏனெனில், அவ வறகடமுங கடைச் சஙகங கலலதுக கூடடபபட்டதும மேலே காட்டியவாறு நிறுத்து பிறபபதறகு இருநூறறைமபதாணடுகளின முன நிகழந்தனவாகும; மறறு, ஆசிரியர் நககீரனுரோ கிறிதது பிறந்த முதல் நூறருண்டின் முறபகுதியிலிருந்தோராதலை மேலே நிஎகூ-ஆம பகததில் விளககிகாட்டினோம. தமது உரை அரங்கேறியது உக்கிரப்பெருவழுதியின் அவைக்

களத்திலேயாம எனறு நக்கீரனாரே கூறுதலாலும, அவ் வுக்கிரப் பெருவழுதி யென்பான் 'காவிரப்பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதியே' யாவனெனா மேலே நிகூஉ, நிகூஉ-ஆம பக்கங்களிற காட்டபபட் டிருத்தலாலும, இவ்விருவர் காலமுங கி. பி. முதல் நூறறாண்டிறகுமேற செல்லாமை யாலுங கி. பி. முதல் நூறறாண்டில் நிகழந்த இந் நிகழச்சி களைக், கி. மு. மூனறாம நூறறாண்டில் நிகழந்த வறகட காலத்தை யடுக்கவைத்துரைக்கும அவவுரைப பகுதி பெரியதொரு தலைதடுமாறறத்தை விளைகக காண்டலின, அது பிறகாலதததவர் எழுதி நுழைத்ததே யல்லாமல் நக்கீரனார் உரைதத தனறெனா ஓர்க. இவ்வாறாக, ஆககியோன பெயா முதலிய நூறபாயிர வுறுபபுகள பதினெனறனையும விளகக்கிச் சொல்லும நககீரனாரது பாயிர வுரைக் கிடையே மடுகபபட்ட உரைபபாயிரவுரை, நக்கீரனாதம மாணாககா மரபில் வந்த பினனோயோா ஒருவராற சேர்கபபட்டதாதல் தெளிந்துகொளக. "அது பாயிரத்துளளே உரைததாம" எனா நக்கீரனா தமதுரையிற் குறிபபிட்டவை, தாம உரைத்த நூற்பாயிரவுரையிலுளளனவறறையே சுட்டக காண்டுமனறிப, பிறர் அதனிடையே செருகிய உரைபபாயிரததி லுளளவறறையல்லாமையால், நககீரனார்தம அவ் வுரைக்குறிபபுக கொண்டு பாயிரவுரை முறறும நக்கீரனாரே யெழுதியதா மென்றார் கூறறு, அவ வேறறுபாடுகளைப பகுத்தறிய மாட்டாரதங கூறறாகுமாவாறு கண்டுகொளக; இதனை முன்னரும உரைத்தாம.

இனி, முதறசூத்திர வுரையினிறறில் 'எனமனார்' எனபதறகுச் சொனமுடிபு கூறிய உரைபபகுதியும நக்கீரனாரைததனறெனபது மேலே கூஉ-ஆம் பக்கத்தில் விளககிகாட்டினாம; அஙகே அதனைக காண்க.

இனி, இறையனாரகபபொருட் சூத்திரஙகளுககு நககீரனார் உரைத்த உரைக்கிடையே அவாதமாமால் மேறகோள்களாகக் காட்டபபட்ட செயயுட்கள, "அக நானூறு,' 'ஐஙகுறுநூறு,' 'குறுந்தொகை,' 'நற்றிணை,'

'கலித்தொகை,' 'கூத்தநூல்,' 'திருக்குறள,' 'காக்கை பாடினியம,' 'தொல்காபபியம' முதலான தமிழ்ச்சங்க நூல்களினின்று எடுக்கபபட்டன வாகும. அகநானூற்றி லிருந்து எட்டுச் செயயுட்களும, ஐங்குறுநூற்றிலிருந்து மூனறு செயயுட்களுங, குறுந்தொகையிலிருந்து பதினெட் டுச் செய்யுட்களும, நறறிணையிலிருந்து பனனிரணடு செய யுட்களுங, கலிததொகையிலிருந்து இரண்டு செயயுட் களுங, கூத்த நூலிலிருந்து ஒரு செயயுளுங, திருக்குறளி லிருந்து ஐந்து செயயுட்களுங, காககை பாடினியத்தி லிருந்து ஒரு சூத்திரமும், தொல்காபபியத்திலிருந்து மூபபத்திரண்டு சூத்திரங்களும, பெயர் தெரியாத ஏனைப பல பண்டை நூல்களிலிருநது நாறபதது தாறு செய்யுட் களும ஆக நூறறிருபத்தெட்டுச செயயுட்கள அவவுரைப பொருளை நனகு விளக்குதறகு மேறகோளகளாக அவர் தமமால் எடுத்துக்காட்டபபட் டிருககினறன. இஙஙனங காட்டபபட்ட இப பழந்தமிழப பாகளே உரைபபொருளை மாணகனை இனிது தெளிந்து கொளளுதறகுப போது மாவனவாம; இவறறின வேறுக மேலும பல செயயுட்களை யெடுத்துக் காட்டுதல், வேண்டாகூறல் மிகைபடக்கூறல் கூறியதுகூறல் எனனுங குறறங்கட் கிடனுதல் அவ்வுரை மேறகோளகளை நுணுகி யாராயவார்க்குத் தெறறெனை விளஙகும. இதறகுச சானறாக ரண்டு ஒன்றெடுத்துக் காட்டுதும: எழில்நலங கிளர்ந்த ஒரு குமரிபாற காதல் கைமமிக்கு மெலிந்து வந்த தன தலைமகளை நோக்கி அவன பாஙகன் அவறகு உறறதுவினவ, "நெருநல் இவ் வகை யார் ஒருவரைக் கண்டேறகு எனனுளளம புளளத்துவழி வெளளமபோல ஓடி இவவகைத் தாயிறறெனறு சொல் லும; அதறகுச் செய்யுள," (கூ-ஆஞ் சூத்திர உரை),

"சிறுவெள் ளரவின் அவ்வரிக் குருளை
கான யானை அணங்கி யாஅங்கு
இளையள் முளைவாள் எயிற்றள்
வளையுடைக் கையள்எம் அணங்கி யோளே."

(குறுந்தொகை, ககக)

இதனகட் போந்த உரைக்கு எடுத்துக்காட்டிய இச் செய்யுளும மறறெருரு குறுந்தொகைச் செய்யுளும உரையாசிரியன கூறிய பொருளை விளக்குதறகுச் சாலுந் தனமையவா யிருககினறன. இவவா றிருபபவும, மேற் காட்டிய குறுந்தொகைச் செயயுட் பொருளையே கொண்ட "அளையா ரரவின குருளை அணஙக," "அலையாா கழன மனனர்," "பொரு நெடுந்தானை பபுல்லார் தமமை" என மேலும மூனறு செயயுட்கள கூறியது கூறலாய் எடுத்துக் காடடபபட்டிருககினறன. தாம எடுத்துககாட்டிய குறுந் தொகைப பாக்களினுலேயே இனிது விளஙகும அப பொருளுக்கு நக்கீரனர் மேலும பல செயயுட்களை யெடுத்துக் காட்டிக கூறியதுகூறல் மிகைபடக்கூற லென்னுங குறறஙகளுட் படுவாரல்லர். ஆசிரியா நககீரனர் இத் தகைய குறறஙகளுட்படும நீரரல்லர் என்பது, அவர்மிக நுணுகி யாராயந் தெழுதும இவ வுரையில் ஒரு சொல்லாயினும வேண்டா கூறலாய நில்லாமல் எல்லாம ஒனரோடொனறு தொடர்புறறு ஒனறறகொனறு இனறியமை யாதனவாய நிறறலை உறறுநோக்குவார்க கெல்லாம னகு விளஙகும. இஙஙனமே தாஙகூறும உரைபபொருளகட்கு அவர் மேற்கோளகளாக எடுத்துக காட்டிய பழந் தமிழபபாட்டின பொருளையே நுதலும பலப்பல கட்டளைக் கலித்துறைப பாக்கள ஆஙகாஙகு வேண்டா கூறலாயச் செருகப்பட்டிருததலை ஆராயந்து காணவல்ல அறிவு மதுகை யுடையார, அக கலித்துறைச் செய்யுட்களும அஙஙனமே 'சிலபபதிகாரஙு' காலல்வரியினின் றெடுத்துக் காட்டப்பட் டிருக்கும ஏழு செயயுட்களும நக்கீரனராற் காட்டப்பட்டன ஆகாமையினைத் தெறறென அறிந்து கொளவர். மேலும, இக் கட்டளைக் கலித்துறைபபா நககீரனா இருந்த கி. பி. முதல் நூறறாண்டில் வழங்கிய தூஉம அன்று; அது முதனமுதல் வழஙகத் துவஙகிய தெல்லாஙு கி. பி. இரண்டாம நூறறாண்டின் இறுதிக்குப பினனரேயாம, கி. பி. மூன்றும நூற்றாண்டிற்கு முற்பட்ட பழந்தமிழ நூல்களில் ஓரிடத்தாயினும் இக் கட்டளைக் கலித்துறைப பாவினைக் காண்டல் இயலாது. ஆகவே,

வேண்டா கூறலாய இவ வுரையினகட் போந்த கட்டகீக் கலித்துறைச் செயயுட்கள அத்துணையும, நக்கீரனுர்க்குப பல நூற்ருண்டுகள பிறபட்டுவந்த ஒருபுலவராற செயது சேர்க்கபபட்டனவாகுமே யல்லாது, நகீரனரால் எடுத்துக் காட்டபபட்டன ஆகாவெனறு தேர்ந்து கொளக.

அறமேற லஃதாக, மாணிககவாசகப பெருமான கி. பி. மூனறும நூறறுண்டில் இருந்தனராயின, அவா அருளிசசெயத 'திருச்சிறறமபலகோவையா'ரில் அகப பொருட்டுறைகளை விளகுங கட்டகீக் கலித்துறைச செயயுட்கள மலிந்துகிடக்கவும, அவைதமமை விடுதது அவ வகபபொருட்டுறைகளையே நுதலும வேறு முந்நூற றிருபத்தொன்பது கட்டகீக் கலித்துறைச் செயயுடகளைப புதியவாயப படைத்து, அவறறை அப் பினவந்த புலவர் அவ விறையனரகபபொருளுரையி னிடையிடையே செருகி விட்ட தெனனேயெனிற, கூறுதும: இக கடடகீக் கலித் துறைச செய்யுட்கள முந்நூறறிருபத் தொனபதிலும புகழந்துபாடப பெறுவோன ஆண்மைமிகக ஒரு பாணடிய வேநதனே யாவன; அவ வேநதன பெயாகள: உசிதன், பராங்குசன், பஞசவன, பூழியனமாறன, நெடுமாறன, அரி கேசரி, வரோதயன, விசாரிதன, அதிரியன, நேரியன, வாலவனமாறன, இரணந்தகன, சத்துருதுரந்தரன், விசய சரிதன, கலிமதனன முதலிய பலவாகச சொல்லபபடு கின்றன. அவன பாழி, விழிஞம, கோட்டாறு, ஆறறுக குடி, பூலந்தை, சேவூர், நறையாறு, கடையல், நெல்வேலி, வலலம, மணறறிமஙகை, வெணமாதது, களத்தூர், நாட்டாறு, நெடுங்களம, குளந்தை, சஙகமஙகை, வாட்டாறு, மேற்கரை முதலான பத்தொனபதூர்களில் நடந்த பெரும போர்களிற சேரமனனை ஞெருவனே அடுத்தடுத்து வெனறமை இக் கலித்துறைச் செய்யுட்களிற பலகாலும் உயர்த்துச் சொல்லபபடுகினறது. இவ வாற்றல் இப பாண்டிவேந்தனுக்கு, அவனகாலத் திருந்த சேர மனன ஞெருவனே பெரும் பகைவனு யிருந்தமை அறியப்படும். ஈதிங்ஙனமாகவுங, "கோடன மலர்ந்து" என்னும கூஉங-

ஆஞ செய்யுளிற் 'பொன்னி நாடன' எனனும ஒரு சொற றொடா காணப்படுதல் கொண்டு, அவனகாலத்துச் சோழ மனனனெருவனேயும இவன வென்றுகொளப பொருள பண்ணினருமு உளா.[1]

"பாழிவென்ற
ஆடல் நெடுங்கொடித் தேர்அரிகேசரி அந்தண் பொனனி
நாடன் பகைபோல் மெலிகின்ற தென்செய்ய நனனுதலே."

எனப அச் செயயுளிற போந்த அடிகள 'பாழியெனனும ஊரிற போாகளதை வெறறிகொணட ஆடுதலையுடைய நீணடகொடிக கட்டிய தேரினையுடைய அரிகேசரி' எனபமும, 'அழகிய குளிரந்த காவிரியினையுடைய நாட்டுகருத் தலைவன' எனபமும, 'அத்தகைய தலைவனருப பகையாயினர் மெலிவடைதல்போலச செவவிய நனனுதலையுடைய இந நங்கையும மெலிவடைதலெனனை?' எனபமும பொருடரு தலின, 'அரிகேசரி,' 'பொனனிநாடன' எனனும இரு பெயரும ஓரரசன மேலவாயே வருதல் வெளளிடை மலை போல விளஙகறபாறறு. இச செயயுளிற குறிபபிடபபட்ட பாணடி மனனனை தமபி பாண்டி நாடடுககேயனறிச சோழ நாடடுககுந தலைவனுயிருந்தமெனனும அத துணிவேயே இதனகட பெறபபடுகினறதல்லாமல், இவன சோழ மனனனை வெனருவெனபதும அதனுற பெறபபடவில்லை. சோழநாடடுககுந் தலைவனெனறமையாலோ அது பெறப படுமாலெனின, அஞஞானறைச சோழ மனனறகு அரசுக குரிய புதல்வன இல்லையாய்ப புதலவியொருதனியே இருந் தனளாயின, அப புதல்வியை மணந்துகொண்ட முறை யால் அப பாணடிவேந்தன சோழ நாடடுககுந் தலைவ னுதல் கூடுமாகலின, அந் நாட்டினுரிமை அவறகுச சொல் லியதே கொண்டு அவன சோழனை வெனருவெனறல் பொருந்தாதெனக மறுக்க.

இனி, இப பாண்டிவேந்தன பெயர்கள பலவறறுள 'நெடுமாறன' எனபதும ஒனருயக் காணபபடுதலானும,

1. Dr. S. Krishnaswami Aiyangar in his 'The Beginnings of South Indian History,' p. 267.

இவன 'நெல்வேலி'யிற போர்புரிந்து பகைவரைத் தொலைத்தானென்பது சொல்லபபடுதலானும், திருஞான சமபந்தபபெருமான காலத்தவனும நெல்வேலிச செருக்களத்தில் வந்தெதிர்ந்த வடபுல மனனரைச் சாய்த்தவனுமாகிய 'நினறசீர நெடுமாற பாண்டியனே' இறையனாரகபபொருளுரையி னிடையிடையே செருகபபட்ட கட்டூரக கலிததுறைச செயயுட்களிற குறிபபிடப பட்டவனுவனனறு கொளவாரும உளர. அது பொருந்தாது. நினறசீர் நெடுமாறன நெல்வேலிப போாக்களததிற சாயத்தது வடக்கிருந்து படைதிரட்டி வந்த வடுகமனனரையேயாம, அஃது,

"ஆயவர சளிப்பார்பால் அமர்வேண்டி வந்தேற்ற
சேயபுலத் தெவ்வரெதிர் நெல்வேலிச் செருக்களத்துப்
பாயபடைக் கடன்முடுகும் பரிமாவின் பெருவெள்ளங்
காயுமதக் களிற்றினிரை பரப்பியமர் கடக்கின்றூர்."

எனவும,

"இனையகடுஞ் சமர்விளைய இகலுழுந்த பறந்தலையிற்
பனைநெடுங்கை மதயானைப் பஞ்சவனர் படைக்குடைந்து
முனையழிந்த வடபுலத்து முதன்மன்னர் படைசரியப்
புனையுநறுந் தொடைவாகை பூழியர்வேம் புடன்புனைந்து."
(நின்றசீர் நெடுமாற நாயனூர், கூ, எ)

எனவும போந்த பெரியபுராணச் செய்யுட்களால நனகுணரபபடும. மறறு, இறையனாரகபபொருளுரைக கலித்துறைகளிற சுட்டபபட்ட பாண்டியனே நெல்வேலிப போர்க்களத்திற றொலைத்தது இனனுரையெனபது சொல்லபபடவில்லை; வாளா,

"நீடிய பூந்தண் கழனி நெல்வேலி நிகர்மலைந்தார்
ஓடிய வாறுகண் டொண்சுடர் வைவே லுறைசெறித்த
ஆடியல் யானை அரிகேசரி."
(உஉ)

என்று பொதுபபடப பகைவரை ஓட்டினனெனனு மளவே சொல்லப்பட்டிருக்கினறது. நெல்வேலியில் அவனுல் முறி

வுண்ட பகைவர் பெயா குறிக்கபபட்டிலதேனும, விழிஞம, கோட்டாறு, ஆற்றுக்குடி, பூலந்தை, சேவூர், நறையாறு, கடையல் முதலான போர்களஙகளில் அவனுற் ரெலை வுண்டோன் ஒரு சேரமன்னனே யென்பது அடுத்தடுத்து விளக்கமாயச் சொல்லபபடுதலின, நெல்வேலி முதலாம ஏனைப பறந்தலைகளிலும அப பாண்டியனுற ரேல்வி யுறரேன ஒரு சேரமனனனே யாவனறி வடபுலமனனன ஆகான். ஆகவே, நெல்வேலிப போரில் வெனரென எனனுங குறிபபு ஒனறேகொண்டு, இறையனாரகபபொரு ளுரைக கலித்துறைப பாகளில் மொழியபபட்டோன 'நினறசீர் நெடுமாறனே' யெனறல் பெரிதும பிழைபடுவ துடைததாம.

இனிச, சினனமனூரிலும வேளவிக் குடியிலுங கண டெடுக்கபபட்ட பட்டையஙகளானே இந் நின்றசீர நெடு மாற பாண்டியனுககு முனனே 'செழியன சேந்தன,' 'மாற வர்மன அவனி சூளாமணி,' 'கடுங்கோன' எனைப பெயரிய பாண்டிய அரசர மூவர அரசுபுரிந்தமை அறியக் கிடக்கின றது. அம மூவரில் நடுநினற 'அவனி சூளாமணி' எனனும பாண்டியனுககும 'மாறன' எனனும பெயர் உணமை தெளியபபடுதலானும, நடுககாலத்துச சமண தமிழக் காபபியஙகளுள மிகச சிறந்ததாகிய 'சூளாமணி' எனபது இப பாண்டிமனனான பெயரால இவனமகன 'செழியன சேந்தன' காலத்தில் ஆக்கபபட்டதேன உற்றுநோக்கு மிடத்து அவ 'அவனி சூளாமணி மாறன' தமிழமொழிக்கண மிக்க அனபுடையனைய அதேன வளாத்தலில் நிரமபக கருத்தூன்றி நினறமை புலபபடுதலானும 'இறையனாரகப பொருளுரை'யின இடையிடையே செருகப்பட்ட கட்டூரைக் கலித்துறைச் செயயுட்கள அததுணையும, அவனது தமிழப பறறினையும அவனறன பேராண்மையினையும பாராட்டுதற்பொருட்டு அவனது அவைக்களத்துப புலவ ரொருவராற பாடபபட்டமை துணியபபடும. இவ் அவனி சூளாமணி மாறன காலத்திற றமிழமொழி மதுரையில் மிகவுஞ் செழிபபுற் றிருந்த தென்பது,

''வண்டுறை வார்பொழில் சூழ்நறை யாற்றுமன் ஓடவைவேல்
கொண்டுறை நீக்கிய தென்னவன் கூடற் கொழுந்தமிழின்
ஒண்டுறை மேலுள்ளம் ஓடியதோ அன்றி யுற்றதுண்டோ
தண்டுறை வாசிந்தை வாடிட எனநீ தளர்கின்றதே.''

எனனும உங-ஆங கலிததுறைச செயயுளிற கூறபபடுத லாலும, அவன தமிழமொழி யுணர்சசியிலும கிரமபி யிருந்தாலெனபது, ''உரையுறை தீந்தமிழ வேநத னுசிதன'' (உ), ''பாவஜீ யினறமிழ வேநதன பராஙகுசன'' (கஙு), ''ஆயகினற தீந்தமிழ வேநத ஙரிகேசரி'' (உஅ), ''ஒநத தீந்தமிழநா கோமான'' (ஙூ0), எனப பலகாலும அவன அக கலித்துறைச செயயுடகளிற பாராட்டபபடுத லாலும ஙனகு தெளியபபடும. இவ வவஙி சூளாமணி மாறனுககும, இவனறன பேரனுகக கருதபபடும ஙினறசீ நெடுமாறனுககும இடையில் அறுபதாண்டுகளாவது சென்றதாகலவேணடும ஙினறசீநெடுமாறன கி.பி. ஏழாம நூறறாண்டின துவககத்திலேயே இருந்தமை கல்வெடடு களாற றுணியபபட்டிருத்தலின, அவறகுப பாட்டனனா அவஙி சூளாமணிமாறன கி. பி. ஆறாம நூறறாண்டின முறபகுதியி லிருந்தாலுதல்வேணடு மெனபதுந் தானே பெறபபடும. இம மனனர்பிரான காலத்திற றமிழமொழிப பயிறசியும ஆராயசசியும மிககு ஓஙகவே, அஞஞானறு பெரிது பயிலபபட்டுவந்த இறையனாரகபபொரு ளுரையி னிடையே, அப பாண்டி மனனனமேற பாடிய கலித் துறைச் செயயுட்கள எல்லாவறறையும அவறறைப பாடிய புலவரே சோததுவிடடாரெனக. இவவாறாறல், இப பாண்டிவேந்தன 'இறையனாரகப பொருளுககு' ஆசிரியர் நக்கீரனு ரியறறிய சாலச்சிறந்த தமிழுரைப பயிற்சியை மிகப பரவவைத்தா லெனபதூஉம, அது பறறியே அவன காலத்துப புலவரொருவர் அவனமேற பாடிய அக் கலித துறைச செயயுட்களீ அதனகட் சோக்கலாயினு ரெனப தூஉம அறியறபாலன. மாணிக்கவாசகப பெருமான அருளிச்செயத 'திருச்சிற்றமபலக் கோவையார்'ரின அகப பொருட் கலித்துறைகள சைவசமயத் தெய்வமாகிய

சிவபெருமான் மேலவாய வருதலிற பொதுநூலாகிய இறையனார் களவியலுரையில் அவறறை யெடுத்துக் காட்டுதல் நடுவனருகலானும, அல்லது அவறறை யெடுத்துக் காட்டலுறின அகக்களவியலுரைப பயிறசியை வளர்த்துத தமிழை யோமபித தமபோனற தமிழபபுலவரைப புரக்கும அவ வேந்தா பெருமானேப பாராட்டுதறகு விழைந்த தங கருத்து நிரமபாமையானும அப புலவா அவ வரசன மேற பாடிய கலித்துறைச செயயுட்க ளவவளவையும அவவுரையினகட் சேர்ததுவிடலாயிலா ரென று தெளிந்து கொளக.

இனி, இறையனாரகபபொருள, உ-ஆஞ சூத்திர வுரையில் 'நயபபு' எனபதறகு ஆசிரியர் நகக்கீரனா உரைத்த உரையினிடையே செருகபபட டிருக்கும,

"வேறு மெனநின் றிகன்மலிந் தார்விழி ஞத்துவிண் போய்
ஏறுந் திறங்கண்ட கோன்றென் பொதியில் இரும்பொழில்வாய்த்
தேறுந் தகையவண் டேசொல்லு மெல்லியல் செந்துவர்வாய்
நாறுந் தகைமைய வேயணி யாம்பல் நறுமலரே."

எனனுஞ செயயுளும அதனுரையும அவர்தமமால் வரையபபட்டன ஆகா. 'நயபபு' எனபதறகு நக்கீரனுரைத்த உரைப்பொருளேயே இச் செயயுள தனகட்கொண்டு நிறகினறது. 'நயபபு' இனனதென விளககித் தாம கூறிய உரைக்குபபின் அவர்தமமாற காட்டபபட்ட மேறகோள "கொஙகுதேர் வாழக்கை" எனனும பழைய 'குறுந்தொகைச்' செயயுள ஒன்றேயாம. இக் குறுந்தொகைச் செயயுட் பொருளே அடங்கிய மேலும ஐந்து கலித்துறைச் செயயுட்கள வேண்டா கூறலாயப பின்னும ரண்டுச சேர்க்கபபட்டிருத்தலி உறறுநோக்குமிடத்து, இவை யெல்லாமும, இவறறுட் சிலவறறிறகுப போந்த வுரைகளும நக்கீரனுர் கண்ட வுரையுட்படுவன அல்லவெனபது நன்கு புலனும. இஙஙனமே, பிறரால் பிறகாலத்தே சேர்க்கப்பட்ட கலித்துறைச் செயயுட்களோப பறறிய பிற உரைக் குறிப்புகள் சிற்சிலவும் அச் செய்யுட்களைச் சேர்த்தவர்

தமமாலே தாம எழுதி உடன்சேர்க்கப்பட்டனவாதல் வேண்டுமென றுணர்ந்துகொளக. அவையெல்லாம ரண் டெடுத்துக் காட்டலுறின இது பினனும் விரியும. இவ வளவில், ஆசிரியர் நக்கீரனுர் இறையனுரகப் பொருளுக் குரைத்த ஒபபுயர்வில்லா விழுமிய உரையினிடையிடையே பிறராற் பினறைக்காலத்தே சேர்ககபபட்டவை : நக்கீரனு ரது அவ வுரைவந்த வரலாறு தெரிக்கும உரைபபகுதியும, இடையிடையே மேற்கோளகளாக வேண்டா கூறலாயக் காட்டபபட்டிருக்குங கட்டளைக் கலித்துறைச் செய்யுட்கள அவவளவும், அக கலித்துறைச் செயயுட்கள ஒரு சிலவற றிற்கு எழுதபபட்டிருக்கும ஒரு சில உரைகளும உரைக் குறிபபுகளுமே எனபது பிரித்தெடுத்துக் காட்டப்பட் டமையால், இச் சிறு பகுதிகள ஒழிய ஏனை உரைப் பெரும பகுதிமுறறும அதனிடையே விராய பழைய சஙகச செந் தமிழச் செயயுள மேற்கோளகளும ஆசிரியர் நக்கீரனுர் வரைந்தனவேயா மென்பது கடைபபிடிகக.

இனிச, 'சேரன செஙகுட்டுவன' நூலார், 'இறையனு ரகபபொரு' ளுரையினிடையே சேர்க்கப்பட்டிருக்குங கலித்துறைச் செய்யுட்களிற போந்த 'அரிகேசரி பராஙகு சன்' எனபான கி. பி. எஎ0-இலிருந்த 'ஜடில பராந்தக' னுக்குத் தந்தையே யாவனென்றும, அவன்மேற பாடப பட்ட கலித்துறைச் செய்யுட்களை எடுத்துக்காட்டிய 'கள வியலுரை' அவ்வாறருற கி. பி. எட்டாம நூற்றாண்டுக்குப பிற்பட்டதே யாகுமென்றும, நக்கீரனுர் செயத அவ்வுரை வாயபபாடமாகப பத்துத் தலைமுறை சொல்லப்பட்டுவந்து பத்தாந் தலைமுறையாகிய கி. பி. எட்டாம நூற்றாண்டிலே தான எழுத்துருவடைந்தமையின் அப பத்துத் தலை முறைக்கும முந்நூறாண்டு கூட்ட நக்கீரனுர் இருந்தது கி. பி. ஐந்தாம் நூற்றாண்டேயாகல் வேண்டுமெனறுங கூறிய கூறறினைச் சிறிதாராய்வாம.

செப்புப பட்டையஙகளிற குறிப்பிடபபட்ட 'அரிகேசரி பராங்குசன்' என்னும பாண்டிமனனன் குழும்பூரிலுஞ் சஙகரமஙகையிலும பல்லவ அரசர்களை முறியடித்தவன்

எனனுங் துணையே சொல்லபபட் டிருக்கின்றது; மறறு 'இறையனாரகப பொருளுரை'க கலித்துறைச் செய்யுட் களிற புகழ்ந்து பாடபபட்ட 'அரிகேசரி பராங்குச நெடு மாறன' என்னும அவநிசூளாமணி பாண்டியனே பாழி, விழிஞம, சஙகமஙகை, நெல்வேலி முதலான பத்தொனப தூர்களிற சேரனெருவனைச சிதைத்தான எனனுங் துணையே சொல்லபபட்டிருககினறது. செபபுப பட்டை யத்திற் கண்ட அரிகேசரி பாண்டியன நெலவேலியிற போர புரிந்து சேரனெருவனை வெனறானெனற அச் செபபுப பட்டையஙகளுள ஒன்றுயினுங குறிகக காணோம, பல்ல வரை வெனற செபபுபபட்டையப பாண்டியனேயுஞ, சேரனை வெனற களவியலுரைக கலித்துறைப பாண்டியனேயும ஒருவராக நாட்டுதற்குச் சானறு ஒனறுதானுங காணப படா தாகவும அவ விருவரையும ஒருவரெனற அஞசாது கூறத் துணிந்த செஙகுட்டுவன நூலாரது துணிபை என்னெனபேம! அறறனறு, செபபுப பட்டையத்திற் குறிக கபபட்ட 'சஙகர மஙகை' எனனும ஊரே களவியலுரைக் கலித்துறையிற 'சங்கமஙகை' எனக கூறபபட்டதென உரையாமோவெனின, அவவாறுரைத்தறகுத்தான சான றெனனோ? அரிகேசரி பாண்டியன் சஙகரமஙகையில் வென றது பல்லவ அரசரையேயாம; மறறு, அவநிசூளாமணி பாண்டியனே சஙகமங்கையிலும ஏனைப் பல போர்களஙகளிலும வெனறது ஒரு சேரமன்னனேயேயாம; களவிய லுரைக கலித்துறைச செயயுட்கள கூஉகூ-இல் ஓரிடத்தா யினும் அவன பல்லவரை முறியடித்தானெனபதுஞ சொல் லபபடவில்லை, அவன போராபுரிந்த, பத்தொனபது ஊர்ப போர்க்களஙகளிற 'குழுமபூர்' ஒனறுதலுங காணபபட வில்லை. ஆகவே, சஙகரமங்கை, குழுமபூர் எனனும இடங களிற பல்லவரை முறியடித்த 'அரிகேசரி பராங்குச மாற வாமனும,' பாழி, விழிஞம, சஙகமஙகை, நெல்வேலி முத லான பத்தொனபதூர்ப பறந்தலைகளிற சேரமனனன ஒரு வனெனற 'அவநி சூளாமணி நெடுமாறனும' வெவ்வேறு காலத்திருந்த வெவ்வேறு பாண்டி மன்னரே யாவரல்லது, அவ விருவரும ஒருவராகாமை உளளஙகை நெல்லிக்

கனிபோல் தெளிதின விளங்கற் பாலதாம. அல்ல தூஉங் களவியலுரைக் கலித்துறைச் செயயுட்களில் நுவலபபட்ட பத்தொன்பதூர்ப பெரும போர்களில் ஓரிடத் தாயினும பல்லவ அரசர் மொழியப்படாமையின், இத் தெனனுட்டினகட் பல்லவராட்சி நிலைபெறுதற்குமுன நிகழந்த நிகழச்சிகளேயே அக் கலித்துறைச் செய்யுட்கள மொழிகினறன வெனபது திண்ணமாம. அக் கலித் துறைச் செயயுட்கள அத்தனையும ஒரு பாண்டிவேந்தன மேலனவாயப பாடபபட்டிருத்தலை உறறுநோக்குவார எவர்கும, அவை அவவரசனுற் புரக்கபபட்ட ஒரு புலவ ரால் அவ வேந்தன காலததிலேயே இயறறபபட்டன வாதல் வேண்டுமெனபது புலனாகினறகும. கி. பி எட்டாம நூறறாணடின துவக்கத்தில 'அரிகேசரி பராங்குச மாற வர்மன' எனனும ஒரு பாணடியனும, கி. பி. ஏழாம நூற றாண்டின முறபாதியில் நெலவேலிகண் வில்வேலியை முறியடித்த 'அரிகேசரி மாறவாமன' எனனும ஒரு பாண் டியனும, கி. பி ஆறாம நூறறாண்டின முறபாதியில் 'அவனி சூளாமணி மாறவர்மன' என்னும ஒரு பாண்டிய னும ஆகப பாணடிமனனர் மூவர் 'மாறன' எனனும பெயருடையராய அரசுபுரிந்தமை செபபுப பட்டையங்க ளான அறியக கிடகினறது. 'மாறன,' 'அரிகேசரி,' 'பராங்குசன' எனனும பெயாகள பாணடிவேந்தா பலர்க குப பொதுவாகக காணபபடுதலால், அப் பெயர்களை மட்டுங் கொண்டு இனனர் இனனகாலத திருந்தனர் எனத துணிவது இழுக்குடைததாம. அவவம மனனர செயத ஆண்மைச செயல வரலாறுகளையும பிறவறறையுங் கருவியாகக் கொணடு இவர இனனகாலத திருந்தவ ரெனத் துணிவதே வாயவதாகும. மேறகாட்டிய பாணடி வேந்தர் மூவரில் எவவெவர் காலத்திற் செந்தமிழப பயிறசி மிக்கு நிகழந்ததெனறு ஆராயுமவழி, 'அவனி சூளாமணி மாறன' ஆட்சிக காலத்திலும், அவனமகன 'செழியன சேந்தன' காலத்திலுமே அஃதவவாறு செழிபபுறறுத் திகழந்த தென்பது, 'சூளாமணி' எனனுஞ் செந்தமிழக் காப்பியம முன்னியோன பெயரால் இயற்றபபட்டு அவன்

மகன சேந்தனது அவைகளதே அரங்கேறறப பட்டமையினை,

> ''நாமாண் புரைக்குங் குறையென்னினும் நாம வென்வேற்
> றேமாண் அலங்கற் றிருமால்நெடுஞ் சேந்த னென்னுந்
> தூமாண் தமிழின் கிழவன்சூட ராரா மார்பிற்
> கோமான் அவையுள் தெருண்டார்கொளப் பட்ட தன்றே.''[1]

என அக காபபியமேநனகெடுதது கூறுமாறறால் இனிது விளங்கும. இவ இருபாண்டி வேந்தர்க்குபபின அரசு செலுதிய நினறசீர நெடுமாற பாணடியன காலததில் தமிழ அங்ஙனஞ சிறபபுறறிருந்த தெனபது எதொரு நூற சானறனும பெறபபடாமையானும, அப பினனேயோன காலத்தில் அது சிறபபுற றிருந்ததாயின அவவாறு நூற சானறு சிறிதும இல்லையாய ஒழியாதாகலானும அப பின்னேயோன காலததிலெல்லாந தமிழமொழிப் பயிறசி குனறிச, சமண சைவ மதப போராடடமே எஙகும ஆர்ப பெடுத்துப பரவலாயிறறெனக, செழியன சேந்தனுககுப பினவந்த 'நினறசீர நெடுமாற' பாணடியன காலததில் திருஞானசமபந்தப பெருமானுக்குஞ் சமண முனிவாகளும இடைநிகழந்த வழக்கே இதறகு ஒருபெருஞ சானறும. ஆகவே, நினறசீர நெடுமாற பாணடியன காலததிறகுமுன அரசுபுரிந்த 'செழியன சேந்தன' காலத்திலும, அவனுக்குத் தநதையாகக கருதபபடும 'அவநி சூளாமணி மாறன' காலததிலும மட்டுமே தமிழமொழிப பயிறசி வளஙகெழுமி நினறமை தமிழநூல்களாற றெளியக கிடத்தலின, இறையனாரகப பொருளுரைப பயிறசியும, அவநி சூளாமணி மாறனமேற பாடபபட்ட கலித்துறைச் செயயுட்கள அவ வுரையி னிடையிடையே தொகுகப படடமையும அவ விரு வருஞ செஙகோலோச்சிய கி. பி. ஆறும நூறறாண்டினிடையிலேதான நிகழந்ததாகல் வேணடுமே யல்லாமற, 'செங குட்டுவன' நூலாரா கூறியபடி கி. பி. எட்டாம நூறறாணடில் நிகழந்தல ஆகா. இவவாறறால் செபபுப பட்டையஙகளிற குறிக்கபபடட 'சஙகரமஙகை'யுங, களவியலுரைக்

1. சூளாமணி, பாயிரம், கூ.

கலித்துறைச் செயயுட்களில் மொழியபபட்ட 'சஙக மஙகை' யும வெவவேறு றூர்களாகக் கொளளபபடல் வேண்டுமென பதும, அஙஙனமனறி அவை யிரண்டும ஒன்றேயெனறு கொளளபபடினும அதனகண் நிகழந்த போராகள இரண்டாய ஒனறு அவநி சூளாமணி மாறனுககும ஒரு சேர மன்னனுக்கும இடைநிகழந்ததாக, மறறொனறு அரிகேசரி பராஙகுச மாறனுககும பல்லவ அரசர்கும இடைநிகழந்ததாய வெவவேறு காலத்தன ஆகுமெனபதுந் தாமே போதரும் எனக.

இனி, நக்கீரனார் இயறறிய களவியலுரை பத்துத் தலைமுறை வாயபபாடமாக வந்து, பத்தாநதலைமுறையாகிய கி. பி. எட்டாம நூறறாணடிலேதான எழுத்துருவெயதிற றெனற 'செஙகுட்டுவன' நூலாரது கூறறுப பெரியதொரு பிழைபாடுடைததாம. வடக்கிருந்த ஆரிய மாந்தரே கி பி. மூனறும நூறறாணடு வரையில் தமமுடைய நூல்களை எழுததிலிட்டு எழுதத் தெரியாதவர்களாய, அவற்றை வாயபபாடமாகக கிடைகூடடி நெட்டுருபபண்ணி இடாபபட்டோ ராவர் மற்றுத், தமிழமக்களோ தொல் காபபியனா இருந்த ஆறுயிர ஆண்டுகளுக்கு முனனே தொட்டுத் தமது மொழியையும அமமொழி நூல்களையும எழுததிலிட்டு எழுதத் தெரிந்த நாகரிக வாழக்கையின ராய இருந்தனரெனபதையும, அவா வழஙகிய எழுத்துகள வட்டெழுத்துகளேயா மென்பதையும மேலே எநந-ஆம பக்கததிலிருந்து எநந-ஆம பககம வரையில் வைதது விளக்கிக்காட்டி யிருக்கினறேம அஙஙனம எழுத்தெழுதத் தெரிந்த பணடைத் தமிழறிஞர் தம்முடைய நூல்களை யெல்லாம பனையேடுகளில் எழுதிவைத்துப பயின்று வந்தனரே யனறி, வட வாரியரைபபோற கிடைகூட்டிப பயின்று அவைதமமை முறறும உருச்செய்து இடர்பபட்டாரல்லா. தமிழர்க்கும ஆரியர்க்கும பண்டேயுரிய இவ் விருவேறு நூறபயிறசி முறையினியல்பு, எழுதத் தெழுதத் தெரிந்த இந் நாளிலும அவ்வாரிய வழக்கத்தைப் பின்பற்றிய பார்பபனர் அதனை விடமாட்டாராய்க

கிடைகூட்டித் தம நூல்களை நெட்டுருச் செய்து வருதலா லும, தமிழறிஞர் அவ்வாறின்றித் தமது பழைய வழக்கப் படியே தம் நூல்களை யெல்லாம பனையேடுகளில் எழுத்திட் டெழுதிப பயின்று வருதலானும் தெற்றென விளங்கா கிற்கும். அதுவேயுமனறிக், களவியலுரைப் பாயிரமே "இவ் வறுபது சூத்திரத்தையுஞ செயது மூனறு செப் பிதழகத் தெழுதிப பீடத்தினகீழ இட்டான" என மொழிதலால், 'இறையனாரகபபொருட்' சூத்திரமும அவறறினுரையும ஆக்கபபட்ட பழைய நாளிலேயே தமிழ் நூல்கள எழுத்திட் டெழுதபபட்டமை ஐயுறவினறித் துணியபபடும. படவே, களவியற் சூத்திரமும உரையும பத்துத் தலைமுறை வரையில் வாயப்பாடமாகவே வந்த தெனறு பண்டைநூற சானறுகட்கெல்லாம முரணுகத் துணிபுரை நிகழத்திய 'சேரன செங்குட்டுவன' நூலாரது கோள புரைபட் டழிந்தமைகாண்க. அறறேல், நக்கீரனார் தாமெழுதிய அக் களவியலுரையைத் "தம மகனார் கீரவி கொறறனார்க் குரைத்தார்; அவர் தேனூர கிழார்க் குரைத்தார்; அவர் படியங்கொற்றனார்க் குரைத்தார்" எனறற றொடக்கத்தனவாகப போந்த சொறறொடர்க் கருத தெனனேயெனின்; இக் காலத்திற பல்லாயிரக் கணக்கான நூல்களை அச்சிற பதித்துப பரபபுவிக்கும அசசுப பொறிகளும அச் செழுத்துக்களுந் தாளகளும் உளவாயினறற் போல, அக்காலத்து அக் கருவிகள இன் மையின், அஞ்ஞான றிருந்த நல்லிசைப புலவ ரொருவர் தாம இயற்றிய நூலைத் தாம் எழுதியவாறே பிழைபடா மல் வழங்குவித்தறபொருட்டுத், தாம அறிந்த கற்றூர் ஒருவர்க்கு அந் நூலைப் பாடஞசொல்லி வைத்து அந்நூற் பொருளைப் பிறர் தமக்குத்தோனறியவாறு கிரித்துணர்ந்து அத் திரிபுணர்ச்சிக்கு இசைய அதனகண் உளள சொற் களையுஞ் சொற்றொடர்களையும் மாற்றி பிழைபடுத்தா வண்ணம், தமதுண்மைக் கருத்துத் தெரித்துரைப்பர். அவ்வாறு அந் நூலாசிரியன் வாய் அந் நூலின் மெய்ப் பொருளுணர்ந்தவர், அதனைத் தாம் கேட்டுணர்ந்தவாறே தாம் அறிந்த மற்றொருவர்க்கோ அல்லது பலர்க்கோ

அதனைப் பாடஞ்சொல்லி வைப்பர். இங்ஙனமாக ஓராசிரியன இயற்றியநூல் அவன் கருத்தை வழுப்படாமல் அறிவிக்குங கருவியாய் அவன் வழிவந்த மாணக்கருள ஒருவர் ஒருவர்க் குரைப்பவரும் வரிசையினனே "நக்கீரனுர் தமமகனுர் கீரவிகொற்றனுர்க் குரைத்தார்; அவர் தேனுர்க் கிழார்க் குரைத்தார்" என்றற் றொடக்கத்துச் சொற்றொடர்கள அறிவுறுத்துவதனறி, எழுதுதெழுதத் தெரியா ஆரிய மாந்தர் தம நூல்களைத் தம்மவர்க்கு வாயபபாடமாகச் சொல்லிவைத்தல்போல், நகீரனுர் முதலியோருந் தத்தம மாணக்கர்க்கு அதனை வாய்பபாட மாய்ச் சொல்லி வைத்தாரென அறிவுறுத்துவன அல்ல. ஏனெனிற, பண்டே எழுத்தெழுதத் தெரிந்த தமிழர்க்குள அங்ஙனம வாய்பபாடமாகச் சொல்லிவைககும வழக்கம் இல்லாமையானும, அன்றி அவ வழக்கம இருந்ததென காட்டுதற்கு ஏதொரு சான்றுங் காணபபடாமையானும் என்பது. அது கிடக்க.

இனிக், களவியலுரை உரைக்கபபட்டு வந்த மாணக்கரின் காலவரிசை பத்தாந் தலைமுறைக்கண் நின்ற முசிறி யாசிரியர் நீலகண்டனுரொடு முற்றுப பெறுதலின், அவ் வுரை நீலகண்டனுர காலத்திலேதான எழுத்துருப பெற்று ஏட்டிலெழுதபபட்டதெனறும, அங்ஙனம அஃது எழுதப்பட்ட காலம அவ்வுரையி னிடையிடையே எடுத்துக் காட்டாய்ப் போந்த கலிததுறைச் செயயுட்களிற் புகழப் பட்டவனுங் கி. பி எட்டாம நூறறுண்டின முற்பகுதியி லிருந்தவனுமாகிய 'அரிகேசரி பராங்குச மாறவர்மன்' காலத்திற்கும பிறபட்டதெ யாகற்பாலதென்றுஞ 'செங்குட் டுவன்' நூலார் கூறினர். பத்தாந் தலைமுறைகக்கண் வந்த நீலகண்டனுரொடு நகீரனுருரையின வழிவந்த மாணக்கர் மரபு முறறுப பெறுதலால், அம மாணக்கர் வரிசையினைக் கூறும உரைப்பகுதி மட்டும நீலகண்டனுர எழுதியதா யிருகக்லாம. ஆனல் நீலகண்டனுர் காலத்திலேதான அவ் வுரை எழுத்துருப பெற்ற தென்பதற்குச் சானறென்னை? தொல்காப்பியனுர் காலந்தொட்டே தமிழ் நாட்டகத்துத்

திகழ்ந்த தமிழ்ச்சான்றோர்கள தம்முடைய நூல்களை எழுத்திட் டெழுதிப் பயினறு வந்தார்களென்பதற்கே நூறசானறுகள இருக்கக் காணடுமனறி, அவர்கள அவற்றை வாய்ப்பபாடமாக ஒதிவந்தாகளென்பதற்குத் தினைத்தினைச் சானறும் இனமையின், நீலகண்டனார் காலத்திலேதான அவவுரை எழுத்துருப பெறறதெனப் பிழையாகப் பொருளபண்ணிகொணட 'சேரன செங்குட்டுவன்' நூலாரது உரை பெருமபிழைபாட்டுரையேயா மெனக.

இனிக், களவியலுரையி னிடையிடையே செருகப்பட்டுளள கலித்துறைச் செயயுட்களிற் புகழந்துபாடப் பெறறவன் கி. பி. ஆரும நூறருண்டின முறபாதியிலிருந்த 'அவநிசூளாமணி மாறமோ' யல்லாது, அவனுககு நானகு தலைமுறை பிறபட்டு வந்து கி. பி. எட்டாம நூறருண்டின் முறபகுதியிலிருந்த 'அரிகேசரி பராஙகுச மாறவர்மன்' அல்லனென்பதை மேலே நன்கு விளககிக் காட்டினமாதலால், அவ்வரசனைப பின்னுளளக மாறுபடுத்திச் சொல்லிய செஙகுட்டுவன் நூலாரதுரை பெரியதொரு தலைதடுமாற்ற வுரையேயா மென விடுகக.

இனி, அப பாண்டி மனனனமேற பாடப்பட்டிருக்குங கலித்துறைச் செயயுட்களை அவவுரையினிடையிடையே சேர்த்தவர், நக்கீரனார்தம மாணாக்கர் வழியில் வந்த நீல கண்டனரே யாவரெனபதுபடச் 'செஙகுட்டுவன்' நூலார் மொழிந்ததற்குச் சான்று யாது என்றராய்வுழிச் சான்றேதும புலப்படக்காணைம. சான்றேதுமின்றித் தமக்குத் தோனறியவாறெல்லாம எழுதிவிடுதல்தான வரலாறறுரை போலுமா! மறறு, அக கலித்துறைச் செயயுட்கள அவ் அவநிசூளாமணி மாறனது அவைக்களத்திருந்த ஒரு புலவராற் செயது அவவுரையினிடையே சேர்க்கப பட்டனவாதல் வேண்டுமே யல்லாமல், நக்கீரனார்தம மாணாக்கர் வழிவந்த நீலகண்டனாரா சேர்க்கபபட்டன ஆகாவென்பது முன்னரே விளககபபட்டது. ஆசிரியர் நக்கீரனார் கி. பி. முதல் நூற்றாண்டின் முற்பகுதியி லிருந்தாரென்பதை மேலே இளகூ-ஆம் பக்கத்திற் பல சான்றுகள்காட்டி விளக்கியிருக்

கின்றேம். ஆகவே, அவர் தம் மாணாக்கர் மரபிற் பத்தாந் தலைமுறைக்கண் நின்ற நீலகண்டனார் கி. பி. நான்காம் நூற்றாண்டின் நடுவிலிருந்தாராகற பாலார். நக்கீரனார் கண்ட களவியலுரைப பாயிரத்தினிடையே அவருரை வந்தவரலாறு தெரிக்கும் உரைபபாயிரபபகுதி இந் நீல கண்டனாரால் எழுதி அதன்கட் சேர்க்கப்பட்டதோ, அன்றி அந் நீலகண்டனார்க்கும் முற்போந்த மாணாக்க ரால் எழுதிச் சேர்க்கப்பட்டதோ, இன்னதுதானென்று துணிந்து சொல்லுதறகுச் சிறிதும வாயிலில்லை. அஃதெஙஙனமாயினும, ஆரியர் நடையைப பின்பறறிய பார்ப்பனர் பொயயும புரட்டும் நிரமபக கட்டிவிட்ட புராண கதைகள தமிழ நூல்களில் மெல்லமெல்லப புகத் தொடஙகிய கி. பி. இரண்டாம் நூற்றாண்டிற்குப் பின் னரேதான் அப் புராணகதைகளோ டொத்த புளுகுகள் பல விரவிய அவ்வுரைப்பாயிரப் பகுதி எழுதி அதன்கண் நுழைக்கப்பட்டதாகல்வேண்டு மெனபதுமட்டுந் திண்ணம. ஏனைக் கட்டுரைக் கலித்துறைச் செய்யுட்கள முந்நூற் றிருபத்தொனபதும், அவறறுட் சிலவறறிற்குப போந்த உரைகளும உரைக்குறிபபுகளுமோ நீலகண்டனார்க்கு இரு நூறாண்டு பிற்பட்டுவந்த 'அவிநயுளாமணி மாறன'றன் அவைக்களத்துப் புலவரொருவரால் இயற்றி அவ்வுரை யின்கட் சேர்க்கப்பட்டனவாதல் வேண்டுமெனறு பகுத் துணர்ந்துகொள்க. இவ்வாறாக, அக் கலித்துறைச் செய் யுட்களை அவ்வுரையின்கட் கோத்தவர் நீலகண்டனார் அல்லரென்பது பெறப்படவே, கி. பி. நானகாம் நூற் றாண்டின கண்ணதான அவரதுகாலத்தைக் கி. பி. எட்டாம் நூற்றாண்டின் கண்ணதாகச் சான்றேதுமினறிப் பிழைத்துணராந்து, அவ்வாறாரும் ஆசிரியர் நக்கீரனாரைக் கி. பி. ஐந்தாம நூற்றாண்டிற படுபபிகக விழைந்த 'சேரன் செஙகுட்டுவன்' நூலாரது விழைவு நிரமபாது ஏமாற்றம் அடைந்தமை காண்க. நக்கீரனார் இருந்த காலங் கி. பி. ஐந்தாம நூற்றாண்டாகாமல் முதல் நூற்றாண்டாகவே பல வாற்றானும் திண்ணமாய்ப் பெறப்படுதலால், அவரும் அவரோடொருங்கிருந்த தமிழ்ச் சான்றோரும் நடை

பெறுத்திய கடைச்சங்கமிருந்த காலமுங் கி. பி. ஐந்தாம நூற்றாண்டாகாமற் கி. பி. இரண்டாம் நூற்றாண்டிற்கு முறபட்டதாகவே பெறப்படும் எனபது.

உரு. கடைச்சங்க காலத் தொடர்ச்சி

இனிச், 'சேரன் செங்குட்டுவன்' நூலார் மேற்காட்டிய வாறெல்லாம பிழைபாடாகத் தாம செயதுகொண்ட செயயுட்பொருளகளாலும், உண்மைகளை மாறுபடுத்திக் கொண்ட மாறுபாட் டுரைகளாலும், ஒனறை மறறொன றுகக் கருதிய திரிபுணர்சசியாலுங கடைச்சங்க காலத் தைக் கி. பி. ஐந்தாம நூறறாண்டின்கட் படுபபிக்க முயன்று அம முயற்சியில் முறறும இழுக்கியவாற்றினை விரிதது விளக்கிக், கடைசசஙககாலங் கி. பி. இரண்டாம் நூறறாண்டிறகு முறபட்டதாதலை கிறுவினும். அவர் அம் மட்டிலமையாது, 'சிலப்பதிகாரத்' திற போந்த சில குறிபபு களைப பொறுக்கியெடுத்து அவற்றிற்குத் தம் மனம போனவாறு பொருளுரைத்து அவ்வாறறால் வடநாட்டு மனனர் சிலரிருந்த காலவாராய்ச்சியினைத் தம் கருத்துக் கிணங்கத் திரித்து அதுகொண்டு கடைச்சங்ககாலம் ஐந்தாம நூற்றாண்டின்கட் படுமென்றார். ஆகலின், அத னையும ஆராய்ந்து அவர்கொண்ட முடிபு பொருந்தாமை காட்டுதும.

சிலப்பதிகார ஆசிரியரான இளங்கோ வடிகட்குத் தமையனும், பேராணமையிற சிறந்த சேர வேந்தனும் ஆகிய செங்குட்டுவன் கண்ணகியின் உருவஞ் சமைத்தறகு இமயமலையினினறும் ஒரு கருங்கற்றுண்டு கொண்டு வருதற் பொருட்டுங், தென்றமிழ் மன்னரை இகழ்ந்து பேசிய வட ஆரிய மன்னராங கனக விசயர் என்பாரை வென்றடக்குதற பொருட்டும் வடநாடு நோக்கிப் படை யெடுத்துச் சென்றனென்பதும், அங்ஙனம் அவன் சென்ற காலத்து அவனுக்கு உதவிசெய்த நண்பரான ஆரிய மன்னர் 'நூற்றுவர் கன்னர்' எனப்படுவ ரென்பதுஞ்

சிலப்பதிகாரங், கால்கோட் காதையிற் சொல்லப்பட்டிருக்கின்றன. வட ஆரியமன்னரில் நூற்றுவர் கன்னரே சேரன்செங்குட்டுவனுக்குச் சிறந்த நண்பரென்பது,

"வேற்றுமை யின்றி நின்னொடு கலந்த
நூற்றுவர் கன்னரும்." (கால்கோட் காதை, கசஅ, கசக)

எனப்போந்த அடிகளாலும், இவன வடக்கே சென்று கங்கைப பேரியாறறைக் கடக்க வேண்டுழி அக் கங்கை யாறறுப பக்கத்திருந்த நாடுகளில் அரசு புரிந்த அந் நூறறுவர்கனனர் அவனுககு மரக்கலனகள பலவறறைக் கொடுத் துதவிசெயது, அவற்றுல் அவன் தனபடை யொடுமை அவ்வியாற்றைக் கடந்து அதன் வடகரை சேர்ந்தவழி அவ் வாரியமன்னர் அவனை எதிர்கொண்டு தமது நாட்டுககு அழைத்துச் சென்றனரெனபது,

"கங்கைப் பேரியாற்றுக் கன்னரிற் பெற்ற
வங்கப் பரப்பின் வடமருங் கெய்தி,
ஆங்கவர் எதிர்கொள அந்நாடு கழிந்து." (களசு, களஅ)

எனப்போந்த அடிகளாலும், அந்நனஞ்சென்ற செங்குட்டு வன் தன்னை எதிர்த்த கனகவிசயரையும அவனுக்குத் துணைபபோந்த ஆரிய மனனரையும வென்று இமயத் தெடுத்த கருங்கறறுண்டை அக கனகவிசயர் முடிமே லேறறித் தெனனாடு நோகஙிப பெயர்கையில் தனக்கு உதவிசெய்த நணபரான 'அந் நூற்றுவர் கனனரை' அவர்தம நாடுநோகஙிச் செல்கவென ஏவினனென்பது,

"ஆரிய மன்னர் ஐயிரு பதின்மரைச்
சீர்கெழு நன்னாட்டுச் செல்கவென் றேவி."
(நீர்ப்படைக் காதை, களள, களஅ)

என்னும் அடிகளாலும், அதன்பின தென்னறமிழக் குடநாட் டிற் றன் வஞசிமாநகர்க்குத் திருமபிய செங்குட்டுவன் தான கொணர்ந்த கருங்கற் றுண்டிற் கண்ணகியின் உருவமைத்து அதறகெனறு கட்டுவித்த கோயிலில் அதனை நிறுத்தி விழாவெடுத்த ஞான்று, அவன போரிற்

ரெலீத்துச் சிறையாய்க் கொணர்ந்த ஆரிய மன்னரையும் அவர்போல் முனனரே சிறைக்கணிருந்த ஏனை மன்னரை யுஞ சிறையினின்றுஞ சிறைவீடுசெயய அம மன்னருங், குடகநாட்டின கொங்கரும, மாளுவநாட்டின் வேந்தரும், இலங்கைத்தீவின வேந்தனுன கயவாருவும் வந்து அக் கண்ணகியி னுருவத்தை வணஙகினரெனபது,

" அருஞ்சிறை நீங்கிய ஆரிய மன்னரும்
பெருஞ்சிறைக் கோட்டம் பிரிந்த மன்னருங்
குடகக் கொங்கரும் மாளுவ வேந்தருங்
கடல்சூழ் இலங்கைக் கயவாது வேந்தனும்
எந்நாட் டாங்கண் இமய வரம்பனின்
நன்னுட் செய்த நாளணி வேள்வியில்
வந்தி கென்றே வணங்கினர் வேண்ட."

(வரந்தரு காதை, கடிஎ-கசுஉ)

என்னும அடிகளாலும, இவற்றையெல்லாம் உடனிருந்து கணட இளங்கோவடிகளே சிலபபதிகாரத்தில் விளஙகக் கூறியிருககினரூர். இவர் கூறிய இவ வுணமைவரலாறறுக் குறிபபுகளிற 'கனனா' எனனும அரசா நூறுபேருங் கஙகையாறறின வடகரையை யடுத்துளள நாடுகளில் அரசாணட ஆரிய மனனராதலும, ஏனை 'மாளுவ வேந்தர்' எனபார் கஙகையாற்றுக்குத் தெறகே நெடுந்தொலைவில் உளதாகிய நருமதையாறறஙகரையை யடுத்து 'ராஜபுத னத்'தின தெனபகுதிகளண விரிந்ததாகிய மாளுவ நாட்டை ஆண்டோராதலும, இவ் விருவேறு அரசரும் வெவ்வேறு நாட்டினரும வெவ்வேறு இனத்தினருமாவரே யல்லது இவ்விருவரும ஒருவரேயென ஒனறுபடுத் துரைத்தற்குத் தினைத்தனைச்சான்றும இளங்கோவடிகள் அருளிச்செயத இவ்வரலாற் றுரைகளில் இல்லையாதலும இவைதமமை ஆயுந் தமிழறிஞர் எவரும நனகுணாவர்.

ராதிங்ஙனமாகவுஞ் 'செங்குட்டுவன்' நூலார், இளங் கோவடிகள குறித்த 'மாளுவ வேந்தரும,' 'நூற்றுவர் கன்னரும்' வேறுவேறல்லர் ஒரு வகுப்பினரே யென்றுங்,

கி. பி. கூடு0-ஆம் ஆண்டிற் சமுத்திரகுப்தன் இம மாளுவ நாட்டினமேற் படையெடுத்துவந்த ஞான்று இம மாளுவ வேந்தர் தமது மாளுவநாட்டைப பல பிரிவுகளாகப் பகுத்து அவற்றின்கண் அரசுபுரிந்துவந்தன ரென்றுங், கண்ணகிகோயிலிற் செங்குட்டுவன் விழாவெடுத்த நாளில் அவனுக்குச் சிறந்த நண்பரான நூற்றுவர்கன்னர் என்பார் வராதிராராகலின் அவர் அப் பெயராற் குறிக்கப் படாவிடினும் அப்போது வந்திருந்தவராகச் சொல்லப் பட்ட மாளுவவேந்தரே அந் நூற்றுவர்கன்ன ராதல் வேண்டுமெனறும், அதனை செங்குட்டுவன காலங கி. பி. ஐந்தாம நூற்றாண்டேயாகறபாலதென்றுங கூறினர்.

மாளுவவேந்தரும, நூற்றுவர் கனனரும வேறல்லர் எனபதனை நாட்ட இவர் காட்டிய இரு சானறுகளுட், சமுத்திரகுப்தன படையெடுத்துவந்த ஞானறு மாளுவ நாடு பல பிரிவுகளாக வகுக்கபபட்டு அரசர் பலரால் ஆளப்பட்டதென்பதானறு. ஆனல், இவர் இதற்கு மேற்கோளாக எடுத்துரைதத ஆங்கில வரலாறறு நூலாசிரியர் இவருரைக்கும வண்ணமே யுரைபபக் காணேம. அவ் வாங்கில ஆசிரியர் [1]"பஞசாபி கீழை இராசபுதனம மாளுவ நாடெனபன பெருமபாலுங குடியரசு முறையில் உயிர்வாழுந்த குடியினர் அல்லது இனத்தவரின ஆளுகையில் இருந்தன" எனவும், [2]"சமுத்திரகுப்தன் ஆண்ட நாட்டின எல்லைபபுறத்திருந்த மாளுவரும மற்றைக குடியினரும் தமதாட்சியில் வைத்திருந்த தேயங்கள தனது பேராளுகையினுள ளடக்கப்பட்டதுடன் (இரண்டாஞ் சந்

1. "The Panjab, Eastern Rajputana, and Malwa for the most part were in possession of tribes of clans living under republican institution" Dr. Vincent A. Smith's 'The Early History of India,' 1914, p. 286.

2. "The year 395 may be assumed as a mean date for the completion of the conquest, which involved the incorporation in the empire of the territory held by the Malavas and other tribes, who had remained outside the limits of Samudragupta's dominion." Ibid, p. 291.

திரகுபதனது) வெற்றி நிறைவெய்திய நடுக்காலம் கி. பி. கூகூடு-ஆம் ஆண்டாகக் கொளளபபடலாம்" எனவும் மொழிதல்கொண்டு, சமுத்திரகுப்தனும அவன மகன் இரண்டாஞ் சந்திரகுபதனும அரசுசெலுத்திய கி. பி. நான்காம நூறறாண்டில் மாளுவநாடானது குடியரசின் கீழிருந்ததெனபது பெறபபடுகின்றதே யல்லாமல், அப் போது அது வேந்தராட்சியினகீழிருந்ததெனபது சிறிதும் பெறபபடக் காணேம. மற்று, ஆசிரியர் இளங்கோவடிகளோ, சேரன செங்குட்டுவன் எடுப்பித்த கண்ணகி விழவுககு மாளுவநாடடிலிருந்து வந்த அரசரை "மாளுவ வேந்தன்" எனறே விளக்கமாய்க் கூறுகின்றார். ஆகவே, 'செங்குட்டுவன' நூலார் தாம எடுத்துக்காட்டிய ஆங்கில வரலாறறு நூலாசிரியரதுரை தமது கருத்துக்கு முழுதும் மாறுய் நிற்றலை அறிந்துகொளளாமை இரங்கற்பால தொன்றும. ஆங்கிலத்திலுளள அந்நூலைத் தமிழொன்றே கறறார் அறியாராதலால், அநநூலைக் காட்டியாயினுந் தமது வழுக்கொளகையினை நாட்டிவிடலாமெனை அவர் எண்ணினார் போலும்!

இனிச், சமுத்திரகுப்தன காலத்தும அவன மகன சந்திரகுபதன் காலத்தும் மாளுவநாடு குடிமககள பலர் ஒருங்குகூடி நடாத்திய குடியரசின்கீழிருந்தமை, அவரெடுத்துக காட்டிய ஆங்கில ஆசிரியர் வரைந்த வரலாறறு நூலினுலேயே தெறறெனப புலனுதலின், இளங்கோவடிகள குறித்த மாளுவவேந்தர் அக குடியரசு நடாத்திய குடிமக்கள ஆகாமை சிறிதறி வுடையார்க்கும் விளங்கற்பாலதேயாம். அற்றேல், இளங்கோவடிகள குறித்த அம மாளுவவேந்தர்தாம யாரோவெனிற்; கனிஷ்க மன்னனைத் தலைவனுய்க்கொண்டு காந்தாரத்தில் அரசு புரிந்த குஷான்குடிப பேரரசர்க்குக் கீழடங்கி மாளுவ நாட்டை ஆண்ட அரசர் 'சகசத்திர பதிகளே' ஆவர். இவர்களுட் சிறந்த அரசனுய்த் திகழந்தவன் 'முதலரம் ருத்ரதாமன்' என்பவனே யாவன்; இவன் கி. பி. கடுo-ஆம் ஆண்டையடுத்துக் 'கிர்னார்' ஊர்க் கற்

பாறையில் வெட்டுவித்த கல்வெட்டு ஒன்றால் இவன் கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியி லிருந்தமை துணியப்படும்.[1] அவனுக்குப் பினனும் அரசர் அறுவர் மாளுவ நாட்டின் தலைநகராகிய 'உச்சயினி'யில் அரசு புரிந்தமையுங, கி. பி. மூனறாம் நூறறாண்டின் முறபகுதியோடு, இச் சகசத்திரபதி யரசரின் மரபும் இவரோடு ஒரு காலத்திலராகிய ஆந்திர அரசரின் மரபும் அற்றுப் போனமையும் ஆங்கில ஆசிரியரான வின்சென்ட் சிமித் என்பவரால் நன்கெடுத்துக காட்டப்பட்டிருக்கின்றன.[2] மேலே உசஅ, உசக-ஆம் பக்கங்களிற் காட்டபபட்ட படி கி. பி. களக முதல் ககூக வரையில் இலங்கையில் அரசாண்ட முதற் கயவாகு எனனும வேந்தனும சேரனசெங்குட்டுவன் எடுப்பித்த கண்ணகி விழுவுககு வந்திருந்தனன, அவரோடு உடனிருந்த ஆசிரியர் இளங்கோவடிகளே சிலபபதிகாரம, வரந்தருகாதை, கசுo-ஆம் அடியில் விளங்கக் கூறுதலின, அவ விருபத்திரண்டு ஆண்டுகளில் மாளுவ நாட்டின்கண அரசு புரிந்த 'ஜீவதாமன்,' 'முதல் ருத்ரசிமமன்,' 'முதல் ருத்ரசேனன' என்னுஞ் சகசத்திரபதி அரசர் மூவரில் எவனேனும ஒருவனும, அக் காலத்தில் மாளுவத்தை யடுத்த மேல்நாடுகளுக்கு அரசரான ஆந்திரர் அச் சத்திரபதி யரசரோடு உறவு கலந்தபிற் றோனறிய ஆந்திர மன்னனான 'கௌதமீபுத்ர யஜ்ஞஸ்ரீ' எனனும வேந்தனுமே அக் கண்ணகி விழுவுக்கு வந்திருந்தாராகறபாலர். அவரையே இளங்கோவடிகள் அவர்தம உறவுரிமை பறறி 'மாளுவவேந்தர்' எனப பலர் பாற சொல்லாற குறித்தாராகல் வேண்டும. இவவிரு மன்னர் வந்தமை பற்றியே இவரை இளங்கோவடிகள் இங்ஙனம பலர்பாற சொல்லாற் கிளந்திருகக, இவ் வுண்மையினை நனகாயந்து பார்க்கும ஆங்கில நூலறிவு மதுகை யினறி, 'வேந்தர்' என்னும அச் சொல்லைக் கண்டதனையாலே, அதறகு 'நூறறுவர் கனனர்' எனப் பிழையாகப பொருளசெயது, அப பிழையையே தமது பொருள்

1. Ibid. p. 132. 2. Ibid. p. 218.

தாக் கொள்கைக்கு ஒரு பெரும பற்றுக்கோடாய்க் கொண்ட 'செங்குட்டுவன்' நூலார் செயல், நீரில் அமிழ்துவோன மரக் கோடென நிலைந்து ஒரு சிறுதுரும பினைத் தாவிப்பற்றிய செயலோடு ஒப்பதாய முடிந்தமை காண்க.

இனி, அவர் அவ விருவேறு வேந்தரையும் ஒன்று படுத்தறகுக் காட்டிய நுண்ணறிவின திறத்தை எனனென் பேம்! செங்குட்டுவனுகுச் சிறந்த நண்பரான 'நூறறுவர் கனனர்' அவ் வேந்தன எடுபபித்த கண்ணகி விழுவுக்கு வராதிரார் ஆகலின, அதறகு வந்திருந்தவராகச் சொல்லபபட்ட மாளுவ வேந்தரே அந் நூற்றுவர்கனன ராதல் வேண்டுமென்னுஞ் 'செங்குட்டுவன்' நூலாரது உய்த்துணர்சசி எவவளவு நுண்ணிது! எவ்வளவு ஆழந் தது! "வேற்றுமையின்றி நினனெடு கலந்த, நூற்றுவர் கனனர்" எனவும, "கங்கைப பேரியாறறுக் கனனரிற் பெற்ற" எனவும, "ஆரியமனனர் ஐயிருபதின்மரை" எனவுஞ் செங்குட்டுவனுகு நட்பரசராகை அவரைத் தாம மொழிய வந்துழி யெல்லாங 'கன்னர்,' 'நூற்றுவர்,' 'ஐயிருபதின்மர்' எனனும பெயர்களால் ஐயுறுதற் கிடனின்றி விளங்கக் குறிப்பிட்டுவந்த ஆசிரியர் இளங கோவடிகள், இவ வோரிடத்துமட்டும் அவரை 'மாளுவ வேந்தர்' என முன்பின மொழிந்திலாத வேறொரு பெய ராற் குறிபபரோவெனவும, அவவாறு குறித்தறகு ஏது வென்னை யெனவும, எத்துணைப பெரியாருந் தாங கருதிய வறறைத் தாங கருதியவாறே செயதுமுடிக்க இயலாவாறு மாறுன நிகழச்சிகள வலிகொண்டு நிகழும இஞ்ஞாலத்தில் 'நூற்றுவர் கனனர் வராதிரார்' என நீர் அங்ஙனந் துணிந் துரைத்தறகுக் கொணட சான்று எபபெற்றிய தெனவும் வினவுவார்களுக்குச் 'செங்குட்டுவன் நூலார்' தமது நுண் ணறிவு கொண்டு எங்ஙனம இறுப்பரோ அஃதிறைவனே அறியற்பாலான! யாம் ஆராயந்த மட்டில் இவரது நூலி லிருந்து இவ் விஞக்களுகு விடை ஒரு சிறிதும பெறப் படாதென்பது திண்ணம். கங்கையாற்றின வட கரைக்

கண் அரசாண்ட நூற்றுவர் கன்னரை ஆசிரியர் வேறி யாண்டும் மாளுவ வேந்தரென உரைப்பக் காணுமையா னும், மாளுவ நாடெனபது கங்கையாற்றுக்குத் தெற்கே நெடுஞ் சேய்மைக்கண் உளதாகிய நருமதை யாற்றங் கரைகூய யடுத்துளதாகலின அதனகண் அஞ்ஞான்று அரசுவைகிய வேந்தர் வேறென்பதே வரலாற்று நூலாற் புலப்படுதலானும் அம மாளுவவேந்தரே நூற்றுவர்கனன ராவரென்றல் சிறிதும் அடாதவுரையாம எனபது.

அற்றேற் கண்ணகி விழவிற்கு வந்திருந்த அரசரில் நூற்றுவர் கன்னர் மொழியபபடாமை யெனனையெனிற, கூறுதும்: தென் றமிழநாட்டுச் சேரன் செங்குட்டுவ வேந்தற்கு உற்ற நண்பராயினுர் வட ஆரியமன்னர் நூற் றுவர் கன்னர் மட்டுமே யென்பது மேலெடுத்துக்காட்டிய இளங்கோவடிகளின் கொழுந்தமி ழுரைகளால் நன்கு விளங்காநிற்குமு; அவரை யொழிந்த ஏனை வட ஆரிய மன்னர் அவனைப் பகைத்திருந்தமையும், அதுபறறியே அவன் அவர்மேற் படையெடுத்துச் சென்றமையுங் கூட அவ் வாசிரியர் மொழிகளாற் புலனுகின்றன. இங்ஙன மாகத் தென் றமிழநாட் டரசனை செங்குட்டுவற்கு நண்ப ராகித், தம இனத்தவரான ஆரியமனனரைப் பகைத்து நின்ற நூற்றுவர் கன்னர்க்கு வடநாட்டில் உளள அவ் ஆரிய மன்னரோடு எவ்வளவு போராட்டம இருந்ததாகல் வேண்டுமு! நெடுஞ் சேய்மைக்கண் உளதாகிய தென்னுட்டி லிருந்து, தமது வடநாடு நோக்கிப் படை திரட்டி வந்த செங்குட்டுவ வேந்தறகு அந் நூறறுவர் கனனா எவவளவு உதவிகள செயது, தம மிருவர்க்கும மாற்றுரான அவ் ஆரிய மன்னரைப் போரில் வெனறிருத்தல் வேண்டுமு! அவ்வாறு பேருதவிகள் செய்து பெரும்போர் நிகழ்த்தி வெற்றிகண்ட பேராண்மையில் எத்தனை ஆயிரம படை ஞரும் எத்தனை ஆயிரம் யானை குதிரைகளும் அவர் மடியக் கொடுத்திருத்தல்வேண்டும்! எத்தனை நூருயிரம் பொருட் டிரள்களை அவர் இழந்தாராகல்வேண்டும்! இங்ஙனமெல் லாம் தம் படைகளையும் பொருளையும், இழந்து தமது

அரசியல் வலிகுறைந்த நிலையி லிருக்கையில், அதனைத் திருமப வலிபெறுத்தும முயற்சியைக் கைவிட்டு, அடுத்து நிகழ்ந்த கண்ணகிவிழுவுக்கு அந் நூறறுவர் கனனர் எங் ஙனம வரக்கூடும்? அன்றி வந்திருப்பரேற் சீர்குலைந்த நிலையிலுளள அவர்தம அரசியல் அவரில்லாத காலத்தில் வேறு மாறறரசரால் எளிதிற கைபபற்றப படுமன்றே? இவ் வியல்புகளை நனகுணர்ந்து பார்த்தே செங்குட்டுவன் வெறறி வேந்தனுய்த் தனது தெனனடு நோக்கித் திருமபு கினறுழி, உறற நண்பரான அந் நூறறுவர் கனனரைத் தன்னை டுடனழைத்துவராமல், அவரை அவர்தம நாடு நோக்கிச் "செல்கவெனறு ஏவி," அவ்வாறறுல் அவர் வலிகுறைந்த தமது அரசியலைப பெயர்த்தும் வலிபெறுத் துதறகு இடஞசெயதான. ஆகவே, அந் நூற்றுவர் கனனர் செங்குட்டுவ வேந்தன உடன்பாடு பெறறே கண்ணகி விழுவுக்கு வராராயினரெனபது சிறிது கருத் தொருங்கி நோகக வல்லார்க்கும புலனகற பாலதேயாம். இவ் வுண்மையினை ஆராயந்து பார்க்கும வன்மையின்றிச் 'சேரன செங்குட்டுவன' நூலார் கண்ணகி விழுவுக்கு வந்திருந்தோரில் நூறறுவர் கன்னர சொல்லபபடாமை ஒன்றே கொண்டு, அதறகு வந்திருந்த மாளுவ வேந்தரை அந் நூற்றுவர் கன்னராகப் பிழைத்துணர்ந்தது சிறிதும பொருந்துவ தில்லாப போலியாராய்ச்சியாமென விடுக்க. எனவே, மாளுவ வேந்தரென ஆசிரியராற குறித்தோதப் பட்டார் 'நூறறுவர் கன்னர்' அல்லரென்பதூஉஞ், சமுத் திர குபதனும அவன மகன சந்திரகுபதனும அரசுபுரிந்த கி. பி. நான்காம நூறறாண்டில் மாளுவநாடு குடியரசின கீழிருந்ததே யன்றி வேந்தராட்சியின் கீழிருந்ததன றென் பது வரலாறறு நூல்களால் நனகறியக் கிடத்தலின் அஃது அரசாட்சியிலிருந்தது கி. பி. மூனறும நூறறாண் டின் நடுவுக்கு முன்னரே யாமென்பதூஉம, அந் நூறறாண் டின் நடுவுக்கு முற்சென்ற காலத்தில் மாளுவ நாட்டை அரசுபுரிந்த அரசர் வரிசையிற் கண்ணகிவிழுவுக்கு வந்தவ ராகக் கொளளப்படுதற் குரியார், முதற் கயவாகுவென்னும் இலங்கைவேந்தன் காலத்தவரான சகசத்திர பதியரசர்

மூவரில் ஒருவனும அவற்குறவினனன 'கௌதமீபுத்ர யஜ்ஞஸ்ரீ' எனனும ஆந்திர மனனனுமேயாவரென்பதூஉம், அவரது காலங் கி. பி. களகூ-க்கும ககூஉ-க்கும இடைப் பட்டதேயாகலின அதன்கண் அழிந்துபட்ட கடைச்சங்கங் கி. பி. இரண்டாம நூற்றாண்டின நடுவுக்கு முறபட்டதே யாகல் வேண்டுமெனபதூஉந் திண்ணமாய்ப பெறப்படும். ஆதலால், இவவுண்மை முடிபுக்கு மாறுகச் 'சேரன் செங்குட்டுவன' நூலார் அதனைக் கி. பி. ஐந்தாம் நூற் றாண்டினகட் படுபபிக்க விழைந்து செய்த போலியாராயச்சி பொருந்தா தொழிந்தமை காண்க.

இனிச, 'சிலபபதிகாரம,' 'மணிமேகலை' எனனும் பெருந்தமிழப பாட்டுடைச் செய்யுட்கள இயறறபபட்ட காலத்தை வகுத்தறகும, அதனவழியே அதறகுமுன் நிலவிய கடைச்சங்க காலதனை வகுததறகும நூறறுஙகா வைரவாளபோல் நினறு உதவிபுரிவதாகிய இலஙகை மன்னன முதறகயவாகுவின காலங கி. பி. இரணடாம் நூற்றாண்டின பிறபாதியிற் படுவதாதலை வரலாற்று நூலாசிரியரெல்லாரும ஒருபபட்டுரைகக காண்டலிற், கடைச்சங்க காலதனைக கி. பி. ஐந்தாம நூற்றாணடிற் படுப்பிக்க விழைந்த தமது கருத்துககு அது முழுமாறுய் நினறு தமதாராயச்சியினை இருகூறுயப போழந்து அவ் வாராயசசி உளளீடில்லா வெறறும புரையாய இருத்தலை காட்டுதலுணர்ந்த 'செங்குட்டுவன' நூலார் அவ் வைர வாளினையும நூறறுகவிடுதற்கு முயன்று, அம்முயற்சி கை கூடாவாறு அஃது அதனையும நாந்து பாழபடுத்த, அதனால் அவர் செயலறறுக கரைந்த கையறவுரைப் பெறறியுஞ் சிறிதுகாட்டுதும: இலஙகையரசரின வரலாறு கூஉ யுரைக்கும பொருட்டுப புத்த குருமார்களால் வரையப்பட்ட 'மகாவமசம' எனனும நூலினகண், முதற் கயவாகு வேந்தன சேரன செங்குட்டுவன காலதிருந் தனன எனபதனைக் காட்டுஙகுறிபபு ஏதுஙு காணபபட வில்லையெனறு 'செஙகுட்டுவன்' நூலார் கூறினர். புத்த சமயத்தினனகிய அம மன்னவன் கண்ணகியென்னும்

ஒரு கற்புடைமாதைத் தெய்வமாய்க்கொண்டு வழிபட்டா னுயின், அதனைச் சொல்லுதலிற, புத்த குருமார்க்கு விருப்பு நிகழாமை இயறகையேயாம. அவர் அது சொல் லாமையே பறறிக கயவாகுவேந்தன செங்குட்டுவன காலத் தினன அல்லனொனறல் யாங்ஙனம பொருந்தும? செங்குட் டுவனுல் எடுபபிக்கபபட்ட கணணகிவிழுவுக்குக் கயவாகு வேந்தன் சென்றதையுந், திருமபி அவன இலங்கைக்கு வந்தபோது கண்ணகியணிந்திருந்த பொற சிலமபினைக் கொணாந்து தனது வெறறியினை நினைவுகூர்தற் பொருட்டு ஆணடுகடோறும அவன நடபபித்த கொண்டாட்ட விழுவில் அப 'பத்தினிதேவி'யின் வழிபாட்டைச் சிறந் தெடுத்து வைத்ததையும, இன்றுங்கூடச் சிங்களவர்கள் அறங்கூறும மனறில் அச் சிலமபைத் தொட்டுச் சூளுரைப் பதையும நன்கெடுத்துக் காட்டி, முதற கயவாகுவேந்தன் சேரன செங்குட்டுவன காலத்தினனேயாவனொனறு திரு அருணசலம அவர்கள தாம டெரிதாராயந் தெழுதிய 'இலங்கை வரலாற்றின் முதற்குறிபபுகள்'[1] எனனும நூலில் இனிது விளக்கியிருகினறார்கள. கயவாகு மனனன கண்ணகி வழிபாட்டினை இலங்கைக்குக கொண்டு சென்ற வரலாறு 'மகாவமசத'திற குறிகபபடாவிடினும, அம் மகாவமசத்தைபபோலவே பழையனவாய இலங்கை வரலாறுக ளுரைக்கும 'ராஜரத்நாகரி,' 'ராஜாவளி' எனனும நூலகளில் அது குறிகபபட் டிருதலினு லனறே[2] அருணசலம் அவர்கள தாம எழுதிய அநநூலில் அக் குறிபபினை நனகெடுத்து விளக்குவாராயினர்கள. இவ் வாற்றுல் முதற் கயவாகுவேந்தன் சேரன செங்குட்டுவன் காலத்தினனே யாவனொனபதும அதனுல் அவனுஞ் செங்குட்டுவனுங் கி. பி. இரண்டாம் நூறறாண்டில் இருந் தவரே யாவரெனபதும, ஆகவே செங்குட்டுவனைக் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டிற படுப்பிக்க முயனற 'செங்குட்

1. 'Sketches of Ceylon History' by P. Arunachalam, M. A., (Cantab), 2nd edition, p 22.

2. 'See also Dr. Krishnaswami Aiyangar's 'The Beginnings of South Indian History,' p. 210 and first foot-note.

டுவன்' நூலாரது முயற்சி 'ஆடிக்காற்றி னிடைப்பட்ட பஞ்சுத்துய்' போற் பயனபடாது பறந்தோடிப் போயிற் றென்பதும வைரத்தூணென நாட்டப்பட்டமை காண்க.

இனித், தலேயாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன காலத்தவனை 'திதியன' என்னுந் தமிழ்மனனனேயுங, கி பி. சசுc-இல் இலங்கையை அரசாண்ட 'ததியன்' என்னுந் தமிழமன்னனேயுஞ் 'செங்குட்டுவன்' நூலார் ஒனறுபடுத்துரைத்து, அதனைத் தமது கோட்பாட்டுக்கு ஒருபெருஞ சானறாகக் காட்டித் தம தாராயச்சியினை முடித்திட்டார். 'ததியன' எனும் பெயர் வாய்ந்த மற்றொரு தமிழரசன கி. மு. கூ0-இல் இலங்கையை ஆண்டவன் எனபது அருணசலம அவர்களால் தமது 'இலங்கை வரலாற்று முதறகுறிபபுகள' என்னும நூலில் எடுத்துக்காட்டபபட் டிருககின்றது.[1] 'செங்குட்டுவன்' நூலார் தாமும் அதனேயே யெடுத்துக் காட்டினர். ஆகவே, 'ததியன்' எனப பெயர்பூண்ட இலங்கைத் தமிழ மனனர் இருவரில் ஒருவன கி. மு. கூ0-இலும, மறறொருவன அவறகு ஐந்நூறாண்டு பிற்பட்டுக் கி. பி. சசு0-இலும இருந்தமை புலனுகாகிறகும மற்றுத், தலேயாலங் கானத்துச செருவெனற பாண்டியன் நெடுஞசெழியனே கி. பி. முதல் நூற்றாண்டிலிருந்தவனென்பதை மேலே சு00-ஆம பககத்தில் விளக்கிக்காட்டினும. ஆதலால், அப் பாண்டியன் காலத்தவனுய்த் தமிழ்நாட்டிலிருந்த 'திதியன்' என்னும அரசனுக்கும, அவனுக்கு ஒரு நூறறாண்டு முனனும் நான்கு நூற்றாண்டுகள பின்னும் இலங்கையிலிருந்து அரசாண்ட 'ததியன்' எனப பெயர்பூண்ட அரசரிருவர்க்கும ஏதொரு தொடர்புங் காண்கிலம். திதியனுக்குந் ததியனுக்கும பெயரொற்றுமைதானும் இலது. வரலாற்றுநூலில், வெறும் பெயரொற்றுமை யொன்றே கொணடு ஒரு முடிபுசெய்தல் பொருந்தாதெனப் பல்காலுங் கரையாகிற்குஞ 'செங்குட்டுவன' நூலாரே, அபபெயரொற்றுமைதானும் இல்லாத 'திதியன்,' 'ததியன்'

1. 'Sketches of Ceylon History,' List of Kings facing p. 26.

எனனும அரசா இருவரையும ஒருவரெனத் துணிந்துரைப பது நகையாடுதற்கே ஏதுவாம. வெவ்வே றிடங்களி லும வெவவே று காலங்களிலும இருந்த அவவிருவரையும ஒருவரெனக கோடறகுப பிற குறிபபுக்களதாமும இல வாகவும, இயைதது ஒனறுபடுத்தறகு இயலா அவ விரு வரையும இயைதது ஒனறுபடுதத புககது, 'மொட்டைத் தலேககும முழந்தாளுக்கும முடிபபோடுவதோடு' ஒபபதா மனறி மறறெனனே? இஙஙனமாகக, கி பி. முதல்நூற றாண்டில் தமிழநாட்டினக ணிருந்த 'திதியன' எனனும அரசறகும, கி. பி. ஐந்தாம நூற்றாண்டில் இலங்கையி லிருந்த 'திதியன' எனனும அரசறகும தொடாபுகாட்டுதல் எவவாறமெனனும இயலாதாகலின, தமது வெற்றெணணமே கருவியாயக்கொணடு கடைச்சங்க காலத்தைக கி பி. ஐந்தாம நூறறாண்டிற படுபபிக்கபபுகுந்த 'செங்குட்டுவன' நூலாரது முயறசி, வாலாததினகண் ஓவியம வரையப புகுந்தார்தம முயற்சியோடொத்து வறிதாமமை காண்க. எனறிதுகாறும ஆராயந்து காட்டியவாறமெற, கடைச் சங்ககாலஞ 'செங்குட்டுவன' நூலார கூறியபடி கி. பி. ஐந்தாம நூறறாண்டினகட படுவதனறாய, கி. பி. இரண டாம நூறறாண்டிறகு முனனாதாவது ஐயுறவுககு இட னினறித் துணியபபடுதலிற, கி. பி. மூனறாம நூறறாண் டின்கணிருந்த மாணிக்கவாசகப பெருமான "உயர்மதிற கூடலின ஆயந்த ஒண்டீந் தமிழின றுறை" எனறு அச் சங்கத்தைக குறிபபிட்டு அருளிசசெயதது சாலவும வாயப புடைத்தாய மலேமேற கடடிய அரண்போல் நாட்டப படடமை தெளிந்துகொளக.

உகூ. திருத்தொண்டத்தொகையும் திருவாதவூரடிகளும்

இனித, திருத்தொணடத தொகையில் திருவாதவூ ரடிகள குறிபபிடபபடவில்லே யெனறும, அதனகட் சொல்லபபட்ட 'பொயயடிமையில்லாத புலவர்' என்பார் கடைசசங்கத்திருந்து தமிழாராயந்த 'கபிலா,' 'பரணர்,'

'நக்கீரர்' முதலான புலவர் கூட்டத்தவராகிய தொகை யடியாரே யாவரல்லால் தனியடியாராகிய திருவாதவூரடிக ளாதல் செல்லாதெனறும், திருவாதவூரர் தமது காலத் துககு மூந்தியவராறை சுந்தரமூர்த்திகள தாம அருளிய அத் திருத்தொண்டத் தொகையில் அவரைச் சொல் லாது விடார் எனறும, ஆகவே சுந்தரமூர்த்திகள திருந்த கி. பி. எட்டாம நூறறுண்டிறகுப பின்னரேதான திருவாத வூரடிகள திருந்தாராகல் வேண்டுமெனறும் 'தமிழ வர லாறு' உடையார் கூறிய பகுதியினை ஆராயவாம: திருத் தொண்டத தொகையிற போந்த 'பொய்யடிமையில்லாத புலவரைத்' தனி யடியாராகக் கொளளாமல் தொகை யடியாராகக் கொளளல் வேண்டுமெனபதறகு இவர் காட்டிய சானறு எனனையெனிற்,

> "கூட்டம்ஒன் பானே டறுபத்து மூன்று தனிப்பெயரா
> ஈட்டும் பெருந்தவத் தோர்எழு பத்திரண்டு."

எனறு நமபியாண்டார நமபிகள தாம பாடிய 'திருத் தொண்டர் திருவந்தாதிச்' செயயுளில் 'தொகையடியார் ஒனபதினமா' எனவும், 'தனியடியார் அறுபதுமூவா' எனவும் கூறியதேயாம. சுந்தரமூாதி நாயனார் இருந்த போது அவரோடு உடனிருந்து அவரது கருததை அவர் பாற கேட்டறிந்தவராயினை, அல்லது அவாதம மாணைக்கர் மரபில்வந்த ஒருவாபால் அதனை உசாவி யறிந்தவராயின நமபியாண்டார நமபிகள கொண்ட பொருளே நாயனார் கருத்தெனறல வாயவதாகும. சுந்தரமூர்த்தி நாயனரோ கி. பி. எட்டாம நூற்றுண்டின ாறறி லிருந்தவா ; நமபி யாண்டார நமபிகளோ அவர்களுபபின இருநூறறுண்டு கழித்துக் கி. பி. பத்தாம நூறறுண்டின ாற்றில் இருந் தவர். ஆதலால், நம்பிகள நாயனார் கருத்தை அவர்பால் நேரேயிருந்து கேட்டவர் அல்லரெனபது புலனம. அங்ஙன மில்லையாயினும், நாயனார்தம் மாணைக்கர் மரபில்வந்த ஒருவர்பால் நமபிகள அதன் பொருளைக் கேட்டாரோ வென்றல், திருத்தொண்டர் திருவந்தாதியின் முதற்கண் உள்ள,

"பொன்னி வடகரை சேர்நாரை யூரிற் புழைக்கைமுக
மன்னன் அறுபத்து மூவர் பதிதேம் மரபுசெயல்
பன்னஅத் தொண்டத் தொகைவகை பல்கும் அந்தாதிதனிச்
சொன்ன மறைக்குல நம்பிபொற் பாதத் துணைதுணையே"

எனனுஞ சிறபபுபபாயிரச் செயயுளால் நமபிகள அங்ஙனம அதனை ஒருவர்பாற் கேட்டவரல்லர், திருநாரையூரிலுளள பொல்லாப பிளளையாரு அருளால் அதனை யுணர்ந்தவ ராவரெனபது பெறபபடும. கடவுளிடத்து அனபுமிக்கவர் செயத ஒரு நூலைக கடவுளே அருளிச்செயததாகக் கூறு வது பிறகாலத்தவர் வழக்கமாகும. ஆகவே, திருத் தொண்டத தொகையிற போந்த 'பொயயடிமையில்லாத புலவரை' நமபிகள தொகையடியாராகப பொருளசெய்து கொணடது தம துளளத்திற பட்டபடியேயாம; அவரு அவவாறு செயதுகொண்ட பொருளே சுந்தரமூர்த்தி நாயனரது கருத்தெனபது அடாது. எனனை? சுந்தர மூர்த்தி நாயனர் 'பொயயடிமையில்லாத புலவர்' எனப தனால் இறைவனைப பாடிய புலவர் கூட்டத்தினையே கூறல் கருதினராயின, அவர திருத்தொண்டத் தொகையின பத்தாஞ செய்யுளிற "பரமனையே பாடுவர ரடியார்களும அடியேன" எனறு மீணடும அதனையே கூறுவாரல்லர். ஆகவே, 'பொயயடிமை யில்லாத புலவர்' என ஏழாஞ செயயுளிலும, 'பரமனையே பாடுவார்' எனப பத்தாஞ செய யுளிலுங கூறபபட்ட அவவிருவேறு சொறறொடாகளுக்கும ஆசிரியனகொணட பொருளைத் துணிதறகு, அச் சொற றொடர்கள நிறகும இடங்களின இயல்புணர்தலே கருவி யாகும. 'பொய்யடிமை யில்லாத புலவர்' எனனுஞ சொற றொடர் நிறகுஞ செயயுளிற் சொல்லபபட்ட 'புகழசோழர்,' 'நரசிங்க முனையரையர்,' 'அதிபத்தர்,' 'கலிக்கமபர்,' 'கலியர்,' 'சத்தியார்,' 'ஐயடிகள காடவர்கோன' எனனும் ஏனை நாயனமார் எழுவருந் தனியடியாரேயல்லால், தொகையடியாரல்லர்; தனியடியாரைச் சொல்லும இச் செயயுளிற 'பொய்யடிமையில்லாத புலவர்' என்பதனாறு மட்டுந் தொகையடியாரைச் சுட்டுமென்றல் ஆக்கியோன கருத்துக்கு மாறுவதாம. மறறுப், 'பரமனையே பாடுவார்'

என்னுஞ் சொறிருடா நிறருஞ் செயயுளிறபோந்த 'பத்த ராயப பணிவார்கள,' 'சித்தத்தைச் சிவனபாலே வைத் தார்கள,' 'திருவாரூர்ப பிறந்தார்கள,' 'முபபோதுந் திரு மேனி தீண்டுவார்,' 'முழுநீறு பூசிய முனிவா,' 'அப்பாலும அடிச் சார்ந்தார்' எனனும அடியாா அறுவருமோ தொகையடியாரே யாதல எல்லாராகும ஒபபமுடிந்த தொனருமம. " தில்லைவா ழந்தணர்" எனனும் முதற பாட் டொனறிற றவிரத், தனியடியாரைக் கூறும ஏனை யொனபது செயயுட்களில் எஙகுந தொகையடியாரை இடைமடுத்து ஆசிரியன உரைபபக காணகிலம தொகை யடியாரை ஒருஙகு தொகுதது கூறும " பத்தராயப பணிவாாகள" எனனும ஒரே செயயுளில் வேறு தனியடி யாரை இடைபபுகுதது ஆசிரியன மொழியவுங காண்கிலம. ஆகவே, தனியடியாரைக கூறும பாட்டுகளில் தொகை யடியாரையுந், தொகையடியாரைக் கூறும பாட்டில் தனி யடியாரையும மொழிதல சுந்தரமூாதது நாயனாக்குக கருத்தனமை தெளிகிற புலனுகினறதனறே ? அறறேல், " தில்லைவா ழந்தணர்" என்னும மூதறபாட்டின முதலில் தொகையடியாரும, அதனபிற றனியடியாரும மொழியப படுத லென்னையெனிற கூறுதும: சிவபிரான றிருவடிக கண் மெயயனபுடையராய ஒழுகிய திருத்தொண்டரைப பாடுதற்குச் சுந்தரமூர்த்திகள விழைவுமீதூர்ந்து நினற வழிச், சிவபிரானே " தில்லைவா ழந்தணாதம அடியார்க கும் அடியேன" எனறு முதலடி எடுதது கொடுத்துத் திருத்தொணடத்தொகை பாடுமாறு அவாகளுக் கட்டளை யிட்டருளின தென்பது,

" தொல்லைமால் வரைபயந்த தூயாடன் றிருப்பாகன்
அல்லல்தீர்ந் துலகுய்ய மறையளித்த திருவாக்கால்
தில்லைவா ழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்என்
றெல்லையில்வண் புகழாரை யெடுத்திசைப்பா மொழியென்றார்."

எனவும்,

" தம்பெருமான் கொடுத்தமொழி முதலாகத் தமிழ்மாலைச்
செம்பொருளாற் றிருத்தொண்டத் தொகையான திருப்பதிகம்

உம்பர்பிரான் முனருளும் உணர்வுபெற வுலகேத்த
எம்பெருமான வன்றொண்டர் பாடியவ ரெதிர்பணிந்தார் ''
(தடுத்தாட்கொண்ட புராணம், ககூக, உ0உ)

எவ்வுஞ சேககிழார பெருமான அருளிசசெயதவாற்றல் நன்கறியபபடும. படவே, திருதொணடத் தொகை மூதறசெயயுளின முதலடிகளண உள்ள ''தில்லைவா ழந்த ணாதம அடியாராகளும அடியேன'' எனனுஞ சொறறொடர் சுந்தரமூரதிகள செயத தனறென்பது பெறறும. பெறறவே, தனியடியாரைக கூறறும உம முதற செயயுளில் அது வந்தமைபறறி ணடைகளகாவதோ இழுக்கில்லை யெனன விடுகக.

நனறு சொனனீர், மகளள அறிவிணற செய்தறகளி தாகிய ஒருபாட்டுகளு இறைவனே முதலெடுத்துகொடுத் தானென்றல் நமபறபாலதனறு ; அக கதையின கருத் தெனனெனனுற, சுந்தரமூர்தி நாயனார் திருத்தொண் டத்தொகை பாடும விழைவினராய அதனண எவவாறு துவங்குவதெனறு ஆராயந்துகொண்டு கிறகையில், அவர்களு அருகே கினறாரில் ஒருவா தற்செயலாயத் 'தில்லைவா ழந்தணா' எனறு சொல்லகேட்டு அதனனயே இறைவனெடுதது கொடுத்ததாக உட்கொண்டு அதனண முதற்கண நிறுத்துப பாடினாரா தல் வேண்டுமெனக் கோடலே அதன கருததாவதாமெனின, அஙஙனமாக கொளவார் கொளக ; அவவாறே கொளளினுங் 'தில்லைவா ழந்தணார்' எனற தொகையடியாரைக் குறிக்கும் அச் சொறறொடர சுந்தரமூர்திகள அருளியதன்றெனபதே பெறபபடுமாகலின அதுவும எமது கொளகையினையே வலியுறுத்துமெனற வுணர்க.

அறறன்று, தேவாரப பதிகஙகளுள எதனனப பாடத் துவஙகினுங் தில்லைகளண உளள 'திருசசிறறமபலம' எனப தனனச் சொல்லியே துவங்குதல் தொன்றுதொட்ட வழக் காயப போதரக காண்டலின, ஏனையெல்லாப பதிகளினும் உளள அடியாரைச சொல்லுதறகுமுன தில்லையம் பதிக்கண் உளள தொகையடியாரையுந் தனியடியா ரொரு

வரையும ஒருங்கெடுத்து மொழிதல் வேண்டுமென்னுங கருத்துப பறறியே அப பதிகங்கண இருந்த தில்லைவா ழந் தணராகிய தொகையடியாரையும், திருநீலகண்ட நாயனு ராகிய தனியடியாரையுஞ சுந்தரமூர்த்திகள ஒருங்கெடுத்து முதற்கண்வைதது ஓதுவாராயிலை ரெனின; அவ்வா றுரைபபினும், தனியடியாரைக் கூறுஞசெயயுளில் தொகை யடியார் குழுவொனறைக் கூறுமாறு தமது கருத்துககு முரணுப் நினறு தமமை வலிந்தேவும ஒரு சிறந்த ஏதுவின வழிபபட்டே சுந்தரமூர்த்திகள அஙஙஙனம் 'தில்லைவா ழந் தண'ராந் தொகையடியாரை அம முதற செயயுளின முதற கண் வைத்து ஓதலாயினு ரெனபதே கொளளக கிடக்கு மாதலின, அதைப போலவே 'பொயயடிமை யில்லாத புலவ'ருந் தொகையடியாராயின அவா தமமைத தனியடி யார்வரிசையி னிடையே பகுத்துரைத்தறகு அவர்தமமை அவ்வாறு வலிந்தேவுஞ சிறந்த பிறிதோர் ஏது வேண்டப படுமன்றே; மற்று அதறகு அஙஙஙஞ் சிறந்த பிறி தோரேது ஒருவாறருணும பெறபபடாமையின, தனியடி யாரை மொழியும ஏழாஞ செயயுளிற் போந்த 'பொய யடிமை யில்லாத புலவர்' எனபாருந் தனியடியாரே யாவரல் லாற றருகையடியா ராதல் செல்லாதெனறு கடைப பிடிக்க.

அதுவேயுமனறித், தில்லைக்கணுளள அடியாரை முதற்கண் வைதது ஓதுங் குறிபபினராயே சுந்தரமூர்த்தி கள 'தில்லைவா ழந்தணரை' முதலாக வெடுத்துத் திருத் தொணடத் தொகை அருளிச செய்தாரெனக் கொள வார்க்குந், தில்லைக்கண் உளள தனியடியாரான திரு நீலகண்ட நாயனுரை முதறக ணுரையாது, தொகையடியா ரான தில்லைவா ழந்தணரைப பினறொடருந் தனியடியார் வரிசையினினறும வேறு பிரித்து முதலெடுத்தது, திரு நீலகண்ட நாயனுர் தொடஙகி ஒனபதாஞசெய்யு ளிறுதி காறுந் தாமபாடும அடியார் அத்தனபேருந் தனியடியா ராகவே இருத்தல் வேண்டுமெனக் குறித்த தமது கருத் துக்கு மாறுகாமற் றனியடியாரை யெல்லாம ஒருவரிசைப்

படவைத்தற் பொருட்டும, அவருளளுந் தில்லையம்பதிக் கண் உளள தனியடியாரான திருநீலகண்ட நாயனாரை அத தனியடியாா வரிசையில் முதல் நிறுத்துதற் பொருட்டுமோ யாமெனபது கொளளல்வேண்டும. அங ஙனங கொளவழியுந், தில்லைவாழந்தணாகளுப்பின ஒனப தாஞ செயயுளிறுதிகாறுங கூறபபட்ட அடியாரத்தனை பேருந் தனியடியாரே யாவரெனவும, அதனால் அவ் வரிசையினிடைபபட்ட பொயயடிமையில்லாத புலவருந் தனியடியாரே யாவரெனவுங கொளளும எனது கோட் பாடே நிலைபெறுதல் காண்க.

அறறனறு, தில்லைக்கண வாழ்வாராயினுங குயவா இனத்திற சேர்ந்த திருநீலகண்ட நாயனாரினும, அந்தண வகுபபினராகிய 'தில்லைவாழந்தணா' சிறந்தமையிற சுநதர மூர்த்திகள அவரையே முதறகண வைதது ஓதுவாராயினா ரெனின, னனறு சொனனாய, அடியாருள இனனவா உயர் குலத்தா, இனனவர் இழிகுலத்தா எனப பிறபபு வேறறுமை பறறிய உயர்விழிவுகளை ஒருசிறிதுங கருதாது, தாம அந்தண குலத்திற பிறந்தவராயிருநதுஞ சுந்தர மூாத்திகள அவவடியவ ரெல்லாரையும ஒதத சிறபபின ராகவே கருதி, அவரெல்லார்கருக்குந் தனிதத்தனியே தாம அடிமையாதலை மெயபெறக கிளந்தோதி யிருத்தலாலும; பதியிலாா குலத்து வந்தாராகிய பரவை நாசசியாரையும வேளாள குலத்திற பிறந்தாராகிய சங்கிலி நாசசியாரையும அவா திருமணம புரிந்து சாதிவேறறுமையின்றி ஒழுகின மையாலும; வேளாணகுலத்தினா ராகிய ஏயர்கோன கலிக் காமநாயனார தமபால் அருவருப்புடையராயிருந்துங தாம அவர்பாற் பேரனபு பூண்டு அவரைக கண்டு வணங்கச் சென்றமையாலுஞ; சாதியுயர்வு கருதியே அவர் தில்லைவா ழந்தணரை முதற்கணைடுத் துரைத்தா ரெனறறுத் தினைத்தனைச சானறும அவர் அருளிச்செயத திருப பதிகங்களிலாதல் அவர்தம வாழ்க்கையிலாதல் காணப் படாமையாலும்; அந்தணரெனனும் உயர்வுபற்றித் தில்லைவாழந்தணரை முதறகணைடுத் தோதினரென்னும

அவ்வுரை சுந்தரமூர்த்தி நாயனார் திருவுளக்கிடைக்கு முற்றும் மாறாய அடாத வுரையாமென் றெழுதுக.

'திலகவதி முந்தணர்' என்னுஞ் சொற்றொடர் முதல்வனால் எடுத்துக் கொடுக்கப்பட்டதாகாமற் சுந்தர மூர்த்திகளாலேயே அமைக்கப்பட்ட தொனியுற இருக்குமாயின், தாம் ஓரியற்படக் கூறக் கருதிய தனியடியார் வரிசையினிடையே தொகையடியார் ஆகிய 'திலகவதி முந்தணரைப்' புகுத்தல் முறையாகாமை கண்டே, அவரை அவர் அத் தனியடியார் வரிசையினின்றும் வேறுபடப் பிரித்தெடுத்து முதற்கண் வைத்து மொழிந்தாரென்க. கோடலே எல்லா வாற்றானும் இயைவதாமென்று கடைப்பிடிக்க.

எனவே, தனியடியார் வரிசையினிடைப்பட்ட 'பொய்யடிமை யில்லாத புலவர்' என்பார், தமது செந்தமிழ்ப் புலமைத் திறத்தால் 'திருவாசகம்,' 'திருச்சிற்றம்பலக் கோவையார்' எனும் ஒப்புயர்வில்லா முழு மாணிக்கங்களை உலகிற்கு இரியவுஞ் சிவவொளி சுடர்ந்து திகழ்வுந்தந்து, அவ்வாற்றால் 'மாணிக்கவாசகர்' எனும் அருமைத் திருப்பெயர் பூண்டு, "உளமேன் பிறதெய்வம் உன்னியல்லா தெங்கள் உத்தமனே" எனும் முழுமுதற் கடவுளாஞ் சிவபெருமானை ஒருவற்கே மெய்யடிமைத் திறம் பேணிய திருவாதவூரடிகளே யாவரல்லாற பிறராகாமை இணையுமென்று தெளிந்துகொள்க. அச் சொற்றொடர் இவ்வாறு திருவாதவூரடிகளையே யுணர்த்துதல் அறியாராய, அது கபிலர் பரணர் நக்கீரர் முதலான கடைச்சங்கப் புலவரையே குறிக்குமெனக் கூறிய நம்பியாண்டார் நம்பிகள் கூற்றுப் பிழைபடுகின்றமையின், அது கொள்ளற்பால தன்றென விடுக்க. நக்கீரர் முதலான கடைச்சங்கப் புலவர்கள் "பரனையே பாடுவார்" எனுந் தொகையடியார் குழாத்துள் அடங்குதலின், அவரையே மீண்டுங் கூறுதல் சுந்தரமூர்த்தி நாயனார்க்குக் கருத்தாகாமை வெளிப்படை மதிபோல் விளங்கற்பாற்று.

அற்றேல், நம்பியாண்டார் நம்பிகள் திருநாரையூரின் கண் எழுந்தருளியிருக்கும் பொல்லாப் பிள்ளையார்பால்

திருத்தொண்டர் வரலாறுகளைக் கேட்டுணர்ந்தாரைத் திருமுறைகண்ட புராணங் கூறுதலின், 'பொய்யடிமை யில்லாத புலவர்' எனப்பதற்கு நம்பியாண்டார் கண்ட பொருள் இறைவனை யுணர்த்திய தொன்னூல் வேண்டும்; வேண்டவே, நம்பிகள் திருத்தொண்டர் மேலே சொல்லிய குற்றம் இறைவனையுஞ் சார்ந்தாலெனின், திருத்தொண்டத் தொகையிற் போந்த அடியாரின் வரலாறுகளை ஒருவர் தெரிதல் வேண்டினாராயினும் அவர் தாங்கு காலத்துள்ள கலவி யறிவுடையரா யிலரை விரைவினில் அவை தம்மை நன்கறிந்து கொள்ளலாம் நம்பியாண்டார் நம்பிகள் இருந்த காலத்தில் இச் செந்தமிழ் வளநாடு சேர சோழபாண்டிய ரென்னுந் தமிழ் வேந்தரது ஆட்சிக்கீழ் தாய்த் தமிழக கல்வியிலும் நாகரிகத்திலும் மிகவுஞ் செழிப்புற்றிருந்தது. சைவசமய உணர்ச்சியிலும் வைணவ சமய உணர்ச்சியிலும் நிரம்பிய தேவாரந் தந்த நல்லிசைப புலவர்களும் ஆங்காங்குத் தோன்றித் தோன்றி மலிந்திருந்தார். பல்வகைக் கலை நூல் அறிவு நூல்களை ஓதுவார் தொகையும் விஞ்சி நின்றது. இவ் வுண்மை, நம்பியாண்டார் நம்பிகளை தாம் அருளிச்செய்த திருத்தொண்டர் திருவந்தாதியில்,

"மறைபயில்வார் மன்னு வியாகரணக் கேள்வித்
துறைபயில்வார் தொன்னூல் பயில்வார்—முறைமையினால்
ஆகமங்கள கேட்பார் அருங்கலை நூல் ஆதரித்துப்
போகம் ஒடுங்காப் பொருள் துய்ப்பார்—சோகமின்றி
நீதி நிலையுணர்வார் நீள்நிலத்துள் ஐம்புலனுங்
காதல் விடுதலுங்கள் காமுறுவார்—ஆதி
அருங்கலை நூல் ஓதுவார் ஆதரித்து வென்றிக்
கருங்கலியை நீங்கக் கனல்வகுப்பார்—ஒருங்கிருந்து
காமநூல் கேட்பார் கலைஞானங் காதலிப்பார்
ஓமநூல் ஓதுவார் உத்தரிப்பார்"

எனறு கூறுமாறறால் இனிது விளங்கா நிறகும இத் துணை நூறபயிறசியும, அறிவுமிக்கார் குழுவும மலிந் தோங்கிய காலத்தில் திருத்தொண்டர் வரலாறுகளை

அறியாதாரும இருபபரோ? இராரனறே. நாமிருக்கும இக்காலந் திருத்தொண்ட ரிருந்த காலத்திற்கு ஆயிர மாண்டு பிற்பட்டதாயிருந்தும், திருத்தொண்டர் புராணத் திற் காணபபடாத வரலாறுகளகூட இன்னும அறிவுடை யார தமக்குள வழங்கக காணடுமன்றே. இத்துணைப பிற் பட்ட காலத்திலேயே அவ வரலாறுகள தொடர்ந்து வழங்குமாயின, இறனறக்குத தொளளாயிர ஆண்டுகட்கு முனனரேயே அத திருத்தொண்டரது காலத்திறகு அண்மையிலிருந்த நமபிகள காலத்தில் அவை யினனும எத்துணை மிகுதியாய வழங்கியிருத்தல் வேண்டுமம! ஆதலால், அவை மிகுவழங்கிய அப பழங்காலத திருந்த நமபியாண்டார நமபிகள அவ வரலாறுகளை அருளாலன நிருந்த சைவசமயச சான்றோரபால் வினவியறிந்தாரெனக் கோடலே மெயமமையாகுமனறிப, பொல்லாப பிளளையார் பால் அவைதாமமக கேட டுணாந்தாரெனறல வெறுமை பொயககதையே யாகுமெனறு கடைபபிடிகக. நமபிகள இருந்த காலததில், தமிழகமற்ற சானறோருந் தமிழநூல் களுந் தமிழப பயிறசியும அறவே யில்லையாயொழியி லனறே, அத்துணை வறுமை பாழாயபபோன காலததிற புதிது தோனறிய நமபிகள ஒருவர்கபப, பொலலாப பிளளையாராகிய தெயவமே அருளகனிந்து முனனினறு அவ வரலாறுகளை அறிவுறுத்திற றெனறுகோடல் பொருந்தும. அவர இருந்த அக காலம அஙனமமை வெறுமை பாழாதலினறிக கறறுவலல சானறோர கூட்டங களால் நிறைநதுகிடந்தமை நமபிகள அருளிசசெயத பாட்டினாலேயே நனகு பெறபபடுதலாற, கறறுவலல மகக ளறிவினல் ஆகறபாலனவறறிற கெல்லாங் கடவுளை வலிந் திழுத்துக கடடிய கதைகள படுபொயயெனவே விலக்கற் பாலனவாமெனக. இஞஞானறு நமமனோரில் அறிவிற சிறந்தாராலுங் கண்டறியபபடாது மறைந்துகிடந்த நீராவி, மின எனபவறறின ஆறறலகளையெல்லாங் கண்டறிந்து, 'இவை தெயவத்தா லனறி மககளாலுஞ செயயபபடுமோ!' என்று வியக்கத்தக்க வாருமபொறிகளை (இயந்திரஙகளை) அமைத்து, அப பொறிகளில் அவவாற்றல்களை யுய்த்துச்,

செயற்கருஞ செயல்களீயெல்லாஞ செயது போதருமை மேனுட் டறிஞர் தாங்கண்ட நுட்பங்களுக்கெல்லாங் கடவுளீ முன்னிழுத்துப பேசாதிருக்க, இந் நுட்பங்களிலும இவறறையறியுமை அறிவின திறங்களிலும, எட்டுணைதானும இலவாயக், கலீவல்லாரை உசாவிய வளவானே அறியபபடுந் திருத்தொணடடா வரலாறுகளீ அறிதறகு மட்டுங் கடவுளீ முனனிழுத்துப பேசுதல் பினனுளளோர் கட்டிய வெறுமை பொயககதையாவதனறி மற்றெனனீ? ஆகவே, 'பொயயடிமை யில்லாத புலவர்' எனபதறகு நமபிகள செயதுகொணட பொருட்பிழை இறைவனீச் சாருமெனறல் ஆராயசசி யுணர்வில்லார் கூறறுமென விடுக்க.

அல்லதூஉம, நமபியாண்டார் நமபிகள அருளிச் செய்த 'திருத்தொண்டர் திருவந்தாதி'யை வழிநூலாகக் கொண்டு 'திருத்தொண்டர் புராணம்' எனனும பெரிய புராணததை அருளிச்செயத ஆசிரியர் சேகழிழார,

> "அந்த மெய்ப்பதிகத்தடி யார்களீ
> நந்தம் நாதனும் நம்பியாண் டார்நம்பி
> புந்தி யாரப் புகன்ற வகையினால்
> வந்த வாறு வழாமல் இயம்புவாம்."

எனனும நூறபாயிரச செயயுளில், நமபிகள அடியார் வரலாறுகளீப பொல்லாப் பிளீயார்பாற கேட்டுணர்ந்தாரென உரையாமல் 'அவர் தமது அறிவினாலேயே நிரமப ஆராயந்து புகனறனர' எனபது போதரப "புந்தியாரப் புகனற வகையினால்" எனறு விளங்க ஓதலின், நமபிகள 'பொயயடிமையில்லாத புலவர்' எனபதறகுக் கொணட பொருள தமமறிவிற்பட்டபடி கொண்டதேயல்லாமல் இறைவன உணாத்தியபடி யனறெனபது பினனும வலி பெறும. பொல்லாப பிளீயார நமபிகட்கு அடியார் வரலாறுகளீ யுணர்த்திய துண்மையாயின, அத்துணைச் சிறந்ததோர் அருளநிகழச்சியைச் சேக்கிழார சொல்லாது விடார். ஆகவே, அக் கதை சேக்கிழாருக்குப்பின வந்தாராற் கட்டிவிடபபட்டதாகுமென றுணர்ந்து கொளக.

அறமேலும்தாக, மேலே காட்டிய செய்யுள் பெரிய புராணத் திருமலைச்சருக்கத்தின் ஈற்றிற் காணப்படுதலானும, அத் திருமலைச்சருகளு சேக்கிழாரால் இயறறப் படாமற பிறகாலத்தவரால் இயற்றிச் சேர்க்கபபட்டதென நீரே பிறிதோரிடத்துக் கூறுதலானும, அச் செயயுளை ராண்டுச் சேக்கிழாரது மொழியாக எடுத்துக் காட்டுதல் நுமது கூற்றுக்கே முரணுமபோலுமெனின் ; அறறன்று, பெரியபுராணம என்னுஞ சார்புநூலுக்கு வழிநூலாவது இதுவெனக் காட்டும "அந்த மெய்ப்பதிகத் தடியார்களை" என்னுஞ் செயயுளும், அதறகு முதனூலாவது இன்னா தெனக் காட்டும் "மற்றிதற்குப் பதிகம வன்றெண்டா தாம" எனனும அதறகு மூனனுளள செயயுளும நூற பாயிரத்திற்கு இனறியமையாதனவாயிருத்தலின, அவை ஆசிரியர் சேக்கிழாராலேயே செயயபபட்டுத், "தெயவ வணக்கமுஞ் செயபபடுபொருளும், எயதுவுரை"க்குந் தற சிறப்புப் பாயிரமாய் நூனமுகத்தே "உலகெலாம' ஈன் னுஞ செயயுள முதலாக நிற்கும பகுதியில் நூறபெயர் கூறுவதாகிய "இங்கிதன் நாமமகூறின" எனனுஞ செய யுட்குபபின் நிறுத்தபபட்டனவாகும. சேக்கிழாருகுப பிற்காலத்தே வந்தாரொருவர் 'திருமலைச்சருக்கத்'தைப் புதிதாக இயறறி அதனைப பாயிரத்திற்குபபின்னே சேர்க் கின்றுழித் தமது கருத்துக்கு இசையுமாறு அச்செயயுட்க ளிரண்டனையும பிரிததெடுத்து அச் சருக்கத்தின் ஈறறில் வைப்பாராயினரென றுணர்தல்வேணடும. இஙஙனமே 'அநபாயசோழவேந்தன' சிறபபுக் கூறுவதாகிய "கையின மாண்மழவ" எனனுஞ செயயுளுஞ சேக்கிழாராற செய யபபட்டு 'வெளளானைச் சருக்கத்'தில் நினறதென்றுகும; திருமலைச்சருகுகம பாடிச் சேர்த்த பினனையோர தமது கருத்து நிரமபுமாறு அதனையும ஆண்டுநினறும பிரித் தெடுத்து இதன்கட் சேர்க்கலாயினு ரெனபதைச் 'சேக்கி ழாரும் பெரியபுராணமும' எனனும எமதாராயச்சியுரையில விளக்கிக் காட்டினமை ; அது நிறக.

அவையெல்லாம ஒக்குமாயினும், தெயவத்தனமை வாய்ந்த நம்பியாண்டார் நமபிகள 'பொயயடிமை யில்லாத

புலவர்' எனபதற்கு பெயரல்லாப பொருளசொலலிப பிழைபடுதலுங கூடுமோவெனின ; நமபிகள மெய்க்கலவி யிலுஞ சிவபிரான திருவடிபபேரனபிலுஞ சிவனடியாரன பினறிறததிலுஞ சிறந்த பெரியாரேயாயினுஞ, சைவசம யாசிரியரோடுஞ சேககிழாரோடுமெ ஒத்த தெயவப பெறறி யுடையரலலா. சைவசமயாசிரியா நால்வருமெ முழுமுதற கடவுளே நனவிலேயே நேரே கண்டவா, கடவுளின திரு வருட்டுணைகொணடு எவராலுஞ செயலாகா அரும பெரும புதுமைகளே நிகழத்தி முழுமுதற பெருமபொருளின உண்மையை நாட்டினவர் ; சேககிழாரோ இறைவனை தமககு "உலகெலாம" என முதலெடுதது கொடுக்கத் தாம திருததொண்டர் புராணம பாடத துவஙகினமை யைத தாமே நூறபாயிரத்தில,

"வெருளில் மெய்ம்மொழி வான்நிழல் கூறிய
பொருளின் ஆகு மெனப்புகல் வாமன்றே."

எனறு மொழிந்திருத்தலின அவருந் தெயவப்பெற்றி யுடையாரெனபது துணியபபடும. நமபிகளும இவரை யொதத தெயவபபெறறியுடையாரெனக் கோடறகுச் சானறு ஏதும இனமையினை, அவர் ஒரோவழிப பிழைபடு தலும இயறகையேயாம. எத்துணைப பெரியாரும பிழை படுதலுண்டெனபது தெருட்டுதறகெனறே தெயவத் திருவளளுவா,

"அரியகற்று ஆசற்றூர் கண்ணுந் தெரியுங்கால்
இனமை யரிதே வெளிறு."

எனறு அருளிசசெயவா ராயினரென்பது,

அறறுயினும, உமாபதிசிவாசாரியார் தாம இயறறிய 'திருமுறைகணட புராணத'தில், நமபியாண்டா நமபிகள பொல்லாபபிளளையாரால் இயறறிய புதுமைகளே எடுத் துககாடடி, அவா தெய்வப்பெறறியினரெனபது தேற றினாலெனின ; நமபிகள பொல்லாபபிளளையாரைக் கொண்டு மிக வியத்தகு நிகழசிகளே விளைவித்தது உண்மையாயின, அவர் தாமியறறிய 'திருநாரையூர் விநா

யகபபிளகூயார் திருவிரட்டைமாலை'யிலாதல் ஏனைத் தம பாடல்களிலாதல் அதனைச சிறிதாயினுங குறித்திருபபர். எனனை? சமயாசிரியர்க்கு நிகழந்த வியத்தகு அருள நிகழச்சிகள அவாதம பாடல்களில் ஆஙகாஙகுக குறிக் கபபட்டிருத்தல் காண்டுமாகலின. மறறு, நம்பிகள அருளிச்செயத நூல்களில் அத்தகைய குறிபபொன றுங காணப்படாமையானும, அவரது காலதைத யடுத்து வந்த ஆசிரியர் சேகழிழார், நமபிகளபொருட்டு நிகழ்ந்தன வாகச் சொலலபபடும அருளநிகழச்சிகளை ஒரு தினைத்தின தானுங குறிபபிடக காணுமையானும ஏதொரு சான்று மினறி அவைகளை வெறுஙகதையாகச் சொல்லுங் 'திரு முறைகணடபுராணம,' நுண்ணிய உணமையாராயசசி யில் தலைநின்றவருஞ சைவசித்தாந்த ஆசிரியரில் நாலாம எண்ணுமுறைமைகணண் நினறவருமான 'உமாபதிசிவாசி ரியர்' செயததாகாது; அவர்பெயர தாஙகிய வேறெவரோ ஒருவர் செய்ததாகல் வேணடும. இதறகுப பினனும ஒரு சானறு காட்டுதும: நம்பியாண்டார் நமபிகள தாம அருளிச்செயத 'திருநாவுக்கரசுதேவர் திருவேகாதசமாலை' யின் ஏழாஞசெயயுளில்,

"பதிகம்ஏழ் எழுநூறு பகரும்மா கவியோகி."

எனறு திருநாவுகரசு நாயனார திருவாயமலர்ந்தருளியன நாலாயிரதது தொளளாயிரம் பதிகஙகளேயென்பது தேறறகூறினர். மறறுத, திருமுறைகணடபுராணமோ கரு-ஆசு செயயுளில்,

"ஒருநாற்பத் தொன்பதினாயிரம தாகப்
பெருநாமப் புகலூரிற் பதிகங்கூறி."

எனை அரசுகள நாறபததொனபதினாயிரம பதிகஙகள அருளிச் செயதாரெனக கூறுகின்றது; நமபிகளுக்கு முன்னிருந்த சுந்தரமூத்தி நாயனாரும "இணைகொள ளெழுநூறிருபனுவல் நனறவன திருநாவினுக்கரையன்" எனறு திருநின்றியூர்த் திருபபதிகத்தில் அருளிச்செய திருக்கின்றனர். இதனாலும், 'திருமுறைகண்டபுராணம்'

ஆராயசியுணாவில்லாத ஒருவராற செயயபபட்டதொரு நூலெனபது இனிது புலனுதலின, சான்றெதுமினறி அதனகட் சொல்லபபட்ட வெறுங்கதையைக கொண்டு நமபியாண்டார நமபிகளீத தெயவபபெறறியுடையா ரெனகோடல் இழுகுகாமெனறுணர்ந்து கொளக. எனவே, தெயவபபெறறியுடையராகாத அவர் ஓரோவழி இழுகுதல் இயல்பேயாகலின அதுபற்றி அவர இகழப படார். அவர எமமலைரால் வழுதபபடும மாட்சிநனி யுடைய சைவபபெரியாரெனபதிலும ஐயம இலலையெனக. அத்துணைப பெரியாரேயாயினும அவர வழுவிய இடங களிலும அவரைப பினபறறி யாமும வழுவி எமது மெய யறிவையிழுத்தல் நனறுகாது. நமபிகளினுஞ சுந்தரமூர்தி நாயனரே பல்லாயிரமடங்கு சிறந்த தெயவமாட்சி யுடைய ராகலின, அவர அருளிசசெயத 'திருததொண்டத் தொகை'யிற போந்த 'பொயயடிமை யில்லாத புலவர' என்பதறகு அவரது கருத்தறிந்து உணமைபபொருள கோடலே சிறந்ததாகுமலலாமல, நமபிகளீபபினபறறி நாயனரது கருத்துககு முரணான பொருள கோடல் பெரிதும ஏதமாமெனக.

அதுவேயுமனறிப, 'பொயயடிமையில்லாத புலவர' எனபதறகு நமபிகள கொணடபொருளே அதறகுண்மைப பொருளாயின, அதனை வழிநூலாயக்கொணடு சாபுநூல் செயத ஆசிரியர் சேகிழார தாமும அதறகு அபபொருளே கொணடு பாடியிருததல் வேணடும. பொயயடிமையில் லாத புலவாகளு நமபிகள கொணடபொருள கபிலர், பரணர், நகீரர முதலான நாற்பத்தினபான சஙகப புலவரேயென்பது,

"தரணியிற் பொய்ம்மை யிலாத்தமிழ்ச் சங்க மதிற்கபிலர்
பரணர் நக்கீரர் முதனூற்பத் தொன்பது பல்புலவோர்
அருணமக் கீயுந் திருவால வாயரன் சேவடிக்கே
பொருளமைத் தின்பக் கவிபல பாடும் புலவர்களே.."

என்று அவர் திருத்தொண்டர் திருவந்தாதியிற் பாடிய

வாறருல் துணியபபடடும மறறுச் சேககிழார் அடிகளோ அதறகு நமபிகள கொண்டவாறு பொருள கொளளாது,

" செய்யுணிகழ் சொறறெளிவுஞ் செவ்வியநூல் பலநோக்கும்
மெய்யுணர்வின் பயனிதுவே யெனத்துணிந்து விளங்கியொளிர்
மையணியுங் கண்டத்தார் மலரடிக்கே யாளானார்
பொய்யடிமை யில்லாத புலவரெனப் புகழ்மிக்கார் "

எனப பொதுபபடக கூறிசசெனறார். இச் செயயுளிற 'பொயயடிமை யிலலாத புலவா' எனபா : சஙகபபுலவரே எனறு கூறபபடடாமையோடு, அவா பலரெனபது குறிகக படாமையும எனனை? யெனறு நுணுகி நோக்குமவழி, ஆசிரியா சேககிழாககு நமபியாண்டா நமபிகள கொண்ட பொருள பொருததமாகக காணபபடவிலலை யெனபது தானே போதருமு.

அறறேறற, 'பொயயடிமை யில்லாத புலவா' எனப பட்டார தனியடியாரே யாவரெனபதும, அவர் மாணிகக வாசகப பெருமானே யாவரெனபதுஞ சேககிழார்கருக கருததாயின அவைதமமை அவா ஏன வெளிபபடை யாகக கூறிறறிலரெனிற, சேககிழாககு எணணூறருணடு பிறபபட்டதாகிய இருஞஞானறுளள எமககு அவரது கருத னைதத துணிபுறக காடடும வலிய சானறு ஏதும காணப படாமையின, அதனை இனனதுதானெனன திண்ணமாயக காட்டுதல இயலா தெனவிடுகக. ஆயினுங், தமககுமுன வழிநூல் செயத நமபியாணடாா நமபிகள அதறகுப பொருநதாப பொருள கொணடமையானும, அவரொடு மாறுகொண்டு அதறகுத தாங்கொணட தனியடியார் எனனும பொருளை வெளிபபடையாக நாட்டுதலிற சேக கிழாககுக கருதறதாருபபா டில்லாமையானும அவர் அதனை வெளிபபடச சொல்லாது நெகிழந்தோதிவிட லானுரெனக. அல்லதூஉம, மாணிக்கவாசகப பெருமானை யும அவா அருளிச்செயத 'திருவாசகம,' 'திருச்சிறறம பலக கோவையார்' என்னும நூல்களையும இருஞஞானறு ஆங்காங்குளள வீரசைவர்களும, வீரசைவமடங்களின

குரவர்களும, சைவசமயாசிரியர் ஏனை மூவரினும் அவர் அருளிச்செய்த 'தேவாரமறை'களினும பார்க்க மிகுத்துக் கொண்டாடி வழிபாடாற்றி வருதலே உற்றுராயுமிடத்து, இவ்வழக்கந் தொனறுதொட்டு வருவதென்றெனபது புலனுகாகிறகும. வீரசைவமானது சைவசமயத்தினை வேறல் லாததாயச் சிவலிஙக வழிபாட்டில் மிக உறைத்து நிறப தொனறே யாயினும, அஃது இத்தமிழநாட்டிறகு உரிய தல்லாததாயக், கி. பி. இரண்டாம நூற்றாண்டு முதல் வடக்கிருந்து தமிழநாட்டிற குடிபுகுந்த வடுகக்கருநாடராற கொணரபபட்டதாகலின, இஙகிருந்த சைவசமயச் சான றோர் அதனைத தமது சமயததின் வேறுபடட தொன றுகவே கொணடொழுகலாயினர. கி. பி. இரண்டாம் நூற றாண்டின ாறறில வடுகநாட்டிலிருந்து தமிழநாட்டிற குடி புகுந்து வைகிய வீரசைவ மரபினர் பலருட், பாணடி நாட்டில் வைகிய ஒரு தெய்வப பாரபபனக குடியிலிருந்து மாணிக்கவாசகப பெருமான தோனறினமையாற் போலுஞ, சிவபெருமானுல் நேரே ஆட்கொளளபபட்டுச சிவமாய வயங்கிய அப பெருமான், கடவுள இல்லையென மறுத்து நாததிகம பேசிய இலஙகைப் பௌத்தர்களை நடுநில வழாமல் வழகறில் வெனறும், திருவாசகந் திருக்கோவையா ரெனனுஞ செழுந்தமிழ மறைதத்தோனறத் தம அருண மணவாயமலர் விண்டு அருளியுங, தில்லைச் சிறறம பலத்தே தோன்றிய சிவவொளியில இரணடறக் கலந்து சிவமாகியுந் தெய்வச சைவசமயாசிரியராய் வீறித்திகழந் தமை கண்டு, அவரைத் தமது மரபிற் பிறபபித்துக் கொளளும பெருந்தவம ஆறறிய வீரசைவச் சானறோர்கள அவரைத் தம முதலாசிரியராயக் கொண்டு அவரையும அவர் அருளிய தமிழ்மறைகளையுந் தம உயிர்போற கொண்டு வழிபாடுசெயது வருவாராயினர். இவவாறு, வடக்கிருந்துவந்து குடியேறிய வீரசைவமரபினரால் முத லாசிரியராய வைத்து மாணிக்கவாசகப பெருமான் வழுத் தபபடுதல் பறறியே, தமிழநாட்டிலிருந்த சைவசமயச் சான்றோர்கள் நெடுங்காலம வரையில் அவரைத் தமது சைவசமய குரவர் வரிசையில் வைத்துக் கொண்டாடிற்

றிலர். இதனாலேதான சுந்தரமூர்த்தி நாயனாரும அவரது திருபபெயரை விளஙகக்கூறுது 'பொயயடிமையில்லாத புலவர்' எனச சிறிது மறைத்துக் குறிபபாற கூறினாரதல் வேண்டும. சுந்தரமூர்தி நாயனாரது காலத்திற்குச சிறிது பினனே யெல்லாம வடகஙிருந்து வந்த வீரசைவத் திற்கும இங்நாட்டிலுளள சித்தாந்த சைவத்திறகும முன னிருந்த வேறறுமையுணாசசி மறைய, அவவிரணடிறகும உரியார் ஒருவரோடொருவர் ஒருஙகு அளவளாவி இருவர் கொணட சமயமும ஒருசமயமேயெனற உண்மை கணடு உறவுகலந்தமையின, மெல்லமெல்ல மாணிக்கவாசகரையும நாலாஞ சைவசமயாசிரியராக இஙகுளளார செல்லாரும ஒருபபடுதகொளளும பெரும்பேறறு பெறலாயினரெனக. சுந்தரமூர்த்திநாயனார் காலததும அவாகரு முறபட்ட காலத்தும இஙகிருந்த சைவசமயப பெரியார மாணிக்க வாசகபபெருமானே அவவாறு சைவசமய ஆசிரியராயக் கொண்டிலர்; அல்லதவவாறு கொணடனர எனபதறகுச் சானறும இனறு சுந்தரமூர்த்திகளுகுபபின படடினத் தடிகள அருளிசசெயத 'திருவிடைமருதூர முமமணிக் கோவை'யிலே தான (உஅ) முதனமுதல மாணிக்கவாசகப பெருமான ஏனை மூவரொடு சேர்தது நாலாமவராகச சொல் லபபட்டிருககினாரர். இந் நூலுடன 'பதினேராந் திரு முறை'யிற கோகபபடடிருககும ஏனை அருள நூல் வரிசை யில் நமபியாணடார் நமபிகள அருளிச்செயதிருககும நூல் களும இறுதியில் நிறுததபபடடிருகினறன. நமபிகள தாமியறறிய நூலகளோத தாமே ஏனைபபெரியார்தம நூல் வரிசையிற சேர்த்திரார் எனபது திணணம. நம்பிகள காலததிறகுபபின அவர்பால் மெயயனபு பூணடொழுகிய மறறொருவரே நமபிகளின நூல்களை அவற்றோடுடன் கோததாராகல் வேணடும. இதறகு, நமபிகள அருளிய 'திருதொணடர் திருவந்தாதி'யின துவக்கத்தில், நமபி களின திருவடித் துணையேவேணடிப் பாடியிருககும,

"பொன்னி வடகரை சேர்நாரை யூரிற் புழைக்கைமுக
மன்னன் அறுபத்து மூவர் பதிதே மரபுசெயல்

பன்னத் தொண்டத் தொகைவகை பல்கும்அந் தாதிதனைச்
சொன்ன மறைக்குல நம்பிபொற் பாதத் துணைதுணையே.”

என்னுஞ செயயுளே சானறும. இச செயயுளா இயறறின வா இனனரெனபதும இனனகாலத் திருந்தாரெனபதுங குறிககபபடாவிடினும, இச செயயுளிற போந்த பொல்லாப பிளளையார் கதையுந் ‘திருமுறைகணட புராணத்’திலுளள பொல்லாப்பிளளையார் கதையும ஒத்திருத்தலின, அத் திருமுறைகண்ட புராணம இயறறிய உமாபதிசிவாசாரியா ரெனபவரே இச செயயுளையும இயறறிச் சோதததுத், ‘திருத் தொண்டா திருவந்தாதி’யையும நமபிகள அருளிசசெயத ஏனை நூல்களையும பதினொராந் திருமுறையின ஈறறிற் கோத்தவரா யிருக்கலாமெனறு கோடல் இழுக்காது. இஙஙனம நமபிகளுக்குப பினவந்த ஓர் அன்பராற, பதி னொராந் திருமுறையின ஈறறில் நிறுத்தபபட்ட நமபிகளின நூல்களுததவிர, ஏனைப பெரியார்தம நூல்களெல்லாந் ‘திருமுறைகணட புராணங’ கூறுமாறு நமபிகளாலேயே கோக்கபபட்டன வென்பது உணமையாயின, அஙஙனங கோக்கப்பட்ட நூல்களுள ஒனறாய ‘திருவிடைமருதூர் மும்மணிக்கோவை’யும அதனாசிரியராய பட்டினததடி களும் நமபியாண்டார் நமபிகளிருந்த கி. பி. பத்தாம நூற றாண்டின இறுதிக்கு முறபட்டிருந்தமை பெறபபடும. பட்டினத்தடிகள தாம அருளிச்செயத அத் ‘திருவிடை மருதூர மும்மணிகோவை’யில்,

“வித்தகப் பாடல் முத்திறத் தடியருந்
திருந்திய அன்பிற் பெருந்துறைப் பிள்ளையும்.” (உஅ)

என்று திருஞானசமபந்தர் அபபர் சுந்தரர் என்னும் மூவரையும மாணிககவாசகரையும ஒருஙகு சேர்த்து ஓதி யிருககினறார. முதன மூவரை ஒரு தொகையாகக முனனும, மாணிக்கவாசகரொருவரை மட்டும அம் மூவாககுப பின்னுமாகவைத்து அவர் ஒதுதலே உற றுககாணுமிடத்து, அவர் காலததிறகு முனனெல் லாம அமமுதன மூவருமே சைவசமய ஆசிரியராய்க் கொளளபபட்டனரென்பதும், அவரது காலத்திலேதான்

மாணிக்கவாசகரும அம மூவரோடு நாலாமவராக வைத்துச் சைவ நன்மக்க ளெல்லாராலும வழுத்தபபடலாயினரெனபதும நனகு விளங்கா கிற்கும.

ாதிஙஙலமாகவும், 'தமிழ வரலாறு' உடையார், சைவ சமயாசிரியர் மூவருங காலத்தான் முறபட்டவராதல் பற்றி அம மூவரையும ஒருதொகையாக்கி முன்னும, மாணிக்க வாசகர் அம மூவாகளும பிற்பட்டவராதல்பற்றி அவரைப் பின்னுமாக வைத்துச் சைவசமயச் சான்ரோகள வழஙகு வாராயினரெனக் கூறினர். கால முறபிற்பாடு பறறி மூவர் முனனும மாணிக்கவாசகர் பினனுமாக வைக்கபபட்டது உண்மையாயின், மூவர் காலத்திறகும முனனிருந்தோரான 'திருமூல நாயனரை'யும அவர் அருளிசசெய்த 'திருமந்திர' நூலையும அம மூவர்க்கும அவர் அருளிச செயத 'தேவாரத் திருமுறைக'ளுக்கும முனனரனரை வைத்து வழஙகல் வேணடும? அறறனறு, திருமூல நாயனர் காலத்தால முறபடடவரேனும, கடவளுண்மையை மறுத்த பௌத்தரு சமணம முதலான புறசசமயங்கள வழக்கில் வெனறு சிவபிரானே முழுமுதற கடவுளாதலைப் பல வியத்தகு தெயவ நிகழச்சிகளால் நிலைநிறுத்திய நால்வரைபபோல் திருமூலா சைவவுண்மையினை நாட்டினவரல்லராகலின, அவர் அவர்க்குமுன வைக்கபபட்டில ரெனின; இதுவும எமது கொளகைக்கே துணை செயவதாகும; எனனின? சமயாசிரியர் நால்வரின வைபபு முறை அவரவர் சிறபபுபபற்றியே வைக்கபபட்டதல்லாமல் அவர்தங கால முற்பிற்பாடு பற்றியனறென்பதே எமது கோட்பாடாகலானும, நீர் எழுபபிய விஞவும் அக்கோட் பாட்டையே நுதலுதலானு மென்பது. மேலும், திருநாவுக்கரசு நாயனர் காலத்தால் திருஞானசமபந்தப பெருமானுக்கு முறபட்டவராயிருந்தும, அவர் அறிவு முதிர்ந்த முதுமைக் காலத்துரு சமண்சமயக் கோட்பாட்டின பொருந்தாமை யுணராராய அதன்கண் அழுந்திநிறப, ஞானசம்பந்தப பெருமானே பால்பருகுங் குதலைச் செவ்வாயக் குழவியாயிருந்த ஞான்றே அம்மையபபரை நேரே கண்டு அவரால் ஞானபபால் ஊட்டப்பெறறு எல்லாம் ஓதா

துணர்ந்த ஞானசிரியராய் விளங்கினமை கண்டே அக் காலத்திருந்த சானரோர் அவரை முன்னும் அப்பரை அவர்க்குப பின்னுமாக வைத்து வழிபட்டு வரலானரெனக. இவவுண்மையினை நனகாய்ந்துணரமாட்டாத 'தமிழ் வர லாறுடையார்,' திருஞான சமபந்தப பிளளையாா முதலில் அருளொளியிற கலநதமைபறறி முனனும, அதறகுச் சிறிது காலநகழித்து இறைவன நிருவடிபபே றெயதின மைபபறறி அபபா அவாக்குப பினனுமாக வைத்து வழுத்தபபட்டனரென்ரார; இவவாறுரைக்கினறுழி இவர் இடையிடையே வழுப்பட மொழிந்தனவும் பல; ஒரு காலத் தொருஙகிருந்த இருவரில் ஒருவர் முனனும மறறவா அவர்க் குப் பின்னுமாக இறைவன திருவடிநீழல் அடைந்தமை யினை ஓர் ஏதுவாக்கொண்டு முனனடைந்தவரை முன்னும பினனடைந்தவரைப பினனுமாக வைத்து வழஙகுதலை யாம யாண்டுங கேட்டிலேம, நூல்களிலாதல் ஆனரோர் வழக்கிலாதல அதறகுச சானறுங கணடிலேம். 'தமிழ வரலாறுடையார்' ஒருவரே இவவாறு பொருந்தாவுரை நிகழத்தக் கண்டேம. சிறபபுடைய இருவரில் ஒருவரை முனனும ஏனையவரைப பினனுமாக வைபபது, முன வைக்கபபட்டார் தனித்தலைமைச சிறபபுக் கெழுமினரா யிருத்தலும மற்றையார் அது கெழுமாராயிருத்தலும பறறியேயாம; இதுவே தொனறுதொட்டு ஆன ரோர் நூல்வழக்கிலும் உலகவழகிலும பிறழாது நடை பெறறும முறையாகும. இமமுறைககு மாறுகத் 'தமிழ வரலாறுடையார்' சமயாசிரியர் தமமுள ஒருவரை யுயர்த்து தலும மற்றொருவரை அவரிற றழுதது தலும அடாத செயலென்கினரார! ஏன் அடாதசெயலாம? அவரவர்க் குளள சிறப்புகளை உளளவாறு ஆராயந்தளந்து மிக்க சிறபபுடையாரை மிக உயர்த்துதலும, அத்துணைச் சிறப்பு வாயாதாரை அவர்க்கு அடுத்த நிலையில் வைத்து வழுத் துதலுங் குற்றமாமாறு யாங்ஙனம? தெய்வத் திருவளளு வரும,

> "பொதுநோக்கான் வேந்தன் வரிசையால் நோக்கின்
> அதுநோக்கி வாழ்வார் பலர்."

என்று பொதுநோக்கே குற்றமுடைத்தாதலும், அவரவர்க் குரிய வரிசைகருத்தக்க சிறபபுநோக்கே விழுப்பமுடைத் தாதலும் நன்கு தேற்றினுரல்லரோ ? ஏனையாசிரியரினும ஓராசிரியரைச் சிறந்தெடுத்துவைகரும் உண்மையாராயச்சி யால், அவரவர் பால் அனபு செலுத்துமுறை உண்மை வழிச் சென்று உறைத்து நிறகுமேயல்லாமல், அது பழுது படுதலும ஏனையோரை யிழிசுதலுமாய முடியுமோ? காதல் வழிநிறகுங கறபுடை மனையாள ஒருத்தி தன் காதல் கணவனெடொப்ப ஏனை யுறவினர்பால் தலைபபேரனபு செலுத்தாரல் அவரவாக்குத தகவாறு அனபுபூண் டொழுகுவளாயின, அது கணடார் அவளைப் புகழவரோ? இகழவரோ? எல்லாரும அவளைப புகழவதனறே செய்கு வர். அங்ஙமமமே, நம சமயாசிரியனமார எல்லாரையுங குருட்டுத்தனமாய ஒரேபடியில் வைத்து அன்புபாராட்டு தல் மெயயனபுகரு இழுக்காதல் உணர்ந்து, அவரவர்க் குரிய வரிசையில் வைத்து அவ்வவர்பால் உண்மையன்பு பூணடொழுகுதலே சாலச்சிறந்ததா மென்று உணர்ந்து கொள்க.

இவவாறு ஆசிரியனமார்க்குளள சிறப்பு முறையினை உண்மையான உணர்ந்து அம முறையைக் கடைபபிடித் தொழுகுவது எமமுயிரக குறுதி பயத்தல் பற்றியன்றே, இவ வாராயசியில் தலைநினறவராய சேககிழாரடிகள, முதனமுதல் திருநாவுகரசுநாயனுர் சீகாழியிற்போந்து திருஞானசமபந்தப பிளளையாரைக கண்டு வணஙகி அவ ரோடும அஙகுளள திருகடோயிலை வழிபடச சென்றுழி அவ விருவர்தம் தோறறத்தினையுங கூறபபுக்கவா அவ விருவர்களுளள சிறபபிலுமம வேறறுமை தோனறத் தெரிக்து,

“அருட்பெருகு தனிக்கடலும் உலகுக் கெல்லாம்
அன்புசெறி கடலுமா மெனவும் ஓங்கும்
பொருட்சமய முதற்சைவ நெறிதான் பெற்ற
புண்ணியக்கண் இரண்டெனவும் புவன முய்ய

இருட்கடுவுண் டவர்அருளும் அகில மெல்லாம்
ஈன்றருள்தன் றிருவருளு மெனவுங் கூடித்
தெருட்கலஞா னக்கனறும் அரசுஞ் சென்று
செஞ்சடைவா னவர்கோயில் சேர்ந்தா ரன்றே.''[1]

எனறு அருளிச் செயவாராயினர். இதன்கண அருட்கட லாவார் திருஞானசமபநதப பிளளீயாரெனவும, அனபின கடலாவார் திருநாவுககரசு நாயனரெனவும, இருட்கடு வுணட இறைவனருளே சமணிருள பருகிய திருஞான சமபந்தப பிளளீயாராவ ரெனவும, உலகெலாமீனற இறைவியினருளே தாணடகச செந்தமிழ பயந்த திருநாவுக் கரசு நாயனராவரெனவும ஆசிரியா சேககிழாா அவவிரு வர் தமக்குளளும உளள சிறபபில வேறறுமை காட்டுதலி உறறுநோகக வல்லாாக்கு, அருள எனபது கடவுட் டனமையாதல போல அதனேடொபபிகபபடட திரு ஞானசமபந்தப பிளளீயாருந தெயவ அருளமாடசி யுடைய ராதலும, அனபு எனபது அடியாராகுரிய தனமையாதல் போல அதனேடொபபிகபபடட திருநாவுககரசு நாய னரும அடிமைததிறததில தகிலகினற மாட்சியுடைய ராதலும பிரிநதினிது விளஙகாநிறகும இஙஙனமே இவ வாசிரியனமாா திருவரையுஞ சேககிழாா ஒருஙகுகூற நோந்துழி யெல்லாம, அபபரினும பாாககத திருஞான சமபந்தப பிளளீயாரை மிக உயாததுவைதது மொழிந் திருதததலி ஆஙகாஙகு நுணுகி யாராயநதுணாநது கொளக. இவவாறு சேககிழாா அவவிருவரில ஒருவரை ஏனையோரினும மிகுததுரைத்தல கொணடு, அவர் சமபந்தரிடததுப போல அபபரிடதது மிகக அனபு வைத் திலரெனச சொலலுதல் ஒககுமோ! அவா அடியாராகள அனைவரிடத்தும பேரனபு பூண்டொழுகுந் திறததினா ரெனபது அவா அவவவவடியாா அனபின றிறஙகளாக் கல்லும உருகப பாடியிருககுஞ செந்தமிழப பாககளால் இனிது புலனுகினறதனறே? இஙஙனமாகச் சேககிழாா அடியாரெல்லாரிடததும நெகிழாத பேரனபினராயினும,

1. திருநாவுக்கரசு நாயனார் புராணம். கஅடி

அவ்வடியார் தமக்குளளுந் தனிப்பெருஞ் சிறபபுடையார் தகைமைப்பாட்டினையும அவரா உண்மைவழாது ஆங்காஙகு நன்கெடுத்துக் காட்டும முறை எமமனனோரால் பெரிதும போற்றறபால தொனறுமெனபது.

இனித், திருநாவுக்கரசு நாயனாரே தமமினுந் திருஞான சமபந்தப பிளளையார் சிறந்தாராயிருததலை யெடுத்து மொழிந்து, அத்துணை மாட்சியுடைய அப பிளளையாா தம மோடு உடனநிறறலின அவர் பொருடடாகவாதல் இறை வன தனது திருவுருவினைத் தமது கட்புலனெதிரே காட்டி யருளுதல் வேண்டுமெனக் குறையிரந்து,

"திறக்கப் பாடிய என்னினுஞ் செந்தமிழ்
உறைப்புப் பாடி அடைப்பித்தா ரும்மின்னூர்
மறைக்க வல்லரோ தம்மைத் திருவாய்மூர்ப்
பிறைக்கொள் செஞ்சடை யாரிவர் பித்தரே"

என்று திருவாயமூர்ப பதிகம அ-ஆஞ செயயுளில் அருளிச் செயதிருத்தல் பெரிதும நினைவிற பதிகக்றபாற்று. இன னும், திருவாவடுதுறையிற சிவபெருமான திருஞான சமபந்தபபிளளையார்க்கு ஆயிரம பொனமுடிந்த கிழி யொனறு அருளசுரந்து அளித்ததனை அப்பரே மனங கசிந்து,

"காயிரும் பொழில்கள் சூழ்ந்த கழுமல ஊரர்க்கு அம்பொன்
ஆயிரங் கொடுப்பர் போலும் ஆவடு துறைய னாரே."
(திருவாவடுதுறைத் திருநேரிசை, க)

எனறு அருளிச் செய்தமையும எனறும நினைவுகூரற் பால தாகும.

இனி, இவவிருவர்க்கும பினனேவந்து, அடியாரனை வர்க்குந் தாம தனித்தனியே யடிமையாதலை மொழிந்து 'திருத்தொண்டத் தொகை' அருளிச்செய்த சுந்தரமூர்த்தி களும,

"வம்பறா வரிவண்டு மணநாற மலரும் மதுமலர்நற்
கொன்றையா னடியலாற் பேணு
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்."

என்று திருஞானசம்பந்தப் பெருமானை மிக உயர்த்துக் கூறினும்போல ஏனையடியாரைக் கூறிறறிலர். இவ்வாறு திருஞானசமபந்தா காலத்திருந்த அடியார்முதல் இற்றை ஞானறை வந்த இராமலிங்க அடிகள ாருன சான்ரோரெல் லாரும ஞானசமபந்தப பெருமானை ஏனை யெல்லாரினும பார்கக ரிகுத்து வைத்தே வணக்கவுரை ங்கழத்தக் காண்டலின, சமயாசிரியா நால்வரில் ஞானசமபந்தப் பெருமான முனவைத்து வழஙகபபட்டது ஏனையாசிரியரிற காணபபடாத தனிபபெருஞ சிறபபு அவாபாற காணப் படுதல் பற்றியேயாம; இவ் வுண்மையினை மறைத்து, அபபருக்குமுன சமபந்தர் இறைவன திருவடிநீழல் எயதி னமை கொணடே அவர் அபபருக்குமுன வைகபபட்டா ரெனக் கூரைந்ததும, சமபந்தரும அபபர் முதலான ஏனை யடியரும ஒருஙகொதத சிறபபினரே யாவரெனப பகுத் துணாநது பாராது பகர்ந்ததுந 'தமிழ வரலாறுடை யார்கு' ஏதமாமெனக. அபபரே தமது அருமைத் திரு மொழியால திருஞானசமபந்தரைத தமமினும மிக உயர்த்துவைத்துப பாடியிருதலானும, அக் குறிப் பறிந்து சேக்கிழாரும பலவிடஙகளிலும ஞானசமபநதரை அபபரினும பாக்க உயர்ததுக் கூறுதலோடு,

"தொழுதணிவுற் ருண்டஅரசு அன்புருகத்
தொண்டர்குழாத் திடையே சென்று
பழுதில்பெருங் காதலுடன் அடிபணியப்
பணிந்தவர்தங் கரங்கள் பற்றி
எழுதரிய மலர்க்கையால் எடுத்திறைஞ்சி
விடையின்மேல் வருவார் தம்மை
அழுதழைத்துக் கொண்டவர்தாம் அப்பரே
என அவரும் அடியேன் என்ரூர்."

எனறு ஞானசம்பந்தர் தெயவத்தலமை யுடையராதலும அபபர் அவர்க்கு அடிமைத்திறம் பேணும நிலையராதலும் விளஙகத் தேற்றுதலானும, நமமாசிரியன்மார் தாமே அவ் வாறு அவர் தமக்குட் காட்டிய சிறப்பியல் வேற்றுமைக்கு மாறுக அவரெல்லாரையும் ஒருபடியராக வைத்துரைத்தல் பெரியதொரு குற்றமாமென்க.

உள. அப்பர் சம்பந்தர் இருந்தகால ஆராய்ச்சி

அறறேலஃதாக, திருநாவுக்கரசு நாயனார் தாம் தழுவிய சமண்மதந் துறந்து சிவபெருமான் திருவருட் பேறறினே எய்திய ஞானறு முதுமைமிக்கிருந்தா ரெனப தறகுச் சானறென்னேயெனிற் கூறுதும : திருநாவுகரசு நாயனார் சிவபிரான் திருவருளாற சைவசமயததிறகுத் திருமபித் திருவதிகையிற சூலேநோய் தீர்ந்து அப பெருமான திருவடிகளு ஆளானபிற சில திங்களிலெல்லாஞ் சீர்காழிக்குப போந்து திருஞானசமபந்தப பிளளேயாரைக் கண்டு வணஙகி அவரொடு ளவளாவியிருந்தனரென்பது ஆராய்ச்சியாற் புலனுகினறது. இதனே நனகாயந்து பாராத 'தமிழவரலாறுடையார,' திருவதிகையில் ஆட்கொளளபபட்டபின அபபர் அவவிடததிலேயே முபப தாண்டுகள இருந்தாராகல் வேணடுமெனறும, அவர் மீண்டுஞ சைவசமயத்தைத தழுவியஞான று நாறபதாண்டினை ரெனறும், அவர சீகாழியிற போந்து திருஞானசம்பந்தபபெருமானே வணஙகியபோது தான எழுபதாணடுகளு மேறபட்டவரா யிருந்தாரெனறும உண்மை நிகழச்சிக்கு முறறும முரணுகக கூறினர ('தமிழவரலாறு' பிற பாகம, முறபகுதி, நம0-ஆம பகதம்) சேக்கிழாரடிகள பெரிதாராயந்து பாடியிருககும வரலாறுகளேக் கருததாய் நோககுவாக்குத, தமிழ வரலாறுடையார கூறிய இவை முறறும மாறுகோளுரைகளாதல் விளஙகா நிற்கும. திருநாவுக்கரசுகள சமண்மதந் துறந்து சைவசமயம புகுந்தமை தெரிந்தவளவானே சமணமதத்தவர் வாளாதிராத ; அவர் தம அரசனே ஏவி அவரை நீறறறையில் இடுவித்தன் முதலான பொலலாஙகுகளேயெல்லாம உடனே அவர்க்கு இழைத்தாராகல் வேண்டும. அபபர் சிவபிரான திருவருளேப் பெற்றதற்குபபின நெடுநாள இடையீடினறியே இத் தீங்குகள சமண் அரசனல் அவர்க்கு உடனே விளேவிக்கப்பட்டன வென்பதறகுச் சேக்கிழார,

"இன்ன தன்மையில் இவர்சிவ நெறியினே யெய்தி
மன்னு பேரருள் பெற்றிடர் நீங்கிய வண்ணம்
பன்னு தொனமையிற் பாடலி புத்திர நகரிற
புன்மை யேபுரி அமணர்தாம் கேட்டது பொருராய்"
(திருநாவுக்கரசு நாயனர் புராணம், எசு)

என்று அருளிசசெயதவாறரு,ற புலனும சமண் அரசன தான் இழைபபித்த பல கொடுங் தீஙகுகளும அபபரை ஒரு சிறிதும ஊறுபடுத்தாமை கணடு, கடைபபடியாக அவரை ஒரு பெருங கறபாறையிற பிணிபபித்துக கடலில் இடுவித்தனன. அபபரோ ஆண்டவன சுரந்த பேரருட் டுணையால் அக் கல்லையே புணையாகபபெறறு மிதந்து திருபபாதிரிபபுலியூர்ப பக்கதது்ள்ள கடறகரையைச் சேர்ந்து கரைமீதேறி அவவூரிலுளளாரார்ற பெரிதும் வியந்து பணிந்து வரவேறகபபடடு, அஙகேயுளள திருக் கோயிலிற சிவபிரானே வணஙகி அவனதிருவடிகளு, "னனருளுமாய எனகெங்தையுமாய" எனனுங் தீந்தமிழப பதிகமாலை சாத்திப், பினனுந் திருவதிகை வந்துசேர்ந்து திருததாண்டகச செந்தமிழ பாடியபடியாய அஙகே உழ வாரத திருபபணி செயதுகொண்டு சிலநாள வைகினா. இவரைப பல கொடுமை பொல்லாஙகுகளால் வருதத்திய சமண்வேந்தனை 'மகேந்திரவாம பல்லவன' தான கடைப படியாக இழைபபித்த தீஙகுகளும அரசுகள தபபிக் கரை யேறினரெனபது கேடடதுணையாலோ, அவரது பெருமை யுளு சிவபிரான திருவருள அவர்களு உறு பெருந்துணை யாய நினறு தானசெயவித்தது தீஙகுகளேயெல்லாம பாழ படுத்தியதும உணாந்து, நல்வினையால் உளந்திருந்தித் திருவதிகை சென்று திருநாவுகரசரின திருவடி மலர் களில வீழந்து, அவரது கடைகக்ணநோகக்ம பெற்றுச், சமணமதம பொயயாதலுளு சைவசமயமே மெய்யாதலும உணாந்து சிவபிரான திருவடிகளு ஆளானனை. இந் நிகழச் சிக்குபபின் அபபர் திருவதிகையினினறும் புறபபட்டுச் சிவபிரான திருகோயில்களுளள பதிபலவுளு சென்றிறைஞ் சுதற்கு விழைவுமீதூரப் பெறருரெனறு சேக்கிழாரடிகள

தெளித்துக் கூறுமாற்றால், அபபர் முன்னும பின்னும் திருவதிகையிற் பலவாண்டுகள வைகினரல்லரென்பது இனிது பெறபபடும. ாதிங்ஙனமாகவும, இவவுண்மை வரலாறறுக்கு முழுமாறுயத 'தமிழ வரலாறுடையார்' முபபதாணடுகள அபபா திருவதிகையில் வைகினரெனத் துணிபுரை நிகழ்தலியது பெரியதொரு பொயயுரையா மென விடுக்க.

இனி, மேறகாட்டிய வாறெல்லாம அபபா சமண்மதந் துறந்து திருவதிகையிற சைவசமயம புகுந்து, சமண்மதத் தவரால் அளவினறித துனபுறுதலபபட்டுத், திருவரு ளால் அவறறினகெல்லாந் தபபி மீண்டும் திருவதிகை சென்று இறைவனை வணங்கிச் சிலநாளங்கிருந்து, பின்னர்ச் சிவபிரான திருக்கோயில்களோறும வணங்கப் புறபபட்டவரையில் நிகழந்த நிகழ்ச்சிகட்கெல்லாம எவ் வளவுகாலஞ் சென்றதாகல் வேண்டுமென்று சிறிதமைந்து ஆய்ந்து காணவல்லாரக்கு, அது சறறேறக குறையப் பனனிரண்டு திங்கள அல்லது ஓராணடுகளுளளாகவே தான் இருக்கலாமெனபது நன்கு விளங்கா நிறகும.

இனித், திருநாவுகரசு நாயனுர் திருவதிகையினின் றும் புறபபடடுத் 'திருத்தூங்காணைமாடம,' 'திருவரத் துறை,' 'திருமுதுகுன்றம,' 'திருத்தில்லை,' 'திருவேட் களம,' 'திருக்கழிபபாலை' முதலான திருக்கோயில்கட்குச் சென்று ஆங்காங்கு இறைவனைப பரவிபபாடிச் சிற்சில நாள தங்கி, மீண்டும் தில்லைமாநகர்க்குப்போந்து ஆண்டுத் திருப்பணிசெய் தமருமநாளில், மூனறாட்டைச சிறுமதலை யாகிய திருஞானசமபந்தர் சீர்காழியிலே இறைவனையும் இறைவியையும நேரேகண்டு அவரால் ஞானப்பால் ஊட்டப் பெறறு எல்லாம் ஓதாதுணர்ந்த எல்லாமவல்ல ஞானசிரிய ராய் எழுந்தருளி யிருக்கினறார் என்னும வியப்பான செய்தியை அடியார்கள உரைபபககேட்ட திருநாவுக்கரசர் அளவுபடா வியபபும அவரைக் காணுங் காதலும் தமதுள் ளத்தைக் கவர்ந்துகொளள, உடனே தில்லையை வணங்கிப் புறப்பட்டு, வழியிலே திருநாரையூரைப பணிந்துபாடிப்,

பின் சீர்காழிமருங்கு சார்ந்தார். இவ்வாறு இவர் வரு தலைக்கேட்ட திருஞானசமபந்தப பிளளையார் தாமும அதற காகப பெருமகிழவுற்று, அவரை எதிர்கொளச் செல்லும பொழுதில், எதிரவருந் திருநாவுக்கரசரின தோறறதைதச் சேக்கிழாரடிகள,

"சிந்தைஇடை யுருஅன்புந் திருமேனி தனில்அசைவுங்
கந்தமிகை யாங்கருத்துங் கையுழவா ரப்படையும்
வந்திழிகண் ணீர்மழையும் வடிவிறபொலி திருநீறும்
அந்தமிலாத் திருவேடத் தரசும்எதிர் வந்தணைய."[1]

எனறு விளகுகிச சொல்லியிருக்கினறார். பிளளையாரைக் காணவந்த காலத்தில் திருநாவுகுகரசுகள ஆண்டில் மிக முதியராயிருந்தமை யெனபது, மேலுசசெயயுளிற போந்த 'திருமேனி தன்னில் அசைவும்' எனனுஞ சொற்றொடரால் நனகு அறிவுறுததபபடுதல் காண்க. எழுபது ஆண்டுக்கு மேறபட்டார ஒருவர நடகுகும பொழுதுதான அவர துடமபு தளளாடுதலை உலகவழகுகில எவரும நனகுணர் வர். ஆகவே, அரசுகள பிளளையாரைக காணவந்த காலத்தில் எழுபது ஆண்டுக்கு மேறபட்ட முதுமை யுடையரா யிருந்தமைனெனபதூஉம, அதுபறறியே பிளளை யார அவரை 'அபபரே' என்றழைத்தமைனெனபதூஉம இனிது விளஙகா நிறகும. அரசுகள சமண்மதந் துறந்து சிவபிரான திருவருளபபெறறு, அதனுற சமணவேந்தனுற பலவாறு துனபுறுத்தபபட்டுச், சிவபிரானருளால் அவற றிறகெல்லாந் தபபி, மீண்டுந் திருவதிகை புகுந்தவரையிற சென்றகாலம ஓராண்டின அகமேயாமெனவும. அதனபிற திருவதிகையினினறும புறபபட்டுச சில திருக்கோயில்களை வணஙகிககொண்டு அவர் திருஞானசமபந்தப பிளளை யாரைக் காணவந்தவரையிற் சென்ற காலமும் ஓராண்டிற குளளேயாகுமெனவுங் கோடலே சேக்கிழார் கூறும வரலாறறுரைக்கும அறிவு வழக்குக்கும ஒத்ததாக இருத் தலின், பிளளையார்பால் வந்தபோது அரசுகள எழுபத் தைந்தாண்டு சென்ற முதியராயிருந்தாராதலும், அமண்

1. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் புராணம், உஎ0.

மதப பற்றுவிட்டுத் திருவதிகையில் அவர் இறைவன் திருவருட்பேறறிற குரியரானபோது எழுபத்து மூனருண் டினரா யிருந்தாராதலும் தெறறெனப பெறபபடும. இவ வுண்மை திருநாவுககரசு நாயனரே தாம திருவதிகையி லிருந்து திருவாயமலர்ந்தருளிய,

"முன்பெலாம் இளையகாலம் மூர்த்தியை நினையாதோடிக்
கண்கண இருமினாளுங் கருத்தழிந் தருத்தமின்றிப்
பின்பக லுணங்கலட்டும் பேதைமார் போன்றென்உள்ளம்
அன்பனைப் வாழமாட்டேன் அதிகைவீ ரட்டனீரே."

எனலும் திருபபாட்டாலும நனறு வலியுறுத்தபபடும இதனகட் டாம இளமைக காலமெல்லாஞ சமணமதத்தி லிருந்து கழிததமையும, கணகணெனறு இருமி நினைவு கலைந்து துனபுறறும முதுமைகக்காலததே தாம அச சமண் மதமவிட்டுச சிவபிரான திருவருளைப பெறறமையும் அவரே விளஙகக்கூறுதல் காணக

மேலும், திருநாவுககரசு நாயனார அருளிச் செய திருக்கும திருபபதிகத தொகையினையும, திருஞான சமபந்தப பிளளையார் அருளிசசெயதிருககும் திருபபதிகத் தொகையினையும ஒபபிட்டுக் காண்புழி, அரசுகள சமண் மதந்துறந்து சிவபிரான திருவருளைப பெறறபின பத்து அல்லது பனனிரணடு ஆணடுகளில் இவவுலகவாழவு நீத்து இறைவன திருவருளொளியில் இரணடறகலந்தமை நனகு தெளியபபடும. திருநாவுககரசர அருளிசசெய்த திருபபதிகததொகை நாலாயிரத்துத் தொளாயிரமே யாதலால, மேலே சுந்தரமூரத்தி நாயனார் அருளிச்செய்த திருப்பாட்டொனறனும நமபியாணடார் நமபிகள பாடி யருளிய செய்யுளொனறனும இனிது விளககிக் காட்டி மேமம. மறறுத, திருஞானசமபநதப பெருமானே பதினு ருயிரந் திருபபதிகஙகள அருளிசசெய்தன ரெனபது,

"நகரங் கெடப்பண்டு திண்டேர் மிசைநின்று நான்மறைகள்
பகரங் கழலவ னீப்பதி னுருயி ரம்பதிகம்
மகரங் கிளர்கடல் வையந் துயர்கெட வாய்மொழிந்த
நிகரெங் கிலிகலிக் காழிப் பிரா னென்பர் நீணிலத்தே."

என்று 'திருஞானசமபந்தர் திருவந்தாதி,' கநூ-ஆஞ் செயயுளிலும,

> "பனனு தமிழ்ப்பதினு ருயிர நற்பனுவல்
> மன்னு புவியவர்க்கு வாய்ப்பவும்"

எனறு 'திருஞானசமபந்தர் திருவுலாமாலை'யிலும நமபியாணடாா நமபிகள அருளிச செயதிருகுமாறறுல் ஐயுறவுககு இடனினறித துணியபபடும. பிளளையாா மூனறும ஆணடில இறைவன நிருவருளை நிறையபபெறறுத, தாம திருமணங கூடியநாளில அவனை நிருவடிநீழலை எயதினார். பிளளையார் திருமணங்கூடிய காலததிற பதினெட்டு அல்லது இருபதாணடு நிரமபபபெற நிருந்தாரெனறு கோடல இழுககாகாது; எனனை? பதினருணடுகளுமேல இருபதாணடுகளுள ஓர் இளஞனுககு மணஞசெயது வைததலே பணடைத தமிழமகளை முறையாயப போதரக காணடலின. ஆகவே, அருளபெறற காலம முதல் இறைவன நிருவடிநீழலெயதிய காலமவரையில் அஃதாவது சிறிதேறதகுறையப பதினைந்தாணடுகளில் திருஞானசமபந்தப பிளளையாா இநநிலவுலகினுமீ தெழுந்தருளியிருந்து அருளிசசெயத திருபபதிகததொகை பதினருயிரம ஆகினறது. பிளளையாா பதினருயிரம பதிகங்களை அருளிசசெயதறகுப பதினைநதாணடுகள சென்றனவாயின, திருநாவுக்கரசுகள நாலாயிரததுத தொளளாயிரம பதிகங்களை அருளிச செயதறகு ஏழு அல்லது எடடு ஆணடுகளேதாம சென்றனவாதல வேணடும. வடக்கே நிருககைலாயம வணங்கச் சென்றபோது அரசுகள இடையே பாடாதிருந்தார் போலும! மறறுத, 'தமிழ வரலாறுடையாரோ' அபபர் நாறபதாமாணடிலேயே அருளபெறறுப பினனும் நாறப தாண்டுகள இந் நிலவுலகினுமீது எழுந்தருளியிருந்தனரெனருர். அருள பெறறபின அவவாறு அவர் நாறப தாண்டுகள் இங்கிருந்தனராயிற் சிறிதேறறக்குறைய மூப்பதினுயிரந் திருபபதிகங்களாவது அவா அருளிசசெய்திருத்தல் வேண்டுமனறே? அங்ஙனமினறி அவர் நாலாயிரத்துத் தொளாயிரம் பதிகங்களே அருளிச்செய்திருக்கக்

காண்டலால், அருளபெற்றபின் அவர் அத்துணை நீண்ட காலம் இங்கிருந்தாரென றல் சிறிதும உண்மையாகாது. எழுபதாண்டுக்குமேல் அருளபெறறு எண்பதாம ஆண்டளவில் அவர் சிவபிரான் திருவருளொளியிற கலந்தனரென்னும உண்மை முடிபினேயே அவா அருளிச்செயத திருபபதிகத்தொகை நாட்டுவதாகுமென று கடைபபிடிக்க. எனவே, திருநாவுக்கரசு நாயனர் தமது நாறபதாம ஆண்டில் அருளபெற்றுரென்னும உரை பொருத்தமில்லாததா மெனபதூஉம, அவரருளிசசெயத திருபபதிகத்தொகைக்கு எட்டு ஆண்டுகளும வடநாடுசென று மீண்டமைக்கு இரண்டாணடுகளுங கூட்ட அரசுகள அருளபெறறபின இந் நிலவுலகினமீ தெழுநதருளி யிருநதகாலம பத்தாண்டுகள அல்லது மிகுதியாயச சொனனற் பனனிரண்டு ஆண்டுகளே யாமமெனபதூஉம, அவவாறறுல் அவர் தமது எழுபதது மூனறும ஆண்டில் அருளபெறறு எணபதது ஐந்தாம ஆண்டில் இறைவன திருவடிநீழலே எயதினரெனகல் வேணடுமெனபதூஉந் தாமே போதரு மெனக.

மேலும, பழைய கல்வெட்டுகளின ஆராயசசியால் இஞஞான று புலனுயிருக்கும உணமை வரலாறறுக் குறிபபுகளுகும யாம மேலே காட்டியவைகளே பொருத்தமாயிருத்தலையும ஒருசிறிது காட்டுவாம: திருநாவுக்கரசு நாயனர் சமணமதததிலிருநது சைவசமயத்திறகுத் திருமபியகாலையில் அவரைப பலவாறறுல் துனபுறுத்தினவனுந், தான்செயத துனபங்கள அததனையும அவரைச் சிறிதும் ஊறுபடுத்தமாட்டா தொழிந்தமை அவர் சிவபெருமான் றிருவருட் பாதுகாபபில் நினறமையாற்றுன என்பதனைத் தெளியவுணர்ந்த பின்னர் அவரது அருளாற் சிவபிரான நிருவடிக்கு ஆளானவனும 'முதலாம மகேந்திரவர்ம பல்லவனே' எனபது இஞஞான்று துணியப்பட்டுக் கிடக்கின்றது.[1] இவவேந்தன் கி. பி. ௬00-ஆம ஆணடிலிருந்து ௭௬-ஆம ஆண்டுவரையில் அரசுபுரிந்தா

1. Dr. G. Jouveau-Dubreuil's 'The Pallavas,' p. 37.

னைபதும் வரலாற்று நூலாசிரியராற றுணியப்பட்ட தெனறும்[1] இவ்வேந்தன 'மத்தவிலாசம்' எனப்பெயரிய நகைச்சுவை நாடகம் ஒன்றை வடமொழியில் ஆக்கி, அதிற பாசுபதமதத்தியாகிய குறுவியொருவரையும், ஒரு காபா லிகரையும் அவர்தம மனைவியாரையும், ஒரு பௌத்த ரிக்குவையும் உரையாடவிடடு, அவர் தமமையெல்லாம ளைஞ செய்திருக்கினறன[2] இதனால் இவன இந்நாடகம ஆக்கியகாலத்திற் சமணமதத்தவனாயிருந்தமை பெறப படும. இவன அரசாண்ட இருபத்தைந் தாண்டுகளின இறுதிப பகுதியிலேதான, அப்பரின அருட்பேராறறலுஞ சிவபிரானமே முழுமுதற கடவுளாதலுங தெளிந்து அவரது திருவருளாற சைவசமயத்தைத தழுவினன. அவவாறு சைவசமயத்தைத் தழுவியபடனே, தென்னாகாடு மாகா ணத்தின கண்ணதான 'பாடலிபுத்திரம்' எனனும நகரிற் சமணமுனிவர்களுப பெரியதோர் உறையுளாயிருந்த பெருஞ்சமண்பள்ளியினை இடித்தது,[1] அதனகட் பெறற கருவிகளைகொணடு தனசிறபபுப பெயர்களில ஒன்றான 'குணபரன்' அல்லது 'குணதரன்' எனனும பெயரிற 'குணதரேசுவரம்' எனனுஞ சிவபிரான திருகடிகையிலத் திருவதிகையிற கடடுவித்தான; இது,

"வீடறியாச் சமணர்மொழி பொய்யென்று மெய்யுணர்ந்த
காடவனுந் திருவதிகை நகரின்கட் கண்ணுதற்குப்
பாடலிபுத் திரத்திலமண் பள்ளியொடு பாழிகளுங்
கூடவிடித்துக் கொணர்ந்து குணதரவீச் சுரமெடுத்தான்."

எனறு ஆசிரியர் சேக்கிழார் கூறுமாறறினும அறியப்படும. அதுவேயுமனறி, திருச்சிராப்பள்ளி, செங்கறபடடு, வட ஆர்காகாடு, தென்னாகாடு முதலான மாகாணங்களி லுள்ள மலைகள பலவறறைக குடைந்து அவறறினகட்

1 Dr V. Smith's 'The Early History of India,' 1914 edition, p. 472.

இனி, அக் கல்லாடநூல் 'கரியைக் குதிரையாக்கிய தனை' சசு-வது செய்யுளினும, "பாணபத்திரர்பொருட்டு விறகுதலியனுயச்சென றிசைபாடிலை தனை" சஞ-வது செயயுளினும, 'வையையடைகக மண்சுமந்ததனை' சகூ-வது செய்யுளினும, 'மூதத நாயனுர் முழுஙகை தேய்த்த திருத் தொண்டினை' ஞை-வது செய்யுளினும. 'சாக்கிய நாயனுர்

திருத்தொண்டிணை' சுஅ-வதுசெயயுளினும,'இடைக்காடன பிணக்குத் தீர்த்ததனையும' 'காரைக்காலமமையார் திரு வாலங்காட்டிற றிருநடங கண்டதனையும' எஅ-வது செய யுளினும, 'காரைககாலமமை மாங்கனியால் வீடுபெறறமை யினை' கoக-வது செய்யுளினும, இவறறினும பழைய திரு விளையாடல்கள பலவறறை இடையிடையே பல செயயுட் களினும அனபால் என்பு நெக்குருக எடுத்தோதியவாறு போலச, சிவபெருமான திருவருள பெறறோரிற றலைசிறந்து நிறகும அபபர் சமபந்தர் சுநதரர் முதலான ஏனைமூவரை ஒரு சிறிதுங குறிபபிடாமையால, அக கலலாட நூல அம மூவாகதும முறபட்டதெனபது நனகு பெறபபடும. அந் நூலாசிரியர் சிவபெருமானிடத்தும, அவனடியாரிடத்தும பேரனபுடையராகக காணபபடுதலால, அவர அம மூவாக் கும பினனிருந்தனராயின அவர நிகழ்ததிய அறபுதஙகளை ஒருசிறிதாயினுங கூறாதுவிடார. மறறு அம மூவரைப பறறிய குறிபபுர சிறிதுங கூறாமைகொண்டே அவர் அவர்க்கு முன்னிருந்தாரெனபது ஒருதலையாகத் துணியப படும எனக. அஙஙனமாயின, 'திருஞான சமபந்தபபெரு மான வெபபுநோய தீரததனை' அறுபத்துநானகு திருவிளை யாடல்களுள ஒனறிய இருததலானும, கல்லாடத்துள் "எட்டெட்டியறறிய கட்டமர் சடையோன" எனற அறு பத்துநானகு திருவிளையாடல்கள குறிபபிடபபட்டிருத்த லானும அந் நூல் திருஞான சமபநதராகும பிறபட்ட தாதல் பெறபபடுமாலோ வெனின, மாணிக்கவாசகப பெருமான திருவாசகததிற குறிபபிட்ட பல திருவிளை யாடல்கள பெருமபறறபபுலியூர நமபியார திருவிளையாடற் புராணததினும, பரஞசோதி முனிவர் திருவிளையாடற் புராணத்தினுங காணபபடாமையானும, இவவிரு புராணங் களிற் காணபபட்டவையும ஒனறிலுளளவாறு பிறிதொன் றிற காணபபடாமல் ஒனறில் ஒருவாருயும பிறிதொனறிற பிறிதொருவாருயும இருபபக் காணடலானும, இறைவனே இயறறிய திருவிளையாடல்களி னிடையே திருஞான சமபந்தப பெருமானியற்றிய அறபுதஙகளையுங் கோத்தறகு ஓரியைபு இன்மையானும கல்லாடத்துட் குறிபபிடபபட்ட

பழைய திருவிசையாடல்கள அறுபத்து நான்கனுள திரு ஞானசமபநதப பெருமான அவறறிறகுப பிறகாலததே நிகழத்திய அற்புதஙகள சேர்ந்திலவெனபது தேறறமா மெனக.

இவவாறருல், கல்லாட நூல் அபபர் ஞானசமபந்தர் முதலான மூவாகாலத்திறகு முனனும, மாணிக்கவாசகர் காரைக்காலமமையார காலத்திறகுப பின்னும எழுதப் பட்டதொன்றுதல் நனகு பெறபபடுதலின் கி. பி. ஐந்து அல்லது ஆறும நூறறுண்டின கண்ணதான அக் கல்லாட நூலேயே கருவியாகக் கொண்டு மாணிக்கவாசகர் கடைசசஙகம நிலெபெறறு விளஙகிய ஞானதிருந்தாரெனக் கூறுதல் ஒரு சிறிதும ஏலா வுரையாமெனபதும, அந்நூல் கொண்டு அவா ஐந்தாம நூறறுண்டிறகு முன்னிருந்தா ரெனல் மட்டும் இனிது விளங்குமா மெனபதும பெறப் படும இது கிடக்க.

இனி, ஆஙகில மகளை இன்ன இனபவர் ஞானசமபந் தர் முதலான குரவனமார மூவருள யாரும மாணிக்கவாச கரைத் தம்பதிகத்துட் கிளந்தெடுததுக குறிதததிடாமை யான அவர் அம மூவாக்கும பின்னிருந்தாரென்பது உயத் துணரறபாறறென மொழிந்ததூஉம பொருந்தாது. யாம மேலே காட்டிய "நரியைக் குதிரை செயவானும நரகரைத் தேவு செயவானும" எனபதும, "மணியார்வைகைத் திருக்கோட்டின நினறதோர் திறமும் தோனறும" என்ப தும அப்பர் சுவாமிகள திருபபாட்டுக்களாகலானும, மாணிக்கவாசகர்பொருட்டியறறபபட்ட திருவிசையாடல்கள் அவற்றிற் காணபபடுதலானும மாணிக்கவாசகர் அக் குரவனமார் எவரானும மொழியபபடவில்லை என்பது யாண்டையதென றெழுக. அறறனறு, முன்னைக்காலத் துச் சிவனடியார்தமமையெல்லாந் தொகுத்தோதி வழுத்துவான புகுந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள மாணிக்க வாசகரையும அங்ஙனம எடுத்துமொழிந்த தில்லையாலோ வெனின்; நன்றே விஞயினய், 'அதெந்துவே' 'வேசறு' என்னும வடுகுமொழிச் சொற்களும, வடுகர் நாட்டிலுள்ள

'மகேந்திர' வெற்பைப்பற்றிய குறிப்பும திருவாசகத்தின்கட் காணப்படுதலானும, வீரசைவர் தமது திருமேனிக்கட் சிவலிங்கம பூணுங்குறிப்பு 'என னுடலிடங்கொண்டாய' எனனுஞ சொற்றொடராற பெறப்படுதலானும மாணிக்க வாசகர் வடுகநாட்டு வீரசைவ குலத்துப பிறந்த பெரியா ரெனபது பெறப்படுகினறது. வீரசைவநெறி பிழையாது நினறு சிவவழிபாடியறறிச சிவபிரான திருவடிப பெரும பேறு தலைக்கூடிய அவரைச சித்தாந்த சைவ மரபினைக்கட் டோனறிச சித்தாந்த சைவத் துறைவழிநினறு இறைப்பணி பேணிய சுந்தரமூர்த்தி சுவாமிகள, சித்தாந்த சைவத் துறைவழி நினறு அங்ஙனமே இறைவன திருவருணெறி தலைக்கூடிய ஏனைச் சித்தாந்த சைவப பெரியாரைத் தொகுத்தோதும் தம் திருப்பதிகத்தினுட கிளந்தெடுத்துக் கூறுதறகு அமைந்திலராயப, "பொய்யடிமை இல்லாத புலவர்க்கும அடியேன" எனபதனை குறிப்பாற கொள வைத்துக கூறியருளினார். 'பொய்யடிமையில்லாத புலவர்' எனபது தொகையடியாரைக குறிப்பதென நம்பியாண்டார் நம்பி கூறினுரேனும, அச சொற்றொடர் தனியடியாரைக் கூறுந திருப்பாட்டினைக் காணப்படுதலானும, தொகை யடியாரையே ஒருங்கு தொகுத்தோதும "பத்தராய்ப் பணி வாரைள" எனனும பாட்டு வேறு தனியே யுண்மையா னும, சேக்கிழாரும 'பொய்யடிமை யில்லாத புலவரைத' தொகையடியாரெனக் கிளந்து கூறுமையானும அச சொற் றொடர் மாணிக்கவாசகரையே குறிக்குமெனறல இழுக காது. மாணிக்கவாசக சுவாமிகள வீரசைவ மரபிற்குரி யரேயாமெனபது வீரசைவ மரபினரும் துறவோரும மாணிக்கவாசகரைத் தம முதல்ஆசிரியராய்க கொண்டு அவர் அருளிச செயத திருவாசகத்தைத் தமக்குரிய முதன முறையாய வைத்துப பணடுதொட்டு வழிபாடு ஆறறி வருதலானும, புதுச்சேரி முதலான இடங்களிலுளள வீரசைவ மடாதீனங்களெல்லாம் மாணிக்கவாசகர் பெயர் கொண்டே நிலவுதலானும இனிது துணியப்படும. இப் பெற்றி தேருத சைவசித்தாந்த நன்மக்களில் ஒரு சிலர் நடுநிலை திறம்பி மாணிக்கவாசக சுவாமிகளைத் தமிழ்

நாட்டுச் சைவசித்தாந்த மரபின்கட் டோனறியவரேயா மெனக கொண்டு, ஏனைச் சைவசித்தாந்த குரவன்மார் அவரைத் தம் திருபபதிகஙகளுட் கிளந்து குறிபபிடாமை யெனனையென றுளதிர கடாவுவார்க்குச்செவ்வனே இறுக்க லாகாமையின ஏதேதோ தமகுத் தோனறியவாறெல்லாங் கூறிப பெரிதும இடாபபடுவாராயினர. சமயங கடந்த நிலையாய விளஙகும மெயகண்ட சித்தாந்த மரபுபேணும் நல்வினை பெரிதுடையோ மாயினும, நடுநிலை பிறழாது உண்மைப்பொருளை யுலகிறகுளளவாறு தெளிதல் வேணடுமெனனும மனவுறுதிபபாடுகொண்டு மாணிக்க வாசக சுவாமிகள சரிதததை உணமையாராயசசி செயது, அவ வாராயசசியில் யாம மெயயெனறு துணிந்துகண்ட பொருட்கூறுபாடு பறறி அச சுவாமிகள வீரசைவ மர பினரேயாமெனற உலகிறகு அறிவிகக ஆர துணிபுடைய மாணணும. இதனைக் காணணும சைவசித்தாந்த செல்வர்கள் இதுபறறி நமமேறற கருதி வெகுளாது, அதனைப் பொறுமையுடன ஆயந்து பாரததுத தம உண்மைக் கருத்தை யுலகினகண வெளிபபடுபபாகளாக!

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

எனனும் திருக்குறள உணமை கடைபபிடிக்க வலலார்க்கே யாஙகூறிய உரை வாயமை நனகு புலபபடா கிறதும. இனி, மாணிககவாசக சுவாமிகள அஙஙனம வீரசைவ மரபினகட் பிறந்தாராயினுஞ சைவசித்தாந்த முடிபொரு ஙணர்ந்து அப பொருணெறி வழாதொழுகிச் சிவவழிபாடியறறிச் சிவமுதது தலைகூடினரெனபது அவர அருளிசசெய்த திருவாசகத் திருமுறையாலும நனகு பெறபபடுதலின, அவர் வீரசைவ மரபினகட் பிறந்தாரெனபது பற்றி ணடைக காவதோ ரிழுக்கிலரென றெவிடுக்க. அற்றேறற, சுந்தரமூர்தது சுவாமிகள அவர்தம மரபினவழி கரு தாமல் அவரைத் தம் திருபபதிகத்திற் கிளநதோத வமையுமாம பிறவெனின; அறறனறு, சுந்தரமூர்த்தி சுவாமிகள கூறுத்தே மல்கிக்கிடந்த வீரசைவ மரபினர்

மாணிக்கவாசகரைத் தமக்குரிய குரவராகக்கொண்டு பேணிவழிபட்டு வந்தாராகளாதலின அவர் தமமைத் தந் திருபபதிகத்திலுட் கிளந்தோதாத ஒருபபடடிலர். வீரசைவ,தைப பறறிய குறிபபு காமிகம, சுவாயமபுவம, சுபபிரபேதம, வீரம முதலாய சிவாகமங்களிற காணப படலாலும, வீரசைவா கொளகையாகிய சிவாத்து வித்தத்தை இனிது விளகக்லாற சங்கரபாடியத்திறகும முறபட்ட நீலகண்டபாடியம சிவாத்துவித்த பாடியமெனா வழங்கபபடலாலும, எல்லா வழிபாட்டிலும முறபட்ட சிவலிங்க வழிபாடடைக கடைபபிடியாயசெய்து வருத லோடு சிவலிங்க வடிவினோத தம தூடபபின மிசையும அணிந்திருத்தலபறறி வீரசைவா 'லிங்கிகள' எனப பணடுதொட்டே பெயா பெறலாயினா ரெனபது சங்கம மருவிய பழைய நூலாகிய திருமுருகாற்றுப்படை "சொல்வெனறி வேணடும லிங்கியும" எனபதிற்காந்த குறிபபால் நனகு விளங்கலாலும, தொனறுதொட்டு இனறுகாறும் தெலுங்கு கன்னடா முதலாய நாடுகளிலுள்ளாரா பலரும வீரசைவராகவே யிருபபக காணடலாலும வீரசைவம மிகப பழைய காலத்ததெனபது திணணமாமெனக. முற் காலத்தில் வீரசைவ மரபினர் பெருக்கமுற்றிருந்தாரெனப தறகுப பிரமாணங்களாக, லிங்கபுராணம, பெரியபுராணம் முதலாய நூல்களும சானறும. அறிதறல, நமபியாணடார நமபிகள தாந் திருமுறை வகுபபுச செயதருளிய காலத்தில் திருவாசகத்தை ஏனைக் குரவனமாரா அருளிச்செயத திரு முறைகளோடு ஒருங்கு வைத்து ஓதபதாந் திருமுறையாக வகுத்தவாறெனனெயெனின, நமபியாணடார் நமபிகள காலத்தே வீரசைவ மரபு சுருங்கி வருதலாலும, திரு வாசகத்தினகட் காணபபடுஞ சொனனயம பொரு ணயங்களுஞ சித்தாந்த சைவக கோட்பாடுகளும எல்லா ரானும் பெரிது போறறபபட்டு வருதலின அதனகட் காணபபடும வீரசைவப பொருணுட்பங்கள உணர்வா ரினமையால் மறைந்துபோதலாலும, சித்தாந்த சைவ ரெல்லாரும அத் திருவாசகந் தமக்கு முரியதென்று போறறுதலாலும அதனை அவ்வாறு ஓதபதாந் திரு

முறையாகக் கோத்தாரென உரைக்க. இங்ஙனமாகலின், ஏனைக் குரவன்மார் தந் திருப்பதிகங்களுள அவரைக் கிளந்தெடுத்து மொழிந்திடாமைகொண்டே அவர் அக் குரவனமார் மூவர்க்கும பின்னிருந்தாரெனக் கூறுதல் போலியா யொழியு மென்பது. இது கிடக்க.

இனி, யாம மேலே விளகிய உரையினகட் சிலர் கருத்தெதாருபபாடிலாராய 'யாம பிடித்த முயலுககு மூனறே கால்' எனபாரோடொத்து, ஏனைக் குரவன்மார் மூவரும மாணிக்கவாசகரைத் தந் திருபபதிகங்களுட் கிளந்தெடுத் துக் கூருமையான் அவர் அம மூவர்க்கும பினனிருந்தமை தேறறமாமெனை வுரைபபர் அறறேறல், அம மூவர்க்கும பினனிருந்த மாணிகக வாசகா தாமருளிச்செய்த திருவாச கந் திருக்கோவையாருள அம மூவரையுங குறிபபிட்டு ஏதுமுரையாமை யெனனையோ ஏதிகடாவுவார்க்கு அவர் விடுகுமா றறியாது விழிககு நீராவராகலின, அஙஙனம அழிவழக்குப பேசுதல் பெரியதோர் ஏதமாமெனறுணர்ந்து கொளக. அல்லதூஉந், திருவாசகந் திருகோவையாரின கட காணபபடுந் தமிழப புலனெறி வழக்கிறகும, தேவாரத் திருமுறையின றமிழப புலனெறி வழககிறகும வேறுபாடு பெரிதாகலானும, அவறறுளளும முன்னியவறறில் தமிழதெதானமை வழககே பெருமபானமையும பயினறு வருதலானும, அவ்விருவகை வழக்கிறகும இடையிட்ட காலம சிறியதாதல் செல்லாது. தமிழத்தொனமை வழக்கே தழீஇ வந்த திருவாசகந் திருக்கோவையா ரெனபன, தமிழப் புதுவழக்கு இடையிடையே விராய்வந்த தேவாரத் திருமுறைக்குப பினனெழுந்தன வெனறல் பெரியதொரு தலைதடுமாற்றமாய் அஙஙனங கூறிடுவார் தமிழவழக்கு ஒரு சிறிது மறியாரென்பதனைப் பெறு விக்கும. ஆகலின், அவவாறு கூறுதல் எவ்வாற்றானும் பொருத்தமில்லாத போலியுரையா மென்க.

மாணிக்கவாசகர் காலம்

இரண்டாம் பகுதி

நமது 'ஞானசாகரப' பத்திரிகையின முதற் பதுமத்தில் சைவ சமயாசிரியரான ஸ்ரீமந் மாணிக்கவாசக சுவாமிகள காலம இறறைக்கு ஆயிரதததைந்நூறு வருடங்களுககு முற்பட்டதா மெனபதுமம, அவா திருஞான சமபந்த மூர்த்திகள, திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திகள எனனும ஏனைச சைவகுரவனமார் எல்லார்கமும முறபட்டவராவ ரெனபதுமம இஞ்ஞானறைச் சரித்திர ஆராயச்சிமுறை வழுவாது ஆயந்து தெறறென விளககினுமம. ஞானசாகரத்தில் இவ்வனமம நிலபெற நாட்டிய காலநிலையைப பினனும ஆங்கிலமுணாந்தாரும தெரிந்துகொளளல் வேணடி அதனை ஆங்கில மொழியினும எழுதி எமது கலாசாலைப் போதகாசிரியரால் நடாத்தபபடுமம 'செனனைக் கிறித்துவ கலாசாலைப பத்திரிகை'யினும பிரகடனஞ் செய்வித்தேமம. அதனபிற சில வருடங்கழித்து ஸ்ரீ. து. அ. கோபிநாத ராவ எனபவர் தாமும மாணிக்கவாசகர் காலத்தை நிலை பெறுத்துவான புகுந்து ஆங்கிலத்தில் ஒனறெழுதி, அதனையும எங்கள செனனைக கிறிதது வ கலாசாலைப் பத்திரிகையில் வெளியிடுவித்தார். ராவ அவர்கள ஆங்கிலத்தில் எழுதிய அதனையே தஞசையிற பிரசுரமான 'தமிழகம' எனனும பதிரிகையில் அதன பத்திராசிரியர் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடுவித்தார். அது நிற்க. இனிக் கோபிநாத ராவ அவர்கள, மாணிககவாசகர் காலம் நாட்டுதறகுக் காட்டிய காரணங்கள சரித்திரமுறைக்கும, தருக்க முறைக்கும இணங்காதனவாய்ப பிழைபடுதலின், அவற்றின பிழைபாடுகளை நெறியே வருத்துக் காட்டி, அபபெருமான் காலம யாம நிறுவியவாறே நிலைபெறுவதாமெனபதனை எண்டு வலியுறுத்துதற்குப புகுகின்றேம.

இனி மாணிக்கவாசகர், திருஞானசம்பந்தர் முதலான ஏனை ஆசிரியன்மார் மூவர்க்கும் பிற்பட்டவர் என்று நாட்டுதலே ராவ அவர்களது கொள்கையாம். அஃதெனில், மாணிக்கவாசகர் அம் மூவர்க்கும் முற்பட்டவராயின், பின்னையோரான அம்மூவரும் தாம்அருளிச்செய்த தேவாரத் திருப்பதிகங்களில் முன்னையோரான மாணிக்கவாசகரைக் குறிப்பிட்டு ஏதேனும் மொழிந்திடுவர்களல்லரெனக. அற்றேல், "நரியைக் குதிரைசெய்வானும் நரகரைத் தேவு செய்வானும்" என்று திருநாவுக்கரையர் திருவாக்கிற் போந்த குறிப்பே, மாணிக்கவாசகரைப்பற்றி அவர் கூறினமைக்குப் போதிய சான்றும் என்பாரை மறுத்து, அதற் பொருட்டு ராவ அவர்கள் நரியைக் குதிரையாக்கிய திருவிளையாடல் மாணிக்கவாசகரைப்பற்றிய தாக்காதென்று ஆசங்கிக்கின்றார். அத் திருவிளையாடல் அவர் மேற்கோள் வைத்துக் கூறிய வாதவூர் புராண உரையும் திருவிளையாடற் புராணவுரையும் கொள்ளற் பாலன வல்லவென்றும், அதனைத் தம் பொருட்டாகவே சிவபெருமான் நிகழ்த்தினரென மாணிக்கவாசகர் தாமே தமது திருவாக்கிற் கூறிற்றிலரென்றும், "நரியைக் குதிரை செய்வானும்" என்னுந் தேவாரத்தில் முதலதுபாதத்திரம மாணிக்கவாசகர் பாலதாயின 'நரகரைத் தேவுசெய்வானும்' 'விரதங்கொண்டாட வல்லானும்' என்றற் றொடக்கத்தனவாகப் பின்வருவன வெல்லாம் வேறெவர் பொருட்டாக நிகழ்த்தப்பட்டன வென்றும் மேலும் மேலும் வற்புறுத்து மொழிந்தார்.

இனித் திருவாசகத்தை ஒருமுறை உற்றுநோக்குவார்க்கும் நரிபரியான திருவிளையாடல் தம்பொருட்டாகவே சிவபெருமான நிகழ்த்தினரென்ற மாணிக்கவாசகர் பல விடத்தும் கூறுதல் வெளிப்படை மலைபோல் விளங்கிக் கிடப்பதும், ராவ அவர்கள் அதனை அறியாமட்டாது ஆசங்கித்தல் பெரிதும் வியப்புடைத்தாம். "ஒருங்கு திரை உலவுசடை உடையாமீன நிகளெல்லாம், பெருங்குதிரை யாக்கியவா றன்றேஉன் பேருளே"[1] எனபது 'சிவபெரு

1. திருவாசகம், திருவாசகம்.

மானை, நீ எனக்குச் செய்த பேரருட்டிறமானது நரிகளை யெல்லாம பெரிய குதிரைகளாகத் திரிபுசெயத திருவிளை யாட்டானை விளங்கிக் கிடந்ததனறே?' என மாணிக்க வாசக சுவாமிகள கூறியளைத இனியேனும உணாவாராக. இதன்கண் 'என்பொருட்டு' எனனுஞ சொற் பிரயோகம வந்ததில்லை யாலோவெனின; செயயுட்பொருள போகு முறையால் 'என்பொருட்டு' எனபது எளிதிற பெறக் கிடத்தலால் அங்ஙனாம உசாவுதல் பொருந்தாதெனக. சிவபெருமான நிகழ்தத்திய ஏனைத் திருவிளையாடல்களைப் பறறிப பேசுமிடத்திதல்லாம, இறைவனை முனனிலைப படுத்து விதந்து கூறுத மாணிக்கவாசகப பெருமான ாண்டு 'உன போ அருள' எனை முனனிலைப படுதது 'நரிக ளெல்லாம பெருங்குதிரை யாகிய வாறனறே' என்று கிளந்தெடுத்துக் கூறியவாற்றாலை, 'எனக்குச் செயத உன பேரருள நரிகளையெல்லாங குதிரைகளாக்கிய வகையான அனறே விளங்கியது' எனபதே அதறகு மெயப்பொருள எனல் செயயுட் பொருளகோண் முறை அறிவார்களெல் லாம் தெற்றென விளங்கிக கிடந்தது. இதறகிதுவே மெயபபொருளாவது, மாணிக்கவாசக சுவாமிகள பிரணடு ஙகூறிய "தெரிவர நினறுருகிப பரிமேறகொண்ட சேவகனார், ஒருவரையனறி யுருவறியா தெனறனுளள மதே" "பாய்பரிமேல் கொண்டென உளளங கவாவரால்" "பரிமேறகொண்டு நமையாண்டான" எனறற றொடக் கத்து உபப்பிருஙகண வாக்கியஙகளானும இனிது துணி யப்படும. நரியைக குதிரையாகச் செயது அக் குதிரைமே லிவர்ந்துபோந்த பெருமானது சகளமங்கள அருட்கோலத் தினையே என்மனம நினைவதனறிப பிறிதோருருவத்தினை நினையமாட்டாதென்று சுவாமிகள வலிபெறுத்திக கூறிய வாறருளை அத திருவிளையாடல் அவர்தம பொருட்டே நிகழ்த்தபபட்ட தெனபது இனிது புலபபடவில்லையா? அறறேலஃதாக, மேலைத் திருவாகங்களில் 'பரிமேல்வந் தார்' எனக்கூறியதனறி நரியையே குதிரையாகக்கொண்டு வந்தாரெனபது சொலப்பட்ட தில்லையா லோவெனின்; நன்று கடாயினாய், "நரியைக் குதிரைப் பரி யாக்கி ஞால

மெல்லாம் நிகழ்வித்துப், பெரியதென்னன் மதுரையெல்லாம் பிச்சதேற்றும் பெருந்துறையான்" என்றும,

"அரியொடு பிரமற் களவறி யொண்ணுன்
நரியைக் குதிரை யாக்கிய நன்மையும்
ஆண்டுகொண் டருள அழகுறு திருவடி
பாண்டியன் றனக்குப் பரிமா விற்று
ஈண்டு கனக மிசையப் பெருஅது
ஆண்டா னெங்கோ னருள்வழி யிருப்பத்
தூண்டு சோதி தோற்றிய தொன்மையும்."

என்றும் சுவாமிகள பிருண்டும ஒதிய ஏனை உபப்பிருங்கண வாக்கியங்களால், இறைவன மதுரையிற் கொண்டுவந்த பரிகள எல்லாம நரிகளா லாக்கினவேயாமாவது நனகு தெளியப்படுமெனக; அல்லதூஉம, அங்ஙனம நரிகளையெல்லாம பரிகளாகக்கி கொணர்ந்தவர் பெருந்துறையிற் குருந்தமர நீழலிற குருவடிவாய எழுந்தருளித் தமக்கு அனுகிரகித்த இறைவனோ எனபது பொளளெனெப புலப்பட மாணிக்கவாசகர் 'பெருந்துறையான்' எனவுங கிளந்தெடுத்துக் கூறினராகலின, நரிபரியாக திருவிளையாடல் மாணிக்கவாசக சுவாமிகள பொருட்டே நிகழத்தபபட்ட தெனனும உண்மை மலையரண்போல் நிலைபெற நிற்றல் காணக. இத்துணை நுட்பமும் ஒருங்குணர்ந்து அத் திருவிளையாடல் மாணிக்கவாசகர பாலதாக வைத்துக் கூறிய ஆனறோர் தொல்வழக்குரைப பொருளோடு, பெரிதும் மாறுகொளறற்றுக் கூறியதன்மேலும அமையாது, அவர் தமமைத் "தாம பிடித்த முயலுக்கு மூனறே கால் என்று பிடிவாதமாய்ச் சாதிபபார்" எனறு இகழ்ந்து கூறிய ராவ் அவர்கள அறியாமையை என்னென்பேம!

இனி, "நரியைக குதிரைசெய்வானும்" என்னும் அப்பர் திருவாக்கில் வேறுகூட்டிச் சொல்லப்பட்ட "நரகரைத் தேவு செயவானும" "விரதங் கொண்டாட வல்லானும்" "விச்சின்றி நாறுசெய்வானும்" என்றற் றொடக்கத்துப் பிறவிகள எவ்பொருட்டுச் செய்யப்பட்டன?

என்று ராவ் அவர்கள் விளுவுகினருர். பிறவகையிற் பிறர் பொருட்டுச் செய்யப்பட்ட ஏனை லீலைகளைக் குறித்து இங் ஙனம விளு நிகழுத்தல் எடுத்த பொருளுக்குச் சிறிதும் இயைபுடைத் தாகாமை அவர் உணராததென்னை? மாணிக்கவாசகர் பொருட்டு நிகழ்ந்த நரிபரித் திருவிளை யாடலை அப்பர் கூறியதனுனே, அதனேடு உடன் தொகுத் துக் கூறபபட்ட ஏனையவும் மாணிகக்வாசகர் பாலனவாகக் கூறவேண்டு மென்பது ராவ் அவர்கள கருத்துபபோலும! இத் தருக்கமுறை அழகிது! அழகிது! அனபர்கள் பொருட்டு இறைவன நிகழுத்திய திருவிளையாடல் மாட்சி யினைத் தொகுக்கப் புகுந்த திருநாவுக்கரசு சுவாமிகள, மாணிக்கவாசகர் பொருட்டும் பிறர்பொருட்டும நிகழுந்தன கலந்தெடுத்துக் கூறினரனறி, அனபர் ஒருவர்க்கே நிகழ்த் திய லீலையெல்லாம கூறுவேமெனக் கருதிக கூறப புகுந்தாரல்லர். இது தானும் பிரித்துணரவல்ல தமிழ் மொழிப பயிறசி பெருது, அரும் பெருந் தமிழ நூல்களை ஆயந்து காலவளவை வரையறுப்பே மெனப் புகுவார் திறம அறிவுடையார் கண்டு நகையாடுதற்கே ஏதுவாமென் றெழிக. எனவே அப்பர் சுவாமிகள தமது திருவாக்கிற் குறித்துரை காட்டிய "நரியைக் குதிரை செய்வானும்" எனனுந் திருவிளையாடல் மாணிக்கவாசக சுவாமிகள் பொருட்டு நிகழந்ததனையே காட்டுவதாகுமன்றிப் பிறிதாக மாட்டாதெனபது நிறுவப்பட்டது. இனி அவர் கூறிய ஏனைக் காரணஙகளையும முறையே ஆயந்து செல்வாம.

இனி ராவ அவர்கள் சிலாசாசன ஆராயச்சி வகையி லும மாணிக்கவாசகர் ஏனை மூவர்க்கும பிந்தியவராய்க் காணப்படுகினருர் எனக் காட்டப புகுந்து இத்தேயத்தின் கட் பல விடஙகளினுங் காணப்படுங் கல்வெட்டுகளில் இவரது பெயர் காணப்படாமையானும், சிறுத்தொண்டர் சீராளதேவர் முதலாயினுரை யெல்லாம குறிபபுச் செய்த இராசராச சோழன் இவரை அஙஙனஙு குறிபபுச் செய் யாமையானும் சுவாமிகள் காலம் பிற்பட்டதாதல் ஒருதலை என்கின்ருர்.

இனி, இவருரைக்கூற்றுப் பொருத்தமின் றென்பது காட்டுவாம். அரசாங்கத்தார் சென்ற சில வருடங்களாகவே ஆங்காங்குள்ள கல்வெட்டுகளை பிரதிசெய்து போதருகின்ரு ரென்பதும், இன்னும் இத்தென்னிந்திய நாட்டிற பிரதி செய்யப்படாது கிட்க்கின்ற கல்வெட்டுகள் பல்லாயிரக் கணக்காக இருக்கின்றன வென்பதும் எல்லாரும் அறிந்தவேயாம். இத் தென்னிந்தியாவிலுள்ள கல்வெட்டுகள் அனைத்தும் பிரதிசெய்து வெளியிடப்பட்டிருப்பினன்றே அவை தம்மிற சிலவற்றிலேனும் மாணிக்கவாசகர் பெயர் காணப்படவில்லையே என்று வினவலாம்? வெளிவராதவற்றில் அவர் பெயர் இருப்பினும் இருக்கலாம். ஆகையால், கல்வெட்டாராய்ச்சி அரை குறையாயிருக்கும் இந் நாளில் அங்ஙனம் துணிபுரை நாட்டுதல் போலியாமென்க.

அல்லதூஉம், கும்பகோணத்துக்கு அருகாமையிலுள்ள திருவலஞ்சுழிக் கல்வெட்டொன்றில் மாணிக்கவாசகர் பெயர் காணப்படுகின்றதென் றுரைத்தார் அவர்கள், அக் கல்வெட்டின காலவளவையும் அதன வரலாறும் கூறாது விட்டது ஏனோ? திருவலஞ்சுழிக் கல்வெட்டு மிகப் பழையதாதல் பற்றி அதனை விவரித்துரைப்பிற றமது கொள்கை புரைப்படுமென்றக் கருதி விட்டார்போலு மென்னை எனக்கு ஐயம் நிகழாநிற்கின்றது. அது நிற்க.

அல்லதூஉம், சோழன் உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னி, சேரலாதன், ஆலங்கானத்திற் போர்வென்ற பாண்டியன நெடுஞ்செழியன, சேரன செங்குட்டுவன என்றற் றொடக்கத்துப் பழைய தமிழ்மன்னர் பெயரும், நக்கீரர், கபிலர், பரணர், மாங்குடி மருதனார் என்றற் றொடக்கத்துத் தமிழ நல்லிசைப் புலவர் பெயரும் பொறித்த கல்வெட்டுகள் காணப்படாமைபற்றி அவரெல்லாம் பிற்காலத்திருந்தனரென ராவ் அவர்கள் கூறப்பெறுவரோ? பண்டைக் காலத்துத் தண்டமிழ் வளஞ்சிறக்க இலக்கண இலக்கிய நூல்கள் பாக்கக்கற்றும் பலப்பல புதிது புதிதா இயற்றி

யும வந்தமையானே, அந் நூல்களால் அம மன்னர் புலவர் முதலாயினர் பெயர் பதிகசப்பட்டு இன்றுகாறும் வழங்கி வரலாயின. இலக்கண இலக்கிய நூல் வழக்கின்றி நாக ரிகக்குறைவுளள காலத்தின் மாத்திரமே மனனர்கள தம பெயரும தம கொடைத் திறமும மறையாதிருத்தற் பொருட்டுக கல்வெட்டுகள தோற்றுவிபபர். யாஙகூறு வதே உணமைபபொரு ளென்றறகுத தமிழ வளம மிக்க பண்டைநாட் டமிழமனனா கல்வெட்டுகள இதுகாறும் வெளிவராமையே உறுஞ சானறும. மறறு இவவாறனறி, இராசராச சோழன முதலிய பிறகாலமனனர் காலததே தமிழக்கல்விவளஞ சுருஙகிபபோக, மிலேச்சவரசர் பலர் அலைமேலஅ புகுந்தாறபோல இடையிடையே படை யெடுத்து வந்து இந்திய மககளை நலிந்து குழபபமுண்டாகி வந்த காரணத்தானே, பிறகாலத்துத தமிழவேந்தர் தங கொடைத்திறம முதலியன தமகருப பினனும அழியாது புலபபடுதல் வேண்டிக கறகளிற பொறித்து நிலைபெறு வித்தார. பணடைநாட் டமிழமனனர் காலத்து வேற் றரசர தமிழநாடு புகுதாமையானும, தஙகொடைத் திறத்தை வியந்தியறறிய தமிழ நூல்கள அழியாவென் றவா கருதினமையானும அவா பிறகாலததார் போலக் கல்வெட்டுகள தோறறுவித்திலரெனக. இஙஙனமாகலின மாணிககவாசகர் பெயர் கல்வெட்டுகளிற காணபபடாமை கொணடே அவர் ஏனை மூவர்க்கும முறபடட காலத்திருந்தா ரெனபது பெறபபடும. அவர் பிறகாலத்திருந்தவராயின் கல்வெடடுகள மிகுதியுமுண்டாம, அபபோது அவாபெயர் பெரிதும அவறறில் காணபபட்டுக்கிடக்கு மெனக. அற்றே லஃதாக, இராசராச சோழன் தலைகசு முன்னிருந்த சிறுத் தொண்டா சீராள தேவரைக் குறிபபித்தவாறுபோல, அஙஙனமே தலைக்கு முறபடட மாணிககவாசகரைக் குறிப் பிடாத தெனனே யெனின; அஃதவவரசன கருத்தறிவ தறகுக கருவி வாயப்பி னனறி முடிவுகட்டல் ஏலாத தொன்றும. ஒவ்வொருவர்க்கு ஒவவொருகாரணமபறறி ஒவ்வொருவர் மாட்டு அன்புநிகழும. தம ஒரே புதல்வனை அறுத்துக் கறிசெய்து அடியார்க்கு அமுதூட்டிய

அருமைத்திறத்தை மிகவியந்து அவ்வரசன் உலகத்தார்க்கு அவரன்பின நிறத்தை நன்மாதிரியாய் நிறுத்தல் வேண்டி அங்ஙனம் அவரைக் குறித்திருகக்லாம். இதுவே யனறிப பிறகாரணமும இருக்கலாம். அல்லதூஉம, தனக்குச் சிறுகாலம முறபட்டிருந்த சிறுத்தொணடரை நினைவுகூர்தற்குக காரணம வாயததாறபோலத் தனக்குப் பெருஙகாலம் முறபட்டிருந்த மாணிகக்வாசகரை நீனைவுற்றுப் பிரதிட்டை செயதற்குக் காரணம அம மனனறகு வாயாது மிருக்கலாம. ஆகலின், அதனை ஒரு காரணமாயக்கொண்டு மாணிக்கவாசகர் காலம பிறபட்டதென நிறுவபபுகுதல் பெரிதும பிழைபடுவதொனறும எனக. மேலும கக-வது நூறறாண்டிறகு முனனர் மாணிகக வாசகர் உருவம எந்தக் கோவிலினும பிரதிட்டிக்கபபடவில்லை எனகினறார். இஙஙனம கூறும இவா சுவாமிகள் உருவம அவ்வாறு எஙகும பிரதிட்டிகக்பபடவில்லை எனப தனைக் காரணஙகாட்டி நிச்சயித்தனரா? சிறிதும் இல்லை. பிரபல காரணஙகள எடுததுக காட்டாது 'எனக்குத் தோறறிய வரையில்' எனறு நெகிழந்து உரை கூறிப போதல் சரித்திரமுறைக்குச சிறிதும இணஙகாத தொனறு மெனக. இவர் தமகுத் தோனறிய இவவறபுதத் தோறறத்தைத் தமமள்வே வைத்துப பாததுப பார்த்து மகிழக.

இனி, மாணிக்கவாசகர் மற்றைச சமயாசிரியனமார்க்கு முந்தியவராயின, அவராற் பாடப்பெற்ற நிருப் பெருந்துறை, திருவுத்தரகோசமங்கை என்னுஞ சிறந்த சிவதலஙகள தேவாரத்துள யாண்டுங குறிக்கபபடாமை எனனை? எனறு விஞவி, அவ்விரண்டும ஏனைமூவர்க்கும பிற்காலத்தே புதிதே முளைத்தெழுந்தனவாகலின் அவை தமமைப்பாடிய மாணிக்கவாசகர் அம்மூவர்க்கும பிறகாலத்திலர் என்று ராவ் அவர்கள் தருக்கிக்கின்றனர்.

இத் தருக்கவுரை அத்தலங்களின் உண்மைநிலை தெரியாமையால் எழுந்ததாகும என்பதனை இங்கே ஒரு சிறிது விளக்குவாம்: முதலில் திருபபெருந் துறையைப்

பற்றி விவரிபபாம. திருபபெருந்துறை எனபது தெற்கே பாண்டி நாட்டினகண் தலைமைபெற்றிருந்ததொரு கடற் றுறைப் பட்டினமாம. மூற்காலத்துப் பாண்டிமா நாட் டுக்குச் சிறந்த கடற்றுறைப பட்டினங்களாயிருந்த கோற்கை, உவரி, பெருந்துறை என்பனவற்றைபபறறிய குறிபபுகள் பழைய சங்க இலக்கியங்களிற் காணப்படு கினறன. சிலப்பதிகாரம், இந்திர விழவூரெடுத்த காதை யிலும் இவ்விந்திய தேசத்துக்கு அபபால் மேற்கேயுள்ள பலதேயச் சாதியாரும தமிழ நாட்டில்வந்து வாணிகஞ் செயதாரென்பது அறியகிடந்ததாகலின, பெருந்துறை என்னுங கடறறுறைப பட்டினத்திலும அவ்வாறே பல தேயத்துச் சாதியாரும வாணிகஞ செய்தற் பொருட்டு வந்தாரெனபது பெறபபடும. பாண்டியன பொருட்டாகக் குதிரைவாங்கப புறபபட்ட மாணிகக்வாசகரும பிறதேயத் தார குதிரைகொணடு வந்திறகும இடமாதல் பறறியே பெருந்துறை நாடிசசெனறார். மாணிகக்வாசகர சென்ற காலத்துப பெருந்துறை சிவாலயமுடையதாக இருந்த தில்லை. அவவிடததில் மிகுதியாயிருந்தன தெனனுஞ சோலைகளும பூமபொழில்களுமே யெனறு தாமது அருமைத் திருவாக்கால் "தெங்குசோலைகள சூழபெருந்துறை"[1] எனவும, "தெங்குதிரள சோலைத் தெனனன் பெருந்துறை யான"[2] எனவும, "செந்தார்ப பொழில் புடைசூழ் தெனனன் பெருந்துறையான" எனவும,[3] சுவாமிகள அருளிச்செய்தமையானே இனிது துணியபபடும. இவ வுணமை, சுவாமிகள சரித்திரவுண்மை வழுவாது கூறிய திருவாதவூரர் புராணத்திலும ஐயமறத்தெளித்துச் சொல்லபபட்டது. அது,

"ஈனமில் பெருந்துறை யெனும்பதியின் ஞாங்கர்
கானமிகு புன்னைவளர் கந்தமுள சந்தம்
வானமுயர் சண்பக மரந்திகழ் நரந்தம்
தேனின முரன்றெழு செருந்திகள் பொருந்தி."

---

1. சென்னிப்பத்து. 2 திரு அம்மானை.
3. திரு அம்மானை.

"வீழ்ந்தநற வத்துளி ழிழிப்புன லதாகச்
சூழ்ந்துமுரல் வண்டினிசை தோத்திரம தாகத்
தாழ்ந்துமல ரேந்தியிறை தன்றிருமு னின்றே
வாழ்ந்துருகு மன்பரென மன்னுமொரு பூங்கா."

எனனும் அப்புராணச செயயுட்களிற காண்க. மேலும், மாணிககவாசகப பெருமானே ஆட்கொண்டருளல்வேண்டி அச்சோலையிற் குருந்தமரநீழலினகணணே எழுந்தருளிய குருநாதன் பினனர் அவர்க்கு உபதேசித்தற்பொருட்டு வேண்டுவன வெல்லாஞ சித்தஞசெயமமினகள எனறு தன மருங்கிருந்த சீடர் குழாத்துககுக கட்டளையிட்ட அளவிலே, அவர்கள எலலாஞ சித்தஞ செயகினறுழி 'மலர்மாலையினனு மும, பொறசரிகையின நடுவே அழுததின முததுகக ணுளள பட்டாடையினனும அப பூங்காவின ஊடு ஒரு கோயில் செயதனர்' என்னும பொருளபட,

"முன்னவன் புகன்ற வாறு முயல்குவ மென்றே யந்த
மன்னுறு தவத்தின் மிக்கார் வகைமலர்த் தெரிய லாலும்
பொன்னிடை யழுத்தி முத்தம் புனைந்தபல் பட்டி னாலும்
அன்நெடுங் காவி னூடங் கானபூங் கோயில் செய்தே."

எனறு திருவாதவூரர் புராணத்தினகட் சொல்லபபட்டதனால், திருபபெருந்துறையினகண் சிவாலயம அபபோது இருந்திலது எனறல் பசுமரத்தாணிபோல் நாட்டபபட்டமை அறிக. அனறி அஙகே சிவாலயம இருந்ததாயின அச் சோலையின்கண் அவவாறு பட்டாடையினால் ஒரு கோயில் இயற்றல் வேண்டாமையானும, சிவாலயமிருந்ததாக அப புராணத்தினகண யாணடும ஓதபபடாமையானும மாணிககவாசகர் காலத்துச் சிவாலயம அஙகில்லை யெனபது தெளிபொருளேயாமென்க. அற்றேல், பரஞ் சோதிமுனிவா திருவிளையாடலினும, வேமபத்தூரார் திருவிளையாடலினும அஙகே கோயிலுளளதாகச் சொல்லப் பட்டிருத்தல் எனனையெனின்; பினனையோரான அவ்விரு வரும சரித்திர மாறுபாடாகத் தாமே சிருட்டித்துக் கொண்டு ஓதுவன பல உளவாகலின், அவர் கூறுவன

ஈண்டைக்குப பிரமாணமாகாவென்க. திருவாதவூரர் புராணம் ஒன்றுமே சுவாமிகள சரித்திரத்தைப பிழை படாமல் உளளவாறே யுரைப்பதாம; இமமெய்ப்புராண வுரையோடு திறமபிக்கூறுமம அப புராணவுரைகட்கு ஆதாரம் திருவாசகத்தும பிறண்டும பெறபபடாமையின் அவை கொளளற்பாலனவல்லவெனறு மறுக்க.

இனி, மாணிக்கவாசகர் வருமிடம நோக்கி அவரை ஆட்கொண்டருளல் வேண்டிக குருநாதன அபபூங்காவிலே எழுந்தருளினன. மாணிகககவாசகர் தாங குதிரைகொள் ளபபோன அப பெருந்துறையிலே அக் குருநாதனைக் கண்டு மெய்ஞ்ஞானைப பேறுடையராய விளஙகினர். இங ஙனமல்லது மாணிக்கவாசகர் பெருந்துறையிலே சிவாலய மிருபபதாக உணர்ந்து அஙகுச் சென்றரல்லர். ஆகலின, இவர் அவ்விடஞ சென்றதுகொண்டே அஙகுச் சிவாலய மிருந்ததென நாட்டுவாருரையும பொருந்தாதெனறுணாக.

இனி, மாணிகககவாசகர தாம மெயஞ்ஞானப் பேறு பெறறு இறைவனுககு ஆட்படட பெருந்துறையில் உடனே கோயில் கட்டுவித்தா ரெனறேனும, உபதேசம பெற்றுப பாண்டியனிடம்போய்ப பின்னும பெருந்துறை நண்ணி அவ்விடத்தைக் கடைசியாகவிட்டு மீண்ட பின்னர்த் திருமபவும அவவிடத்திறகுச் சென்றரெனறேனும திருவாசகமாவது திருவாதவூரர் புராணமாவது கூறுகினறில. மாணிக்கவாசகர் பின் தாம பெருந் துறையை நினைவுகூர்ந்தபோதெல்லாம அஙகே குருந்தமர நீழலிலே எழுந்தருளித் தமமை யாட்கொண்ட குருநாதன கோலத்தையே நினைந்துருகினதாகத் திருவாசகத்தினற பெறப்படுகிறதே யல்லாமல் அஙகே சிவாலயமிருந்ததாக நினைவுற்றுருகினரெனபது சிறிதும புலப்படவில்லை.

அற்றேலஃதாக, மாணிக்கவாசகர் தாங் குதிரை வாஙகுதறகெனறு கொண்டு சென்ற பொருட்டிரளையெல் லாம எங்ஙனம செலவிட்டாரெனின; கூறுதும: மாணிக்க வாசகர் தஙகுருநாதனுக்கு உடல் பொருளாவி மூன்றினை

யும் உரிமைபபடுத்துங்கால் தாங்கொண்டுவந்த பொருட் டிரள் முழுவதூஉம குருநாதன் திருவடியிலே உய்த்தார். அப் பொருட்டிரளைக் குருநாதன் தன்சீடர் குழாத்தின பால் உயத்துத்,

"திருந்திய பொருளி தெல்லாம்
திருப்பணிக் களியும் மேலாம்,
அருந்தவர்க் குதவும் இல்லா
தலந்தவர்க் கருளு மென்றூர்."

எனறு கூறியதாகத் திருவாதவூரர் புராணத்தினகட் சொல்லபபடுதலின, அஙகிருந்த அவ்வடியவர்கள எல் லாரும அப பொருட்குவையைச் சிவாலயத் திருபபணி கட்குமம, அரியதவசிகட்குமம, வறியவர்கட்குமம கொடுத்துச் செலவிட்டன ரெனபது பெறபபடுமம. நனறு சொனனீர், 'திருப்பணிக்கு அளியும' என்றதனுனே பெருந்துறையிற் புதிதாக ஒருகோயில் கட்டுவித்தார் எனல் பெறபபடு மனறே வெனின; அறியாது கூறினீர், 'திருப்பணி' என வாளா கூறினமையானே தமிழநாட்டின்கண் முன்னமே யுள்ள சிவாலயங்கள புதுபபிக்குஞசெலவுக்குக கொடுத்தா ரென்பது பெறப்படுவதல்லாமல், அதுகொண்டு புதுவதாக ஒரு கோவில் கட்டுவித்தாரென்பது பெறப்படாது. அன்றி அவ்வாறு ஒனறு கட்டுதற்கென்றே கொடுத்தாரெனக் கொளவேமெனினும், அச் செய்யுளைத் தொடர்ந்துவரும் பிற செய்யுட்களிற கோயில் கட்டுவித்த விஷயம ஒரு சிறிதும் குறிக்கபபடாமையின் அவ்வாறு கோடல் போலி யுரையாமென விடுக்க. எனவே, மாணிக்கவாசகர் காலத் தில் திருபபெருந்துறை சிவாலயமுடையதாயில்லை யென் பது நிறுவப்பட்டமை காண்க.

இனித், திருவுத்தரகோசமங்கையி னியல்பை ஒரு சிறிது ஆராய்வாம்: மாணிக்கவாசகப் பெருமானைப் பெருந் துறையிலே விட்டுக் குருநாதன் நீங்குமபோது, தன்னைப் பிரிந்திருக்கமாட்டாமையால் தாயைப் பிரிந்து வருந்தும் கன்றுபோற கரைந்து கரைந்து உருகியழும் தம் அன்பரை நோக்கிப் பூங்காவினிடை நின்ற ஒரு மடுவைச் சுட்டிக்

காட்டி, "இம் மடுவின் நடுவிலே சோதிமயமான ஒரு தழற் பிழம்பு தோன்றும, அபபோது நம் அடியசெல்லாஞ் சென்று அதன்கண் வீழந்து நமபாற சேர்குவர்; நீயும அவ்வாறு அவரோடு உடனசென்று விழாமல் 'உத்தர கோசமஙகையெனனும நம ஊரிற சென்று, சித்தி யஙகு எவையும எய்தி' அதன்பின நஞ சிவலிங்கவடிவு வைத்த சிவதலஙகடோறுஞ் சென்று வருகுவையாயின் அஙகஙகும இத் தழறபிழமபு வடிவே காணபாய். இறுதியாகச் சிதமபரம் போந்து அஙகே புத்தரை வாதில் வென்றபின் சிவபெருமபதம பெறுகுவை," எனறு அக் குருமூதது அருளிச்செயததாசத் திருவாதவூரா புராணங கூறுகின்றது. இஙகே, உததரகோசமஙகையைச் சிவலிங்கம வைத்த தலமாகக் கூறுமல், மறறைத் தலஙகளேயே அது வைத்ததாகக் கூறினமையே கவனிக்கற்பாலதாம. மாணிக்கவாசகர் தம சிவநிட்டை கைகூடுதறகாகவே அந் நிட்டை மெயபபொருள தேறறிய குருநாதன, திருபபெருந் துறைப பூஙகாவோடொபபப பொழில்கள நிறைந்து நிட்டை புரிதற்குப பெரிதும அனுகூலமுடைத்தாய விளங்கும திருவுத்தரகோசமஙகையூர்க்கு ஏகுகவெனறு ஏவினரெனபது மேலதனுல் தெளியறபாலதாம. அதனுல், திருவுத்தரகோசமஙகையில் அந்நாளிற் சிவாலய மிருந்த தின றெனபதூஉம பெறபபடுவதேயாகும. மெயபபொருள வழாதுகூறும இத் திருவாதவூரர் புராணவுரைக்கு ஏறபவே மாணிக்கவாசகப் பெருமானும தன்னருமைத் திருவாக்கால்,

"அளிதேர் விளரி,
ஓலிநின்ற பூம்பொழில் உத்தரகோசமங்கை."

"அணிபொழில் உத்தர கோசமஙகை" என நீத்தல் விண்ணப்பத்தினும, "தெங்குலவு சோலைத் திருவுத்தர கோசமங்கை" எனத் திருபபொன்னூசலினும் கிளந் தெடுத்தருளியவாறுங காண்க. 'திருவுத்தர கோசமஙகைக் கரசே' என விளித்துக் கூறுவதெல்லாம் ஆங்குத் தழலுருவாய்த் தோனறிய சிவபெருமானே யல்லது

வேறில்லை யென்க. ஆகவே, உத்தரகோசமங்கை ஊரிலும் மாணிக்கவாசகர் காலத்திற் சிவாலயமிருந்ததில்லை யென பது இனிது துணியப்படுவதாம். ராவ் அவர்களும இவ் விரண்டு கோவில்களும பழைய காலத்தன அல்ல என் கினறார். அதுகிறக.

இனி மாணிகக்வாசகா காலத்தும அவர்க்குச் சில நூற்றாண்டு பிறறொனறிய அபப மூர்த்திகள முதலான ஏனைச் சமயாசிரியன்மார் மூவர்காலத்தும திருபபெருந் துறையும திருவுத்தரகோச மஙகையும சிவாலயஙகள உடையவாயில்லாமையால், சிவாலயமுளள தலஙகளுககே சென்று திருபபதிகஙக கட்டளையிடும கடபபாடு உடையரான சமயாசிரியா மூவரும அவ வூர்களைத் தம திருவாககிற் குறியாது விட்டனர். ஆகையால் அவர்கள குறியாது விட்ட காரணம இனனதெனறு பதுதுணராமலும, மாணிக்கவாசகர் காலத்து அக் கோவில்கள கட்டபபட வில்லை எனபதுணராமலும, தேவாரத்தில் அத்தலப் பெயர்கள் வராதது ஒனறே பற்றி மாணிகக்வாசகர் அம் மூவர்க்கும் பிற்பட்டவரெனறு கூறிய ராவ அவர்கள உரைபபொருள பொருத்த மினறுமென விடுக்க.

அறறேறல், திருபபெருந்துறை, திருவுத்தர கோச மஙகை எனனும அத்தலஙகள உறபத்தியாயவாறுதான எனனையெனிற கூறுதும: மாணிக்கவாசகர்க்கும் ஏனைச் சமயாசிரியாகளும பிறகாலத்தே திருவாசகம மிகுதியும ஓதபபடுவதாயிறறு அஙஙனமம ஓதப்படுகினறுழி அவ் விரண்டிடஙகளும பெருமானுல் சிறந்தெடுத்துச் சொல்லப் படுதலாலும, ஒனறிற பிறவியறுக்கும மெயபபொருளுப தேசமும மற்றொனறில் நிட்டைகூடிய பெறற மெய்யனுபவ சித்தியும அப பெருமானுக்கு விளைந்தமையாலும, இவை யெல்லாம பிறர நினைவு கூர்ந்து உயதறபொருட்டுப பிற் காலத்தரசர்கள அவ் விரண்டிடத்தும சிவாலயஙகள விரிவு படக் கட்டிவைபபாராயினர். பிறகாலத்தினரான விஜய நகரத்தரசர் சிலாசாசனஙகளும் பாணடிய அரசர் சாசனங் களும் திருப்பெருந்துறையிலும் திருவுத்தர கோசமஙகை

யிலும காணபபடுகின்றன வென்று ராவ அவர்கள எடுத்துக் காட்டிய பிரமாணங்கள அவர் கொளகையையே வேரற அறுத்து எமது கொளகையை வசசிரத் தமபம போல் நாட்டுவவாயின.

இனனும பிறகாலத்தினகண் இருந்த விஜயநகரத்து நாயக்க மனனர் கட்டிட அமைப்புகளே பெருமபாலுங காணபபடுதலால் திருபபெருந்துறைச சிவாலயத்தின் கர்பபகிருகம ஒனறுதவிர ஏனைய வெல்லாம அவர்களே அமைத்தன வெனறு ராவ அவாகள கூறுவதனால் எமது கொளகை பெரிதும வலிபெறல் காணக. எனனை? நால்வர் காலத்திறகும பின யாரோ சிறிதாகக கர்பபகிருகம ஒனறுமே கட்டிவைத்தனராக அதனைச சூழப பினனர் வந்த விஜயநகர மனனர் கட்டிடஙகளோப பெருக்கினரென் பது பெறப்படுதலின எனக.

இனி மாணிககவாசகர திருவாசகம முழுவதூஉம தொண்டர்களையும அடியாராகளையும பனமுறை நினைந்து நினைந்து உருகிக கூறக் காணடலாலும, அவ வாகளியங் களை உணரும்போது அபபரையும, ஞானசமபந்தரையும, சுந்தரையுமே குறிகினரு ரெனபது புலபபடுதலாலும மாணிககவாசகர அம மூவர்க்கும பினனையோர் என ராவ் அவர்கள மொழிகினறனர.

இத்தருககம எனறுட்ப முடையது! புராணங்களா னும, திருவாசகத் திருவாகனானும, ஏனை ஆனறோர் பரம் பரை உரையானும நரிபரியானது மாணிக்கவாசகர் பொருட்டே எனக கூறபபட்டிருபப, அதனைப பொருந் தாதென்று மறுத்த ராவ் அவர்கள 'அடியார்' எனறு பொதுபபடக் கூறும சுவாமிகள திருவாக்குக்கு ஏனை மூவர எனறு பொருள் கொண்டது பெரியதோர் தலைதடு மாற்றவுரையனறிப பிறிதெனனை? "கழுமல மதனிற் காட்சி தந்தருளியதையும" "திருவாரூரில் ஞானந் தனனை நல்கிய நன்மையையும" ஞானசமபந்தரையும சுந்தரையுங குறித் தனவாக ராவ் அவர்கள பொருளபடுத்தற்குக் கொண்ட

ஆதார மென்னையோ? அவ்வாதாரம் ராவ அவர்கள் சுவாமிகள் காலத்தைப் பிற்படுத்த வேண்டுமென்று கொண்டு முதிர்வித்த கனவு நிலையில் உளது போலும்! ஞானசமபந்தரைத் தவிர வேறடியார்க்குக் கழுமலத்திற் காட்சி கொடுத்திலன் நமபெருமா னெனபதறகும, திருவாரூரில் ஞானம நல்கபபட்டவர் சுந்தரமூர்த்திகளைத் தவிர வேறடியார் இலர் எனபதற்கும பிரமாணங காட்டினுலன்றி ராவ் அவர்கள உரை புரை படுதல் திண்ணம என்க.

அறறேல், மாணிக்கவாசகர் தமது திருவாக்கில் அடியார் அடியார் எனப் பலகாலும் உரைபபது யார்தமமை எனிற கூறுவாம: திருபபெருந்துறையில் எழுந்தருளிய குருநாதனைப் புடைசூழந்திருந்த அடியார்கள, அக் குருநாதன் பிரியுமபோது மிகவும வருந்தாநிறபப பினை அக் குருநாதன் அவர்தமமை நோக்கி 'இம மடுவினிடையே சோதிமயமான தழற்பிழமபு ஒனறு தோனறும, அதில் நீவிர் போயப படிந்து சிவபதம பெறறுகுவீர்' என்று கட்டளை யிட்டனன. இட்டவாறே அவர்களும மாணிக்க வாசகரை விடுத்துப போய் அத்தழற் பிழாபிற படிந்து மறைந்து போயினர். தாம அவவடியார் குழாத்தோடு அளவளாவி வரமபிகந்த மகழச்சியுற்றிருந்ததனையே சுவாமிகள "கலந்து நின்னடி யாரோடு அன்றுவாளா களித்திருந்தேனை, புலர்ந்து போன காலங்களை" என நினைந்து அருளிச் செயததும, பின் அவவடியாா தம்மைப் பிரிந்து சோதியில் மறைந்ததனையே,

"...புகுந்து நின்றது இடர் பின்னுள்
உலர்ந்து போனேன் உடையானே
உலவா இன்பச் சுடர் காண்பான்
அலந்து போனேன் அருள் செய்யாய்
ஆர்வங்கூர அடியேற்கே."

(அ. பிரார்த்தனைப் பத்து, க.)

எனறுருகி அருளிச் செய்ததுமாம். இன்னும் தமமோடு அங்ஙனம் அளவளாவி யிருந்த அடியார்கள் சிவபதவி பெற யான் அதனைப் பெறுமற் புறம் போனேனே என

உள்ளங் கசிந்து சுவாமிகள "சிவமாகுகர் குறுகப்போனுர் அடியார் யானும பொய்யும் புறமே போந்தோமே" என்றும, "பேரா உலகம புக்கார் அடியார் புறமே போந்தேன் யான்" என்றும, "பழைய அடியார்க்குன் அணியார் பாதங் கொடுத்தி" என்றும், "பண்டைப் பரிசே பழ அடியார்க்கீந் தருளுமே" என்றும, "நினகழற புணைகொண்டு, இழிகின்ற அன்பர்கள ஏறினர்வான் யான் இடர்க்கடல் வாய்ச் சுழிசென்று" எனறும், அருளிச் செய்தனர்கள். பினனர்ச் சுவாமிகள சிவநிட்டைகூடி அருள் வயமாய் நின்ற காலத்து அங்ஙனம் முன்னர்ப பிரிந்துபோன அவ் வடியரை யெல்லாம மறித்தும் அவ் வருளவெளியிற கண்டு ஆனந்தமெய்தி, அபபனனை சிவபெருமான் தம்மைத் திருமபவும அவரோடு கூட்டிய பேரருட்டிறனை வியந்து "அபபன ஆண்டு தனனடியரிற கூட்டிய அதிசயங் கண்டாமே" எனறு அதிசயப பத்து முழுவதும அருளிச் செயதனர்கள. இஙஙனம மெல்லாம சுவாமிகள திருவாக்கிற் குறித்திடபபட்ட அடியார்கள திருபபெருந்துறையிற் குருநாதன் பக்கல் மேவியிருந்த அடியார் குழாமன்றி, ஞானசம்பந்தர் முதலாயினு ரல்லரெனபது இந் நூட்பம் ஆயந்துணர வல்லார்க் கெல்லாம வெளளிடைமலைபோல் விளங்கிகிடந்தது. இஃது இப் பெறறியதாக இதன் வரலாறு சிறிதுமோராது சுவாமிகள இங்கு 'அடியார்' எனறது ஞானசமபந்தர் முதலாயினுரையே யாமென்று கூறி, அதனுற் சுவாமிகள ஏனை மூவர்க்கும பிற்காலத்தினரெனக் கூறிய ராவ அவாகள திரிபுணர்ச்சி பெரிதும் இரங்கற் பாலதொனறும் என்க.

இனி மாணிக்கவாசக சுவாமிகள பலவேறு திருவிளையாடல்களைக் குறித்துப பாடா நிற்ப, ஏனைமூவரும அவற்றிற் சிலவே கூறுதலாலும, அங்ஙனம அவை பலவாய்ப் பெருகிய காலம பிறகாலத்தினகண்ணதாக வேண்டுதலாலும, அத் திருவிளையாடல்கள பலவறறையும் எழுதினவேமபத்தூரார் திருவிளையாடற புராணத்திற்கும பரஞ்சோதிமுனிவர் திருவிளையாடற புராணத்திற்கும சிறிது

முன்னராயினும பினனராயினும மாணிக்கவாசக சுவாமி களை காலத்தை வரையறுக்க வேண்டுமெனை ராவ அவர்கள் கூறுகின்றார்கள.

இவர்களை கூறியது பெரிதும பிழைபடுவ தொனறும. மாணிக்கவாசக சுவாமிகள் தமது அருமைத் திருவாக்கில் எடுத்துக கூறினவெல்லாம மிகப்பழமையானை திருவிளை யாடல்களேயாம. ஞானசம்பந்த சுவாமிகளுக்குப் பின்னே மாணிக்கவாசக சுவாமிகள் இருந்தனராயின், மூன்று வயதிலே உமைதிருமுலைப்பாலுண்டு பேரற்புத ஞான மூர்த் தியாய்ச் சைவம் எங்கணும் விளக்கிச் சமணரை வாதில் வென்ற ஞானசம்பந்தப பெருமானைப பற்றிய திருவிளை யாடலைக் கூறாது விடுவரோ? இஃதொன்றுனே மாணிக்க வாசகர் ஞானசமபந்தர்க்கு முனனிருந்தா ரெனபது சிறு மகார்க்கும இனிது விளஙகிக்கிடபபதாக, இதுதானு முண ராது ராவ் அவர்கள காலவரையறை செயயப புகுந்தது நகையாடற பாலதொனறும. மேலும அபபா திருஞான சமபந்தர் திருவாக்குகளில் திருவிளையாடல்கள பலவந் திருக்கின்றனவே யல்லாமல் ராவ அவர்கள் கூறியபடி சிலவே வந்தில. இவ்வுண்மை தெரியவேண்டுபவா ஸ்ரீமத் வே. சாமிநாதையரவர்கள தமிழுலகத்தைதக கடமைப் படுத்திவெளியிட்ட வேமபத்தூரார் திருவிளையாடல் முகப் பிலே மாணிககவாசகர் திருவாக்கினும மூவர் திருவாக்கி னும போந்த திருவிளையாடல்களையெல்லாம மிகக பிரயா சையோடு தொகுத் தெடுத்துப் பிரசுரித் திருக்கின்றார்க ளாதலின ஆண்டுக் கண்டு கொளக. அங்ஙனம காண வல்லவர் ராவ் அவர்கள் கூறியது முழுபபொயயுரையே யாமென்று தேறுவர். மாணிக்கவாசக சுவாமிகள தங் காலத்தும காலத்திறகு முனனும நடந்த திருவிளை யாடல்கள பலவற்றை விதந்தெடுத்துக கூறுதல் போலவே, ஏனைச் சமயகுரவன்மாரும் தஙகாலத்துந் தமக்கு முனனும நடந்த பலவற்றை எடுத்துக கூறுகின் றனர். அது கிடக்க.

இனிக் கி. பி கூ0ச ஹு அரசாண்ட பராந்தகச் சோழன கில்லைச் சிற்றமபல முகட்டைப் பொற்றகடு

வேயந்து சிறபபித்த பின்னரே அவ் வமபலத்திற்குப பொன்னமபலம் எனறு பெயர்வந்ததென்றும், மாணிக்க வாசகசுவாமிகள கீர்த்தித்திருவகவலில் " அம்பொற் பொலிதரு புலியூர்ப் பொதுவினில் நடம நவில்" எனவும், திருக்கோவையாரில் "சேணிற பொலி செம்பொன் மாளி கைத் தில்லைச்சிற் றமபலத்து" எனவும கூறுதலோடு கோயின மூத்ததிருபபதிகம முழுவதூஉம் இபபெயரே வரப்பாடுதலாலும அச்சுவாமிகள பராந்தகச் சோழன் காலத்திறகும பினனரேதான் இருந்திருக்க வேண்டு மென்றும் கூறிய ராவ் அவர்கள அப பராந்தகனுக்கு முனனிருந்த அபபர் சுவாமிகளும 'செமபொனமபலம' எனக் கூறியிருத்தலை உணர்ந்து குன்று முட்டிய குரீஇப் போலப் பெரிதும் இடர்பபட்டு அதனை விலக்கி விடுவார் போல் அப்பர் திருவாக்கில் வந்த 'பொன்னம்பலத்' திற்குப பொனனான அமபலம என்பது பொருளபோலத் தோன்றுகின்றதெனல நெகிழ்துரையாடிப போனார்.

ராவ் அவாகளுககு இவவனம நடுநிலை வழீஇ ஓரம பேசி இழுககுறும திரிவுபாடு வந்ததெனனை யெனின்; தமிழத்தேயததுப பெரியாருள யாரும பழைய காலத்திருந் திலர் எனறு நாட்டவும, தமமை யொத்த ஆரியப பெரி யாரே பழைய காலந்தொட்டு நாகரிகமுடையரா யிருந்தன ரென்று காட்டவுமே புக்காராகலின அவவனந் தனனைப் பற்றுதல் என்னுங் குற்றத்திற்பட்டுப பொருள உண்மை நோராது ராவ் வழுக்கினார் எனக. அது கிடக்க.

அபபர் சுவாமிகள திருவாக்குக்குப பொனபோனற அமபலம எனறு பொருளபண்ணவந்த ராவ அவ்வாறே மாணிக்கவாசக சுவாமிகள திருவாக்குக்கும பொன்னனைய அமபலம் என்று பொருள் செய்யாது விட்டதென்னை? ஒரே வகையான ஒரு சொற்றொடர்க்கு ஒருகால் ஒரு வாறும் பிறிதொருகாற பிறிதொருவாறும பொருள பண்ணுதற்கு இவர்கொண்ட காரணம் யாது? காரண மின்றித் தமக்கியைந்தவாறெல்லாம் பொருள செய்தால் இவர்போற் றிரிபடையாத நல்லறிவுடையார் இவருரைக்கு

இணங்குவரா? மேலும அபபர் சுவாமிகள பொனபோனற அம்பலம் என்று பொருள செயதறகு இடந்தராமல் 'உரை யாணி மாற்றுளள செமபொனனுற செய்த அமபலம்' எனறும 'கதிர்விரியும செமபொன அமபலம்' எனறும, 'பரிசுத்தமான செமபொறறகடு எழுதி மேல்மூடிய சிறறம பலம்' எனறும, 'பொன்னுற செயயப்பட்ட அமபலம்' எனறும இனிது பொருள விளங்குமாறு "ஆணியைச் செமபொனமபலம" "சுடர்ச் செமபொனமபலம" "தூய செம்பொன்னினுல் எழுதிவேய்ந்த சிறறமபலம்" எனறு திருக் குறுந் தொகையிலும, "பொன்னுகிய தில்லைச சிற்றம பலவன்" என்று திருவிருத்தத்திலும அருளிச்செய் திருப்ப இவற்றையறிந்து பொருளகொளளுமா றறியாத ராவ் அவர்கள் தமிழ நூலாராய்ச்சியிற் புகுந்தது என்னம! அற்றேல், பராந்தகச் சோழன் பொனவேய்ந்த பிறகு செம பொனனமபலம எனறு பெயர் வந்தெனனுங கூறறு எவ்வாருமெனின; அஃது அறிவில் கூறறுமெனறே மறுக்க. பராந்தகன பிற ஆலயங்களுகுச செமபொன முகடு வேயாது இத்தில்லைச் சிறறமபலத்திறகு மாத்திரம அங்ஙனம் பொனமுகடு வேயந்த காரணம எனனை யென்று நுணுகியாராய வல்லார்க்கு, அவ்வம்பல முகடு பண்டைக்காலந் தொட்டு அங்ஙனம பொன் வேயபபட்டு வந்த காரணத்தானே பராந்தக வேந்தனும தனகாலத்து அதனைப புதுப்பித்து அங்ஙனம பசுமபொற்றகடு வேய்வா னுயிற் றென்பது தெற்றென விளங்காகிறகும. பராந்தக னுக்கு முனனரிருந்த பெருந்தமிழ வேந்தர் பொன் வேயாது விட்டிருந்தனர் எனபதனை ராவ் எந்தச் சிலாசாச னத்திற் கண்டாரோ அறியேம. ஆரிய அபிமானத்தாற் கட்டி இறுகிய தம மனனெபாவகச் சிலையிற கண்டார் போலும! அபபர் சுவாமிகள திருவாக்கால் பராந்தக னுக்கு முன்னும தில்லைச்சிற்றம்பல முகடு பொன்வேயப் பட்டிருந்த தென்னும உண்மை உளளங்கை நெல்லிக்கனி போலினிது பெறபபடுதலின, மாணிக்கவாசக சுவாமிகள பொன்னம்பலம எனறு தந்திருவாக்கிற் கூறியது கொண்டே அவர் பராந்தகனுக்குப பினனிருந்தாரெனும

ராவ அவர்களை உரை பொருளொடு புணராப போலியுரை யாமென்க.

இனித் தக்ஷிணமூர்த்தியுபாசனை மாணிக்கவாசக சுவாமிகளுக்குப பினனர்த்தான தோனறியதை ராவ அவர்களை ஊகம செய்கின்றனர். அவவூகம காரணமினறி அவரது வெறும பாவனைக்கட டோனறுதலின அதனை அறிவுடையோர் கொளளாரென்பது தக்ஷிணமூர்த்தம் ஐனகர் முதலான முனிவர் நால்வர்க்கு அத்துவித உண்மை உணாத்துதறபொருட்டுக் கொணட பழமை அருட்கோலமென்பது எல்லார்க்கும ஒபபமுடிந்ததாகலின், அதனைப பிறிதாகக கூறுதல் பொருந்தாதை மறுக்க. இன்னும் முதலாம குலோத்துங்கசோழன தக்ஷிணமூர்த திக்கு மானியம விட்டான் எனறுகூறிய திருககணடேசுர ஆலய சாசனத்தைக்கொண்டு அபபோதுதான அம மூர்த்தி உபாசனை தொடங்கியதென்றல் பெரியதோர குழறுபடையாம. அது மானியம விட்டமை கூறியதே யனறி அபபோதுதான அவவுபாசனை தோனறியதைக கூறிற்றிலது. அவவாறுக ஒருங்கியதியுமின்றித் தமமனம போலவாறு அதற்குப் பொருள் செய்தலில் நம ராவ அவர்களேயன்றி வேறு ஏவர் வல்லார்!

இனிப, புதுதரோடு சுவாமிகள திலலைச் சிறறமபலத் தில் வாது புரிவதைப் பார்க்கப் பாண்டியனும ஈழமனனன ஒருவனும வந்து அபபோதுங்குவந்த சோழனை வணங்கித் திறை தந்தானென்பது திருவாதவூரர் புராணத்திற குறிக்கபபட்டிருககிறதென்றும, அங்ஙனம பாணடியர் சோழமனனாரகளுக் கீழ்பபட்ட காலம கo-ஆம் நூறறாண்டு முதல கங-ஆம நூறறாண்டிறுதி வரையுமாம எனறும, அதனால் மாணிக்கவாசகர் காலமும் அவ விடைபபட்ட காலத்திலேதான வைக்கற் பாற்றென்றும் ராவ அவர்கள் கூறுகிறார்கள.

திலலைச் சிறறமபலத்திற் சோழனுக்குப பாண்டியன திறைகொணர்ந்து செலுத்தினன் எனறது முழுப பொய் யுரையாம. அத் திருவாதவூரர் புராணத்தை யாம பன்

முறையும படித்துப பார்த்தோம. அதன்கண் ஈழமன்னன் ஒருவன் திறை கொணர்ந்துவைத்துச் சோழவேந்தனை வணங்கினதாக மாத்திரம் சொல்லப்பட்டிருக்கின்றது ; அது, "ஈழவள நாடனு மெழுந்தடி பணிந்து திறையிட்ட குறைநல்கி" என்னும அப புராணச்செயயுளால் அறியப படும. இவ் விலங்கை மனனனைத் தவிர வேறு மன்னர்கள அங்கு வந்ததாகவேனும, பாண்டியன் வந்து சோழனைப பணிந்ததாகவேனும் அப புராணம எங்கும தேடித் தேடிப் பார்த்துக் கண்டிலேம. இவ்வாறுக இல்லாத தொன்றனை இருபபதாக வைத்துப பொயயுரைகூறித் தருக்கம நிகழத்த முன்வருதலில் ராவ அவர்கள முனனதாக நிறகினறார். இஃதவர்க்கு நேர்மைதானனை வென்பதை அறிவுடையோரே கூறக்கடவர்.

இனி, வரகுணபாண்டியனெருவனை மாணிகக்வாசகர் தம திருவாக்கிற் குறிப்பிடக் காண்டலானும, அவ் வரகுணன் காலம கூ-ஆம நூற்றாண்டெனறு துணியபபடுதலானும, சுவாமிகள காலம அவவொனபதாம நூறறாண்டிறகுப் பினனரேதான பெறபபடுதல் வேண்டும என்கிறார் ராவ. இன்னும சேஷகிரி சாத்திரியார் காட்டிய பாண்டிய வமிசாவளிப பட்டியில் ஒரே வரகுணன் காணபபடுதலால் அவனையேதான சுவாமிகள குறிபபிட்டிருக்கவேண்டுமென றும் ராவ் ஊகஞ்செய்கினறார்.

இபபோது சரிததிர ஆராய்ச்சிக்குப பயனபடும சிலாசாசனங்களும வமிசாவளிகளும் கி. பி. எட்டாம நூற்றாண்டிற்குப பிறபட்ட பாண்டிய சோழ அரசர்களையே எடுத்துப் புகலுகின்றன. கி. பி. எட்டாம நூற்றாண்டிற்கு முற்பட்ட பழைய பாண்டிய சோழ சேர மன்னர்கள பலப பலர் உளராகப பழைய செந்தமிழ நூல்களால் அறியபபடவும், அவ் வரசர்களைப பற்றிய சிலாசாசன செபபுப் பட்டயங்களுள் ஒன்றேனும இப்போது அகபபடக் காண்கிலேம. சிவாலயங்கள எண்ணிறந்தன கட்டுவித்த சோழன் கோச்செங்கண்ணானைப் பற்றிய சாசனமே அகப்பட்டிலதாயின் மற்றை அரசர்களைப்பற்றிக் கேட்பானேன் ? இங்ஙனஞ்

சிலாசாசனங்கள எட்டாம நூற்றாண்டிறகுப பினனரே தோன்றியதறகும் அதற்குமுன தோன்றாமைக்கும காரணம முன்னரே கூறியபோந்தாம. ஆகவே, பிற்காலத்திய சிலாசாசன ஆராயச்சி பண்டைநாட் டமிழமன்னர் காலந் தேர்தற்குச் சிறிதும் பயன்படாத தென்றுமென விடுக்க. எனவே, பிறகாலத்து அரசர் பரம்பரையினைக் கூறும் சேஷகிரி சாத்திரியார் வமிசாவளிப்பட்டி ஈண்டைக்குச் சிறிதும் பயன்படாதென்றுணர்க. குலோத்துங்கசோழன், கரிகாற்சோழன் முதலான பெயர்கள் மன்னர்கள் பலர்க் கிருந்தவாறுபோல வரகுணபாண்டியன் எனும் பெயரும் மன்னர்கள் பலர்க்கிருந்திருக்கவேண்டும். இதுகாறுங் குறித்துவருங் காரணங்களானும் பின்னே காட்டப்படும் காரணத்தானும பின்னிருந்த வரகுண பாண்டியனுக்கு மூன்று நூறருண்டு முற்பட்டிருந்த அபபர் சுவாமிகளுக்கும முறபட்டவராக மாணிக்கவாசக சுவாமிகளிருத்தலால் அவர்களாற் குறிக்கப்பட்ட வரகுணபாண்டியன் வேறென பதே துணிபொருளாம.

இனி, மாணிக்கவாசக சுவாமிகள புத்தகாலத்தினரா மெனறு கூறுவாருரையை மறுத்துச், சைவமதம புத்தர் காலத்திறகுப பிந்தியதன றென்றும, புத்தகாலம கூ-ஆம் நூற்றாண்டிறகுப பினனரும நீண்டதென்பதறகுக் கி. பி. கூஅச முதல் கஅகஉ வரையில் செங்கோலோச்சிய இராசராசன் காலத்தில் நாகபட்டினத்தினகண் ஒரு பௌத்தப் பள்ளியிருந்தமையே சானறுமென றும ராவ அவர்கள கூறுகின றனர்.

புத்தசமய மிருந்தகாலத்தே சமண மதமும் உடனிருந்ததாயினும அது மிகவும செழிபபுற்று ஓங்கியது ஐந்தாம நூறருண்டின பின்னரேயாம. ஐந்தாம நூற்றாண்டிற்கு முனனெல்லாம புத்தமதமே மேலோங்கியிருந்தது. இதற்குச் சான்று மணிமேகலையும் சீவகசிந்தாமணியுமேயாம. மணிமேகலை பௌத்தம மேலோங்கிய முதல்நூற்றாண்டிலும், சீவகசிந்தாமணி சமணம மேலோங்கிய ஏழாம நூற்றாண்டிலும எழுதபபட்ட நூல்களாம. ஐந்தாம

நூற்றாண்டிற்குப் பின்னும் ஒரோவிடத்துப் பௌத்தமதம் இருந்ததென்றதனால் ஆண்டைக்கு ஆவதோர் இழுக்கில்லை. என்னை? அது பிற்காலத்துத் தன்பெருமை சுருங்கி ஒளிமழுங்கிக் கிடந்ததாகலின். இனி, மாணிக்கவாசக சுவாமிகளிருந்த காலத்துப் பௌத்தமதம் மிகவும விரிந்து வலிபெற்றிருந்ததென அறியப்படுதலால் அக்காலமும் மாணிக்கவாசகர் காலமும் ஐந்தாம நூற்றாண்டிற்கு முற்பட்டனவா மென்பது ஒருதலை. ஆகவே, இவ்வுண்மையொடு முரணி ராவ் அவர்கள கூறியது பொருத்தமில் போலியுரையாமென மறுக்க.

இவ்வாறு இதுகாறும் கூறிய மறுபபுரைகளால், ஸ்ரீ. து. அ. கோபிநாத ராவ் அவர்கள், எம. ஏ., மாணிக்கவாசக சுவாமிகள் காலம் கி. பி. பதினோராவது நூற்றாண்டின் துவக்கம் அஃதாவது இறைறைக்கு எண்ணூற்றெட்டு வருடங்களுக்குமுன் என்று நிலையிடுதற் பொருட்டுக் காட்டிய ஆதாரங்கள் அவ்வளவும உள்ளீடில்லா வெறுமப பதடியா மென்பதனைப் பகுத்துப் பகுத்துக்காட்டி விளக்கினேம. இனி யாம் கசுoஉ-ஆம ஆண்டு ஞானசாகர முதற்பதுமத்திற் பிரபல காரணங்கள் பலவறறால் மாணிக்கவாசக சுவாமிகள கி. பி. மூன்றாவது நூற்றாண்டு அஃதாவது இற்றைக்கு ஆயிரத்து அறுநூற்றெட்டு வருடங்களுக்கு முன் இருந்தார்களென்று நாட்டியதே பொருத்தமுறுவதாம. அதனை இங்கு மற்றுமோர் ஆதாரங காட்டி முடிபபாம.

மாணிக்கவாசக சுவாமிகள் அப்பர் சுவாமிகளுக்கு முன்னிருந்தா ரென்பதனை நிலைபெறுத்தவே அவர் காலமை இதற்குமுன் என்பது நாட்டப்பட்ட வாறாகும அபபர் சுவாமிகள "நரியைக் குதிரை செய்வானும்" என்றது மாணிக்கவாசகர் பொருட்டு நிகழ்ந்த திருவிளையாடலைக் குறித்த தென்பதனை முன்னரே காட்டினேம. திருப்பூவணத் திருப்பதிகத்தினும அப்பர் சுவாமிகள் "மணியார் வைகைத் திருக்கோட்டி னின்றதோர் திறமுந் தோன்றும்" என்று அருளிச்செய்து மாணிக்கவாசகர் பொருட்

டாகவும் சிவபெருமான் வையை யடைக்க மண்சுமந்து அதன்கரையில் நின்ற நிறத்தை விளக்கி அருளினர். மேலும், அப்பர் சுவாமிகள தமது அருமைத் தனித்திருத் தாண்டகச் செயயுளொன்றில் "குடமுழ நந்தீசனே வாசகனுக் கொண்டாய்?" என்று சுவாமிகளின் பெயராகிய வாசகன் என்னுஞ் சொல்லையும வெளிப்படையாக எடுத்துக் கூறியருளினர். இம மூனறு அரிய குறிப்புக்களானும் மாணிக்கவாசகர் அப்பர் சுவாமிகள காலத்திற்கும முற் பட்டவராதல் தெறறென விளங்குகின்றது. இனி மாணிக்க வாசகப் பெருமானிருந்த காலவரமபுதான் யாதோ வெனின்; அஃது இற்றைக்கு ஆயிரத்து அறுநூறறெட்டு வருடங்களுக்கு முற்பட்ட மூன்றும நூறருண்டிலாமென ஞானசாகர முதற்பதுமத்தினகண் இனிது விளக்கினும்; ஆண்டுக் கண்டுகொளக.

குறிப்பு: 'பெருந்துறை' எனனுங் தலம அப்பர் சுவாமிகள முதலானூறாற குறிக்கபபடவில்லை யென்ப தூஉம பொருந்தாதாம. அபபர் சுவாமிகள தாம் அருளிச் செய்த க்ஷேத்திரக் கோவைத் திருத்தாண்டகத்தில் "பேரூர் பிரமபுரம் பேராவூரும பெருந்துறை காமபிலி பிடவூர் பேணுமம"[1] என்று அத்தலத்தை எடுத்தருளிச் செய்தனர்கள. அற்றேல், அதறகுத் தனிபபதிகங்கள் காணப்படாதவா றென்னை யெனின; யாம முனனரே காட்டியவாற்றுல் அது மாணிக்கவாசக சுவாமிகள குரு நாதனைக் கண்டு உபதேசம பெறற மாட்சிமையானே சிறப் பெய்திய தன்றி, அதனகட் சிவாலயம முனனில்லாமை யால் அதறகுத் தனித்திருபபதிகம இல்லாதாயிற் றென்க.

1. ஆரூர். அப்பர், சு. எ0-உ.

ஓம்

இவ்வாராய்ச்சிக்கு அரண்செய்யும்

அப்பர் அருட்பாடல்

திருவாதவூரடிகளின் திருவரலாற்றையும், காலத்தையும் சிறிதும் ஐயத்திற்கு இடமின்றித் துணிவுபெறுத்தும் சான்றுகள் பலவற்றுள்ளும் முதன்மை பெற்று விளங்குவன திருநாவுக்கரசு நாயனார் அருளிய "நரியைக் குதிரைசெய் வானும்" (ச - ச - உ) என்னும் திருப்பாட்டும், "குராமலரோ டராமதியஞ் சடை மேற் கொண்டார், குடமூக்கிற் கீழ்பால் சகலக் கொண்டார்" (சு. கசு - கக) என்னும் திருப்பாட்டும் ஆகிய இரண்டுமே யாகும்.

இவற்றைப்பற்றிய விளக்கம் ஆசிரியர் மறைமலையடிகளா ரால் கசுஎ, உஎஎ, கூOசு, கூகஅ, கூஉO, கூசO, கூசக முதலிய பக்கங்களில் காணப்படுகின்றது. 'நரியைக் குதிரை'யாக்கிய இறையனார் திருவருட்செயல் அத் திருநாவுக்கரசு நாயனார் அருளிய திருக்குறுந்தொகைத் திருப்பாட்டின்கண்ணும் காணப் படுகின்றது. அது வருமாறு :

"எரிய னெறிறை யாரிடு காட்டிடை
நரியி னர்பரி யாமகிழ் கின்றதோர்
பெரிய னர்தம் பிறப்பொடு சாதலி
விரியி னர்தொழும் வீழி மிழலையே."

—தி. ககஉ - அ.

பெரியனர் - மாதேவர். விரியினர் - நீங்கினர்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
௨௬0	௨௯,	கி. மு. முதல் நூற்றாண்டின்	கி. பி. முதல் நூற்றாண்டின்
௪0௫	௫,	கி. மு. முதல்	கி. பி. முதல்
௮௫௬	௬௨,	புலனுகாமை	புலனுகா
௬௬௫	௨௫,	ஒன்பதாந்	எட்டாந்
,,	௬௫,	ஒன்பதாந்	,,

மறைமலையடிகளார்

இயற்றிய

செந்தமிழ்ச் சமய நூல்கள்

கடவுள் நிலைக்கு மாறுரை கொள்கைகள் சைவம் ஆகா	1 75
திருவொற்றியூருகர் மும்மணிக்கோவை உரை	5 00
சாதி வேற்றுமையும் போலிச் சைவரும்	2 00
திருவாசக விரிவுரை	6 00
சைவசித்தாந்த ஞானபோதம்	4 00
பழந்தமிழ்க் கொள்கையே சைவசமயம்	2 00
சிவஞானபோத ஆராய்ச்சி	(அச்சில்)
தமிழர் மதம்	5 00

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
1/140, பிராட்வே, சென்னை-1.
தலைமை நிலையம்: திருநெல்வேலி.

